ஆதவன்

# காகித மலர்கள்



# காகித மலர்கள்

ஆதவன்

மாவட்ட மைய நூலகம்
திருவாரூர்.
303290

மின்னூலாக்கம்
முரளிதரன்

உயிர்மை
பதிப்பகம்

மாவட்ட மைய நூலகம்
திருவாரூர்.

விலை 190 ரூபாய்

உயிர்மை பதிப்பக வெளியீடு : 29

காகித மலர்கள் ❖ நாவல் ❖ ஆசிரியர் : ஆதவன் ❖ © ஹேமலதா சுந்தரம் ❖ முதல் பதிப்பு : 1977, இரண்டாம் பதிப்பு : 1985, மூன்றாம் பதிப்பு : டிசம்பர் 2004 ❖ வெளியீடு : உயிர்மை பதிப்பகம், 11/29 சுப்பிரமணியம் தெரு, அபிராமபுரம், சென்னை 600 018, தொலைபேசி : 91-44-24993448, மின்னஞ்சல் : uyirmmai@yahoo.co.in ❖ வடிவமைப்பு : இமேஜ் & இம்ப்ரஷன் ❖ அச்சாக்கம் : மணி ஆஃப்செட், சென்னை 600 005

031,3N42 ;KP4
57259

**Kakitha Malargal** ❖ Novel ❖ Author : Aadhavan ❖ © Hemalatha Sundaram ❖ Tamil ❖ First Edition: 1977, Second Edition : 1985, Third Edition : Dec. 2004 ❖ Demy 1x8 ❖ Paper : 18.6 kg Maplitho ❖ Pages : 368 ❖ Published by Uyirmmai Pathippagam, 11/29 Subramaniam Street, Abiramapuram, Chennai 600 018, India. Tele/Fax : 91-44-24993448, e-mail : uyirmmai@yahoo.co.in ❖ Designed by Image & Impression ❖ Printed at Mani Offset, Chennai 600 005 ❖ Price **Rs. 190**

**ISBN : 81-88641-28-6**

# ஆதவன்

ஆதவன் 21.3.1942இல் திருநெல்வேலி மாவட்டம் கல்லிடைக் குறிச்சியில் பிறந்தார். இயற்பெயர் கே.எஸ். சுந்தரம். சிறிது காலம் ரயில்வேயில் பணியாற்றிய ஆதவன் 1975ஆம் ஆண்டு தில்லியில் நேஷனல் புக் டிரஸ்ட் ஆஃப் இந்தியாவின் துணை ஆசிரியராக சேர்ந்தார். பின்னர் பெங்களூருக்கு மாற்றலாகி வந்த ஆதவன் 1987ஆம் ஆண்டு ஜூலை 19ஆம் தேதி சிருங்கேரி துங்கா நதியின் சுழலில் சிக்கி மரணமடைந்தார். மரணத்திற்குப் பின் 1987ஆம் ஆண்டிற்கான சாகித்திய அகாதமி விருது அவரது 'முதலில் இரவு வரும்' என்ற சிறுகதைத் தொகுப்பிற்காக வழங்கப்பட்டது. ஆதவனின் 'என் பெயர் ராமசேஷன்' நாவல் வித்தாலி ஃபூர்ணிகா அவர்களால் ருஷ்ய மொழியில் மொழிபெயர்க்கப்பட்டு ஒரு லட்சம் பிரதிகள் விற்பனையாயின.

மனைவி : ஹேமலதா சுந்தரம், மகள்கள் : சாருமதி, நீரஜா. பெங்களூரில் வசிக்கின்றனர்.

குழந்தைகளுக்காக ஆதவன் 'சிங்க ராஜகுமாரி' என்ற சிறுகதைத் தொகுப்பையும், 'கானகத்தின் நடுவே' என்ற நாவலையும் எழுதியிருக்கிறார்.

ஆதவனின் நூல்கள், இரவுக்கு முன்பு வருவது மாலை (குறுநாவல்கள், 1974), கனவுக்குமிழிகள் (சிறுகதைகள், 1975), கால் வலி (சிறுகதைகள், 1975), காகித மலர்கள் (நாவல், 1977), என் பெயர் ராமசேஷன் (நாவல், 1980), ஒரு அறையில் இரண்டு நாற்காலிகள் (சிறுகதைகள், 1980), புதுமைப்பித்தனின் துரோகம் (சிறுகதைகள், 1981), பெண் தோழி தலைவி (குறுநாவல், 1982), முதலில் இரவு வரும் (சிறுகதைகள், 1985), புழுதியில் வீணை (நாடகம், 1998), ஆதவன் சிறுகதைகள் (தொகுப்பு : இந்திரா பார்த்தசாரதி, 1992).

## பதிப்புரை

தனிமனிதர்களின் தன்னிலைகளை உருவாக்கும் சமூகக் கட்டுமானங்கள் மற்றும் இயல்பூக்கங்கள் பற்றிய கேள்விகள் நவீன இலக்கியத்தின் ஆதாரமான பிரச்சினைகளில் ஒன்றாக இருந்து வந்திருக்கிறது. தனிமனிதர்களின் சுயம், சுதந்திரம் என்பவை எந்த நவீன சமூகத்தில் உருவாக்கப்பட்டனவோ அங்கேயே இந்த சுயங்களும் சுதந்திரங்களும் வெறும் கற்பிதங்கள் என்றுகூறி மறுக்கப்பட்டுவிட்டன. மனிதர்கள் சமூக உறவுகளின் அடிமை யாகவும் அந்த உறவுகளைக் காப்பாற்றுவதற்காக தம்மைத் தாமே புனைவுகளாகவும் மாற்றிக்கொள்கிற ஒரு நாடகவெளியில் தனிமனிதன் என்ற அடையாளம் தொடர்ந்து நீர்க்கப்பட்டு பிம்பங்கள் மட்டுமே மனிதர்களின் சாரமாகவும் இருப்பாகவும் மாறுகின்றன. இந்த பிம்பங்களின் இருப்பை, அதன் உள்ளீடற்ற நடனத்தைக் கேலிச்சித்திரமாக்கி வந்திருக்கும் ஆதவனின் படைப்புகளில் முதன்மையானது காகித மலர்கள்.

பிறரை ஆளுமை கொண்டு அதன் வழியே தன்னுடைய ஆளுமையை ஸ்தாபித்துக்கொள்ளும் இடையறாத போராட்டத்தில் நிகழும் தன்னிழப்பும் கசப்பும் தனிமையும் காகிதமலர்களில் உக்கிரமாக எழுப்பப்படுகின்றன. செயல்களுக்கும் சிந்தனை களுக்கும் இடையே படியும் முரண்பாடுகளும் ஏமாற்றுகளும் சுய ஏமாற்றுகளும் ஏற்படுத்தும் நிலைகுலைவும் நாவலெங்கும் மிகுந்த அமைதியின்மையைத் தோற்றுவிக்கின்றன. ஒவ்வொருவரும் தம்மையும் பிறரையும் சதா கண்காணிப்பவர்களாகவும் அந்தக் கண்காணிப்பின் வழியே கண்டடையும் நிழல்களால் அச்சமும் அருவருப்பும் கொள்கிறார்கள். முதியவர்களும் இளைஞர்களும் முரண்பட்ட இரண்டு உலகங்களுக்கு இடையே தம்மை எங்கே

பொருத்திக்கொள்வது என்ற நிம்மதியின்மையோடு எப்போதும் போராடிக்கொண்டிருக்கிறார்கள்.

எழுபதுகளில் வெளிவந்த நாவல்களில் மிக முக்கியமானதாகக் கருதப்படும் காகிதமலர்கள் நவீன இந்தியாவின் நகர்ப்புற மத்தியதர வர்க்கத்தின் பண்பாட்டு நெருக்கடிகளையும் உளவியல் சிக்கல் களையும் ஈவு இரக்கமற்ற ஒரு மொழியில் சித்தரிக்கிறது.

'கடந்த ஆண்டு ஆதவனின் 'என் பெயர் ராமசேஷன்' நாவலை மறுபதிப்பு செய்ததைத் தொடர்ந்து இப்போது 'காகித மலர்'களைப் புதிய பதிப்பாகக் கொண்டுவருவதில் உயிர்மை பதிப்பகம் பெருமை கொள்கிறது. இந்த நாவலை வெளியிட அனுமதி அளித்த திருமதி. ஹேமலதா சுந்தரத்திற்கும், ஆதவனின் நூல்கள் பற்றிய தகவல்களைத் தொகுப்பதில் உதவிய நண்பர் ஆர். வெங்கடேஷ"க்கும் நன்றிகள்.

**மனுஷ்ய புத்திரன்**

***15.12.2004***

**சென்னை - *18***

கிருஷ்ணனுக்கும்

சேஷாத்ரிக்கும்

ஹேமாவுக்கும்

"யாக்ஞவல்கியரே! மனிதனுக்கு ஒளியைத் தருவது எது?" என்றான் அரசன்.

"அரசே! சூரியன்தான். மனிதன் அதன் உதவியால் காண்கிறான், உழைக்கிறான், வீடு திரும்புகிறான்" என்று யாக்ஞவல்கியர் பதில் கூறினார்.

"அப்படியானால் யாக்ஞவல்கியரே! சூரியன் மறைந்துவிட்ட பின்பு மனிதனுக்கு ஒளியாவது எது?" எனக் கேட்டான் அரசன்.

"சந்திரன்தான். அதன் ஒளியால் மனிதன் காண்கிறான், உழைக்கிறான், வீடு திரும்புகிறான்" என்றார் முனிவர்.

"அப்படியானால் யாக்ஞவல்கியரே! சூரியன் மறைந்த பின்பு, சந்திரனும் மறைந்த பின்பு, மனிதனுக்கு ஒளியாவது எது?"

"நெருப்பே அவனுக்கு ஒளியாகும். அதன் உதவியால் காண்கிறான், உழைக்கிறான், வீடு திரும்புகிறான்."

"அப்படியானால் யாக்ஞவல்கியரே! சூரியன் மறைந்து, சந்திரன் மறைந்து, நெருப்பும் அணைந்த பிறகு மனிதனுக்கு ஒளியாவது எது?"

"வாக்கே அவனுக்கு ஒளியாகும். அதன் உதவியால் காண்கிறான், உழைக்கிறான், வீடு திரும்புகிறான். அதனால் அரசே, ஒருவன் தன் கைகளைத் தெளிவாகப் பார்க்க முடியாதபோது, ஓர் ஓசை கேட்கிறது. அதை நோக்கி அவன் செல்லுகிறான்."

"அப்படியானால் யாக்ஞவல்கியரே! சூரியன் மறைந்து, சந்திரன் மறைந்து, நெருப்பு அவிந்து, ஓசையும் அடங்கிவிடும்போது மனிதனுக்கு ஒளியாவது எது?"

"ஆத்மாவே அவனுடைய ஒளியாகும்" என்று யாக்ஞவல்கியர் சொன்னார்.

· **பிருஹதாரண்யக உபநிஷத்**

# 1

குளிர் தொடங்கவேண்டிய சமயமாகிவிட்ட போதிலும் அதன் சுவடே எதுவும் தென்படாமல் இந்தத் தடவை குளிரே வராதோ என்று சந்தேகப்படுகிற அளவுக்கு நவம்பர் பகல்கள் தொடர்ந்து உஷ்ணமாக, நவம்பர் மாலைகள் பனியில்லாமல் துல்லியமாக, காற்றுமில்லாமல் புழுக்கமில்லாமல் மிகவும் பதவிசாக, அல்லது அமுத்தலாக, கழிந்துகொண்டிருந்தன. குளிருக்கு வர மறந்துவிட்டதோ, வர விருப்பமில்லையோ, அல்லது வழிதான் தவறிவிட்டதோ என்று தோன்றியது – பகல்கள் குறுகி இரவுகள் நீண்டு செய்ய வேண்டிய பலவற்றைச் செய்ய முடியாதவர்களாகப் படுக்கையின் வெம்மைக்குள் எப்போதும் சிறைப்பட்டிருக்கும் பலவீனர்களாக மாறுவதும் இதனால் ஏற்படும் குற்ற உணர்வும் – காலையில் எழுந்தவுடன் செருப்பைத் தேட வைக்கும் ஐஸ்கட்டியாய் ஜில்லிட்ட தரை – குழாயைத் திறந்து கைநீட்டுமுன் பத்துத் தடவை தயங்க வைக்கும், பாத்ரூம் போக வேண்டிய சந்தர்ப்பங்களை நொந்துகொள்ள வைக்கும், ஜில்ல்ல்ல்லென்ற தண்ணீர் – குளிக்கும்போது சோப்புத் தேய்த்துக்கொள்வதற்காக வெந்நீர் விட்டுக்கொள்வதில் இடைவெளி விட்டால் குளிருமேயென்று சோப்பில்லாமலேயே குளிக்கும் பல தினங்கள் – வெறுங்கையால் உலோகத் தட்டில் மோருஞ் சாதம் சாப்பிடுகிற அவஸ்தை, அலம்ப அலம்பப் போகாமல் ஒட்டிக்கொள்கிற வெண்ணெயும் நெய்யும் – வெளியே கிளம்பும் போதெல்லாம் மஃப்ளர், ஸ்கார்ஃப், ஸ்வெட்டர், கோட், ஸாக்ஸ், ஷூ என்று எதையெதையெல்லாமோ நினைவு வைத்திருந்து, தேடித்தேடி அணிகிற தொந்தரவும் ஒவ்வொரு ரகத்திலும் ஒன்று இரண்டு அல்லது மூன்று வைத்திருந்து இவற்றையே மீண்டும் மீண்டும் அணிகிற அலுப்பும், அழுக்காகாமல் பாதுகாக்கிற பொறுப்பும் – கான்கிரீட் நடைபாதையிலோ கைப்பிடிச் சுவர்கள் மீதோ வெயில் காலத்தைப்போல ஹாய்யாக உட்கார முடியாத,

இளைப்பாற முடியாத, திடீர்ப் பெரிய மனுஷித்தனமும் கட்டுப்பாடும் – வெளியே இறங்கினால் கண்ணைக் கரிக்க வைக்கிற பனிப்புகையும், கன்னங்களையும் மூக்கையும விரல்களையும் சில்லிட வைக்கிற, உதட்டை வெடிக்க வைக்கிற ஊதல் காற்றும் – இவற்றை யெல்லாம் நினைக்கிறபோது இந்தக் குளிர்ச்சனி வராமலிருந்தால் நல்லதுதானே என்று ஒரு பக்கம் ஆறுதலாகவும் இருந்தது.

இன்னொரு பக்கத்தில் கம்பளி உடைகள் வைத்திருக்கும் பெட்டியைத் திறக்கும்போது உண்டாகும் ஜம்மென்ற பாச்சா உருண்டை வாசனை, ரஜாய் மெத்தைக்குள் ஒடுங்கிக்கிடக்கிற சுகம், உடலமைப்பின் மூளிகள் குறைகள் தெரியாமல் மறைக்கிற உல்லன் உடைகள் தரும் பாதுகாப்பும் தன்னம்பிக்கையும், வெய்யிலின் இளஞ்சூட்டில் காய்ந்துகொண்டு நிலக்கடலையைக் கொரித்துக்கொண்டோ, ஸ்வெட்டர் பின்னிக்கொண்டோ, வெட்டியாகப் பேசிக்கொண்டோ புல் தரையிலோ, வராந்தாவிலோ, மொட்டை மாடியிலோ அமர்ந்திருக்கும், கால் போன போக்கில் அலைந்து திரிந்து கொண்டிருக்கும் சுகம், வெடவெடக்கும் குளிரில் அதிகாலையிலோ இரவிலோ எங்காவது சாலையோரத்து டீக்கடையில் சுடச்சுடத் தேநீரை மெல்ல உறிஞ்சிக் குடிக்கும் ஆனந்தம், ஆவி பறக்கும் வெந்நீரைச் சுடச்சுட மேலே விட்டுக் கொண்டு நீராவி சூழ சினிமாக் கனவுக் காட்சி போலப் பாத்ரூமில் நிற்கும்போது ஏற்படுகிற குழந்தைத்தனமான மகிழ்ச்சி, விடியற் காலையில் பனி படிந்த புல்தரை, மலர்கள், கண்ணாடி ஜன்னல்கள் இவற்றைப் பார்க்கும்போது ஏற்படும் பரிசுத்தமான உணர்வும், பிரியமான நேசமான கரங்களின் அணைப்பில் குளிருக்கு இதமாக ஆழப் புதைந்து கிடக்க வேண்டுமென்ற இனிய ஏக்கமும் தாபமும், பனிமூட்டத்தினிடையே வாயைத் திறக்கும் போதெல்லாம் உஷ்ணமான மூச்சுக் காற்று வெண்புகையாக வெளிப்படுதல் ஒரு புதிய விளையாட்டாகத் தோன்றி, அல்லது ஏதோ புதிய கிரகத்தில் விநோதத் திறமைகள் பலங்கள் உள்ள ஜந்துக்களாக அவதரித்திருப்பது போன்ற அழகிய பிரமையை ஏற்படுத்தி, புகை எழுப்பவேண்டுமென்பதற்காகவே வாயைத் திறந்து பேசுகிற ஆர்வமும் கிளுகிளுப்பும் – இவற்றையெல்லாம் நினைக்கும்போது ஐயோ, இந்தக் குளிர் எங்கேயாவது இந்தத் தடவை வராமலிருந்து விடுமோ என்று ஏக்கமும்தான் உண்டாயிற்று. போன தடவை வைததையெல்லாம் நிஜமாக எடுத்துக்கொண்டுவிட்டதோ, அதனால்தான் வரவில்லையோ என்று தோன்றியது.

ஆனால் இதெல்லாம் நேற்றுவரை, முந்தாநாள்வரை, அல்லது அதற்கு ஓரிருநாள் முன்பு வரை? நிச்சயமாகச் சொல்ல முடிய வில்லை. தூக்கம் எப்போது எப்படி வருகிறதென்று பார்க்க வேண்டுமென்று குழந்தைகள் எவ்வளவுதான் கொட்டக் கொட்ட விழித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாலும் கடைசியில் அவர்களை யுமறியாமல் கண்மயங்கி விடுவதுபோல, தூக்கம் வருவது தெரியாமலே

போய் விடுவதுபோல, இந்தக் குளிர் வந்ததும் தெரியத்தான் இல்லை. வந்துவிட்டது – குளிர் வந்துவிட்டது – ப்ர்ர்ர்ர் ... யாரங்கே, ஜன்னலை மூடு, அந்தச் சால்வையை எடு – குளிர் வந்துவிட்டது. உஸ்ஸ், அப்பாடி வந்தேவிட்டது ...

வேகமாகப் படித்துக்கொண்டே சென்ற பத்ரியை தாராவின் மோசமான கையெழுத்து இந்த இடத்தில் சற்றே தயங்க வைத்தது. 'சில வார்த்தைகளைத் தள்ளிவிட்டு வாசித்தாலும் மோசம் வந்து விடப்போவதில்லை ...' என்று நினைத்தவாறு அவன் சில வரிகளைத் தள்ளிவிட்டுப் படிக்க முயன்றான். அதற்குள் எதிரே உட்கார்ந்திருந்த மோகன் அவன் படித்துக்கொண்டிருந்த பேப்பரைத் திடீரென்று பிடுங்கிக்கொண்டான்.

"ஃபூல்!" என்றான் பத்ரி. "ஹைஸ்கூல் பையன்போல நடந்து கொள்ளாதே. கொடு, அந்தக் காகிதத்தை."

"மாட்டேன்" என்று மோகன் அந்தக் காகிதத்தை மடித்துச் சட்டைப் பையில் வைத்துக்கொண்டான்.

பத்ரி தன் அருகில் உட்கார்ந்திருந்த ரவியைப் பார்த்தான். ரவி இதில் பட்டுக்கொள்ள விரும்பாதவன் போல உதட்டைப் பிதுக்கிவிட்டு மேஜை மேல் பாதி குடித்து வைத்திருந்த தண்ணீர் தம்ளரையெடுத்து அதில் மிச்சமிருந்த தண்ணீரை ஒரே மடக்கில் விழுங்கினான்.

"இவ்வளவு அழகாக உன்னாலே எப்படி பேப்பர் பிடுங்க முடியறது மோகன்?" என்றான் பத்ரி மீண்டும் மோகன் பக்கம் திரும்பி. "நன்னாப் பிடுங்கறே. கெட்டிக்கா ஆஆஆரன்!"

"உம்ம்ம் ... எனக்கு வெக்கமாயிருக்கு" என்று மோகன் ஆள்காட்டி விரலை வாயில் வைத்துக்கொண்டு தமிழ் சினிமா ஹீரோயின் வெட்கப்படுவது போலப் பாவனை காட்டினான்.

"கட்!" என்றான் ரவி.

ஜூக்பாக்ஸில் ஜார்ஜ் ஹாரிஸன் இசைத்தட்டு ஒன்று முழங்கத் தொடங்கியது. பக்கத்து மேஜையில் உட்கார்ந்திருந்த இரு பெண்கள் அந்தப் பாட்டுக்கேற்றவாறு சொடக்குப் போடத் தொடங்கினார்கள். பத்ரியின் கவனம் அந்தப் பக்கம் சென்றது; லுங்கி, கமீஸ், பாப் தலைமயிர், கிளாக்ஸோ பேபிகள் போன்ற முகச்சாயல். தங்களுக்குச் சம்பந்தமில்லாத விஷயத்தில் தலையிட்டுக்கொள்பவர்கள் போல அவர்கள் அவனுக்குத் தோற்றமளித்தார்கள். ஜார்ஜ் ஹாரிஸனின் பாட்டைப் பற்றி இவர்களுக்கு என்ன தெரியும்? அதிலுள்ள ஒத்துப் போகாத தனித்தன்மையும் பிடிவாதமும், ஊன்றுகோல்களற்ற குமுறலும் தவிப்பும், கட்டுப்பாடுகளற்ற பரவசமும் ஆவேசமும் – இவையெல்லாம் அவர்களுக்கு உடன்பாடுதானா? இல்லையென்றால் எதற்காகச் சொடக்குப் போட வேண்டும்? அவனுக்கு ஏனோ சிரிப்பு வந்தது – அவனும் சொடக்குப் போடத் தொடங்கினான்.

மோகனும் ரவியும் அவன் பார்வையின் திசையைக் கவனித்தார்கள். பிறகு அவர்களும் சொடக்குப் போடத் தொடங்கினார்கள்.

அந்தப் பெண்கள் இவர்களைச் சட்டைசெய்யாதவர்கள் போல இருக்க முயன்றார்கள். ஆனால் இதில் அவர்களுக்கு வெற்றி கிடைக்கவில்லை. அவர்கள் சொடக்குப் போடுவதை நிறுத்தினார்கள். அவர்கள் நிறுத்தியவுடன் இவர்களும் நிறுத்தினார்கள்.

பத்ரி உரக்கச் சிரித்தான். மோகனும் ரவியும் அவனுடன் சேர்ந்து சிரித்தார்கள். 'மறுபடியும் அந்தப் பாட்டைப் போடலாம்டா' என்று மோகன் எழுந்து சென்றான். ஜூக்பாக்ஸ் ஓட்டையில் நாலணாவை நுழைத்து மீண்டும் அதே பாட்டுக்கான விசையையும் அழுத்திவிட்டு இடத்தில் வந்து உட்கார்ந்தான். மறுபடி ஜார்ஜ் ஹாரிஸன் பாட்டு பாடத் தொடங்கியது. இந்தத் தடவை அந்தப் பெண்கள் சொடக்குப் போடவில்லை. ஆனால் பத்ரியும் ரவியும் அந்தப் பெண்கள் பக்கமே பார்த்துக்கொண்டு சொடக்குப் போட்டுக் கொண்டேயிருந்தார்கள். அந்தப் பெண்கள் இந்தச் சீண்டலைப் பொருட்படுத்தாதவர்களாக இருக்க முடியாமல், அதே சமயம் புன்னகையுடன் அதை ஏற்றுக்கொள்ளும் மனநிலையை உருவாக்கிக் கொள்வதிலும் வெற்றியடையாமல், தாங்கள் கவனிக்கப்படுவதை மிக உணர்ந்தவர்களாக இந்த உணர்வை மறைக்க முயன்றவர்களாக ஒருவரோடொருவர் இயல்பாகப் பேசிக்கொள்வதாகப் பாவனை செய்துகொண்டு, மௌனம் ஏற்படுத்தக்கூடிய சங்கடத்தைத் தவிர்ப்பதற்காகச் சிறிதும் இடைவெளி விடாமல் இந்தப் பாவனையைத் தொடர்ந்துகொண்டு அதன் மூலமே அதை ஒரு பாவனையாக உணர்த்திக்கொண்டு அமர்ந்திருந்தார்கள். இது மிகவும் சோர்வு தரக்கூடியதாக இருந்தது. கடைசியில் கூடிய வரையில் முகத்திலும் குரலிலும் பரபரப்புக் காட்டாமல் அந்தப் பெண்களில் ஒருத்தி தற்செயலாகக் குறிப்பிடுவது போல வெயிட்டரைக் கூப்பிட்டு பில் கொண்டுவரச் சொன்னாள். "வெயிட்டர்" என்று பத்ரியும் அவனைக் கூப்பிட்டான். "எங்கள் பில்லையும் கொண்டு வா."

பில் வந்ததும் பத்ரி மோகனைச் சுட்டிக் காட்டினான். மோகன் ரவியைச் சுட்டிக் காட்டினான். ரவி துப்பாக்கிக்கு உயர்த்துவது போலக் கைகளை உயர்த்தினான். "வெயிட்டர், சீக்கிரம் அவன் பாக்கெட்டுக்குள்ளிருந்து எடுத்துக்கொண்டுவிடு" என்றான் பத்ரி. வெயிட்டர் சங்கடமான புன்னகையொன்றை முகத்தில் மலரவிட்டான்.

"நான் எடுக்கிறேன்" என்று மோகன் தன் இடத்திலிருந்து எழுந்து ரவியின் பாக்கெட்டில் கையை விடப் போனான். ரவி இந்த முயற்சியை எதிர்த்தான். வெயிட்டர் அந்தப் பெண்களிடம் பணம் வாங்கச் சென்றான்.

"நான் பிடித்துக்கொள்ளவா?" என்றான் பத்ரி.

"உம்" என்றான் மோகன்.

பத்ரி உடனே சட்டென்று ரவியைப் பிடித்துக்கொள்வதற்குப் பதிலாக மோகனைப் பிடித்துக்கொண்டான்.

"அந்தப் பேப்பரை எடு" என்றான் ரவியைப் பார்த்து. ரவி மோகன் பிடுங்கி வைத்திருந்த காகிதத்தை அவன் சட்டைப் பையிலிருந்து உருவியெடுத்தான்.

"இப்போது அவன் பர்ஸை எடு."

ரவி மோகனின் கால் சராய்ப் பைக்குள் கைவிடப் போனான். அப்போது அந்தப் பெண்கள் இடத்தைவிட்டு எழுந்தார்கள். பத்ரியின் கவனம் ஒரு கணத்துக்கு அங்கே சென்றிருக்க வேண்டும்; மோகன் சட்டென்று பலமாக ஒரு திமிறு திமிறி தன்னை பத்ரியின் பிடியிலிருந்து விடுவித்துக்கொண்டான். ரவி உடனே தன் கையிலிருந்த காகிதத்தை அவசரமாகப் பாக்கெட்டில் திணித்துக் கொண்டான்.

"இப்போ எடு பார்க்கலாம்" என்றான் மோகன்.

"நீ எடு பார்க்கலாம்" என்றான் ரவி.

பத்ரி வாசல் பக்கம் பார்த்தான். அந்தப் பெண்கள் வெளியே இறங்கிச் சென்றுகொண்டிருந்தார்கள். "டேய் சீக்கிரம் வெளியே போகலாம்டா" என்றான் அவன்.

"நீ பில்லைக் கொடுத்தவுடனே போக வேண்டியதுதான்" என்றான் மோகன்.

பத்ரி வேறு – யார் – கொடுத்து – வந்திருக்கிறார்கள் – புன்னகையுடன் வெயிட்டரைக் கூப்பிட்டு பில் தொகையை விசாரித்து, நாலணா டிப் சேர்த்துக் கொடுத்தான். வெயிட்டர் சற்றே குனிந்து சலாம் செய்தான். "நாலணாவுக்கு இவ்வளூண்டு சலாம்தானா? இனிமே இங்க வரக்கூடாது" என்றான் மோகன்.

"ஆமாம்" என்றான் ரவி.

"ஸ்டாண்டர்டிலே இருக்கிறவன் நன்னா சலாம் போடறான்" என்றான் பத்ரி.

"ஆனால் அவன் மூஞ்சி எனக்குப் பிடிக்கலை" என்றான் ரவி. மூவரும் ரெஸ்டாரெண்டிலிருந்து வெளியே வந்தார்கள். அவர்கள் உள்ளே சென்றபோது இருந்ததைவிட இப்போது வெய்யிலின் வெளிச்சம் அதிகரித்திருப்பது போலிருந்தது. அல்லது இவ்வளவு நேரம் ரெஸ்டாரண்டுக்குள் கிட்டத்தட்ட முழு இருளில் உட்கார்ந்திருந்ததால் அப்படித் தோன்றியிருக்கலாம். பத்ரியின் கண்கள் அந்தப் பெண்களைத் தேடின. அவர்களை எங்கும் காணோம். பக்கத்திலிருந்த ரீகல் தியேட்டரின் வெளிப்புறத்தில் அப்போது அங்கே ஓடிக்கொண்டிருந்த இந்திப் படத்தின் பிரம்மாண்ட மான சுவரொட்டிகள் பளீரிடும் வண்ணங்களில் காட்சியளித்தன. எல்லா இந்திப் படங்களின் சுவரொட்டிகளுமே கிட்டத்தட்ட ஒரே மாதிரியாக இருந்த காரணத்தால் ரீகல் தியேட்டரின் வெளியே எப்போதும்

நிரந்தரமாக ஒரே சுவரொட்டி ஒட்டப்பட்டுக் கிடப்பது போன்ற ஒரு பிரமை சில சமயங்களில் ஏற்பட்டது.

மோகன் காலடியில் கிடந்த காலி சிகரெட் பாக்கெட்டை ஒரு உதை விட்டான். அது தியேட்டரருகே நடைபாதையில் பத்திரிகைகளைப் பரப்பிக்கொண்டு உட்கார்ந்திருந்தவனுக்கு எதிரில், அவனுடைய பத்திரிகைகளின் மேலேயே போய் விழுந்தது. அவன் இவர்கள் திசையில் தலையைத் திருப்பினான்; அதற்குள் மோகன் சாலையில் சென்றுகொண்டிருந்த வண்டிகளைக் கவனமாகப் பார்ப்பதுபோலப் பாவனை செய்யத் தொடங்கினான். "இனிமே இவனை நம்மகூடக் கூட்டிக்கொண்டு வரக்கூடாது" என்றான் ரவி.

"ஆமாம்; நாம் போகலாம் வா. இது இங்கேயே இருக்கட்டும். ரொம்பப் படுத்தறது வரவர" என்றான் பத்ரி. அவனும் ரவியும் ரீகல் தியேட்டரின் போர்டிகோ வழியே நடக்கத் தொடங்கினார்கள். சற்று தூரம் சென்று அவர்கள் திரும்பிப் பார்த்தபோது மோகன் இன்னமும் அதே இடத்தில் நின்றுகொண்டிருப்பது தெரிந்தது. "பெரிய ஹீரோ" என்றான் ரவி. இருவரும் தொடர்ந்து நடந்தார்கள். டீ ஹவுஸ் எதிரே சாலையோரமாக இருந்த இரும்புக் கிராதிகள் மேல் சாய்ந்தவாறு இரண்டு ஹிப்பிகள் நின்றுகொண்டிருந்தார்கள். பத்ரியும் ரவியும் அவர்களருகே போய் நின்றுகொண்டு நடை பாதையில் நடந்து செல்லும் பெண்களை, சாலையில் செல்லும் வண்டிகளை, வேடிக்கை பார்க்கத் தொடங்கினார்கள். இதமான நவம்பர் வெய்யில்; விடுமுறை நாள்; அவசரமேயின்றி மெல்ல அசைந்து அசைந்து கடைகளின் கண்ணாடி முகப்புகளை நின்று நின்று பார்த்தவாறே நடந்து சென்ற மக்கள். "பாடா காஷ்- ஸாப்! சம்காயேகா ஸாப்!" என்று கூவும் பூட்பாலிஷ் சிறுவர்கள். நாளைய குலுக்கல் தேதியுள்ள லாட்டரி சீட்டுகளை சீட்டில் குறித்துள்ளதைவிடக் குறைந்த விலையில் அளிக்கும், நீங்களும் லட்சாதிபதியாகக் கூடுமென்ற நம்பிக்கையை ஊட்டும், சிறுவர்கள். அரைகுறை இந்தியில் விநோத உச்சரிப்புடன் பிச்சை கேட்கும் தமிழ் நாட்டுப் பிச்சைக்காரி ஒருத்தி. 'உன்னைத்தான் நான் காதலிக்கிறேன்; ஆனால் என்ன செய்வது ...?' என்பதுபோல ஒருவனுடன் நடந்து செல்லும்போதே பார்வையின் ஒரு துணுக்கை வழியில் எதிர்ப்படுகிறவர்கள் மீது மின்னல்போல வீசிச் செல்லும் பெண்கள் ...

"மணி என்ன?" என்று ஹிப்பிகளில் ஒருவன் பத்ரியை விசாரித்தான்.

மணி இரண்டேகாலாகியிருந்தது; பத்ரி சொன்னான். அவன் உடனே சுருக்கமாக நன்றி கூறிவிட்டு, ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்தான். இரண்டேகால் மணிக்கு ஒரு சிகரெட் பிடிக்க வேண்டுமென்று முன்னமேயே அவன் தீர்மானித்திருந்தது போலத் தோன்றியது.

"அமெரிக்காவிலிருந்தா வருகிறீர்கள்?" என்று ரவி அவனை விசாரித்தான்.

"யப்... தட்ஸ் ரைட்."

"பிளேனிலா வந்தீர்கள்?"

"நோ..." என்று அவன் தோள்களைக் குலுக்கிக் கொண்டான். "அவ்வளவுக்கு எங்களிடம் பணமில்லை யூஸீ... பெரும்பாலும் நிலமார்க்கமாகத்தான் வந்தோம்... ஹிச்ஹைக்கிங்... கிளம்புகிற போது மட்டும் போஸ்டனிலிருந்து ஜிப்ரால்டர் வரையில் ஸ்டீமரில் வந்தோம். பிறகு எல்லாம் ரோடுப் பயணம்தான். ஸ்பெயின், பிரான்ஸ், இத்தாலி, கிரீஸ், டர்க்கி, இராக், இரான், அஃப்கானிஸ்தான், பாகிஸ்தான்..."

"ஐ ஸீ, ஐ ஸீ... இந்தியா பிடித்திருக்கிறதா?"

"ஓ, வீ லைக் வெரி மச்... வீ லைக் கான்டி..."

"உம்?"

"கான்டி... லீடர்... கிரேட்... மான்..."

"ஓ! காந்தி..."

"யா..."

"வீ லைக் லிங்கன்" என்றான் பத்ரி.

"அண்ட் கென்னடி" என்று ரவி சேர்த்தான். அந்த ஹிப்பியை நோக்கிக் கையை நீட்டி அவன் கையைப் பிடித்துப் பலமாகக் குலுக்கினான். அமெரிக்க – இந்திய நல்லுறவின் ஒரு புதிய தொடக்கம்போல அந்தக் காட்சி தோன்றியது.

# 2

செல்லப்பாவுக்கு இலேசாகக் குளிருவது போலிருந்தது. திறந்திருந்த பஸ் ஜன்னலருகில் அவன் உட்கார்ந்திருந்தான். வீட்டிலிருந்து கிளம்பும்போது ஸ்வெட்டர் அணிந்துகொள்வதா வேண்டாமா என்று பலமுறை யோசித்து, வாசல் பக்கம் வந்து சற்று நேரம் நின்று பார்த்து, அவ்வளவாகக் குளிர் இல்லை போலத் தோன்றியதால் வேண்டாமென்று அவன் முடிவு செய்திருந்தான். இப்போது அந்த முடிவு தவறானதாகத் தோன்றியது. ஸ்வெட்டர் அணிந்து கொண்டு வந்திருக்கலாம்; அந்தந்த சமயங்களில் செய்ய வேண்டிய விஷயங்கள் அதற்கான நேரம் கடந்த பிறகுதான் அவனுக்கு எப்போதுமே புலப்படுகின்றன. மிக எளிய முடிவுகளை எடுப்பதில் கூட அவனுக்கு இன்னமும் சாமர்த்தியம் போதாது – தன்னுடைய இருபத்திநாலாவது வயதிலும். இனி எப்போது ஏற்படப் போகிறது? இதனால் பல திசைகளில், பலவிதங்களில் அவன் ஏற்கெனவே நஷ்டமடைந்திருக்க வேண்டும். வாழ்க்கையில் எப்போதும் எல்லாவற்றுக்கும் இரண்டாவது வாய்ப்புக் கிடைத்து விடுவதில்லை.

பஸ் ஜன்னலை மூடினால் குளிராது. ஆனால் அந்த முயற்சியில் வெற்றி கிடைக்குமென்ற உத்தரவாதமில்லாமல் அதில் ஈடுபடுவதற்கு அவன் தயங்கினான். பின் ஸீட்டில் ஒரு பெண் வேறு உட்கார்ந்திருந்தாள். திறந்திருக்கும் பஸ் ஜன்னல்கள் பெரும்பாலும் அந்த நிலையில் நன்றாக ஸ்திரப்பட்டு, தம்மை மூடுவதற்குச் செய்யப் படும் முயற்சிகளை ஒரு உறுதியான தீர்மானத்துடன் எதிர்ப்பதை அவன் அனுபவத்தில் உணர்ந்திருந்தான் – சில பழக்கங்களிலும் அபிப்பிராயங்களிலும் ஸ்திரப்பட்டுவிட்ட மனிதர்கள் அவற்றை மாற்றிக்கொள்ள மறுப்பதைப் போல. அவன் ஜன்னலை மூடத் தொடங்கினால் ஒரு கௌரவப் பிரச்னையில் வீணே சிக்கிக்கொள்ள நேரிடும். ஜன்னலை மூடுவதில் அவன் தோல்வியடைந்தால் அதைப்

போல வேறு அவமானம். வேண்டாம் – அதுவும் ஒரு பெண் பார்த்துக்கொண்டிருக்கும்போது. இவள் அழகாயிருந்தாள்; பஸ்ஸில் ஏறும்போது அவன் கவனித்திருந்தான். அவளைத் தாண்டி இந்த ஸீட்டில் வந்து உட்கார்ந்த பிறகு ஒரு முறை திரும்பி அவள் முகத்தை ஆசை தீரப் பார்க்க வேண்டுமென்ற ஆசைகூட உண்டாயிற்று. ஆனால் அதைக் கஷ்டப்பட்டு அடக்கிக்கொண்டு உட்கார்ந்திருந்தான்.

டிக்கெட் வாங்குவதற்காகக் கையில் பதினைந்து காசு சில்லறையை அவன் தயாராக வைத்திருந்தான். ஆனால் கண்டக்டர் இன்னமும் அவனருகில் வரவில்லை. இதுவும் வேறு அவனைத் தொந்தரவு செய்துகொண்டிருந்தது; செய்யப்பட வேண்டிய ஒன்று செய்யப் படாமல் இருப்பது பளுவாக மனதில் உறுத்திக்கொண்டிருந்தது. கண்டக்டர் வந்து டிக்கெட் கொடுத்துவிட்டால் பிறகு அந்தக் கவலை தீர்ந்து அந்த அளவுக்கு ஆசுவாசமாக இருக்கலாம். ஆனால் கண்டக்டர் அந்த ஆசுவாசமளிக்கத் தயாரில்லாதவன்போல பஸ் வாசலிலேயே நின்றுகொண்ருந்தான். அயோக்கிய ராஸ்கல்! இவன் அருகில் வந்து டிக்கெட் கேட்டு நாம் எந்த விதத்திலாவது தாமதமாக்கிவிட்டால் அதற்கு மட்டும் பெரிதாகச் சண்டைக்கு வருவான். நம்மை மட்டும் அவன் காக்க வைக்கலாம். இவனுக்குத்தான் எல்லா உரிமையும்; நமக்கு எதுவும் கிடையாது. அன்று காலை தினசரியில் ஒரு பஸ் கண்டக்டரை நாலைந்து மாணவர்கள் சேர்ந்து அடித்ததாகப் படித்த செய்தியொன்று அவனுக்கு நினைவு வந்தது. அந்தச் செய்தி அவனுக்கு மிகவும் மகிழ்ச்சியளித்திருந்தது. 'வேண்டும் இந்தத் தடியன்களுக்கு' என்று அப்போது அவனுக்குத் தோன்றியிருந்தது...

'டிக்கெட்?' என்று கண்டக்டரின் குரல் திடீரென்று மிக அருகில் ஒலித்து செல்லப்பாவைத் திடுக்கிட வைத்தது. தான் அவனைப் பற்றி இளக்காரமாக நினைத்துக்கொண்டிருந்தது அவனுக்கு எங்கேயாவது தெரிந்திருக்குமோ என்ற பயத்துடன், "கோல் மார்க்கெட்" என்று பணிவான குரலில் கூறியவாறு அவன் கையில் சில்லறையைக் கொடுத்து, டிக்கெட் வாங்கிக்கொண்டான். இந்தக் கண்டக்டர் மீசை வைத்துக்கொண்டு வாட்டசாட்டமாகக் கடுகடுவென்று இருந்தான். அவனுடன் கொடுக்கல் – வாங்கல் தகராறில்லாமல் சுருக்கமாக முடிந்துவிட்டது செல்லப்பாவுக்கு ஆறுதலளித்தது. அவன் இப்போது வேறு விஷயங்களில் தன் கவனத்தைச் செலுத்த முடிந்தது. ரீகல் பஸ் ஸ்டாண்டிலிருந்து கிளம்பிய பஸ் சிவப்பு ஸிக்னலுக்காக கிராஸிங் அருகில் மீண்டும் கிரீச்சிட்டு நின்றது. இரண்டு ஹிப்பிகள் பஸ்ஸுக்கு முன்புறமாகச் சாலையைக் கடந்து சென்றார்கள். செல்லப்பா டீ ஹவுஸ் பக்கம் பார்வையைச் செலுத்தினான். அப்போதுதான் தன் தம்பி பத்ரியும் அவன் நண்பன் ரவியும் சாலையோரமாக நிற்பதைக் கவனித்தான். பஸ்ஸிலிருந்தவாறே கூப்பிட முடியாது. இந்தப் பக்கம் அவன் திரும்பினால் சைகை

செய்யலாம். ஆனால் அவன் இந்தப் பக்கம் திரும்பாமல் வேறெங்கோதான் தொடர்ந்து பார்த்துக்கொண்டிருந்தான். வேண்டுமானால் இறங்கி அவனிடம் விசுவம் வரப்போவதைப் பற்றிச் சொல்லலாமோவென்று அவன் நினைத்தான். ஆனால் அதற்குள் ஸிக்னல் மாறி பஸ் கிளம்பிவிட்டது. செல்லப்பா தான் பார்த்துக்கொண்டிருந்த காட்சியைத் தொடர்ந்து பார்த்தவாறே திரும்பி, தூரத்திலிருந்து பார்வையை மீட்கும்போது பின் ஸீட்டில் உட்கார்ந்திருந்த பெண்ணையும் ஒரு பார்வை பார்த்துவிட்டு, மீண்டும் சரியாக உட்கார்ந்தான். அழகாய்த்தானிருந்தாள்.

பத்ரி அதிர்ஷ்டசாலி. காலையிலேயே வீட்டைவிட்டுக் கிளம்பிப் போய்விட்டான். செல்லப்பாவும் காலையில் வெளியில் போவதாகத் தான் இருந்தான் – முடிவெட்டிக்கொள்வதற்காக. ஆனால் ஏதோ நாவலைப் படித்துக்கொண்டிருந்தவன் அப்படியே உட்கார்ந்திருந்து விட்டான். கடைசியில் வெளியில் போகவில்லை; முடிவெட்டிக் கொள்ளவுமில்லை. அதைவிட மோசம், இப்போது அம்மாவை விமான நிலையத்துக்கு அழைத்துச் செல்லும் நிர்ப்பந்தத்துக்குள்ளாகி விட்டான். விசுவத்தின் தந்தி வந்தபோது அவன் வீட்டில் இருந்து தொலைத்ததுதான் இவ்வளவுக்கும் மூலகாரணம். இரண்டு வாரங்களுக்கு முன்பு அமெரிக்காவிலிருந்து கிளம்புகிற தருணத்தில் விசுவம் எழுதிய கடிதத்தில், அங்கிருந்து வரும்போது நேராகப் பம்பாயில் போய் இறங்கப்போவதாகவும் பம்பாயில் சில நாட்கள் தங்கிவிட்டுப் பிறகுதான் டில்லிக்கு வரப்போவதாகவும் எழுதியிருந் தான். பம்பாயில் எவ்வளவு நாள் தங்க உத்தேசம், எப்போது டில்லிக்கு வரப் போகிறான் என்பதைப் பற்றியெல்லாம் எதுவும் விவரமாக எழுதவில்லை. இன்று திடீரென்று இந்தத் தந்தி வந்திருக்கிறது.

விமான நிலையத்துக்குப் போவதென்னவோ மனதுக்கு ஒரு மாறுதலாகத்தான் இருக்கும். புதுப்பிக்கப்பட்ட பாலம் நிலையத்தை அவனும்தான் இன்னமும் பார்க்கவில்லை. ஆனால் அதுவல்ல விஷயம். பிறர் ஏதோ விசையை அழுத்தி தன்னை இயங்க வைப்பதை, சாட்டையைச் சொடுக்கி ஓட வைப்பதை, அவன் வெறுத்தான். துரதிர்ஷ்டவசமாக, எப்போதும் அவன் இப்படி விரட்டப்பட்டுக்கொண்டிருப்பதாகவே தோன்றியது. அவனுடைய ஆசைகளும் அந்த ஆசைகளை நிறைவேற்றிக்கொள்ளும் சந்தர்ப்பங் களும் சேர்ந்து வரக்கூடாதென்று கங்கணம் கட்டிக்கொண்டிருந்தன போலும். ஒன்றிருந்தால் இன்னொன்று இருப்பதில்லை. இன்று பேசாமல் வீட்டில் உட்கார்ந்து படித்துக்கொண்டிருக்கலாமென்று அவன் நினைத்திருந்தான். சில லைப்ரரி புத்தகங்களுக்கு நாளை முடிவு தேதியாயிருந்தது. அவற்றை அவன் இன்னும் படிக்கத் தொடங்கக்கூட இல்லை. இப்போது அவற்றைப் படிப்பதற்கான கடைசி வாய்ப்பும் அவனுக்கு மறுக்கப்படுகிறது.

கோல் மார்க்கெட் பஸ் ஸ்டாண்டை பஸ் நெருங்கத் தொடங்கியவுடன் அவன் இடத்தை விட்டு எழுந்து அந்தப் பெண்ணைப் பார்த்தவாறே பஸ் வாசலை நோக்கி மெல்ல நடந்து சென்று, பஸ் நின்றதும் இறங்கினான். பாக்கெட்டில் விசுவத்தின் தந்தி இருக்கிறதாவென்று தொட்டுப் பார்த்துக்கொண்டான். தென்னிந்திய சங்கத்தை நோக்கி நடக்கத் தொடங்கினான்.

மந்திர் மார்க்கில் திரும்பியவுடன் இரண்டு எருமை மாடுகள் நடைபாதையை அடைத்துக்கொண்டு நடந்து வருவதைப் பார்த்து, அவன் சாலையைக் கடந்து மறுபுறம் சென்றான். அவனுக்கும் சாலையைக் கடக்கத்தான் வேண்டும்; எருமைகள் வராமலிருந்தால் இன்னும் சற்றுத் தள்ளிப் போய்க் கடந்திருப்பான், அவ்வளவுதான். செயல் முன்பே தீர்மானிக்கப்பட்டிருந்தது. அது நிகழ்ந்த கட்டத்தை மட்டும் எருமைகள் தீர்மானித்திருந்தன. வாழ்க்கையில் வேறு சில செயல்களுக்கான கட்டங்கள் இதே போலச் சூசமாகத் தெரிவிக்கப்பட்டால் எவ்வளவோ உதவியாயிருக்கும்.

தென்னிந்திய சங்கத்துக்கு வெளியே சாலையை ஒட்டினாற்போல அவர்கள் வீட்டு கார் நிற்பதை அவன் தூரத்திலிருந்தே பார்க்க முடிந்தது. காரை அடைந்து, அதைத் தாண்டி படிக்கட்டுகளில் ஏறி முன்புறத் தோட்டத்தின் வழியாக நடந்து செல்லும்போது, செடிகளுக்குத் தண்ணீர் விட்டுக்கொண்டிருந்த கிழட்டு தோட்டக்காரன் அவனைப் பார்த்து "ஸலாம் ஸாப்!" என்றான். செல்லப்பா பதிலுக்கு அவனை நோக்கிக் கையை உயர்த்திவிட்டு, தன் அப்பா எங்கேயிருக்கிறாரென்று விசாரித்தான். ஆபீஸ் அறையில் இருப்பதாகத் தோட்டக்காரன் கைகாட்டினான்.

ஆபீஸ் அறைக்குள் அவன் நுழைந்தபோது அவனுடைய அப்பா அறை வாசலுக்கு முதுகைக் காட்டியவாறு, எதிரேயிருந்த ஜன்னல் வழியே வெளியே பார்த்துக்கொண்டு நின்றிருந்தார். அவர் வலது கை விரல்களுக்கிடையில் ஒரு சுருட்டு புகைந்துகொண்டிருந்தது. ஜன்னலுக்கு மறுபுறத்திலிருந்த பாட்மிண்டன் கோர்ட்டில் ஒரு டபிள்ஸ் ஆட்டம் மும்முரமாக நடந்து கொண்டிருந்தது. ஒரு மாதம் முன்பு வரை இந்தச் சமயத்தில் வெய்யிலில் தொடர்ந்தாற் போல் சில நிமிடங்கள்கூட ஆடுவது அசாத்தியமானதாக இருந்திருக்கும். ஆனால் இப்போது வெய்யிலில் காரம் இல்லை. மிருதுத்தன்மைதான் இருந்தது; விடலைப் பருவத்து மிடுக்கும் சவாலும் குறைந்து ஆண் பார்வையையும் ஸ்பரிசத்தையும் ஆர்வத்துடன் வரவேற்கும் ஒரு பெண்ணின் பசுமையான மிருதுத்தன்மை.

மூர்த்தி டைப்ரைட்டரின் எதிரே உட்கார்ந்து ஏதோ தட்டிக் கொண்டிருந்தான். அவன்தான் சங்கத்தின் துணைக்காரியதரிசி. செல்லப்பா அறைக்குள் நுழைவதை அவன்தான் பார்த்தான்; உடனே அடையாளம் கண்டுகொள்கிற ஒரு புன்னகையை அவன்

திசையில் வீசிவிட்டு, "பசுபதி ஸார்! உங்களுக்கு ஒரு விஸிட்டர்!" என்று அறிவித்தான். பசுபதி திரும்பினார். செல்லப்பா அவரருகில் சென்று, "விசுவம் இன்னிக்கு பம்பாயிலேந்து வரானாம்" என்று அவர் கையில் தந்தியைக் கொடுத்தான். பசுபதி அரை நிமிடத்துக்கும் குறைவான நேரத்தில் படித்து முடித்துவிடக்கூடிய அந்தத் தந்தியை ஒரு நிமிடத்துக்கும் மேலாகப் பார்த்துக்கொண்டு நின்றார். செல்லப்பா ஜன்னல் வெளியே பாட்மிண்டன் ஆட்டத்தை வேடிக்கை பார்க்கத் தொடங்கினான்.

பசுபதி தந்தியை மடித்துச் செல்லப்பாவிடம் திருப்பிக் கொடுத்தார். "சாயங்கால ஃபிளைட்டிலேயா வரானாம்? அப்ப என்னாலே வர முடியாதே... அம்மா இருக்காளா வீட்டிலே?" என்று டெலிபோனை நோக்கிச் சென்றார். "உன்னாலே வர முடியாதுன்னா அம்மா என்னைக் காரை எடுத்துண்டு வந்து அவளை ஏர்ப்போர்ட்டுக்கு அழைச்சுண்டு போகச் சொன்னா" என்றான் செல்லப்பா. பசுபதி உடனே டெலிபோன் பண்ண முயற்சிக்காமல், "சரி; அப்ப நீ கூட்டிண்டு போறயா அம்மாவை?" என்று செல்லப்பாவைப் பார்த்தார். செல்லப்பாவின் அடிவயிற்றில் பகீரென்ற உணர்ச்சி ஏற்பட்டது. அதைக் காட்டிக்கொள்ளாமல், "உம்" என்றான். அப்பா தந்த கார்ச் சாவியை வாங்கிக்கொண்டான். அவன் ஆபிஸ் அறைக்கு வெளியே வரும்போது கூடவே அவன் அப்பாவும் வந்தார். "ரொம்ப லேட்டாக்க வேண்டாம் கிளம்பறத்துக்கு; நாலு மணிக்குள்ளேயாவது கிளம்பினாத்தான் சரியாயிருக்கும்" என்றார்.

"நாலு மணிக்கேவா?" என்றான். செல்லப்பா. "ஏழு மணிக்குத் தான் பிளேன்."

"இன்னிக்கு இந்த ஸர்தார்ஜிகளுடைய பண்டிகையாச்சே – ஊர்வலமும் அதுவுமா ரோடெல்லாம் அடைச்சிருக்கும்."

"அந்த ரூட்டிலே ஒண்ணும் இருக்காதுப்பா."

"யார் கண்டது? இவாளுடைய ஊர்வலங்களைப் பத்தி ஒண்ணும் சொல்ல முடியாது."

செல்லப்பா வெளியே வந்து காரிலேறி உட்கார்ந்தான். சாலையை நோக்கித்தான் அது பார்க் செய்யப்பட்டிருந்ததால் ரிவர்ஸ் பண்ண வேண்டிய தொந்தரவு இருக்கவில்லை. சாலையில் வண்டிகள் எதுவும் வரவில்லையென்று நிச்சயப்படுத்திக்கொண்டு அவன் காரை மெதுவாகக் கிளப்பி சாலையின் இடது ஓரத்தை அடைந்து கியரைப் போடுமுன் அப்பா பக்கம் ஒருமுறை திரும்பினான். ஆனால் அவர் உள்ளே சென்றுவிட்டிருந்தார்.

அவனுக்குத் திடீரென்று ஒரு குதூகலமும் கர்வமும் உண்டாயிற்று. நேரம், செல்ல வேண்டிய இடம், தூரம் முதலியவற்றைப் பற்றிய உணர்வுகளைக் கழட்டியெறிந்தவன்போல அவன் காரை இரண்டாவது கியரிலேயே மிக மெதுவாகச் செலுத்திக்கொண்டு போகத்

தொடங்கினான். வெயில் அழகாக இருந்தது. அந்த வெயிலை உடலெல்லாம் பூசிக்கொண்டு நடைபாதையில் நடந்து செல்லும் மனிதர்கள் அழகாயிருந்தார்கள் – முக்கியமாக, பெண்கள். கோடையில் பளீரென்ற வெய்யிலில் ஆபாசமாகத் தோன்றியிருக்கக் கூடிய கனமான வர்ணங்கள்கூட இப்போது கண்ணை உறுத்துவனவாக இல்லை. பளபளவென்று துடைக்கப்பட்டிருந்த காரின் பானெட்டின் மேல் சாலையில் மேற்புறத்தில் பந்தலிட்டது போல அடர்த்தியாகக் கவிந்திருந்த மர இலைகளின் கோணல்மாணலான பிரதிபலிப்புகள் வெவ்வேறு நிழற்கோலங்களை உருவாக்கியவாறு இருந்தன. சாலையின் குறுக்கே எருமை மாடு ஒன்று அசைந்து அசைந்து நடந்து சென்றது. செல்லப்பா கார் தந்த பாதுகாப்பில் அலட்சியமாக ஹாரனை அழுத்தினான்.

பிர்லா மந்திர் எதிரே நடைபாதையில் சிகரெட் விற்றுக்கொண்டு உட்கார்ந்திருந்த சிறுவனருகே அவன் காரை நிறுத்தினான். 'ஒரு வில்ஸ் சிகரெட் தருகிறாயா பையா' என்று குரலில் சிறிதும் அதிகாரம் தொனிக்காமல் பிரியமாகக் கேட்டுக்கொண்டான். அந்தப் பையன் சிகரெட் கொண்டுவந்து கொடுத்து, சில்லறையை வாங்கிக்கொண்டான். நெருப்பு வேண்டுமென்று செல்லப்பா சைகை செய்தவுடன் புகைந்து கொண்டிருந்த கயிற்றுத் துண்டை எடுத்து வந்து ஜன்னலருகே அதைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு நின்றான் – செல்லப்பா சிகரெட்டைப் பற்ற வைத்துக்கொள்ளும் வரை. செல்லப்பா அந்தப் பையனின் பெயரை ஞாபகமாக விசாரித்து, ரொம்ப நல்ல பெயர் என்று பாராட்டி, காரைக் கிளப்பினான்.

வலது கைவிரல்களால் சிகரெட்டையும் ஸ்டியரிங்கையும் சேர்ந்தாற்போலப் பற்றியவாறு, அவ்வப்போது அந்தக் கையை வாயை நோக்கி உயர்த்தி சிகரெட்டைத் தீர்க்கமாக உறிஞ்சி மிகவும் அனுபவித்துப் புகையை வெளியே ஊதியவாறு, அவன் ஸ்டைலாகக் காரை ஓட்டிச் சென்றான். சிகரெட் புகைக்கும் ஆனந்தத்தினாலோ அல்லது பஸ்ஸில் பார்த்த பெண் தன்னருகில் இப்போது அமர்ந்திருப்பதுபோலக் கற்பனை செய்ததாலோ அவன் முகத்தில் ஒரு திருப்தியான புன்னகை விளையாடியது. பிற்காலத்தில் மகாபுருஷனாக வரக்கூடிய அறிகுறிகள் பொருந்தியவனாகத் தன்னைப்பற்றி அவனுக்கு அடிக்கடி ஏற்படுகிற சூசக உணர்வு இப்போது மீண்டும் ஏற்பட்டதும் ஒரு காரணமாயிருக்கலாம். அந்தச் சிகரெட் பையனிடம் அவன் நடந்துகொண்ட தோரணையே போதுமே.

சிறு வயதில், அவர் சிகரெட் பையன்களிடம்கூட அலட்சியமின்றிப் பிரியமாக நடந்துகொள்வார்.

சிறு வயதில் காந்தி; சிறு வயதில் நேரு; சிறு வயதில் செல்லப்பா – இல்லையில்லை, சுப்பிரமணியன்.

செல்லப்பா கோல்டாக்கானா செல்லும் சாலையில் காரைத் திருப்பினான். பஸ் கனாட் பிளேஸ் வழியாகச் சுற்றிக்கொண்டும்

ஸிக்னல் விளக்குகளில் நின்றுகொண்டும் கிட்டத்தட்ட பதினைந்து நிமிடங்கள் எடுத்துக்கொண்டிருந்தது; ஆனால் இப்போது அவன் சுருக்கு வழியாக ஐந்தே நிமிடங்களில் கோல்டாக்கானா தபால் நிலையத்துக்கு அருகிலிருந்த தன் வீட்டை அடைந்துவிட முடிந்தது.

# 3

அம்மாவையும் அழைத்துக்கொண்டு செல்லப்பா மீண்டும் வீட்டை விட்டுக் கிளம்பியபோது மணி ஐந்தடித்துச் சில நிமிடங்களாகி விட்டிருந்தது. வெய்யிலின் வீச்சும் ஒளியும் மங்கி, அதன் கடைசிச் சுவடுகள் மட்டும் ஆகாயத்தின் ஓரங்களில், வெளியே எடுத்துக் கொட்டுவதற்கு வசதியாக அறை மூலையில் பெருக்கி ஒதுக்கப்பட்ட குப்பையைப் போலக் காட்சியளித்தது. வெகுநேரமாக எரிந்த நெருப்பு அணையும்போது எழும் புகையைப்போல இலேசாகப் பனிப்படலம் மரங்களின் உச்சிகளுக்கு மேலாகத் தென்படத் தொடங்கியது. ஸ்வெட்டர் போட்டுக்கொள்வதைப் பற்றி இப்போது யாருக்கும் சந்தேகம் ஏற்படக் காரணமேயில்லை; அவன் போட்டுக் கொண்டிருந்தான்.

தபால் நிலையக் கட்டிடத்தைச் சுற்றிக்கொண்டு இர்வின் ரோட் வழியே செல்லும்போது எங்கோ தூரத்திலிருந்து ‘டொம் டொம், டொம் டொம்’ என்று கொட்டுச் சத்தம் மிதந்து வந்தது. பாண்ட் இசை கேட்பதுபோலவும் தோன்றியது. செல்லப்பாவின் கற்பனையில் சாலையை அடைத்துக்கொண்டு வரும் ஒரு பெரிய ஊர்வலம் தெரிந்தது: அவர்களுடைய காரை இம்மியளவுகூட நகரவிடாமல் செய்யும் ஊர்வலம் . . .

அப்படி ஏதாவது ஊர்வலத்தில் அவர்கள் சிக்கிக்கொள்ள நேர்ந்தால் அதற்கு அம்மாதான் பொறுப்பாளி. அவளால்தான் கிளம்புவதற்கு இவ்வளவு தாமதமாயிற்று. விவிதபாரதி முடிவதற் காகக் காத்திருந்து (இன்று அம்மாவுக்கு பிடித்த பாட்டுகளாகத் தொடர்ந்து வந்துகொண்டிருந்தன), பாலுக்காகக் காத்திருந்து, இஸ்திரிக்காரனுக்காகக் காத்திருந்து, கிளம்புகிற நேரத்தில் சீப்பையும் செருப்பையும் கைக்குட்டையையும் காணாமல் தேடு தேடென்று

தேடி (கடைசியில் சீப்பு பீரோவுக்குப் பின்னாலும் செருப்பு வெளியே லான்ஸிலும் கிடந்தது; தன்னுடைய கைக்குட்டை ஒன்றை அவன் தியாகம் செய்யவேண்டியிருந்தது), எல்லாம் ஆனபிறகு வீட்டைப் பார்த்துக்கொள்வதற்கு வேலைக்காரனைக் காணாமல் அவனை ஒருமுறை தேடி – ஈசுவரா, ஈசுவரா. அம்மா வெளியே கிளம்பும் தருணங்கள் ஏனோ எப்போதும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகளாகத்தான் அமைந்து விடுகின்றன. இவ்வளவுக்கும் அவள் அடிக்கடி வெளியே சென்று கொண்டிருப்பவள்தான். இருந்தாலும் துரிதமாக வெளியே கிளம்பும் கலையை அவள் இன்னமும் பயிலவில்லை. அல்லது தன் பெண்மையை அடிக் கோடிட்டுக் காட்டுவதற்காக சாமர்த்தியம் குறைந்தவளாகவும் உதவி தேவைப்படுபவளாகவும் இந்தத் தருணங்களில் தன்னைக் காண்பித்துக்கொள்கிறாளோ என்னவோ.

விலிங்க்டன் ஆஸ்பத்திரியைத் தாண்டி, விலிங்க்டன் கிரெஸண்ட் சாலையில் நிகழ்ச்சியெதுவுமின்றி கார் செல்லத் தொடங்கியது. கிளைச்சாலை ஒன்றின் அருகே, அந்தச் சாலையிலிருந்து மெயின் ரோடில் திரும்பிச் சென்றுகொண்டிருந்த சில லாரிகளுக்காகச் செல்லப்பா சற்றே காரை நிறுத்தினான். எந்த இடத்தில் கார் நிற்கிறதென்று பார்க்க விரும்பியவள்போல அம்மா – அவளும் முன் ஸீட்டில் செல்லப்பாவின் அருகில்தான் உட்கார்ந்திருந்தாள் –தன் பக்கத்து ஜன்னல் வழியே கண்களை இடுக்கிக்கொண்டு வெளிப்புறம் பார்த்தாள். செல்லப்பாவுக்கு அப்போதுதான் இன்னொரு விஷயம் புலனாயிற்று; அம்மா தன் மூக்குக் கண்ணாடியை அணிந்துவர மறந்திருந்தாள்.

“கண்ணாடி போட்டுக்கொண்டு வரவில்லையா?” என்றான் அவன் சாலையைவிட்டுக் கண்ணை எடுக்காமல்.

“நினைச்சிண்டேயிருந்தேன் . . . கிளம்பற அவசரத்திலே மறந்து போச்சு . . . எதையாவது மறந்திட்டு வரவேண்டாமா?” என்று அம்மா சிரித்தாள்.

கடைசி லாரியும் திரும்பிச் சென்றது. செல்லப்பா காரைக் கிளப்பினான். சில நாட்களுக்கு முன்புதான் அம்மா கண்ணாடியணியத் தொடங்கி இருந்ததால் அது அவளுக்கு இன்னமும் ஒரு பழக்கமாகப் படிந்தாகவில்லை. அவனுக்கும் கண்ணாடி அணிந்த அம்மா இன்னமும் பழக்கப்படாததால் வீட்டில் காரிலேறுகையில் அவளைப் பார்க்கும்போது மூளியாகத் தெரியவில்லை.

முன்னால் சென்றுகொண்டிருந்த லாரிகள் மிக மெதுவாகச் சென்றுகொண்டிருந்தன. செல்லப்பா அவற்றை ஓவர்டேக் பண்ண முயற்சிக்காமல் அவற்றின் பின்னால் தானும் மெதுவாகக் காரைச் செலுத்திக்கொண்டு சென்றான். விசுவம் இப்போது பிளேனில் இருப்பான். செல்லப்பா பிளேனில் சென்றதில்லை; ஆனால் திரைப்

படங்களில் பார்த்திருந்த விமான உட்புறக் காட்சிகளின் பின்னணியில், பிளேனுக்குள் ஒரு ஸீட்டில் (ஜன்னலருகில்?) விசுவம் உட்கார்ந்திருக்கும் காட்சியை அதிகச் சிரமமில்லாமல் அவனால் கற்பனை செய்து பார்க்க முடிந்தது. விசுவம் ஏர்போட்டில் பிளேனை விட்டு இறங்கும் காட்சிகூட ஏற்கெனவே அவன் கற்பனையில் விரிந்திருந்தது. விசுவம் பிளேன் படிக்கட்டுகளில் மெதுவாக (நியூஸ் ரீல்களில் பிரதம மந்திரி இறங்குவதுபோல) இறங்குகிறான். விமான நிலையக் கட்டிடத்தின் படிக்கட்டுகளிலிருந்து 'ஆப்ரனின்' ஓரத்திலிருந்த இரும்புக் கிராதிகள் வரையில் வழிந்து கிடந்த கூட்டத்தில் தன்னையும் அம்மாவையும் தூரத்திலிருந்தே அடையாளம் கண்டுகொண்டு கையை உயர்த்தி ஆட்டுகிறான்...

"ஓவர்டேக் பண்ணேண்டா... அவன் பின்னாலேயே எவ்வளவு நேரம் போயிண்டிருப்பே" என்றாள் அம்மா.

செல்லப்பாவுக்கு இந்த அனாவசியக் குறுக்கீடு எரிச்சலை யளித்தது, ஆனால் எதிர் திசையிலிருந்து ஒரு சின்ன சைக்கிள் வண்டிகூட இந்தப்பக்கம் வந்துகொண்டிராமல் வலது பக்கச்சாலை, ஒரே சுத்தமாக இருந்ததால் அவனால் சால்ஜாப்பு சொல்லவும் முடியாமல் இருந்தது. "எல்லாம் பண்ணத்தான் போறேன்" என்று கடுகடுப்புடன் முணுமுணுத்தவாறு அவன் அந்த லாரிகளை ஓவர்டேக் செய்தான். ஒன்று, இரண்டு, மூன்று, நாலு, ஐந்து. ஐந்து லாரிகள். ஒவ்வொன்றும் எவ்வளவு பெரிது; எவ்வளவு கனம் – சாலையே அதிர்ந்தது, அவற்றின் ஓட்டத்தில்.

சரக்குகளை ஏற்றிச் செல்ல உபயோகமாகும் அந்த லாரிகளில் இப்போது ஆண்களும் பெண்களுமாகக் கூட்டமாகச் சென்று கொண்டிருந்தார்கள். கார் அவர்களைக் கடந்து சென்றவுடன் 'ஹோ' வென்று சிலர் கோஷமிட்டார்கள். அவர்கள் சீக்கியர்கள் அல்ல; வேறு ஏதோ கூட்டம். பலருடைய கைகளில் ஏதோ வாசகங்கள் எழுதிய அட்டைகள் தென்பட்டன. அம்மா கண்களை இடுக்கிக்கொண்டு அந்த வாசகங்களைப் படிக்க முயன்றாள். "எங்கே போறதுகள் எல்லாமா?" என்றாள். செல்லப்பா அவளுக்குப் பதில் சொல்லவில்லை. அவனுடைய உற்சாகமான 'மூட்' கலைந்து விட்டிருந்தது. காரின் மெதுவான ஓட்டத்தில் அம்மா தன் அதிருப்தியை வெளிப்படுத்தியதிலிருந்து தன்னைப் போலவே அவளும் ஏற்கனவே கற்பனையில் விமான நிலையத்தை அடைந்து விட்டாளென்பதை அவனால் உணர முடிந்தது. இது அவனைப் பலவிதங்களில் தொந்தரவு செய்தது. இந்தக் கணத்தில் அவள் மனதில் நிறைந்திருப்பவன் விசுவம்தான்; நான் அவனருகில் அவளை அழைத்துச் செல்லும் ஒரு கருவி, அவ்வளவே. விசுவத்தின் மீது அவனுக்கு இலேசாகப் பொறாமைகூட உண்டாயிற்று.

திடீரென்று அம்மா மூக்குக்கண்ணாடியை வேண்டுமென்றே தான் எடுத்துக்கொண்டு வரவில்லையென்றும் அவனுக்குப்பட்டது.

விசுவத்தின் முன்பு, மூக்குக் கண்ணாடியணியாத பழைய (இளமையான) அம்மாவாகவே அவள் காட்சிதர விரும்புகிறாள். ஏனென்றால், அவன் நினைவில் அவள் அப்படித்தான் இடம் பெற்றிருப்பாள். அவனுடைய பழைய நினைவுகளின் தொடர்ச்சியில் தஞ்சமடைந்து, தன்மேல் கவிந்துவிட்ட வருடங்களை, முதுமையை, உதறித் தள்ள விரும்புகிறாள் போலும். விசுவம் ஐந்து வருடங்கள் பின்னோக்கி அழைத்துச் செல்லக்கூடிய காலக்கப்பல். நான்கு வருடங்களுக்கு முன்னால் செல்லப்பா கல்லூரியில் இரண்டாம் வருடத்தில் இரண்டாம் தடவையாக பெயில் ஆகியிருந்தவன், முகத்திலே ரேஸர் உபயோகிக்கத் தொடங்காமல் வாரமொரு முறை தாடையிலிருந்து மயிரை மட்டும் கத்திரிக்கோலால் நீக்கிக் கொண்டிருந்தவன், வழவழப்பான கன்னங்களைக் கொண்டிருந் தவன், முதன் முதலாக சிகரெட் குடித்தவன், ஆம்லெட் சாப்பிட்ட வன், வகுப்பில் கடைசி பெஞ்சில் அமர்ந்து மெல்லிய குரலில் சினிமாப் பாட்டுப் பாடியவன், தனிமையில் பெண்களைச் சந்திக்கும்போது பயந்து பயந்து ஓடிக்கொண்டு நண்பர்களுடன் கூட்டமாக இருக்கும்போது அசட்டுத் தைரியத்துடன் அவர்களைச் சீண்டியவன். "என்னைப் பொறுத்த வரையில் இறந்துவிட்ட இந்தச் செல்லப்பா, விசுவத்தின் நினைவுகளில் இன்னமும் உயிருடன் இருப்பான் – விமான நிலையத்தில் நாங்கள் சந்திக்கும்வரை. பிறகு விசுவத்தைப் பொறுத்தவரையிலும் கூட அந்தப் பழைய செல்லப்பா இறந்துவிடுவான்..."

செல்லப்பாவுக்குத் துக்கமாக இருந்தது. விசுவத்தை அவன் சந்திப்பது, தனக்கும் விசுவத்துக்கும் இழைத்துக்கொள்ளும் ஒரு அநீதியாகத் தோன்றியது. விமான நிலையச் சந்திப்பில் நிகழப்போவது ஒரு பிம்பச்சிதைவு, ஒரு கொலை.

ஸர்தார் பட்டேல் ரோட்டில் கார் திரும்பியவுடன், அங்கே நின்றிருந்த டிராஃபிக் போலீஸ் ஒருவன் கையை ஆட்டிக் காரை நிறுத்தினான். எங்கே போகவேண்டுமென்று விசாரித்தான். விமான நிலையத்துக்குப் போய்க்கொண்டிருப்பதாகச் செல்லப்பா தெரிவித்ததும், ஸர்தார் படேல் சாலை மூடப்பட்டிருக்கிறதென்றும், விலிங்டன் கிரெஸெண்டிலேயே நேராகத் தொடர்ந்து சென்று சாணக்கியபுரி, சாந்திபத் வழியாகச் செல்லலாமென்றும் போலீஸ் காரன் தெரிவித்தான். ஒடுக்கப்பட்டுக் கிடக்கும் கீழ்வர்க்கத்தினரில் ஒருவனாகத் தன்னை உணர்ந்து காரில் செல்லும் மேல் வர்க்கத்தினரின் மீது அலட்சியத்தையும் முரட்டு அதிகாரத்தையும் பொழிவதில் இன்பமடையும் வகை ஒரு பக்கம், தங்கள் வேலையின் தன்மை காரணமாக கீழ் வர்க்கத்தினின்று சற்றே உயர்ந்தவர்களாக, காரில் செல்பவர்களுடன் சம அந்தஸ்தும் தொடர்பும் உள்ளவர் களாக உணர்ந்து, அவர்களுடன் நேசபாவத்துடன் (யெஸ் ப்ளீஸ் –என்ன செய்ய முடியும் உங்களுக்கு, நான்?) நடந்துகொள்ளும் வகை ஒரு பக்கம், என்று போலீஸ்காரர்களை இரு வகையினராகப் பிரிக்கலாம்.

இந்தப் போலீஸ்காரன் இரண்டாவது வகையைச் சேர்ந்தவனாகத் தோன்றினான். செல்லப்பா என்ன விஷயமென்று அவனை விசாரித்தான்.

தென் அமெரிக்க நாடு ஒன்றின் ஜனாதிபதி வருகிறாரென்று போலீஸ்காரன் தெரிவித்தான். வரும் வழியில் கொடிகளை அவர்கள் பார்க்கவில்லையா, என்ன?

செல்லப்பா அவனுக்கு நன்றி கூறிவிட்டு, காரை ரிவர்ஸ் செய்யத் தொடங்கினான். போலீஸ்காரன் சொன்னதுபோல சாலையின் இரு பக்கங்களிலும் நடப்பட்டிருந்த கம்பங்களில் அந்த வெளி நாட்டின் கொடியும் இந்தியக் கொடியும் அருகருகே பறந்து கொண்டிருந்தன. ஜனாதிபதி ஏர்போர்ட்டிலிருந்து இந்த வழியாகத்தான் வரவேண்டும். செல்லப்பா விலிங்க்டன் கிரெஸண்டில் காரைத் தொடர்ந்து செலுத்தினான்.

"இதையெல்லாம் முந்தியே பார்த்து வச்சுக்க வேண்டாமோ?" என்றாள் அம்மா.

"முந்தியே தெரிஞ்சால்தானே பார்த்து வச்சுக்க முடியும்?" என்றான் செல்லப்பா. "தந்தியே பதினொரு மணிக்குத்தானே வந்தது."

"கார்த்தாலே பேப்பர்லே ஏதாவது போட்டிருந்தானா? நான் கவனிக்கலை" என்றாள் அம்மா.

"நானுந்தான்" என்றான் செல்லப்பா. அன்றைக்கென்று ஒரு பெரும் ரயில் விபத்துச் செய்தியும் முக்கியமான ராஜ்யமொன்றில் மந்திரிசபை கவிழ்ந்ததைப் பற்றிய செய்தியும் பத்திரிகைகள் வெளியிட வேண்டியிருந்ததால், இந்த ஜனாதிபதி வருகை பற்றிய செய்தி முதல் பக்கத்தின் கீழ் ஓரம் எங்கேயாவது அச்சாகி, கண்ணுக்குத் தென்படாமல் போயிருக்க வேண்டும். மேலும் தினம் தான் ஏதாவது ஒரு நாட்டின் ஜனாதிபதியோ, பிரதம மந்திரியோ அல்லது வெறும் மந்திரியோ தில்லிக்கு வந்தவாறு இருக்கிறார்கள். இதையெல்லாம் யார் படித்து நினைவு வைத்துக் கொள்ள முடியும்?

தீன்மூர்த்தி சாலையில் காரைத் திருப்பிச் சற்றுத் தூரம் சென்றதும், சாணக்யபுரி போலீஸ் ஸ்டேஷனுக்குள்ளிருந்து ஹாரன் அடித்தவாறு வேகமாக வெளியே வந்த மூன்று போலீஸ் லாரி களுக்காக அவன் சற்றே காரை நிறுத்தவேண்டியிருந்தது. போலீஸ் லாரிகள் சாந்திபத்தில் திரும்பி நேராகச் சென்றன. செல்லப்பாவும் அந்தச் சாலையில்தான் செல்லவேண்டியிருந்தது. ஆனால் சாந்திபத்தை அவன் அடைந்து சிறிது தூரம் செல்வதற்குள்ளாகவே ஏதோ ஒன்று சரியில்லை யென்பதை உணர்ந்துகொள்ள முடிந்தது. எதிர்த்திசையிலிருந்து வந்துகொண்டிருந்த கார் ஒன்றில் இருந்த இளைஞனொருவன் செல்லப்பாவைப் பார்த்து ஏதோ சைகையால் தெரிவித்துவிட்டுச் சென்றான். திடீரென்று டிராஃபிக் நின்றது. தூரத்தில் சாலை முனையில் டபிள்டெக்கர் பஸ் ஒன்று இடது பக்கமாகத் திரும்பி,

அப்படித் திரும்பிய நிலையில் சாலையை அடைத்துக்கொண்டு நிற்பது தெரிந்தது. ஒரு நிமிடம்; இரண்டு நிமிடம்.... செல்லப்பா பின்பக்கம் பார்த்தான். அவர்களுடைய காருக்குப் பின்னால் வரிசையாக நிறைய வண்டிகள் சேர்ந்துகொண்டிருந்தன. முன்புறமிருந்த வண்டிகள் டபிள்டெக்கர் நகருவதற்காகக் காத்திருந்தன. டபிள்டெக்கருக்கு என்ன ஆயிற்றென்று தெரியவில்லை.

மணி ஐந்தரை. விசுவத்தின் பிளேன் ஏழு மணிக்குத்தான் வருகிறது. ஆனால் வீட்டிலிருந்து கிளம்பியபோது இருந்ததைப் போல இப்போது நம்பிக்கையும் உற்சாகமுமில்லை. நேரம் நிறைய இருக்கிறதென்பது நேர்வழி கிடைப்பதையும், சாலைகள் அடைக்கப் படாமலிருப்பதையும் பொறுத்தது. இப்படியே சுற்றிச் சுற்றிப் போய்க்கொண்டிருந்தால்?

பத்து நிமிடங்களுக்குப் பிறகு, டபிள்டெக்கர் மெல்ல நகரத் தொடங்கியது. எல்லா வண்டிகளும் மிகமிக மெதுவாக இம்மி இம்மியாக நகரத் தொடங்கின. சாலை முனையில் போலீஸ்காரர்கள் குழப்பமாகிவிட்ட வண்டிப் போக்குவரத்தை ஒழுங்குப்படுத்தப் பிரயாசை எடுத்துக்கொண்டிருப்பது தெரிந்தது; யு. எஸ். எம்பஸியின் எதிரே ஒரு பெரிய ஜனக்கூட்டம் கோஷங்களை எழுப்பியவாறு நிற்பதும் தெரிந்தது. அந்தப் பக்கத்துச் சாலை அந்த ஜனத்திரள் காரணமாக முழுவதும் அடைபட்டுப்போயிருந்தது. எனவேதான் இந்தப் போக்குவரத்து நெருக்கடி. சாந்திபத் வழியாகச் செல்ல வேண்டிய வண்டிகள் பஞ்சசீல் மார்க் வழியே திசை திருப்பி விடப்பட்டுக்கொண்டிருந்தன. அவர்களுடைய கார் சாலை முனையை அடைந்தபோது "அமெரிக்க இம்பீரியலிஸம் ஒழிக!" "குடியாட்சி வெல்க, மக்கள் பலம் வெல்க!" போன்ற கோஷங்கள் காதில் விழுந்தன. குதிரைப் போலீஸ் கூட்டத்தினரை அடக்கும் முயற்சியில் இங்குமங்குமாகச் சென்றுகொண்டிருந்தார்கள். சற்று முன் லாரிகளில் அவர்கள் பார்த்திருந்த ஆண்களும் பெண்களும் இங்குதான் வந்துகொண்டிருந்தார்களென்பது செல்லப்பாவுக்குப் புரிந்தது.

இன்று வந்துகொண்டிருந்த ஜனாதிபதி சில மாதங்களுக்கு முன்பு அமெரிக்காவின் கையாளாகிய தளபதியால் புரட்சி என்ற பெயரில் சிறைப்பட்டிருந்தார். அமெரிக்கத் தளவாடங்கள் தளபதி வழியே அந்நாட்டை ஆண்டுகொண்டிருந்தன. ஆனால் சமீபத்தில் அவர்களுடைய ராணுவத்தில் பிளவு ஏற்பட்டு, ஜனாதிபதியை ஆதரிக்கும் சக்திகள் ஒன்று சேர்ந்து அவரை மறுபடி பதவியில் அமர்த்தியிருந்தன. தளபதி தலைமறைவாகி இருந்தார்...

பஞ்சசீல் மார்க்கில் சிறிது தூரம் சென்ற பிறகுதான் காரை ஓரளவு வேகமாக விட முடிந்தது. மாலை வெளிச்சம் மங்கத் தொடங்கி, சாலை விளக்குகள் எரிய விடப்பட்டுவிட்டன. அசோகா ஹோட்டல் வழியே செல்லும்போது ஆறு அடிக்கப் பத்து நிமிஷங்களே இருந்தன. அசோகா ஹோட்டலில் அன்று ஏதோ விசேஷ நிகழ்ச்சி நடக்கவிருந்தது போலும்; சாலையில் கார்களின் புழக்கம் அதிகமாக

இருந்தது. எனவே மீண்டும் காரின் வேகம் தடைப்பட்டது.

நேரு பார்க் வழியே செல்லும்போது "யாரையாவது வேணுமானால் கேட்டுக்கோ, மறுபடி எங்கேயாவது போய்ச் சிக்கிக் கொள்ள வேண்டாம்" என்றாள் அம்மா. செல்லப்பாவுக்குக் காரை அங்கேயே நடுரோட்டில் நிறுத்திவிட்டு இறங்கிக் கொள்ளலாம் போல அவ்வளவு ஆத்திரம் வந்தது. கொஞ்சமாவது நன்றியோ அனுதாபமோ இருக்கிறதா இவளுக்கு? நடந்தவற்றை அவன் ஏதோ தவிர்த்திருக்கக்கூடும் என்பது போலல்லவா பேசுகிறாள்! அவன் ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு, ஆனால் அவளுடைய பேச்சுக்கு ஆட்சேபம் தெரிவிக்கும் முறையில் ஒரு விறைப்பான மௌனத்துடன் காரைச் செலுத்திக் கொண்டு போனான்.

வினய் மார்க் அருகே செல்லும்போது அங்கேயிருந்த சினிமாத் தியேட்டரில் அப்போதுதான் மாட்டினி ஆட்டம் முடிந்திருந்ததால் ஜனங்கள், வண்டிகள் கூட்டமாகச் சாலையின் மீது படையெடுத்துக் கொண்டிருந்தனர். மோதிபாக்கிலிருந்து சாந்திபத்தில் செல்ல வேண்டிய வண்டிகளும் இந்தப் பக்கமாகத் திசை திருப்பி விடப்பட்டிருந்ததால் அதனாலும் வண்டிகளின் போக்குவரத்து வழக்கத்தை விட நெரிசல் மிகுந்ததாக, இடையூறுகள் நிரம்பியதாக இருந்தது. கார் மறுபடி ஊர்ந்து ஊர்ந்து செல்லத் தொடங்கியது. யஷ்வந்த் பிளேஸ் மார்க்கெட் அருகே, மார்க்கெட்டுக்குள் நுழைய முயன்று கொண்டிருந்த ஒரு 'மார்டன் பிரெட்'வானும் மார்க்கெட்டுக்குள்ளிருந்து வெளியே வந்து கொண்டிருந்த ஒரு கோகோ – கோலா வானும் மயிரிழையில் ஒன்றோடொன்று மோதுவதைத் தவிர்த்து, ஆனால் இப்போது சாலையை அடைத்துக் கொண்டு நின்றிருந்தன. முதலில் தவறு யாருடையது என்பது பற்றியும் பிறகு யார் பின்னால் செல்வது என்பது பற்றியும் அந்த டிரைவர்களுக்கிடையில் வாக்குவாதம் நடந்தது. எங்கிருந்தோ ஒரு டிராஃபிக் கான்ஸ்டபிளும் அங்கே வந்து சேர்ந்தான். கடைசியில் கோகோ – கோலா வானை ஓட்டி வந்த சர்தார்ஜி தன் வண்டியை ரிவர்ஸ் செய்வதற்கு மிகவும் நிர்ப்பந்திக்கப்பட்ட பிறகு அரை மனதாக ஒத்துக்கொண்டான். தன் குலத்துக்கே ஒரு நிரந்தரமான களங்கம் ஏற்படுத்திவிட்டதாக அவன் உணர்வதுபோலத் தோன்றியது. கோகோ – கோலா வான் கேட்டினுள் ஒரு ஓரமாக ஒதுங்கி, மாடர்ன் பிரெட் வான் உள்ளே நுழைய வழி செய்து கொடுத்தது. பிறகு மீண்டும் அது வெளியே வந்தது. பிறகுதான் மற்ற வண்டிகள் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டன. மணி ஆறு; ரயில்வே பிரிட்ஜை நெருங்க நெருங்க நெரிசலும் முன்னேறும் சிரமமும் அதிகரித்துக் கொண்டே சென்றது. இப்போது நன்றாக இருட்டியும் விட்டது. ரயில்வே பிரிட்ஜின் மீது கார் செல்லும்போது மணி ஆறு பத்து. கீழே கூட்ஸ் வண்டி ஒன்று லடக், லடக் என்று நிதானமாக நகர்ந்து சென்றுகொண்டிருந்தது. 'கூ'வென்று இன்ஜின் கூவியது; உற்சாகமாகக் கூவுகிறதோ? முன்னும் பின்னும் எண்ணற்ற

வண்டிகளுக்கு நடுவே அகப்பட்டுக்கொண்டு சுதந்திரமாகக் காரைச் செலுத்த முடியாமல் தவித்த செல்லப்பாவுக்கு அந்தச் சமயத்தில் அந்தக் கூட்ஸ் வண்டி டிரைவர் மீது அளவற்ற பொறாமை உண்டாயிற்று. அவன் அதிர்ஷ்டசாலி; ஸிக்னல் கிடைத்துவிட்டால் போதும், தன்பாட்டில் சென்றுகொண்டிருக்கலாம்.

ரயில்வே பிரிட்ஜ் பஸ் ஸ்டாண்டைத் தாண்டி சில கஜ தூரங்கள் சென்ற பிறகு மீண்டும் டிராஃபிக் நின்றது. இந்த இடத்தில் என்ன குழப்பமென்று செல்லப்பாவுக்கு முதலில் புரியவில்லை. மெல்ல மெல்லச் செய்தி பரவி அவர்களுடைய காரையும் எட்டுவதற்கு ஐந்து நிமிடங்களாயின. நானக்புராவிலுள்ள குருத்வாராவிலிருந்து கிளம்பிய ஊர்வலமொன்று ரிங் ரோடில் சென்று கொண்டிருக்கிறது. அது முழுவதும் சென்ற பிறகுதான் வண்டிகள் செல்ல அனுமதிக்கப் படும். அந்தக் குருத்வாராவுக்கு இருபத்தைந்து ஆண்டுகள் பூர்த்தியாயிருக்கிறபடியால் இந்தத் தடவை பெரிய அளவில் ஊர்வலம் ஏற்பாடு செய்திருக்கிறார்களாம்.

மணி ஆறேகால்.

சாலை ஓரத்துக் கருங்கல் வரப்புக்கு நடுவில் அமைக்கப்பட்டிருந்த இடைவெளி ஒன்றின் அருகில்தான் அவர்களுடைய கார் நின்றிருந்தது. செல்லப்பா அந்த இடைவெளி வழியாக நடைபாதை மீது காரை ஏற்றி, நடைபாதையின் மறுபுறத்தில் சைக்கிள்கள் செல்வதற்காகப் போடப்பட்டிருந்த பாதையை அடைந்து அப்பாதையில் காரை ஓட்டிச் சென்றான். அவன் பின்னால் வேறு சில வண்டிகள் தொடர்ந்தன; செல்லப்பா ஒரு புதிய வழியைக் கண்டுபிடித்த வாஸ்கோடகாமாவைப்போல உணர்ந்தான். ஆனால் மோதிபாக் பஸ் ஸ்டாண்டு அருகில் வந்ததும் மேலே முன்னேறுவதற்கு வாய்ப்பில்லாமல் போயிற்று. அங்கு ஏராளமான பஸ்களும், கார்களும், இதர வண்டிகளும் ஊர்வலம் முடிவதற்காகக் காத்திருந்தன. பீடா, சிகரெட் விற்பவன், நிலக்கடலை விற்பவன், 'கோல் – கப்பா' விற்பவன் ஆகியவர்களுக்கு நல்ல வியாபாரம் ஆகிக்கொண்டிருந்தது. வண்டிகளிலிருந்து இறங்கிய பலர் சிகரெட் பிடித்துக்கொண்டோ, கூட்டத்தை வேடிக்கை பார்த்துக்கொண்டோ இருந்தார்கள். செல்லப்பாவுக்கு அம்மா அருகில் இருந்ததால் சிகரெட் கூடக் குடிக்க முடியாமலிருந்தது.

"என்னடா, இங்கேயே இருக்க வேண்டியதுதானா?" என்றாள் அம்மா.

"வேறென்ன செய்யறது?"

"வேறெ எதுவும் வழி கிடையாதா?"

"ரிங் ரோடைத் தாண்டாமல் இங்கேயிருந்து ஏர்ப் போர்ட்டுக்குப் போகவே முடியாது. ஊர்வலம் முடிஞ்சாத்தான் நாம நகர முடியும்."

படார் படார் என்று பட்டாசுகள் வெடித்தன; டம்டம், டம்டம்,

என்ற கொட்டுச் சத்தம். பாங்க்ரா நடன இசையும் பாண்ட்டில் வாசிக்கப்பட்ட இந்திப்பட டியூன் ஒன்றும் வேறு சில இரைச்சல் களும் சேர்ந்தாற்போலக் கேட்டன. ஊர்வலம் முடிவில்லாமல் சென்றுகொண்டேயிருந்தது அம்மா கார் ரேடியோவை 'ஆன்' பண்ணி முள்ளை இங்குமங்குமாக நகர்த்திப் பார்த்து எந்த ப்ரோகிராமும் பிடிக்காமல் மீண்டும் அணைத்தாள். "சனியன்கள், சனியன்கள்" என்று சர்தார்ஜிகளையும் அவர்களுடைய பழக்க வழக்கங்களையும் திட்டினாள். ஒரு அவுட் வாணம் விர்ரென்று உயரக் கிளம்பி நடுவானத்தில் வெடித்துப் பூப்பூவாகச் சிதறியது. செல்லப்பா காரைவிட்டு இறங்கி வெளியே நின்றுகொண்டான். விசுவத்தின் பிளேன் செல்வதைக்கூட இங்கிருந்தேதான் பார்க்க வேண்டியிருக்குமோ என்னவோ? அவன் வானத்தை நிமிர்ந்து பார்த்தான். குளிர்காற்று வீசியது. மர இலைகள் அசைந்தன.

"மணி எவ்வளவு ஆறது? வர அவசரத்தில் என் ரிஸ்ட் வாட்சை வேறே மறந்து போயிட்டேன்" என்றாள் அம்மா.

"ஆறரை" என்று கடிகாரத்தைப் பார்க்காமலே சொல்லிவிட்டுச் செல்லப்பா தொடர்ந்து வானத்தை, நட்சத்திரங்களைப் பார்த்துக் கொண்டிருந்தான். அப்படிப் பார்ப்பதன் மூலம் பூமியில் நேரம் அசைவற்று நிற்பது போன்ற ஒரு பிரமையை உருவாக்கிக்கொள்ள முடிந்தது. அந்தக்கணத்தில் இந்தப் பிரமை மிகவும் இதமாக இருந்தது.

# 4

“அதோ, ‘ஸைரஸ்’ – நம்முடைய அடாமிக் ரியாக்டர் – புகைப்படங்களில் நிறையப் பார்த்திருப்பீர்கள் ...” என்றான் டூரிஸ்ட் கைட்.

படகில் இருந்தவர்கள் எல்லாரும் கவிழ்த்து வைக்கப்பட்ட பிரும்மாண்டமான கிண்ணம்போல, ஏதோ ராட்சஸப் பறவை யொன்றின் முட்டையைப் பாதியாக விண்டு வைத்ததைப் போல, தூரத்தில் தெரிந்த ரியாக்டரைப் பார்த்தார்கள்.

“லிங்க வடிவத்தில் அது அமைந்திருப்பது மிகவும் குறிப்பிடத்தக்கது” என்று கைட் தொடர்ந்தான். “லிங்கத்தை பிரபஞ்சத்தின் மூலகர்த்தாவாக, சக்தியின் உறைவிடமாக, நாம் என்றென்றும் வழிபட்டு வந்திருக்கிறோம் – தி ஸோர்ஸ் ஆஃப் ஆல் எனர்ஜி ...”

பத்மினியின் உதட்டில் கைடின் வார்த்தைகளைக் கேட்டு இலேசாகப் புன்னகை அரும்பியது. அருகில் உட்கார்ந்திருந்த விசுவத்தைத் திரும்பிப் பார்த்து, அவன் கையைப்பற்றி மெல்ல அழுத்தினாள். “உம்ம்ம்!” என்றான் விசுவம், தொந்தரவுபடுத்த வேண்டாமென்பதைப் போல. இந்த கைடு ஓர் இளைஞன். அவனுடைய ஆங்கில உச்சரிப்பில் கைடுகளிடம் அரிதான ஒரு மெருகும் பண்பும் இருந்தது. அவனுடைய தோற்றமும்கூட கைடு என்ற சொல் பொதுவாக ஏற்படுத்தும் பிம்பத்திலிருந்து வேறு பட்டதாக இருந்தது. கறுப்பு ஃபிரேம் மூக்குக் கண்ணாடி, சில மாதங்களாக வெட்டப்படாமல் காதுகள் மேலும் பின் கழுத்திலும் வழிந்துகொண்டிருந்த நீண்ட தலைமயிர், ஸைட் பர்ன்ஸ், தொள தொளவென்ற ஸ்லாக், வலது கையில் சுருட்டு ... ஒரு பெரிய இன்டலெக்சுவல்போல அவன் தோன்றினான்.

‘அல்லது ஒரு வேளை, நான் இந்தியாவில் இல்லாமலிருந்த

ஐந்து வருடங்களில் டூரிஸ்ட் கைடுகள் மிகவும் மாறிவிட்டார்களோ என்னவோ' என்று விசுவம் நினைத்தான். மேலும் மனிதர்களுடைய முகத்தோற்றத்திலும், உடையலங்காரம், பாவனைகள் முதலிய வற்றிலும் வர்க்கக் குறியீடுகள், பிரத்தியேக அடையாளங்கள் ஆகியவை மறைந்து சமத்துவம் நிலவத்தொடங்கியாயிற்று. இப்படித் தான் இருக்கவேண்டும் என்று யாரைப் பற்றியும் நினைக்க முடிவதில்லை. அப்பா அப்பா மாதிரியில்லை. அம்மா அம்மா மாதிரியில்லை. குழந்தைகள் குழந்தைகள் மாதிரியில்லை. தபால் காரன், சமையல்காரன், எழுத்தாளன், பள்ளிக்கூட வாத்தியார் – யாருடைய தோற்றமும் நாம் அவர்களைப் பற்றிப் போற்றி வந்திருக்கும் கற்பனைகளுடன் ஒத்துப்போவதாக இல்லை. ஜனரஞ்சகமான பத்திரிகைக் கதைகளும் திரைப்படங்களும் கார்ட்டூன் ஸ்கிரிப்டுகளும் அப்பா என்றால் இப்படி, அம்மா என்றால் இப்படி, கலைஞன் என்றால் இப்படி என்று திட்ட வட்டமான பிம்பங்களை உருவாக்கி, பிரத்தியேக இயல்புகளையும் வித்தியாசங்களையும் அடிக்கோடிட்டுக் காட்டும் முயற்சியில் உண்மைக்குச் சாயமடித்து மறைக்கின்றன. இத்தகைய பிம்பங்கள் எவ்வளவுதான் பொய்யாக இருந்தாலும், ஒரு மட்டத்தில் இவை மனிதர்களுக்குத் தேவையாக இருப்பதாகவும் தோன்றுகிறது – உண்மையைவிடப் பொய்தான் சுவையானது என்பதால். எனவே அந்தந்த வர்க்கத்தைச் சேர்ந்தவர்களுக்குத் தம்முடைய 'ஒப்புக் கொள்ளப்பட்ட' பிம்பம் ஓர் அளவுகோலாக, இலட்சியமாக ஆகிவிடுகிறது – ஒத்துப்போவதாயிருந்தாலும் சரி, வேறுபடுவதாக இருந்தாலும் சரி.

இது வேறுபடுகிறவர்களின் யுகம். தி ஏஜ் ஆஃப் டிஸ்ஸென்ட். எனவே எல்லாரும் தத்தம் பிம்பத்திலிருந்து வேறுபட முயற்சிக் கிறார்கள். எல்லாருமே தலை முடியும் தாடியும் வளர்க்கிறார்கள். 'ஸைட் பர்ன்ஸ்' வைத்துக் கொள்கிறார்கள். தொளதொளப்பான உடைகளை அணிந்து வந்தவர்கள் இறுக்கமான உடைகளையும், இறுக்கமான உடைகளை அணிந்து வந்தவர்கள் தொளதொளப்பான உடைகளையும் அணிகிறார்கள். புதிய பெண் பழைய ஆண் போலவும் புதிய ஆண் பழைய பெண் போலவும் தோற்றமளிக்க முயலுகிறார்கள். குழந்தைகள் பெற்றோர்களைப் பின்பற்றுவதற்குப் பதிலாக (வர்ணாசிரமம்) பெற்றோர்கள் குழந்தைகளைப் பின்பற்றுகிறார்கள். (அவுட் – ஆஃப் ஃபாஷனாகக் கருதப்படக்கூடாது என்பதால்) அடிப்படைப் பிம்பங்கள் உருத்தெரியாமல் சிதைந்து வருகின்றன. வித்தியாசங்கள் குறைந்து வருகின்றன. வேறுபடும் முயற்சியே ஒரு ஒற்றுமையை உருவாக்குகிறது. பிம்ப இழப்பே ஒரு பிம்பமாகி வருகிறது . . . ஒரு பொறுப்பற்ற தன்மையின் சின்னமாகவும் இது இருக்கலாம். யாரும் எதைச் சார்ந்தவர்களாகவும் அடையாளம் கண்டுகொள்ளப்பட விரும்பவில்லை. யாரும் எதற்கும் பொறுப்பேற்கத் தயாராக இல்லை.

'விஞ்ஞானியின் ஒப்புக்கொள்ளப்பட்ட பிம்பம் என்ன?' என்று

விசுவம் நினைத்தான். 'அல்லது, வெளிநாட்டிலிருந்து திரும்பிய இந்தியனின் பிம்பம் என்ன? நான் எங்காவது இவற்றுடன் ஒத்துப்போய்விடவில்லையே?' அவன் தன் பின் கழுத்தைத் தடவிப் பார்த்துக்கொண்டான். தலைமயிர் மிக நீளமாக வளர்ந்திருந்தது. அமெரிக்காவில் தான் வழக்கமாக முடிவெட்டிக் கொண்டிருந்த சலூனில் இருந்த நாவிதன் அவன் நினைவில் எழுந்தான். அந்த நாவிதன் குறுந்தாடி வைத்திருந்தான். 'பேஸ்பால் விளையாட்டும் வெஸ்டர்ன்'களும் அவனுக்கு உயிர். விசுவத்துக்கு இரண்டிலுமே சிரத்தையில்லை.

பார்க்கப் போனால் எதில் அவனுக்குச் சிரத்தை? சிரத்தையின்மை, ஈர்க்கப்படாமை, எதிலும் தன்னை இழக்காத, பரபரப்படையாத அமைதி, சாந்தம். அலை மோதும் கடலின்மேல் அலைக்கழிக்கப்படாமல் செல்லும் படகு. இல்லை; ஆடிக்கொண்டிருக்கும்போதே ஆட்டத்திலிருந்து விலகி நிற்கும் நடராஜர் . . .

படகு மீண்டும் கிளம்பியது. சிந்தனைச் சங்கிலி அறுந்தது. ஒரு கணத்துக்கு சாதாரண மட்டங்களில் சாதாரண விஷயங்களில் சிரத்தையெடுத்துக்கொள்ள முயலுபவனைப்போல அவன் கைக் கடிகாரத்தைக் கவனித்தான். மணி பன்னிரெண்டரை. நேற்றிரவு அவன் டில்லிக்கு அடித்த தந்தி இதற்குள் நிச்சயம் போய்ச் சேர்ந்திருக்க வேண்டும். அங்கு அவன் வரவுக்காகத் தயார் செய்து கொள்ளத் தொடங்கியிருப்பார்கள். இங்கு அவன் பத்மினியுடன் எலிபெஃன்டாவுக்குச் செல்லும் படகில் உட்கார்ந்திருந்தான்.

வேகமாகச் செல்லும் படகு; விசையாக முகத்தின் மேல் தடவிச் சென்ற காற்று, அந்தக் காற்றில் டீசல் எண்ணெயின் மணம். இந்த மணம் அவனுடைய நாசிக்கு இதமாகவும் உவப்பாகவும், ஏன், இன்பமளிப்பதாகக்கூட இருந்தது. அவனுடைய தாத்தாவுக்கு ஒரு வேளை இந்த வாசனை குமட்டலையும் வாந்தியையும் ஏற்படுத்தியிருக்கலாம். புற மாறுதல்களுக்கேற்ப தன்னுடைய ருசிகளையும் தேவைகளையும் தீஞ்சுவை உணர்வையும் ஆச்சரியப்படுமளவுக்கு மாற்றிக்கொள்ளும் திறனை மனிதன் பெற்றிருக்கிறான். இந்தத் திறன்தான் இறுதியில் அவனுக்குக் குழிபறிக்கப் போகிறது. தன் கையாலேயே சாவு; பஸ்மாசுரன். மேற்கு நாடுகளில் ஒழுங்குபடுத்தப்படாத யந்திர நாகரிக வளர்ச்சி ஏற்படுத்திவரும் பிரச்னைகளைப் பற்றி, காற்றிலும், நீரிலும், நிலத்திலும் இயற்கையின் போக்குகள், வழிகள் ஆகியவற்றுடன் மனிதனின் போக்குகளும் வழிகளும் மோதுவதால் ஏற்பட்டு வரும் மாறுதல்களையும், இம்மாறுதல்களால் மனித சமூகம் முழுவதற்கும் ஏற்படக்கூடிய அபாயகரமான விளைவுகளையும் பற்றிச் சிந்திக்கத் தொடங்கியிருந்தார்கள். ஆனால் இங்கே பம்பாயில் அடுக்குமாடிக் கட்டிடங்களின் உயரத்தையும், எண்ணிக்கையையும் பற்றி, புதிய

பவர் ப்ரிட்ஜ்களையும் ஸ்ப்வேக்களைப் பற்றியும் பெருமையாகப் பேசிக்கொள்பவர்கள்தான் நிறைய இருந்தார்கள். செம்பூரில் செயற்கை உரம் தயாரிக்கும் தொழிற்சாலையிலிருந்தும் எண்ணெய்ச் சுத்திகரிப்புச்சாலைகளிலிருந்தும் புகை ரூபத்தில் வெளியேறும் கழிவுப் பொருள்கள் காற்றை அசுத்தப்படுத்தியதன் காரணமாக அங்குள்ள மரங்களும் செடிகளும் பட்டுப்போகத் தொடங்கியிருந் ததைப் பற்றிய ரிப்போர்ட் ஒன்றை அமெரிக்காவிலிருந்தபோது விஞ்ஞான சஞ்சிகையொன்றில் படித்து அவன் மிகவும் பதட்ட மடைந்திருந்தான். இங்கு வந்து பார்த்த பிறகு நிலைமை அவ்வளவு பயங்கரமாக இல்லை என்ற ஆறுதல் அவனுக்கு ஏற்பட்டிருந்தது. ஆனால் நிலைமை மகிழ்ச்சியளிப்பதாகவும் இல்லை.

பம்பாயில், டோக்கியோவில், நியூயார்க்கில் – உலகெங்கிலும் மரங்கள் குறைந்துகொண்டேதான் வருகின்றன. தாவரங்கள் இருப்பதையோ இல்லாமலிருப்பதையோ பற்றிக் கவலைப்படாத ஒரு பரிணாம கட்டத்தை இந்தத் தலைமுறையினரின் சிந்தனை எட்டியிருந்ததென்பதே அவற்றின் அழிவைத் துரிதமாக்கக்கூடும். புழக்கடையில் துளசி, மல்லிகை, ரோஜா, அரளி, வாழை, முருங்கை என்கிற ரீதியில் சிந்திப்பதே பழைமைச் சார்புள்ளதாக ஒதுக்கப் படலாம். இயற்கையின்பால் அன்பும் ஆர்வமும் உள்ளவர்கள் கூட பத்தாம்பசலிகளாகக் கருதப்படக்கூடுமென்ற காரணத்தால் இந்த மனப்போக்கை மறைத்துக்கொள்ள முற்படலாம். இதுதான் அபாயம். ஒரு குறிப்பிட்ட ரகமான சிந்தனையை நாகரிகமானதாக உருவகப்படுத்தி, உலகம் முழுவதிலுமுள்ளவர்கள் அதை அணிந்து கொண்டு தம்மைத்தாமே ஏமாற்றிக்கொள்ளுதல். ஒரு சிலர் மிகத் தேவையானவையென்று கவர்ச்சிகரமான அறைகூவல்களுடன் அறிமுகப்படுத்தும் மாறுதல்களுடன், நம்பிக்கையில்லாமலேயே பலர் சமரசம் செய்துகொள்ளுதல், சமரசம் செய்து கொள்ளும்படி நிர்ப்பந்திக்கப்படுதல்.

தாவரங்களின் எண்ணிக்கை – காடுகளின் விஸ்தீர்ணம் – ஒரு அளவுக்குமேல் குறைந்து, கடலும், காற்றும் நிலமும் கழிவுப் பொருள் களினால் அளவுமீறி அசுத்தப்படுத்தப்பட்டு, பூமியைச் சூழ்ந்துள்ள கரியமிலவாயு, பிராணவாயுச் சேர்க்கையில் மாற்றங்கள் ஏற்பட்டு, சீதோஷ்ண நியதிகளும் பருவச் சங்கிலிகளும் ஆட்டம் கண்டு, மிக அதிகமான குளிர் அல்லது மிக அதிகமான உஷ்ணத்தினால் உலகம் அழிந்து போகக்கூடுமென்று விஞ்ஞானிகள் கணக்கிட்டிருந் தார்கள். புராணங்களில் குறிப்பிட்டிருந்த பிரளயம் கடைசியில் அவ்வளவு பொய்யானதல்ல போலும்.

... இயற்கையைத் தொழுதலை மீண்டும் நாகரிகமாக்குவதுதான் ஒரே வழி. இது அவ்வளவு சுலபமானதல்ல. மரங்களையும் செடி கொடிகளையும் நேசிப்பதென்பது தனிமைப்படுத்தக் கூடிய ஒரு அம்சமல்ல, விஷயமல்ல. பல தலைமுறைகளாக வளர்ந்து ஸ்தாபித

மாகியுள்ள ஒரு மனப்போக்கே முதலில் மாற்றப்பட வேண்டும். இயற்கைக்குத் திரும்புதல்! – இது ஒரு சர்ச்சைக்குரிய விஷயம்; திரும்புதல் என்றால் எந்தத் திசைகளில்? எந்த அளவுக்கு? பத்மினியின் உடல் மணங்களை முதன் முதலாக நுகர்ந்த அனுபவத்தை அவன் நினைத்துக்கொண்டான். அமெரிக்க, விஸ்கான்ஸின் யுனிவர்ஸிடியை அடுத்திருந்த ஏரியிலும் தோப்பு களிலும் அவர்கள் கழித்த தருணங்கள். செம்பூரில் அவள் வீட்டில் சில சமயங்களில் அவன் குளிப்பதற்காகப் பாத்ரூமுக்குச் செல்லும் போது அவனுக்கு முன்பாக அவள் குளித்திருப் பாள்; குழாய்ப் பிடியில் பழைய 'ப்ரா'வை மாட்டியிருப்பாள். குழாயைத் திறப்பதற்காக அதை அவன் அகற்ற வேண்டியிருக்கும். அந்தப் பரிச்சயமான மணம் ... அதை ரசிப்பதற்கு அவன் கற்றுக் கொள்ள விரும்பினான் ... குறிப்பிட்ட சில நாற்றங்களின் கசிவும் இவற்றிடையேயுள்ள நுட்பமான வேறுபாடுகளும்தான் பல மிருகங்களிடையே அடையாளச் சின்னங்களாகப் புணர்ச்சிக்கு அடிகோலும் உந்துதல்களாக, உதவுகின்றன. ஆனால் மனிதப் பெண் நாற்றங்களை மறைக்கும் நறுமணங்களைத் தரித்துத்தான் ஆணை மயக்குகிறாள். மலர்களின் மணத்தையும் செயற்கை ஸென்ட்டுகளின் மணத்தையும் பெண்ணைச் சார்ந்தவையாக, அவளுடைய நளினமாக, குறியீடுகளாக, நினைப்பதற்கு ஆணும் பழகிவிட்டான். இதை அடிப்படையாக வைத்து ஒரு மில்லியன் டாலர் வியாபார உலகம் இயங்குகிறது. ஆணும் பெண்ணும் தம்முடைய இயற்கையான நாற்றங்களை ரசிக்கத் தொடங்கினால் காஸ்மெடிக் இன்டஸ்ட்ரியே தவிடுபொடியாகிவிடும்.

இப்போது அருகில் உட்கார்ந்திருந்த பத்மினியிடமிருந்து வசீகரமான ஸென்ட்டின் நறுமணம் எழுந்து கொண்டிருந்தது. அவன் சட்டென்று அவள் நெற்றியின் மீது புரண்ட மயிர்க் கற்றை ஒன்றை காதுக்கு மேலாக ஒதுக்கிவிட்டான். "தாங்க்யூ டியர்!" என்று அவள் புன்னகை செய்தாள். "இவ்வளவு நேரம் இதைப்பற்றித்தான் யோசித்துக்கொண்டிருந்தீர்கள், இல்லை?"

'உனக்குத் தெரியும், எனக்கு உன்மீது எவ்வளவு அக்கறையென்று."

"நான் எவ்வளவு அதிர்ஷ்டசாலி!"

அவள் கண்களில் ஒரு விஷமத்தனமான ஒளி தெரிந்தது. அவனை முதல் முதலில் அவளிடம் ஈர்த்த அதே ஒளி. ஆறு மாதங்களுக்கு முன்பு விஸ்கான்ஸின் யுனிவர்ஸிடியில் நடந்த பார்ட்டியில் ஸ்டீரியோ சங்கீதம் சற்றே ஓய்ந்திருந்தது. நடனமாடிக் களைத்து எல்லாரும் மதுவருந்தியவாறு, பேசியவாறு நாற்காலிகளில் அமர்ந்திருந்தார்கள் – எல். எஸ். டி., மாரியுவானா பார்ட்டிகளுக்கு நடுவே அது சற்றே கர்நாடகமான பார்ட்டி என்றுதான் சொல்ல வேண்டும் – பஞ்சாபிலிருந்து வந்திருந்த மொகிந்தர்சிங் ஒரு பிரபல இந்திப்பட நடிகரின் பாவனைகளையும் பேச்சு முறைகளையும் கேலியாக அபிநயம் பிடித்துக் காட்டி எல்லாரையும் விழுந்து விழுந்து சிரிக்க

வைத்துக்கொண்டிருந்தான். போதை மனதின் கட்டுப்பாடுகளை தளரச் செய்திருந்ததால் மிகச் சாதாரண விஷயங்கள் கூடச் சிரிப்பலைகளை உருவாக்கப் போதுமானதாயிருந்தன. அப்போதுதான் தற்செயலாக அவர்களுடைய விழிகள் சந்தித்தன. சிரித்துக்கொண்டிருந்தாள் அவள். சிரித்துக்கொண்டிருந்தான் அவன். கட்டுப்பாடுகளற்ற யதேச்சையான நிலை. ஒரு கணத்துக்கு அந்த அறையிலிருந்த மற்ற மனிதர்கள், பொருள்கள் யாவும் மறைந்துவிட்டது போலிருந்தது. இரண்டு மனிதர்கள் பத்து வருடங்கள் நெருங்கிப் பழகியும் ஒருவரையொருவர் புரிந்துகொள்ளாமல் போகலாம். வேறு இருவர் ஒரே கணத்தில், ஒரே பார்வையில், ஒருவரையொருவர் புரிந்துகொண்டுவிடலாம்.

பார்ட்டி முடிந்து எல்லாரும் பிரிந்து செல்கையில் அகஸ்மாத்தாக நிகழ்ந்ததுபோல, ஆனால் உண்மையில் தனித்தனியே அந்நிகழ்ச்சியை விரும்பித் திட்டமிட்டு அவர்கள் அருகருகாக நடக்கத் தொடங்கினார்கள். அவள்தான் முதலில் பேசினாள். "நீங்கள் எகாலஜி மாணவர் இல்லை?"

"எப்படித் தெரிந்தது?" என்றான் விசுவம்.

"டிக்கி சொன்னான்" என்றாள் அவள். டிக்கி அவளுடைய பேனா நண்பன். இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை அவர்களுக்கு உலகத்தின் எந்தப் பகுதிக்கு வேண்டுமானாலும் இலவச டிக்கெட் கிடைக்கிறது. இந்த வருடம் அமெரிக்கா வந்திருக்கிறாள். வந்த இடத்தில் டிக்கியையும் பார்க்க வந்தாள். அடுத்த வருடம் ஆப்பிரிக்கா போகிறாள். காடுகளையும் மிருகங்களையும் பார்ப்பதற்கு.

"மிருகங்களிடையேயும் உங்களுக்குப் பேனா நண்பர்கள் இருக்கிறார்களா?"

அவள் பக்கென்று சிரித்துவிட்டாள். ("குட் ஒன்!") அவனுக்குப் பெருமையாக இருந்தது. அவன் அதிகமாக யாரையும் சிரிக்க வைத்ததில்லை.

அவனுடைய நகைச்சுவையை விட, அவளுக்காக அவன் ஒரு லேசான மட்டத்தில் பேச முயன்றதை – தனக்கு இயல்பற்ற ஒரு வேஷத்தை அணிய முயன்ற கரிசனத்தை – அவள் ரசித்திருக்கலாமென்று இப்போது தோன்றியது. அதன் பிறகு அடிக்கடி அவன் அந்த வேஷத்தை – அது நிரந்தரமாகி விடுமளவுக்கு – அணிந்து வருகிறான்.

அவளுடைய ஆஸ்தான நகைச்சுவையாளன்.

அவன் தன் நகைச்சுவையின் நிரூபணமாக அவளைத் தேர்ந்தெடுத்தானா, அல்லது அவள் தன் சிரிப்புக்கு ஒரு ஊன்றுகோலாக அவனைத் தேர்ந்தெடுத்தாளா? அவன் ஒரு சிறந்த நகைச்சுவையாளனென்று வேறு பல பெண்கள் அவனை நம்ப வைத்திருக்கக்கூடும். அவனுடைய ஒவ்வொரு சொல்லிலும் சிரித்து அவனை வீழ்த்தியிருக்கக்கூடும். தன்னுடைய புதிய பிம்பத்தைக்

கண்டுபிடித்த பரவசம், இந்த பிம்பத்தை அளித்தவள்பால் நன்றியுணர்வு. அதேபோல, அவளைச் சிரிக்க வைப்பதைத் தன் வாழ்வின் பணியாக ஏற்றுக்கொள்ள வேறு பலர் முன்வந்திருக்கக் கூடும். ஓய்வின்றி அவளைச் சிரிக்க வைத்திருக்க முடியும். இருந்தாலும் அவர்களிருவரும் இதுவரை எங்கும் யாருக்கும் நிரந்தரமாக இந்த உரிமையையும் சலுகையையும் அளித்திருக்க வில்லை. சிரிக்க வைக்கும் உரிமை. நகைச்சுவையாளனாக்கப்படும் உரிமை.

மிருகங்களைவிடப் பரிணாம கட்டத்தில் உயர்ந்த மனிதர்களின் நுட்பமான சிந்தனைச் சார்புள்ள, புணர்ச்சி விளையாட்டு.

'நான் ஒரு நகைச்சுவையாளனோ இல்லையோ, ஆனால் நான் ஒரு மாடு' என்று விசுவம் நினைத்தான். நிகழ்ச்சிகளையும் பேச்சுக்களையும் மீண்டும் மீண்டும் அசைபோட்டு புத்தம் புதிய முடிவுகளை உருவாக்கி விழுங்கியவாறு இருக்கும் மாடு. ஆம். இதுதான் அவனுடைய உண்மையான பிம்பம். நீண்ட தலைமுடியும் கிருதாவும் கொண்டு மூக்குக் கண்ணாடியணிந்தவாறு மரத்தடியில் படுத்திருக்கும் ஒரு மாட்டை அவன் கற்பனை செய்து பார்த்தான். சிரிப்பு வந்துவிட்டது.

"என்ன புன்னகை?" என்றாள் பத்மினி.

"சும்மாதான்."

"எலிஃபென்டா வந்துவிட்டது."

படகு கரையைத் தொட்டதுமே அவள் கரையில் குதித்து படிக்கட்டுகளில் விரைவாகத் தாவித் தாவி ஏறத் தொடங்கினாள். அவள் பின்னால் அவளுடன் போட்டி போட்டுக்கொண்டு படிகளில் தனக்கு இயல்பில்லாத ஒரு வேகத்துடன் ஏற முயற்சித்த விசுவத்துக்குத் திடீரென்று தான் ஒரு திரைப்படக் காதலன் போல நடந்துகொள்ள முயற்சிக்கிறோமோ என்ற சந்தேகம் ஏற்பட்டது. நேற்று பத்மினியும் அவனும் எங்கெங்கோ சுற்றிக் களைத்துக் கடைசியில் இளைப்பாறுவதற்காக இந்திப்படம் ஓடிய சினிமாத் தியேட்டர் ஒன்றினுள் சற்று நேரம் உட்கார்ந்திருந்தார்கள். அந்தப் படத்தின் காதலர்கள் செய்த விளையாட்டுகள் அவனுடைய ஸப்கான்ஷஸ்ஸில் பதிந்து போயிருக்க வேண்டும். மாஸ் மீடியாவின் பாதிப்பு.

அல்லது அவன் தன் சிறு பிராயங்களில் இல்லாமலே போய் விட்ட ஒரு கட்டத்துக்கு, சில அனுபவங்களுக்கு, இப்போது ஈடு செய்ய முயலுகிறான் போலும். அந்தந்தக் கட்டங்களில் நிகழ வேண்டியவை அப்போது நிகழாமல் அமிழ்த்தி வைக்கப்படும்போது, பின்னால் எதிர்பாராத தருணங்களில் அவை வெளிக் கிளம்பி பொருத்தமற்ற காட்சிகளுக்கு அடிகோலுகின்றன – படிகளில் ஒரு பெண், பின்னால் குதித்து ஏறும் முப்பத்திரண்டு வயது விசுவம், இலேசாகத் தொந்தி தள்ளத் தொடங்கியிருந்த, தலை நரைக்கத் தொடங்கியிருந்த, விஞ்ஞானி விசுவம் – முன்பே வாங்கிய சட்டை யொன்றைக் காலதாமதமாக அணிவது போன்ற சங்கடமான உணர்வு.

அவனுக்குச் சில சைஸ்கள் சிறிதான பிம்பம்; இருக்குகிறது . . .

திரிமூர்த்தி சிலையெதிரே போய் நின்றாள் பத்மினி. "ஹவ் ஸீரியஸ்!' என்றாள் அந்த முகங்களைப் பார்த்து. "உங்களைப் போலவே."

விசுவம் பேசவில்லை; படியேறி வந்ததில் மூச்சு வேறு இரைத்தது. 'அப்படியா' என்பது போலத் தலையை ஆட்டினான். அவள் பழிக்கவில்லை, பெருமையாகத்தான் சொல்கிறாளென்று அவனுக்குத் தெரியும். அவனுடைய ஆழமும் அமைதியும் தீவிரமும் அவளுக்கு ஏதோ ஒரு வகையில் ஆறுதலையும் தெம்பையும் அளித்ததென்று தான் தோன்றியது. அவர்கள் காந்தத்தின் எதிரெதிர் துருவங்கள். அதனால்தான் ஒருவரால் மற்றவர் கவரப்பட்டிருக்கிறார்கள். அதே சமயத்தில் அவள் அப்படியொன்றும் மேலோட்டமான வளுமல்ல, ஆழத்தில் குறைந்தவளல்ல. ஆனால் தன் ஆழத்தை யெல்லாம் ஒளித்துக்கொண்டு மணிக்கணக்கில் மேலோட்டமாகச் சிரித்துப்பேச அவளால் முடியும். அவனால் முடியாது. விசுவம் சற்றே நடந்து நடராஜ சிற்பத்தினெதிரே நின்றவாறு திரும்பிப் பார்த்தபோது அவள் திருமூர்த்தியருகே இன்னமும் நின்றுகொண்டு, அங்கேயிருந்த சில வெளிநாட்டு டூரிஸ்ட்டுகளிடம் ஏதோ பேசிக்கொண்டிருப்பது தெரிந்தது.

நகரத்தில் வளர்ந்தவளென்று அவளைப் பார்த்தால்தான் சொல்வார்களே தவிர, தன்னை யாரும் சொல்லமாட்டார்கள் என்று விசுவம் நினைத்தான். அவன் இதயத்தில் ஒரு கிராமவாசி தான், தன் தாத்தாவைப் போல. நகரத்தின் தற்காலிகமான, மேலோட்டமான உறவுகளை, நியமங்களை, அவனால் தேர்ச்சியுடன் தொடர்ந்து அப்பியசிக்க முடிவதில்லை; சலித்துவிடுகிறது – ஹலோ ஹலோ ஹலோ ஹலோ என்று காலையிலிருந்து மாலை வரையில் நூறு பேரிடம் சொல்லிக்கொண்டு ஸ்மைல் செய்துகொண்டு யாரிடமும் உண்மையில் அக்கறையோ ஆர்வமே கொள்ளாமல், ஒட்டாமல், பிணையாமல் பிரிந்து பிரிந்து விலகி விலகிச் சென்று கொண்டிருத்தல். உணர்ச்சிவசப்படக்கூடாது. யாருடைய அந்தரங்கத்தையும் பகிர்ந்துகொள்ளக்கூடாது. எதுவும் யாரும் தன்னுடைய ஆழங்களைத் தொட்டுவிட அனுமதிக்கக் கூடாது. சொற்களை, எண்ணங்களை வெளிப்படுத்தும் சாதனங்களாக அல்ல, எண்ணங்களை மறைக்கும் போர்வைகளாகப் பயன்படுத்தும் கலை. இதற்கு ஒரு இரக்கமற்ற தன்மை தேவை. தன்னைத்தானே ஒளித்துக்கொள்ளும் சாமர்த்தியம் தேவை. நடிப்புத்திறன் தேவை. பத்மினிக்கு அது உண்டு. அது நடிப்பென்ற உணர்வும் அவளுக்கு உண்டு. எந்த வகையான கும்பலிலும் ஒன்றிக் கலந்து அவர்களுடைய மொழியைப் பேசி தோரணைகள் பாவனைகள் காட்டி அவர்களில் ஒருத்தியாகவே மாறிப் போவாள். அவர்களிடமிருந்து விலகிவந்து அவ்வளவையும் பொய்யாக உதறித் தள்ளி நிஜமாக, இயல்பாகப்

பேசிப் பழகுவாள். அவனைக் கவர்ந்தது அவளுடைய மேலோட்டமான தன்மையல்ல, அந்தத் தன்மையை வெறும் வேஷமாக அவள் அணிந்து கழட்டியெறிந்து மீண்டும அணியும் லாகவமும முதிர்ச்சியும் மனத் தெளிவும்தான். உள்ளுக்குள் அவள் யாரென்று அவன் அறிவான் என்று அவளும் அறிவாள். தன்னை அந்த மட்டத்தில் அவனால் அறிந்துகொள்ள முடிந்தது என்பதனாலேயே அவனை அவள் நேசித்தாள் போலும். தன்னுடைய வேஷத்தில் ஏமாறாத ஒரே ஆசாமி. அவனுடைய வேஷமிடத் தெரியாத எளிமையும் அப்பாவித்தனமும் அவளைக் கவர்ந்தன. அவளுடைய வேஷமிடும் பாங்கும் நாசூக்கும் அவனைக் கவர்ந்தன.

அவள் அவனுடைய எந்த பிம்பத்தையும் வழிபடவில்லை. அவனை வெறும் அவனாகப் புரிந்துகொண்டு ஏற்றுக்கொள்கிறாள். அதன் மூலம் அவனைச் சிறைப்படுத்தும் பல பிம்பங்களிலிருந்து விடுதலையளிக்கிறாள். நிம்மதியும் ஆசுவாசமும் அளிக்கிறாள். அவன் வெறும் விசுவம். பத்மினியின் விசுவம். அவள் கைக் களிமண். விஞ்ஞானியல்ல, சிந்தனையாளனல்ல, மனிதகுலத்தின் மெய்க்காப்பாளனோ மனச்சாட்சியோ அல்ல. வெறும் விசுவம்.

அவர்கள் சேர்ந்திருக்கும்போது உலகத்தின் பார்வைக்காகப் பல வருடங்களாகச் சாமர்த்தியமாக உருவாக்கி வளர்த்த தத்தம் தோரணைகள், சிறிதும் பெரிதுமான பாசாங்குகள், பெருமைகள் ஆகியவை கழன்று விழுந்து வெறும் குழந்தைகளாக ஒருவரையொருவர் காண்கிறார்கள்; உணர்கிறார்கள். தனித்தனியே நிகழ்ந்துவிட்ட தம்முடைய வளர்ச்சிக்காக மிரட்சியும் வெட்கமும் அடைந்து இவற்றையெல்லாம் அழித்துவிட்டு மீண்டும் புதிதாகச் சேர்ந்தாற்போலக் கைகோர்த்துக்கொண்டு வளரத் துடிக்கிறார்கள். ஒருவருக்கொருவர் பிரியமாகவும் உவப்பாகவும் இருக்கக்கூடிய திசைகளில், விதங்களில், அவள் விருப்பம்போல அவன். அவன் விருப்பம்போல அவள்.

அவள் அவன் குழந்தை. அவன் அவள் குழந்தை.

நடராஜ சிற்பம் உடைந்திருந்த போதிலும் அதன் கவர்ச்சி குறையவில்லை. பாறையையே பிளந்து தெறிக்கச் செய்வது போன்ற தாண்டவ கோலம். ஆனால் முகத்தில் அலாதியான அமைதி; சாந்தம். அவர் ஆடுகிறார். ஆனால் ஆட்டத்தில் அவரில்லை. பத்மினி அங்கே நின்று பேசிக்கொண்டிருக்கிறாள். ஆனால் உண்மையில் அவள் விசுவத்தினருகில் இருக்கிறாள். விசுவம் இங்கே நிற்கிறான்; ஆனால் உண்மையில் அவன் இங்கே இல்லை.

எங்கே இருக்கிறாய் நீ, விசுவம்?

# 5

அமெரிக்கா; பம்பாய்; டில்லி.

இரண்டு வாரங்கள் முன்பு வரை விசுவம் அமெரிக்காவில் இருந்தான். இப்போது பம்பாயில், இன்று மாலை டில்லியில். நூறு ஆண்டுகளுக்கு முன்புகூட நினைத்துப் பார்த்திருக்க முடியாத, இப்போது சர்வ சாதாரணமாகிவிட்ட பயண வாய்ப்புகள். சாத்தியக் கூறுகள். ஒலியின் வேகத்தை மிஞ்சும் ஜெட் விமானங்கள். நேரம் பற்றிய, பகல் – இரவு பாகுபாடு பற்றிய, பழைய கருத்துக்களையும் உருவகங்களையும் தவிடுபொடியாக்கும் விமானங்கள்.

மனித உடல் எந்த அளவுக்கு இந்த வேகத்துக்கு, துரித கால மாற்றங்களுக்கு, தன்னைப் பழக்கப்படுத்திக்கொண்டிருக்கிறது, அல்லது பழக்கப்படுத்திக்கொள்ள முடியும்? மென்மையான, சீரான கதியில் நடைபெறுகிறது உடலின் இயக்கம் –இயற்கையினுடையதைப் போல. இரண்டுமே பழமையானவை. மாறுதல்களைச் சிறுகச்சிறுக, படிப் படியாக மட்டுமே அனுமதிப்பவை, சுமுகமாக ஏற்றுக் கொள்பவை. டவுன் பஸ்ஸில் முதன்முதலாகச் செல்லும் கிராமத்துப் பெண்மணி வாந்தியெடுக்கத் தொடங்குகிறாள். விண்வெளிக் கப்பலில் சந்திரனுக்குச் சென்று திரும்பிய ஆல்ட்ரின் பிறகு பல மாதங்களுக்கு மனோதத்துவ விடுதியொன்றில் சிகிச்சை பெற வேண்டியிருந்தது.

மனிதனின் சிந்தனை மாறுதல்களுக்கு ஏங்குகிறது, பரபரக்கிறது. வேகம். மேலும் வேகம். ஆனால் உடல்?

பஸ்ஸில் செம்பூருக்குத் திரும்பிக்கொண்டிருந்த விசுவத்தின் உடல் ஓய்வை யாசித்தது; கண்கள் கிறங்கின. செம்பூரை பஸ் அடைந்ததும் பத்மினி அவனைத் தட்டியெழுப்ப வேண்டியிருந்தது. பஸ்ஸிலிருந்து இறங்கி அவள் வீட்டை நோக்கி நடந்துகொண்டிருக்கும் போது, மீண்டும் சற்று நேரத்தில் விமானத்தைப் பிடிப்பதற்காக

அவள் வீட்டிலிருந்து கிளம்பி விமான நிலையத்துக்கு ஓட வேண்டும் என்ற எண்ணம் அவனுக்குச் சோர்வை ஏற்படுத்தியது. எத்தனை அலைச்சல், எவ்வளவு பயணங்கள். அவனை நாள் முழுவதும் அலைய வைத்துவிட்ட பத்மினியின் மீது அவனுக்கு இலேசாகக் கோபம்கூட உண்டாயிற்று. ஹக்ஸ்லியின் நாவல் ஒன்றில் இடம் பெற்றிருந்த குறும்பான சிந்தனையை அவன் நினைத்துக்கொண்டான். பல கதாசிரியர்கள் கதாபாத்திரங்களின் அந்தந்த நேர உடல் உபாதைகளைக் கணக்கில் எடுத்துக்கொள்ள மறந்துவிடுவதைப்பற்றி ஹக்ஸ்லி வியப்புத் தெரிவித்திருந்தார். அஜீரணமோ கான்ஸ்டிபேஷனோ உள்ள தினத்தில் கதாநாயகன் கதாநாயகியைச் சந்திக்க நேர்ந்தால் ஏற்படும் விளைவுகள், அவனுடைய ஜீரண உறுப்புகள் சரியாக இயங்கும் தினங்களில் ஏற்படும் விளைவுகளிலிருந்து வேறுபட்டதாக இருக்கும்.

ஜலதோஷம். முதுகுவலி. மாதவிடாய்ச் சோர்வு.

பத்மினியின் வீட்டில் வியர்வையும் புழுதியும் படிந்த உடுப்புக்களை மாற்றிக்கொண்டு முகம் கைகால்களைக் கழுவிக்கொண்ட பிறகு சற்றே உற்சாகமாக இருந்தது. மாலை நான்கு மணி. அவளுடைய அப்பா, அண்ணா இருவரும் வீட்டிலிருக்கவில்லை. அப்பா ஒரு மருந்துக் கம்பெனியின் ஏரியா மானேஜர். அண்ணா மெர்ச்சண்ட் நேவியின் காப்டன்; நேற்று ஜப்பானுக்கு அவன் கிளம்பிச் சென்றபோது துறைமுகத்தில் கையசைத்து விடை கொடுத்தவர்கள் கும்பலில் விசுவமும், பத்மினியும் இருந்தார்கள். போவதற்கு முன்பு அவன் அவர்களை ஒருநாள் துறைமுகத்துக்கு அழைத்துச் சென்று தன் கப்பலினுள் சுற்றிக் காண்பித்திருந்தான். அவனுக்கென்று தனி காபின். எல்லாவிதமான வசதிகளுடனும் கூடியது.

அவர்களைக் கூட்டிச்சென்ற அன்று அவன் விசுவம் – பத்மினியின் 'சந்தோஷமான எதிர்காலத்துக்காக' அவர்களுடைய உதவியுடன் இரண்டு பாட்டில் ரம்மைக் காலி செய்திருந்தான். இயல்பான நிலையிலிருந்ததைவிட போதையேறிய நிலையில் அவன் சகித்துக்கொள்ளப்படக் கூடியவனாக, ஏன், சுவாரஸ்யமானவனாகக் கூட விசுவத்துக்குத் தோன்றினான். அதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு அவனையும் அவளுடைய அப்பாவையும் அவர்களுடைய வீட்டில் சந்தித்துப் பேசியதை அந்தச் சமயத்தில் விசுவம் நினைவுபடுத்திக்கொண்டு, அவளுடைய அப்பாவும் போதையிலிருக்கும் போது மட்டுமே சந்திக்க வேண்டியவர் என்ற முடிவுக்கு வந்திருந்தான். இயல்பாக இருக்கும் நேரங்களில் மனிதர்கள் மிகவும் அசுவாரசியமானவர்களாக, தனித் தன்மையற்றவர்களாக மாறிப்போயிருந்தார்கள். அவர்களுடைய ஒவ்வொரு சொல்லும் செயலும் முன்பே நிர்ணயிக்கப்பட்டதாக, எளிதில் ஊகிக்கக் கூடியதாக இருந்தது.

ஏரியா மானேஜருக்கென்று ஒரு தோற்றமும் சில பாவனைகளும்

பேச்சுகளும் இருந்தன. கரையிலிருக்கும் கப்பல் காப்டனுக்கென்று வேறு சில பாவனைகள், பேச்சுக்கள். பத்மினியின் அப்பாவும் அண்ணாவும் தத்தம் உத்தியோகங்களைச் சார்ந்த வேஷங்களில் ஸ்திரப்பட்டுப் போயிருந்தார்கள்.

அவள் தன் அப்பாவையும், அண்ணாவையும் அவனுக்கு அறிமுகப்படுத்திய பிறகு அவர்கள் மூவரும் பேசிக் கொண்டதை – அல்லது பேசிக்கொள்ள முயன்றதை – இப்போது நினைத்துப் பார்த்தாலும் அவனுக்கு வேடிக்கையாக இருந்தது. அவனுக்காக அவர்கள் அறிவுப்பூர்வமான சர்சைகளை விரும்பும் படிப்பாளிகளைப் போலக் காட்டிக்கொள்ள முயன்றார்கள். (உண்மையில் தினசரிப் பத்திரிகைக்கு அப்பால் அவர்கள் அதிகம் படித்திருக்கவில்லை.) அவன் அவளுக்காக படிப்பில் அகந்தையற்றவனாக, வெளியுலகக் காற்றை முதன் முதலாகச் சுவாசிக்கும் ரிஷ்ய சிருங்கராக, அவர்களுடைய அனுபவங்களையும் அபிப்பிராயங்களை யும் ரசித்து ஆமோதிப்பவனாக (அப்படியா! நிஜமாகவா?) காட்டிக் கொள்ள முயன்றான். இந்த பரஸ்பர முயற்சி சோர்வளிப்பதாக இருந்தது.

இப்போது நல்ல வேளையாகப் பத்மினியின் அம்மா மட்டும்தான் வீட்டிலிருந்தாள். அவளை மட்டும்தான் அவன் சமாளிக்க வேண்டியிருந்தது. ஏரியா மானேஜரின் மனைவி. கப்பல் காப்டன் மற்றும் விமானக் கம்பெனி ஸ்டெனோவின் தாய். விஞ்ஞானியின் மாமியார்.

அவன் மூலம் அந்த மாமியின் வேஷத்துக்கு ஒரு புதிய பரிமாணம் கூடப்போகிறது. ஒரு இன்டெலெக்சுவல் பரிமாணம். சந்திர மண்டல யாத்திரை, இதயம், மூளை ஆகியவற்றைப் புதுப்பிக்கும் ஆபரேஷன்கள், ஜீன்களைச் செயற்கையான முறையில் கோர்த்து பிரத்தியேக இயல்புகளுடைய மனிதர்களை உருவாக்கும் முயற்சிகள், இவற்றைப் பற்றியெல்லாம் அவள் அவனிடம் ஆர்வத்துடன் தகவல்கள் சேகரித்துக்கொண்டபோது (ஒரு விஞ்ஞானியென்ற மட்டத்தை விடுத்து வேறு மட்டத்தில் அவனை அவள் ஏற்றுக் கொள்ளத் தயாராயில்லை) எதிர்காலத்தில் ட்ராயிங் ரூம் பேச்சுகளுக்காக அவள் தகவல் சேகரித்துக் கொள்கிறாளோவென்ற சந்தேகம் ஏற்பட்டது. ("யூ நோ, என் ஸன்–இன்–லா கூட இதையே தான் சொல்வார்") மனிதர்களுடைய பெரும் பிரச்னை பேச்சுதான். தினசரி புதிது புதிதாகப் பேசவேண்டும்; என்ன பேசுவது?

இன்று அவன் அதிகம் பேசவில்லை. அதற்கு அவசியமும் இருக்கவில்லை. விமானத்துக்கு லேட்டாகிக்கொண்டிருக்கிறது என்ற சாக்கு துணை செய்தது. பத்மினி சிறிய ஸூட்கேஸில் அவனுடைய சாமான்களை நிரப்பி அடுக்கி மூடித் தயாராக வைத்திருந்தாள். இருவரும் பத்மினியின் அம்மாவிடம் சொல்லிக் கொண்டு கிளம்பினார்கள்.

டாக்ஸி; விமான நிலையம்.

ரிஸர்வேஷனைச் சரிபார்த்துக்கொண்ட பிறகு லௌஞ்சில் சற்று நேரம் அமர்ந்திருந்தார்கள். லவுட் ஸ்பீக்கரில் தொடர்ந்தாற் போல் ஒரு பெண் குரலில் ஏதேதோ அறிவிப்புகள் கேட்ட வண்ணமிருந்தன. அங்குமிங்குமாக விரைந்து கொண்டிருந்த, நின்றவாறோ உட்கார்ந்தவாறோ பேசிக்கொண்டிருந்த மனிதர்கள். விமானம் ஒன்று கிளம்புகிற ஓசை. அந்தச் சத்தங்களும் கலகலப்பும் அவனுடைய சோர்வை அகற்றி உற்சாகமளிப்பனவாக இருந்தன. அந்த லௌஞ்சிலிருந்த எல்லோரும் அவனுடைய நண்பர்களாகத் தோன்றினார்கள். வேறு சில தருணங்களில் சகமனிதர்களின் அண்மையும் அவர்களுடைய சத்தங்களும் அவனுக்கு எரிச்சல் எழுப்பியதுண்டு. இப்போது ஏனோ வேறுவிதமாக உணர்ந்தான். தன் தனிமை அவனுக்குச் சலித்திருக்க வேண்டும். பத்மினியால் அடையாளம் கண்டுகொள்ளப்பட்ட தனிமை.

அவள் பேசிக்கொண்டிருந்தாள். அவன் கேட்டுக்கொண்டிருந்தான். பார்த்துக்கொண்டிருந்தான். அவள் உதடுகள் உச்சரிப்புக்கேற்ற வாறு பிரிந்து சேர்வதை, புருவங்கள் உயர்ந்து தாழ்வதை, குரலில் நுட்பமான தொனி மாற்றங்கள், செருமல்கள், எக்காளமான ஏற்ற இறக்கங்கள் (பிறர்போலப் பேசிக் காட்டுவதில் அவள் தேர்ந்தவள்) வலியுறுத்தல்கள் ஆகியவற்றுக்கேற்றவாறு தோளும், தலையும் கைகளும், யதேச்சையாக – அவளுக்கே உரித்தான விதத்தில் – அசைவதை, விழிகளில் குறும்பான சமிக்ஞைகளை, சிரிக்கும்போது தெரிந்த சீரற்ற – துடுக்குத்தனமான – பல் வரிசையை, நுணுக்கமாக ரசித்துப் பார்த்துக்கொண்டிருந்தான். ஒவ்வொரு கணமும் அவளில் ஏதோ ஒரு புதுமையை அவனால் கண்டுபிடிக்க முடிகிறது. வியப்படைய முடிகிறது. புதுப்பிக்கப்படுவது நிஜமாக அவள்தானா அல்லது அவன் பார்வையா அல்லது இரண்டுமா?

அவள் உசுப்புகிறாள்; அவன் உசுப்பப்படுகிறான். அவள் வழி நடத்திச் செல்கிறாள்; அவன் பின்தொடருகிறான். அவள் மின்சாரம்; அவன் ஓர் உலோகக் கம்பி. அவளைச் சார்ந்து அவளுக்காக அவள் மூலம் மட்டும் இயங்கும் கருவியாகத் தன்னை ஆக்கிக் கொள்வது அவனுக்கு ஒருவகையில் இதமாகவும் இன்பமளிப்பதாக வும் இருக்கிறது. அதே சமயத்தில் தன்னுடைய தனித்துவத்தை முழுதும் இழந்துவிடக்கூடாதென்று அவன் கவலைப்படுவதாகவும் தோன்றுகிறது. டில்லிக்கு இன்றே செல்ல வேண்டுமென்று அவன் பிடிவாதமாயிருந்தது அவளுடைய ஆசைகளுக்கு முழுவதும் பணிந்து விடக்கூடாதென்ற மனப்பான்மை காரணமாகத்தானா? அப்படி யென்றால் அவர்களிடையேயிருந்த நேசமும், அன்னியோன்யமும் அந்த அளவுக்குப் பழுதுபட்டதாகிறது; தோல்வியடைந்ததாகிறது.

ஒரு சவால், ஒரு சுய நிரூபணம், அவளுடைய அன்பின் ஆதிக்கத்திலிருந்து ஒரு திமிறல்.

உண்மையில் அவன் மனம் வேண்டுவதுதான் என்ன?

டில்லி ஃபிளைட் பற்றிய அறிவிப்பு லவுட் ஸ்பீக்கரில் வந்தது. பாசஞ்சர்களுக்கு அழைப்பு. விசுவம் எழுந்து நின்றான். பத்மினி உட்கார்ந்துகொண்டேயிருந்தாள். அவனுக்கு என்ன பேசுவதென்றே தெரியவில்லை. அவளுக்கும் உள்ளூர சோகமாகவும், தவிப்பாகவும் தான் இருக்கிறது. பிரியும் தருணத்து சோகம். அதை மறைப்பதற் காகத்தான் உல்லாசமாகக் காட்டிக்கொள்ள முயலுகிறாள். அவளுக்கு இப்போது விடுமுறை கிடைக்கவில்லை. கிடைத்த பிறகு டில்லிக்கு வருவாள். அதுவரையில் விசுவமும் பம்பாயிலிருக்க வேண்டுமென்று அவ்ள் விரும்பினாள். இருந்திருக்கலாமோ என்னவோ? டில்லிக்குச் செல்வது அவனுக்கு உண்மையில் முக்கியமானதுதானா? “எனக்கு என் பெற்றோரைப் பார்க்க வேண்டாமா?” என்று அவளிடம் விடைபெற்றிருந்தான். ஆனால் இப்போது சோபாவில் தனக்கு இயல்பற்ற மௌனத்துடனும், தீவிர பாவத்துடனும் உட்கார்ந்திருந்த அவளைப் பார்த்தபோது அவனுக்குத் திடீரென்று உலகத்தில் வேறு யாவும் முக்கிய மற்றவையாகத் தோன்றின. அவளருகில் அமர்ந்து அவளை அணைத்துக்கொண்டு அவளைப் பேசவும், சிரிக்கவும் செய்ய வேண்டும்; கேட்டுக்கொண்டும் பார்த்துக் கொண்டுமிருக்க வேண்டும் என்ற ஆசை உண்டாயிற்று! என்றென்றும். வாழ்க்கை முழுவதையும் ஏர்போர்ட் லௌவுஞ்சிலோ எலிஃபென்டாவிலோ கழிக்க முடிந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்! அது முடிவதில்லை. அதுதான் துரதிர்ஷ்டம். பம்பாயிலிருந்தால் அவளுடைய வீட்டிலிருக்க வேண்டும். வீட்டிலிருந்தால் அவளுடைய பெற்றோருடன் பேசவேண்டும்.

பத்மினியும் எழுந்து நின்றாள். அவன் அவள் கையைப் பற்றிக் கொண்டான். “போகிறேனென்று கோபமா?”

“ஆமாமென்று சொன்னால் போகாமலிருப்பீர்களா?”

அவன் சங்கடத்துடன் மௌனம் சாதித்தான். அவள் ஒரு கணம் அவன் முகத்தைப் பார்த்துவிட்டு, குபீரென்று சிரித்தவாறு அவன் கன்னத்தில் தட்டினாள். “சீர் அப்! சும்மா தமாஷ் செய்தேன் நான்.”

அவள் சிரிப்பு இறுக்கத்தைக் கலைத்தது. நுட்பமான உணர்ச்சி விளையாட்டில் வென்றது அவள்தான். லவுட் ஸ்பீக்கரில் மீண்டும் அறிவிப்பு வந்தது.

“ஓ. கே.”

“பை!”

அவளுடைய சிரிக்கும் முகத்தை வழித்துணையாகக் கொண்டு அவன் நடக்கத் தொடங்கினான். உணர்ச்சிகள், உணர்வுகள். அவன் இப்போது ஒரு உலர்ந்த இன்டெலக்சுவல் அல்ல. குதூகலமான உணர்வுகள். சற்றுமுன் சோகம், இப்போது குதூகலம். பிற்பாடு

அமைதியானதொரு தருணத்தில் அமர்ந்து யோசிக்கும் போது அவனை வியப்பில் ஆழ்த்தக்கூடிய அளவு அத்தனை குதூகலம். (எது நிஜம்? இந்த உணர்வுகளா, அந்த வியப்பா?)

விமானத்திலேறுமுன்பு வழியனுப்புவர் கும்பலில் அவளை அடையாளம் கண்டுகொண்டு தனக்கு இயல்பில்லாத உற்சாகத்துடன் கைகளை உயர்த்தி அவன் வீசி ஆட்டியபோது, அவனுடைய குதூகலத்தை அவ்வளவு தூரத்திலிருந்து அவளும் உணர்ந்திருக்க வேண்டும். அதனால்தான் சற்று நேரத்துக்குப் பிறகு அவளுடைய மனச்சோர்வையும் அமைதியின்மையையும் அவளால் புரிந்துகொள்ள முடியவில்லை.

57259

விபத்துக்குப் பிறகு, மேலே எழும்பிய விமானம் கழுகு மோதிச் சேதமடைந்திருந்ததால் மீண்டும் கீழே இறங்கி, அதிலிருந்து அவனும் மற்றவர்களும் வெளிப்பட்டு விமான நிலையக் கட்டிடத்துக்குள் திரும்பிய பிறகு, என்ன நடந்தது என்பதெல்லாம் பிறகுதான் தெரிந்தது. அந்தக் கணத்தில் – தரையைவிட்டு மேலே எழும்பிய விமானம் திடீரென்று பல அடிகள் கீழே சரியத் தொடங்கிய சமயத்தில் – யாருக்கும் எதுவும் தெரியவில்லை. மரணபயம் – விமானத்திலிருந்த அனைவருக்கும் ஒரே சமயத்தில் ஏற்பட்ட ஒரே விதமான உணர்வு.

மரணபயம்.

O31,3N42,K P4

தனித்தனியானவர்களாக, தனித்தனி ஆசைகளும், நம்பிக்கைகளும், கவலைகளும் ஏமாற்றங்களும் இறுமாப்புகளும், துவேஷங்களும், கொண்டு அந்த விமானத்தின் ஆசனங்களில் அமர்ந்திருந்தவர்கள் திடீரென்று அந்தப் பொதுவான உணர்வால் இணைக்கப்பட்டார்கள்; ஒன்றானார்கள். வேஷங்கள் கலைந்து வெறும் மனிதர்கள். சாவுக்குப் பயப்படும் மனிதர்கள். ஒவ்வொரு முகத்திலும் அந்தக் கணத்தில் எவ்வளவு பயம்! விசுவத்துக்கு அதிர்ச்சியாக இருந்தது. ஏனோ அவமானமாகவும் இருந்தது. அவர்கள் முகங்களில் அவன் உண்மையில் தன் முகத்தையே கண்டான்.

ஆமாம்; அவனுக்கும் பயமாகத்தான் இருந்தது. மற்றவர்களிடமிருந்து அவன் அப்படியொன்றும் வேறுபட்டவனல்ல. அப்படி அவன் நினைத்து இறுமாந்திருந்தால் அது இப்பொழுது குலைந்து விட்டது.

மரணத்தின் வாயிலிலும், பெண் உடம்பினருகிலும் எல்லா மனிதர்களும் ஒரே மாதியானவர்கள்தாம்.

பெரும்பாலானவர்கள். அவனும்கூட.

இதில் தவறொன்றுமில்லை. ஆனாலும் இது ஏனோ இப்போது அவனுக்கு ஒரு குற்ற உணர்வை ஏற்படுத்துகிறது. சுயவெறுப்பையும் அதிருப்தியையும் ஏற்படுத்துகிறது. ஏன்? இந்தக் கணங்கள் அவனுடைய சுய அபிமானத்தை – பாமரத்தனமான பிடிப்புகளை – பிரத்தியட்சமாக்குவதாலா? அவனுடைய மனிதகுலத்துக்காகக் கவலைப்படும்,

சராசரியிலிருந்து வேறுபடும் பிம்பம் கலைந்துவிடுவதாலா?

பத்மினிதான் விபத்தைபபற்றிய விவரங்களைச் சேகரித்துக் கொண்டு வந்தாள். விமானம் தரையிலிருந்து சில அடிகள் உயரத்தில் எழும்பியவுடனேயே எதிர்த்திசையிலிருந்து பறந்துவந்த கழுகு ஒன்று வலது ஓரத்து எஞ்சினுடன் மோதி, உள்ளே நுழைந்து, ரோட்டர் பிளேடுகளுக்கிடையில் சிக்கிக்கொண்டு விட்டதாம். நாலு எஞ்சின் விமானம்; மற்ற மூன்று எஞ்சின்கள் உதவியால் விமானி விமானத்தை மீண்டும் தரைக்குக் கொண்டு வந்துவிட்டார். நடு ஆகாயத்தில் சீராகப் பறந்துகொண்டிருக்கும்போது இப்படியொரு மோதல் நிகழ்ந்தால்கூடச் சமாளித்துவிடலாம். ஆனால் மேலெழும்பிக் கொண்டிருக்கும்போது இப்படி நிகழ்வது மிகவும் அபாயகரமானது. விமானத்தைச் சமநிலைப்படுத்துவது சிரமமானது. இவர் ஒரு அனுபவம் மிக்க விமானியாதலால்தான் சமாளிக்க முடிந்தது. பறவைகள் மோதியதால் வீழ்த்தப்படும் விமானங்கள் சில சமயங்களில் தூள் தூளாகப் போயிருக்கின்றன. எல்லாப் பிரயாணிகளும் இறந்து போயிருக்கிறார்கள் – விசுவத்துக்குத் தெரியுமா?

தெரியாது. அவனுக்கு எதுவும் தெரியாது. தன்னைப் பற்றிக்கூட முழுதும் தெரியாது. எவ்வளவுக்கெவ்வளவு அவள் நிச்சயத்துடன் இருக்கிறாளோ அவ்வளவுக்கவ்வளவு அவன் நிச்சயமின்மையில் உழலுகிறான். அவள் பேசுகிறாள்; அவன் கேட்டுக்கொண்டிருக் கிறான்.

“ஒரு மணி நேரத்தில் இன்னொரு விமானம் உங்களை டில்லிக்கு ஏற்றிச் செல்லப் போகிறதாம்” என்றாள் பத்மினி.

‘ஒரு மணி நேரம்! அதற்கு மேலும் ஆகக்கூடும்; யார் கண்டது? அவ்வளவு நேரம் காத்திருந்து போகக்கூடிய அளவு இந்தப் பயணம் அவ்வளவு அவசியமானதுதானா? இங்கிருந்து அங்கு, அங்கிருந்து இங்கு. பிறந்ததிலிருந்து எத்தனை தடைகள்! எதற்காக?’

“நான் இன்றைக்குப் போகவில்லை” என்றான் அவன் சற்று நேரம் கழித்து. “டிக்கெட்டை கான்ஸல் செய்து விட்டு டில்லிக்குத் தந்தி கொடுக்கலாம். வா.”

மின்னூலாக்கம்
முரளிதரன்

அவள் நம்பிக்கையின்றி அவன் முகத்தைப் பார்த்தாள். தான் வேடிக்கை செய்யவில்லையென்று அவளை நம்பவைக்க அவன் பிரயாசை எடுத்துக்கொள்ள வேண்டியிருந்தது.

“என்ன ஆயிற்று, விசுவம்?”

“என்னவோ, இன்றைக்குப் போகவேண்டாமென்று தோன்றுகிறது.”

“விபத்து நடந்தது என்பதாலா?”

அவன் அவளுடைய விழிகளில் தெரிந்த பாவத்தைப் படிக்க முயன்றான். அவன் மூடநம்பிக்கையுள்ளவன் என்று அவள் நினைக்கிறாள் போலும். நினைத்துவிட்டுப் போகட்டும். அவனுடைய

உணர்வுகளை, சிந்தனைகளை. எந்த வார்த்தைகளில் அவளுக்கு அவன் தெரிவிக்கமுடியும், புரியவைக்க முடியும்?

"மனம் சரியில்லை" என்று மட்டும்தான் – மீண்டும் சராசரித் தனமாக – அவனால் கூற முடிந்தது.

# 6

**ரா**ம் பிரஷாத்தும் கபூர் சந்தும் காரனேஷன் பஸ் டிப்போவுக் கருகிலிருந்த டீக்கடையில் அமர்ந்து, பிஸ்கெட்டுகளைத் தேநீரில் தோய்த்துச் சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள்.

தேநீர் கொதிக்கக் கொதிக்க இருந்தது. குளிர்மிகுந்த அந்த டிஸம்பர் காலை நேரத்தில் அவ்வளவு சூடு வேண்டித்தான் இருந்தது. ராம் பிரஷாத் மெல்ல ஒவ்வொரு வாயாக அந்தத் தேநீரை உறிஞ்சத் தொடங்கினான். நாள் முழுவதும் அங்கேயே அமர்ந்து தேநீரை உறிஞ்சிக்கொண்டேயிருக்கலாம்போல அவனுக்குத் தோன்றியது. டீக்கடை பண்டிட்ஜி ஒரு பக்கத்தில் கெட்டிலிலிருந்து தம்ளரில் தேநீரை ஊற்றியவாறு இருக்க வேண்டும்; இன்னொரு பக்கத்தில் அவன் தேநீரை உறிஞ்சியவாறு இருக்க வேண்டும்...

ஆனால் தம்ளரில் தேநீர் குறைந்துகொண்டே வந்தது. ராம் பிரஷாத்துக்கும் ஒரு ஏக்கமும் சலிப்பும் உண்டாயிற்று. கடைசி வாய்த் தேநீர். கடைசி உறிஞ்சு.

தம்ளர் காலி. இப்போது அவர்கள் எழுந்திருக்க வேண்டும். கபூர் சந்த் பஸ்ஸை ஓட்ட வேண்டும். ராம் பிரஷாத் ஆயிரக்கணக் கானவர்களிடம் டிக்கெட் வாங்கி ஆயிற்றா, எங்கே போக வேண்டும் என்று திரும்பித் திரும்பிக் கிளிப்பிள்ளை போலக் கேட்டுக் கொண்டிருக்க வேண்டும். பஸ் எங்கே போகும்; எங்கே போகாது என்று சொல்ல வேண்டும். போகிறதென்றால் எங்கே இறங்கினால் சௌகரியமாயிருக்குமென்றும் சொல்ல வேண்டும். சில்லறைகளை வாங்குவதும் கொடுப்பதுமாய் இருக்கும்போதே வசவுகளையும் வாங்கிக்கொள்ள வேண்டும்; கொடுக்க வேண்டும். டிக்கெட்டு களுடன் தொண்டையையும் கிழித்துக்கொள்ள வேண்டும். இந்தத் தேநீர் எந்த மூலைக்கு? கபூர் சந்த் பாடு தேவலை. கண்டக்டர்

உத்தியோகத்தைவிட டிரைவர் உத்தியோகம் எவ்வளவோ கௌரவமானது; நிம்மதியானது.

நடுவில் ஒரு டிரிப் அவர்களுடைய பஸ் யுனிவர்ஸிடி ஸ்பெஷலாக வேறு செல்ல வேண்டும். மாணவர்கள், மாணவர்கள், மாணவர்கள்.

ராம் பிரஷாத், கபூர் சந்த் குடித்துக் கொண்டிருந்த சிகரெட்டை வாங்கி இரண்டு இழுப்புகள் இழுத்துவிட்டு அவனிடம் திருப்பிக் கொடுத்தான். எழுந்திருக்க மனமில்லாமல் உட்கார்ந்திருந்தான்.

"அரே பாய், நேரமாகிவிட்டது" என்றான் கபூர் சந்த்.

"போகலாம், போகலாம். இரண்டு நிமிஷம் தாமதமானால் குடி முழுகிவிடாது" என்றான் ராம் பிரஷாத்.

"அந்தப் புதிய டைம் கீப்பர் அப்புறம் வாள் வாளென்று கத்தத் தொடங்குவான்."

"கத்துவான் கத்துவான். அலைச்சலில்லாமல் இருந்த இடத்தில் ஹாய்யாக இருந்துகொண்டிருக்கிறான் அல்லவா? ஒரு நாள் பீக் அவர்லே நம்ம ரூட்டிலே டிக்கெட் கொடுத்துப் பார்க்கச் சொல்லு."

"நீ சொல்லு."

"சொல்லுவேன். சொல்ல மாட்டேன்னா நினைக்கிறே? நான் இந்த 'பஹன் சோத்'களுக்குப் பயப்படுகிறவனல்ல."

கபூர் சந்த் இதற்குப் பதில் சொல்லாமல் சிகரெட் துணுக்கை ராம் பிரஷாத்திடம் கொடுத்துவிட்டு பக்கத்திலிருந்த சுவரோரமாகச் சிறுநீர் கழிக்கச் சென்றான். அவன் தொண்டையைக் கமறிக்கொண்டு காறித் துப்பும் ஓசை கேட்டது. ராம் பிரஷாத் சிறிய துணுக்காகி விட்டிருந்த சிகரெட்டைக் கடைசியாக இரு இழுப்புகள் இழுத்து விட்டுத் தூக்கியெறிந்தான். தானும் ஒரு தடவை காறித் துப்பினான். தொப்பியை எடுத்துத் தலையில் வைத்துக்கொண்டான். அவன் எழுந்து நிற்கும்போது டீக்கடை ரேடியோவில் முந்தின நாள் இரவு தன் மனைவியுடன் அவன் பார்த்திருந்த சினிமாவில் இருந்து பாட்டொன்று கேட்டது. ஆனால் ஒருகணம் அதை நின்று அனுபவிக்க முடியாமல் கபூர் சந்த் திரும்பி வந்துவிட்டான். "போகலாம், போகலாம்" என்று அவசரப்படுத்தினான். இருவரும் தங்கள் பஸ்ஸை நோக்கி நடந்தார்கள். ராம் பிரஷாத் ரேடியோவில் கேட்ட பாட்டை, மெல்லிய குரலில் முணுமுணுக்கத் தொடங்கினான். அவனுக்கு நல்ல சாரீரம் இருப்பதாக பலர் சொல்லியிருக்கிறார்கள்.

கபூர் சந்த் பஸ் இஞ்சினுடன் முழுசாக இரண்டு நிமிடங்கள் மல்லுக்கு நின்ற பிறகுதான் அது ஸ்டார்ட் ஆயிற்று. குளிர்காலம் வந்தாலே இப்படித்தான். ராம் பிரஷாத் இதற்குள் முன்பக்கத்து தகர போர்டில் 'மோதி பாக்' என்று சாக்பீஸை எச்சிலில் தோய்த்து எழுதி அதைப் பொருத்தினான்; கையிலிருந்த டிக்கெட்டுகளின் ஆரம்ப எண்களை அதற்கான பட்டியலில் குறித்துக்கொள்ளத் தொடங்கினான். பஸ் கிளம்பியவுடன் உடைந்திருந்த ஜன்னல்

கண்ணாடி வழியே குப்பென்று குளிர்ந்த காற்று வீசியது. அவன் மஃப்ளரை முகத்திலும் கழுத்திலும் இறுக்கமாகச் சுற்றிக் கொண்டான். "ஓ லலலா லா ல லா லலா" என்று குளிர் தாங்காமல் அந்த டியூனை மறுபடி உரத்த குரலில் பாடத் தொடங்கினான். கபூர் சந்த் பாட்டுக்குத் தாளம் போடுவதுபோல ஹாரனை இரு முறைகள் அழுத்திவிட்டு, ராம் பிரஷாத்தைத் திரும்பிப் பார்த்துச் சிரித்தான்.

டிப்போவிலிருந்து சக்தி நகர் செல்லும்போது சாலைகளெல்லாம் வெறிச்சென்றிருந்தன – கடைகளுக்கு வெளியே தரையிலோ கட்டிலிலோ போர்வைக்குள் சுருட்டி மூடிக்கொண்டு கிடந்த உருவங்கள் தென்பட்டன. மிராண்டா ஹவுஸ் அருகே ஒரு போலீஸ் காரன் பஸ்ஸைக் கைகாட்டி நிறுத்தி ஏறிக்கொண்டான். கனமான கம்பளி ஓவர் கோட்டும், காலுறைகளும், பூட்ஸூம் அணிந்திருந்த அவன் பஸ்ஸில் ஏறியதும் ராம்பிரஷாத்துக்கு இன்னும் அதிகமாகக் குளிருவது போலிருந்தது. தன்னைப் போலவே காலை டியூட்டியில் சென்றுகொண்டிருக்கும் அந்தப் போலீஸ்காரன்பால் ராம் பிரஷாத்துக்கு சகோதரப் பாசமும் பரிவும் பொங்கியது. அவனும் மனைவியின் அண்மையிலிருந்தும் கதகதப்பிலிருந்தும் மனதே யில்லாமல் தன்னை விடுவித்துக்கொண்டு, வெறும் தேநீர் மட்டும் சாப்பிட்டுவிட்டுக் கிளம்பி வந்திருப்பான் – குளிக்காமல், முகச்சவரம் கூடச் செய்துகொள்ளாமல். "ரொம்பக் குளிர் இன்றைக்கு" என்று போலீஸ்காரன் ஒரு பீடியை எடுத்து உதட்டில் வைத்துக் கொண்டு ராம் பிரஷாத்திடமும் பீடிப் பொட்டலத்தை நீட்டினான். ராம் பிரஷாத்தும் ஒரு பீடி எடுத்துக்கொண்டான்; பீடியைப் பற்ற வைத்துக்கொண்டு இரண்டு இழுப்புகள் இழுத்ததும் அடுக்கடுக்காக இருமத் தொடங்கினான். கண்டக்டர் வேலையில் சேர்ந்த பிறகுதான் அவன் புகைபிடிக்கத் தொடங்கியிருந்தான் – பெரியவர்களுக்கு நடுவில் பெரியவனாகக் கருதப்பட வேண்டுமென்பதற்காக. இது வரையில் அதில் அவனுக்கு தனக்கென்று ஒரு தீவிர வேட்கையோ, ருசியோ ஏற்படவில்லையென்றுதான் சொல்ல வேண்டும். அதே சமயத்தில் பிறர் சிகரெட்டையோ பீடியையோ நீட்டும்போது வேண்டாமென்று சொல்லவும் தயக்கமாயிருந்தது. பிறருக்காக இப்படிக் குடித்துக் குடித்து நாளாவட்டத்தில் அவனுக்கே இதில் ஒரு ருசி ஏற்பட்டு விடலாம்; பிறகு விடவேண்டுமென்றால்கூட முடியாது, பெண் ருசியைப் போல. பலவந்தமாகத் திருமணம் செய்து வைத்ததற்காக ஆரம்பத்திலெல்லாம் தன் பெற்றோர் மீது அவனுக்கு கோபம் கோபமாக வந்துகொண்டிருந்தது. இப்போதோ மனைவியைப் பிரிந்து முழுசாக ஒரு வாரம் கழிக்க முடிவதில்லை. பஸ்ஸில் வரும் பெண்களைக் கல்மிஷம் இல்லாமல் பார்க்க முடிவதில்லை.

சக்தி நகரில் போலீஸ்காரன் இறங்கிக்கொண்டான். முதல் பஸ்ஸூக்காகக் காத்திருந்தவர்களில் நாலைந்து பெண்களும் இருந்தார்கள். ராம் பிரஷாத் எந்தக் கணமும் மணியடித்துவிடப்

போகிறவன்போல, வலது கையால் தலை மேலிருந்த கயிற்றைத் தொட்டவாறு பஸ் வாசலில் நின்றான். அவன் நின்ற விதத்தைக் கவனித்து பாஸஞ்சர்கள் பரபரப்புடனும், ஒருவித பீதியுடனும் அவசரமாகப் பஸ்ஸில் ஏறினார்கள். அவனுக்கு அவர்களுடைய பரபரப்பு ஒரு திருப்தியையும் மகிழ்ச்சியையும் ஏற்படுத்தியது. தன் சக்தியில் கர்வம் ஏற்பட்டது. அந்த பஸ் அவனுடையது. அவர்களெல்லாரும் அவனுடைய விருப்பு வெறுப்புகளுக்கு உட்பட்டவர்கள்.

இரண்டு பெண்மணிகள் வழக்கமாக வருகிறவர்கள். பாஸ் வைத்திருப்பவர்கள். ஒருத்தி மண்டி ஹவுஸிலும், ஒருத்தி கனாட் பிளேஸிலும் இறங்குவார்கள். வேறு இரண்டு பெண்மணிகள் கட்டிட வேலைக்காகப் புருஷன்மாருடன் செல்லும் ராஜஸ்தானிகள். மதமதப்பான உடல்; உறுதியான கொங்கைகள், பற்கள்; லஜ்ஜை யிழக்காத பேதமையான பார்வை. ஆனால் திடீரென்று முன்னெச்சரிக்கை இல்லாமல் பஸ்ஸில் வாந்தியெடுக்கும் அசுத்தம் பிடித்த ஜன்மங்கள். ஆண்கள் காலை ஸீட்டில் தூக்கி வைத்துக் கொள்வார்கள். பீடித்துண்டுகளை பஸ்ஸுக்குள்ளேயே போடுவார்கள். பஸ்ஸுக்குள்ளேயே துப்புவார்கள். அழுக்கு முண்டாசைப் பிரித்து உதறிக் கட்டிக்கொள்வார்கள். திடீரென்று 'போஜ்புரி' ராகங்களை எல்லாருமாகச் சேர்ந்து உரக்கப் பாடத் தொடங்குவார்கள். 'சரியாக உட்காரு. துப்பாதே. சத்தம் போடாதே' என்றெல்லாம் அவர்கள் மீது அதிகாரத்தைப் பொழிவதில் ராம் பிரஷாத்துக்கு ஒரு குஷி. அவர்களைவிட நாசூக்கும் பண்பாடும் மிக்கவனாகத் தன்னை உணர்ந்து, 'இதுகளெல்லாம் கட்டை வண்டியில் போகத்தான் லாயக்கு' என்று அவன் இகழ்ச்சியுடன் நினைத்துக்கொள்வான். அவனை பண்பாடு இல்லாதவனென்று யார் சொல்ல முடியும்? அவன் பிராமண குடும்பத்தில் பிறந்தவன் தெரியுமல்லவா...?

இரண்டிரண்டாக இருந்த இந்த நால்வரைத் தவிர, தனியாக ஒருத்தி. இவள் புதிதாக இருந்தாள். மிக நாகரிகமாகவும் கவர்ச்சியாகவும் உடுத்திக்கொண்டிருந்தாள். ராம் பிரஷாத் அவளிடம் சென்று டிக்கெட் விசாரித்தான். அவள் தயாராகக் கையில் வைத்திருந்த சில்லறையை ஒரு அலட்சிய பாவத்துடன் (அப்படித்தான் அவனுக்குத் தோன்றியது) அவன் கையில் கொடுத்து, அவன் முகத்தைப் பார்க்காமலே "கனாட் பிளேஸ்" என்றாள். ராம் பிரஷாத்துக்கு ஏனோ எரிச்சலாக இருந்தது. அவள் நிமிர்ந்து பார்க்கக்கூட அருகதையற்றவன் அவன்; வெறும் யந்திரம். டிக்கெட்டைக் கிழித்து நீட்டியவுடன், ஒரு மிகையான ஜாக்கிரதையுடன் அவள் அதை வெடுக்கென்று பறித்துக்கொண்ட முறை அவன் எரிச்சலை அதிகமாக்கியது. பெரிய இவள்!

எல்லாருக்கும் டிக்கெட் கொடுத்துவிட்டு, ராஜஸ்தானிகளிடம் சற்று அதிகாரத்தைக் காட்டிவிட்டு, அவன் அந்த நவநாகரிக

மங்கை தெளிவாகக் கண்ணில் படக்கூடிய இடமாகப் பார்த்து உட்கார்ந்தான். அவள் தொடர்ந்து ஜன்னல் வழியே வெளியே பார்த்தவாறிருந்தாள். அந்தப் பஸ்ஸுக்குள் தன்னைச் சம்பந்தப் படுத்திக்கொள்ள விரும்பாதவளைப்போல. ஹூம்! இவளை யெல்லாம் யார் பஸ்ஸில் வரச் சொல்கிறார்கள். டாக்ஸியில் போவதுதானே. நேற்று அவன் பார்த்த படத்தில் நவநாகரீக மங்கைகளை மிக மோசமானவர்களாகக் காட்டி, அவர்களைக் கிண்டல் செய்யும் பாட்டுகளும், கண்டிக்கும் வசனங்களும் இடம் பெற்றிருந்தன. அதெல்லாம் அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது. ஏனென்றால் அத்தகைய பிம்பங்கள்தான் அவனுக்குச் சாந்தியளிப்ப தாக இருந்தன. அவனுடைய மனைவி படித்தவளாகவோ நாகரிக மானவளாகவோ இல்லாமலிருப்பது எவ்வளவு நல்லது என்ற ஆறுதலை அவன், அதன் மூலம் பெற முடிந்தது. கடைசியில் அந்த நவநாகரீக ஹீரோயின் கர்வமெல்லாம் அடங்கி ஹீரோவின் காலில் விழும்போது உற்சாகமாகக் கைதட்டியவர்களில் அவனும் ஒருவனாக இருந்தான்.

தேவ் ஆனந்த்தான் ஹீரோ. மிகச் சாதாரண நிலையிலிருந்து பெரும் பதவி வகிப்பவனாக, செல்வமும் செல்வாக்கும் உள்ளவனாக, நவநாகரீக மங்கையொருத்தியை மண்டியிடச் செய்பவனாக, உயர்ந்து விடுகிறான் அவன். ராம் பிரஷாத்துக்கு மிகுந்த நம்பிக்கையையும் உற்சாகத்தையும் கொடுத்திருந்தது அந்தக் கதை – கள் மூலம் ஏற்படும் உற்சாகத்தைப்போல, ஆனால் குடிபோதை இறங்கியபிறகு மீண்டும் மனச் சோர்வு ஏற்படுவதுபோல, நாளை நாளன்றைக்கு இந்த உணர்வுகள் செத்துவிடும். பிறகு மறுபடி அவன் இன்னொரு படம் பார்க்க வேண்டியிருக்கும்.

காஷ்மீர் கேட், செங்கோட்டை வட்டாரம் வழியாகப் பஸ் செல்லும்போது அங்கே வரிசையாயிருந்த பிரம்மாண்டமான சினிமா போஸ்டர்கள் அவன் கண்ணில் பட்டவாறிருந்தன – ஷர்மிளா டாகுர், மும்தாஜ், வஹிதா ரஹ்மான், தனூஜா, ஆஷா பரேக், ஸிமி, ஹெலன் ஆகியோர் நடித்த படங்கள். கல்யாணத்துக்கு முன்பெல்லாம் வஹிதா ரஹ்மான், மாலா ஸின்ஹா, மீனாகுமாரி போன்றவர்களின் முதிர்ச்சியான, மென்மையான பெண் பிம்பங்கள் – பரிவும் ஆதரவும் இலேசான கண்டிப்பும் நிரம்பியவை – அவனுக்கு அதிகம் வேண்டியிருந்தன. அடுத்தபடியாக ஆஷா பரேக்கின் பேதைமையும், மிரட்சியும், சுலபமான சரணாகதியும், தனுஜாவின் குறும்பும், குழந்தைத்தனமும் வேண்டியிருந்தது. ஆனால் கல்யாணத்துக்குப் பிறகு ஒரு பக்கத்தில் ஷர்மிளா டாகுரின் சவாலும் மிடுக்கும் உயர்குல ஹோதாவும், இன்னொரு பக்கத்தில் ஹெலன், மும்தாஜ் போன்றவர்களின் தளுக்கும் மினுக்கும் போக்கிரித்தனமும்தான் அவனை அதிகமாகக் கவரத் தொடங்கி யிருந்தன. இந்தக் கவர்ச்சி ஏனோ அவனிடம் ஒரு குற்ற உணர்வையும் ஏற்படுத்தியது. தன் ஆசையை ஒரு உதாசீனமாகவும் ஏளனமாகவும்

உருவகப்படுத்திக்கொண்டு அவன் தன் குற்ற உணர்வுகளைத் திருப்தி செய்துகொள்ள வேண்டியிருந்தது – ஷர்மிளா டாகுர் முதலானவர்கள் அவன் காசை வீசியெறிந்தால் சிரிக்கவும் அழவும் வேண்டிய, ஆடிப்பாட வேண்டிய அடிமைகள். வெறும் அடிமைகள். நேற்று சினிமாவில் நவநாகரிக மங்கையாக ஷர்மிளா டாகுர்தான் நடித்தாள்.

தர்யா கஞ்ச் அருகே நடனமாடும் பிரும்மாண்டமான மும்தாஜ், தில்லி கேட்டருகே வெறும் துவாலையைப் போர்த்தியபடி நிற்கும் ரெஹானா சுல்தானா, ரொம்ப அப்பாவி போலச் சிரிக்கும் ஜயா பாதுரி (ஹூம்! இந்தப் புதுமுகங்கள்!) ஹார்ட்டிஞ்ச் பிரிட்ஜ் அருகில் மீண்டும், ஷர்மிளா டாகுர். ஸிக்னலுக்காக பஸ் நின்றிருந்தது; ராம் பிரஷாத் யந்திரத்தால் கட்டுண்டவன் போல ஷர்மிளா டாகுரின் போஸ்டரைப் பார்த்தவாறு உட்கார்ந்திருந்தான்.

மண்டி ஹவுஸ், மாடர்ன் ஸ்கூல், கனாட் பிளேஸ்.

அதோ அந்த மங்கை ஸீட்டிலிருந்து எழுந்து வருகிறாள். தான் பார்க்கப்படுவதை உணர்ந்து, ஆனால் அதனால் எந்த விதத்திலும் பாதிக்கப்பட்டவளாகக் காட்டிக்கொள்ள முயலாமல், அழுத்தலான முகபாவத்துடன் இறங்கிச் செல்கிறாள். ராம் பிரஷாத்துக்கு எரிச்சலாக இருந்தது; ஆறுதலாக இருந்தது. அதே சமயத்தில் பஸ் திடீரென வெறிச்சென்று ஆகிவிட்டதுபோலத் தோன்றியது.

பார்லிமெண்ட் வீதி, ஸெக்ரடேரியட், ரேஸ்கோர்ஸ், அசோகா ஹோட்டல் – எங்கும் எந்தப் பெண்ணும் வந்து ஏறவில்லை. ராம் பிரஷாத் யந்திரம் போலச் சில்லறைகளை வாங்கிப் பையில் போட்டுக்கொண்டு, டிக்கெட் கிழித்துக் கொடுத்துக்கொண்டு, ரூபாய் நோட்டு நீட்டுகிறவர்களிடம் எரிந்து விழுந்துகொண்டிருந்தான். மோதி பாக் நெருங்க நெருங்க அவன் எரிச்சல் அதிகமாகிக்கொண்டிருந்தது. மோதி பாக்கை அடைந்த பிறகு அங்கிருந்து பஸ் யுனிவர்ஸிடி ஸ்பெஷலாக இதே ரூட்டில் திரும்பி வரவேண்டும். அந்த டிரிப்பைப் பற்றிய உணர்வுதான் அவனுடைய எரிச்சலைக் கிளப்பியிருக்க வேண்டும். அந்த டிரிப்பில் அவன் அதிகாரத்தைக் காட்ட முடியாது. மாணவர்களுக்கு அவன் வெறும் கண்டக்டர், கண்டக்டர் மட்டும்.

அவன் இழந்துவிட்ட வாய்ப்புகளை இன்னும் இழக்காமலிருந்த அந்த மாணவர்களை அவன் வெறுத்தான். புதிய தலைமுறை நடிக நடிகையர்களை எப்படி அவன் வெறுத்தானோ, அதேபோல. அவனுடைய அபிமான நடிகர்களின் இளமையுடன்கூடவே அவனுடைய இளமையின் பெரும் பகுதியும் அழிந்துவிட்ட உண்மையை இவர்கள் அவனுக்கு உணர்த்தினார்கள். சினிமாத் தியேட்டர்களில் பல ஸீட்டுகளில் அவனுடைய இளமை பொறுக்கிச் சேர்க்க முடியாத அளவு ஏராளமான துணுக்குகளாக இறைந்து சிதறி பயனேயின்றி நஷ்டமாகிவிட்டது போன்ற உணர்வு தேவ் ஆனந்த், ராஜ்கபூருக்கு அடுத்த தலைமுறை நடிகனாகத்தான் வரவேண்டுமென்று அவன்

ஆசைபட்டுக்கொண்டிருந்தான். ஆனால் இவர்கள் முந்திக்கொண்டு விட்டார்கள். பள்ளிக்கூட நிகழ்ச்சிகளில் அவன் அருமையாகப் பாடியிருக்கிறான். ஆனால் இப்போதெல்லாம நவராத்திரி சமயத்தில் அவனுடைய பேட்டை 'ராம் லீலா'வில் நடிப்பதோடு சரி – சாதாரண வேஷத்தில் இல்லை. ராமனாக.

பரவாயில்லை; இன்னமும் தாமதமாகி விடவில்லை. ஒரு நாள் அவன் வெள்ளித் திரையிலும் ஹீரோவாக நடிக்காமலா இருக்கப் போகிறான்? இதே ஷர்மிளா டாகுருடன்? ராம் பிரஷாத் மீசையை இரு பக்கமும் முறுக்கிவிட்டுக்கொண்டான். ராமனாக நடிப்பதற்காக அக்டோபர் மாதம் அவன் மீசையை எடுத்திருந்தான். இப்பொழுது அது மீண்டும் கருகருவென்று ஜோராக வளர்ந்துவிட்டது. அக்டோபரில் ராமனாக இருந்தவன் இப்போது டிஸம்பரில் ராவணனைப் போலிருந்தான்.

மோதி பாக் வந்துவிட்டது.

இங்கே டீக்கடை எதுவும் கிடையாது. இங்கே இளைப்பாறுவது ஒரு பிரச்னை. டைம்கீப்பர் கூண்டிலிருப்பவனுடன் பேசிக் கொண்டிருக்க வேண்டும். அல்லது பஸ்ஸிலே உட்கார்ந்திருக்க வேண்டும்; சிகரெட் குடித்தவாறு, வம்பளந்தவாறு.

ராம் பிரஷாத்துக்கு இரண்டுமே சலிப்புத் தருவனவாக இருந்தன. அவன் பஸ்ஸிலிருந்து இறங்கினான். வேண்டாவெறுப்பாக டைம் கீப்பரிடம் சென்று பஸ் வந்து சேர்ந்த நேரத்தைப் பதிவு செய்து கொண்டான். எட்டேகால்.

எட்டரை மணிக்கு அந்தப் பஸ் யுனிவர்ஸிடி ஸ்பெஷலாகச் செல்ல வேண்டும்.

டைம்கீப்பர் கூண்டருகில் நிலக்கடலை விற்பவள் ஒருத்தி அப்போதுதான் கடையைப் பரத்தியிருந்தாள். இவள் மதராஸி சோக்ரி. கறுப்பாக இருந்தாலும் நல்ல அழகி. துடுக்குத்தனமான முகவெட்டு. செழிப்பான உடல். வரிகள், சுருக்கங்கள் விழத் தொடங்கியிராத, காய்ந்து போகாத, இளம் சருமம். ராம் பிரஷாத் அவளருகில் போய் குத்திட்டு உட்கார்ந்துகொண்டான். "கடை திறந்தாயிற்றா?" என்று இந்தியில் கேட்டான்.

"இது எப்பவும் திறந்திருக்கிற கடை" என்று அவள் உடைசல் இந்தியில் பதில் கூறியதும் ராம் பிரஷாத்துக்கு ஏதேதோ கற்பனைகள் உண்டாயின. "அச்சா! எப்பவும் திறந்திருக்கிறதா?"

"ஆமாம்."

ராம் பிரஷாத் உரிமையுடன் அவளிடம் இருந்து நாலைந்து கடலைகளைக் கையிலெடுத்துப் பார்த்தான். "தாஜா ஹை (பசுமையானது)" என்றாள் அவள்.

"பஹுத் தாஜா ஹை" என்று அவன் அவளைப் பார்த்துக்

கொண்டே கூறினான். "நல்ல பசி எனக்கு. இருநூறு கிராம் கொடு" என்று காசை நீட்டினான். அவள் அந்நியோன்னியமான புன்னகையுடன் கடலைகளைத் தராசில் குவித்து நிறுக்கத் தொடங்கினாள். ராம் பிரஷாத் அவள் புன்னகையினால் ஒரு கிளுகிளுப்பும் நிறைவும் அடைந்தவனாய் அவளையே பார்த்தவாறு உட்கார்ந்திருந்தான்.

மாவட்ட மைய நூலகம், திருவாரூர்.

# 7

டைம் கீப்பர் கூண்டருகே அமர்ந்து, ராம் பிரஷாத் பதினெட்டாவது நிலக்கடலை தின்னத் தொடங்கியபோது மாணவர்கள் தனித்தனியாகவும் சிறு சிறு குழுக்களாகவும் பஸ்ஸில் வந்து ஏறத் தொடங்கினார்கள். கவர்ச்சிகரமான பல நிற உடைகள், விலையுயர்ந்த குளிர்கால உடைகள், உல்லாசமான பேச்சு, சிரிப்பு, நடை, பார்வை. பெரியவர்கள் உலகத்தை – அவர்கள் மதிப்பீடு களை – லட்சியம் செய்யாத, சவால் விடுவது போன்ற, தோரணை. இரண்டு மாணவர்கள் சிகரெட் பிடித்தவாறு பஸ்ஸுக்கு வெளியே நின்றுகொண்டிருந்தார் கள். தன் பக்கம் பார்த்து ஏதோ சொல்லி அவர்கள் சிரித்துக் கொள்வதுபோல ராம் பிரஷாத்துக்குத் தோன்றியது. இன்னும் இரண்டு மாணவர்கள் வந்தார்கள். "அரே ராம் பிரஷாத், நீ மட்டும் தனியாக உட்கார்ந்து சாப்பிடுகிறாயே. இது சரியா?" என்று ஒருவன் விசாரித்தான். "நீங்களெல்லாம் என்னுடன் சாப்பிடுவீர்களா என்ன?" என்றான் ராம் பிரஷாத். "ஏன் இல்லாமல்?" என்று அவன் நிலக்கடலைப் பொட்டலத்தைச் சட்டென்று பிடுங்கி அதிலிருந்து கொஞ்சம் எடுத்துக்கொண்டு அருகிலிருந்தவனிடம் கொடுத்தான். அவனும் கொஞ்சம் தின்றுவிட்டு பஸ்ஸினருகில் நின்றிருந்த அந்த இரு மாணவர்களை நோக்கி விட்டெறிந்தான் – Catch! – அவர்கள் அதில் ஆளுக்கு கொஞ்சம் கொஞ்சம் தின்ற பிறகு பஸ்ஸுக்குள் 'பாஸ் ஆன்' செய்தார்கள்.

"அரே ராம் பிரஷாத் – உன்னிடமிருந்தல்லவா வாங்கினோம் – மறந்தேவிட்டது . . . வேறு வாங்கிக் கொடுக்கவா?"

"வேண்டாம் ஸாப், டீக் ஹை."

"பார், கோபித்துக்கொண்டுவிட்டாயா, என்ன?"

"இல்லியே."

"நிஜமாக?"

"எனக்குக் கோபமே வராது."

"ரொம்ப நல்ல மனுஷன் நீ" என்று அவன் ராம் பிரஷாத்தின் தாடையை அவமதிக்கும் பரிவுடன் தடவிவிட்டுப் புன்னகை செய்தான். ராம் பிரஷாத்துக்கு ரத்தம் சூடேறுவது போலிருந்தது. கடவுளே, ஒரு நாள் அவன் இவர்களில் யாரையாவது கொலை செய்யாமலிருக்க வேண்டும்.

அவர்கள் இருவரும் ஒருவர் தோள் மேல் ஒருவர் கை போட்டுக் கொண்டு பஸ்ஸினருகில் சென்றார்கள். உள்ளேயிருந்த பெண்களைப் பார்த்துச் சினிமாப் பாட்டு ஒன்றைப் பாடத் தொடங்கினார்கள். ஒரு பெண் ஹாண்ட்பாக்கைத் திறந்து உள்ளே தேடிப் பார்த்து விட்டு, "சில்லறை இல்லையேப்பா" என்றாள்.

"ரொட்டி சாப்பிடுவியா?" என்றாள் இன்னொருத்தி.

"கொடுடி. பாவம் பசிதான் போலிருக்கு, நிலக்கடலை தின்னது போதவில்லை."

எல்லாப் பெண்களும் சிரித்தார்கள். 'கெக் கெக் கெக் கெக்கே!' என்று அவர்கள் சிரிப்பைக் கேலி செய்து மாணவர்கள் சிரித்தார்கள். எட்டரை மணி ஆகிவிட்டது. கபூர் சந்த் பஸ்ஸில் ஏறி உட்கார்ந்தான். 'செல்வோம் செல்வோம், தோழர்களே?' என்று ஒருவன் பாடினான். டபடபவென்று பல பூட்ஸ் கால்கள் தாளம் போட்டன. ராம் பிரஷாத் ரைட் கொடுத்து விட்டுப் பஸ்ஸில் ஏறினான். வெளியே நின்றிருந்த மாணவர்கள் ஓடத்தொடங்கிய பஸ்ஸில் ஒவ்வொரு வராகத் தொற்றிக்கொண்டார்கள். கடைசியாக ஏறினவர்களுக்கு உட்கார இடமில்லை. அவர்கள் பஸ்ஸினுள் விமானத்திலிருக்கும் ஸ்டூவர்டுகள் போல இங்குமங்குமாக உலவத் தொடங்கினார்கள். 'ஹலோ!' என்று பெண்களைப் பார்த்துச் சிரித்தார்கள். "எல்லாம் சௌகரியமாக இருக்கிறதா மேடம்?"

ஒருவன் ராம் பிரஷாத்தின் தொப்பியை எடுத்து அணிந்து கொண்டு எல்லாரிடமும் பாஸை செக் பண்ணத் தொடங்கினான்.

"அரே பாய்! மாணவர் அல்லாதவர் யாராவது பஸ்ஸில் ஏறியிருந்தால் தயவுசெய்து தானாகவே இறங்கிவிடுங்கள்" என்று ஒருவன் கூவினான்.

"கண்டக்டரை முதலில் இறக்கிவிடு."

"போங்கடா, இவன் நம்முடைய தோஸ்த் அல்லவா?" என்று ராம் பிரஷாத்தின் அருகிலிருந்தவன் அவன் முதுகில் கைபோட்டு அணைத்துக்கொண்டான். காற்சட்டைப் பையிலிருந்து சிகரெட் பாக்கெட்டை எடுத்து ராம் பிரஷாத் முன்பு நீட்டினான். ராம் பிரஷாத் வேறு வழியின்றி ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்துக்கொண்டான். இதைப் பார்த்ததும் பஸ்ஸின் முன்புறம் நின்றிருந்த ஒருவன் பின்பக்கம் ஓடிவந்தான். "கண்டக்டர்ஜி,

வேண்டாம்! இவர்கள் உன்னைக் கெடுக்கிறார்கள்" என்றான்.

"டிரைவர்! இந்தக் கண்டக்டர் பஸ்ஸில் புகை பிடிக்கிறான்."

"கம்ப்ளெயிண்ட் புக் எங்கே?"

"நீங்களும் குடியுங்களேன் ஸாப். யார் தடுத்தார்கள்?"

"பின்னே சரி."

குப்குப்பென்று புகை வளையங்கள் கிளம்பின. பஸ் முழுவதும் புகை. மாணவிகள் இருமத் தொடங்கினார்கள். ராம் பிரஷாத்துக்கு மாணவிகளுக்கு ஏற்பட்ட தொந்தரவு ஒரு பக்கம் மகிழ்ச்சியளித்தது. இன்னொரு பக்கத்தில், தன் மீதே வெறுப்பாக இருந்தது. மாணவர்கள் தன்னை ஒரு கோமாளியாகப் பயன்படுத்துவதைத் தான் அனுமதித்துக்கொண்டிருந்தது பற்றி. ஆனால் அவன் செய்யக்கூடியது தான் என்ன? எல்லோரும் பெரிய இடத்துப் பிள்ளைகள். ஏதாவது தகராறு ஆனால் பாதிக்கப்படப் போவது அவன்தான்; அவர்களல்ல. அவர்களுடைய ரவுடித்தனங்களுக்கு அனுசரணையாக இருப்பதில் தான் அவனுடைய பாதுகாப்பு இருந்தது. தன் பதவியின் அதிகாரங்களை அவன் வலியுறுத்தத் தொடங்கினால் உடனடியாக பெரியவர்கள் உலகத்தின் பிரதிநிதியாக அவன் அவர்களால் அடையாளம் கண்டுகொள்ளப்படுவான்; தனிமைப்படுத்தப்படுவான். தாக்குதல்களுக்கு ஆளாவான். அடுத்தாற்போல, மாணவர்களால் அவர்களில் ஒருவனாக – பரிகாசத்துக்காகவேனும் – கருதப்படுவது அவனுடைய சில ஏக்கங்களின், ஆசைகளின், வடிகாலாக உதவியது. பொறுப்புகளோ கவலைகளோ அற்ற இளமையை – அதைச் சார்ந்த வாய்ப்புகளை – மீண்டும் அவன் பெற்றுவிட்டது போலிருந்தது, ஒரு விதமான மயக்கம்.

ஸெக்ரடேரியட் அருகே பஸ் செல்லும்போது பஸ்ஸின் முன் புறத்தில் மறுபடி ஏதோ கலாட்டா தொடங்கியது. ஸ்டீவர்டுகள் போல அலைந்துகொண்டிருந்த மாணவர்களுக்கும், உட்கார்ந்திருந்த ஒரு மாணவிக்குமிடையே ஏதோ தகராறு. "கண்டக்டர்! கண்டக்டர்! என்று அவள் ஓரிரு முறைகள் கூப்பிட்டாள். "போ ராம் பிரஷாத்! பொம்பளை கூப்பிட்டால் உடனே போகணும்" என்று பின்புறமிருந்த மாணவர்கள் ராம் பிரஷாத்தை அங்கே அனுப்பி வைத்தார்கள்.

ராம் பிரஷாத் அருகில் வந்ததும். "கண்டக்டர்! இவர்கள் என் பையை எடுத்து வைத்துக்கொண்டு தரமாட்டேனென்கிறார்கள்" என்றாள் அந்தப்பெண். பக்கத்தில் நின்றிருந்த மாணவனின் கையில் அகலமான காகிதப் பையொன்று இருந்ததை ராம் பிரஷாத் கவனித்தான். "அரே ராம் பிரஷாத், இது யுனிவர்ஸிடி ஸ்பெஷல் அல்லவா?" என்று அந்த மாணவன் பேசத் தொடங்கினான். "இவ்வளவு பெரிய லக்கேஜ் எல்லாம் இதில் கொண்டுவரலாமா? நீயே சொல்லு, இந்த மேம்ஸாப்பிடம்."

"தொலைந்து போகட்டும், ஸாப். நாளையிலிருந்து கொண்டு

வர மாட்டாள், விட்டுவிடுங்கள்" என்று ராம் பிரஷாத் சமாளிக்கப் பார்த்தான்.

"அதெப்படி? நான் நிச்சயம் கொண்டுவருவேன். தினம் கொண்டு வருவேன்" என்று அந்தப் பெண் படபடத்தாள்.

"கேட்டாயா ராம் பிரஷாத்? கேட்டுக்கொண்டாயா? இப்போது நீயே முடிவு செய்."

"இவளுடனெல்லாம் எதற்கு வீண் சச்சரவு, ஸாப். நாளைக்கு நீங்களும் பெரிய பெரிய சாமானாகப் பஸ்ஸில் கொண்டு வாருங்களேன்."

"அரே, நீ என்ன ஆத்மி அப்பா. பஸ்ஸில் சிகரெட் பிடிக்கலாமென்கிறாய். லக்கேஜ் கொண்டுவரலாமென்கிறாய் –உன்னை யார் கண்டக்டராகச் சேர்த்துக்கொண்டது?"

"நானேதான் சேர்ந்தேன்."

இதைக் கேட்டு அவர்கள் சிரித்தார்கள். ராம் பிரஷாத்துக்குக் கொஞ்சம் தெம்பு ஏற்பட்டது. "இது அவ்வளவு எடையில்லை போலிருக்கிறதே?" என்று பையை அந்த மாணவன் கையிலிருந்து பிடுங்க முயற்சித்தான். ஆனால் அவன் அப்படியெல்லாம் ஏமாறுகிறவனாயில்லை. சட்டென்று கையை முதுக்குப் பின்னால் மறைத்துக்கொண்டான். "அரே, இந்த சோக்ரிக்கு நீ பயப்படுகிறாயா, என்ன?" என்று கேட்டான்.

"இல்லை."

"பின்னே?"

ராம் பிரஷாத் அந்தப் பெண்ணைப் பார்த்தான். அவள் தவிப்புடன் தன்னையே பார்த்துக்கொண்டிருந்ததை உணர்ந்தான். வில்லனிடம் சிக்கிக்கொண்டிருந்த ஷர்மிளா டாகுர். அவனிடம் ஆசையையும் வெறுப்பையும் ஒருங்கே தூண்டிய ஷர்மிளா டாகுர்.

"பதில் சொல்லு ராம்பிரஷாத். மீசையெல்லாம் பிரமாதமாக வைத்திருக்கிறாய். ஆனால் தைரியமே இல்லையே, உனக்கு."

ராம் பிரஷாத்துக்குத் தனக்குள்ளே அடைத்துக் கிடந்த ஏதோ மதகு படீரெனத் திறந்துகொண்டதுபோல இருந்தது. அவன் மாணவர்களுக்காக அணிந்திருந்த 'உப்புக்குச் சப்பாணி' வேடம் சிதறுவது போலிருந்தது. "பெண்களிடம் பலத்தைக் காட்டுவதை நான் தைரியமாக நினைக்கவில்லை" என்றான் அவன். திடீரென்று ஒரு சினிமாக் கதாநாயகன்போல தான் பேசியதை அவன் உணர்ந்தான். அந்தப் பெண்ணின் பார்வைக்கு இவ்வளவு சக்தியா?

"அச்சா! நீ உன் பலத்தையெல்லாம் எப்போதும் ஆண்களிடம் தான் காட்டுவியா?"

விஷமமான கண்சிமிட்டல்; சிரிப்பு. ராம் பிரஷாத் பேசவில்லை.

"எங்களிடம் காட்டுகிறாயா?"

"..."

"சொல்லு. ஏன் பேசாமலிருக்கிறாய்?"

அந்தப் பெண், அவள் விழிகள், பெண் விழிகள், பெண். பார்வை.

இறைஞ்சும், தூண்டும், பார்வை. பின்வாங்காதேயென்று உரிமையாகக் கண்டிக்கும் பார்வை. தன்னைக் கைவிட்டால், அலட்சியத்தையும் ஏளனத்தையும பொழிவேனென்று கவலைப்பட வைக்கும் அச்சுறுத்தும் பார்வை.

"நீங்கள் ஆண்கள் அல்லவே" என்றான் ராம் பிரஷாத்.

பளாரென்று அவன் கன்னத்தில் ஒரு அறை விழுந்தது. அறைந்தவன் ராம் பிரஷாத்தின் சட்டையைப் பிடித்துக்கொண்டான். "சொல்லு, மறுபடி சொல்லு?" ராம் பிரஷாத் தன்னை விடுவித்துக்கொள்ளும் முயற்சியில் ஒரு உதறு உதறினான். அவன் சற்று பலமாகவே உதறியதாலோ அல்லது அந்தச் சமயத்தில் திடீரென்று பிரேக் போடப்பட்டதாலோ மாணவன் தொபீரென்று கீழே விழுந்தான். ராம் பிரஷாத் ரத்தம் ருசி பார்த்த புலியானான். அவன்மேல் கை வைத்த வேறு சில மாணவர்களை மூர்க்கமாகத் தாக்கினான். அடி, குத்து, உதை. சினிமா ஹீரோவும் வில்லனின் கையாட்களும்.

கையைப் பிசைந்தவாறிருக்கும் ஹீரோயின். ஆனால் சினிமா ஹீரோவுக்கு டைரக்டர் துணையிருந்தது. ராம் பிரஷாத்துக்கு இல்லை. தபதபவென்று இன்னும் சில மாணவர்கள் அவன்மேல் வந்து விழுந்தார்கள். யாருடைய கையோ அவன் குரல்வளையைச் சுற்றி இறுகியது. "சொல்லு இப்ப சொல்லு?"

ராம் பிரஷாத் இம்மிகூட அசைய முடியாமல் அவர்கள் பிடியில் சிறைபட்டிருந்தான். குரல்வளையைச் சுற்றியிருந்த கை இறுகியது. அவர்களெல்லாம் காலையில் நல்ல ஊட்டமுள்ள உணவு சாப்பிட்டு விட்டு வந்திருக்க வேண்டும். வயிறு நிறைய. தினந்தோறும் இப்படிச் சாப்பிடுகிறவர்களாயிருக்க வேண்டும். ராம் பிரஷாத் சாப்பிடுவதெல்லாம் மீண்டும் மீண்டும் ரொட்டியும் ஸப்ஜியும்தான். இன்று அதுவும் சாப்பிடவில்லை. அவன் உடல் துவளத் தொடங்குவது போலிருந்தது.

இதோட சரி. இன்று கதை முடியப்போகிறது ...

பஸ்ஸின் வேகம் குறைவது போலிருந்தது. நல்லவேளை, கபூர் சந்த் பஸ்ஸை நிறுத்திவிட்டு வரப் போகிறான் ... ஐயோ இல்லை ... பஸ் வேகமாகப் போகிறது ...

தடதடவென்று யாரோ ஓடி வரும் சத்தம். "டேய்! விடுங்கடா!"

ராம் பிரஷாத்தைப் பிடித்திருந்த கைகள் சடாரென்று விலகின. அவன் தாபத்துடனும் தவிப்புடனும் துரித காலத்தில் சுவாசித்தவாறு தன்னை விடுவித்த ஆசாமியைப் பார்த்தான். இவனும் மாணவன்

தான். பஸ் பார்லிமெண்ட் வீதி வழியே சென்றுகொண்டிருந்தது. இவன் ஏறுவதற்காகத்தான் சற்று முன்பு கபூர் சந்த் வேகத்தைக் குறைத்திருக்க வேண்டும். இந்தச் சாலை முனையில்தான் இவன் எப்போதும் ஏறுவான், ஓடுகிற பஸ்ஸில்.

"பத்ரி!" என்று சர்ச்சைக்குக் காரணமாயிருந்த பெண் இவனைப் பார்த்ததும் மகிழ்ச்சியுடனும் ஆறுதலுடனும் கூவிவிட்டு ஏதோ பேசத் தொடங்கினாள். ஆனால் மற்ற மாணவர்களின் குரல்கள் அவள் குரலை முழுகடித்தன. "பத்ரி! இந்தக் கண்டக்டர் தாராவிடம் ஏதோ வம்பு பண்ணத் தொடங்கினான். அதனால்தான் ..."

பத்ரி ராம் பிரஷாத்தின் சட்டையைப் பிடித்தான்.

"நோ பத்ரி!" என்று அந்தப் பெண் – தாரா – அவசரமாகக் கூவியவாறு ஸீட்டைவிட்டு எழுந்து வந்து அவனைத் தடுத்தாள். "இவர்கள் பொய் சொல்கிறார்கள்."

நடந்ததையெல்லாம் அவள் அவனிடம் கூறத் தொடங்கினாள். யாரோ சில மாணவர்களை அவனுக்குச் சுட்டிக் காட்டினாள். பத்ரி அவர்களிடம் ஏதோ வாக்குவாதம் செய்யத் தொடங்கினான்.

ராம் பிரஷாத் மெல்ல பின்பக்கம் வந்து ஒரு காலி இடத்தில் உட்கார்ந்தான். நிறைய இடங்கள் காலியாயிருந்தன. எல்லா மாணவர்களும் பஸ்ஸின் முன்புறம்தான் குழுமியிருந்தார்கள். அவன் பார்த்துக்கொண்டிருக்கும் போதே அவர்களிடையே இரண்டு பிரிவுகள் ஏற்படுவது போலிருந்தது.

எல்லாம் ஒரு பெண்ணை முன்னிட்டு.

எப்படியாவது போகட்டும். எல்லாரும் அடித்துக்கொண்டு சாகட்டும். அவனை விட்டால் சரி.

ஹார்டிஞ்ச் பிரிட்ஜைத் தாண்டிச் செல்லத் தொடங்கியது பஸ். மீண்டும், ஷர்மிளா டாகுரின் போஸ்டர். ராம் பிரஷாத்துக்கு எரிச்சலும் சலிப்பும் ஏற்பட்டது. யுனிவர்ஸிடியை பஸ் அடையும் வரையில் மாணவர்களிடையே சச்சரவு ஓயவில்லை.

யுனிவர்ஸிடி பஸ் ஸ்டாண்ட் அருகே ஒரு டீக்கடை. ராம் பிரஷாத்தும் கபூர் சந்த்தும் வழக்கம்போல அங்கே போய் உட்கார்ந்தார்கள். "நான் இந்த வேலையை விட்டுடப்போறேன்" என்றான் ராம் பிரஷாத்.

"தினம் இப்படித்தான் சொல்றே" என்றான் கபூர் சந்த். ராம் பிரஷாத் பேசவில்லை. கபூர் சந்த் வயதானவன். எப்படியோ தன் வேலையை, சமூக அமைப்பில் தன் ஸ்தானத்தை, மௌனமாக ஒப்புக்கொள்ளும் ஒரு பக்குவமும் விவேகமும் அவனுக்கு வந்துவிட்டது. ராம் பிரஷாத்துக்கு இவை வரவில்லை. வரவேண்டு மென்று அவன் விரும்பவுமில்லை. கபூர் சந்த் போன்றவர்கள் கோழைகள். எளிதில் தம் விதிக்காகச் சமாதானம் செய்துகொண்டு

சரணாகதியடைவதன் மூலம் உயர் வர்க்கத்தினரின் ஆட்சியை வலுப்படுத்துகிறவர்கள், ஸ்திரப்படுத்துகிறவர்கள். அவன் இப்படி வாளாவிருக்கப் போவதில்லை. அவன் இவர்களுடன் மோதப் போகிறான். இவர்கள் ஆட்சியைக் கவிழ்க்கப் போகிறான்... அவனுடைய குழந்தைகள் இந்தத் தடியர்களை 'ஸாப்' என்று கூப்பிடப்போவதில்லை.

யுனிவர்ஸிடியிலிருந்து மோதிபாக். மீண்டும் மோதிபாக்கிலிருந்து சக்தி நகர்; சக்தி நகரிலிருந்து மோதிபாக்; மோதிபாக்கிலிருந்து சக்திநகர்...

ம்ணி ஒன்று. இதுதான் கடைசி டிரிப். ராம் பிரஷாத்துக்கு ஆறுதலாக இருந்தது. மிதப்பாகவும் இருந்தது. அவனுடைய கண்டக்டர் பிம்பம் ஏற்கெனவே கலையத் தொடங்கிவிட்டது. டிக்கெட்டுகள் வழங்கக்கூடத் தோன்றவில்லை. விசிலை ஊதத் தோன்றவில்லை. மணி அடிக்கத் தோன்றவில்லை ஸ்டாப்பிங்கு களைக் கூவி அறிவிக்கத் தோன்றவில்லை.

ரேடியோ ஸ்டேஷன் பஸ் ஸ்டாண்ட். ஒரு இளைஞன் பஸ்ஸைக் கைகாட்டி நிறுத்தி உள்ளே ஏறினான். உட்கார்ந்திருந்த பெண்களை ஜாடைமாடையாகப் பார்த்துக்கொண்டு காலியாக இருந்த ஒரு ஸீட்டில் போய் உட்கார்ந்தான்.

கையில் புத்தகங்கள் வைத்திருந்தான். மாணவனாகத்தான் இருக்க வேண்டும். ராம் பிரஷாத்துக்கு உடலெல்லாம் தினவெடுத்தது.

தனியே ஒரு மாணவன்.

அவன் எழுந்து, அந்த மாணவனருகில் சென்றான். "டிக்கெட்?"

அந்த மாணவன் காற்சட்டைப் பையில் குடையத் தொடங்கினான். மிகவும் இறுக்கமாகத் தைக்கப்பட்டிருந்ததால் அவன் எழுந்து நிற்க வேண்டியிருந்தது. "சீக்கிரம் சொல்லு பாய்!" என்றான் ராம் பிரஷாத் ஏக வசனத்தில்.

"எங்கே போகணும், அதையாவது சொல்லு."

"யுனிவர்ஸிடி."

ஆம், மாணவன்தான். மடிப்புக் கலையாத புத்தம் புதிய கம்பளி உடைகள். பளபளவென்று பாலிஷ் செய்யப்பட்ட ஷூ, லேட்டஸ்ட் கிராப், கிருதா. காலையில் வந்த மாணவி போன்றவர்களுடன் இவன் தினசரி பேசுவான், உலாவுவான்.

ராம் பிரஷாத்துக்கு ஆத்திரம் உண்டாயிற்று.

"எவ்வளவு நேரம் நிற்பது உன்னருகிலேயே?" என்று சத்தம் போட்டான்.

மாணவன் மொடமொடவென்ற புதிய பத்து ரூபாய் நோட்டொன்றை எடுத்து நீட்டினான். ராம் பிரஷாத்துக்கு ஆத்திரம் அதிகமாயிற்று. மாணவன்; பணக்காரன்; உயர்ந்த பதவிகளைப்

பெறும் வாய்ப்புகளைப் பெற்றவன். "சில்லறை இல்லை" என்றான் அவன் வெறுப்புடன், சில்லறை அவனிடம் இருந்தபோதிலும்.

"என்னிடமும் இல்லை."

"பின்னே ஏன் பஸ்ஸிலே ஏறினே?"

"..."

"வேறே பாக்கெட் எதிலேயாவது இருக்கும்... நிறைய பாக்கெட் இருக்கே, பாண்ட்டுலே."

ராம் பிரஷாத் இந்த ஹாஸ்யத்துக்கு மற்ற பிரயாணிகளிடமிருந்து ஆதரவு கிடைக்குமென்று எதிர்பார்த்தான். (மாணவர்கள், நவ நாகரிகமாக மட்டும் உடுத்துக்கொண்டு, பொறுப்போ பண்பாடோ இல்லாத மாணவர்கள்!) ஆனால் ஆதரவு அவனுக்குக் கிடைக்க வில்லை; அந்த மாணவனுக்குத்தான் கிடைத்தது.

"சில்லறையிருந்தால் அவன் கொடுத்திருப்பானே அப்பா. சும்மா ஏன் தொந்தரவு செய்கிறாய்? நீங்கள் ஏன் நிறையச் சில்லறை எடுத்துக்கொண்டு வரக்கூடாது?"

"சர்க்காரைக் கேளுங்கள், ஸாப்."

"மண்ணாங்கட்டி, சில்லறையெல்லாம் இந்தப் பசங்கள் கறுப்பு மார்க்கெட்டில் விற்கிறான்கள் ஸார். இது ஒரு ராக்கெட்" என்றார் இன்றொருவர். சம்பாஷணை சென்ற திசை ராம் பிரஷாத்துக்குச் சாதகமாயில்லை... கண்டக்டர்கள் எப்படி திமிராக நடந்துகொள் கிறார்கள். எப்படியெல்லாம் பாஸஞ்சர்களை அவமதிக்கிறார்கள், எப்படியும் இவர்களுக்குப் பாடம் கற்பிப்பது மிகத் தேவையானது.

"சில்லறை இருந்தும் இல்லையென்பார்கள் ஸார், இவர்கள். ஸ்டூடண்ட்ஸ் பத்தி உங்களுக்குத் தெரியாது ஸார். சும்மாவாவது வம்பு பண்ணுவார்கள்" என்று அவன் ஏதோ சொல்லிப் பார்த்தான்.

ஊஹூம்; பிரயோசனமில்லை.

"இதெல்லாம் என்ன வீண் பேச்சு. இந்தா நான் பத்து ரூபாய்க்குச் சில்லறை தருகிறேன்" என்று ஒருவர் முன் வந்தார். ராம் பிரஷாத் அந்த மாணவனிடம் பத்து ரூபாயை வாங்கிக்கொண்டு அவனுக்குச் சில்லறை கொடுப்பதைத் தவிர வேறு வழியிருக்கவில்லை.

யுனிவர்ஸிடி.

கையில் புத்தகங்களுடன் இறங்கத் தொடங்கிய அந்த மாணவனை ராம்பிரஷாத் வெறுப்புடன் முறைத்துப் பார்த்தான். அவன் பாதி இறங்கிக்கொண்டிருக்கும்போதே மணியடித்து பஸ்ஸைக் கிளப்பினான். தடுமாறியவாறு அவன் கீழே குதித்து, விழாமல் சமாளித்துக்கொண்டதை – அந்தத் திண்டாட்டத்தை – திருப்தியுடன் கவனித்தான்.

செல்லப்பா பஸ் செல்வதைப் பார்த்தவாறு ஒரு கணம் நின்றுவிட்டு, லைப்ரரியை நோக்கி நடக்கத் தொடங்கினான். கையில் புத்தகங்கள் கனத்தன. நல்லவேளை, விழவில்லை. இறங்கிய பிறகு மணியடித்தால் என்ன, ராஸ்கலுக்கு!

கண்டக்டர்களுக்கும் அவனுக்கும் ஏனோ ஒத்துப் போவதேயில்லை.

# 8

செல்லப்பா பேப்பர் வெயிட்டைக் கையில் வைத்து உருட்டியவாறு இருந்தான். ஜில்லென்றிருந்த அந்த அஃறிணைப் பொருளின் ஸ்பரிசம் – கையாடல் – அவனுக்கு ஏதோ ஒரு மர்மமான வகையில் ஆறுதலளிப்பதாக இருந்தது. அதனுடைய எடை காரணமாயிருக்கலாம்; வடிவம் காரணமாயிருக்கலாம். அவனுடைய உள் மனம் யாசித்த திண்மை, வளைவு, வழவழப்பு.

படபடவென்று டைப்ரைட்டரின் அடிப்பாகத்தைத் தாக்கிக் கொண்டிருந்த – அனாயாசமாகவும் நிர்த்தாட்சண்யமாகவும் வெறி வந்ததைப்போல எழும்பித் தாழ்ந்து எழும்பிக்கொண்டிருந்த – ரமணியின் விரல்கள் திடீரென்று நின்று நிசப்தத்தை உருவாக்கின. பக்கம் முடிந்துவிட்டிருந்தது; ரமணி காகிதங்களை டைப்ரைட்டரிலிருந்து உருவியெடுத்தான். 'கிர் கிர்' என்று மெஷின் முனகியது, இன்னும், இன்னும் என்று கேட்பதுபோல. ரமணி விஸிலடித்துக் கொண்டே கார்பன்களை அகற்றியவாறு செல்லப்பாவைப் பார்த்தான். "ஏன் என்னவோபோல இருக்கே?" என்றான்.

"ப்ச்" என்றான் செல்லப்பா.

"யுனிவர்ஸிடிக்குப் போன காரியம் ஆகலையா?"

செல்லப்பா ரமணியை முறைத்துப் பார்த்தான். "எதுக்காகப் போயிருந்தேன்?"

ரமணி தோள்களைக் குலுக்கிக்கொண்டு பேசாமலிருந்தான்.

"நான் லைப்ரரிக்குப் போயிருந்தேன்" என்றான் செல்லப்பா.

"நான் இப்ப ஒண்ணும் சொல்லலையே!"

"இந்த பஸ்ஸிலே அவ்வளவு தூரம் போய் வரதுக்குள்ளே – அப்பா! பிராணன் போயிடறது."

"ஊங்காத்திலேதான் கார் இருக்கே?"

"இருந்தா? அதை நானே எப்பவும் எடுத்துண்டு போக முடியுமா என்ன."

"ஒரு நா நீ காரை எடுத்துண்டு யுனிவர்ஸிடிக்குப் போ – அப்புறம் பாரு."

"என்ன ஆகும்?"

"சாந்தா என்ன, அவளைவிடப் பெரிய அழகிகளெல்லாம் போட்டி போட்டுண்டு . . ."

"ஷட் அப்."

ரமணி உதட்டைப் பிதுக்கிவிட்டு மறுபடி விஸில் அடிக்கத் தொடங்கினான்.

"நீ அவள் பெயரை இனிமேல் சொல்ல வேண்டாம்" என்றான் செல்லப்பா.

"என் சித்தப்பா பெண் பேரும் சாந்தாதான்."

"ஹி ஹி ஹி."

"ஏன் இவ்வளவு கோவம் இன்னிக்கு, கோந்தைக்கு? பால் குடிக்கலையா?"

"நீ இப்ப நான்சென்ஸை நிறுத்தப்போறியா, இல்லை நான் எழுந்து போகட்டுமா?"

"அவசரமானால் போ. மணி அஞ்சு இருபத்தஞ்சு ஆறது. ஒரு அஞ்சு நிமிஷம் இருந்தாயானால் சேர்ந்து போகலாம்."

செல்லப்பா எழுநதிருக்காமல் உட்கார்ந்திருந்தான்.

"போகலியா?" என்றான் ரமணி.

"போயிடட்டுமா?" என்று செல்லப்பா எழுந்தான்.

"கோச்சுக்காதேடா, கோச்சுக்காதேடா" என்று ரமணி ஸீட்டிலிருந்து எழுந்து செல்லப்பாவருகில் வந்து அவன் தோள் களைப்பற்றி உட்கார வைத்தான். "இந்த லெட்டரை எங்க ஆபீஸர் கிட்டே கொடுத்துவிட்டு வந்துடறேன். ஒன் மினிட்" என்று அறைக் கோடியிலிருந்த தள்ளு கதவை நோக்கி நடந்து, கதவைத் தள்ளிக் கொண்டு மறுபுறம் மறைந்தான்.

செல்லப்பா பேப்பர் வெயிட்டை உருட்டுவதை நிறுத்தி ஒரு குண்டூசியை எடுத்துக்கொண்டு மேஜைமேல் குத்திக் குத்தி எடுக்கத் தொடங்கினான். குண்டூசியின் கூரான முனை மேஜையின் மிருதுவான மேற்பரப்பினுள் நுழைந்து மீளும்போது அவனுக்கு ஒரு சுகமான உணர்வு ஏற்பட்டது.

அலுவலகம் முடியும் நேரமாகிவிட்டதால் சுற்றிலும் உட்கார்ந்திருந்தவர்கள் கடையைக் கட்டத் தொடங்கியிருந்தார்கள். எங்கு அலமாரிக் கதவுகள், மேஜை இழுப்பறைகள், திறந்து மூடப்படும்

சப்தமும் நாற்காலிக் கால்கள் தரையில் உராய்ந்து கிரீச்சிடும் ஓசைகளும் தொடர்ந்து கேட்டுக்கொண்டிருந்தன. பலர் பாத்ரூமுக்குச் சென்று வந்தார்கள். இவர்கள் செல்லப்பாவைத் தாண்டிச் செல்லும்போது சோப்பின் இனிய நறுமணம் அவன் நாசியை நிறைத்தது. அந்த அலுவலகத்தின் பாத்ரூமிலிருந்த சோப்லோஷனின் மணம் அவனுக்குப் பிரியமான ஒன்று. இதற்காகவே அவன் சில சமயங்களில் அங்கே வந்திருக்கிறான்.

ஆனால் முக்கியமாக அந்த அலுவலகம் கனாட் பிளேஸில் இருந்ததால்தான் அவன் அங்கு அடிக்கடி வந்து போய்க்கொண்டிருக்கிறானென்று தோன்றியது. இதே அலுவலகம் சாந்தினி சௌக்கிலேயோ கரோல் பாகிலேயோ இருந்திருந்தால் அவன் ரமணியை அடிக்கடி பார்க்கச் செல்வது சந்தேகந்தான். கனாட் பிளேஸில் அவனுக்கு ஒரு தளம் தேவைப்பட்டது. இந்தத் தேவையை ரமணியின் அலுவலகம் பூர்த்தி செய்தது . . .

அது ஒரு தினசரிப் பத்திரிகையின் அலுவலகம். ரமணி அங்கே அக்கவுண்ட்ஸ் பிரிவில் வேலை பார்த்து வந்தான். வவுச்சர்கள் தயார் செய்யும் வேலை அவனுடையதுதான். எனவே அந்தத் தினசரியிலிருந்த ரிப்போர்ட்டர்கள், ஸப் எடிட்டர்கள், வெளியிலிருந்து அந்தத் தினசரிக்கு 'மாட்டர்' அனுப்புபவர்கள் இவர்களெல்லாம் ரமணியின் மேஜையை நோக்கிப் படையெடுத்து வந்தவாறிருப்பார்கள் – தங்களுடைய சம்பளம், சன்மானம் முதலியவற்றுக்கான செக் பற்றி விசாரிப்பதற்காக.

"மிஸ்டர் ரமணி எங்கே, வீட்டுக்குப் போய்விட்டாரா?"

செல்லப்பா திடுக்கிட்டவனாய் நிமிர்ந்தான். எடிட்டோரியல் பிரிவில் வேலை பார்த்து வந்த மிஸ் ரமா அவனருகில், அவன் தொடக்கூடிய தூரத்தில் நின்றிருந்தாள். அவனுக்குப் பதட்டத்தில் சரியாகப் பேச்சுக்கூட வரவில்லை. முகம் குப்பென்று சிவந்துவிட்டது. "இல்லை . . . ஆபீஸரிடம் போனான்" என்று அந்தத் திசையில் சுட்டிக் காட்டினான். "ஓ! தாங்க் யூ" என்று அவள் சரக் சரக்கென்று நடந்து சென்றாள். தாங்க் யூ சொல்லும்போது அவள் இலேசாகப் புன்னகை செய்திருந்தாள். செல்லப்பாவுக்கு அவனுடைய அன்றைய ஏமாற்றங்கள், சலிப்புகள், அவமானங்கள் எல்லாம் மாயமாக மறைந்து போனது போலிருந்தது. சாந்தினி சௌக்கில் ரமணியின் அலுவலகம் இருந்தால், தான் அங்கு போகாமலிருப்போமாவென்று இப்போது அவனால் நிச்சயமாகச் சொல்ல முடியவில்லை.

சிறிது நேரங்கழித்து ரமணியும் மிஸ் ரமாவும் பேசியவாறு ரமணியின் ஸீட்டருகே வந்தார்கள். 'ஸோ, நாளைக்கு நிச்சயமாக . . . ஓகே?' என்றாள் மிஸ் ரமா.

"ஷ்யூர்."

"ரொம்ப ட்ரபிள் கொடுக்கிறேன் நான்."

"பரவாயில்லை; இன்னும் நிறையக் கொடுத்துண்டேயிருக்கலாம்."

மிஸ் ரமா பக்கென்று சிரித்தாள். "ஓ, நோ!" என்றாள் "ஓ.கே, தென். ஸீ யூ. உன் ஃபிராண்டு காத்திண்டிருக்கார்" என்று கிளம்பினாள்.

ரமணி அவசரமாக செல்லப்பாவை அவளுக்கு அறிமுகம் செய்து வைத்தான். "ப்ளீஸ்ட் டு மீட் யூ!" என்று அவள் தலையைச் சாய்த்துப் புன்னகை செய்தாள். "ஸ்டூடண்டா?" என்றாள்.

"இல்லை . . . ஆமாம்" என்றான் செல்லப்பா.

"எம். ஏ. இங்கிலீஷ் படிக்கிறான்" என்றான் ரமணி. "பத்திரிகை களிலே எழுதவும் ட்ரை பண்ணிண்டிருக்கான்."

"தட்ஸ் வெரி நைஸ்" என்றாள் மிஸ் ரமா. "என்ன எழுதுவீங்க . . . கதைகளா?"

"கதைகள், கவிதைகள், கட்டுரைகள் . . . என்னல்லாமோ எழுத ஆரம்பிக்கிறேன். முடிக்கிறதுதான் பிராப்ளமாயிருக்கு."

"மனசைத் தளரவிடாமல் முயற்சி பண்ணிண்டேயிருங்க" என்றாள் மிஸ் ரமா, ஒரு தமக்கையின் பரிவுடன். "எழுத எழுதத்தான் வரும் . . . எங்கே இப்ப, பிக்சர் புரோகிராமா?" என்றாள் ரமணியைப் பார்த்து.

"நீயும் வரியா?" என்றான் ரமணி.

"மை குட்நெஸ்! 'ஸப்பிங்க்'குக்காக என் மேஜை மேலே 'காபி' குவிஞ்சுகிடக்கு . . . ஐ ஆம் வெரி பிஸி . . . இன்னொரு சமயம் பார்ப்போம் . . . ஓ. கே . . . ஓ. கே." என்று மிஸ் ரமா இருவரிடமும் விடைபெற்று மறுபடி சரக்சரக்கென்று நடந்து சென்றாள். செல்லப்பா அவள் நடந்து செல்வதைப் பார்த்தவாறு உட்கார்ந்திருந்தான்.

'ஹெ ஹ் ஹெம்' என்று ரமணி தொண்டையைக் கனைத்தான். "கிளம்பலாமா?" என்றான்.

"உம்."

இருவரும் ஆபீஸுக்கு வெளியே வந்தபோது மாலை வெளிச்சம் மங்கத் தொடங்கியிருந்தது. இன்னும் சற்றுநேரத்தில் இருட்டிவிடும். ஆங்காங்கே கடை முகப்புகளில் நியான் விளக்குகள் எரியத் தொடங்கியிருந்தன. இருவரும் 'ஜன்பத்' கிராஸிங் அருகே ஸிக்னல் மாறுவதற்காகக் காத்து நின்றார்கள். ரமணி காற்சட்டைப் பையிலிருந்து சீப்பொன்றை எடுத்து தலைமயிரினூடே இப்படியும் அப்படியுமாகச் சில இழுப்புகள் இழுத்துவிட்டு மீண்டும் பாக்கெட்டில் வைத்துக்கொண்டான். 'டை' முடிச்சை சரி செய்து கொண்டான். கோட்டின் தோள்புறங்களில் கைக்குட்டையால் தட்டிவிட்டுக்கொண்டான். செல்லப்பா வண்டிகளையும் வர்ணங் களையும் பார்த்தவாறு நின்றிருந்தான். பெண்கள் அணிந்து சென்ற உடைகளின் வர்ணங்கள். பெண்கள், பெண்கள். அவனுக்கு மனது மிக இலேசாகவும் உற்சாகமாகவும் இருந்தது.

பாதசாரிகளுக்காகப் பச்சை எரிந்தது. இருவரும் சாலையைக் கடந்தார்கள். "ரொம்ப நல்லவள்" என்றான் செல்லப்பா, அவர்கள் மறுபுறத்தை அடைந்ததும்.

"யாரு, ரமாவா?"

"ஆமாம்."

"இவ்வளவு நேரம் அவளைப்பத்தியா நினைச்சிண்டிருந்தே?"

செல்லப்பா பேசாமலிருந்தான்.

"அவ கதையொண்ணு டைப் அடிச்சுக் கொடுக்கணுமாம் ... அதுக்காக என்னை போரடிக்கிறா" என்றான் ரமணி. "டைப் அடிச்சுக் கொடுத்தா என்னை ஒரு பிக்சருக்கு அழைச்சுண்டு போவாளாம்."

"ஐ ஸீ!" என்றான் செல்லப்பா. தனக்கும் ரமாவுக்குமிடையே சேர்ந்து படம் போகுமளவு நட்பு நிலவுகிறதென்பதைத் தெரிவிக்கத் தான் இதை அவன் சொல்கிறானென்பது செல்லப்பாவுக்குப் புரிந்தது. அவனுக்கு எரிச்சலாக இருந்தது. சினிமாப் பத்திரிகைகளைத் தவிர வேறு படிக்காதவன்; நாலு இங்கிலீஷ் வாக்கியம் தப்பில்லாமல் சுயமாக எழுத முடியாதவன். இவனுக்கு யோகம் அடிக்கிறது!

"நீ ஏன் நான் எம். ஏ. படிக்கிறேன்னு அவளிடம் பொய் சொன்னே?"

"நீதான் அடுத்த வருஷம் படிக்கப் போறியே."

"உனக்குக் கல்யாணம் ஆயாச்சுன்னு நான் எல்லாரிடம் சொல்லட்டுமா? அடுத்த வருஷம் பண்ணிக்கப்போறியே!"

"எனக்குக் கல்யாணமே அவசியமில்லை" என்று ரமணி கண் சிமிட்டினான். செல்லப்பாவுக்கு மறுபடி எரிச்சலாக இருந்தது; மௌனமானான்.

"காப்பி சாப்பிடலாமா?" என்று ரமணி செல்லப்பாவின் தோள் மேல் கை வைத்தான். செல்லப்பாவுக்கு உடல் இலேசாகச் சிலிர்த்தது. இதமான, பாதுகாப்பான உணர்வு. அதே சமயத்தில் ரமணியால் இது அடையாளம் கண்டுகொள்ளப்படக்கூடாதென்று வீறாப்பு. "எங்கே?" என்றான்.

"காஃபி ஹவுஸ்?"

"போர்."

"வேறே எங்கே போறது?"

"காட்டேஜ் இண்டஸ்ட்ரீஸ் எம்போரியம் பக்கத்திலே இருக்கே..."

"அங்கே க்ஷவரம் பண்ணிடுவானே!"

"பரவாயில்லை, போகலாம் வா" என்றான் செல்லப்பா. அவன் குரலில் அபூர்வமான முடிவொன்றை எடுத்துவிட்ட திருப்தியும் பெருமையும் தொனித்தது. பணம் கொடுக்கப்போவது அவன்தான்

என்பதை ரமணிக்கு நாசூக்காக உணர்த்தவும் இது உதவியது. பணம், புத்தகப் படிப்பு இவையிரண்டும்தான் ரமணிக்கெதிராக அவனுடைய ஆயுதங்கள்.

இருவரும் 'ஜன்பத்'தில் நடக்கத் தொடங்கினார்கள். ஆங்காங்கே புத்தகக் கடைகளில் செல்லப்பா நின்று புத்தகங்களைப் புரட்டத் தொடங்கினான். ரமணி பொறுமையிழந்து செல்லப்பாவைக் கிளம்பும்படி அவசரப்படுத்தினான். ரமணிக்கு எரிச்சல் மூட்டுவதற் கென்றே செல்லப்பா அப்படி நின்றிருக்கலாம்.

"ரமாகூட நடந்து வந்தாலும் இப்படித்தான்" என்றான் ரமணி. "ஏதாவது ஒரு புத்தகக் கடையிலே நுழைஞ்சுடுவாள். அப்புறம் வெளியே வர ஒரு மணி நேரமாகும்."

செல்லப்பா அவன் கூறியதைக் கவனிக்காதது போலப் பாசாங்கு செய்தான். ஆனால் அதன் பிறகு அவன் புத்தகக்கடை எதிலும் நிற்கவில்லை. ரமணிக்கே தான் அப்படிச் சொன்னது மிகவும் நேர்மையற்ற எதிரடியாகப்பட்டிருக்க வேண்டும். இப்போது செல்லப்பாவுக்கு உற்சாகமூட்ட அவன் விரும்பினான்.

"அதோ நீலச்சட்டை போட்டுண்டு ஒருத்தி வரா பாரு" என்றான் ரமணி.

"நல்ல பாடி."

"டெஸ்ட் பண்ணிப் பாக்கிறேன்" என்ற ரமணி எங்கேயோ பார்த்துக் கொண்டு போகிறவன் போல நடந்துசென்று அவள்மேல் மோதினான். "ஓ, ஐ ஆம் ஸாரி" என்றான். அவள் எதுவும் பேசாமல் ஏளனமும் அலட்சியமும் கலந்த ஒரு புன்னகை புரிந்துவிட்டு மேலே நடந்து சென்றாள். "ஒரு நாள் எவளாவது உன்னைச் செருப்பாலே அடிக்கப் போறா" என்றான் செல்லப்பா.

"போடா முட்டாள்! இப்படி இடிச்சால் ஒரு மஜா அவாளுக்கு . . . உனக்குத் தெரியாது . . . இடிபடணும்னுதான் கூட்டத்துக்கு நடுவாலே நடந்து போகிறா . . . பஸ்ஸிலேயே வெறுமனேயாவது போயிட்டு வருவா சில பேர் . . . வேண்டியது வீட்டிலே கிடைக்கலேன்னா . . ."

ரமணி பேசிக் கொண்டிருக்கும்போதே நடுநடுவில் நிறுத்தி எதிரே வருகிற பெண்கள்மேல் உரசியவாறும் மோதியவாறும் தான் இருந்தான். பெண்களுடைய மனோதத்துவத்தை தலைகீழ்ப் பாடமாக அறிந்து வைத்திருந்தவன் போல, அவன் நடந்து கொண்டான். செல்லப்பாவுக்குத் தர்மசங்கடமாக இருந்தது. அதே சமயத்தில் ரமணியின் செய்கை அவனுக்கு ஒரு ரகசியமான மகிழ்ச்சியையும் அளித்தது.

திடீரென்று ரமணி ஒரு புடவைக் கடைக்குள் நுழைந்தான். அங்கே வந்திருந்த பெண்மணிகளுக்காகப் பிரித்துப் போடப் பட்டிருந்த

சேலைகளை அவனும் நுட்பமாகப் பரிசோதித்தான், விலைகளை விசாரித்தான். "இதுமாதிரி இருக்கிறதா?" என்று அங்கு நின்றிருந்த ஒரு பெண்மணியின் புடவையைச் சுட்டிக்காட்டி, கடைக்காரனிடம் விசாரித்தான். "இல்லை ஸாப்" என்றான் கடைக்காரன்

"எஸ்க்யூஸ் மீ... இது எங்கே வாங்கினீர்கள்?" என்று ரமணி மிகவும் பணிவான குரலில் அந்தப் பெண்மணியிடமே கேட்டான்.

"கல்கத்தாவில்" என்றாள் அவள்.

"அக்காவுக்கு இந்தக் கலர் ரொம்ப நன்றாயிருக்குமில்லை?" என்று ரமணி செல்லப்பாவைப் பாத்துக் கூறிவிட்டு, "எங்க அக்கா அமெரிக்காவிலே இருக்கிறாள். அவளுக்கு நாங்கள் ஒரு புடவை வாங்கி அனுப்ப வேண்டும்" என்று அந்தப் பெண்மணியிடம் விளக்கினான். "ஓ!" என்றாள் அவள்.

"போகலாம் வா... இங்கேயெல்லாம் ரொம்பச் சாதாரண மாயிருக்கு" என்று ரமணி ஒரு பெரிய பிரபுவின் தோரணையில் செல்லப்பாவிடம் அலட்சியமாக இந்தியில் கூறினான். இருவரும் வெளியே வந்தார்கள். கடைக்காரன் ஏதோ முணுமுணுப்பது கேட்டது. ரமணி விழுந்து விழுந்து சிரித்தவாறு செல்லப்பாவின் முதுகில் ஓங்கித் தட்டினான். "எப்படி?" என்றான்.

"நீ சினிமாவிலே ஆக்ட் பண்ணலாம்" என்றான் செல்லப்பா.

"அதுதான் நாம் படம் எடுக்கப் போறோமே... நான்தான் அதிலே ஹீரோ."

"ஹீரோயின் யாரு?"

"ஏன், நீதான்."

செல்லப்பா ரமணியைக் குத்தப் போனான். ரமணி ஒரு நெளிநெளிந்து விலகி ஓடி, அந்த வேகத்தில் எதிரிலிருந்து வந்து கொண்டிருந்த ஒரு பெண்மேல் மோதி மன்னிப்புக் கேட்டுக் கொண்டான். அவள் வருவதை அவன் முன்பே பார்த்திருக்க வேண்டும். "மெத்துனு இருக்காடா" என்று அவன் செல்லப்பாவிடம் மோதலை வர்ணித்தான்.

காட்டேஜ் இண்டஸ்ட்ரீஸ் எம்போரியம் வந்துவிட்டது. உள்ளேயிருந்து மினி ஸ்கர்ட், ஹாட் பாண்ட்ஸ் அணிந்த சில வெளிநாட்டு யுவதிகள் வெளியே வந்தார்கள். அவர்களைப் பார்ப்பதற்காக இருவரும் ஒரு நிமிஷம் நின்றார்கள். வாட்ட சாட்டமான உடலமைப்பு; செல்லப்பாவுக்கு ராஷ்டிரபதி பவனில் பராமரிக்கப்படும் ஜனாதிபதியின் விசேஷக் குதிரைகள்தான் ஞாபகத்துக்கு வந்தன. "இவா மேலே மோதினாயானால் கீழே விழுந்துடுவே" என்றான்.

"பார்க்கலாமா?" என்று ரமணி கிளம்பினான். செல்லப்பா அவன் கையைப் பிடித்துத் தடுத்தான். "படுத்தாமல் வரயா தயவு

செய்து?" என்று அவனைப் பிடித்து இழுத்துக்கொண்டு அருகிலிருந்த திறந்தவெளி ரெஸ்டாரண்டுக்குள் நுழைந்தான்.

ஆங்காங்கே சில பெண்கள் ஆண் துணையுடனோ தனிக் குழுக்களாகவோ அமர்ந்திருந்தார்கள். தனியாகப் பெண்கள் இருந்த ஒரு மேஜைக்குப் பக்கத்து மேஜையில் அவர்கள் உட்காரப் போனார்கள். பெண்களுக்கு நேரெதிராக இருந்த நாற்காலிக்காக அவர்களிடையே போட்டி நடந்தது. ரமணிதான் இதில் வென்றான். செல்லப்பா அருகிலிருந்த நாற்காலியில் உட்கார்ந்தான். அங்கிருந்த படி அந்தப் பெண்களைப் பார்க்க வேண்டுமானால் பக்கவாட்டில் தலையைத் திருப்பியாக வேண்டும்.

"அந்தச் சிவப்பு லுங்கி நன்னாயிருக்கா" என்றான் ரமணி.

"பஃபூன் மாதிரி இருக்கா" என்றான் செல்லப்பா. "அந்த மூக்குக் கண்ணாடிதான் நன்னாயிருக்கா."

"வாந்தியெடுக்க வரது, பார்த்தால்."

"எடு."

வெயிட்டர் வந்து மேஜையைத் துடைத்துவிட்டு நின்றான். முதலில் குடிக்கத் தண்ணீர் வேண்டுமென்று ரமணி அவனை அனுப்பி வைத்தான். மெனு கார்டைப் பிரித்துப் படிக்கத் தொடங்கினான். "உனக்கு என்ன?" என்றான் செல்லப்பாவிடம்.

"எனக்கு அந்த மெனு கார்டு வேணும், நீ படிச்சப்புறம்."

"நான் எது வச்சிண்டிருந்தாலும் உனக்கும் வேணுமா?" என்று ஒரு அப்பா குழந்தையைக் கண்டிக்கும் பாவனையில் ரமணி குரலை ஏற்றி இறக்கிப் பேசினான்.

"உம்..." என்று செல்லப்பா சிணுங்கினான்.

"இந்தா, இந்தா. தொலை" என்று ரமணி மெனு கார்டைச் செல்லப்பாவிடம் கொடுத்தான். "கிழிக்காமல் சமத்தா வச்சுக்கணும்."

"கிழிக்கிறேனே, அப்பா."

"அடி கொடுப்பேன், கழுதை!"

"நானும் உன்னை அடிப்பேன்."

"சமர்த்து வழியறது."

"எங்கேயப்பா வழியறது."

"காது பக்கத்திலே."

செல்லப்பா ஒரு கையை மெனு கார்டிலிருந்து நீக்கிக் காதருகே கொண்டு போய்த் தடவிப் பார்த்தான். ரமணி சரக்கென்று செல்லப்பா ஒற்றைக் கையால் பற்றியிருந்த மெனு கார்டைப் பிடுங்கினான். ஆனால் செல்லப்பாவின் பிடி இறுக்கமாக இருந்தது. கார்டு கிழிந்து ஒரு பகுதி ரமணி கையிலும் ஒரு பகுதி செல்லப்பா கையிலும் மிஞ்சியது. வெயிட்டர் வருவதைப் பார்த்து இருவரும் அவசரமாகக்

கிழிந்த துண்டுகளை மேசைக்கடியில் மறைத்துக் கொண்டார்கள்.

வெயிட்டர் வந்து தண்ணீர்த் தம்ளர்களை டக், டக்கென்று மேஜைமேல் வைத்தான். ரமணி அவசரமாக ஆம்லெட்டும் உருளைக்கிழங்கு வறுவலும் காஃபியும் ஆர்டர் செய்தான். குளிர்காலம் ஆனதால் நிறையப் பசித்தது; நிறையச் சாப்பிட முடிந்தது. வெயிட்டர் சென்றதும் மெனு கார்டு துண்டுகளை மடித்து கோட்டுப் பாக்கெட்டினுள் வைத்துக்கொண்டார்கள்.

"நாம ஹோட்டல் தொடங்கினால் மெனு கார்டை பிளாஸ்டிக் ஷீட்லே அச்சடிக்கலாம்" என்றான் ரமணி.

"ஊஹூம் ... ஒவ்வொரு மேஜை மேலேயும் பாக்கெட் டெலிவிஷன் ஸெட் மாதிரி இருக்கும். வெஜிடேரியன், நான் – வெஜிடேரியன், டிபன், சாப்பாடு, ஹாட் ட்ரிங்க்ஸ், கூல்ட்ரிங்ஸ்னு தனித்தனி ஸ்விச் ... அந்தந்த ஸ்விச்சை ஆன்பண்ணினா, அந்தந்த ஐட்டம்ஸ் பளிச்னு ஸ்கிரீன்லே தெரியும்."

"ஐடியா!"

செல்லப்பாவுக்குப் பெருமையாக இருந்தது. ஒரு சிகரெட் குடித்தால் தேவலை போலிருந்தது. "சிகரெட் வாங்கிண்டு வரேன்" என்று எழுந்து சென்றான்.

# 9

செல்லப்பா சிகரெட் வாங்கி வந்த பிறகு, அவர்கள் திறக்கப்போகும் ஹோட்டலின் வேறு பல நூதனமான அம்சங்களைப் பற்றி அவர்களிடையே கருத்துப் பரிமாற்றம் நடந்தது. ஆசியாவிலேயே மிகச் சிறந்த ஹோட்டலாக அது அமையுமென்பதில் அவர்களுக்குச் சிறிதும் சந்தேகமிருக்கவில்லை.

ஆம்லெட்.

அவர்களுடைய ஹோட்டலில் அழகிய பெண்கள்தான் 'பரிசாரிகை'களாக இருப்பார்கள். இசைக் கருவிகளை ஒலித்தவாறு வேறு சில பெண்கள் மேஜைகளினூடே இங்குமங்குமாக உலவியவாறு இருப்பார்கள். வந்து உட்காருகிறவர்கள் மீதெல்லாம் ஒரு பிரத்யேகமான ஸெண்ட் தெளிக்கப்படும். பிறகு அவர்கள் வெளியில் நடக்கும்போது, அந்த ஸெண்ட் மணத்திலிருந்தே அவர்கள் 'ட்ரீம்லாண்ட்' (அதுதான் ஹோட்டலின் பெயர்) டுக்குச் சென்று வந்திருக்கிறார்களென்று எல்லாருக்கும் தெரியும். இது ஒரு நல்ல பப்ளிஸிடியாகவும் இருக்கும்.

வறுவல்.

அவர்களுடைய ஹோட்டலில் எண்ணெய்ப் பண்டங்கள், சூடாக இருப்பவை முதலியவற்றைச் சாப்பிடுவதற்காக மெல்லிய பிளாஸ்டிக்கில் செய்யப்பட்ட கையுறைகள் இருக்கும். ஸ்பூன் உபயோகிக்க விரும்பாதவர்கள் இந்தக் கையுறைகளைப் பயன்படுத்தி விட்டு 'நாப்கின்'களைப் போல இவற்றையும் எறிந்துவிடலாம். யாருக்காவது புரையேறிக்கொண்டால் அருகிலிருக்கும் பரிசாரிகை யாராவது உடனே வந்து கையால் மார்பில் தேய்ப்பாள்; தலையில் தட்டுவாள். எதிரே உட்கார்ந்து சாப்பிடுகிறவருடைய சாப்பிடும் முறை, ஓசைகள், முதலியவற்றைக் காண விரும்பாதவர்களுக்காக

விசேஷ காதுப் பஞ்சு, கண்பட்டை முதலியவை வழங்கப்படும்.

காபி.

காபியை மெல்ல மெல்ல உறிஞ்சிக் கொண்டு வெகு நேரம் பேசிக்கொண்டு உட்கார்ந்திருப்பவர்களுக்காக 'ஸ்லோ காபி' என்று ஒன்று. இதை ஆர்டர் செய்துவிட்டால், 'பரிசாரிகை'கள் ஒவ்வொரு வாய்க் காபியாக பத்து அல்லது பதினைந்து நிமிட இடைவெளியில் கோப்பையில் சூடாக ஊற்றிச் சென்றவாறு இருப்பார்கள். முடிதிருத்தும் அகங்களில் இருப்பதுபோல வாயில் பீச்சாங்குழல் பொருத்தப்பட்ட பாட்டில்களில் சர்க்கரைத் தண்ணீர் – ஸுகர் ஸொல்யூஷன் – இருக்கும். அதை அப்படியே கோப்பைக்குள் 'ஸ்ப்ரே' செய்துகொண்டால் போதும். சர்க்கரை கலக்கும் தொல்லையே கிடையாது.

பில்.

இருவரும் ரெஸ்டாரண்டுக்கு வெளியே வந்து பெரும் ஹோட்டல் முதலாளிகள் தோரணையில் சிகரெட்டை செருக்காக வாயில் வைத்து ஊறிஞ்சிப் புகையை ஊதியவாறு, சாலையில் நடந்தார்கள். ஆங்காங்கே எதிர்ப்பட்ட சில பெண்களைப் பார்க்கும்போது, தங்களுடைய ஹோட்டலில் பரிசாரிகையாக வைத்திருக்க ஏற்றவளென்று பேசிக்கொண்டார்கள்.

கனாட் பிளேஸ் வட்டத்தைச் சுற்றி நடக்கத் தொடங்கினார்கள். நன்றாக இருட்டிவிட்டது. கடைகளுக்கெதிரில் வரிசையாக கார்கள் பார்க் செய்யப்பட்டிருந்தன. "நம்ம காரை எங்கே பார்க் பண்ணினோம். நினைவிருக்கா?" என்றான் ரமணி.

"அதான் நானும் பார்க்கிறேன் . . . தினம் ஒரு கார் கொண்டு வரதினாலே சட்னு அடையாளம் தெரியறதில்லே."

"இன்னிக்கு ஷெவர்லேயிலேதானே வந்தோம்?"

"இல்லியே, ப்ளிமத்னா."

"ஓ, ஆமாம், ஆமாம் . . . முந்தாநாள் வரை ஜினேவாவிலே பீட்டர் காரிலே போயிண்டிருந்தோமா, அந்த ஞாபகம்."

"யாரு அந்த ஹில்டன் ஆசாமிதானே . . . அவன் 'ஸன்'னைக்கூட எனக்குத் தெரியும் . . . போன மாசம் பிரான்சிலே பார்த்தேன்."

"எங்கேயோ எகிப்திலேனா இருந்தான்னு சொன்னாங்க?"

"இருந்தான் . . . அங்கே சர்க்கார் ஓட்டல் தொழிலையெல்லாம் தேசியமாக்கிட்டாங்க . . . ஸோ, எல்லாத்தையும் வித்துட்டு பிரான்சு வந்துட்டான் . . ."

"இஸ் . . . டெரிபிள், டெரிபிள். நான்கூட அதான் காபினெட்டிலே நம்ம ஆளுங்களை நிறைய வைச்சிருக்கேன் . . . நாளைக்கு ஏதாவது ஆச்சுன்னா அட்லீஸ்ட் முன்கூட்டியே நியூஸாவது தெரியும் பாரு."

"பை தி வே, அந்தப் புது அக்ரிகல்சர் மினிஸ்டர் சுத்த

மோசம்பா ... வீட்டுக்குப் போனேன் ... வைஃபைக்கூட இன்ட்ரொட்யூஸ் பண்ணலே."

"ரியலி! நான் பி.எம்.கிட்டே சொல்றேன், அடுத்த தடவை பார்க்கிறபோது."

சினிமா தியேட்டர் ஒன்று வந்தது. "சினிமா பார்க்கலாமா?" என்றான் செல்லப்பா.

"மணி ஏழாகப் போறதே!"

"அதனாலே என்ன? மெயின் ஃபிலிம் இப்பத்தான் தொடங்கியிருக்கும் ... நாம பெரிய மனுஷங்க இல்லியா. நியூஸ்ரீல், விளம்பர ஷார்ட் இதையெல்லாம் ஸ்கிப் பண்றோம் ..."

ஆங்கிலப் படம். செழிப்பான வர்ணங்கள். நியூயார்க்கில் ஒரு திருட்டுக் கூட்டத்தைக் கலைக்கும் போலீஸ் ஆபீசரின் கதை. அடுக்கு மாடிக் கட்டிடங்களுக்கு நடுவே வளைந்து நெளிந்து ஓடிய வழவழப்பான சாலைகளில் 'விர் விர்'ரென்று ஒன்றின் பின்னால் ஒன்று துரத்திச் சென்ற நீண்ட, பளபளப்பான கார்கள். திருப்பங்களில் கார்களின் பிரேக்குகள் கிரீச்சிடும்போது வயிற்றைக் கலக்கியது. 'டுஷ்ய் டுஷ்ய்' என்று சுடும் துப்பாக்கிகள், அலங்கோல மாக விழுந்து மடியும் மனிதர்கள். கவிழும் கார்கள், நொறுங்கும் கண்ணாடிகள். ரத்தம். அந்தப் பரபரப்பும் திகிலும் அவர்களுக்கு ஒரு இதமான போதையை உண்டாக்கின. நகைச்சுவைக் கட்டங்களில் ரமணி செல்லப்பாவின் தொடையில் ஒரு தட்டுத் தட்டி கடகடவென்று சிரித்தான். ரமணியின் இத்தகைய 'இங்கிதமற்ற' உற்சாகத்தைச் செல்லப்பா பொறுத்துக்கொண்டான். அவனுக்கு மாலை நேரங்களில் ஒரு துணை தேவைப்பட்டது. ரமணி இந்தத் தேவையைப் பூர்த்தி செய்தான். காதல் காட்சிகளில் செல்லப்பா ரமணியின் தோள்மேல் கை போட்டுக்கொண்டு, ஒரு அழுத்து அழுத்தினான். தன்னுடைய மென்மையிலிருந்தும் பயங்கலந்த அமைதியிலிருந்தும் வேறுபட்ட ரமணியின் திண்மையும், முரட்டுத் தனமும், உரத்த பாவனைகளும் அவனுக்குப் பாதுகாப்பாகத்தான் இருந்தன. வேண்டித்தான் இருந்தன.

இன்று ஏதோ அதிர்ஷ்டம்; சினிமாத் தியேட்டரில் நுழைந்தவுடன் கௌண்டரிலேயே டிக்கெட் கிடைத்துவிட்டது. அப்படிக் கிடைக்காமலிருந்தாலும் ரமணி அருகிலிருக்கும் சைக்கிள் ஸ்டாண்ட்காரனிடம் 'பிளாக்'கில் டிக்கெட் வாங்கியிருப்பான். செல்லப்பாவுக்குக் குழப்பம் மிகுந்ததாகவும், சமாளிக்க முடியாத தாகவும் தோன்றிய அன்றாட வாழ்க்கையின் பல பிரச்னைகளையும் சவால்களையும் ரமணியால் எளிதில் ஏற்க முடிந்தது; சமாளிக்க முடிந்தது.

ரெஸ்டாரண்டில் எவ்வளவு டிகாக்ஷன் எவ்வளவு பால் என்று நிச்சயத்துடன் அவனால் காப்பி கலக்க முடிகிறது. வெயிட்டர்

களிடம் உரிமையுடனும் அதிகாரத்துடனும் ஆர்டர் செய்ய முடிகிறது. தரக்குறைவான பண்டங்களுக்காக அவர்களுடன் சண்டையிட்டுச் சில சமயங்களில் அந்தப் பண்டத்தைத் திருப்பி எடுத்துக்கொண்டு போகச் செய்ய முடிகிறது. கார்கள் தொடர்ச்சியாக வந்துகொண்டிருக்கும்போதே சாலையை கிராஸ் செய்ய முடிகிறது. பெண்களைத் துணிச்சலாக வம்புக்கிழுக்க முடிகிறது; அவர்களுடைய நட்பை எளிதில் சம்பாதித்துக் கொள்ள முடிகிறது. தனக்கு ஏற்ற சட்டைத்துணி அல்லது பாண்ட் துணியின் நிறம் என்ன, டிஸைன் என்ன என்று சந்தேகமில்லாமல் முடிவுக்கு வர முடிகிறது. தேவைப்பட்டால் செல்லப்பாவின் சார்பிலும் இந்த முடிவுகளை எடுக்க முடிகிறது. ரமணி மட்டும் இருந்திரா விட்டால் செல்லப்பா என்ன செய்திருக்க முடியும், எங்கே போயிருக்க முடியும்?

சினிமா முடிந்து இருவரும் ஒருவர் தோள்மேல் ஒருவர் கை போட்டவாறு கனாட் பிளேஸில் நடக்கத் தொடங்கினார்கள். இரவு ஒன்பது மணிக்கே டில்லி 'செத்துவிட்டிருந்தது.' படத்தில் பார்த்த நியூயார்க் நகரத்துடன் ஒப்பிடும்போது, வெறும் பட்டிக்காடு போலத்தான் இருந்தது. ஒரு வெறுப்பும் சலிப்பும் ஏற்பட்டது. ஆங்கிலப் படங்கள் இவ்வளவு சீக்கிரத்தில் முடிந்துவிடுவது எவ்வளவு துரதிர்ஷ்டமானது! சாலை முனையில் நின்று, சினிமாத் தியேட்டரிலிருந்து வெளிவந்த பெண்களை ஒரு கணம் வேடிக்கை பார்த்தவாறு நின்றார்கள். அவர்களைப் பொறுத்தவரையில் இன்னமும் படம் முடியவில்லை போலிருந்தது.

அவர்கள் நியூயார்க்கிலேயே இருப்பது போலிருந்தது.

ஆனால் எல்லாமே எப்போதாவது முடிந்துதான் விடுகின்றன. இப்போது இல்லாவிட்டால் அடுத்த நிமிடம். இன்றில்லாவிட்டால் நாளைக்கு. ரமணி பஸ் ஸ்டாண்டை நோக்கி நடக்கத் தொடங்கினான். செல்லப்பாவுக்கு வீடு திரும்ப வேண்டுமேயென்று வருத்தமாக இருந்தது. அதே சமயத்தில் ரமணியிடமிருந்து விடுதலை பெறப் போகிறோமென்று ஆறுதலாகவும் இருந்தது. ரமணி தனக்கு மிகவும் தேவையானவனாக இருக்கும் உணர்வு ஏற்படுத்தும் சங்கடத்திலிருந்து விடுதலை. இனி, இன்னொரு 'போர் அடிக்கும் மாலை நேரம்' வருவது வரையில், அவன் தயவு தேவையில்லை.

ரமணி செல்லப்பாவின் மன ஓட்டத்தை ஊகித்தவன் போல, "என்னைப் பஸ்ஸிலே ஏத்தி விட்டுட்டுப் போனால் போதுமோல்லியோ? உனக்கு அவசரமில்லியே?" என்றான்.

"ஒரு அவசரமும் இல்லை."

"அவசரமானால் நீ போய்க்கொள்ளலாம்."

"சே, சே!"

இருவரும் தொடர்ந்து நடந்தார்கள். ஒரு இறுக்கமான மௌனம் நிலவியது. அவர்கள் ஒருவரிடம் மற்றவர் பெறக்கூடியவற்றை

அடைந்துவிட்டது போலவும், இப்போது அவர்கள் ஒருவருக் கொருவர் தேவைப்படவில்லை போலவும் தோன்றியது. ரமணியுடன் நடந்துகொண்டிருப்பதற்காகச் செல்லப்பாவும், செல்லப்பாவுடன் நடந்துகொண்டிருப்பதற்காக ரமணியும், தம்மைத் தாமே வெறுத்துக்கொள்வதுபோலத் தோன்றியது. அவர்கள் ஒருவரை யொருவர் நாடச் செய்த பலவீனத்தை – அல்லது தேவையை – மங்கலாக உணர்ந்துகொண்டதால் ஏற்பட்ட வெறுப்பாகவும் இருக்கலாம்; அல்லது இந்தத் தேவைகளை ஒருவர் மூலம் மற்றவர் பூர்ணமாகத் தீர்த்துக்கொள்ள முடியாத தாபத்தினாலெழுந்த வெறுப்பாகவும் இருக்கலாம். செல்லப்பா ஏற்கெனவே வீட்டில் டைனிங் டேபிளில் தனக்காகச் சூடாக மூடி வைக்கப்பட்டிருக்கும் சாப்பாட்டைப் பற்றியும், குளிருக்கு இதமான படுக்கையைப் பற்றியும் நினைக்கத் தொடங்கியிருந்தான். ரமணியும் தன் வீட்டைப் பற்றி நினைக்கத் தொடங்கியிருப்பானோ? இல்லை, இருக்காது. அவன் செல்லப்பாவைப் போல அடுத்த நிமிஷத்தில் வாழ்பவனல்ல. மௌனம் பெரிதாகிக்கொண்டே போவது போலிருந்தது. செல்லப்பா தாங்க முடியாமல் எந்தக் கணமும் பெரிதாகக் கூச்சல் போட்டு விடுவான் போலிருந்தது. அதிர்ஷ்டவசமாக அப்போது ரீகல் திருப்பத்தில் திரும்பிக் கொண்டிருந்த ஒரு பஸ் ரமணியின் கண்ணில் பட்டது. "அதோ என் பஸ்! ஓ. கே!" என்று ரமணி ஓடிச்சென்று பஸ்ஸில் தொத்திக் கொண்டான். செல்லப்பா கையை உயர்த்தி டாட்டா காட்டிவிட்டு, நிம்மதிப் பெருமூச்சுடன் தன் வீட்டை நோக்கி நடந்தான். நல்ல வேளை, அந்தப் பஸ் மட்டும் வந்திரா விட்டால் அவன் தொடர்ந்து மௌனமாக ரமணியுடன் பஸ் ஸ்டாண்ட்வரை நடந்திருக்க வேண்டும்; அங்கே பல நிமிடங்கள் நின்றிருக்க வேண்டும்.

நல்ல வேளை. பிரச்னை தீர்ந்தது. அவனுடைய பிரச்னைகள் எல்லாமே இப்படித் தற்செயலாகத் தீர்ந்தால்தான் உண்டு. அவனாக அவற்றைத் தீர்க்கச் சக்தியற்றவன்.

சிகரெட் ஒன்றை வாங்கிக்கொண்டு, ஒவ்வொரு வாய்ப் புகையையும் நிதானமாக உள்ளுக்கிழுத்து அனுபவித்தவாறு அவன் நடந்தான். அங்கிருந்து அவன் வீடு வரை இருந்த பத்து நிமிடத் தூரத்துக்கு அவன் 'ஸ்டீவ் மக்வீனாக' (அவன்தான் மாலை பார்த்த திரைப்படத்தின் கதாநாயகன்) மாறிவிட்டது போலிருந்தது. வெறிச்சென்றிருந்த நடைபாதையில் அலட்சியமாகச் சிகரெட்டை ஊதியவாறு நடந்தான் ஸ்டீவ் மக்வீன். அவனுக்கு யாரும் லட்சியமில்லை. யார் தயவும் தேவையில்லை. அவனை யாரும் எளிதில் வசப்படுத்திவிட முடியாது. அவனுக்கு இன்றியமையாதவர்களாக ஆகிவிட முடியாது. நட்பு – ஹூம்! உறவு, பாசம் – ஹூம்! காதல் – ஹஹ்ஹஹ்ஹஹ்ஹா! யாரும், எதுவும் அவனுக்குத் தேவையில்லை.

வீட்டை அடைந்தபோது, வீடு வெறிச்சென்றிருந்தது. வாசல்

வராந்தாவில் வேலைக்காரன் ராம்சிங் உட்கார்ந்து துளசி ராமாயணத்தை ராகம் போட்டு வாசித்துக்கொண்டிருந்தான். செல்லப்பா வருவதைக் கவனித்து அவன் புத்தகத்தை மூடிவிட்டு எழுந்து நின்றான்.

"யாருமில்லையா வீட்டிலே?" என்றான் செல்லப்பா.

"இல்லை ஸாப், மாதாஜி வெளியே போனார்கள். பாபுஜியும் இன்னும் வரவில்லை."

"அச்சா."

"பத்ரி ஸாப்பிடமிருந்து போன் வந்தது ... அவர் ஹாஸ்டலிலே ஒரு சிநேகிதர்கூடத் தங்குகிறாராம். காலையிலே வருவாராம் ... மாதாஜிகிட்டேச் சொல்லச் சொன்னார்."

"சரி நான் சொல்லிடறேன்."

ராம்சிங் போய்விட்டான்.

காலியாக இருந்த வீடு செல்லப்பாவின் பிரமைகளைச் சிதையாமல் காப்பாற்றியது. அவன் தொடர்ந்து ஸ்டீவ் மக்வீனாகவே தன் அறையை அடைந்தான். கோட்டை அலட்சியமாகக் கழற்றியெறிந்துவிட்டு, டை முடிச்சைத் தளர்த்திக்கொண்டு பாத்ரூமுக்குச் சென்று மூக்கைச் சிந்தினான். வாஷ்பேஸின் கண்ணாடியைப் பார்த்து "ஹலோ செல்லப்பா!" என்றான். தலைமயிரை வெவ்வேறு விதமாகக் கலைத்துவிட்டுக்கொண்டான். வெவ்வேறு விதமாகப் புன்னகை செய்து பார்த்தான். கடகடவென்று சிரித்தான். திடீரென்று முகத்தை ஸீரியஸ்ஸாக வைத்துக்கொண்டு 'இல்லை ... இது சிரிக்கிற விஷயமில்லை ... ஏன் சிரிக்கிறாய், டார்லிங்?' என்று நாடக பாணியில் ஒரு திரும்புத் திரும்பி 'டக்டக்'கென்று பூட்ஸ் கால்கள் ஒலிக்க மீண்டும் பாத்ரூமிலிருந்து அறைக்குள் வந்தான். அப்படியே டக்டக்கென்று அறையில் இங்குமங்குமாகச் சில கணங்கள் நடந்தான். பிறகு தொபீரென்று கட்டிலில் போய் விழுந்தான். ஷூவையும் பாண்டையும் திரைப் படத்தில் நடித்துக்கொண்டிருப்பவனைப் போன்ற நாசூக்கான அலட்சியத்துடன் கழற்றினான். ஸூட்டையும் ஹாங்கரில் பொருத்திப் பீரோவில் மாட்டும்போது, அதனுடைய பழமையான மோஸ்தர் தையல் மறுபடி அவனை உறுத்தியது. அன்று அந்த ஸூட்டை அணிந்து யூனிவர்ஸிடியில் நடமாடும் போது, பதினெட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவன் போல அவன் உணர்ந்திருந்தான். ஸூட்களின் மோஸ்தர் இந்த வருடம் மறுபடி மாறிவிட்டிருந்தது; அவனுடைய ஸூட் தைத்து இரண்டு வருடங்களாகின்றன. இந்த உடை நாகரீகங்கள் ஏன் இப்படி மாறியவாறு இருக்கின்றன? அவனுடைய சட்டைகள் பாண்ட்டுகள் அடங்கிய சிறிய உலகம், இதனால் அடிக்கடி சீர்குலைகிறது.

வேட்டியை அணிந்துகொள்ளப் பிடிக்காமல் ஒரு பைஜாமாவை

எடுத்து அணிந்துகொண்டு அந்த டைனிங் ரூமுக்குப் போனான். சாப்பாட்டு மேஜை மீது ரொட்டியும் சாதமும் கூட்டும் மூடிவைக்கப் பட்டிருந்தன. ஃப்ரிஜிடேரைத் திறந்து பார்த்தான். உள்ளே தயிரும், மத்தியானத்து சாம்பாரும் இருந்தது. அவற்றையும் வெளியே எடுத்து வைத்துக்கொண்டு அவன் சாப்பிடத் தொடங்கினான். ஸ்டீவ் மக்வீன் மாமிசத்தைக் கிழித்துச் சாப்பிட்டதைப்போல ரொட்டியைக் கிழித்துச் சாப்பிட்டான். பெரிய பெரிய விள்ளல் களாக நிறையக் கூட்டும் தயிரும் சேர்த்துக்கொண்டு, பகாசுரனைப் போல வாயில் அடைத்துக்கொண்டு விழி பிதுங்க அசை போட்டான். ஏராளமாகத் தண்ணீர் குடித்தான். அம்மா இருந்திருந்தால் இப்படிச் சாப்பிட்டிருக்க முடியாது.

திடீரென்று வாசலில் மணியடிக்கும் சத்தம் கேட்டது. செல்லப்பா வாயிலிருந்தவற்றைச் சிரமப்பட்டு விழுங்கிவிட்டு, எச்சிற் கையுடன் கதவைத் திறப்பதற்காக எழுந்து சென்றான். அம்மாதான் வந்திருந்தாள். வெளியே கார் ஒன்று கிளம்பிச் செல்லும் ஓசை கேட்டது. "சாப்பிட்டுண்டிருந்தியா?" என்றவாறு அம்மா உள்ளே நுழைந்து, வளையல்கள் குலுங்கக் கைகளை உயர்த்திக் கொண்டையைத் தொட்டுப் பார்த்துக்கொண்டாள். குப்பென்று ஸென்ட் வாசனை வீசியது. அம்மா வாயில் பீடாவை மென்று கொண்டிருந்தாள். உதடுகள் சிவந்திருந்தன. செல்லப்பாவுக்கு ஒரு விநோதமான பூரிப்பும் ஏக்கமும் ஒருங்கே உண்டாயின. அவன் மீதிச் சாப்பாட்டைச் சாப்பிடுவதற்காக டைனிங் ரூமுக்குச் சென்றபோது அம்மாவும் பின்னாலேயே வந்தாள். "ஃப்ரிஜிடேரிலே சாம்பார் வச்சிருந்தேனே, எடுத்துண்டியா?" என்றாள்.

"உம்."

"பத்ரி சாப்பிட்டானா, இல்லையா?"

"அவன் இன்னிக்கு ஹாஸ்டலிலே ஒரு ஃப்ரண்டுகூடத் தங்கறானாம்... போன் வந்தது."

"இதே வழக்கமாப் போச்சு" என்று அம்மா சமையலறைக்குச் சென்றாள். அதற்குமுன் ஒரு கணத்துக்குத் தயிர்ப் பாத்திரத்தின் மீது அவள் பார்வை சென்றது. பத்ரியின் பங்கையும் சேர்த்து அவன் கபளீகரம் செய்திருந்ததை அவன் ஊகித்திருக்கலாம். சமையலறையில் அவள் டப்பாக்களைத் திறந்து மூடும் சத்தம் கேட்டது. "காஃபி குடிக்கப்போறேன். கொஞ்சம்... ஆர் யூ இன்டரஸ்டட்?" என்று அங்கிருந்தவாறே குரல் கொடுத்தாள்.

"இப்பத்தானே சாப்பிட்டேன்" என்றான் செல்லப்பா, டேபிளிலிருந்து எழுந்தவாறு.

"ஃப்ளாஸ்கிலே வேணுமானால் விட்டு வைக்கிறேனே... அப்புறமாக் குடிச்சுக்கோ – நைட்லே கண் முழிக்கிறவனாச்சே, நீ."

"ஓ.கே." என்று செல்லப்பா சமையலறைக்குச் சென்று கை

கழுவிக்கொண்டான். 'இதிலே வேணுமானால் துடைச்சுக்கோ' என்று அம்மா இடுப்பில் சொருகியிருந்த கர்சீப்பை உருவி அவனிடம் நீட்டினாள். "ரிஹர்ஸலுக்குப் போயிருந்தியா?" என்று கர்சீப்பில் கையைத் துடைத்துக்கொண்டவாறு செல்லப்பா கேட்டான்.

"இல்லையே, நாளைக்குத்தான் ரிஹர்ஸல். மிஸ்டர் அண்ட் மிஸஸ் சாட்டர்ஜியோட பெங்காலி ப்ளே ஒண்ணு பார்க்கப் போயிருந்தேன். மத்தியானம் மிஸஸ் சாட்டர்ஜி போன் பண்ணினா... அப்புறம் சாயங்காலம் அவளே பிக் அப் பண்ணிண்டு போனா."

"எப்படியிருந்தது நாடகம்?"

"மார்வலெஸ்."

செல்லப்பா சிரிக்கத் தொடங்கினான்.

"ஏண்டா சிரிக்கிறே?"

"நீ இந்த வங்காளி நாடகத்தையெல்லாம் ரசிச்சுட்டு வரே... அதே சமயத்தில் ஸ்டுபிட் டமில் டிராமாஸ்லே ஆக்ட்டும் பண்றே... நினைச்சுப் பார்த்தா வேடிக்கையாயிருக்கு."

அம்மா காப்பி கலந்து முடித்து கோப்பையில் விட்டுக்கொண்டு ஒரு வாய் பருகினாள். "ஒரு தமிழ்த் தாயின் மகனாகப் பிறந்த நீ. இப்படிப் பேசலாமோடா மகனே!" என்றாள் நாடக பாணியில். செல்லப்பா படபடவென்று கைகளைத் தட்டினான். "அம்மா, யூ ஆர் கிரேட்!"

மீதிக் காப்பியை செல்லப்பா பிளாஸ்கில் விட்டு மூடி எடுத்துக் கொண்டான். இருவரும் ஹாலுக்கு வந்து உட்கார்ந்து சற்று நேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். பிறகு அம்மா உடைமாற்றிக் கொள்வதற்காக எழுந்து சென்றாள். செல்லப்பா தன் அறைக்கு சென்று படிப்பதற்காக மூட் வரவழைத்துக்கொள்ள முயன்றான். டிரான்ஸிஸ்டரை முடுக்கினான். ஐரோப்பிய சங்கீதம் கேட்டது. பீத்தோவனின் மூன்லைட் ஸோனாடா, அந்தச் சங்கீதத்தின் நுணுக்கங்கள் அவனுக்குத் தெரியாது. ஆனால் அந்த நேரத்தில் அது ஓர் அழகிய எழுச்சியை ஏற்படுத்தியது. இதமான, மென்மை யான உணர்வுகள். அப்படியே சற்று நேரம் உட்கார்ந்திருந்தான். மீண்டும் மூக்கில் சளி சேர்ந்துவிட்டது. பாத்ரூமுக்குப் போய் 'சர், சர்'ரென்று சிந்தினான். அப்பா! குளிர்காலம் வந்தால் இது ஒரு தொந்தரவு.

அவன் மூக்கைச் சிந்துவதைக் கேட்டுக்கொண்டே அம்மா வந்துவிட்டாள். "என்னடா, நல்ல ஜலதோஷம் பிடிச்சிருக்கு போலிருக்கே!" என்றாள். அவள் இப்போது கொண்டையை அவிழ்த்து விட்டிருந்தாள். தலைமயிர் அலை அலையாகத் தொங்கியது. இன்னமும் அவளுக்கு ஒரு நரைமயிர்கூடக் கிடையாது. "கொஞ்சம் பெரிசா வையேன்" என்று ரேடியோவின் குமிழைத் திருகிவிட்டு, அவனருகே கட்டிலிலே வந்து உட்கார்ந்தாள். இரவு நேரத்தில்

அணியும் ரவிக்கையொன்றை அவள் அணிந்திருந்தாள். சில இடங்களில் பொத்தல்கள்; சில பித்தான்கள் வேறு இல்லை. செல்லப்பா அவள் பக்கம் பார்க்காமலிருக்க முயன்றான். சர்சர்ரென்ற அப்பாவித்தனமாக மூக்கை உறிஞ்சிக்கொண்டான். அவனுக்கு ஒரு இலேசான எரிச்சலும் உண்டாயிற்று. அவனுடைய ஒரு இலேசான உலகத்தினுள் அவள் நுழைந்து கலைப்பது போலிருந்தது.

"விக்ஸ் வேணுமானால் தடவிக்கோயேன்" என்றாள் அம்மா.

"உம்" என்று செல்லப்பா விக்ஸ் பாட்டிலை எடுத்து வந்து, கட்டிலில் உட்கார்ந்தான்.

"நான் வேணுமானால் தடவட்டுமா!"

"வேண்டாம், வேண்டாம்" என்று செல்லப்பா தானாகவே தடவிக்கொள்ள முயன்றான். அம்மா அவனுடைய அவஸ்தையை ஒரு கணம் அனுதாபத்துடன் பார்த்தாள். பிறகு, "சொன்னால் கேளு ... உனக்குத் தடவிக்கத் தெரியலை" என்று அவன் கையிலிருந்து உரிமையுடன் பாட்டிலை வாங்கி கட்டிலை விட்டு எழுந்தாள். அவனருகில் வந்து நின்றுகொண்டு அவனுடைய மார்பிலும் முதுகிலும் அந்தக் களிம்பை அழுத்தித் தேய்க்கத் தொடங்கினாள். அவளுடைய சேலைத் தலைப்பு கீழே நழுவியது. செல்லப்பாவுக்கு தீப்பற்றிக்கொண்டதுபோல உடலெங்கும் ஓர் ஆவேசம் ஏற்பட்டது. விக்கி விக்கி அழ வேண்டும் போலிருந்தது. தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான்.

அம்மா சேலைத்தலைப்பைச் சரிபடுத்திக்கொண்டு, பாட்டிலை மூடி வைத்தாள். "லெட்டர் ஒண்ணும் வரலியா இன்னிக்கு?" என்றாள்.

"ஊஹூம்."

"விசுவத்துக்கு என்ன ஆச்சுன்னு தெரியலையே ... லெட்டரையே காணோமே ..."

செல்லப்பா பேசாமலிருந்தான். பத்ரியும் விசுவமும் இருந்திருந்தால் அவள் தன்னிடம் இவ்வளவு பிரியமாக நடந்து கொண்டிருப்பாளோ என்னவோ? அவனுடைய முகம் இறுகுவதை அம்மாவும் கவனித்திருக்க வேண்டும். "சரி ... ரொம்ப டயர்டா இருந்தால் தூங்கிக்கோ ... படிப்பு எங்கே போகிறது" என்றாள்.

"உம்."

"இன்னும் உங்கப்பாவைக் காணோமே" என்று அம்மா அறையை விட்டுச் சென்றாள்.

அப்பா கிளப்பில் சீட்டாடிக்கொண்டிருப்பார், ரம்மி. சில தினங்களில் அவர் வருவதற்கு இரவு ஒன்று ஒன்றரை வரை ஆகும். அவருடைய மேலதிகாரிகள், மேலதிகாரி மனைவிகள், இவர்களுடனெல்லாம் 'குடும்ப மட்டத்தில்' நல்ல உறவுகளை

உருவாக்க அம்மாதான் நேரம் செலவழிக்க வேண்டியிருக்கிறது. பிரயாசை எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. இப்போது சாட்டர்ஜி அப்பாவின் மேலதிகாரி. எனவே நல்ல வங்காளி நாடகங்களை அம்மா பார்க்க முடிகிறது. இதற்கு முன்பு ஒரு ஆசாரமான யு.பி. பிராமணர் மேலதிகாரியாக இருந்தார். அப்போது அம்மா வெள்ளிக்கிழமைதோறும் அவர்கள் வீட்டில் நடக்கும் பஜனைகளில் கலந்துகொண்டு, தொண்டைக் கட்டுடன், தவிடு போன்ற ஒரு பிரசாதத்தை வாங்கிக்கொண்டு வருவாள். பரிதாபமாக இருக்கும். சிரிப்பாகவும் இருக்கும். பஜனைகளில் கலந்துகொள்ளும் அம்மாவை விட, வங்காளி நாடகங்களைப் பார்க்கும் அம்மா, வெளியே பெருமையாகப் பேசிக்கொள்ளக்கூடியவள்.

மணி பதினொன்று. ரேடியோ நிகழ்ச்சிகள் முடிந்துவிட்டன. டிக்டிக், டிக்டிக் என்று கடிகார ஒலி மட்டும் கேட்டது. செல்லப்பா பிளாஸ்கிலிருந்த காப்பியை விட்டுக்கொண்டு குடித்தான். இந்தப் பெரிய உலகத்தில் அவனும் அந்தக் கடிகாரமும் மட்டும் தனித்து விடப்பட்டதுபோலத் தோன்றியது. இப்போது திடீரென்று அவனுடைய வாழ்க்கையின் நிஜங்கள் அவனைத் தாக்கின. இவை எப்போதுமே இரவு நேரத்தில், அவன் தனியாக விடப்படும்போது தான் ஒரு மூர்க்கமான வெறியுடன் அவனைத் தாக்குகின்றன. இந்தப் புத்தகங்களையெல்லாம் அவன் படித்தாகவேண்டும். ஏப்ரலில் பி.ஏயை கிளியர் செய்தாக வேண்டும்.

அன்று மத்தியானம் யுனிவர்ஸிடி லைப்ரரியில் 'ரிஃபரன்ஸ்' ஸெக்ஷனிலிருந்து அவனுடைய கோர்ஸ் சம்பந்தமான சில புத்தகங்களை எடுத்துவைத்துக்கொண்டு அவன் படிக்க உட்கார்ந்தான். ஆனால் படிப்பு ஓடவில்லை. முன் வரிசையில் ஒரு பெண் உட்கார்ந்திருந்தாள். அவளுடைய பின்புறம் சாந்தாவின் நினைவுகளை எழுப்பிவிட்டது. அவன் புத்தகங்களைத் திருப்பிக் கொடுத்துவிட்டு, கெமிஸ்டரி டிபார்ட்மெண்ட் பக்கமாகச் சென்றான், சாந்தா எங்கேயாவது தென்படுகிறாளாவென்று பார்ப்பதற் காக. ஹைட்ரஜன் ஸல்ஃபைட் நாற்றத்தையும் பொருட்படுத்தாமல் ஒவ்வொரு லாபரெட்டரியாக ஏறி இறங்கினதுதான் மிச்சம். சாந்தாவைப் பார்க்க முடியவில்லை. காஃபி ஹவுஸுக்குச் சென்றான். அங்கும் அவள் இல்லை. வேறு யார் யாரோ அவனைப் பிடித்துக் கொண்டு போர் அடித்தார்கள். சரியான தலைவலி, கால்வலி. அவள் இப்போது ரிஸர்ச் பண்ணுகிறாள். ஒருவேளை தினசரி யுனிவர்சிடிக்கு வரமாட்டாளோ என்னவோ. ஹாஸ்டலுக்குப் போய்ப் பார்க்கலாமென்று கிளம்பினான். ஆனால் ஹாஸ்டல் நெருங்க நெருங்க இதயம் வேகமாகத் துடிக்கத் தொடங்கியது. முகமெல்லாம் வியர்த்துவிட்டது. முக்கால் வழியில் தைரியத்தை இழந்து பஸ் ஸ்டாண்டுக்குச் சென்றான். பஸ்; கனாட் பிளேஸ்; ரமணி.

சீ!

செல்லப்பா சுயவெறுப்பில் உழன்றவாறு அப்படியே சற்று நேரம் உட்கார்ந்திருந்தான். விரயமாகிவிட்ட அவனுடைய கல்லூரி வாழ்க்கை... ரசாயன ஹானர்ஸுடன்தான் அவன் தொடங்கினான். சாந்தாவுடன் ஒரே வகுப்பில் இருப்பதற்காகத்தான் ரசாயன பாடம் எடுத்துக்கொண்டான். அவள் பாஸ் ஆனாள். அவன் பெயில் ஆனான். இரண்டாம் வருடத்திலிருந்து ஆர்ட்ஸ் குரூப்புக்கு மாற்றிக் கொண்டான். அங்கும் மூன்று தடவைகள் பெயில். எப்படியோ, ஃபைனல்வரை எட்டியாயிற்று. ஏப்ரலில் அவன் பாஸ் செய்தேயாக வேண்டும்.

பருமனான சரித்திரப் புத்தகத்தை எடுத்துக்கொண்டு அவன் கட்டிலில் சாய்ந்தாற்போல உட்கார்ந்தான். ஒரு சிகரெட் இருந்தால் நன்றாயிருக்குமென்று தோன்றியது. பத்ரி இருந்தால் வாங்கிக் கொண்டிருக்கலாம். அவனிடம் ஸ்டாக் இருக்கும்.

புத்தகத்தைப் பிரித்தான். படித்ததை மறுபடி மறுபடி படித்துக் கொண்டிருந்தான். எதுவும் மனதில் பதிகிற வழியாக இல்லை. அப்படியே பிரித்த புத்தகம் கையிலிருந்து நழுவ, விளக்கை அணைக்காமலேயே அவன் தூங்கிப் போயிருக்க வேண்டும். இரவு வெகு நேரங்கழித்து யாரோ விளக்கை அணைத்துவிட்டுச் செல்வதை மங்கலாக உணர்ந்தான். அப்பாவாக இருந்திருக்க வேண்டும். எதுவும் தெளிவாக இல்லை. ஏதேதோ கனவுகளில் அவன் ஆழ்ந்திருந்தான். ஒரு கனவில், அவனும் சாந்தாவும் மிஸ் ரமாவும் மாலையில் ரெஸ்டாரண்டில் பார்த்த மூக்குக்கண்ணாடிப் பெண்ணும் காஃபி ஹவுஸில் ஒரு மேஜையைச் சுற்றி அமர்ந்திருந்தார்கள். செல்லப்பா கூறும் ஜோக்குகளுக்கெல்லாம் அவர்கள் விழுந்து விழுந்து சிரித்தார்கள். சுற்றி உட்கார்ந்திருந்தவர்கள் செல்லப்பாவையே பொறாமையுடன் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

# 10

"நேரத்தைக் கழிப்பதல்ல, போதிய அளவு நேரம் கிடைப்பதில்லையென்பதுதான் என் பிரச்னை" என்கிறார் புதுடில்லியைச் சேர்ந்த ஐம்பத்திரண்டு வயதுக் குடும்பத் தலைவியான மிஸஸ் பாக்கியம் பசுபதி. இவருடைய இளமையான தோற்றமும் (முப்பது வயதுக்கு மேல் மதிப்பிட முடியாது) சுறுசுறுப்பான பேச்சும் பாவனைகளும், குழந்தைகள் பெரியவர்களாகி கணவனுக்கும் உபயோக மற்றவர்களாக உணர்ந்து வாழ்க்கையில் ஒரு பெரும் சூன்யத்தை எதிர்நோக்கும் இவர் பிராயத்து ஸ்திரீகளிடமிருந்து இவரைத் தனியே பிரித்துக் காட்டுகின்றன.

'ஹவுஸ் வைஃப்' என்ற சொற்றொடரைத் தாம் வெறுப்பதாகச் சொல்லும் மிஸஸ் பாக்கியம், "ஆனால் என் வீடு எனக்கு மிகவும் பிரியமானதுதான் ... என் கணவருக்கும் நான் எப்போதும் நல்ல மனைவியாகத்தான் இருந்து வந்திருக்கிறேன் ..." என்றார், கைகளை அர்த்தபுஷ்டியுடன் கோர்த்துக்கொண்டு, திருப்தியான புன்னகையுடன் பார்வையை ஒரு கணம் தரை நோக்கித் தாழ்த்தியவாறு. அழகிய முத்திரை; என்ன இருந்தாலும் நடிகையல்லவா?

பாகி (இப்பெயரிட்டுத்தான் குடும்பத்தினரும் நண்பர்களும் இவரைப் பிரியமாக அழைக்கிறார்கள்) புதுடில்லி தமிழ் நாடக உலகில் பிரபலமான ஒரு பெயர். ஆழமும் நுட்பமுமான நெளிவு சுளிவுகளும் மிக்க பாத்திரங்களுக்கு மேடையில் உயிரூட்டும் இவர், மேடைக்கு வெளியே மிக எளிமையான, நல்லியல்பும் நேசமும் மிக்க பெண்மணி – உங்கள் அடுத்த வீட்டு மாமியாக இவர் இருந்திருக்கக்கூடாதா என்று ஏங்க வைப்பவர்.

குடும்பப் பொறுப்புகள் ஒரு நடிகையென்ற முறையில் இவரைப் பாதிக்கின்றனவா என்ற கேள்விக்கு இவர் பதில்: "பாதிப்புகள் தான் ஒரு கலைஞனை உருவாக்குகின்றன."

தன் கணவன், மூன்று பிள்ளைகள் ஆகியோருக்காகச் செலவிடுவது போக மிஞ்சும் நேரத்தையே நாடக உலகுக்காகத்தான் செலவிடுவதாகச் சொல்லும் மிஸஸ் பாக்கியம், "தியேட்டர் என் முதல் காதலாயில்லாம லிருக்கலாம்; அதே சமயத்தில் அதில்லாமல் என் வாழ்க்கை சூன்யமானதாக இருக்கும்" என்று சொல்கிறார்.

இந்தி, ஆங்கிலம் நன்கு தெரிந்திருந்தும், அந்த மொழி நாடகங்களில் பங்குபெறாத காரணம்?

"பணத்துக்காகவோ புகழுக்காகவோ அல்ல, ஒரு மன நிறைவுக்காக, அழகிய அனுபவத்துக்காகவே நான் நாடகங்களில் பங்குபெறுகிறேன். ஒரு தமிழ்ப் பாத்திரமாக, தமிழ் பேசி நடிக்கும்போது உண்டாகும் உற்சாகமும் நிறைவும் மற்ற மொழிகளில் ஏற்படாதென்றே நினைக்கிறேன்."

இவருடைய இளமையின் ரகசியம்?

"எந்தக் குறிப்பிட்ட பிராண்டு முகப் பவுடரும் ஸ்னோவும் அல்ல, என் மன எல்லைகளை விசாலமாக வைத்திருப்பதே காரணம். என் குடும்பம், என் முழுக் கவனிப்பைப் பெறுகிறது. அதே சமயத்தில் வெறும் குடும்பத் தலைவியாக நான் என்னை நினைத்துக்கொள்வதில்லை."

இவர் ருசிகளுக்கேற்ப கணவர் கிடைத்திருப்பது இவர் அதிர்ஷ்ட மென்றே சொல்ல வேண்டும். மிஸ்டர் பசுபதி – மினிஸ்ட்ரியில் டெபுடி ஸெக்ரடரி. அத்துடன், தென்னிந்தியக் கிளப்பின் காரிய தரிசியும்கூட. தன் நேரத்தில் பெரும் பங்கைக் கிளப்புக்காக அவர் செலவழிப்பதை யாவரும் அறிவர் . . ."

மிஸஸ் பசுபதி இந்த இடத்தில் படிப்பதை நிறுத்திவிட்டு கலகலவென்று சிரிக்கத் தொடங்கினாள்.

"ஏன் மாமி சிரிக்கிறேள்?" என்றாள் தாரா.

"கிளப்புக்காகன்னு இருக்கிறதை கிளப்பிலேன்னு மாத்தணும்."

"அப்படி மாத்தினால் அப்புறம் இதை பப்ளிஷ் பண்றதுக்கு மாமா ஹெல்ப் பண்ணமாட்டாரே."

"அதுக்காகத்தானா? நீ கெட்டிக்காரிடி."

"உங்களைப் பத்தி எழுதியிருக்கிறதிலே எதுவும் மாத்த வேண்டாமே?"

"ஐம்பத்திரண்டு வயசுன்னு போட்டிருக்கியே . . ."

"இது 'ஐம்பதுக்கு மேற்பட்டவர்கள்' பற்றிய பகுதிக்காக மாமி – ஸன்டே மாகஸீன்லே வரதே . . ."

"வேறே ஒண்ணும் பகுதி இல்லையா?"

"டீன் – ஏஜர்ஸ் பகுதி இருக்கு . . ." என்று தாரா கண் சிமிட்டினாள்.

"அதிலே உன்னைப்பத்தி நான் எழுதிப் பழிவாங்கட்டுமா?"

"ஷ்யூர்."

"அது சரி, என்னவோ காகிதப்பை கொண்டு வந்திருக்கியே – என்னது அதிலே?"

"உங்களுக்கு ஒரு பிரஸெண்ட்."

"ரியலி?" என்று மிஸஸ் பசுபதி காகிதப்பைக்குள் துழாவி ஒரு லுங்கியை வெளியே எடுத்தாள். "இதுவா?"

"ஆமாம் மாமி. ப்ளெயின் துணி வாங்கி அதிலே நானே பாடிக்கு டிஸைன் வரைஞ்சிருக்கேன்."

"ஜோர்! ஜோர்!" என்றாள் மிஸஸ் பசுபதி துணியைப் பிரித்துப் பார்த்தவாறு.

"ரொம்பச் சிரமப்பட்டிருக்கேனாக்கும் உங்களுக்காக."

"என் கண்ணு!"

"சரி, நீங்க கட்டிண்டு பாருங்கோ. நான் அதுக்குள்ளே பாத்ரூம் போயிட்டு வரேன் – இந்தப் பஸ்ஸிலே நசுங்கிப் பிசுங்கிண்டு வந்ததிலே என்னவோ மாதிரி இருக்கு உடம்பெல்லாம்."

"குளிக்கப் போறியா?"

"குளிச்சாக்கூடத் தேவலை – காலம்பறவே குளிக்கலை . . ."

"ஏன் இப்ப லீவுதானே உனக்கு?"

"சோம்பலாயிருந்தது . . . இந்த குளிரிலே குளிக்கவே மூட் வரதில்லை . . ." என்று தாரா பாத்ரூமை நோக்கிச் சென்றாள்.

அவள் திரும்பி வந்தபோது மிஸஸ் பசுபதி அந்த லுங்கியை அணிந்து மேலே இளஞ்சிவப்பு நிறத்தில் ஒரு 'குர்த்தா'வும் அணிந்திருந்தாள். தாரா நாடக பாணியில் திடுக்கிட்டவள்போல ஒரு கணம் நின்றாள். "மாமி! யூ லுக் கிரேட்!"

"உம் . . ." என்று மிஸஸ் பசுபதி நம்பிக்கையில்லாதவள் போல தொடைப்பக்கம் துணியை இழுத்து விட்டுக்கொண்டாள். தாரா அவளருகில் சென்று லுங்கியின் அடிப்பக்கம் சீராகப் பாதங்கள் மேல் புரளுமாறு திருத்திக் கட்டினாள். திடீரென்று 'டொக், டொக்' என்று அறைக் கதவு தட்டப்படும் சத்தம் கேட்டு இருவரும் திரும்பிப் பார்த்தார்கள். "நான் உள்ளே வரலாமா?" என்று கேட்டுக் கொண்டே பசுபதி அறைக்குள் நுழைந்தார்.

"மாமா! பிரஸன்ட்டிங் – மிஸஸ் இந்தியா 1972!" என்று தாரா மிஸஸ் பசுபதியின் கையைப் பிடித்து இழுத்து அவர் முன்னால் நிறுத்தினாள்.

"இது என்ன, ஏதாவது ஃபான்ஸி டிரஸ் பார்ட்டியா?" என்று பசுபதி கையிலிருந்த கார்ச் சாவியைச் சுழற்றியவாறு அங்கிருந்த ஒரு நாற்காலியில் அமர்ந்தார். அவர் பகல் சாப்பாட்டுக்காக ஆபீசிலிருந்து வந்திருந்தார்.

"எப்படியிருக்கு மாமா மாமியுடைய புது டிரஸ்? பிடிச்சிருக்கா?"

"இல்லைன்னு சொன்னா நான் அப்புறம் எப்படி இந்த வீட்டிலே இருக்கிறது!"

மிஸஸ் பசுபதி பொய்க் கோபத்துடன் அவரை அடிக்கப்போவது போல கையை ஓங்கியவாறு அவரருகில் சென்றாள்.

"இந்த வீட்டிலே யாருடைய கை ஓங்கியிருக்குன்னு இப்பத் தெரிஞ்சுதா?" என்றார் பசுபதி தாராவைப் பார்த்து.

"இது பெண்களுடைய யுகம், மாமா."

"ரொம்பக் கரெக்ட்" என்று பசுபதி எழுந்து நின்று தன் மனைவியை மேலும் கீழுமாகப் பார்த்தார்.

"என்ன பார்க்கிறேள்?"

"ஐ திங்க் – நானும் இனிமே பெல் பாட்டம்ஸ், டைட்ஸ் எல்லாம் போட்டுக்க வேண்டியதுதான்னு நினைக்கிறேன், உன்கூட வெளியே வரணும்னா."

"உங்க பாண்ட்டும் அப்படியொண்ணும் லூஸாயில்லையே மாமா."

"இப்படிப் பருத்துண்டே இருந்தால்?" என்று மிஸஸ் பசுபதி டைனிங் ரூமை நோக்கிச் சென்றாள். பசுபதியும் தாராவும் அவளைப் பின் தொடர்ந்தார்கள்.

சாப்பாட்டு மேஜை மீது பிளேட்டுகள், கிண்ணங்கள். சாதம், குழம்பு ஆகியவை அடங்கிய பாத்திரங்கள் எல்லாவற்றையும் எடுத்து வைத்தவாறு, "நீயும் சாப்பிடுகிறாயாடி?" என்றாள் மிஸஸ் பசுபதி, தாராவிடம்.

"கொஞ்சூண்டு ரசஞ்சாதம்."

பசுபதியும் தாராவும் பேசியவாறு தாங்களே எடுத்துப் போட்டுக் கொண்டு சாப்பிடத் தொடங்கினார்கள். "சாப்பிடுங்கோ ... இதோ வரேன்" என்று மிஸஸ் பசுபதி அறையை விட்டுச் சென்றாள்.

"உன்னுடைய கிறிஸ்துமஸ் வெகேஷனெல்லாம் எப்படியிருக்கு?" என்றார் பசுபதி.

"இருக்கு ..." என்றாள் தாரா. "இந்தப் பஸ் தொந்தரவு இல்லை கொஞ்ச நாளைக்கு."

"தொந்தரவென்ன? உங்களுக்குத்தான் ஸ்பெஷலெல்லாம் விடறாளே!"

"ஐயோ, ஐயோ. அதிலே நீங்க ஒரு நாள் வந்தால் தெரியும். எல்லாம் ரவுடிப் பசங்கள் ... அடிக்கிற லூட்டி ... அப்பப்பா!"

"பத்ரியும் ஸ்பெஷல்லேதானே வரான்?" என்று பசுபதி எதையோ தேடுபவர் போல, தாராவின் முகத்தைப் பார்த்தார். 'உம்' என்று அவள் சாப்பிடுவதிலேயே கவனமாயிருந்தாள்.

"பத்ரி ஓட்டியடிப்பானா?"

தாரா தோள்களைக் குலுக்கிக்கொண்டாள்.

"சொல்ல இஷ்டமில்லையா?"

"அப்படியில்லை ... ஆனா இதை நீங்க சரியாப் புரிஞ்சுக்கணும் மாமா. ஸ்டூடண்ட்ஸ் கூட்டமாயிருக்கிறபோது அந்த க்ரூப் ஒரு குறிப்பிட்ட விதத்திலே நடந்துக்கிறது ... அப்போ அதிலே சில பேர் மட்டும் வேறே விதமா நடந்துகொள்ள முடியாமல் போறது ... யூ நோ, அப்படிச் செய்யறது க்ரூப்பை விரோதிச்சுக்கிறதாய் போயிடும் ... ஸோ ..."

"ஸோ, பத்ரி க்ரூப்பை விரோதிச்சுக்கிறதில்லை?"

"யாருதான் விரோதிச்சுக்கிறா மாமா? நீங்க விரோதிச்சுக் கிறேளா?"

பசுபதி திடீரென்று ஒரு புதிய மனுஷியைப்போலத் தாராவைப் பார்த்தார். இவள் இன்னும் குழந்தையல்ல ...

"ஏதோ ஒரு க்ரூப்பின் வரையறைக்குள்ளேதான் நாம எல்லோருமே இயங்க வேண்டியிருக்கு ... இதிலே ஒரு பாதுகாப்பு இருக்கு. ஆனா ..."

"வேறுபடுகிறவாளுடைய குரல் மழுங்கிப் போகிறது."

"யெஸ்" என்று பசுபதி தம்ளரிலிருந்து இரண்டு வாய் தண்ணீர் அருந்தினார். "ஆனா ஒரு வேளை நான் விலகிப் போறதாகவே வச்சுண்டா ..."

"க்ரூப் உங்களை கொடூரமாகப் பழி வாங்கும்."

"அதுகூடப் பரவாயில்லை ... யூ நோ பிரச்னை என்னான்னா – எனக்கு என்மேலே கடைசிவரை நம்பிக்கை இருக்குமா, நான் செய்வது சரிதான்னு?"

"உங்ககூட இன்னும் நாலு பேர் வந்து சேர்ந்துக்காமல் இருக்கமாட்டா."

"ஆனா மறுபடி, அது ஒரு க்ரூப் ஆயிடறது இல்லையா?"

அவர் எதை மனதில் வைத்துக்கொண்டு பேசுகிறாரென்று புரியாதவளாக தாரா அவர் முகபாவத்தை ஆராய்ந்தாள். அப்போது மிஸஸ் பசுபதி தாரா தன்னைப் பற்றி எழுதிய குறிப்புடன் வந்தாள். "இதைப் பார்த்தீர்களா?" என்று பசுபதியிடம் நீட்டினாள்.

பசுபதி அதைப் படித்தவாறு மீதிச் சாப்பாட்டைச் சாப்பிட்டார். பிறகு கை கழுவுவதற்காக எழுந்தார்.

"சுவாரஸ்யமா எழுதியிருக்கா இல்லையா?"

"இங்கிலீஷ் ஸ்டைல் நன்னாயிருக்கு ... என்னைப் பத்தியும் ஒண்ணு தனியா எழுதேன் ... ஹவ் எபௌட் இட்?" என்றார் பசுபதி தாராவைப் பார்த்து.

"போங்க மாமா. எழுதி எழுதி ஆல்பத்திலே ஒட்டி வைக்கச் சொல்றேளா? நரசிம்மன்கிட்டே கூட்டிண்டு போறேன்னு நீங்க

ப்ராமிஸ் பண்ணி ஒரு வருஷமாகிறது."

"யாரு? டைம்ஸ் நரசிம்மனா?" என்றாள் மிஸஸ் பசுபதி.

"ஆமாம், மாமி ஞாயிற்றுக்கிழமை இஷ்யூ நரசிம்மன்தான் பார்த்துக்கிறார் ... ரெண்டு பேரும் தினம் கிளப்பிலே சீட்டாடறா ... என்னுடைய 'மானஸ்க்ரிப்ட்' எதையாவது அவர் நல்ல மூட்லே இருக்கிற சமயமா மாமா அவர் தலையிலே கட்டலாமோல்லியா?"

"பெறுமை, பொறுமை!" என்றார் பசுபதி. "நான் செய்யறேன்னு சொன்னா நிச்சயம் செய்வேன் ... அது சரி, உனக்குத் தமிழ் நன்னா வருமா?"

"தமிழ்லே நான் ரொம்ப வீக் மாமா."

"அதுதான் என்னுடைய பிராப்ளமும் ..." என்றார் பசுபதி. "கிளப் ஆண்டுவிழா வரது ... நான் அன்றைக்கு தமிழ்லே ஒரு ஸ்பீச் கொடுத்தாகணும் ... யாரைப் பிடிக்கிறதுன்னு தெரியலை."

வாசல் கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது. மிஸஸ் பசுபதி முகத்தில் கேள்விக்குறியுடன் அவர்களைப் பார்த்துவிட்டு, வாசலுக்குச் சென்றாள். கதவைத் திறந்தாள்.

வெளியே விசுவம் நின்றிருந்தான். அவனருகில் ...

"இவள்தான் பத்மினி" என்றான் விசுவம், கதவைத் திறந்த அம்மாவிடம். "இவள்தான் என் அம்மா" என்றான் பத்மினியிடம்.

# 11

அலாரம் அடிக்கும் சத்தத்தில் விசுவம் விழித்துக் கொண்டான். ரஜாய் மெத்தைக்குள்ளிலிருந்து தலையை மட்டும் வெளியே நீட்டிப் பார்த்தான். அறையின் மறுபக்கத்தில் செல்லப்பாவின் படிக்கும் மேஜைமீது இருந்தது கடிகாரம். வீட்டின் நிசப்தத்தினூடே அந்த அலாரம் ஒலி ஆறுதலளிப்பதாக இருந்தது, நீண்ட தனிமைக்குப் பிறகு கேட்கும் சக மனிதனின் பேச்சுக் குரலைப்போல. விசுவம் எழுந்திருக்கவில்லை; அலாரம் சில கடைசி விக்கல்களுடன் ஓய்ந்து விட்டது – யாரும் தூக்கிக்கொள்ளாமல் தானே சமாதானமடையும் குழந்தையைப்போல... செல்லப்பா தான் காலையில் எழுந்து கொள்வதற்காக வைத்த அலாரத்தின் மிச்சமாக இருக்க வேண்டும். கைக்கடிகாரத்தைக் கவனித்தான். நாலு மணி. செல்லப்பா வைக்கும் அலாரத்தில் செல்லப்பாவைத் தவிர மற்றவர்கள்தான் எப்போதும் எழுந்து கொள்கிறார்கள் என்று நினைத்துக்கொண்டபோது அவனுக்குச் சிரிப்பு வந்தது.

மேஜைக்கு மேல், சுவரில், தாத்தாவின் புகைப்படம். புகைப்படத்தின் மேல் ஜன்னல் வழியே பாய்ந்த மாலை வெய்யிலின் கிரணங்கள் கோணலான ஒளிச் சதுரங்களைப் பதித்திருந்தன. புகைப்படம் உயிர் பெற்றது போன்ற பிரமை. தாத்தாவின் ஆன்மாவான வெளியிலிருந்து அந்தக் கிரணங்கள் வழியே மிதந்து வந்திருக்கிறதோ? ஒரு விஞ்ஞானி இப்படியெல்லாம் நினைக்கக் கூடாது... ஆனால் எல்லாருக்குமே தர்க்க ரீதியான, ஆதார பூர்வமான சிந்தனைகளிலிருந்து 'இளைப்பாறல்' தேவைப்படுகிறது –விஞ்ஞானிக்குக்கூட.

அவன் அமெரிக்காவுக்குச் செல்வதற்குமுன் இந்தப் புகைப்படம் அங்கு மாட்டியிருந்ததாக அவனுக்கு நினைவில்லை. தாத்தா இறந்த பிறகு செல்லப்பா இதை இங்கே மாட்டியிருக்க வேண்டும். அவன்

தாத்தாவின் செல்லப் பேரன். இவ்வளவிற்கும், குழந்தைப் பருவத்தில் விசுவம்தான் செல்லப்பாவைவிட அதிகமாகத் தாத்தாவுடன் இருந்திருக்கிறான். ஆனால் அவருக்கென்னவோ செல்லப்பாவிடம்தான் அதிக ஒட்டுதல். அவர் இருந்தால் காலையில் எழுந்து கொள்வதற்காக அலாரம் வைத்துக்கொள்ள வேண்டிய அவசியமில்லை. இரவில் அவரிடம் சொல்லிவிட்டால் போதும்; காலையில் சரியாக அந்த நேரத்துக்கு எழுப்பி விட்டுவிடுவார். எழுந்திருக்கும்வரை விடமாட்டார். ஒரு அலாரம் இந்த அளவுக்குச் சிரத்தை எடுத்துக்கொள்ள முடியாதுதான்.

அவன் படுக்கையைவிட்டு எழுந்து நின்றான். அப்போது தூங்குவதற்கு முன்பு அவன் படித்துக்கொண்டிருந்த புத்தகம் தொப் பென்று கீழே விழுந்தது; செல்லப்பாவின் சரித்திரப் பாடப் புத்தகம். அதை எடுத்து மேஜைமீது வைத்தான். பாத்ரூமுக்குச் சென்றான்.

பாத்ரூம் கண்ணாடி தாடையில் தோன்றத் தொடங்கியிருந்த வெள்ளை மயிர்களை மீண்டும் கண்ணில் தட்டுப்பட வைத்தது. மூன்று நான்கு மாதங்களுக்கு முன்புகூட இவற்றைப் பார்த்ததாக நினைவில்லை. திடீரென்று ஒருவனுக்கு – ஒருவனுடைய உறுப்பு களுக்கு – வயதாகிவிடுகிறது. அவனுக்குத் தெரிந்த வரையில் அவனுடைய உடலின்மேல் நிகழ்ந்துள்ள புதிய வெளிப்புற பாதிப்பு பத்மினிதான். முப்பது வயதுக்குமேல் திடீரென்று உடலுறவு கொள்வதால் தாடைமயிர் நரைக்குமா? ஒரு சுவையான அனுமானம், hypothesis. அவனுடைய நிலையிலுள்ள இன்னும் நூறு பேர்களுக்கு இதேபோல தாடை மயிர் நரைத்திருப்பதாக ஸ்தாபிக்க முடிந்தால் இது ஒரு ஆதாரபூர்வமான விஞ்ஞான சூத்திரமாக, தியரியாக, ஆகிவிடும்.

அதுவரையில், அவன் தினசரி க்ஷவரம் செய்து கொள்வதில் அசட்டையாக இருக்கலாம்.

வாயைக் கொப்பளித்துத் துப்பிவிட்டு, தொண்டையைச் சில தடவைகள் இலேசாகக் கனைத்துக்கொண்டான். இது பத்மினிக்குப் பிடிக்காத ஒன்று; அவன் தொண்டையை ஓசைப்படாமல் கனைத்துக் கொள்வது. பெருத்த ஓசையுடன் – அவளுடைய அப்பாவைப் போல – தொண்டையைக் கனைப்பதுதான் ஆண்மையின் லட்சணமாம். பம்பாயில் இருந்த வரையில் அந்தக் கனைப்புச் சத்தந்தான் அவளைக் காலையில் எழுப்பிவிடும் அலாரமாக இருந்தது.

அவன் மிகவும் ஆண்மை குறைந்தவன்தான், அவளுடைய இந்தக் கணக்குகளின்படி. உரக்கக் கனைக்க மாட்டான், பேச மாட்டான், சிரிக்க மாட்டான், புகை பிடிக்கமாட்டான், எண்ணங்களை உடனுக்குடன் வெளிப்படுத்த மாட்டான், விருப்பங்களை உடனுக்குடன் செயலாக்க மாட்டான். கடைக்காரன், போர்ட்டர், டாக்சி டிரைவர் ஆகியோரிடம் கறாராகவும் அதிகாரத்துடனும் நடந்துகொள்ள மாட்டான்.

பரிவும் இங்கிதமும் பத்மினியைப் போன்றவர்களின் 'பாடப் புத்தக ஆண்மை'க்குப் புறம்பானது.

அதே சமயத்தில், முக்கியமான விஷயத்தில் அவன் அவளை எப்போதும் திருப்திப்படுத்த முடிந்திருக்கிறது. தன்னை ஆண்மையுள்ளவனாக நிரூபித்துக்கொள்ள முடிந்திருக்கிறது. ஒரு வேளை, அவளுடைய திருப்தியை மறைத்துக்கொள்ளும் முயற்சிகள் தான் அவளுடைய இந்தப் பேச்சுகளோ? தான் இன்னமும் முழுமையாக வெல்லப்படாதவள் என்று காட்டிக்கொள்வதற்காக, அவனை உசுப்புவதற்காக.

பெண்கள், பெண்கள்!

மனிதனின் இயல்பே ஆக்கிரமிப்புத்தானோ? இயற்கையை, சூழ்நிலையை, வடுப்படுத்தித் தன்னைத்தானே நிரூபித்துக் கொள்வதுதானா? அப்படியென்றால் யந்திர நாகரிக வளர்ச்சி ஏற்படுத்தும் விரும்பத்தகாத சூழ்நிலை மாற்றங்களை, இயற்கையின் சுவபாவிகத் தன்மை – உயிரினங்களின் போஷணைக்குத் தேவையான தொடர் நிகழ்ச்சிகள், சங்கிலிகள் – பாதிக்கப்படுதலை, கண்டனம் செய்யும் ஒரு எகாலஜி சாஸ்திர மாணவன் ஆண்மை குறைந்தவன் தான், நிச்சயமாக.

அவன் சமயலறைக்குச் சென்று பார்த்தான். பால் இருந்தது. நெஸ்காஃபே கலந்து குடித்தான். அமெரிக்காவில் சில வருடங்கள் தனியே இருக்க நேர்ந்த நிர்பந்தமும்கூட அவனுடைய ஆண் பிம்பத்தை சராசரியிலிருந்து வேறுபட்டதாகச் செய்திருந்தது. சமையலும் சமையலறையும் முந்தைய தலைமுறை ஆணுக்கு –அவனுடைய தாத்தாவுக்கு – இருந்ததைப்போல அவனுக்கு அந்நியமானவையாக இல்லை. ஒரு எளிமையான சாப்பாடு சமைக்க அவனால் முடியும். உப்புமா, பூரி, பஜ்ஜி போன்ற சில சிற்றுண்டிகள் தயாரிக்க முடியும். பல தடவைகள் அவனுடைய சக மாணவர்கள் அவனுடைய உப்புமாவையும் சாம்பாரையும் ரசத்தையும் சாப்பிட்டிருக்கிறார்கள்; பாராட்டியிருக்கிறார்கள்.

தூங்கியெழுந்த பிறகு தீஸிஸில் சில பக்கங்கள் எழுதலாமென்று அவன் நினைத்திருந்தான். ஆனால் இப்போது மூட் இல்லை. இரவில் எழுதிக்கொள்ளலாம். பின் தோட்டத்துக்குச் சென்றான். கடகடவென்ற சத்தத்துடன் புல்வெட்டும் யந்திரத்தை மாடு இழுத்துச் சென்றுகொண்டிருந்தது. தோட்டக்காரன் அதை வெவ்வேறு திசைகளில், நேர் கோடுகளில், விரட்டிச் சென்று கொண்டிருந்தான். அமெரிக்காவில் இந்தக் காரியத்துக்கு மோட்டார் யந்திரம் இருந்தது. அவனே சில சமயங்களில் இயக்கியதுண்டு . . .

போன் ஒலித்தது. அவன் உள்ளே வந்து, ரிஸீவரை எடுத்தான். "ஹலோ!"

"யாரு, விசுவமா?" அவனுடைய அப்பாவின் குரல்.

“ஆமாம்” என்றான்.

“இவா ரெண்டு பேரும் இன்னும் திரும்பி வரலையா?”

“வரலை.”

அப்பா பகல் சாப்பாட்டுக்கு வந்து திரும்பிச் செல்லும்போது அம்மாவும் பத்மினியும் அவருடன் சென்றிருந்தார்கள். அவரை ஆபீசில் ‘டிராப்’ பண்ணிவிட்டு காரை உபயோகித்துக்கொள்வதற்காக.

“எங்கேயாவது போக வேண்டியிருக்கா?” என்று அப்பா பேசாததால் அவன் தொடர்ந்து பேசினான்.

“இப்ப இல்லை. சாயங்காலமா நானும் அம்மாவும் ஒரு நியூ இயர் ஈவ் பார்டிக்குப் போக வேண்டியிருந்தது ... ஆனா இப்ப எனக்கு இன்னொரு வேலை வந்துடுத்து ... ஒரு ஃபாரின் டெலிகேஷன் வந்திருக்கு. அவாளுக்கு எங்க மினிஸ்ட்ரி சார்பிலே ஒரு டின்னர் அரேஞ்ச் பண்றோம் ... நாளைக் காலையிலே அவா திரும்பிப் போறா. ஸோ அவசரமா ஃபிக்ஸ் பண்ணும்படியா ஆயிடுத்து ... அதனாலே, நீ கூட்டிண்டு போறயா அம்மாவை?”

“நானா?”

“ஏன்? உனக்கும் போர் அடிச்சுண்டுதானே இருக்கு?”

“எனக்கென்னவோ இந்தப் பார்ட்டியெல்லாம் பிடிக்கிறதேயில்லை, அப்பா.”

“பரவாயில்லை, இன்னிக்கு மட்டும் – எனக்காக. என்ன?”

“உம் ... சரி.”

“பத்மினியையும் அழைச்சுண்டு போகலாம்.”

“சரி.”

“ஐ ஆம் ஸாரி ... உன்னைச் சிரமப்படுத்த வேண்டியிருக்கு.”

“ஏன் இவ்வளவு ஃபார்மலா பேசறே அப்பா?”

மறு முனையில் பசுபதி சிரிக்கும் சத்தம் கேட்டது. “அப்படியில்லை ... எனக்கு உன்னுடைய மனப்போக்குத் தெரியும் ... உனக்கு அங்கேயெல்லாம் போர்தான் அடிக்கும். இதிலே உன்னை மாட்டிவிட வேண்டியிருக்கேன்னு வருத்தமாயிருக்கு ... எனக்கே கூட வரவர இதெல்லாம் பிடிக்கிறதில்லே ... என்ன பண்றது. ‘அவாய்ட்.’ பண்ணவும் முடியறதில்லே.”

“இன்றைய சாயங்காலப் பொழுதை உனக்காகத் தியாகம் பண்ணப் போறேன், அப்பா.”

“ஓ. கே. நான் உன்னை தாங்க் பண்ணப் போறதில்லே. அப்புறம் ஃபார்மலாப் பேசறேன்னு சொல்லுவே.”

இப்போது விசுவம் சிரித்தான்.

“சரி; வச்சுடட்டுமா?”

"உம்."

அப்பா ஒரு சிறந்த நடிகர். தன்னைப் பற்றிப் பல்வேறு பிம்பங்களை உருவாக்குவதில் வல்லவர். அவனுக்காக, 'பார்ட்டிகளை – வெறுக்கிறேன் – ஆனால் என்ன – செய்வது' பிம்பம். ஒருவேளை பத்மினிக்காக 'தினசரி – பார்ட்டிகளை – விரும்புகிறேன் –ஆனால் – வேலை கட்டிப் போடுகிறது' பிம்பத்தை அணிந்திருப்பார்.

இரண்டு நாட்களுக்கு முன்பு அவன் அவருடைய ஆபீசுக்குச் சென்றிருந்தான். அப்போது தன் மகன் முன்பு, தான் செய்கிற வேலை குறித்து அவர் தாழ்வு நவிற்சி கொள்வது போலிருந்தது. "இது ஒரு முட்டாள்தனமான வேலை" என்றார் அவர். தன் முன் கிடந்த ஃபைல்களைச் சுட்டிக் காட்டியவாறு.

அவனுக்கு அவர் மேல் அனுதாபம் ஏற்பட்டது. முதன் முதலாக அவரை ஒரு மனிதனாகப் பார்த்தான் – ஆபீசராக அல்ல, அப்பாவாக அல்ல. தன்னைப் போன்று ஒரு குறிப்பிட்ட துறையில் படித்து, ஆராய்ச்சி செய்து, ஆக்கபூர்வமாக ஏதோ செய்ய முயலுபவர்களைப் பார்க்கும்போது அவருக்கு ஏக்கம் உண்டாகிறது போலும். அவருக்கும் ஆசைகள் இருந்திருக்கின்றன. சுதந்திர வேட்கைகள் இருந்திருக்கின்றன. பார்க்கப் போனால், அவருடைய அடிமைத்தனம்தான் அவனுடைய சுதந்திரத்தின் அஸ்திவாரம். அதாவது அவனைச் சுதந்திரமானவனென்று சொல்ல முடியுமானால். விஸ்கான்ஸின் யுனிவர்ஸிடிக்கு இன்னும் ஆறு மாதங்களுக்குள் "இந்திய நகரங்களின் சூழ்நிலைகளில் யந்திர நாகரிகத்தின் பாதிப்புகளும், விளைவுகளும்" என்ற தலைப்பில் அவன் தீஸிஸ் சமர்ப்பித்தாக வேண்டும். விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் இனி இதைப் பற்றியே படிக்க வேண்டும், எழுத வேண்டும், சிந்திக்க வேண்டும். மற்றவர்களுக்குக் கற்பிக்க வேண்டும். அவன் அணியக்கூடிய வேடங்களும் மிகச் சிலதான். அவனும் அப்படியொன்றும் சுதந்திரமானவனல்ல.

அன்று அவன் அப்பாவிடம் தன் வரையறைகளை எடுத்துக் கூறி, தன்னைப் பற்றிய அவருடைய இலட்சிய உருவகத்தைக் கலைத்து சகஜ பாவத்தை உருவாக்க முயன்றான். எல்லாத் துறைகளிலும் ஊழல்கள், குறுகிய நோக்குகள், குழுக்களின் விருப்பு வெறுப்புகள் ஆகியவற்றுடன் தனி மனிதர்களின் வேட்கைகளும், சிந்தனைகளும் மோதி சமரசம் காண வேண்டிய நிர்ப்பந்தத்திலிருந்து தொடங்கி, மனித யத்தனங்களின் பொதுவான அபத்தத்தைப் பற்றிய புத்திசாலித்தனமான சிரிப்புடன் அவர்களுடைய விவாதம் முடிந்தது.

பாவம், அப்பா.

அப்பாவுக்காக தன் மாலை நேரத்தை அவன் பிறர் உடைமையாக்கியாயிற்று. ஒரு சில நிமிடங்களுக்கு முன்பு இருந்ததைப் போல இப்போது அவனால் சுதந்திரமானவனாக உணர முடியவில்லை. இப்படியேதான் சுதந்திரம் பறி போகிறது. கொஞ்சம்

ஒருவருக்காக, கொஞ்சம் இன்னொருவருக்காக. பந்தங்கள், நிர்ப்பந்தங்கள்.

இதுதான் வாழ்க்கை. அல்லது?

அன்றைய தினசரியை எடுத்துக்கொண்டு அவன் பின் வராந்தாவிலிருந்த ஒரு நாற்காலியில், தோட்டத்தைப் பார்த்தாற் போல உட்கார்ந்தான். புல் வெட்டியாயிற்று. யந்திரத்திலிருந்து மாடு அவிழ்க்கப்பட்டுத் தனியே நின்றுகொண்டிருந்தது.

மாடுகளை அவனுக்குப் பிடித்திருந்தது. சிறு வயதில் கிராமத்தில் தாத்தாவின் வீட்டில் வளர்ந்த பாதிப்பாக இருக்கலாம். தொழுவத்தில் அசைபோடும் மாடுகளை மணிக்கணக்கில் பார்த்துக் கொண்டிருப்பான்.

5725

பத்மினிக்கு மாடுகளைப் பிடிக்காது. அல்லது, இது ஒரு நாகரிகமான பாசாங்கா? மாடுகளை சேவிக்கும் பழைய தலைமுறைப் பெண்களிடமிருந்து வேறுபட்டவளாகக் காட்டிக் கொள்ளும் முயற்சியா?

ஒரு வாரத்துக்கு முன்பு பம்பாயிலிருந்து டில்லி ஸ்டேஷனில் வந்திறங்கி (பத்மினிதான் ரயிலில் வர வேண்டுமென்று விரும்பினாள் – 'இட்ஸ் மோர் எக்ஸைட்டிங்!') – அங்கிருந்து டாக்ஸியில் வீடு வரும்போது ஒரு இடத்தில் சாலையை மாடுகள் அடைத்துக்கொண்டு படுத்திருந்தன. அப்போது அவள் மாடுகளை வைதததை அவை புரிந்துகொள்ள முடிந்திருக்குமானால் அவமானத்தில் தற்கொலை செய்துகொண்டிருக்கும்.

ஆனால், இதுதான் இந்தியா. தாறுமாறாகச் சாலைகளில் அலையும், படுத்திருக்கும் மாடுகள். ஒழுங்கீனத்தின் குறியீடு ... மேல்நாடுகளின் மிக அதிக 'ஒழுங்கு' இங்கு இன்னமும் எட்டப்படவில்லை. அங்கெல்லாம் பண்ணைகளில்தான் மாடுகளைப் பார்க்கலாம்.

இயற்கையின், சூழ்நிலைகளின் இயல்பு ஒழுங்கீனம்தான். மனிதன் இவற்றிலிருந்து ஒழுங்கை உருவாக்க முயலுகிறான்.

விசுவம் தன் வீட்டு வராந்தாவில் நாற்காலியில் அமர்ந்தவாறு வாழ்க்கையையும், மனிதர்களையும் பற்றி ஒழுங்கான தியரிகளை உருவாக்க முயலுகிறான். இந்தச் செய்கை சக்தியை விரயமாக்குகிறது. விரயமாவது சக்தியின் இயல்பு. அது எப்படியாவது விரயமாகியே தீர வேண்டும்.

பிரபஞ்சம் முழுவதிலுமுள்ள பயன்படுத்தப்படக்கூடிய சக்தி – available energy – ஒவ்வொரு கணமும் குறைந்துகொண்டே வருகிறது, என்கிறது தெர்மோடைனாமிக்ஸ் என்ற பௌதிக சாஸ்திரப் பிரிவின் இரண்டாவது சூத்திரம். சக்தியின் இடையறாத உருமாற்றம் காரணமாக, நிலக்கரிச் சக்தி நீராவிச் சக்தியாக, எண்ணெய்ச் சக்தி வாயுச் சக்தியாக, குடிநீர் மின்சக்தியாக, புகையிலை புகையாக, தாவரங்கள் உணவுப் பொருளாக, உணவு வேலையாக, சிந்தனைகளாக, கற்பனைகளாக. கற்பனை செயலாக ...

மனிதன் பயன்படுத்தக்கூடிய சக்திகளை உருமாற்றியவாறிருக்கிறான், செலவழித்தவாறிருக்கிறான். மனிதன் இல்லாவிட்டாலும் இந்தச் செலவழிப்பு நிகழ்ந்தவாறேதான் இருக்கும். அவன் இந்தச் செலவழிப்பை தன் நோக்கங்களுக்குச் சாதகமான முறையில் திசைப்படுத்துகிறான், ஒழுங்குபடுத்துகிறான்.

மனிதனின் தேகம் ஒரு பௌதிக ஒழுங்கு. ஒழுங்கீனத்தை நோக்கித் தான் (மண்ணுடன் மண், சாம்பலுடன் சாம்பல்) அதன் பயணம். இயற்கையின் இறுதி நிலை. அல்லது தொடக்க நிலை. எனவே இயற்கை ஒழுங்கற்று, மனிதன் பார்வையில். இந்தப் பார்வைதான் அவனுக்கு இயக்கத்தை அளிக்கிறது. ஒழுங்காகச் சிந்திக்கவும் முயலவும் வைக்கிறது. அதில் சக்தி செலவாகிறது.

ஒழுங்கீனம் இயல்பு. சக்தி விரயமாவதும் இயல்பு. சக்தியின் விரயம் ஒழுங்கை உருவாக்கப் பயன்படும்போது மனித சமூகம் மேன்மையடைகிறது.

சக்தியின் புதிய உருமாற்றங்கள், புதிய ஒழுங்குகள் . . .

ஆனால் எது ஒழுங்கு?

மக்களுக்காக, மக்கள் சார்பில் இயங்கும் ஜனாதிபதிகள். பிரதம மந்திரிகள். மந்திரிகள்.

இவர்களிடம் சக்தி இருக்கிறது. அபரிமிதமான சக்தி. தங்கள் தேசத்து மக்களுடைய சக்தியின் செலவழிப்பைக் கண்காணிப்பதும் திசைப்படுத்துவதும் இவர்கள்தான்.

இவர்களுடைய கருத்துகள், உந்துதல்கள் தவறாகும்போது? ஒன்றுக்கொன்று முரண்படும்போது?

இதுதான் பிரச்னை.

அப்புறம் அவனுடைய அப்பாவைப் போன்றவர்கள். அவரால் பேச முடியாது. ஆனால் கையெழுத்திட முடியும்.

மக்கள் சார்பில்.

இந்த நிமிடத்தில் அவர் ஒரு ஃபைலில் கையெழுத்திட்டுக் கொண்டிருக்கலாம். ஒரு மீட்டிங்கில் பங்களித்துக்கொண்டிருக்கலாம். மேலதிகாரியுடன் போனில் பேசிக்கொண்டிருக்கலாம். தன் கீழ் வேலை பார்ப்பவனுடன் ஒரு கேஸைப்பற்றி விவாதித்துக் கொண்டிருக்கலாம்.

மக்கள் சார்பில்.

மீட்டிங்குகளில் அவருக்கென்று ஒரு அபிப்பிராயம் இருக்கிறதா? அப்படிச் சொல்லப்படும் அபிப்பிராயம் பாரபட்சமற்ற ஆய்வின் அடிப்படையில் எழுந்ததா, அல்லது மேலதிகாரியின் கருத்துகளிலிருந்து தேவையேற்பட்டால் மாறுபட அவர் தயாராயிருப்பாரா? கடைசி வரையில்? ஆலோசனைகளை எந்த மட்டத்திலிருந்து வந்தாலும் ஏற்றுக்கொள்ளத் தயாராயிருப்பாரா? சுய அபிமானத்துக்

காகவோ குறுகிய நலன்களுக்காகவோ உண்மையைப் புறக்கணிக்காமலிருப்பாரா, எப்போதும், எல்லாக் கட்டங்களிலும்?

மக்களின் பணம், மக்களின் நேரம்.

மக்களின் சார்பில் மக்கள் நலனுக்காகச் சக்தியின் சேகரிப்பு, சக்தியின் விரயம். இரவு பகலாக. ஆபீசிலும் ஆபீசுக்கு வெளியிலும்.

தனியாகவும் கூட்டமாகவும் பேசிக்கொண்டும் பேசாமலும். சிரித்துக்கொண்டும் சிரிக்காமலும்.

நடித்துக்கொண்டும் நடிக்காமலும். குடித்துக்கொண்டும் குடிக்காமலும். தனக்காக அல்ல, பிறருக்காக.

மக்களுக்காக?

வாசல் கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது.

# 12

"பத்ரி இருக்கானா?" என்று வெளியே நின்றிருந்த பையன் கேட்டான், விசுவம் கதவைத் திறந்ததும்.

"இல்லை; வெளியிலே போயிருக்கான்."

அவனை இது அதிகம் பாதிக்கவில்லை. ஒரு வேளை இதற்கும் தயார் செய்துகொண்டு அவன் வந்திருக்கலாம். கையில் புத்தகங்கள். அவன் தயங்கியவாறு நின்று கொண்டேயிருந்தான். முகத்தில் சோர்வு, பதட்டம். எவ்வளவு தூரத்திலிருந்து வருகிறானோ?

"ப்ளீஸ் கம் இன்" என்று விசுவம் அவனை உள்ளே அழைத்தான். இருவரும் சோபாக்களில் அமர்ந்தார்கள். விசுவத்தின் கேள்விகளுக்கு அவன் பணிவாகப் பதில் கூறினான். அந்தப் பணிவு அவனுக்கு இயல்பானதல்லவென்று தோன்றியது . . .

ஆமாம், அவன் பத்ரியின் கிளாஸ்மேட். இல்லை. விசேஷம் எதுவுமில்லை, சும்மாதான் பார்க்க வந்தான். கரோல் பாகில் இருக்கிறான். ஆஃப் கோர்ஸ், பஸ்ஸில்தான் வந்தான். அவனுடைய அப்பாவும் விசுவத்தின் அப்பாவும் ஒரே மினிஸ்ட்ரியில்தான் இருக்கிறார்கள். விசுவம் அமெரிக்காவுக்கெல்லாம் போயிருந்தான் இல்லை? அவனுக்குக்கூட ரொம்ப ஆசை, அமெரிக்காவுக்குப் போக வேண்டுமென்று. அவன் ஃபாரின் ஸர்வீஸில் சேரப் போகிறான். அப்போது வெளிநாடுகளையெல்லாம் பார்க்கலாம்.

விசுவம் அவனுக்கு ஆப்பிளும் வாழைப் பழமும் நெஸ்கஃபேயும் கொண்டுவந்து கொடுத்தான். ஃப்ரிஜிடேரில் வைத்து ஜில்லென் றிருந்த அந்தப் பழங்களை அவன் மிகவும் ரசித்துச் சாப்பிடுவதாகத் தோன்றியது. இந்த ரசிப்பை மிக ஜாக்கிரதையாக மறைத்துக்கொள்வ தாகவும் தோன்றியது.

லாஸ் வெகாஸிலுள்ள சூதாட்ட கிளப்புகளைப் பற்றியும், ஷிகாகோ துப்பாக்கிக் குழுக்கள் பற்றியும், ஹார்லெம் நீக்ரோக்கள் பற்றியும், கிரீன்விச் கிராமத்தின் ஹிப்பிகள் பற்றியும் அந்தப் பையன் ஆர்வத்துடன் கேள்விகள் கேட்டபோது தான் இந்தப் பிரதேசங்களுக்குப் போனதேயில்லையென்று கூறி விசுவம் அவனை ஏமாற்றத்துக்குள்ளாக்க வேண்டியிருந்தது. அவன் அந்தப் பையன் மதிப்பில் மிகவும் விழுந்திருக்க வேண்டும். ஐந்து வருடங்கள் அமெரிக்காவில் இருந்திருக்கிறான், ஒரு பேஸ்பால் விளையாட்டுப் பார்க்கவில்லை. ப்ளூஃபிலிம் பார்க்கவில்லை, எல்.எஸ்.டி. சாப்பிடவில்லை, ஹாலிவுட் ஸ்டூடியோக்களைப் பார்க்கவில்லை, விண்வெளிக் கப்பல் விடப்படுவதைப் பார்க்கவில்லை. எப்போதும் எகாலஜி, எகாலஜி, எகாலஜி.

அமெரிக்க ஜனாதிபதி எல்.எஸ்.டி. சாப்பிட்டிருப்பாரா? பி.எம். கனாட்பிளேஸ் புல்வெளியில் அமர்ந்திருப்பாரா, சில நிமிடங் களாவது?

சாமான்ய மக்களாக இருப்பதிலும் சில சௌகரியங்கள் இருக்கின்றன.

அந்தப் பையன் பேசிக்கொண்டேயிருந்தான். நிஜமாகவே பேச விரும்புகிறானா, அல்லது பழங்களும் காபியும் சாப்பிட்ட பிறகு சற்று நேரம் உட்கார்ந்திருக்க வேண்டிய நிர்ப்பந்தம் காரணமாகவா? அறையில் உஷ்ண சாதனம் பொருத்தியிருந்தது. கதகதப்பாக இருந்தது. வெளியே குளிர். இருட்டத் தொடங்கியிருந்தது . . .

இந்திய மாணவர்கள் சுயமாகச் சிந்திக்கும் திறனற்றவர்கள் என்பதுபற்றி அந்தப் பையன் சொல்லிக்கொண்டிருந்தான். இறக்குமதி செய்யப்பட்ட கருத்துக்கள். பழக்கவழக்கங்கள். இவர்கள் தான் ஐ.ஏ.எஸ். எழுதி ஆபீசர்களாகிறார்கள். நம்முடைய மக்கள் பிரதிநிதி களைப் பொறுத்த வரையில் தங்கள் மாநிலம் அல்லது மாவட்டத்துக்கு வெளியே அவர்களுக்கு எதுவும் தெரியாது. சிலருக்குத் தங்கள் மாநிலத்தைப்பற்றிக்கூடத் தெரியாது.

வெளிநாட்டில் பிறந்தவர்களாக எண்ணிக் கொள்ளும் ஒரு சாரார். தங்கள் மாநிலமே உலகம் என்றெண்ணும் ஒரு சாரார். எப்படி நம் தேசம் உருப்படும்?

விசுவம் முழுமையாகத் தன்னைச் சம்பாஷணையில் ஈடுபடுத்திக் கொள்ளாமல், ஒரு புன்னகையுடன் அவன் பேச்சைக் கேட்டவாறு அமர்ந்திருந்தான். அந்தப் பையன் வளர்ந்த சூழ்நிலை, அவன் சிந்தனைகளின் பின்னணி, அவனுடைய எதிர்காலக் கனவுகள், பிம்பங்கள் ஆகியவற்றைப் புரிந்துகொள்ள முயன்றான். 'இவன் தன்னைச் சீண்டிப்பார்க்கிறான். தான் யார் பக்கம் என்று அறிய விரும்புகிறான். அறிவுஜீவிகள் பக்கமா? தலைமைப் பீடங்கள் பக்கமா? தனியார் முயற்சிகளின், சலுகைகளின் பக்கமா? மக்களின் பக்கமா? எந்தக் கொடி – சிவப்பா, பச்சையா, நீலமா?'

ஆனால் அவன் இதில் சிக்கிக்கொள்ளவில்லை. தன்னை வெளிப் படுத்திக்கொள்ள விரும்பவில்லை. வெறும் புன்னகை. அந்தப் பையனைப்பற்றிச் சிந்தனை . . .

இவனை ஏன் 'வெளிநாட்டு ஸர்வீஸ்' பிம்பம் ஆகர்ஷிக்க வேண்டும்! ஒரு டாக்டர், இஞ்சினியர், பத்திரிகாசிரியர் அல்லது அரசியல் வாதியின் பிம்பம் இந்த ஆசையை விதைத்திருக்கலாம். ஒருவேளை பார்ட்டிகள், அழகிய மங்கைகள், கட்டுப்பாடற்ற வாழ்க்கை என்ற ஒரு சித்திரம் அவன் மனதில் தோன்றியிருக்கலாம். கட்டுப்பாடு மிகுந்த மத்தியதர வகுப்புச் சூழ்நிலையிலிருந்து மாறுபட்ட சூழ்நிலைக்காக ஏக்கம், தவிப்பு. அல்லது ஒருவேளை வெளிநாட்டு ஸர்வீஸிலிருக்கும் யாரோ எங்கேயோ அவன் வாழ்வில் குறுக்கிட்டு அவனுக்கு ஒரு லட்சியமாகத் தோன்றியிருக்கலாம்.

பிம்பங்கள், கனவுகள். இவைதான் மனிதனுக்கு உந்துதலை அளிக்கின்றன, அவன் வாழ்க்கையை உருவாக்குகின்றன.

பத்ரி, செல்லப்பா ஆகியோருடைய எதிர்காலப் பிம்பங்கள் எப்படிப்பட்டவை? ஐ.ஏ.எஸ். ஆபீசர்? அட்வகேட்? சினிமா டைரக்டர்? லெக்சரர்? பிஸினஸ் எக்ஸிக்யூடிவ்? டிப்ளமேட்?

இது அவர்களை ஆகர்ஷிக்கும் வாழ்க்கை முறையைப் பொறுத்தது. ஒவ்வொரு துறைக்கும் அதைச் சார்ந்த பிரத்தியேக வாழ்க்கை முறை இருக்கிறது. இந்த வாழ்க்கை முறைகளும் பிம்பங்களும் முன்பே நிர்ணயிக்கப்பட்டவை. இவற்றிலிருந்து ஏதாவதொன்றை நாம் எல்லோரும் தேர்ந்தெடுக்க வேண்டியிருக்கிறது. மொத்த சமூக அமைப்பில் நம்மைப் பொருத்திக்/கொள்ள வேண்டியிருக்கிறது.

ஆனால் விசுவம் தனக்கென்று ஒரு புதிய பிம்பத்தைத் தேடிய வாறிருக்கிறான். ரெடிமேடான பிம்பங்கள் அவனுக்குத் திருப்தி யளிக்கவில்லை. முற்றிலும் புதிய பிம்பம் – அது சாத்தியந்தானா? அவன் வெறும் விஞ்ஞானியாக, வெறும் ஆராய்ச்சி மாணவனாக இருக்க விரும்பவில்லை. வெறும் கணவனாக, மகனாக, இருக்க விரும்பவில்லை.

புதிய பிம்பங்கள் . . .

மிஸ்டர் நிக்சன், அமெரிக்காவுக்காக அடுத்த ஐந்து வருடங் களுக்கு நீங்கள் யோசித்துள்ள புதிய பிம்பமென்ன? மிஸஸ் காந்தி, இந்தியாவின் எதிர்காலப் பிம்பமென்ன? நிஜமாகவே உங்கள் மனதில் ஓர் உருவம் இருக்கிறதா? கோஷங்களுக்கு அப்பாற்பட்டு சாத்தியமாகக்கூடியதாக ஓரளவேனும்?

"நான்கூட ஸயன்ஸ் க்ரூப் எடுத்துக்கொள்ளத்தான் விரும்பினேன்" என்றான் அந்தப் பையன். "ஆனால் என் அப்பா ஆர்ட்ஸ் க்ருப்தான் எடுத்துக்கொள்ள அனுமதித்தார். ஸயன்ஸ் பிரிவில் செலவு அதிகமென்று . . . முதலிலெல்லாம் எனக்கு ரொம்ப எரிச்சலாக இருந்தது . . . ஆனால் இப்போது ஸயன்ஸ் க்ரூப் எடுத்துக்கொள்ள

வில்லையென்பது எனக்குச் சந்தோஷமாக இருக்கிறது."

விசுவம் அவன் சொல்வதைக் கவனத்துடன் கேட்கத் தொடங்கினான்.

"ஸயன்ஸ் மிகவும் யந்திர ரீதியானது ... கற்பனைகளுக்கு இடமில்லாதது ... அது ஒருவனை இதயமற்றவனாகச் செய்துவிடுகிற தென்று நினைக்கிறேன் ... மென்மையான உணர்வுகள் இல்லாத வனாக, லௌகிகக் கண்ணோட்டம் உள்ளவனாக ..."

"நான் இதை ஒப்புக்கொள்வதற்கில்லை" என்று விசுவம் குறுக்கிட்டான். விசுவத்தை உசுப்பி அவனைப் பேசச்செய்வதுதான் அந்தப் பையனின் நோக்கமென்றால் அதில் அவன் வெற்றியடைந்து விட்டான்.

"ஸயன்ஸ் என்பது உணர்ச்சி வசப்படாமல் கற்பனைகளுக்கு இடங்கொடாமல் முழுக்க முழுக்க உண்மையான நிகழ்ச்சிகளையும் ஆதாரபூர்வமான அடிப்படைகளையும் கொண்டு உருவாக்கப்படு கிறது என்று நினைப்பது ஒரு பாமரத்தனமான அபிப்பிராயம்" என்றான் விசுவம். "ஒன்று சொல்லட்டுமா? கற்பனைகளின் துணையின்றி விஞ்ஞானம் இந்த அளவு வளர்ந்தேயிருக்காது ... விஞ்ஞான சூத்திரங்களின் வித்து, ஒரு அனுமானம், ஒரு hypothesis ... கற்பனை பிம்பம். தனிப்பட்ட சில விஞ்ஞானிகள் கண்ட பிம்பங்கள், கற்பனைகள்தான் பல பரிசோதனைகளுக்குப் பிறகு தியரியாக உருப்பெறுகின்றன. அங்கீகாரம் பெறுகின்றன. வாயு அழுத்தத்தையும் சீதோஷ்ணத்தையும் அளவெடுப்பதும், திரவங்களைக் கலக்குவதும் கொதிக்க வைப்பதும் – இதெல்லாம் வெறும் தச்சு வேலை, கொத்து வேலை. தன் முழு அனுபவத்தின், கிரகிப்பின் பின்னணியில் புலப்படாத, தெளிவில்லாத அம்சங்களைப் பற்றிப் பிம்பங்களை உருவாக்க முடிந்தவனே விஞ்ஞானி. கற்பனையில்லாதவன் விஞ்ஞானியாயிருக்க முடியாது ... ஐன்ஸ்டீனின் தியரி அவருடைய ஒரு உருவகம்தான். அடாமிக் தியரி இன்னொரு விஞ்ஞானியின் உருவகம். பின்னர் இந்த உருவகங்கள் உண்மையானதாகவோ அல்லது சில சமயங்களில் பொய்யானதாகவோ – நியூட்டனின் ஒளியைப் பற்றிய உருவகத்தைப்போல – நிரூபணமாகின்றன. ஆனால் இருவிதங்களிலும் இவை விஞ்ஞான வளர்ச்சிக்கு உதவுகின்றன. பென்ஸீன் மாலீக்யூலின் வடிவத்தைப் ப்ற்றிய தீர்மானம் பல்வேறு கற்பனை பிம்பங்கள் மூலம்தான் சாத்தியமாயிற்று, பிம்பங்கள் ..."

விசுவம் திடீரென்று தான் அதிகம் பேசுகிறோமென்று உணர்ந்தவனாய்ப் பேச்சை நிறுத்தினான். "ஸாரி, பெரிய சொற்பொழிவு தொடங்கிவிட்டேன்" என்றான்.

"இல்லையில்லை, நீங்கள் இன்னமும் சொல்லலாம். எனக்கு இதெல்லாம் எதுவுமே தெரியாது" என்றான் அந்தப் பையன்.

'இரண்டு மூன்று நிமிடங்கள் எதைப்பற்றியாவது அடித்துப்

பேசிவிட்டால் நான் முட்டாளாக உணரத் தொடங்குகிறேன். மேலே பேச முடிவதில்லை' என்று விசுவம் நினைத்தான். அரசியல் தலைவர்கள் எப்படி கூசாமல் மணிக்கணக்கில் பேசுகிறார்கள்? போலியான சொற்றொடர்களை மீண்டும் மீண்டும் பயன்படுத்துகிறார்கள் ...?

போன் மணி ஒலித்தது. அவன் எழுந்து சென்றான். "ஹலோ!"

"என்ன பண்றே, விசுவம்?" – பத்மினியின் குரல்.

"ஹேஸ, எங்கிருந்து பேசுகிறாய்?" என்றான் விசுவம் ஆங்கிலத்தில்.

"கனாட்பிளேஸ் ... நாங்கள் ஷாப்பிங் பண்ணிக் கொண்டிருந்த போது அம்மாவுடைய சிநேகிதி ஒருத்தியைப் பார்த்தோம் ... பக்கத்திலேதான் வீடு இருக்கிறது. வந்து காஃபி சாப்பிடாமல் போகக்கூடாது என்றாள் ... அவள் வீட்டிலிருந்துதான் பேசுகிறேன் ... உம்? ... இல்லை. மிஸஸ் ரங்கநாதன் ... இதோ அந்த மாமி உன்னுடன் பேசணுமென்கிறாள்."

மிஸஸ் ரங்கநாதன் பேசத் தொடங்கினாள். கணீரென்ற குரல். விசுவம் ரிஸீவரைக் காதிலிருந்து சற்றுத் தூரத்தில் பிடித்துக் கொள்ள வேண்டியிருந்தது. "என்ன விசுவம் எங்களையெல்லாம் மறந்திருப்பே" என்று தொடங்கி சில நிமிடங்கள் தொணதொணத்து விட்டு, "சரி, இப்ப எங்க வீட்டுக்கு உடனே கிளம்பி வா" என்று முடித்தாள்.

"உங்க வீட்டுக்கா ..."

"ஆமாம். உன் அம்மா, வைஃப் இரண்டு பேரையும் ஹோஸ்டேஜாக வைச்சிண்டிருக்கேன். நீ வந்தால்தான் ரிலீஸ் பண்ணுவேன்."

"எங்களுக்கு ஒரு பார்ட்டிக்குப் போகணுமே!"

"நைட்லேதானே! ... இங்கே கொஞ்ச நேரம் இருந்துட்டு அப்புறம் போகலாம் ... என்ன?" விசுவம் பேசவில்லை. மறுபடி அந்த மாமி "என்ன?" என்றாள்.

"ஆல்ரைட்" என்றான்.

பிறகு அம்மா பேசினாள். அப்பாவுக்குப் போன் பண்ணியதாகவும், அவர் விசுவத்தை அழைத்துக்கொண்டு போகச் சொல்லியிருப்பதாகவும் கூறினாள் ... மாமி மிகவும் கட்டாயப்படுத்தி அவர்களை அழைத்துக்கொண்டு வந்துவிட்டாள். இப்போது விசுவம் வருகிறானா? சீக்கிரமாக வந்தால் ஆறரை ஆறே முக்காலுக்கெல்லாம் மாமி வீட்டிலிருந்து கிளம்பிவிடலாம்.

"வருகிறேன்" என்று அவன் போனை வைத்தான்.

"எக்ஸ்க்யூஸ்மீ" என்று அந்தப் பையனிடம் சொல்லிவிட்டு உள்ளே சென்று டிரஸ் செய்துகொண்டு வந்தான். இருவரும் வீட்டுக்கு வெளியே வரும்போது அந்தப் பையனின் முகத்தில் இலேசாக ஏமாற்றம் படருவது போலிருந்தது.

"இந்த ஏரியா எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு" என்றான் அவன்,

அவர்கள் சாலையில் நடக்கத் தொடங்கியவுடன்.

"ஆமாம்" என்றான் விசுவம். சாலையின் இருமருங்கிலும் சீரான இடைவெளியில் அமைந்திருந்த மரங்களையும், விசாலமான காம்பவுண்டுகளால் சூழப்பட்ட பங்களாக்களையும் பார்த்தவாறு. "லுட்யன்ஸுக்கு நாம் நன்றி செலுத்த வேண்டும்."

லுட்யன்ஸ், புதுடில்லியின் சிற்பி.

"கரோல் பாக், படேல் நகர், கிரீன் பார்க் இவையெல்லாம் ஒரிஜினல் நகரத்தின் தாறுமான, ஒருங்கிணைந்த பார்வையோ திட்டமோ இல்லாத, வளர்ச்சிகள் ..." என்று விசுவம் மேலும் பேசத் தொடங்கினான்.

"திட்டம் இல்லாமலிருக்காது" என்று அந்தப் பையன் குறுக்கிட்டான். "ஆனால் பிரச்னை என்னவென்றால். இந்தத் திட்டங்களை உருவாக்கியவர்கள் லுட்யன்ஸோ லாகர் புஸியாரோ அல்ல ... யாராவது ஒரு ஸ்டுபிட் அன்டர் ஸெக்ரடரி, டிபுடி ஸெக்ரடரி, அல்லது இவர்களைப் போன்ற ஒரு ஆசாமி ..." என்றவாறு, ஆமோதிப்பை யாசிப்பவன் போல விசுவத்தின் பக்கம் பார்த்துச் சிரித்தான்.

விசுவமும் சிரித்தான். "அன்டர் ஸெக்ரடரியும் டிபுடி ஸெக்ரடரியும்கூட நிர்ப்பந்தங்களுக்கு உட்பட்டவர்கள் ... அவர்களையும் குறை சொல்வதற்கில்லை. இந்த ஸிஸ்டமே – அமைப்பே தவறானது" என்று அந்தப் பையனின் கூற்றைத் திருத்தினான். 'நான் என் அப்பாவுக்காகப் பரிந்து பேச முயலுகிறேனா என்ன' என்று அவனுக்குத் தன் மேலேயே வியப்பு உண்டாயிற்று ...

சாலையில் சென்ற ஒரு ஆட்டோவை நிறுத்தி, அவர்கள் ஏறிக் கொண்டார்கள். "உன்னை எங்கேயாவது ட்ராப் பண்ணட்டுமா?" என்றான் விசுவம்.

"நானும் கனாட் பிளேஸ் வருகிறேன்" என்றான் அந்தப் பையன்.

பார்லிமெண்ட் வீதி வழியே ஆட்டோ சென்றது. ஐந்து வருடங்களில் புதிய அடுக்கு மாடிக் கட்டிடங்களால் அந்த வீதி அடையாளம் தெரியாமல் மாறிப்போயிருந்தது. லுட்யென்ஸுக்குப் பிறகு வந்தவர்களின் உருவகங்கள். பிம்பங்கள். ஒரிஜினல்கள் அல்ல, நகல்கள். மாடிஸன் அவின்யூ, மான் ஹட்டன், ஃபிப்த் அவின்யூ ...

மந்தையிலிருந்து வேறுபடுபவர்களுடைய கனவுகள்தான் சமுதாயத்தை மாற்ற முடியும். மேன்மையடையச் செய்ய முடியும். ஜனநாயகம் மந்தைத்தனத்தைத்தான் உருவாக்குகிறது. செல்வாக்குள்ளவர்கள் தம் செல்வாக்கை மென்மேலும் வலுப்படுத்திக் கொள்ள இது உதவுகிறது. ஒரே மாதிரியான கட்டிடங்கள், வாழ்க்கை முறை, கல்வித் திட்டம் இவை தனி மனித வேட்கைகளை, கனவுகளை ஒடுக்குகின்றன.

காந்தியைப் போன்றவர்கள் மந்தைக்கு அறிவூட்ட முயலு கிறார்கள். ஹிட்லரைப் போன்றவர்கள் மந்தையின் மனப்போக்கை, முடமான

உணர்ச்சித் தாகத்தை, தம்முடைய சொந்த நோக்கங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்கிறார்கள்.

கோஷங்கள், ஊர்வலங்கள்.

கூட்டம்; அரசியல்வாதியின் களிமண்.

வெவ்வேறு பூர்விகங்களைக் கொண்ட ethnic groups ஒடுக்கப் படாமல் இயல்பான வளர்ச்சிபெற, சமுகத்துக்குப் பயன் விளை விக்கக்கூடிய பிரஜைகளாக உருவாக, வெவ்வேறுவிதமான கட்டிட அமைப்புகள் தேவை என்று நிபுணர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

ஆனால் மந்தையை மந்தையாகவே வைத்திருக்க விரும்புகிறவர் களுக்கு இதைப்பற்றியெல்லாம் கவலையில்லை . . .

கனாட் பிளேஸை அவர்கள் அடைந்தபோது ஒரே கூட்டமாக இருந்தது. ஆட்டோவிலிருந்து இறங்கி, சற்று நேரம் அந்தக் கூட்டத்தைப் பார்த்தவாறு நின்றான் விசுவம். "டிஸம்பர் முப்பத் தொன்றாம் தேதி இங்கே எப்பவும் இப்படித்தான்" என்றான் அந்தப் பையன்.

தேதி, நாள், இதெல்லாம் வெறும் கணக்குத்தானே! ஒரு நாளுக்கும் இன்னொரு நாளுக்கும் என்ன வித்தியாசம்? டிஸம்பர் முப்பத் தொன்றாம் தேதியென்பது ஒரு வித்தியாசமான நாள் என்ற மயக்கம். இந்த மயக்கத்தைப் பயன்படுத்திக்கொள்ளும் ஓட்டல்காரர்கள் . . .

ஓட்டல்கள் வெளியே தோரணங்களாலும் பலூன்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. மக்கள் சிறு குழுக்களாகக் குழுமியிருந் தார்கள். நியூ இயர் ஈவ் டின்னருக்கான அதிக விலை டிக்கெட்டுகள் எல்லா ஓட்டல்களிலும் விற்றுப் போயிருந்தன. எங்கும் இடம் கிடையாது.

சாலையில் சாரி சாரியாகக் கார்கள். நடைபாதையில் சாரி சாரியாக மக்கள். எத்தனை எளிதில் இவர்கள் குதூகலமடைந்து விடுகிறார்கள், ஏமாற்றப்பட்டுவிடுகிறார்கள்!

விசுவம் அந்தப் பையனுடன் கூட்டத்தினரிடையே நடக்கத் தொடங்கினான்.

# 13

ஆறரை, ஏழு, ஏழரை, எட்டு ...

கூட்டம் அதிகரித்துக்கொண்டேயிருந்தது. பஸ்கள் நிற்காமல் சென்றுகொண்டிருந்தன. கணேசன் பொறுமையிழந்து கொண்டிருந்தான்.

எட்டு ஒன்று, எட்டு இரண்டு, எட்டு மூன்று, எட்டு நான்கு ...

கைக்கடிகாரம் பளிச்சென்று தெரியும்படியாக இடுப்பில் கைகளைப் பதித்துக்கொண்டு அவனருகில் நின்றிருந்தவர், திடீரென்று அவனால்தான் தொடர்ந்து உற்றுப் பார்க்கப்பட்டுக்கொண்டிருப்பதை உணர்ந்தவராக, இதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதுபோல அவன் பக்கம் திரும்பி முறைத்துப் பார்த்தார். கணேசன் வேறு திசையில் பார்வையைத் திருப்பினான். எனக்குப் பைத்தியம் பிடிக்கப் போகிறது என்று அவன் நினைத்தான்.

எனக்குப் பைத்தியம் பிடிக்கப் போகிறது. ஒரு நாள் நான் பஸ் ஸ்டாண்டில் உரக்கக் கூச்சல் போடப் போகிறேன். காரணமின்றி அருகிலிருப்பவர்களுக்கு எரிச்சல் மூட்டப் போகிறேன். மூர்க்கமாக அவர்களைத் தாக்கப் போகிறேன். கற்களை எடுத்து எறியப் போகிறேன். மனிதர்கள் மீது, கட்டிடங்கள் மீது, சாலையில் செல்லும் வண்டிகள் மீது; அல்லது ஒருவேளை நான் வெறுமனே சிரிக்கப்போகிறேன். தொடர்ந்து இடைவெளியின்றிச் சிரித்துக் கொண்டேயிருக்கப் போகிறேன். இதோ இவர்கள் எல்லாரையும் அணைத்துக்கொண்டு சிரிக்கப் போகிறேன். இதுதான் நம் வாழ்க்கை சகோதரர்களே, என்று சிரிக்கப் போகிறேன். இப்படித்தான் நாம், நம்மைப் போன்றவர்கள் – நின்றுகொண்டேயிருக்கப் போகிறோம்; பஸ் ஸ்டாண்டில், ரேஷன் கடையில், பால் டிப்போவில், கலை அரங்குகளின் வாயில்களில், வழிபாட்டுத் தலங்களில்,

பொதுக்கூட்டங்களில், பிரதம மந்திரியின் கார் செல்லும்போது நடைபாதையில், போலீஸ் தடிகளின் பின்புறத்தில், ரயில்வே ஸ்டேஷன்களில், தபால் நிலையங்களில், ஆஸ்பத்திரியில், சூப்பர் மார்க்கெட்டுகளில், வேலைக்காகப் பேட்டி அறைகளில், தண்ணீர் வரி செலுத்துவதற்காகக் கார்ப்பரேஷன் அலுவலகத்தில், பிறகு வீட்டில் பாதி குளிக்கும்போது தண்ணீர் நின்று போன குழாயருகில் ...

இன்றும், நாளையும், இன்னும் பத்து வருடங்கள் கழித்தும், நாம் நின்றுகொண்டேயிருக்கப் போகிறோம் . . .

வலது கையிலிருந்த புத்தகங்கள் கனத்தன. கணேசன் அவற்றை இடது கைக்கு மாற்றிக்கொண்டான். பத்ரி வீட்டிலிருக்கமாட்டா னென்று தெரிந்திருந்தால் இவ்வளவு தூரம் வந்தேயிருக்க வேண்டாம். இன்று டெலிவிஷனில் ஒரு விசேஷ 'வருட முடிவு' நிகழ்ச்சி இருந்தது. அதைப் பத்ரி வீட்டில் பார்க்கலாமென்று அவன் நினைத்திருந்தான். கணேசனுடைய வீட்டில் டெலிவிஷன் இல்லை. ரேடியோ இருந்தது. ஆனால் அது இரண்டு மாதங்களாக வாயடைத்துப் போயிருந்தது. அவனுடைய அப்பா அதை வேண்டு மென்றே ரிப்பேர் செய்யாமல் வைத்திருந்தார். அவர்கள் (அவன், அவனுடைய தங்கை, அவனுடைய தம்பி) எப்போதும் பாடத்தைப் படிக்காமல் ரேடியோ கேட்டுக்கொண்டேயிருக்கிறார்களாம். பரீட்சை முடிந்த பிறகுதான் அவர் ரேடியோவை ரிப்பேர் செய்யப் போகிறாராம்.

அப்பா நினைவு வந்தவுடன் அவனுக்கு எரிச்சல் உண்டாயிற்று. பஸ் எவ்வளவுக்கெவ்வளவு தாமதமாகக் கிடைக்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு நல்லதென்று தோன்றியது. அவன் வீட்டுக்குப் போய்ச் சட்டைகளை வேறு துவைத்தாக வேண்டும். இரண்டே இரண்டு டெரிகாட் சட்டைகள்தான் அவனிடம் இருந்தன. இரண்டும் அழுக்காயிருந்தன. வேறு இரண்டு பருத்திச் சட்டைகள் சலவைக்குப் போயிருந்தன. ஸ்வெட்டரும் அழுக்காயிருந்தது. இப்போது அதை நனைத்தால் நாளைக்குள் உலராது. வேறு ஸ்வெட்டரும் கிடையாது. பனியன்களும் பொத்தல் பொத்தலாகப் போயிருந்தன; ஆனால் அதை அவன் இப்போது அவசரப் பிரச்னையாக நினைக்கவில்லை. குளிர்காலம் முழுதும் இந்த பனியன்களை வைத்துக்கொண்டே ஓட்டிவிடலாம். குளிரில் எப்போதும் சட்டை போட்டுக்கொண்டு இருக்க வேண்டியிருப்பதால் பனியனை யாரும் கவனிக்கப் போவதில்லை. பிப்ரவரி அல்லது மார்ச் மாதம் புதிய பனியன் வாங்கினால் போதும்.

'குப்'பென்று குளிர்காற்று வீசியது. பனி புகை போலப் படர்ந்திருந்தது. பஸ்களின் எண்கள்கூடக் கண்ணுக்குத் தெரிவது சிரமமாயிருந்தது. மூக்குக் கண்ணாடியைத் துடைத்து மாட்டிக் கொள்ளலாமென்று அவன் பாக்கெட்டில் கையை விட்டுக் கைக்குட்டையை வெளியே எடுத்தான். கைக்குட்டையும் மிக அழுக்காயிருந்தது; அவன் கண்ணாடியைத் துடைக்கும் எண்ணத்தைக்

கைவிட வேண்டியதாயிற்று. கோட்டின் காலரை உயர்த்திக் குளிருக்குப் பாதுகாப்பாகப் பிடித்துக்கொண்டு, இங்குமங்குமாக உலவத் தொடங்கினான்.

அது அவனுடைய அப்பாவின் பழைய கோட். முப்பது வருடங்களாகத் தில்லியில் இருந்ததில் வேறு என்ன சேர்த்திருந் தாலும் சேர்த்திராவிட்டாலும், நிறையக் கம்பளி உடைகளை அவர் சேர்த்திருந்தார். இது ஒருவிதத்தில் பாதுகாப்பாகத்தான் இருந்தது; அதே சமயத்தில் சங்கடமளிப்பதாகவும் இருந்தது. தனக்கென்று புதிய உடைகளைக் கேட்க முடியாமலிருந்தது, பெற முடியாமலிருந்தது. அவனுக்குப் பத்தொன்பது வயது நிரம்பப் போகிறது; பொறுப்புக்களை உணர முடியாத அளவுக்கு அவன் சிறுவனல்ல. அவருடைய பொருளாதார நிலை அவனுக்குத் தெரியாததல்ல.

ஆனால் அப்பாவின் கஷ்ட நஷ்டங்களை உணர்ந்து அனுசரித்துப் போனாலும், அவர் மீது அவனுக்கு அனுதாபமில்லை. அவருடைய வாழ்க்கைச் சித்தாந்தங்களுடன் உடன்பாடு இல்லை. ஒவ்வொரு வருக்கும் வாழ்க்கையில் வாய்ப்புகள் கிடைக்கின்றன. தேர்ந்தெடுக்கும் உரிமை கிடைக்கிறது. யார் அவரை வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொள்ளாமல் இருக்கச் சொன்னது? சரியாகத் தேர்ந்தெடுக்காமல் இருக்கச் சொன்னது? அவருடைய உந்துதல்கள் பழையவை. பிம்பங்கள் பழையவை. மார்க்கங்களும் ஊன்று கோல்களும் பழையவை . . .

புதிய அலைகளால் அடித்துச் செல்லப்படாத, பழைய நதிக்கரை நாகரிகத்தின் தேங்கிப்போன வண்டல் மண். சாறை இழந்து சக்கையைப் பிடித்துக்கொண்டிருக்கும் டிபிகல் இந்தியப் பிராமணர். தர்ப்பணம், ஹோமம், அர்ச்சனை, சகஸ்ரநாமம். சிவனுக்கு அபிஷேகம், அம்மனுக்குக் காப்பு, அனுமாருக்கு வடைமாலை, முருகனுக்குக் காவடி.

ஸில்லி. ஸ்டுபிட்.

கடவுளுக்குக் கொடுத்த லஞ்சத்தில் பாதி மனிதர்களுக்குத் கொடுத்திருந்தால் அவர் உருப்பட்டிருக்கலாம். பித்ருக்களை சந்துஷ்டியாகவும் சந்தோஷமாகவும் வைத்திருப்பதில் அவர் காட்டும் சிரத்தையில் கால்வாசி தன் மேலதிகாரிகளைத் திருப்திப்படுத்துவதில் காட்டியிருந்தால் அவன் இப்போது பத்ரி இருப்பது போன்ற ஒரு பெரிய பங்களாவில் இருந்திருக்கலாம். பார்க்கப் போனால், பூஜை ஒரு விக்கிரகத்துக்குத்தானே? ஒரு ஆவாஹனத்துக்குத்தானே? சடங்குகள் வெறும் உருவகங்கள்தாமே – மார்க்கங்கள்தாமே? மேலதிகாரியும் ஒரு உபாசனாமூர்த்தியாக இருக்கக்கூடும். லஞ்சமும் ஏமாற்றும் ஒரு தர்மமாக, மார்க்கமாக, இருக்கக்கூடும் – தர்ம வியாசருக்குக் கசாப்புக் கடை இருந்ததைப் போல. மிருகங்களைத் தாம் கொல்லவில்லையென்பது அவர் வாதம். அதேபோல, நீதியையும் நாணயத்தையும் நாம் கொல்லவில்லை. சமூகத்தில் அநீதியை

நாம் உருவாக்கவில்லை. அது ஏற்கெனவே எங்கும் இருக்கிறது. நாம் வெறுமனே அதில் கொடுக்கல் – வாங்கல் செய்கிறோம், அவ்வளவுதான். நமக்கு அதில் உடன்பாடு இல்லாமலிருந்தாலும் நாம் அத்துடன் சம்பந்தப்பட்டிருக்கலாம், சூழ்நிலைகள் காரணமாக. அதில் தவறொன்றுமில்லையே!

ஆனால் இப்படியெல்லாம் அவன் பேசத் தொடங்கினால் அவனுடைய அப்பாவுக்குக் கடுங்கோபம் வந்துவிடும். விதண்டா வாதம் செய்யாதே, என்பார். கில்லாடித்தனமாகப் பேசுகிறாய், என்பார். இதற்காக நான் உன்னைப் படிக்க வைக்கவில்லை, என்பார். அவனுடைய கருத்துகளுக்கும் நம்பிக்கைகளுக்கும் – அவை எவ்வளவுதான் தவறாக இருந்தபோதிலும் – அவர் மதிப்புக் கொடுக்கத் தயாராயில்லை. அவருடைய கருத்துகளுக்கும் நம்பிக்கை களுக்கும் மட்டும் அவன் மதிப்புக் கொடுக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறார். குருட்டுத்தனமாக அவற்றைப் பின்பற்ற வேண்டுமென்று விரும்புகிறார்.

அதுவும் எத்தகைய கருத்துக்கள், நம்பிக்கைகள்! வேத காலத்தவை. ரிஷிகள் காலத்தவை. அத்ரீ, ப்ருகு, குத்ஸ, வசிஷ்ட, கௌதம, காசியப, ஆங்கிரஸ ரிஷிகளின் தற்கால வாரிசு அவர். ரொம்ப சரி. பின்னே சர்க்கார் ஆபீஸில் எதற்காக குமாஸ்தா வேலையை ஒப்புக்கொள்ள வேண்டும்? ஆபீஸையும் ஆபீஸர்களையும் குற்றம் சொல்லிக்கொண்டிருக்க வேண்டும்? பேசாமல் கங்கைக் கரையில் ஆசிரமம் அமைத்துக்கொண்டு வேதங்களை ஓதிக்கொண்டிருக்க லாம். பிராம்மண தர்ம பரிபாலனம் செய்துகொண்டிருக்கலாம். அப்போது கணேசனும் ஒரு ரிஷிகுமாரனைப்போல சுயேச்சை யாகவும் சுய மரியாதையுடனும் இருந்திருக்கலாம். ஒரு அநீதியான, அசுத்தமான சமூக அமைப்பில் தன்னைப் பொருத்திக்கொள்ளும் நிர்ப்பந்தம் இன்றி, தன் குலதர்மத்தை முழு மனதாக ஏற்றுக் கொண்டிருக்கலாம். அதையே தன் வாழ்க்கையின் ஆதாரமாகக் கொண்டிருக்கலாம்.

இதுதான் பிரச்னை. இதுதான் அவனுடைய அப்பாவுக்குப் புரியவில்லை. அவன் தன்னைவிட உயர்ந்த பதவி வகிக்க வேண்டுமென்று அவர் விரும்புகிறார். அதே சமயத்தில் குலதர்மத்தை அவமதிக்கக் கூடாதென்றும் விரும்புகிறார். தோசையும் முழுசாக இருக்க வேண்டும். அதைத் தின்னவும் வேண்டுமென்றால் எப்படி முடியும்? பதவி, சமூக மட்டம் இவையெல்லாம் தனித்து நிற்பவையல்ல. இவற்றைச் சார்ந்த ஒரு தனி வாழ்க்கை முறையே இருக்கிறது. பழக்கவழக்கங்கள், நடையுடை பாவனைகள், மனப்போக்கு, சம்பாஷணைக் கொச்சை, எல்லாம் இருக்கின்றன. இவற்றையெல்லாம் அவன் கற்றுக்கொண்டாக வேண்டும். இதற்கு, அவன் முதலில் பிதுரார்ஜிதமாகப் பெற்றுள்ள நடையுடை பாவனைகள், மனப்போக்கு ஆகியவற்றை மறந்தாக வேண்டும். சுத்தமான ஸ்லேட்டில்தான் தெளிவான சித்திரம் எழுத முடியும். பழைய மாளிகையை

இடித்துத்தான் புதிய மாளிகையை அமைக்க முடியும்.

அவனுக்கு விசுவத்தின் ஞாபகம் வந்தது. பத்ரியைவிட பத்ரியின் இந்த அண்ணாவை அவனுக்குப் பிடித்திருந்தது. செயற்கையோ படாடோபமோ இல்லாத அவனுடைய இயல்பான பழகும் முறையும் பேச்சும் பிடித்திருந்தன. பத்ரியின் வீட்டிலிருந்த மற்றவர் களைப் போலன்றி, இவன் போலித்தனமில்லாதவன், நிஜமானவன். ஆனால் பத்ரி, விசுவம் இருவருக்குமிடையில் தோழமைக்காக யாராவது ஒருவரை மட்டும் தேர்ந்தெடுக்க வேண்டியிருக்கும் பட்சத்தில் கணேசன் பத்ரியைத்தான் தேர்ந்தெடுப்பான். காரணம் வயது மட்டுமல்ல. தேவை. ஆமாம். விருப்பம் வேறு. தேவை வேறு. பத்ரியைப் போன்றவர்களின் சகவாசம் மூலமாகத்தான் அவன் தனக்கென ஒரு வெற்றிகரமான எதிர்கால பிம்பத்தை உருவாக்கிக் கொள்ள முடியும். பத்ரியையும் பத்ரியின் அப்பாவையும் போல, நிற்கவும் உட்காரவும், உடுக்கவும் நடக்கவும், இருமவும் கொட்டாவி விடவும், பார்வையையும் புன்னகையையும் வெவ்வேறு விதங்களில் பயன்படுத்தவும், அவன் கற்றுக்கொள்ள வேண்டும். இவைதான் அவனை உருவாக்கப் போகின்றன. உயர் வர்க்கத்தின் வாசல்களை அவனுக்காகத் திறக்கப்போகின்றன. அவனுடைய சொந்த அப்பாவும் சரி, விசுவம் போன்றவர்களும் சரி, அவனுக்குப் பயன்படக்கூடியவர்கள் அல்ல. அவனுடைய நட்புகளை, தேவையைக் கருதி அமைத்துக் கொள்ளும் நிர்ப்பந்தத்தில் அவன் இருந்தான். உண்மையின் தேடல், மனஅமைதி, ஆகிய அளவுகோல்களை நிர்தாட்சண்யமாகப் புறக்கணிக்க வேண்டிய நிலையில் இருந்தான். விசுவம் போன்றவர்கள் உண்மையின் பரிமாணங்களைப் பற்றியும் உலக அமைதியைப் பற்றியும் மனித சகோதரத்துவத்தைப் பற்றியும் சிந்திக்க முடியும். இதற்குத் தேவையான பக்கபலம் – அஸ்திவாரம் – அவர்களிடம் இருக்கிறது. கணேசனைப் போன்றவர்களுக்கு இத்தகைய சிந்தனைகள் கட்டுப்படியாகாது. முதலில் அவன் வாழத்தொடங்க வேண்டும். வாழ்க்கையை அனுபவிக்க வேண்டும்.

I want to live, damn it.

அருகில் நின்றிருந்த இரு பெண்கள் உரத்த குரலில் ஏதோ சர்ச்சை செய்துகொண்டிருந்தார்கள், திடீரென்று உரக்கச் சிரித்தார்கள். தன் கவனத்தைக் கவருவதற்காக அவர்கள் பிரயத்தனம் செய்வதுபோல அவனுக்குத் தோன்றியது. அவன் முகத்தைச் சுளித்துக்கொண்டு சற்றுத் தள்ளிப்போய் நின்றுகொண்டான். பெண்களை அவனால் என்றும் சகித்துக்கொள்ள முடிந்ததில்லை. அவனைப் பொறுத்த வரையில் அவர்கள் வெறும் இடைச் செருகல்கள். கடவுளே, இவர்களை எதற்காகப் படைத்தாய்?

பத்ரியின் சேர்க்கை மூலமாகத்தான் பெண்களுடன் பழகும் வாய்ப்புகள் அவனுக்கு ஏற்பட்டன. இந்தச் சந்தர்ப்பங்களை அவன் ரசிக்கவில்லை. ஆனால் இவற்றால் அவன் நிச்சயம் பயனடைந்தான்,

பெண்களைப் பற்றிய அவனுடைய பொது அறிவு விசாலமடைந்தது. பெண் தொடர்பின்றிக் கழிந்த தன் பள்ளி நாட்கள் குறித்து தான் ஏங்கியது அனாவசியமென்பதை அவன் உணர்ந்தான். அவனுடைய அம்மாவும் தங்கையும் ஒரு பானையளவு பெண்களை அளக்கும் பருக்கைகள் என்ற ஞானோதயம் அவனுக்கு ஏற்பட்டது. படித்திருந்தால் என்ன, படிக்காவிட்டால் என்ன? லுங்கியோ புடவையோ அணிந்திருந்தாலென்ன, ஸல்வார் – கமீஸ் அல்லது பெல்பாட்டம்ஸ் அணிந்திருந்தாலென்ன? பெண் இறுதியில் வெறும் பெண்தான். ஓர் எல்லைக்கு மேல் சலிப்புத் தருபவள், தவிர்க்கப்பட வேண்டியவள் – புத்தி பிசகாமல் காத்துக் கொள்வதில் நமக்குச் சிரத்தையிருக்கும் பட்சத்தில். ரோமியோ, மஜ்னு போன்றவர்கள் அவனுக்குச் சிரிப்பைத்தான் உண்டாக்கினார்கள். ஜூலியட் என்ன, லைலா என்ன, எந்தப் பெண்ணும் அதிகமாகப் போனால் ஒரு வாரம் அல்லது பத்து நாட்களுக்குமேல் சகித்துக்கொள்ளப்படக் கூடியவள் அல்ல. பெண் ஆணுக்குச் சில சமயங்களில் தேவையானவள்; சில சமயங்களில் மட்டும்.

பத்ரியின் அம்மாவைப் போன்ற ஒரு பெண்மணியிடம் கூட, பார்வைக்குச் சில குறைகள் தென்படத்தான் செய்தன. சில தருணங்களில் ஏமாற்றம் உண்டாகத்தான் செய்தது. பெண் சிந்தனையால் அணுகப்பட வேண்டியவளல்ல என்று அவன் எங்கேயோ படித்திருந்தான். அது உண்மையென்றுதான் தோன்றியது. சிந்தனைக்கு முதலில் விடுதலையளித்துவிட வேண்டும். அவள் உருவாக்குகிற பிரமைகளில் ஏமாறும் முட்டாளாக வேண்டும். புலப்படாதது புலப்படுவது போலவும், புலப்படுவது புலப்படாதது போலவும் பாசாங்கு செய்ய வேண்டும். என்றாலும் . . .

என்றாலும், சிந்தனைக்கு விடுதலையளிக்கும் உந்துதலையும் வேட்கையையும் எல்லாப் பெண்களாலும் எழுப்ப முடிவதில்லை. பத்ரியின் அம்மா அவனிடம் இதை எழுப்பியிருக்கிறாள். சில சமயங்களில், பல சமயங்களில். இந்தச் சந்தர்ப்பங்கள் அவனைச் சங்கடம்கொள்ளச் செய்திருக்கின்றன. குற்ற உணர்ச்சியை உருவாக்கித் தவிக்க வைத்திருக்கின்றன. ஆனால் தன் உணர்வுகளை அவனால் எப்படித் தவிர்க்க முடியும்? அவளை அவனுக்குப் பிடித்திருந்தது. மிகவும் பிடித்திருந்தது. அவளருகில் தான் எப்போதும் இருக்க முடியவில்லையேயென்று ஏக்கமாக இருந்தது. அவளால் தான் ஆதரவாக அணைக்கப்பட வேண்டும் போலிருந்தது, அவள் பரிமாறிச் சாப்பிட வேண்டும் போலிருந்தது. அவளைப் பார்க்கும் போதே செழிப்பாக விளைந்துள்ள பூமி ஏற்படுத்துவது போன்ற பூரிப்பும் குதூகலமும் உண்டாயிற்று. அவனுடைய போர்வைகளுக்குள், ஆழங்களுக்குள் நுழைந்து கிளர்ச்சியெழுப்பும் சக்தியை அவள் பெற்றிருந்தது அவனுக்குப் பீதியளிப்பதாக இருந்தது; இதமளிப்ப தாகவும் இருந்தது. பத்ரியின் வீட்டுக்கு அவன் வருவது பத்ரிக்காக

மட்டுமல்லவென்று தோன்றியது. இன்று பத்ரியின் அம்மா வீட்டிலில்லாதது அவனுக்கு மிகவும் ஏமாற்றத்தையளித்திருந்தது . . .

ஆனால் கணேசனுடைய அப்பாவுக்கு அவளைப் பிடிக்கவில்லை. பத்ரியின் அப்பாவையும் அவருக்குப் பிடிக்கவில்லை. அவர்கள் வீட்டில் யாரையுமே பிடிக்கவில்லை . . . இல்லை, தப்பு, ஒரே ஒருவரைப் பிடித்திருந்தது. பத்ரியின் தாத்தாவைப் பிடித்திருந்தது. 'மகான் – பரம ஞானி – தர்மிஷ்டர் . . .' என்று வாய்க்கு வாய் அவரைப் புகழ்ந்துகொண்டிருப்பார். பத்ரியின் அப்பாவை இறக்கு வதற்காகவே அவனுடைய தாத்தாவை அளவு மீறிப் புகழ்கிறாரோ என்று சில சமயங்களில் தோன்றும். அவர் – பத்ரியின் தாத்தா –இருந்த வரையில் கணேசனுடைய அப்பா அடிக்கடி அவர்கள் வீட்டுக்குச் சென்றுகொண்டிருந்தார். அவர் இறந்த பிறகு செல்வதில்லை.

ஒரு விதத்தில் இது புரிந்துகொள்ளக் கூடியதுதான். பத்ரியின் அப்பா கணேசனின் அப்பாவுக்கு மேலதிகாரியாக இருப்பவர், அலுவலகத்தில். தன் மேலதிகாரியை அலுவலகத்துக்கு வெளியே சந்திப்பதைப் பலர் விரும்புவதில்லை. அடிமைத்தனம் மீண்டும் மீண்டும் நினைவுப்படுத்தப்படுவதை ரசிப்பதில்லை. கணேசனின் அப்பா மானஸ்தர். தன்னைத்தானே யாருக்கும் தாழ்ந்தவராகக் கருதிக்கொள்ள விரும்பாதவர், வேஷமணிய விரும்பாதவர். இது அவனுக்குப் புரிகிறது. இதை அவன் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் எல்லா விதங்களிலும் அவர் இப்படி இருக்கிறாரா என்ன? திருமணம் செய்துகொள்ளவில்லையா? மனைவியையும் குழந்தைகளையும் சகித்துக்கொள்ளவில்லையா? அனுசரித்துப் போகவில்லையா? ஏன், அவர் காரியதரிசியாக இருக்கும் பக்தி சமாஜத்தில் யார் யாரோ அஜாடபூதிகளை அங்கத்தினர்களாகச் சேர்த்துக் கொள்ளவில்லையா, நன்கொடை வாங்கவில்லையா? பத்ரியின் அப்பாவை மட்டும் ஆசாரமற்றவர், தர்மபிரஷ்டம் செய்தவர், பாபி, என்றெல்லாம் தூற்றிக்கொண்டிருப்பானேன்? ஒரு சொந்தப் பொறாமையினால் எழுந்த பகை என்ற முடிவுக்குத்தான் அவனால் வர முடிந்தது. அவருடைய பூஜையும் ஆசாரமும் ஒரு 'எஸ்கேப்பிஸமாக', பிறரை விடத் தான் மேம்பட்டவனாக இருக்கும் ஒரு பிரத்தியேகமான உலகத்தைச் சிருஷ்டித்துக்கொள்ளும் முயற்சியாகத் தோன்றின.

அவரும் பத்ரியின் அப்பாவும் ஏறத்தாழ ஒரே சமயத்தில் இந்த அலுவலகத்தில் சேர்ந்தவர்கள். ஒரே சமயத்தில் தங்கள் உத்தியோக வாழ்க்கையைத் தொடங்கினவர்கள். பத்ரியின் அப்பா டிபுடி ஸெக்ரடரியாகிவிட்டார். கணேசனின் அப்பா வெறும் செக்ஷன் ஆபீசர்தான். ஒருவேளை பசுபதி வேலையில் உண்மையிலேயே கெட்டிக்காரராக இருக்கலாம். சிரத்தை எடுத்துக்கொள்கிற வராயிருக்கலாம். உழைப்பாளியாயிருக்கலாம் . . . கணேசன் இவ் விஷயத்தில் திறந்த மனதுடன் இருக்க முயன்றான். தன் அப்பாவின் கருத்துக்களை அடிப்படையாகக்கொண்டு முடிவுகளை நிர்மாணிப்

பதைத் தவிர்க்க விரும்பினான். அவனைப் பொறுத்த வரையில் பத்ரியின் அம்மா, அப்பா இருவரும் நல்ல சுபாவமுள்ளவர்கள், அன்பாகப் பழகுகிறவர்கள் ...

அவனுடைய அப்பாவைப் பொறுத்தவரையில், பசுபதி லஞ்சம் வாங்குகிறவர். மேலதிகாரிகளைக் காக்காய் பிடிப்பவர். பலவிதமான உதவிகளை அவர்களுக்குச் செய்பவர் (பலவிதமான, என்பதைக் கண்ணைச் சிமிட்டிக்கொண்டே சொல்வார் கணேசனின் அப்பா). சொந்த மனைவியைப் பயன்படுத்தக்கூடத் தயங்காதவர். கீழே யுள்ளவர்களின் உழைப்பை உறிஞ்சிக்கொண்டு, தானே எல்லாம் செய்ததுபோன்ற பிரமையை உருவாக்கி முன்னேறுகிறவர் ...

சில சமயங்களில், மிகவும் மனம் சலித்திருக்கும் சமயங்களில், தன் அப்பா சொல்வதெல்லாம் உண்மையாக இருக்கலாமென்று அவன் நினைப்பான். பத்ரியின் வீட்டிலிருக்கும் சோபாஸெட், ரேடியோகிராம். டி.வி., ஃபிரிஜ் இவையெல்லாம் நான் அடைந்திருக்க வேண்டியவை, அனுபவித்திருக்க வேண்டியவை என்று நினைப்பான்.

கணேசனின் அப்பாவைப் போன்றவர்கள் உழைக்கிறார்கள். பசுபதியைப் போன்றவர்கள் மிக புத்திசாலித்தனமாக இந்த உழைப்பின் பயனை அனுபவிக்கிறார்கள் ... இப்படிப் பார்க்கும் போது, பத்ரியின் வீட்டின் மீதும், அங்குள்ள வசதிகள் மீதும் அவனுக்கு ஒரு விசேஷ பாத்தியதையும், உரிமையும் நிச்சயம் இருக்கின்றன. சோபாவில் உட்காரும்போதோ, ஃபிரிஜிடேரில் வைத்து எடுத்த குளிர்ச்சியான பழங்களைச் சாப்பிடும்போதோ, அவ்வப்போது அவர்களுடைய காரில் பயணம் செய்யும்போதோ, அவனுக்கு எந்தவிதமான கூச்ச உணர்வும் ஏற்படவில்லை. அவனுக்குச் சொந்தமான ஒரு சலுகையை அனுபவிக்கும் அலட்சிய உணர்வுதான் ஏற்பட்டது. அவனை அப்படி உபசரிக்க அவர்கள் கடமைப்பட்டவர்களாகத் தோன்றினார்கள். உண்மையில் விசுவம் ஆட்டோவில் அவனை ஏறச்சொன்னபோது வீடுவரையில் கொண்டு விடுவானென்று அவன் எதிர்பார்த்தான். அவர்களிடம் பணம் குவிந்து கிடக்கிறது. கொஞ்சம் செலவழியட்டுமே! 'உன்னுடைய முந்தைய தலைமுறை என் முந்தைய தலைமுறையை சுரண்டி உன்னை வசதிபடைத்தவனாக ஆக்கியிருக்கிறது; எனக்குக் கடன் பட்டவனாகவும் ஆக்கியிருக்கிறது. அந்தக் கடனில் கொஞ்சமாவது இப்படித் தீரட்டும், உன் வசதிகளில் எனக்குப் பங்கு தருவதன் மூலம். தருவதென்ன, நானே எடுத்துக் கொள்வேன், பறித்துக் கொள்வேன். எந்த அளவுக்கு இவை உனக்குச் சொந்தமானவையோ அந்த அளவுக்கு எனக்கும் சொந்தமானவைதாம்.'

கணேசனைப் போன்றவர்கள் வாழ்க்கையில் எதையும் பறித்துக் கொள்ள வேண்டியவர்கள், ஒவ்வொன்றுக்கும் சண்டையிட வேண்டியவர்கள். பத்ரி, விசுவம் போன்றவர்களுக்கு எல்லாம் சண்டையிடாமலே கிடைத்துவிடுகின்றன; அவனுக்கு அப்படியில்லை. ஒவ்வொரு கணமும், ஒவ்வொரு அங்குலமும் அவன் சண்டையிட்டாக

வேண்டும்.

இதோ, இன்னொரு பஸ். கணேசன் பரபரப்படைந்தான். இந்த பஸ்ஸையும் தவற விட்டுவிட அவன் விரும்பவில்லை. நடைபாதையி லிருந்து சாலையில் இறங்கி, நிற்குமாறு கையை உயர்த்திப் பஸ்ஸுக்குச் சைகை காட்டியவாறு, சாலை நடுவை நோக்கிச் சென்றான். அவனுடைய செய்கையைக் கவனித்து வேறு பலர் சாலையில் இறங்கி, நடுச்சாலையில் பஸ் வரும் வழியில் கூடினார்கள். பஸ் நின்றது. எல்லாரும் அவரசரமாகப் பஸ்ஸின் வாசலை நோக்கி ஓடினார்கள். திபுதிபுவென்று உள்ளே ஏறத் தொடங்கினார்கள். மூன்று நான்கு திசைகளிலிருந்து மனித அலைகள் பஸ்ஸுக்குள் பிரவேசிக்க முயன்று கொண்டிருந்தன. ஒன்றையொன்று தாக்கிக் கொண்டு இங்குமங்குமாக அலைக்கழிக்கப்பட்டுக்கொண்டிருந்தன. ஒவ்வொரு மனிதனும் இந்த அலைகளிலிருந்து விடுபட்டு பஸ்ஸுக்குள் பிரவேசிக்கச் சில விநாடிகள் பிடித்தன. கண்டக்டர் பொறுமையிழந்துகொண்டிருந்தான். 'சீக்கிரம், சீக்கிரம்!' என்று மணியடிக்கும் கயிறை நோக்கி கையை உயர்த்தினான். கணேசன் இதைப் பார்த்ததும் ஒரு திடீர் ஆவேசத்துடன் தன்னருகில் இருந்தவர் களை முரட்டுத்தனமாகப் பிடித்துத் தள்ளி பஸ் வாசலில் காலடி யெடுத்து வைத்தான். அவனால் தள்ளப்பட்டவர்கள் அவனை வையும் சத்தம் கேட்டது. கண்டக்டர் மணியடித்தான். பஸ் கிளம்பி விட்டது.

இது போன்ற தருணங்களில் அவன் தன்னைத்தானே வெறுத்துக் கொண்டான். ஒரு மிருகத்தைப்போல உணர்ந்தான். அவனைச் சுற்றிலும் ஃபுட்போர்டில் கம்பியையோ, பக்கத்து ஜன்னல் விளிம்பையோ, வாசலின் பக்கங்களையோ பீதியான பலத்துடன், வெறியுடன் பற்றியவாறு தொங்கிக் கொண்டிருந்தவர்கள் – மிருகங்கள், மிருகங்கள், மிருகங்கள். ஒருவர் இப்போது கீழே விழுந்துவிட்டால்கூட மற்றவர்கள் அதிகமாகக் கவலைப்பட மாட்டார்கள். விசுவத்தைப் போன்றவர்களுக்கு மனிதர்களாக இருக்கக் கட்டுப்படியாகும். அவர்கள் நாசூக்கும் இங்கிதமும் உள்ளவர்களாக எப்போதும் இருக்க முடியும். அவனைப் போன்றவர்கள் மிருகங்களாக இருந்ததாக வேண்டும். அப்படி இருந்தால்தான் பிழைக்க முடியும்.

கோல் மார்க்கெட் வருவது வரையில் ஃபுட்போர்டில் அபாயகரமான நிலையில், குளிரில் அவன் அப்படியே நின்று கொண்டிருக்க வேண்டியிருந்தது. பிறகுதான் உள்ளே செல்ல இடம் கிடைத்தது. அங்கும் ஒரு காலைத்தான் சரியாக ஊன்றிக் கொள்ள முடிந்தது. இன்னொன்று அந்தரத்தில் இருந்தது. கைகளுக்குப் பிடித்துக்கொள்ளக் கம்பியோ, ஸீட்டின் மேல்பாகமோ கிடைக்கவில்லையாதலால் பஸ்ஸின் மேல் பாகத்தில் அவற்றைப் பதித்துக்கொள்ள வேண்டியிருந்தது. கைகளில் சாயம் ஆக்கிக்கொள்ள வேண்டியிருந்தது. அவனுக்கு ஒரு கணம் தன் நிலை சிரிப்பைத்

தந்தது – கைலயங்கிரியைத் தூக்கி நிற்கும் சிற்பம் போல . . . இத்தகைய ஹாஸ்ய உணர்ச்சிதான் அவனைக் காப்பாற்றுகிறது.

ஆனால் தன் நிலையை வெறும் ஹாஸ்யமாகத் தள்ளிவிடுவதும் அவனுக்கு ஆபத்தானது. கோபம் அவனுக்குத் தேவை. அதுதான் இந்த நிலையிலிருந்து மீள்வதற்கு, இதற்கு அப்பால் உயருவதற்கு, அவனுக்கு உந்துதல் அளிக்க முடியும். பக்கத்தில் நின்ற ஒருவர் கையிலிருந்து தொங்கிக்கொண்டிருந்த தோல்பை அவனுடைய கால்களுக்கிடையில் உரசிக்கொண்டும் இடித்துக்கொண்டும் இருந்தபோது, டிரைவர் திடீர் திடீரென்று பிரேக் போட்டபோது, அல்லது பள்ளங்கள் காரணமாக பஸ் தூக்கிப் போட்டபோது, அவனுக்கு இந்தக் கோபம் ஏற்பட்டது. இந்தத் தருணங்களில் அருகிலிருந்த ஸீட்டில் தலையில் ஏராளமாக எண்ணெய் தடவி வாரிக்கொண்டிருந்தவன்மேல் சாயாமல் – தன் உடையில் கறைபடாமல் – காத்துக்கொள்ள அவன் சிரமப்பட வேண்டியிருந்தது. கண்டக்டர் டிக்கெட் கொடுத்த பிறகு முத்திரை குத்தப்பட்ட உறையைப் போல, அவனை ஒரு பக்கமாகத் தள்ளியபோது கோபம் வந்தது. அடுத்த ஸ்டாப்பில் பஸ் நின்றபோது இறங்கு பவர்கள் அவனை ஏதோ ஒரு அஃறிணைப் பொருளைப் போல இடித்து ஒதுக்கிக்கொண்டு சென்றபோது கோபம் வந்தது. அவர்களிடையே ஒரு இளம்பெண், அவள்மேல் அவனுடைய உடல் இடிப்பதை அவன் பெருமளவுக்கு தவிர்க்க முயன்றபோதும் கூட தான் ஏதோ அவனால் கற்பழிக்கப்பட்டுவிட்டதுபோல, அவனை முறைத்துப் பார்த்தபோது, அவனுக்குக் கோபம் வந்தது. பிறகு அவனுடைய ஸ்டாப்பிங் வந்து அவன் இறங்கத் தொடங்கும்போது பின்னாலிருந்து ஒருவர் தன் கைகளை அவன் முதுகில் பதித்துத் தள்ளியபோது கோபம் வந்தது. இந்தத் தடவை அது வெளியில் வெடித்தும் விட்டது.

“ஏன் தள்ளுகிறீர்கள்?” என்று அவன் பின்புறம் திரும்பிப் பார்த்துச் சிடுசிடுத்தான்.

“இறங்க வேண்டும் எனக்கு.”

“எனக்கும்தான் இறங்க வேண்டும் – அதற்கு இப்படித் தள்ளுவானேன்?”

“ஏன் இப்படிக் கோபித்துக் கொள்கிறாய் அப்பா, தெரியாமல் கைபட்டுவிட்டது.”

“பலமாகப் பட்டுவிட்டது, அதனால்தான் கோபித்துக்கொள் கிறேன் – தொடாமல் இறங்க முடியாதா என்ன?”

‘போதும், போதும் – அமைதி – இனிமேல் பேச்சை வளர்க்காதீர் கள்’ என்று வேறு சிலர் மத்தியஸ்தம் செய்து வைத்தார்கள். கணேசன் முணுமுணுத்துக்கொண்டே பஸ்ஸிலிருந்து இறங்கினான். வீட்டை

நோக்கி நடக்கத் தொடங்கினான் – 'பன்றிகள்! எருமைகள்!' என்று தன் சக பயணிகளைத் திட்டியவாறு.

பன்றிகள், சகதியில் உருளும், மலத்தை நக்கும் பன்றிகள். இவர்களிடையேயிருந்து அவன் தன்னை விடுவித்துக்கொண்டாக வேண்டும். விடுவித்துக்கொள்ளப் போகிறான். எங்கோ வெளி தேசம் ஒன்றில் தான் நடந்துகொண்டிருக்கும் காட்சி அவன் கண்முன் தோன்றியது. ஃபாரீன் ஸெர்வீஸ் விலையுயர்ந்த ஸுட் அணிந்து, ஒரு கையைப் பாண்ட் பாக்கெட்டில் திணித்துக்கொண்டு, இன்னொரு கையில் 'பைப்'பைப் பற்றியவாறு அடுக்கு மாடிக் கட்டிடம் ஒன்றின் மேல்மாடி ஜன்னல் அருகில் நின்றவாறு வெளியுலகத்தைச் சிந்தனையுடன் பார்த்துக்கொண்டிருக்கும் கணேசன், சட்டென்று திரும்பி ஸெக்ரடரிக்கு டிக்டேட் செய்யும் கணேசன். ஒரு அழகிய பெண் ஸெக்ரடரி. கணேசனை வசியம் செய்ய முயன்று வருபவள். ஆனால் கணேசன் அவளை நெருங்கவிடவில்லை. அவனுக்கு வேறு கவலைகள் இருந்தன. மாலை நேரங்களில் காக்டெயில் பார்ட்டிகள், டின்னர்கள். யார் யாரோ செல்வாக்குள்ள மனிதர்கள், அவர்களுடைய மனைவிகள் ஆகியோருடன் பழகும் வாய்ப்புகள். கணேசனுக்கு மணமாகவில்லையென்று தெரிந்தவுடன் இவர்களில் பலர் அவனிடம் சிரத்தை எடுத்துக்கொள்கிறார்கள். (அவர்களுக்குக் கல்யாணமாகாத பெண்கள் இருக்கிறார்கள்.) அவர்களுடைய அழைப்பை ஏற்று அவர்கள் வீடுகளுக்கு அவன் செல்கிறான். டிரிங்க்ஸ், டின்னர். பெண் பியானோ வாசிக்கிறாள். நள்ளிரவுக்கு மேல் அவன் கிளம்பும்போது போர்ட்டிகோவில் நின்று கையை உயர்த்தி ஆட்டி விடை கொடுக்கிறாள். அவனிடம் கார் இல்லை. அந்த நகரத்தில் இதற்கு அவசியமுமில்லை. இருபத்து நான்கு மணி நேரமும் பஸ்கள் ஓடுகின்றன. பளபளக்கும் புத்தம் புதிய விசாலமான அமைப்புள்ள பஸ்கள். மிக மிருதுவான இதமான குஷன் ஸீட்டுகள். இந்த பஸ் ஒன்றில் ஏறி ஜன்னலருகில் அமர்ந்து வெளியே கண்சிமிட்டும் நியான் விளக்குகளைப் பார்த்தவாறு அந்தப் பெண்ணை மணம் செய்துகொண்டால் தான் அடையக் கூடிய லாபங்களைப்பற்றி கணக்குப் போட்டவாறு தன் அறையை நோக்கிப் பயணம் செய்கிறான் . . .

கதவைத் தட்டினவுடன் அவனுடைய அப்பாதான் வந்து திறந்தார். இது தனியறையல்ல. வீடு.

வீடு!

இரண்டே இரண்டு சிறிய அறைகள். அறை முழுவதையும் அடைத்துக்கொண்டு படுக்கைகள் ஏற்கெனவே விரிக்கப்பட்டு விட்டன. கால் வைக்க இடமில்லை, நடக்க முடியவில்லை. மீண்டும், கூட்டமான பஸ்ஸில் செல்வதுபோல.

அவனுக்கு எரிச்சல் வந்தது. வேஷ்டி பீரோவுக்குள் இருந்தது. பீரோவின் மேல் சாய்ந்துகொண்டு அவனுடைய தங்கை விகடன்

படித்துக்கொண்டிருந்தாள். அவன் அவளிடம் எதுவும் பேசாமல் விறைப்புடன் பீரோத் தாழை நீக்கினான். அவள் நகர்ந்து சுவரோரமாக உட்கார்ந்தாள். பீரோவைத் திறந்து உள்ளேயெல்லாம் புரட்டித் தேடிவிட்டு அவன் சலிப்புடன் திரும்பினான். "என் வேஷ்டி எங்கே போச்சு?" என்றான்.

"வராந்தாவிலே கோட் ஸ்டாண்டிலே இருக்கு" என்றாள் தங்கை, புத்தகத்திலிருந்து கண்ணை எடுக்காமல்.

"அதை அப்பவே சொல்லித் தொலைக்கிறதுதானே?"

"நீ வேஷ்டி தேடறேன்னு எனக்கு ஜோஸ்யம் தெரியுமா என்ன?"

கணேசன் பெருமுயற்சி செய்து கோபத்தை வெளியில் காட்டாமல் வராந்தாவுக்குப்போய் வேஷ்டியை எடுத்துக்கொண்டு அடுத்த அறைக்குச் சென்றான். இங்கும் படுக்கைகள் விரிக்கப்பட்டு விட்டன. அம்மாவுக்கும் தங்கைக்கும் படுக்கை விரிக்கும் ஜோலி தங்கையுடையது. ஒன்பது மணியானால் அவள் விரித்துவிடுவாள். அவளுக்குத் தன் ஜோலி ஆகவேண்டும்; வீட்டில் தன்னுடைய உபயோகத்தை நிரூபித்துக்கொள்ள வேண்டும்; ஒரு டிபிகல் நிலப்பிரபுத்வ சமுதாயப் பெண்ணின் மனப்போக்கு.

இதே அறையில்தான் அவனுடைய தம்பி உட்கார்ந்து பாடப் புத்தகத்தை இரைந்து வாசித்துக்கொண்டிருந்தான். அவன் நெற்றியில் விபூதி இட்டுக்கொண்டிருந்தான். அவன் அருகில் உட்கார்ந்திருந்த அப்பாவும் விபூதி இட்டுக்கொண்டிருந்தார். அவர் காலை தினசரியைப் படித்துக்கொண்டிருந்தார். பக்கத்து வீட்டிலிருந்து இரவல் வாங்கினதாக இருக்கும். அவர்கள் வீட்டில் தினசரி வாங்குவதில்லை. கணேசன் கல்லூரி ரீடிங் ரூமில்தான் தினமும் தினசரி படிக்க வேண்டியிருந்தது.

அப்பா தினமும் தினசரி படிப்பதில்லை. எப்போதாவது அவருக்குச் சிரத்தையுள்ள செய்திகள் வந்திருப்பதாகக் கேள்விப்படும் போது மட்டும் படிப்பார். (சம்பளக் கமிஷன் சிபாரிசுகள், அரசாங்க ஊழியர் டிஸ்மிஸ் செய்யப்பட்ட லஞ்ச வழக்கில் சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு, பெரும் வருமானம் உள்ளோர்க்கு வருமான வரி உயர்வு, காபினெட் மாறுதல்கள், இந்துமத அடிப்படைகளைப்பற்றி விக்யான் பவனில் நடந்த ஸெமினார்.)

தன் தங்கையின் மீது எழுந்த எரிச்சல் தன் தம்பியின் மீதும் அவனுக்கு ஏற்பட்டது. பகல் வேளைகளில் எப்படியிருந்தாலும் மாலையில். அப்பா வீட்டிலிருக்கும்போது, தம்பிக்குக் காலையலம்பி விபூதியிட்டுக்கொண்டு ஸ்தோத்திரம் சொல்லத் தெரிகிறது. பாடத்தை இரைந்து படிக்கத் தெரிகிறது. பள்ளிக்கூடத்தில் இப்படி நடந்தது. கடைத் தெருவில் இப்படியாயிற்று என்று வக்கணையாக (அப்பா தன் பிள்ளையின் கவனிப்புத் திறனையும், கிரகிப்புத் திறனையும், எல்லாவற்றுக்கும் மேலாக தன்னிடம் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும் பாசத்தையும் மெச்சும்படியாக) விவரிக்கத் தெரிகிறது.

அப்பாவுக்குக் குளிப்பதற்கு வெந்நீர் எடுத்து வைக்கத் தெரிகிறது, ஷூவுக்குப் பாலிஷ் போட்டு வைக்கத் தெரிகிறது . . .

அயோக்கியப் படவா!

அவன் கோட்டைக் கழற்றி பீரோவில் மாட்டினான். பாதி வயது குறைந்ததுபோல இருந்தது. அவனுடைய அப்பா தினசரியி லிருந்து ஒரு கணம் தலையை உயர்த்தி, 'இந்த வருஷ முக்கியமான நிகழ்ச்சிகள்னு பட்டியல் போட்டிருக்கான் – எவனோ வெளி நாட்டான்கள் வந்துபோனது இந்த ஜூபிலி, அந்த ஜூபிலி, மந்திரி சபைகள் கவிழ்ந்தது, இடைத்தேர்தல், செத்துப்போன பிரமுகர்கள், அஸ்திவாரங்கள். இதைத் தவிர வேறே ஈவெண்ட்ஸே இந்த வருஷம் இல்லாமல் போயிடுத்தா? இந்திராகாந்தி சொல்றதிலே நிஜம் இல்லாமல் இல்லை. நம்ம தினசரிகள் சொஸைட்டி – அட் லார்ஜை – சராசரி மக்களைப் பாதிக்கிற வாழ்க்கையம்சங்களைக் – கம்ப்ளீட்டா இக்னார் பண்ணிடறான்கள்' என்று பெரிதாகச் சொற்பொழிவு ஆற்றத் தொடங்கினார். அவன் வருவதற்கென்றே அவர் காத்திருந்தது போலத் தோன்றியது. கணேசன் கல்லூரியில் சேர்ந்ததிலிருந்து அவர் அடிக்கடி இதுபோல – அவருக்கு வழக்கமாயிருந்ததை விட அதிகமாக ஆங்கிலப் பதங்களைப் பயன்படுத்திக்கொண்டு, செயற்கையான பாணியில் அவனுடன் பேசத் தொடங்கியிருந்தார். அவனைக் காரணமாக வைத்து அவர் ஒரு பிம்பத்தை அணிய முயலுவது போலிருந்தது. மகனுடன் சகஜமாக அளவளாவும் ஒரு நவீனமான இன்டெலக்சுவல் அப்பா. ஹூம் –அரைவேக்காட்டு பிம்பம்! கீழே வேஷ்டியைத் தார்பாய்ச்சிக்கொண்டு, மேலே டெரிலின் ஸ்லாக்கும் டையும் அணிந்திருப்பது போன்ற தோற்றம் . . .

-You look like a buffoon father.

"என்னவோ போடறான்கள்" என்று சமத்காரமாகச் சொல்லிய வாறு அவன் பாண்ட்டைக் கழற்றத் தொடங்கினான். அதே சமயம் மூக்கில் வியர்த்தது போல அவனுடைய அம்மா அறை வாசலில் வந்து நின்றாள். அவன் உடைகளைக் கழற்றும் போதெல்லாம் அவளுக்கு எப்படியாவது, எங்கிருந்தாவது, வந்து நின்றுவிட வேண்டும். கண்கொட்டாமல் அவனைப் பார்த்துப் பெருமூச்சுவிடவேண்டும். 'உடம்பையே பார்த்துக்கறதில்லை, உடம்பு மோசமாயிட்டேயிருக்கு. சொன்னா கேக்கறயளா' என்று முணுமுணுத்து அவன் எரிச்சலைக் கிளப்ப வேண்டும். தம்பி பிறந்து பத்து வருடங்களுக்கு மேலாகின்றன. ஒருவேளை, கணேசனுடைய இளம் ஆண் உடம்பு – அவனுடைய வார்ப்படத்தில் ஆனது –அவளிடம் பழைய நினைவுகளை, தாபத்தை, எழுப்புகிறதோ? அவனைப் பலஹீனனாக வர்ணனை செய்வதன் மூலம் தன் மடியில் இன்னமும் கிடப்பவனாக, அவள் அணைப்புக்குத் தவிப்பவனாக, அவனை உருவகப்படுத்திக்கொண்டு ஒரு வக்கிரமான இன்பம் அடைகிறாளோ?

- mother, you make me feel lousy.

கணேசன் பாண்டிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு வேஷ்டியில் சிறைப்பட்டான். அப்போது அவனுடைய தம்பி திடீரென நினைவு வந்தவன்போல. "அண்ணா! நீ அனுப்பிச்ச ஒண்ணு திரும்பி வந்திருக்கு!" என்று ஷெல்பில் புத்தகங்களுக்கிடையில் தேடி ஒரு நீண்ட கவரை மிகவும் பணிவுடன் கணேசனிடம் வந்து நீட்டினான். உள்ளுக்குள் அவனுக்குக் கொண்டாட்டம்; கணேசனுக்கா தெரியாது? அண்ணாவுடைய தோல்வி அவனுடைய வெற்றி. அவன் தோல்வியடைந்துகொண்டிருப்பது வரையில், அவன் கதை கட்டுரைகள் எழுதுவது அவனுடைய அப்பாவுக்கு நேரத்தின் வீண் செலவாகத் தோன்றும். அவருடைய கண்டனத்துக்குள்ளாகும். கணேசனின் தம்பி கருத்தாகப் பாடங்களை மட்டும் படிக்கிறான். கணேசன் ஏதோ எழுதிப் பொழுதை வீணடிக்கிறான். தம்பி சமர்த்து; அண்ணா அசடு.

அயோக்கிய ராஸ்கல்!

கணேசன் தன் முகத்தில் எந்த மாறுதலையும் காண்பிக்காமல். அந்த உறையைக் கோட் பாக்கெட்டில் திணித்தான். பாத்ரூமுக்குச் சென்று காலையலம்பிக்கொண்டு சாப்பிட உட்கார்ந்தான்.

"அந்தத் தட்டிலே பிரசாதம் வச்சிருக்கு – முதல்லே இட்டுக்கோ ... கோவிலுக்குப் போயிருந்தோம் இன்னிக்கு" என்றாள் அம்மா.

அவன் வேண்டாவெறுப்பாக எழுந்து, பிரசாதத்தை நெற்றியில் இட்டுக்கொண்டு மீண்டும் சாப்பிட உட்கார்ந்தான். திரும்பிவந்த கட்டுரை கல்வி முறையில் சீர்திருத்தம் பற்றியது. ஸண்டே மகஸீனுக்கு அனுப்பியிருந்தான். ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள், சமூக அமைப்பு எல்லோரையும், எல்லாவற்றையும் அதில் கண்டித்திருந்தான். மிகக் கடுமையானதாக அவர்களுக்குப் பட்டது போலும். முட்டாள்கள். கோழைகள் ...

'போறும்! போறும்!' என்று அவன் பிசைந்துகொண்டு சாப்பிடத் தொடங்கினான். அவனுடைய அம்மா தொட்டுக்கொள்வதற்கு இரண்டே இரண்டு அப்பளங்களைப் போட்டாள். மாதத்தின் கடைசி நாட்கள் வந்துவிட்டால் அவர்கள் வீட்டில் எல்லாவற்றுக்கும் பற்றாக்குறை வந்துவிடும். பருப்பிருக்காது. நெய்யிருக்காது. கறிகாய் இருக்காது. சீனி இருக்காது ...

கோழைகள். வழாவழா கொழகொழாவென்ற நகைச்சுவைக் கதைகள், எஸ்டாப்ளிஷ்மெண்ட் எழுத்தாளர்களின் கட்டுரைகள் இவையெல்லாம்தான் அவர்களுக்கு வேண்டும். உண்மையைப் பிரசுரிக்கத் தைரியம் கிடையாது. புதுமையை உணரும் நுட்பம் கிடையாது. முட்டாள்கள்.

எண்ணங்களில் ஆழ்ந்து வேகமாகச் சாப்பிட்டுக்கொண்டே சென்றவன், திடீரென்று அம்மாவால் உற்றுப் பார்க்கப்பட்டுக் கொண்டிருப்பதை உணர்ந்தான். பிறகு சரியாகச் சாப்பிட முடிய

வில்லை. ஏன் இவள் என்னை இப்படிப் பார்க்க வேண்டும்? அவனுக்கு ஆத்திரம் பொங்கியது. உரத்த குரலில் வைய வேண்டும் போலிருந்தது அவளைக் கண்மூடித்தனமாகத் தாக்கிவிட்டு ஓட வேண்டும் போலிருந்தது. சமைத்துவிட்டு பேசாமல் இருக்க வேண்டியது தானே! ஒவ்வொருவரும் ஒவ்வொரு வாய் சாப்பிடும்போது முகத்தை முகத்தைப் பார்த்துக்கொண்டு, 'கறி பிடிக்கலையா? ரசத்திலே உப்புப் போறலையா? ஏன் இப்படிப் பிசையறே –சாதம் வெந்தது போறலையா?' என்று ஓயாமல் நச்சரித்துக்கொண்டு . . .

அம்மாவிடமிருந்து, சமையலறையிலிருந்து தப்பித்துக்கொண்டு முன் அறைக்கு வந்து, தங்கை படித்து வைத்திருந்த விகடனைக் கையிலெடுத்துப் புரட்டினான். "நீ ஊறப் போட்டிருந்த சட்டை யெல்லாம் துவைச்சு வச்சிருக்கேன்" என்றாள் தங்கை. கணேசனுக்கு மீண்டும் எரிச்சல் வந்தது. 'உம்' என்று தங்கையிடமிருந்து தப்பித்துக் கொண்டு அடுத்த அறைக்குச் சென்றான். இவள் எதற்காக இதை யெல்லாம் செய்ய வேண்டும்? அவளுக்குக் கடன்பட்டவன் போன்ற குற்ற உணர்வை அவனிடம் எழுப்ப வேண்டும்? பீடை, சனியன். தன் ஜோலியைப் பார்த்துக்கொண்டு இருப்பது கிடையாது . . . ஆனால் யோசிக்கும்போது அவளுக்கென்று ஜோலியும் இல்லைதான். ஏதாவது உருப்படியான ஆசை, துடிப்பு இருந்தால்தானே? அசமஞ்சம். விகடன் படித்துக்கொண்டு, துணி துவைத்துக்கொண்டு, வீட்டை ஒழி ஒழியென்று ஒழித்துக்கொண்டு, வேஷ்டியைத் தினம் ஒரு இடத்தில் வைத்துக்கொண்டு . . .

Sister, why don't you get lost?

தூக்கம் வருவது போலிருந்தது. இப்போது அவன் தூங்க முடியாது. வராந்தாவில்போய் உட்கார்ந்து, கம்பளியால் தலை, உடம்பு எல்லாவற்றையும் போர்த்திக்கொண்டு, படிக்கத் தொடங்கினான். அவனுடைய அப்பா அறைக்குள் அவன் எளிதாகப் பார்வையில் படக்கூடிய கோணத்தில் உட்கார்ந்திருந்தார். தான் விளக்கை யணைத்துவிட்டுப் படுத்துக்கொண்ட பிறகும்கூட அவர் அவனைப் பார்த்துக்கொண்டிருப்பார். புத்தகத்தின் பக்கங்களை அவன் புரட்டுகிறானா, உண்மையிலேயே படிக்கிறானா என்று உற்றுக் கவனிப்பார். அவரிடமிருந்து தப்பிக்க வேண்டுமென்றால் வீட்டை விட்டு வெளியே சென்றால்தான் உண்டு. அவரைப் பொறுத்த வரையில் அவனுடைய படிப்பு அவருக்கு ஒரு முதலீடு. அவனுக் கென ஒரு நல்ல பதவியின் வடிவத்தில், அவருக்கென ஒரு வசதி மிகுந்த முதுமைப் பருவத்தின் வடிவத்தில் அது பலனளித்தாக வேண்டும்.

கணேசன் படிக்காமலேயே ஒரு பக்கத்தைப் புரட்டினான். 'ஸாரி ஓல்ட்மான், உன்னை விட்டுப் பல்லாயிரம் மைல்களுக்கப்பால் நான் செல்லப் போகிறேன். என்னுடைய வாழ்க்கை பஸ்ஸில் எந்தவிதமாக பாசஞ்சர்களையோ அல்லது வேண்டாத லக்கேஜையோ

ஏற்றிச் செல்வதாக இல்லை . . .'

தூரத்தில் எங்கோ மாதாகோவில் மணி அடிக்கும் சத்தம் கேட்டது. இன்னொரு வருடம் முடியப் போகிறது. இன்னொரு வருடம் பிறக்கப் போகிறது. அப்பா இப்படியே ஆபீசில் மற்றவர் களால் ஒடுக்கப்பட்டவராகவும், வீட்டில் மற்றவர்களை ஒடுக்குபவ ராகவும், தொடரப் போகிறார். அம்மா வீட்டின் நான்கு சுவர் களுக்குள் வளைய வளைய வந்துகொண்டிருக்கப் போகிறாள். அற்ப விஷயங்களில் உழன்று உழன்று தானும் புழுங்கிச் சலித்துக் கொண்டு தன்னைச் சுற்றியுள்ளவர்களுக்கும் சலிப்பைத் தரப் போகிறாள். தங்கை அப்பாவைப் போல ஆகப் போகிறாள். இன்னொரு வருடம், இன்னொரு வருடம், இன்னொரு வருடம், இன்னொரு வருடம் . . .

பிறகு கணேசன் சென்றுவிடுவான். இவர்களை விட்டு, இந்தத் தேசத்தை விட்டு, வெகு தூரத்தில் சென்றுவிடுவான்.

# 14

பன்னிரண்டு மணி அடித்ததும் சம்பிரதாயமாக விளக்குகள் அணைந்தன. ஒரு நிமிடம் கழித்து மறுபடி எரிந்தன. எல்லோரும் அருகில் நின்றிருந்த, அல்லது உட்கார்ந்திருந்தவர் கையைப் பற்றிக் குலுக்கினார்கள். கட்டித் தழுவிக்கொண்டார்கள். சிலர் அருகிலிருந்தவர்களுடன் திருப்தியடையாமல் – அல்லது அவர்களை விட்டு அகல இதை ஒரு வாய்ப்பாக்கிக்கொண்டு – அறையில் குறுக்கும் நெடுக்குமாக நடந்து அங்கிருந்த ஒவ்வொருவரையும் தொட்டுப் புன்னகைசெய்து, கைகுலுக்கி அல்லது கட்டிக் தழுவிக் கூறினார்கள்:

ஹாப்பி நியூ இயர்!

ஆம், புதுவருடம் பிறந்துவிட்டது. புத்தம் புதியது. இன்னும் தொப்புள் கொடிகூட அறுக்கவில்லை, கழுவப்படவில்லை. சற்றே அழுக்கானது, ஆனால் தூய்மையானது. இந்தக் கைகுலுக்கல்களும், தழுவல்களும் மட்டும் உண்மையானதாயிருந்தால் இந்த வருடம் முழுதுமே எவ்வளவு நேசம் நிறைந்ததாகவும் இனிமையானதாகவும் இருக்கும்! ஆனால் இந்தச் சகோதர பாவம் சில வாய்கள் மதுவருந்திய பிறகு நள்ளிரவுக்குமேல் ஏற்படும் நெகிழ்ச்சி, பிரமை, சுய ஏமாற்று. அல்லது ஒருவேளை இதுதான் உண்மையா? இவர்கள் அநேகமாகத் தினந்தோறும் இரவுகளில் மதுவருந்தியவாறுதான் இருக்கிறார்கள், பகல்களை மறப்பதற்காக, பகலில் அணியும் வேஷங்களை மறப்பதற்காக.

அப்படியானால் பகல்கள்தான் பொய்யா? வெய்யிலும் வெளிச்சமும்தான் பொய்யா? இரவுதான் உண்மையானது போலும், ஏனெனில் அதுதானே வெளிச்சமில்லாதது. கண் கூச வைக்காதது, இதமானது? ஆம். இருள்தான் இதமானது. இருள்தான் பாது

காப்பானது. இருள்தான் பிரமைகளை உருவாக்கி கொடூரமான யதார்த்தத்திலிருந்து காப்பாற்றுவது. இருள் மெத்தென்ற ஒரு பட்டு மெத்தை, ஆதரவுடன் அரவணைக்கும் போர்வை.

இருள் ஒரு போர்வை, மது ஒரு மருந்து. இறுக்கமான வேஷங்களைக் களைந்து இளைப்பாற உதவும் மருந்து. சலித்துப்போன பிம்பங்களைக் கரைத்துப் புதிய பிம்பங்களை உருவாக்கும் மருந்து.

பிம்பங்கள், இமேஜஸ் . . .

வருடப்பிறப்பு தினத்தன்று புதுவருடத்தின் பிம்பம். பிறகு வருடத்தின் இடையிலும், முடிவிலும் அதன் பிம்பம் . . . எப்படி மாறிவிடுகிறது!

நாளைக் காலையிலேயே மாறிவிடும். வருடம் பழையதாகிவிடும், அதன் தூய்மையை இழந்துவிடும். பிறகு இரவு வரும். மறுபடி இவர்கள் மதுவருந்துவார்கள். வருடம் பழசாகிவிட்டதை மறப்பதற்காக, தாங்களும் தங்களுடைய வேஷங்களும் இன்னொரு நாள் நீடித்துவிட்டதை மறப்பதற்காக, தாங்களே உருவாக்கிய சிறையிலிருந்து மீள்வதற்காக . . . இவர்களைப் பொறுத்தவரையில், தினம் வருடம் பிறக்கிறது; தினம் மடிகிறது. இரவெல்லாம் இவர்கள் மதுவருந்துகிறார்கள். இரவு முடியவே கூடாதென்று விரும்புகிறார்கள்.

ஆனால் இரவு மடிந்துவிடுகிறது, பகல் பிறந்துவிடுகிறது. வருடத்துக்கு வயதாகிவிடுகிறது. இவர்களுக்கு வயதாகி விடுகிறது. மதுவுக்கு வயதாகிவிடுகிறது.

வயதாக வயதாக மதுவின் ருசி கூடுகிறது. மெல்ல அதை உறிஞ்சும்போது காலம் ஸ்தம்பித்துவிட்டது போன்று உணர முடிகிறது. தினம் வருடம் பிறக்கிறது. தினம் இவர்கள் பிறக்கிறார்கள். தினம் மது மடிகிறது, இவர்களுக்குள் . . .

விசுவம் தன் கையில் பற்றியிருந்த தம்ளரில் யாரோ விஸ்கியை விட்டுச் சென்றார்கள். 'ஸோடா?' என்றான் அருகிலிருந்தவன். 'ப்ளீஸ்' என்று விசுவம் தம்ளரை நீட்டினான். தம்ளர் நிறைந்தது. ஒருவாய் உறிஞ்சிவிட்டு, தம்ளரை மேஜை மீது வைத்தான். தொண்டையில் கனமாக ஏதோ அடைத்துக்கொண்டிருப்பது போன்ற உணர்ச்சி; விஸ்கியைச் சிரமப்பட்டு விழுங்க வேண்டியிருந்தது. நிறுத்தவேண்டிய தருணம் வந்துவிட்டது போலும்.

முகத்தின் இருபுறங்களிலும் கன்னச் சதைகள் விலுக் விலுக் கென்று இழுத்துக்கொண்டன. காரமாக ஏதாவது சாப்பிட வேண்டும் போலிருந்தது. அவர்களுடைய மேஜை மேலிருந்த பலகாரத் தட்டுகள் – சற்று முன்பு வரை பாலேட்டுப் பக்கோடாக்கள், மிளகாய்ப் பக்கோடாக்கள், தக்காளி, வெங்காய நறுக்குகள், உருளைக் கிழங்கு வருவல், சில முட்டை, சிக்கன் தயாரிப்புகள் ஆகியவற்றால் நிரம்பியிருந்தவை – இப்போது காலியாகக் கிடந்தன. காலியான பிளேட்டுகளில் தெரிந்த எண்ணெய்க் கறைகள், எண்ணெய்க்

கறையின்மேல் தீற்றப்பட்ட இழுப்புக் கோடுகள், சுழிகள், வட்டங்கள், பலகார மிச்சங்கள், மேஜை மேல் சிதறியிருந்த பலகாரத் துணுக்குகள். சிகரெட் துணுக்குகள், சிகரெட் சாம்பல். ஆஷ்டிரே எப்போதோ நிரம்பிவிட்டிருந்தது. அதனால்தான் மேஜையை உபயோகிக்கும்படி ஆகிவிட்டது. கசக்கிப் பந்தாக்கப்பட்ட ஒரு காலி சிகரெட் பாக்கெட் ஆஷ் டிரேக்குள்ளிருந்து ஜிகினா நாக்கை நீட்டியவாறு பரிதாபமாக எட்டிப் பார்த்துக்கொண்டிருந்தது, நீரில் விழுந்து தத்தளிக்கும் மனிதன் மூச்சுக்காகத் தலையை உயர்த்துவது போல. அப்புறம் கண்ணாடி தம்ளர்கள், கால், அரை, முக்கால் நிரம்பிய தம்ளர்கள். விரல் கறைகள் படிந்த தம்ளர்கள், ஸோடா பாட்டில் திறக்கும் சாதனம். ஒரு சிகரெட் லைட்டர். விசுவத்துக்கு ஸெஸானின் ஒரு 'ஸ்டில் லைஃப்' ஓவியத்தைப் பார்ப்பது போலிருந்தது. அந்த மேஜையை இப்போது ஒரு ஓவியமாக வரைந்தால், அது ஒரு சமூகத்தின் சித்திரமாக, குறியீடாக இருக்குமென்று தோன்றியது ... ஆப்டர் தி பார்ட்டி!

ஆனால் இந்தப் பார்ட்டி இன்னமும் முடியவில்லை. அவன் திரும்பிப் பார்த்தான். பக்கத்து மேஜையில் ஒரு தட்டில் சுட்ட அப்பளங்கள் வைத்திருந்தன. அவன் அங்கிருந்து ஒரு அப்பளம் எடுத்து வரலாமென்று எழுந்தான். கால்கள் எடைமாறிப் போனவை போல, அவனுக்கே அந்நியமாகிவிட்டவை போல, ஒவ்வொரு அடியெடுத்து வைப்பதையும் அவனுக்கு ஒரு சிக்கல் நிரம்பிய பிரச்னையாகச் செய்தன. ஒரு கணத்துக்கு அவனுக்குக் குதூகலமும் அதிசயமான விடுதலை உணர்வும் ஏற்பட்டன. நடப்பது என்னும் புளித்துப்போன செயல்கூட எப்படி ஒரு சவால் நிரம்பிய பரபரப்பான நிகழ்ச்சியாகிவிட்டது! 'மது வாழ்க' என்று நினைத்தான். புதிதாக நடை கற்றுக்கொள்ளும் குழந்தையைப்போல அவன் உணர்ந்தான். பசுமையாக, இலேசானவனாக, உணர்ந்தான். டஸ்டரால் துடைக்கப்பட்ட கரும்பலகையைப் போல. யாராவது அவனை இப்போது கத்தியால் குத்தினால்கூட அதை அவன் வரவேற்பா னென்று தோன்றியது. அவன் ஏதோ ஒரு வகையில் புதுமையாக உணரக்கூடுமென்பதால், அவனுடைய சலிப்பூட்டும் சுவாபிகத்தன்மை கலைக்கப்படுமென்பதால்.

அப்பளத்தை எடுத்துக்கொண்டு மீண்டும் தன் இடத்தில் வந்து உட்கார்ந்தான். ஒரு கையில் அப்பளத்தைப் பற்றிக்கொண்டு 'படக்' கென்று அதில் சிறிது வாயில் கடித்துச் சுவைத்து, இன்னொரு கையால் விஸ்கித் தம்ளரை உயர்த்தி ஒரு வாய் உறிஞ்சி, மீண்டும் அப்பளத்தைக் கடித்து, மீண்டும் விஸ்கியை உறிஞ்சி ...

இப்போது அவன் ஒரு குகை மனிதனைப் போல உணர்ந்தான். தான் கற்பனை செய்திருந்த ஓவியத்தில் சுட்ட அப்பளமும் இடம் பெற வேண்டுமென்று அவன் முடிவு செய்தான். அது ஓவியத்துக்கு ஒரு இந்தியத் தன்மையை அளிக்கும். மேஜை மேல் சில அப்பளத்

துணுக்குகள், சில பக்கோடாத் துணுக்குகள் ... ஆப்டர் ஆன் இன்டியன் பார்ட்டி ... அவனுக்குச் சிரிப்பு வந்தது.

விசுவத்தின் முகத்தில் மலர்ந்த சிரிப்பைப் பார்த்து, அவனருகில் பாட முயன்றுகொண்டிருந்த ஒருவன், பாட்டை நிறுத்திவிட்டு அவனும் விசுவத்தைப் பார்த்துச் சிரித்தான். "பெய்ரூட்டில் ஒரு நைட் கிளப்பில் நான் கேட்டது இந்தப் பாட்டு" என்றான்.

"ஓ!" என்றான் விசுவம். அவன் பாட்டைக் கேட்டுத்தான், தான் சிரிப்பதாக எண்ணுகிறானென்றால், அதை மறுக்க அவன் விரும்பவில்லை.

"யூ லைக் இட்?"

"இட்ஸ் லவ்லி."

"ஆம்" என்று அவன் ஒரு கணம் பேசாமலிருந்தான். திடீரென்று விசுவத்தின் தோள்மேல் கை போட்டுக்கொண்டான்.

"யூ நோ, இரண்டு வருடங்களுக்கு முன்னால் கேட்டேன் இந்தப் பாட்டை. இன்னமும் பசுமையாக அது என் மனதில் பதிந்திருக்கிறது. இதேபோல ஒரு நள்ளிரவில் நானும் சில நண்பர்களும் அந்த நைட் கிளப்புக்குச் சென்றிருந்தோம். அங்கே இவள் பாடிக் கொண்டிருந்தாள். ஒரு நீக்ரோ பெண்மணி; என்ன குரல், என்ன பார்வை! முகத்தில் ஒரு அனாயாசமான பாவத்துடன், பற்கள் வெள்ளை வெளேரென்று பளிச்சிடும்படியாகப் புன்னகை செய்தவாறு, உடலை ஆட்டியவாறு, அவள் பாடினாள். நான் அன்று பரவசம் மிக்கவனாக உணர்ந்தேன். அதே சமயத்தில் வெறுமையானவனாகவும் உணர்ந்தேன். நான் எனக்குள் ஒளித்து ஒளித்து வைத்துக்கொண்டிருந்த எதையெதையோ அவள் குரல் தோண்டி எடுத்து, அபகரித்து என்னை பலஹீனனாக ஆக்கியது போலிருந்தது. என்னையே எனக்கு அவள் உணர்த்தியது போலிருந்தது. அதுவரை நான் வாழ்ந்த வாழ்க்கையெல்லாம் அந்தச் சில நிமிடங்களில் பொய்யாகிப்போனது போலிருந்தது."

அவன் பேச்சை நிறுத்திவிட்டுச் சுற்றுமுற்றும் பார்த்தான். விசுவமும் பார்த்தான். பத்மினி இன்னமும் அறைமூலையில் அந்த மருந்துக் கம்பெனிப் பிரதிநிதியுடன் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தாள் - ரயிலில் அவர்கள் சந்தித்த அதே ஆசாமி; பம்பாயிலிருந்து டில்லிக்கு வரும்போது ... விசுவத்துக்கு எரிச்சல் உண்டாயிற்று. அம்மாவை அவன் கண்கள் தேடின. அவளை அங்கே காணோம். அடுத்த அறையில் இருக்கிறாள் போலும். அங்கே சில 'உட்புற விளையாட்டுகள்' விளையாட வசதி செய்யப்பட்டிருந்தது. செஸ், காரம்ஸ், கார்ட்ஸ் ... அல்லது ஒரு வேளை புகை பிடிப்பதற்காக அவள் அந்த அறைக்குச் சென்றிருக்கலாம், அவன் கண்ணெதிரில் பிடிக்க வேண்டாமென்பதற்காக. பத்மினிக்கு இந்தக் கூச்சமெல்லாம் இல்லை. அவள் இதோ, அவன் கண்ணெதிரிலேயே சிகரெட் குடித்து அந்த

இளைஞனுடன் மிகுந்த அந்நியோன்னிய பாவத்துடன் பேசிக்கொண்டிருக்கிறாள், சிரித்துக் கொண்டிருக்கிறாள்.

"உங்களுக்குப் பிடித்திருக்கிறதா இந்தக் கூட்டம்?" என்றான் விசுவத்தின் அருகில் இருந்தவன்.

விசுவம் உதட்டைப் பிதுக்கினான். "நான் வெறுக்கிறேன்" என்றான்.

அவன் இதை ஆமோதிப்பவன் போலத் தலையை ஆட்டினான். "கம் ஆன்" என்று எழுந்து நின்றான்.

'எங்கே' என்ற பாவனையுடன் விசுவம் அவனை நிமிர்ந்து பார்த்தான்.

"வெளியே" என்றான் அந்த இளைஞன். "குளிர்ந்த காற்றைக் கொஞ்சம் சுவாசித்துவிட்டு வரலாம். திஸ் பிளேஸ் பிளடி ஸ்டின்க்ஸ்."

விசுவமும் எழுந்தான். அவன் தின்று முடித்திருந்தான். ஆனால் தம்ளரில் இன்னமும் விஸ்கி மிச்சமிருந்தது. அதைத் தயக்கத்துடன் ஒருகணம் பார்த்துவிட்டு, மேஜைமேல் வைக்கப் போனான்.

"அதையும் எடுத்துக்கொண்டு வாருங்கள்" என்றான் அவன். "என்னிடம் ஒரு பாட்டில் இருக்கிறது. வெளியே போய்க் குடிக்கலாம்."

அவன் திறக்கப்பட்ட இரண்டு ஸோடா பாட்டில்களையும் எடுத்துக்கொண்டு நடந்தான். விசுவம் கையில் தம்ளருடன் அவனைப் பின்தொடந்தான். கால்கள் தள்ளாடின; அவனுக்குத் தன் மீதே சிரிப்பு வந்துகொண்டிருந்தது.

பார்ட்டி மாடியில் நடந்துகொண்டிருந்தது. படிகளில் இறங்கி அவர்கள் கீழே வந்தார்கள். கதவைத் திறந்தவுடன் குப்பென்று குளிர்காற்று வீசியது. அந்தக் காற்றை அனுபவிப்பவன் போல அவன் – அந்த இளைஞன் – ஒரு கணம் வாசலிலேயே நின்றான். பிறகு வெளியே வந்து, வீட்டின் முன்புறமிருந்த புல்வெளியை நோக்கி நடந்தான்.

பனி விழுந்து கொண்டிருந்தது. எங்கும் நிசப்தமாக இருந்தது. எங்கோ மரத்தில் ஒரு பறவை 'கரக் புரக்' என்று தூக்கத்தில் உளறியது; சிறகுகள் அடித்துக்கொள்ளும் சத்தம். சாலையில் லாரி செல்லும் ஓசை. மீண்டும் நிசப்தம்.

"இங்கே உட்காருவோமா?" என்று அவன் புல்தரையில் உட்காரப் போனான்.

"ஈரமாக இருக்கிறதே?" என்ற விசுவம் தயங்கினான்.

இருவரும் புல்தரையில் சற்று தூரம் நடந்தார்கள். ஒரு மரத்தடியில் சிமிட்டிப் பெஞ்சு ஒன்று இருந்தது. அதில் போய் உட்கார்ந்தார்கள். அவன் தன் கோட் பாக்கெட்டிலிருந்து சிறிய விஸ்கிபாட்டில் ஒன்றை எடுத்து தம்ளர்களில் ஊற்றினான்; ஸோடாவைக் கலந்தான். இருவரும் தம்ளர்களைக் கையிலெடுத்துக்கொண்டார்கள்.

"சீர்ஸ்!"

ஒரு வாய் அருந்திவிட்டு மறுபடி அவன் பேசத் தொடங்கினான். "வேடிக்கை என்னவென்றால், அந்த நேரம் கழிந்த பிறகுதான் அதன் முக்கியத்துவத்தை நான் உணர்ந்தேன். அவள் என் மீது ஏற்படுத்திய பாதிப்பு எவ்வளவு விசேஷமானதென்று உணர்ந்தேன். அடுத்த நாள் மீண்டும் அதே நைட் கிளப்புக்குச் சென்றேன். ஆனால் முந்தின தினத்துடன் அவளுடைய காண்ட்ராக்ட் முடிந்து விட்டதென்று அறிந்தேன். அவள் மேற்கிந்தியத் தீவுகளைச் சேர்ந்தவள். அங்கு திரும்பியிருக்கலாம்; அல்லது வேறு தேசத்தில் நைட் கிளப் எதிலாவது பாட ஒத்துக்கொண்டு அங்கே போயிருக்கலாம். யாருக்குத் தெரியும்? ஆனால் அந்தக் குரல் இதுபோன்று எனக்கு நானே உண்மையாக இருக்கும் சந்தர்ப்பம் கிடைக்கும்போது – தளைகளை மறந்து சுதந்திரமானவனாக உணரும்போது – என் காதில் தெளிவாகக் கேட்கத் தொடங்குகிறது; என்னை எது எதற்கோ ஏங்கித் தவிக்கச் செய்கிறது; நான் வாழ்ந்துகொண்டிருக்கும் வாழ்க்கை மீது வெறுப்புக் கொள்ளச் செய்கிறது. எல்லாவற்றையும் விட்டுவிட்டு ஓடிவிட வேண்டுமென்ற வெறியை எழுப்புகிறது."

"அவள்மேல் காதல் இருப்பதாக நினைக்கிறீர்களா?"

"ஹெவன்ஸ்! எனக்குத் தெரியாது. எனக்கு எதுவும் புரியவில்லை – அன்று ஒரு குறிப்பிட்ட மனநிலையில் இருந்ததால்தான் பரவசமாக உணர்ந்தேனோ என்று சில சமயங்களில் தோன்றுகிறது. வேறு யார் பாடியிருந்தாலும் அப்படித்தான் உணர்ந்திருப்பேனோ? அது ஏதோ வெளி தேசம். அங்கு நான் பொறுப்புகளற்ற யாத்திரிகன். அதனால் அப்படி உணர்ந்திருக்கலாமோ என்னவோ? அவளை எப்படியாவது சந்திக்கவேண்டுமென்று தோன்றுகிறது. அதே சமயத்தில் சந்திக்காமலிருந்தால் தேவலையென்றும் தோன்றுகிறது. சந்தித்து, அந்தச் சந்திப்பு ஏமாற்றம் விளைவிப்பதாக இருந்தால்? கடைசியில் எல்லாம் என் கற்பனைதான் என்று ஸ்தாபிதமானால்?"

விஸ்கி பாட்டில் பாதி காலியாகிவிட்டது. விசுவம் அங்கிருந்து மாடியைப் பார்த்தான். கண்ணாடி ஜன்னல்களில் மறுபுறத்தில் ஆண் பெண்கள் நின்றிருப்பதும், அமர்ந்திருப்பதும், அங்குமிங்கும் நடப்பதும் தெரிந்தது. அவ்வப்போது மிதந்து வந்த சிரிப்புச் சத்தங்கள். இங்கிருந்து பார்க்கும்போது அவ்வளவும் அர்த்தமற்றதாகத் தோன்றியது.

"வாழ்க்கை ஒரு புதிர் போன்றது" என்ற அந்த இளைஞன், காலியான ஸோடா பாட்டிலை எடுத்து, பலமாகக் கையை ஓங்கி அதை வீசியெறிந்தான். வெளியே சாலையில் போய் கலீரென்று அது விழுந்து உடையும் சத்தம் கேட்டது.

"உங்களுக்கு மணமாகிவிட்டதா?"

"ஆகிவிட்டது" என்றான் விசுவம்.

"திருமண வாழ்க்கையைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?"

"பத்திரிகை நிருபர் போலல்லவா கேட்கிறீர்கள்?"

"நான் பத்திரிகை நிருபர்தான்," என்று அவன் தான் வேலையாயிருக்கும் தினசரியின் பெயரைச் சொன்னான்.

"அப்படியானால் நான் உங்களிடம் எதுவும் பேசக்கூடாது."

"நான் இப்போது ஒரு நிருபராக உங்களிடம் பேசவில்லை."

"எனக்குத் தெரியாது. திருமண வாழ்க்கையென்பது ஒரு பூதாகாரமான, பயமுறுத்தும் சொற்றொடராகத் தொனிக்கிறது. நான் ஒரு பெண்ணைச் சந்தித்தேன். நாங்களிருவரும் மனமொப்பிச் சேர்ந்து வாழ்கிறோம் – நாளைக்கு என்ன நடக்குமென்று எனக்குத் தெரியாது."

"ஏதாவது நடக்குமென்று எதிர்பார்ப்பது போலல்லவா பேசுகிறீர்கள்!"

விசுவம் பேசவில்லை.

"ஐ ஆம் ஸாரி. டோன்ட் மைண்ட்."

"பரவாயில்லை."

இருவரும் சில கணங்கள் பேசாமலிருந்தார்கள். அவன் பாட்டிலிலிருந்து நேரடியாக விஸ்கியை வாயில் விட்டுக்கொண்டு, விசுவத்தை வேண்டாமென்று சைகை செய்தான்.

நிருபர் கவர்ச்சி நடிகை ஒருத்தியின் பெயரைச் சொல்லி அவளுடன் படுத்துறங்க வேண்டும் போலிருக்கிறதென்றான். கடகடவென்று சிரித்தவாறு எழுந்து நின்று தலைமயிரினூடே கையை விட்டு அளைந்தான். 'மாரியேஜ் இஸ் ஸ்டுபிட்' என்றான். 'ப்ளடி வேஸ்ட் ஆஃப் டைம்'. இதுவரை தன்னுடைய மனதின் மிருதுவான பகுதியொன்றை விசுவத்துடன் பகிர்ந்துகொண்டதற்குப் பச்சாதாபப் பட்டுக்கொண்டு அவன் ஒரு முரட்டு வேஷமணிய முயலுவது போலிருந்தது.

திடீரென்று இடுப்பைப் பிடித்துக்கொண்டு அவன் களக்கென்று வாந்தியெடுத்தான். விசுவம் எழுந்து நின்றான். அவனுக்கு அருவருப்பாக இருந்தது. இப்படி அருவருப்பாக உணருவதற்காகத் தன் மேலேயே கோபமாகவும் இருந்தது. அந்த நிருபரின் அருகில் சென்று அவனை ஆதரவாகப் பிடித்துக்கொண்டான் அதற்குள் அவன் உடல் இன்னும் சில தடவைகள் குனிந்து எழுந்தது. விசுவம் அவனை மெல்ல அந்தப் பெஞ்சிலேயே உட்கார வைத்தான். அவன் ஸ்மரணையற்று அப்படியே பெஞ்சில் சாய்ந்தான். அங்கேயே தூங்கத் தொடங்கினான்.

விசுவம் புல்வெளியில் இங்குமங்குமாக உலாவத் தொடங்கினான். அவனுக்குச் சலிப்பாக இருந்தது; வெறுப்பாக இருந்தது. ஏன் இங்கே வந்தோமென்று இருந்தது. அங்கிருந்து ஓட வேண்டும் போலிருந்தது. அன்று பிற்பகலில் தான் வீட்டில் உட்கார்ந்திருந்ததை அவன் நினைத்துக்கொண்டான். எவ்வளவு அமைதியாகவும் நிம்மதியாகவும்

இருந்தது! இப்போது எல்லாமே மாறிவிட்டது. நாளை முழுதும் – இன்று நிறையக் குடித்ததன் காரணமாக – மந்தமாக உணரப் போகிறான். எவ்வளவு கால விரயம்!

அர்த்தமில்லாத, நோக்கமில்லாத விரயம்.

இலேசான மலர்களின் மணம் நாசியை நிறைத்தது. வேலியோரம் பூத்திருந்த ஒரு அரளிச் செடி. செடிகளருகில் சென்று நின்றான். கீழே உதிர்ந்திருந்த பவழ மல்லிகை மலர்களை எடுத்து முகர்ந்து பார்த்தான். என்ன பரிசுத்தம். என்ன தூய்மை. அங்கேயே புல் தரையில் படுத்துக்கொள்ளலாம் போலிருந்தது. அந்த மரங்களருகில், செடி கொடிகளருகில், தன்னைப் போன்ற மனிதர்களருகில் உணர்ந்ததைவிட, அந்தத் தாவரங்கள்பால் அவன் அன்னியோந்நிய மாக உணரமுடிந்தது. அவன் அவற்றைப் புரிந்து கொண்டது போல, அவை அவனைப் புரிந்துகொள்ளாமலிருக்கலாம். ஆனால் குறைந்தபட்சம் அவை பாசாங்கு செய்யவில்லை, தவறான பிம்பங் களை அணியவில்லை. அரளி அரளியாக இருக்கிறது. பவழ மல்லிகை பவழ மல்லிகையாயிருக்கிறது.

திடீரென்று ஒரு ஒளிக்கீற்று அவன்மேல் விழுந்தது. மாடியில் கதவு ஒன்று திறந்திருந்தது. அதன் வழியே பாய்ந்த வெளிச்சம். அவன் சற்று நகர்ந்து நின்றுகொண்டு, மேலே பார்த்தான். மாடி வராந்தாவில் பத்மினியும் ரயிலில் சந்தித்த இளைஞனும் வந்து நின்றிருந்தார்கள். ஏதோ பேசிக்கொண்டார்கள், மெல்லிய குரலில்... பத்மினி எதற்கோ உரக்கச் சிரித்தாள். அந்த இளைஞன் அவளை அணைத்துக்கொள்ள முயன்றான். அவள் மெல்லத் தன்னை விடுவித்துக்கொண்டு உள்ளே சென்றாள். அவன் பின் தொடர்ந்தான்.

பெஞ்சில் நிருபர் இன்னமும் தூங்கிக் கொண்டிருந்தான். சற்றுமுன் அவனிடம் தான் சொன்னதை விசுவம் நினைத்துக் கொண்டான். ஆம்; நாளைக்கு என்ன நடக்குமென்று அவனுக்குத் தெரியாது. இன்று இனிமேல் என்ன நடக்கப் போகிறதென்பது கூடத் தெரியாது. கையிலிருந்த மலரை வாயில் போட்டு மென்றவாறு, அவன் வீட்டினுள் நடந்தான்.

பம்பாயிலிருந்து டில்லிக்கு ரயிலில் வரும்போது பத்மினி ஜீன்ஸ் அணிந்திருந்தாள் – அவளுடைய பயண உடை; யார் யாருடனோ சிநேகம் பிடித்துக்கொண்டாள், விலாசம் குறித்துக்கொண்டாள். சிலர், இந்த மருந்துக் கம்பெனிப் பிரதிநிதியைப் போல, மணமாகாதவர்கள். நவநாகரிக மங்கையொருத்தியின் நட்புக்குப் பாத்திரமாக வேண்டுமென்ற ஆசை எல்லோருக்குமே இருக்கிறது – குறிப்பாக, இறுக்கமான மத்தியதரச் சூழ்நிலையில் வளர்ந்தவர் களுக்கு, மூட மரபுகளிலும் கட்டுப்பாடுகளிலும் உழன்று சலித்தவர் களுக்கு. ஜீன்ஸ் அணிந்த, தலை மயிரை பாப் செய்து கொண்ட, அகலமான கறுப்புக் கண்ணாடியணிந்த, புகை பிடிக்கும், மதுவருந்தும்,

அமெரிக்கக் கொச்சையில் பேசும் பெண் இவர்களுக்கு விடுதலையின் உருவமாகத் தோன்றுகிறாள். பத்மினியைப் போன்றவர்கள் இந்த ஏக்கத்தைப் பயன்படுத்திக்கொள்கிறார்கள், இந்த 'விடுதலை' பிம்பத்தைத் திட்டமிட்டு அணிகிறார்கள். அப்படி யானால், விஸ்கான்ஸின் யுனிவர்ஸிடியில் நடந்ததென்ன? அப்போது விசுவத்தைக் கவர்ந்தது அவள் அவனுக்காக உருவாக்கிய, அல்லது அவன் மனம் அவளைச் சார்ந்து உருவாக்கிய, ஒரு பிம்பம்தானா? 'வக்கரித்துப்போன கும்பல்' என்று தன் ஜாதிப் பெண்கள் மீதே வெறுப்புள்ளவனாக அவன் இருந்தான்; அப்போது, பத்மினியைச் சந்திக்க நேர்ந்தது. அந்த நிருபர் சொல்வதுபோல, இதெல்லாம் ஒரு மனநிலைதானா?

மாடிக்கு அவன் சென்றபோது அம்மாவையும் பார்க்க முடிந்தது. "எங்கே போய்விட்டீர்கள்?" என்றாள், செல்லமாகக் குற்றம் சாட்டும் தொனியில்.

"தோட்டத்தில் இருந்தேன்."

57259

"மைகாட்! இங்கு வந்துமா செடி கொடிகளை விடமாட்டீர்கள்!"

அவன் அவள் யாசித்த பிம்பத்தை (தோள்களைக் குலுக்கியிருக்க வேண்டுமோ? என் சுபாவம் உனக்குத் தெரிந்ததுதானே என்று முட்டாள்தனமாகப் புன்னகை செய்திருக்க வேண்டுமோ?) அணிய முயலவில்லை. "சுத்தமான காற்றை சுவாசிக்கப் போயிருந்தேன்" என்று அமைதியான குரலில் கூறியவாறு அவளைப் பார்த்தான்.

அவள் அவன் விழிகளைச் சந்திக்கவில்லை. "கிளம்பலாமா?" என்றாள்.

"நான் எப்போதோ ரெடி. அம்மாவைக் கூப்பிடு."

அம்மா லுங்கி அணிந்திருந்தாள். அவன் டில்லிக்கு வந்த அன்று அவனுக்காகக் கதவைத் திறந்தபோது அணிந்திருந்த அதே லுங்கி. அவனுக்கு ஏனோ இப்போது அவளைப் பார்த்தால் மிகவும் கோமாளித்தனமாக இருந்தது. ஒருவேளை அம்மா என்பவள் இப்படித்தான் இருக்க வேண்டுமென்று அவன் தன் மனதில் ஒரு பிம்பம் வைத்துக்கொண்டிருந்தது தவறாயிருக்கலாம். அம்மாக் களுக்கு மட்டும் தம்முடைய பிம்பத்திலிருந்து விடுதலை தேவை யில்லையா என்ன? எல்லாருக்கும் தேவை. அம்மா, மனைவி, கணவன், அப்பா. இதுபோன்ற பார்ட்டிகளில் இந்த வாய்ப்புக் கிடைக்கிறது. நிரந்தரமாகிவிட்ட பிம்பங்களைக் களைந்து எல்லாரும் வேறு பிம்பங்களை அணிய முடிகிறது – அடிமனதில், வெகுநாள் அணிய வேண்டுமென்று ஆசைப்பட்ட பிம்பம். அம்மா தன் இளம்பருவத்தில் இன்றைய இளம்பருவத்தினரைப் போல உடுக்க முடிந்ததில்லை, சுதந்திரமாயிருக்க முடிந்ததில்லை. அதற்கெல்லாம் இத்தகைய தருணங்களில் ஈடுசெய்கிறாள் போலும். அவள் இப்போது டிபுடி ஸெக்ரட்ரியின் மனைவியில்லை. மூன்று குழந்தைகளின்

தாய் இல்லை. ஹவ் நைஸ்! ஆனால் பத்மினியும் இதே போலத் தப்பித்துக்கொள்ள விரும்புகிறாளா என்ன? ஸீரியஸான – தன்னைத் தானே ஒருகணமும் ஏமாற்றிக்கொள்ள விரும்பாத அல்லது இயலாத – ஒரு விஞ்ஞானியின் மனைவியாகவே இருக்க அவள் விரும்பவில்லை போலும். அவளுடைய நவநாகரிக பிம்பம் அவனுக்குச் சலிக்கத் தொடங்கிவிட்டதால், வேறு ஆசாமி களிடையில் அந்த பிம்பத்தை அணிய விரும்புகிறாள். புதுமையாக, கவர்ச்சிகரமாக உணர விரும்புகிறாள். அவன் அவளை வெறும் அவளாகப் பார்த்து ஏற்றுக்கொள்ளத் தொடங்கியிருப்பது அவளுக்குச் சலிப்பைத் தருகிறது போலும். அவன் அவளது வேஷங்களை விரும்பவில்லை. அவளுக்கோ இந்த வேஷங்களின்றி வித்தியாசமாக உணர முடியவில்லை, தன்னம்பிக்கையுடன் இருக்க முடியவில்லை.

குட் நைட்கள்; குட் பைக்கள்.

மருந்துக் கம்பெனிப் பிரதிநிதி விசுவத்திடம் வந்து கைகுலுக்கி விடைபெற்றான். பார்ட்டியின் ஆரம்பத்தில் அவர்கள் சேர்ந்து அமர்ந்திருந்தார்கள். பிறகு விசுவம் அவர்களிடமிருந்து எழுந்து வந்திருந்தான். அவனுக்கு அந்த இளைஞனின் போலியான பேச்சும் தோரணைகளும் சலிப்புத் தரத்தொடங்கியிருந்தன. விசுவம் போன்றவர்கள் மருந்துகளைத் தயாரிக்க உதவுபவர்கள், அவனைப் போன்றவர்கள் இவற்றை மக்களிடையே பரப்ப உதவுபவர்கள் எனும் ரீதியில், மிக அப்பாவித்தனமான மட்டங்களில் அவன் பேசினான். விசுவம் ஒரு சினிமா புரொட்யூஸராம்; அவன் டிஸ்ட்ரிப்யூட்டராம்... விசுவத்துக்காக அவன் ஒரு வேஷமணிய முயலுவது தெளிவாகத் தெரிந்தது. உண்மையில் அவனுக்கு விசுவம் போன்றவர்களிடம் சிரத்தையில்லை, மதிப்பில்லை. புத்தகங்கள் படிப்பதே முட்டாள்தனமானது என்றெண்ணும் முரட்டு, வெளியுலக டைப் அவன். விசுவத்தின்பால் அவனுக்கு ஒரு உதாசீனம்தான், ஏளனம்தான். எப்படி இதுபோன்ற ஒரு அசடுக்கு இவ்வளவு அழகிய, புத்திசாலியான மனைவி கிடைத்தாளென்று நினைக் கிறானோ என்னவோ? பதினைந்து நிமிடங்களுக்குமேல் விசுவத்தால் அவனுடன் ஒரே மேஜையில் அமர்ந்திருக்க முடியவில்லை.

இப்போது அவனுடைய பிரியும் தருணத்துப் பரிவும் புன்னகையும் மறுபடி எரிச்சலைத்தான் அளித்தன. "குட் நைட்" என்றான் அந்த இளைஞன் பத்மினியிடம். "குட் நைட்" என்றாள் பத்மினி.

மூவரும் கீழே வந்து காரில் ஏறிக்கொண்டார்கள். பத்மினிதான் காரை ஓட்டினாள். பாதி தூரம் சென்ற பிறகுதான் விசுவத்துக்கு திடீரென்று சிமிட்டிப் பெஞ்சியில் படுத்திருந்த அந்த நிருபரின் நினைவு வந்தது. பாவம், அவனுக்கு குளிரில் அங்கே படுத்து ஜலதோஷம் பிடிக்கப் போகிறது. பிடித்தாலும் அவனுக்காக யாரும் கவலைப்படப்போவதில்லை. அவனை அப்போதே உள்ளே கொண்டு சேர்த்திருக்க வேண்டும். எல்லோரும் சுயநலக்காரர்கள் தான்.

நானும்கூட அப்படித்தான். அவரவர்க்கு அவரவர் கவலை.

கனாட் பிளேஸ். பத்மினி காரின் வேகத்தைக் குறைத்தாள். "என்ன ஆயிற்று?" என்றாள் பின் ஸீட்டிலிருந்த அம்மா. "ஒரே கூட்டமாயிருக்கிறது" என்றாள் பத்மினி.

ஆம். இந்த நேரத்திலும்கூட ஏனோ இன்று கூட்டமாயிருந்தது. ரெஸ்டாரண்டுகளில் நியூ இயர் பார்ட்டிகள் முடிந்து வருகிற கூட்டமாயிருக்கும் போலும். ஆனால் இவ்வளவு கூட்டமா?

ரீகல் தியேட்டர் அருகே திடீரென்று கார் நின்றது. இல்லை; நிறுத்தப்பட்டது. அப்போதுதான் விசுவம் கவனித்தான். அவர்களுக்கு முன்னால் சென்ற இன்னும் ஓரிரு கார்களும் நிறுத்தப்பட்டிருந்தன. என்ன நடக்கிறதென்று தெரியுமுன்பே அவர்களுடைய காரைச் சுற்றி நிறைய மனிதர்கள் – பெரும்பாலும் இளைஞர்கள் – சூழ்ந்து கொண்டார்கள். படபடவென்று காரின் ஜன்னல்கள் மேல் தட்டினார்கள். அம்மா, பத்மினி இருவர் முகத்திலும் பீதி சூழ்ந்தது. ஆனால் மீண்டும் விசுவத்துக்கு ஒரு பரவச உணர்வுதான் ஏற்பட்டது. ஏதோ நடக்கிறது, பரபரப்பாக நடக்கிறது.

"காட், ஸம்திங் இஸ் ஹேப்பனிங்."

அவனுடைய சலிப்பான வாழ்க்கையில் ஒரு சுவையான சம்பவம்; ஒரு திருப்பம்.

"என்ன செய்வது?" என்றாள் பத்மினி.

"என்ன நடக்கிறது பார்க்கலாம்" என்றான் விசுவம்.

"விர்ரென்று காரை ஓட்டிச் சென்றுவிட்டாலென்ன? இவ்வளவு பேரையும் அடித்துத் தள்ளிவிட்டு" என்று அவள் படபடத்தாள்.

"வேண்டாம்."

திடீரென்று காரின் பின்பக்கத்துக் கதவை ஒருவன் படாரென்று திறந்தான். உள்ளே உட்கார்ந்திருந்த மிஸஸ் பசுபதியின் கையைப் பிடித்து அவளை வெளியே இழுத்து . . .

"விசுவம்!" என்று அம்மா அலறினாள்.

"அம்மா!" என்று பத்மினி பின்புறம் திரும்பி, உதவ முயன்றாள். "ஏதாவது செய்யுங்களேன்" என்றாள் விசுவத்திடம்.

'நான் என்ன செய்ய முடியும்' என்று விசுவம் நினைத்தான். இது அந்த மருந்துக் கம்பெனிப் பிரதிநிதிகள் போன்றவர்கள் பிரகாசிக்கக்கூடிய தருணங்கள். இந்திப்பட ஹீரோக்கள் பிரகாசிக்கக் கூடிய தருணங்கள். ஆனால் ஒரு விஞ்ஞானி, ஒரு சிந்தனையாளன் – சீ! சலித்துப்போன பிம்பங்கள்.

அவன் வெறி வந்ததுபோலக் கார்க் கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தான். சுற்றியிருந்த கூட்டத்தினிடையே இடித்துத் தள்ளிக்கொண்டு காரின் பின்புறம் சென்றான். அம்மாவின் உடைகளைப் பிடித்துக் கிழிக்க முயன்றுகொண்டிருந்தான் ஒருவன். விசுவம்

அவனைப் பலமாகப் பிடித்து இழுத்து பின்புறம் தள்ளினான். இங்குமங்குமாக முஷ்டியை வீசினான்.

அவன் வெறும் விஞ்ஞானியல்ல, கையாலாகாத சிந்தனையாளனல்ல. தன்னுடன் வரும் பெண்மணிகளை காப்பாற்றத் தெரியாதவனல்ல.

கும்! கும்! கும்!

அவன் ஒரு ஹீரோ.

கும்!

அவன் ஒரு குகை மனிதன்.

திடீரென்று அவன் தலையில் பலமாக ஏதோ தாக்கியது. டங்கென்ற சத்தம். இரும்புத் தடியா? அவன் தலையைப் பிடித்துக் கொண்டான். நசநசவென்று ரத்தம், கைமேலெல்லாம் ஒழுகி ஓடியது. ஒரு விஞ்ஞானியின் ரத்தம்.

போலீஸ் ஸைரன்கள் ஒலித்தன. கூட்டம் சிதறி ஓடியது. போலீஸ் வான் அவர்கள் காரருகே வந்து நிற்பதை அவன் மங்கலாக உணர முடிந்தது; மறுகணம் அவன் நினைவிழந்து சாய்ந்தான். யாரோ அவனை விழாமல் தாங்கிக்கொண்டார்கள்.

# 15

அன்புடையீர்,

வருடப் பிறப்புக்கு முந்தின இரவு கனாட் பிளேஸில் நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றி திரு. அவினாஷ் மாதுர் உங்கள் பத்திரிகையில் எழுதியிருந்த கடிதத்தைப் படித்தேன். பெண்கள் இதுபோல பலாத்காரத்துக்கு உள்ளாவதற்குப் பெண்களேதான் ஒரு விதத்தில் பொறுப்பாளியென்றும், இன்றைய நவநாகரிகப் பெண்களின் நடையுடை பாவனைகள் பரம யோகிகளைக்கூட நடத்தை தவறத் தூண்டுவனவாக உள்ளனவென்றும் அவர் எழுதியிருந்தார். இது மட்டுமா? பல பெண்கள் இத்தகைய நிகழ்ச்சிகள் மூலம் ஒரு ரகசியமான இன்பம் பெறுகிறார்களென்பதும், அவர்கள் கூச்சல் போடுவதெல்லாம் வெறும் வெளிவேஷந்தான் என்பதும், ஒரு சில சாரரிடையே பலாத்காரமே செய்யப்படாத பெண்களைப் பலாத்காரம் செய்யப்பட்ட பெண்கள் இகழ்ச்சியுடன் பார்க்கத் தொடங்கியுள்ளனர் என்பதும், திரு. மாதுரின் வேறு சில துணிவுகள். அடேயப்பா! திரு. மாதுரின் கரங்களில் நேரடியான ' பங்கும் அனுபவமும் இருந்திருக்குமோ என்று சந்தேகம் கொள்ள வைக்கின்றன. அல்லது ஒரு வேளை, போன ஜன்மத்தில் அவர் ஒரு பெண்ணாக இருந்திருப்பாரோ என்னவோ? ஆம். அதுவும் சாத்தியம்தான். ஏனென்றால் அவருடைய சில அபிப்பிராயங்கள் ஏறத்தாழ ஒரு நூற்றாண்டு பின்தங்கியவையாகத் தொனிக்கின்றன. உதாரணமாக ஜாம் ஸெஷன்களையும் காக்டெயில் பார்ட்டிகளை யும் யந்திர சமுதாயம் உருவாக்கியுள்ள 'காட்டுமிராண்டிக் கலாசாரம்' என்று அவர் வர்ணிக்கிறார். 'டிஸ்கோதே'க்களிலும் பார்ட்டிகளிலும் முன்பின் அறியாத ஆடவர்களைத் தொட்டு நடனமாடவும், தழுவி முத்தமிடவும் பெண்கள் தயாராகிவிட்ட பிறகு, நடுச்சாலையிலும் இத்தகை நிகழ்ச்சிகள் நடைபெறத் தொடங்கியிருப்பது குறித்து நாம்

அதிர்ச்சியடைய வேண்டியதில்லை என்கிறார் மாதுர். நவநாகரிகப் பெண்கள் குறித்து, 'அவர்கள் எதுவும செய்வார்கள்; எதற்கும் இணங்குவார்கள்' என்ற ஒரு அபிப்பிராயம் – பெர்மிஸிவ் இமேஜ் – சமூகத்தின் பல்வேறு சாராரிடையே, குறிப்பாக இத்தகைய பெண்களுடன் பழக வாய்ப்பில்லாதவர்களிடையே, பரவியுள்ளதாகவும், இதற்கு நவநாகரிகப் பெண்கள்தாம் பொறுப்பாளியென்பதை நாம் மறுக்க முடியாதென்றும் திரு. மாதுர் வாதாடுகிறார். தம்முடைய வாதத்துக்கு ஒத்தாசையாக, இன்றைய இந்திய அரசியல்வாதியைப் பற்றிய – மந்திரிகளைப் பற்றிய – எத்தகைய பிம்பம் மக்களிடையே உருவாகியுள்ளதென்பதை அவர் எடுத்துக்காட்டி, இதற்கு இன்றைய மந்திரிகள்தான் பொறுப்பாளி, அரசியல்வாதிகள்தான் பொறுப்பாளி என்பதை நாம் மறுக்க முடியுமா? என்று கேட்கிறார். காந்தி, படேல் ஆகியவர் காலத்துப் பிம்பங்களுடன் இன்றைய பிம்பங்களை ஒப்பிடுகிறார்.

டியர் மிஸ்டர் மாதுர்! ஒரு சாராரைப் பற்றி உருவாகும் பிம்பத்துக்கு அந்தந்தச் சாரார் பொறுப்பாளியென்பது உண்மையோ இல்லையோ, ஆனால் மக்கள் தாம் விரும்புகிற ரூபத்தில் – பிம்பத்தில் – பிறரைக் காண்கிறார்கள் என்பது மிகவும் உண்மை. இந்த பிம்பம் சிதறும்போது எரிச்சலும் அதிருப்தியும் பீதியும் அதிர்ச்சியும், தவிர்க்க முடியாமல் ஏற்படுகின்றன. விகாரமான கற்பனைகள் ஏற்படுகின்றன. திரு. மாதுர் போன்றவர்கள் நாள் முழுதும் தம் வீட்டிலேயே இருந்து கொண்டு சமையலும், சிற்றண்டியும், காப்பியும் தேநீரும் வேளாவேளைக்குத் தயாரித்து ஆண்களுக்கு அளிப்பதையே தொழிலாகக் கொண்ட – படுக்கை உதறிப் போடுவது, துணி துவைப்பது, ஷூ பாலிஷ் போடுவது என்று பலவிதமாக ஆண்களுக்குச் சிசுரூஷை செய்வதில் இன்பம் காண்கிற – 'மெஸோக்கிஸ' இயல்புள்ள தாய் களாலும், சகோதரிகளாலும் 'கெடுக்கப்பட்டவர்கள்.' இவர்களுக்குப் பெண் ஒரு வாயில்லாப் பூச்சி. தம்முடைய தேவைக்கேற்ப இயங்க வேண்டிய ஒரு யந்திரம். டூத் பிரஷ்ஷையும், ரேஸரையும்போல ஒரு சில தருணங்களில் பயன்படுத்தி, பிறகு மூலையில் வைத்திருக்க வேண்டிய வஸ்து. இவர்கள் விரும்புகிறபோதுதான், விரும்புகிறபடிதான், அவள் சிந்திக்க வேண்டும், பேச வேண்டும், சிரிக்க வேண்டும், உடுக்க வேண்டும், தூங்க வேண்டும். பெண்ணின் இத்தகைய பிம்பம்தான் மாதுர் போன்றவர்களுக்கு இதமானது. பாதுகாப்பானது. எனவே, நவநாகரிகப் பெண் சுயமாகச் சிந்தித்துச் சில வார்த்தைகள் பேச முயலும்போது – தன் விருப்பத்துக்கேற்றவாறு உடுக்கவும், பிற மனிதர்களுடன் பழகவும் தொடங்கும்போது, அவர் அதிர்ச்சி கொள்வதில் வியப்பில்லை. இத்தகைய பெண்கள் அவருக்கு நாணமற்றவர்களாக, பண்பாடிழந்தவர்களாக, பரத்தைகளாகப் போய்விடுவது இயல்புதான். உண்மையில் தம்முடைய இந்த அபிப்பிராயங்களின் மூலம் திரு. மாதுர் தம்முடைய தாய், சகோதரி, மனைவி ஆகியோருக்குத் தாம் எந்தவிதமான ஸ்தானம் அளித்திருக்

கிறாரென்பதை – அவர்களுடன் அவர் கொண்டுள்ள உறவுகளின் தன்மையை – வெளிப்படுத்திக்கொண்டுள்ளாரென்று நான் நினைக்கிறேன்.

'டிஸ்கோதே'க்களிலும் பார்ட்டிகளிலும் திரு. மாதுர் கற்பனை செய்வதுபோல், அல்லது பார்த்திருப்பதாக நினைப்பதுபோல, யாரும் யாராலும் கற்பழிக்கப்படுவதில்லை; பலாத்காரம் செய்யப் படுவதில்லை. மிருக இச்சை கொண்ட மனிதர்கள் களியாட்டம் போடுவதில்லை. அங்கே சில மனிதர்கள் தம்முடைய சமூக வேஷங்கள், பேதங்கள் (ஆண் பெண் பேதங்கள் உட்பட) ஆகிய வற்றை மறந்து ஒருவரையொருவர் வெறும் மனிதர்களாகப் புரிந்துகொள்ள விரும்புகிறார்கள், அவ்வளவுதான். திரு. மாதுர் இதைப் புரிந்துகொள்வாரென்று நான் எதிர்பார்க்க முடியாதுதான்.

தழுவல்களும், முத்தமிடல்களும் இரு மனிதர்களிடையே ஏற்படும் மன உறவின், உணர்ச்சிச் சங்கமத்தின், புரிந்துகொள்ளலின், ஒரு குறிப்பிட்ட பரிணாம கட்டத்தில் யதேச்சையாக நிகழ்கின்றன. அந்தக் கணத்தில் அவர்கள் ஒருவருக்கொருவர் உண்மையாக இருந்தால், பாசாங்கு செய்யாமலிருந்தால், அது ஒரு தூய நிகழ்ச்சி. இல்லாவிட்டால், அது வக்கிரமானது, ஆபாசமானது; சம்பந்தப் பட்டவர்கள் மணமானவர்களானாலும் சரி, மணமாகாதவர் களானாலும் சரி, எல்லா இடங்களிலும் இருப்பதுபோல பார்ட்டி களிலும் மோசமான கருத்துள்ளவர்களும், போலிகளும் இல்லாம லில்லை. ஆனால் தெருவில் நடக்கும் பலாத்காரங்களுடன் இவற்றை ஒப்பிடுவது நேர்மையற்ற, மிகைப்படுத்துவதாகும். குறைந்தபட்சம், இளம் பருவத்தினரின் பார்ட்டிகளைப் பற்றி இதை என்னால் சொல்ல முடியும். இளம் பருவத்தினரின் கேளிக்கைகளை – கலந்துற வாடலை – மாதுரைப் போன்ற பெரியவர்கள் வக்கிரப் பார்வை யுடன் நோக்கும்போதும், இத்தகைய நிகழ்ச்சிகளை அவர்கள் காப்பியடிக்க முயலும்போதும்தான், பாசாங்குகளும் விபரீதங்களும் உண்டாகின்றன.

'மேட்டுக்குடி மக்கள், மேட்டுக்குடி மக்கள்' என்று திரு. மாதுர் தம் கடிதத்தில் குறிப்பிடுகிறார். திரு. மாதுர் எந்தக் குடியைச் சேர்ந்தவரென்று நான் தெரிந்து கொள்ளலாமா? அவரால் ஆங்கிலத்தில் கோர்வையாகச் சிந்திக்க முடிகிறது; ஆங்கிலத் தினசரிக்கு ஆங்கிலேயர்களையே வெட்கமடையச் செய்யும் மொழி யறிவுடன் கடிதமெழுத முடிகிறது. அவர் நிச்சயம் ஒரு பின்தங்கிய வகுப்பினரோ, படிப்பு வாசனையற்ற கிராமவாசியோ அல்லர். எவ்வளவு அழகாக, எவ்வளவு பேர் படித்து ரசிக்கும்படியாக எழுதியிருக்கிறார்! மிஸ்டர் மாதுர், அரசியல்வாதிகளைச் சாடி யிருக்கிறீர்களே, உங்களுடைய பொறுப்புகளைப் பற்றி யோசித்தீர் களா? நீங்களும் உங்களைப் போன்றவர்களும் நாட்டுக்காக என்ன செய்திருக்கிறீர்களென்று நினைத்துப் பார்த்தீர்களா? உங்களைக் கவலை கொள்ளச் செய்யும்,

மனத்தை உறுத்தும், பிரச்னை களைப்பற்றி காஃபி ஹவுஸிலோ, பஸ் ஸ்டாண்டிலோ, பார்க் பெஞ்சிலோ காரசாரமாகச் சொற்பொழிவாற்றுகிறீர்கள்; தினசரிக்கு ஒரு கடிதம் எழுதுகிறீர்கள்; அவ்வளவுதான்.

உங்கள் பகல் நேரங்களை அநேகமாக ஏதாவதொரு ஸ்தாபனத்துக்கு, குறிப்பிட்ட ஒரு மாதச் சம்பளத்துக்கு விற்றிருப்பீர்கள் – மனச்சாட்சிக்கு உடன்பாடற்ற காரியங்களை அந்தச் சம்பளத்தின் பொருட்டுச் செய்யவேண்டிய நிர்ப்பந்தத்தில் இருப்பீர்கள். உங்களுடைய சிந்தனைச் சுதந்திரம், செயல் சுதந்திரம் யாவும் பறிக்கப்பட்டிருக்கும். இந்த நிலைமை ஏற்படுத்தும் குற்ற உணர்வுகளிலிருந்து விடுதலை பெறுவதற்காக, அரசியல்வாதிகளை, அரசியல் அமைப்பைச் சாடுகிறீர்கள். இதில் உங்களுக்கு ஒரு ஆறுதல் கிடைக்கிறது; அமைப்பே தவறானதென்று சுட்டிக்காட்டுவதன் மூலம் அமைப்பின் ஒரு சிறு மூலையில் நீங்கள் செய்யும் சிறு தவறுகள் தவிர்க்க முடியாதவை போலவும், மன்னிப்புக்குரியவை போலவும் தோன்றுகின்றன. ஆனால் இது ஒரு மயக்கம்; ஒரு மாஸ்டர்பேஷன். ஆமாம், மிஸ்டர் மாதுர்; நம் நாட்டுச் சிந்தனையாளர்களின் செயலார்வமோ செயல் திறனோ அற்ற மலட்டுத்தனம்தான் நம் தேசத்தை வீழ்ச்சியடையச் செய்து கொண்டிருக்கிறது.

காந்தியின் பெயரையும், படேலின் பெயரையும் ஆதங்கத்துடன் எடுத்துச் சொல்லி, இன்றைய தலைவர்களைப் பார்த்துப் பெருமூச்செறிகிறீர்கள். ஆனால் உங்களுடைய சொந்த வாழ்க்கையைப் பொறுத்தவரையில் உங்களுடைய சிறுவட்டத்தில்கூட நீங்கள் சவால்களை ஏற்கமாட்டீர்கள், கொள்கைகளுக்காகப் போராட மாட்டீர்கள், அமைப்புடன் மோதமாட்டீர்கள். அமைப்பில் உங்களுக்கென நீங்கள் தேடிக் கொண்டுள்ள பாதுகாப்பான மூலையை விட்டுக் கொடுக்கமாட்டீர்கள். இன்னொரு காந்தியும், இன்னொரு படேலும் எங்கிருந்து வருவார்கள்? வெளிநாட்டிலிருந்தா? எதற்காக வர வேண்டும்? நீங்கள் அவர்களைப் பற்றிக் காஃபி ஹவுஸில் புகழ்வதற்கும், தினசரியில் கடிதமெழுவதுவதற்குமா? ஹ-ும்! உங்கள் பலவீனமான, கோழைத்தனமான நிலையை நீங்கள் உணராமலில்லை. அதனால்தான் சமூகச் சீர்கேட்டுக்கான பழியைச் சுமத்துவதற்கு வெவ்வேறு இலக்குகளைப் பரபரப்புடன் தேடியவாறு இருக்கிறீர்கள் –அரசியல்வாதிகள், நவநாகரிகப் பெண்கள் –அப்பாடா! மிஸ்டர் மாதுரை யாரும் இனிமேல் பழிக்க முடியாது; அவர் நிம்மதியாக இருக்கலாம்.

தங்கள் இத்யாதி.<br>மிஸ். தாரா ரங்கசாமி.

செல்லப்பா கடிதத்தைப் படித்து முடித்துவிட்டு அம்மாவைப் பார்த்தான்.

"நன்னா எழுதியிருக்கா, இல்லையா?" என்றாள் அம்மா.

"உம்."

"கண்டசியிலே தாரா எழுதினதும் நியூஸ் பேப்பரிலே வந்துடுத்து."

செல்லப்பா பதில் பேசாமல் தினசரியை மடித்து வைத்தான். தாரா நன்றாக எழுதியிருப்பதாக அம்மாவிடம் ஒப்புக் கொண்டாலும், தனக்குத்தானே அவன் அதை ஒப்புக்கொள்ளத் தயாராயில்லை. ஒருவேளை அது அவள் சொந்தமாக எழுதியதாக இருக்காது; யாராவது எழுதிக்கொடுத்திருப்பார்களா; அல்லது அவள் எழுதியதைத் திருத்திக்கொடுத்திருப்பார்கள். மேலும் கடிதமெழுதுவ தொன்றும் பிரமாதமில்லை. அவன் இதைப் போலப் பத்துக் கடிதம் எழுதுவான். ஆனால் அவனைப் போல ஒரு கதையோ கவிதையோ அவளால் எழுதிவிட முடியுமா?

தலைகீழாக நின்றாலும் முடியாது.

அவன் தன்னுடைய கவிதைகளை நரசிம்ம மாமாவிடம் கொடுத்துப் பத்து மாதமாகிறது. இன்னும் பிரசுரமாகவில்லை. ஒருவேளை அவன் பெண்ணாக இருந்தால் இதற்குள் பிரசுர மாயிருக்கலாம். தாராவும் அவனைப் போல நரசிம்மனிடம் தன் எழுத்தை நேரடியாகக் கொடுத்திருக்கலாம். அவளுடைய துடுக்கான பேச்சிலும், புன்னகையிலும் அவர் மயங்கிப் போயிருக்கலாம். கிழடுகள் ஆசிரியராயிருந்தால் இதுதான் கஷ்டம். தவறு அவனுடையதுதான். அவன் ஆசிரியர் குழுவிலிருந்த பெண் எவளையாவது பிடித்திருக்க வேண்டும். அவனுக்கு ரமாவின் ஞாபகம் வந்தது. ஆம்! அவன் அவளுடைய காதலனாக வேண்டும். அவள் அவனைவிட வயதானவள்; அதனாலென்ன? ரமா தன் செழுமையான கரங்களால் பூனைக்குட்டியை அணைத்திருப்பதுபோல தன்னை அணைத்திருக்கும் இதமான தோற்றம் அவன் கண்முன்னே தோன்றியது...

அம்மா கட்டிலில் எழுந்து உட்கார்ந்தாள். கீழே குனிந்து தரையில் எதையோ தேடினாள்.

"என்ன தேடுகிறாய், செருப்பா?" என்றான் செல்லப்பா.

"உம்."

செல்லப்பா அவளுடைய செருப்பைத் தேடியெடுத்துக் கொடுத்தான். அம்மா செருப்பையணிந்து பாத்ரூமை நோக்கிச் சென்றாள். அவளுடைய நடையில் இப்போது தள்ளாடல் இல்லை. அவனுக்கு மீண்டும் அவளைப் பார்க்கப் பரவசமாக இருந்தது; ஏக்கமாக இருந்தது. ஆனால் அனுதாபமாக இல்லை. துக்கமாக இல்லை. பக்தியாக இல்லை. நெகிழ்ந்திருந்த இடுப்புச் சேலைக்கு மேல் தெரிந்த அவள் முதுகை நோக்கி அவன் பார்வை ஈர்க்கப்பட்ட போது, தன் பார்வையின் திசைக்காக, மனதின் வேட்கைகளுக்காக, அவன் தன்னையே வெறுத்துக்கொண்டான். இதுதானா உண்மையில் அவள்! சீச்சி! ஆனால் மூன்று வாரங்களுக்கு முன்பு...

அவன் காலியாயிருந்த படுக்கையைப் பார்த்தான். மூன்று

வாரங்களுக்கு முன்பு நடந்த அந்த நள்ளிரவு நிகழ்ச்சியைத் தொடர்ந்து அம்மா பத்துநாட்களுக்குப் பேயறைந்தவள்போல நிலைகுத்திய பார்வையுடன் அந்தப் படுக்கையில் உட்கார்ந்திருந்ததை அவன் நினைத்துக்கொண்டான். குடும்ப டாக்டர் தினசரி இரண்டு தடவை அவளை வந்து பார்த்துவிட்டுப் போனார். அவளுடைய நரம்புகள் மிக நுண்மையாகப் பாதிக்கப்பட்டிருப்பதாக, ஏதேதோ மருந்துகள் எழுதிக் கொடுத்தார். இஞ்செக்ஷன்கள் செலுத்தினார். பத்து நாளும் அவள் பேசவில்லை, சாப்பிடுவதற்குக்கூட வாய்திறக்க வில்லை. மூக்கில் ரப்பர் குழாய் பதித்து அதன் மூலம், ஆகாரத்தை நீர் வடிவத்தில் செலுத்த வேண்டியிருந்தது. அம்மாவுடைய நிலையில் அபிவிருத்தியே ஏற்படாமலிருந்ததைப் பார்த்து, ஷாக் ட்ரீட்மெண்ட் கொடுக்க வேண்டியிருக்கலாமென்று டாக்டர் அபிப்பிராயப் பட்டார். வேறு இடம் எங்காவது போய்ச் சில நாட்கள் இருந்து வரலாமென்றும் யோசனை கூறினார்.

அப்பா லீவு எடுத்துக்கொண்டு வீட்டிலேயே, அம்மா அருகிலேயே, உட்கார்ந்திருந்தார். அம்மாவின் படுக்கையைச் சுற்றி எப்போதும் கூட்டமாயிருந்தது. அப்பாவுக்குப் பரிச்சயமானவர்கள், அப்பா, அம்மா இருவருக்கும் பரிச்சயமானவர்கள், எல்லோரும் அம்மாவுடைய நிலையைப் பற்றிக் கேள்விப்பட்டு அம்மாவைப் பார்த்துவிட்டுப் போக வந்தார்கள். காலையில் பகலில், மாலையில் . . . ஆனாலும் சில தினங்களில், சில தருணங்களில், யாருமே வரமாட்டார்கள். அப்பா செல்லப்பாவை அம்மாவருகில் உட்கார வைத்துவிட்டுச் சென்றுவிடுவார். செல்லப்பா படுக்கையில் படுத்திருக்கும் அம்மாவைப் பார்த்தவாறு உட்கார்ந்திருப்பான். அவனுக்குத் துக்கம் நெஞ்சை யடைக்கும். கதறிக் கதறி அழவேண்டும் போலிருக்கும். அந்தத் துக்கமயமான தருணங்கள் எவ்வளவு அழகானவை, தூய்மை யானவை! . . . அவன் அந்தக் கணங்களில் வெகு சுத்தமானவனாக உணர்ந்தான், மானுட ஆசைகளுக்கும் துவேஷங்களுக்கும் அப்பாற்பட்டவனாக உணர்ந்தான். அந்தச் சோகம் அவனுடைய சிறுமைகள், கிலேசங்கள், சுருதி பேதங்கள், போராட்டங்கள் ஆகிய யாவற்றையும் கரைத்து ஒரு உன்னதமான மனநிலையை உருவாக்கியது. தனக்குள்ளிருந்த பேதங்களை இழந்து, தன்னைப் புற உலகிலிருந்து வேறுபடுத்திய பேதங்களையும் இழந்து, காற்றுவெளியில், பஞ்ச பூதங்களில் ஒன்றாக அவன் கரைந்துபோனது போன்ற பிரமை . . . ம்மாவுக்குச் சரியாகாமலே போய்விட்டால்? அவள் செத்துப் போய் விட்டால்? என்றெல்லாம் அந்த ஒவ்வொரு கணங்களிலும் அவன் ஏதேதோ நினைத்து அந்தச் சோகத்தில் மேலும் மேலும் தன்னை ஆழ்த்திக்கொண்டான், போதை மாத்திரைகளை 'கிக்' பெறுவதற்காகச் சாப்பிடுவதுபோல.

ஆனால் திடீரென்று ஒருநாள் அம்மாவுக்குச் சரியாகிவிட்டது. ஷாக் ட்ரீட்மெண்ட் கொடுக்காமலேயே சரியாகிவிட்டது.

ஸிம்லாவுக்குப் போகாமலேயே சரியாகிவிட்டது அப்பா அம்மாவை ஸிம்லாவுக்கு அழைத்துச் செல்ல எல்லா ஏற்பாடுகளையும் செய்து விட்டார். ஆனால் அம்மாவுக்குச் சரியாகிவிட்டது. "இப்ப எனக்கு என்ன ஆகிவிட்டது? ஸிம்லாவுக்கு எதுக்காகப் போகணும் இந்த குளிரிலே?" என்று தன் பழைய நிச்சயத்துடன் அதிகாரத்துடனும் சொல்லுமளவுக்குச் சரியாகிவிட்டது. தற்காலிகமாக அப்பாவுக்கு விட்டுக் கொடுத்திருந்த வீட்டின் தலைமைப் பதவியை மீண்டும் அவள் பெற்றுக்கொண்டது போலிருந்தது. அதில் அப்பாவும் ஆறுதலடைந்தது போலிருந்தது. "டாக்டர்தான் சொன்னார் ... உனக்கு நல்லதுக்குத்தானே!" என்று சமத்காரமாக ஏதோ சொல்லி விட்டு, மேலே அந்த விஷயத்தை வற்புறுத்தாமல் மறுநாள் முதல் அப்பாடாவென்று மறுபடி ஆபீஸ் போகத் தொடங்கினார். அம்மாவின்மேல் அவர் வைத்திருந்த நம்பிக்கையும் மதிப்பும் செல்லப்பாவுக்குப் பிடித்திருந்தன. மற்ற எவ்வளவோ விஷயங்களில் அவளுடைய அபிப்பிராயங்களை அவர் ஏற்றுக்கொண்டதுபோல அவளுடைய சொந்த உடல்நலத்தைப் பற்றிய பிரச்னையிலும், அவற்றை அவர் புறக்கணிக்க விரும்பவில்லை. அவளுடன் வாதாட விரும்பவில்லை. வாதங்களை, அபிப்பிராயத் திணிப்புகளை அவர் என்றுமே விரும்பியதில்லை. 'உடம்பு சரியாகிவிட்டதா? சரி. சரியாகவில்லையா? சரி.'

ஆனால் செல்லப்பாவுக்கு ஏமாற்றமாக இருந்தது. அவனுடைய உணர்வுகளை, தூய தருணங்களை அவன் இழந்து விட்டான். அம்மாவுக்கு உடம்பு சரியாகிவிட்டது. மறுபடி அவன் மனதில் கிலேசங்களும், சுத்தக் குறைவான எண்ணங்களும், ஆசைகளும் தோன்றத் தொடங்கிவிட்டன. அவனுக்கு அம்மாமேல் கோபமாகக் கூட இருந்தது. அவள் உடல்நிலை சரியானது ஒரு ஆன்ட்டி கிளைமாக்ஸ் போல, ஒரு அபஸ்வரம் போலத் தோன்றியது.

அறைக்குள் யாரோ வரும் சத்தம் கேட்டு அவன் திரும்பினான் – பத்மினி.

"அம்மா எங்கே?" என்றாள் பத்மினி, அவனை நோக்கிப் புன்னகை செய்தவாறு.

செல்லப்பா சொன்னான்.

பத்மினி மேலே என்ன பேசுவதென்று தெரியாதவளாக ஆனால் புன்னகை மாறாமல் நின்றுகொண்டிருந்தாள். செல்லப்பா பதிலுக்குப் புன்னகையாவது செய்திருக்கலாம்; ஆனால் அவனுக்குத் தன் புன்னகையைப்பற்றி நிச்சயமில்லை. தன்னம்பிக்கையில்லை. ஏதாவது பேசியிருக்கலாம்; ஆனால் என்ன பேசுவது? பத்மினிக்கும் அவனுக்குமிடையே சம்பாஷணை எப்போதும் கடினமாகத்தான் இருந்தது.

அவள் அறையில் கலைந்திருந்த, இடம் பெயர்ந்திருந்த சிலவற்றை ஒழுங்குபடுத்தினாள். அவை கலைந்து கிடந்ததற்காக அவளுக்கு

அவைபால் நிச்சயம் நன்றியுணர்வு ஏற்பட்டிருக்க வேண்டும். அம்மாவின் படுக்கையருகே இருந்த ஒரு காலித்தட்டையும் தம்ளரையும் கையில் எடுத்துக்கொண்டாள். "நான் டீ போடப் போறேன், நீயும் குடிப்பாய் இல்லையா?" என்று கேட்டாள்.

"ஓ யெஸ்" என்று செல்லப்பா அவளைப் பார்த்துப் புன்னகை செய்தான். அப்பாடா! இறுக்கம் சற்றே கலைந்தது. "விசுவம் தூங்கறானா?" என்று தொடர்ந்து கேட்டு வைத்தான்.

"ஆமாம்" என்றாள் பத்மினி. "சோம்பேறி!"

செல்லப்பா சிரித்தான். எதற்காகச் சிரிக்கிறோமென்று அவனுக்கே தெரியவில்லை.

அம்மாவின் படுக்கை மேலிருந்த தினசரியின் மீது பத்மினியின் பார்வை சென்றது. தினசரியைப் படுக்கையின் மேல் விரித்து அதன்மேல் குனிந்தாள். செல்லப்பாவுக்கு மிக அருகில் அவள் நின்றிருந்தாள். அவனுக்குத் தலையிலிருந்து கால்வரையில் சிலிர்ப்புப் பரவியது. அவளுடைய அண்மையினால் பாதிக்கப்படாதவனாக இருக்க முயன்றான்.

"இந்தியா இந்த டெஸ்டும் தோத்துடும் போலிருக்கே!" என்றாள் அவள்.

"ஆமாம், நம்ம பாட்டிங் ரொம்ப மோசம்" என்றான் செல்லப்பா.

"பீல்டிங்கும்தான்."

அவன் பேசாமலிருந்தான். பெரும்பாலான குளிர் காலங்களைப் போல, இந்தக் குளிர் காலமும் வெளி தேசத்திலிருந்து வந்திருந்த கிரிக்கெட் டீம் ஒன்று இந்தியாவின் முக்கிய நகரங்களில், இந்திய டீமுடன் டெஸ்ட் மாச் ஆடிக்கொண்டிருந்தது. அவனுக்குக் கிரிக்கெட்டின் நுணுக்கங்களில் விசேஷ சிரத்தை கிடையாது. அவள் அதிகமாக அதைப் பற்றிப் பேசத் தொடங்காமலிருந்தால் நல்லது. இந்தக் குளிர் நாட்களில் எங்கே போனாலும் எல்லாரும் கிரிக்கெட்டைப் பற்றியே பேசி வந்ததால் அவனும் ஏதோ கொஞ்சம் ஆட்டத்தைப் பற்றித் தெரிந்துவைத்திருந்தான். அதில் சிரத்தை யுள்ளவன்போலப் பாசாங்கு செய்யக் கற்றிருந்தான்.

கல்லூரி டிகிரிக்காகப் படிப்பது போதாதென்று வேறு என்னவெல்லாம், விருப்பத்திற்கெதிராக, ஒருவன் தெரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது! அவனுக்கு இதெல்லாம் வெறுப்புத்தான் அளித்தது. அவள் வேறு எதைப் பற்றியாவது பேசினால் தேவலை.

பல நாட்களில் அழகிய சிந்தனைகளிலோ (அவை உலகத்தையே மாற்றக்கூடும்!) கற்பனைகளிலோ (இதமான, பிரத்தியேகமான கற்பனைகள்) அவன் ஆழ்ந்திருக்கும்போது 'ஸ்கோர் என்ன தெரியுமா?' என்ற கேள்வி அவன்மேல் வீசப்பட்டு, அவன் எரிச்சலைக் கிளப்பியிருக்கிறது. இதைப் பற்றித் தெரிந்துகொள்ளுவது ஏன் இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக, ஒருவனுடைய நவீன மனப் போக்கின்,

சிந்தனையின் அளவுகோலாகக் கருதப்பட வேண்டும். வேறு எவ்வளவோ அழகிய விஷயங்களைப் பற்றிய அறிவு அவனுக்கு இருக்கிறது. திறமைகள் இருக்கின்றன. ஆனால் இவற்றுக்கு ஏனோ உலகத்தில் எந்தவிதமான முக்கியத்துவமும் இல்லை. அவன் ஏதோ தவறான இடத்தில், தவறான நூற்றாண்டில் பிறந்து விட்டான். ஆமாம். ஏதோ பிசகு நடந்திருக்கிறது . . .

பத்மினி ஸ்போர்ட்ஸ் பக்கத்தைப் புரட்டினாள். சினிமா பக்கம்.

செல்லப்பாவின் முகத்தில் இப்போது உற்சாகம் தோன்றியது.

அவன் ஏதோ ஒரு படத்தின் பெயரை வாய்விட்டுப் படித்து, அதை அவள் பார்த்தாயிற்றா என்று கேட்டான். கிரிகரி பெக்கின் படம். "நான் அவர் படங்களைத் தவறவிடுவதில்லை" என்றான் செல்லப்பா. அவருடைய நடிப்புத் திறனைப்பற்றி உற்சாகமாக அவளுக்கு விளக்கத் தொடங்கினான் – அந்த ஆர்ப்பாட்டமில்லா ஆண்மை – அனாயாசமான பாவங்களும் பாவனைகளும் – ஏன், அந்தப் புன்னகை ஒன்றே போதுமே – ஓ; அவனுக்கு எவ்வளவு பிடித்திருந்தது அந்தப் புன்னகை . . .!

பேசிக்கொண்டே போன செல்லப்பா, திடீரென்று அவளால்தான் ஆர்வத்துடனும் வியப்புடனும் கவனிக்கப்படுவதை உணர்ந்தான்; கூச்சத்துடன் மௌனமானான். இந்திய நடிகர்களைப் பற்றிய தன் கடுமையான விமர்சனங்களையும், அவன் கூற நினைத்திருந் தான். ஆனால், இப்போது வேண்டாம்.

இப்படி அவள் பார்த்துக்கொண்டிருந்தால் அவனால் பேச முடியாது; இப்போது வேண்டாம்.

"ஐ ஆல்ஸோ லைக் ஹிம் . . . விசுவத்தை இன்று மாலை அந்தப் படத்துக்குக் கூட்டிப் போகிறேன்" என்று பத்மினி மறுபடி அவனைப் பார்த்துப் புன்னகை செய்துவிட்டுச் சென்றாள். செல்லப்பாவும் அறையை விட்டு வெளியே வந்தான். அவனுக்குப் பத்மினிமேல் ஒரு அனுதாபம் உண்டாயிற்று, அவள் விசுவத்துடன் அந்தப் படத்துக்குப் போவது குறித்து. விசுவத்துக்கு திரைப்படங்களைப் பற்றி என்ன தெரியும்? . . . வருங்காலத்தில் தனக்குப் பிரியமான ஒருத்தியுடன் செல்லப்பா நிறையத் திரைப்படங்களுக்குப் போகப் போகிறான். அவள் யாரென்று இப்போது தெரியாது. ஆனால் அந்தப் பெண் பாக்கியசாலி.

பத்மினி தேனீர் தயாரித்த பிறகு, அவளிடமிருந்து தன் கோப்பைத் தேநீரை வாங்கிக்கொண்டு அவன் வராந்தாவுக்கு வந்தான். ஞாயிற்றுக் கிழமை காலை. அப்பா வழக்கம் போல கிளப்புக்குப் போயிருந்தார். பத்ரி நண்பர்களுடன் கிரிக்கெட் ஆடப் போய் விட்டான். செல்லப்பாவுக்கு, அர்த்தமற்ற செய்கைகளில் பொழுதை விரயமாக்கும் அவர்கள் இருவர் மீதும் அனுதாபமாக இருந்தது. உலகத்திலுள்ள எல்லார் மீதும் அவனுக்கு அனுதாபமாக இருந்தது. சாலையில்

செல்லும் தோட்டி, பழைய பேப்பர் வாங்குகிறவன், காய்கறிக்காரன், மற்றப் பாதசாரிகள், வாகனங்களைச் செலுத்துபவர்கள், குழந்தைகள், பெரியவர்கள், ஆண்கள், பெண்கள் ...

பாவங்கள், எல்லோரும் பாவங்கள்.

அவன் தேநீரைக் குடித்து முடித்தான். கோப்பையைத் தரையில் வைத்துவிட்டு, நாற்காலியில் நன்றாகச் சாய்ந்து உட்கார்ந்தான். பிறகு திடீரென்று நாற்காலியிலிருந்து எழுந்து, தரையில் சப்பண மிட்டு உட்கார்ந்தான். காலித் தேநீர்க் கோப்பையை பார்வையில் படாமல் தள்ளி வைத்தான். அந்தத் தேநீர், நாற்காலி, இவை யெல்லாம் சமூக அமைப்புடன் அவனைப் பந்தப்படுத்துபவை. இவற்றிலிருந்து அவன் விடுதலை பெற வேண்டும். அவன் குனிந்து தான் போட்டுக்கொண்டிருந்த ஸ்வெட்டரைப் பார்த்தான். பிறகு அதையும் கழட்டியெறிந்தான். சட்டை, பனியன் எல்லாவற்றையும் கழட்டினான். அப்பாடா! விடுதலை! விடுதலை!

குளிர்காற்று அவன் திறந்த மார்பைத் தாக்கியது. ஊறுகாயின் காரத்தைப் போல, அந்தக் குளிரின் உறைப்பு அவனுக்கு ஒரு இதமான துன்பத்தைக் கொடுத்தது. எதிரே, அவன் கழற்றிப் போட்ட ஸ்வெட்டர் இருந்தது. ஸ்வெட்டரே இல்லாதவர்களெல்லாம் இந்தக் குளிரில் என்ன செய்வார்கள்? நேற்று மாலை அவன் கனாட் பிளேஸ் அருகே புதிதாக நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருந்த அடுக்கு மாடிக் கட்டிடம் ஒன்றின் வழியாக நடந்து வரும்போது, அந்தக் கட்டிடத்தை எழுப்புவதில் ஈடுபட்டிருந்த ராஜஸ்தானி கூலியாட்கள் நடைபாதை மேல் ரொட்டி பண்ணிச் சாப்பிடுவதைப் பார்த்திருந்தான். அவர்கள் சாக்கு மாதிரி எதையோ போர்த்திக் கொண்டிருந்தார்கள். அதில் நிச்சயம் குளிர் அடங்காது. குழந்தை ஒன்று தரையில் விளையாடிக்கொண்டிருந்தது. அதன் காலில் பூட்ஸ் இல்லை. ஆனால் அவர்கள் சந்தோஷமாக இருப்பது போலத்தான் பட்டது; அந்தச் கணத்தில் அவன் அவர்களைப் பார்த்தபோது, அவர்கள் ஏதோ பாடிக்கொண்டிருந்தார்கள். அவனுக்கு அவர்களைப் பார்த்துப் பொறாமையாக இருந்தது.

அவர்களுக்கு கிரிக்கெட் ஸ்கோரைப் பற்றியோ, ஹேர் ஸ்டைலைப் பற்றியோ, கால்சராய் மோஸ்தரைப் பற்றியோ கவலையில்லை. அவன் தலைமயிரினூடே கைகளை விட்டு அளைந்தான். மிக நீளமாக வளர்ந்திருந்தது. பலவிதங்களில் அசௌகரியமாக இருந்தது. குளித்தால் துவட்டிக்கொள்ள நேரமாயிற்று. தலை வாரிக்கொள்ள நேரமாயிற்று. சட்டைக் காலர்களில் வண்டி வண்டியாக எண்ணெய் இறங்கியது. ஆனால் சென்ற பத்து நாட்களாக யோசித்தும் முடி வெட்டிக்கொள்வதா அல்லது இப்படியே வளரவிடுவதா என்பது பற்றி அவனால் ஒரு முடிவுக்கு வரமுடியவில்லை. புது மோஸ்தரில் கால்சராய் ஒன்று தைக்கக் கொடுத்திருந்தான். அதை வாங்குவதற்குத் தையல் கடைக்குப் போகவும் தைரியம் வரவில்லை. உண்மையில்

அந்தத் தையல்காரனின் முகத்தில் முழிக்கவே கூச்சமாயிருந்தது.

துணியைத் தைக்கக் கொடுத்த பிறகு, தொடர்ந்து மூன்று நாட்கள் மீண்டும் மீண்டும் அவன் கடைக்குச் சென்று பாண்ட் எப்படித் தைக்கப்பட வேண்டுமென்பது பற்றி ஒன்றுக்கொன்று முரணான விருப்பங்களை அவன் தெரிவித்திருந்தான். இவன் போனவுடனேயே தையல்காரன் நிச்சயம் ஒரு ஏளனமான பார்வையை வீசுவான். அதை அவனால் தாங்கிக்கொள்ள முடியாது. சே, இனிமேல் இந்தத் தையல்காரனிடம் போகக்கூடாது. இப்படி எவ்வளவு தையல்காரன்கள் மாற்றியாகிவிட்டது! குப்பென்று குளிர் காற்று வீசியது . . . எதிரே அவன் கழற்றியெறிந்த ஸ்வெட்டர். அவன் கண்களை இறுக மூடிக்கொண்டான் . . .

"டேய், செல்லப்பா!"

செல்லப்பா கண்களைத் திறந்து பார்த்தான். எதிரே ரமணி நின்றிருந்தான்.

"உக்காரு" என்று ரமணிக்கு நாற்காலியைச் சுட்டிக் காட்டிவிட்டு, செல்லப்பா தான் கழற்றியெறிந்தவற்றை அவசரமாக மீண்டும் அணிந்துகொண்டான்.

"என்ன, யோகாசனப் பயிற்சியா?" என்றான் ரமணி.

"ஆமாம்" என்றான் செல்லப்பா.

"உனக்கு இதிலே சிரத்தை உண்டுன்னு எனக்கு இவ்வளவு நாளாத் தெரியாதே!"

"இப்ப தெரிஞ்சுக்கோ."

ரமணி திறந்திருந்த வாசல் கதவு வழியே வீட்டினுள் பார்வையைச் செலுத்தினான். செல்லப்பா அவன் பார்வையின் இலக்கைப் பரீட்சித்தான். பத்மினி நாற்காலியில் அமர்ந்து தலைமயிரிலிருந்து ஊக்குகளை ஒவ்வொன்றாக உருவியெடுக்கும் பணியில் ஈடுபட்டிருந்தாள். குளிக்கப் போகிறாள் போலும்.

"உங்க மன்னியா?"

"ஆமாம்."

"ரொம்ப ப்யூட்டிஃபுல்லா இருக்காடா?"

"தாங்ஸ்."

"உங்கண்ணாவுக்கு நல்ல டேஸ்ட் இருக்கு."

". . ."

"என்ன, பேசாமல் இருக்கே!"

"நீ சொன்னது காதிலே விழுந்தது."

"வேறெங்கேயாவது விழுந்துடுத்தோன்னு நினைச்சேன்."

"ஹி ஹி ஹி."

ரமணி நாற்காலிக் கைகளில் தாளம் போடத் தொடங்கினான்.

செல்லப்பாவின் தன்னம்பிக்கையான தோரணை அவனுக்கு உற்சாகமளிக்கவில்லை போலும். அவனுடைய 'குருநாதர்' பிம்பம் சேதமடைகிறது . . .

"அப்புறம் – வேறென்ன நியூஸ்?" என்றான் ரமணி.

"நீதான் சொல்லணும் – நீதானே நியூஸ் பேப்பர் ஆபீஸிலே வேலையாயிருக்கே."

"உன்னைப் பத்தின நியூஸைக் கேக்கிறேன்."

"புதுசா ஒண்ணுமில்லை."

"பழசெல்லாம் எப்படியிருக்கு?"

"இருக்கு."

"சீக்கிரமா ஏதாவது பண்ணேண்டா?"

"என்ன பண்றது?"

"உருப்படியா, உங்கண்ணாவை மாதிரி. இப்ப அடுத்ததாக உன்னுடைய 'டர்ன்'தானே?"

செல்லப்பா சலிப்புடன் ரமணியைப் பார்த்தான். "ரமணி."

"உம்?"

"கொஞ்சம் குறைச்சலா சமத்து வழியறயா? எங்க வீடெல்லாம் முழுகிப் போயிடும் போலிருக்கு."

ரமணியின் முகத்தில் பெரிய பாராட்டுப் பெற்றவன்போலத் திருப்தியும் பெருமிதமும் தோன்றின. "வெளியிலே போகலாமா?" என்றான்.

"எங்கே?"

"சும்மா ஒரு ரவுண்டு . . . இன்னிக்கு குடியரசு தின ஊர்வலத்துக்கு ஒத்திகை . . . பார்த்துட்டு வரலாமா?"

செல்லப்பா ஒரு கணம் பேசாமலிருந்தான். அந்தச் சமயத்தில் அவன் மிக இலேசாகவும் ரம்மியமாகவும் உணர்ந்தான். குழந்தையைப் போலப் பரிசுத்தமாக உணர்ந்தான். ரமணியுடன் சென்றால் அந்த உணர்வுகள் நிச்சயம் பாழாகிவிடும் என்று தோன்றியது. ஆனால் வேறு வழியில்லை. ரமணியுடன் இங்கேயே உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தாலும் அவை பாழாய்த்தான் போகும். மேலும் ரமணி பச்சை பச்சையாகப் பேசத் தொடங்குவான்; அது யார் காதிலாவது விழுந்து வைக்கலாம் . . . செல்லப்பாவுக்குத் தான் தப்பித்துக்கொள்ள விரும்புவது ரமணியிடமிருந்தா அல்லது தன்னிடமிருந்துதானா என்று புரியவில்லை.

"சரி . . . ஷூ போட்டுக்கொண்டு வருகிறேன்" என்று அவன் உள்ளே சென்றான்.

அவன் ஷூ அணிந்து வெளியே வந்தபோது அம்மா வராந்தாவில் நின்றிருந்தாள். ரமணியிடம் ஏதோ பேசிக்கொண்டிருந்தாள். அவன்

வேலை பார்த்த தினசரியில் நாடக விமரிசனம் யார் எழுதுகிறார்கள் என்று அவள் கேட்டுக்கொண்டிருந்தாள். ரமணி பதில் சொன்ன மாதிரியிலிருந்து, அந்த விமரிசனம் எழுதுகிறவர் அவனுக்கு மிகவும் பரிச்சயமானவர்போல, அவனுடன் தினசரி சிற்றுண்டியும், காபியும் அருந்துகிறவர் போலத் தோன்றியது. பல சமயங்களில் ரமணியிடமே அபிப்பிராயம் கேட்டு அதை அப்படியே அவர் எழுதியிருக்கிறாராம். கணக்கு வழக்கில்லாமல் பல நாடகங்கள் பார்த்துப் பார்த்து அவருக்குச் சுயபுத்தியோ நிர்ணயமோ இல்லாமல் போய்விட்டது என்றான் ரமணி.

மேலும் இந்த விமரிசனம் எழுதுகிறவன்களெல்லாம் என்ன, 'மிகச் சின்ன ஆட்கள், செல்வாக்கில்லாத பேர்வழிகளுடனெல்லாம் நெருங்கிய தொடர்புண்டு. குறிப்பிட்ட ஒரு கலைஞனுக்கோ அல்லது சிருஷ்டிக்கோ முக்கியத்துவம் அளிக்கப்படுவதும் அளிக்கப்படாததும் இவர்கள் கையில்தான் இருக்கிறது. விமரிசகன் ஒருவரைத் தாக்கி எழுதினால்கூட, அதற்கு நேர்மாறான கருத்துக்களைத் தெரிவிக்கும் கடிதங்களை நிறையப் பிரசுரித்து, நாடகாசிரியர், நடிகர்கள் ஆகியோருடைய புகைப்படங்கள், பேட்டிகள் முதலியவற்றை வெளியிட்டு, விமரிசகனுடைய குரலுக்கு மதிப்பேயில்லாமல் போகச் செய்யும் திறன் இவர்களுக்கு உண்டு.

செல்லப்பாவுக்கு போர் அடித்தது. "கிளம்பலாமா?" என்றான். ரமணி மனதேயில்லாமல், செல்லப்பாவின் அம்மாவிடம் சொல்லிக் கொண்டு கிளம்பினான்.

"உங்க அம்மா நடிக்கிற புது நாடகம் ஒண்ணு வரப்போறது போலிருக்கு!" என்றான் ரமணி. அவர்கள் வீட்டைவிட்டுச் சிறிது தூரம் வந்த பிறகு.

"ஆமாம்" என்றான் செல்லப்பா. பொங்கலன்றைக்கு ஸ்டேஜ் பண்றதா இருந்தது ... ஆனால் அதுக்குள்ளே எங்கம்மாவுக்கு உடம்பு சரியில்லாமல் ஆயிடுத்து ... இனிமேல் அடுத்த மாசந்தான்."

ரமணி சென்ற வருடம் செல்லப்பாவின் அம்மா நடித்திருந்த நாடகம் ஒன்றை நினைவு கூர்ந்து, அது இன்னமும் தனக்கு மறக்க வில்லை என்றான். அதுவும் மாமியோட நடிப்பு ...! செல்லப்பாவுக்குச் சங்கடமாயிருந்தது. ரமணி தன் தாயைப்பற்றி இவ்வளவு உரிமையாகப் பேசாமலிருக்கலாமென்று தோன்றியது. நல்லவேளையாக சம்பாஷணையின் தடம் அம்மா நடித்த நாடகத்தை விட்டுப் பொதுவாக நாடகங்களைப் பற்றியதாக மாறியது. சற்று நேரம் இது ஆசுவாசமளிப்பதாக இருந்தது. ஆனால் இதுவும் சற்று நேரம்தான். ரமணி நாடகங்களைப்பற்றிய தன் சொற்ப அறிவின் பின்னணியில், நாடக மறுமலர்ச்சி பற்றி ஏதேதோ உளறத் தொடங்கினான். செல்லப்பாவுக்குத் தலையை வலித்தது. அவனிடம் இப்ஸன் பற்றியோ, டென்னெஸ்ஸி வில்லியம்ஸ் பற்றியோ, எட்வர்ட் ஆல்பி பற்றியோ, பிரெக்ட் பற்றியோ பேசி தான் அறிந்திருந்த நாடகச் சொத்துக்களை,

பரவசங்களை, அவனும் அறியச் செய்வதோ மிக அசாத்தியமான தாகவும், அனாவசியமானதாகவும் தோன்றியது. அவனுக்கு ரமணியிடம் அனுதாபம் ஏற்பட்டது.

தான் அவனைத் தன் பலவீனமான தருணங்களில் ஓர் ஆசிரியமாக, சதை வேட்கைகளை மனம் திறந்து பரிமாறிக்கொள்ளும் ஒரு வடிகாலாக, கிளர்ச்சியூட்டும் ஒரு போதைப் பொருளாக, கிட்டத்தட்ட ஒரு தாசியைப் போலத்தான் கருதி வந்திருக்கிறோமென்பது அவனுக்குத் தெரிந்தது. செல்லப்பாவின் அம்மா தன்னை மதித்துப் பேசியது ரமணியை ஒரு புது மனிதன்போல உணரச் செய்துள்ளது போலும்; அவன் ஒரு பெரிய இன்டெலக்சுவல் பிம்பம் ஒன்றை அணிய முயலுகிறான் ... அவர்களிருவருக்கும் இடையேயுள்ள நட்பை, இல்லாத ஒரு உயரத்துக்கு உயர்த்த முயலுகிறான் ... பாவம்! செல்லப்பாவுக்கு எவ்வளவுக்கெவ்வளவு அவனைப் பார்த்து பரிதாபமாக இருந்ததோ, அவ்வளவுக்கவ்வளவு தன் மேலேயே வெறுப்பும் ஏற்பட்டது. சீ! நான் ஒரு கயவன், ஒரு சுயநலப் பேய். காரியவாதி ... திடீரென்று ரமணியின் தோள்மீது அவன் கை போட்டுக் கொண்டான். ரமணி ஆச்சரியத்துடன் செல்லப்பாவின் முகத்தைத் திரும்பிப் பார்த்தான்.

"நீ ரொம்ப நல்லவண்டா" என்றான் செல்லப்பா.

இருவரும் கை கோத்துக்கொண்டு, ஒத்திகை நடக்கும் இடத்தை அடைந்தார்கள். முப்படையைச் சேர்ந்த வீரர்களின் கால் நடை அணிவகுப்பு, பிறகு டாங்குகள், நுட்பமான யந்திரத் துப்பாக்கிகள், விமானம் சுடும் துப்பாக்கிகள், வேறு பல யுத்த தளவாடங்கள், தொடர்பு சாதனங்கள், வாகனங்கள். எல்லாமே எவ்வளவு நேர்த்தியாக இருந்தது.

உன்னதமாக இருந்தது; அவர்களுடைய நட்பைப் போலவே.

பிறகு என்.ஸி.ஸி ஆண்கள். என்.ஸி.ஸி பெண்கள். பெண்கள். பெண்கள்.

ரமணி செல்லப்பாவின் கையைப் பிடித்து ஒரு அழுத்து அழுத்தினான்.

பிறகு பள்ளிக்கூடச் சிறுவர் சிறுமியர் ...

"இதுதான் நன்னாயிருக்கு" என்றான் ரமணி.

ஆம்; அது மிக நன்றாயிருந்தது. மிகச் சிறிய வகுப்புகளிலிருந்து மிகப் பெரிய வகுப்புகளில் படிக்கிறவர்கள் வரை, அந்தந்த வயதுப் பிரிவைச் சேர்ந்த குழந்தைகள் தனித் தனிக் குழுக்களாக அணி வகுத்துச் சென்றார்கள்.

செல்லப்பாவுக்குப் பூரிப்பாகவும் நிறைவாகவும் இருந்தது. முக்கியமாக, சிறுமியர் அணிகளைப் பார்க்கும்போது எத்தனை பிராயங்களில், அளவுகளில், அமைப்புகளில், நிறங்களில், வடிவங் களில்! அவனுக்கு அவர்களைவிட்டுப் பார்வையை எடுக்க மனம்

வரவில்லை. பேதைமை முழுதும் இல்லாமலும், முழுதும் விலகாமலும் இருந்த அவர்களிடம் ஒரு தன்னுணர்வற்ற துருதுருப்பும், கவர்ச்சியும் இருந்தது.

தரையில் ஊர்வலம் முடிந்த பிறகு, வானத்தில் விமானங்களின் அணிவகுப்பு. நாலு நாலாக, ஆறு ஆறாக, எட்டு எட்டாக ...

விர்! விர்! விர்!

என்ன ஓசை! என்ன வேகம்! அழகிய முத்தாய்ப்பு; கிளர்ச்சியின் உச்ச நிலை. கிளைமாக்ஸ்.

கூட்டம் கலையத் தொடங்கியது. இப்போது மக்கள் திரளிடையே யிருந்த நிறங்களை அவர்கள் கண்கள் துரத்தின. மறுபடி கை கோத்துக்கொண்டு இந்தியா கேட் புல்வெளியில் மெதுவாக நடந்தார்கள்.

போட்டிங் கிளப் அருகேயிருந்த திறந்தவெளி ரெஸ்டாரெண்டில் போய் இருவரும் அமர்ந்தார்கள். அருகே ஒரு டிரான்ஸிஸ்டரில் கிரிக்கெட் காமெண்டரி கேட்டுக்கொண்டிருந்தது. ரமணி அதை உன்னிப்பாகக் கவனிக்கத் தொடங்கினான். செல்லப்பா கலைந்து போய்க்கொண்டிருந்த கூட்டத்தையே பார்த்துக்கொண்டிருந்தான். உலகம் மிக அழகானதாகத் தோன்றியது. வெய்யில் அழகாக இருந்தது. ஆகாயம். மரங்கள், ஏரி, சாலை, புல்வெளி, மனிதர்கள், கட்டிடங்கள், நிழல்கள் எல்லாமே அழகாக இருந்தன. அசைபவை. அசையாதவை, உயிருள்ளவை, உயிரில்லாதவை எல்லாவற்றையும் அணைத்துக்கொள்ள வேண்டும்போல இருந்தது. புரள வேண்டும் போல, கூத்தாட வேண்டும்போல இருந்தது. கூச்சலிட வேண்டும் போல, கடகடவெனச் சிரிக்க வேண்டும்போல இருந்தது. அடுத்த கணத்தை ம்காலோபனம் செய்யாமல் இந்த அழகிய கணத்தில், உணர்வுகளின் உச்சகட்டத்தில், இறந்துவிட வேண்டும் போலிருந்தது. இன்னொரு நாள், இன்னொரு நேரம், இவை எதுவுமே அவனைக் கிளர்ந்தெழச் செய்யாமல் போகலாம், வேறெதுவுமேகூட. அந்த ஒருநாள்வரை அவன் பயணம் நீடிக்காமலிருந்தால் நல்லது.

வெயிட்டர் சமோஸா கொண்டு வந்தான். அதுவும் அழகாய்த் தானிருந்தது. அழகிய நிறம், எடை, வடிவம். அதைக் கடிக்கும் போதும் மெல்லும்போதும் ஏற்பட்ட ஓசை அழகாயிருந்தது; மணம் அழகாயிருந்தது; ருசி அழகாயிருந்தது. சமோஸாவுக்குத் தொட்டுக் கொள்வதற்காக விட்டிருந்த புளித் தண்ணீரின் மிச்சம் வெள்ளை யான பிளேட்டில் தங்கியிருந்தது அழகாயிருந்தது ... செல்லப்பா அந்தப் புளித் தண்ணீரை விரலால் தொட்டு நாக்கில் வைத்துக் கொண்டான். இஸ்ஸ்! இதுவும் ஒரு அழகுதான். இன்னொரு விரல், இன்னொரு விரல், இன்னொரு விரல் ......

"சாந்தா எப்படியிருக்கா?" என்றான் ரமணி.

செல்லப்பாவின் அழகிய உலகம் திடீரென்று சரியப் போவது

யோலிருந்தது; இருளடையப் போவது போலிருந்தது; சுக்கல் சுக்கலாகச் சிதறப்போவது போலிருந்தது. ஆனால் அவன் சமாளித்துக் கொண்டான். விரல் நுனியில் மலையைத் தழுவி நின்று கோகுலத்தைக் காத்த கிருஷ்ணனைப் போலச் சாதனை புரிந்து தன் உலகத்தைக் காக்க முடிவு செய்தான். விரல்களைத் தொடர்ந்து அனாயாசமாக நக்கியவாறு, "இருக்கா . . . ஷீ இஸ் ஃபைன்" என்றான்.

"பார்த்தியா, எங்கேயாவது?"

"உம் . . ."

"எங்கே பார்த்தே?"

"டிஸ்கோத்தேக்குப் போயிருந்தேன் அவளோடு" என்று செல்லப்பா தண்ணீர் டம்ளரை எடுத்து 'மடக் மடக்'கென்று சினிமாக் கதாநாயகன் மதுவை விட்டுக்கொள்வதுபோல, வாயில் விட்டுக்கொண்டான்.

"என்ன, என்ன, மறுபடி சொல்லு?"

செல்லப்பா மறுபடி சொன்னான்.

"என்னாலே நம்பவே முடியலையே!"

"எனக்கு அதிலே ஒண்ணும் நஷ்டமில்லையே?"

ரமணி சில விநாடிகள் பேசவில்லை. அவன் கண் முன்பு ஒரு புதிய செல்லப்பா உருப்பெறத் தொடங்குவது போலிருந்தது. ஒரு புதிய மனிதன். ஒரு புதிய பிம்பம்!

"என்னிக்குப் போயிருந்தே?"

"போன வாரமோ, அதுக்கு முந்தின வாரமோ, சரியா ஞாபகமில்லை . . . இரு, சொல்றேன். ஆமாம், போன வாரந்தான் சாந்தாவோட. அதுக்கு முந்தின வாரம் கூடவந்தது அவளில்லை."

வேறே யாரு?"

"யாரோ, உனக்கென்ன?"

ரமணி செல்லப்பாவின் முகத்தை ஆராய்ந்தான். பெண்களைப் பற்றிய கூச்சத்தைச் செல்லப்பா இழந்திருந்தானோ, இல்லையோ. ஆனால் பொய் சொல்வதிலுள்ள கூச்சத்தை நிச்சயம் இழந்திருந்தான். ஆனால் அதை எப்படி ருசுப்படுத்திக்கொள்வது?

"எந்த டிஸ்கோத்தேக்குப் போயிருந்தே?"

"அதுதான், ரீகல் பக்கத்திலே இருக்கே!"

"ஸெல்லரா?"

"ஆமாம்."

அங்கு என்ன சாப்பிட்டான், என்ன சார்ஜ் கொடுத்தான், எந்த மாதிரியான இசை இருந்தது, விளக்கமைப்பு எப்படி இருந்தது, நடனமாடினானா இல்லையா என்று ரமணி செல்லப்பாவைக் கேள்விகளால் துளைத்தான். செல்லப்பா 'டக்டக்'கென்று எல்லா

வற்றுக்கும் சரியாகப் பதில் சொன்னான்.

ரமணி சற்று நேரங்கழித்து, தோல்வியை ஒப்புக் கொண்டவன் போல் மௌனமானான். அவன் முகத்தில் பெரும் ஏமாற்றமும், இழப்புணர்ச்சியும் தெரிந்தது.

செல்லப்பாவுக்குத் தன் தம்பியின் மீது நன்றியுணர்வு ஏற்பட்டது. ஸெல்லருக்குள் எப்படியிருக்குமென்று அவன்தான் சொல்லியிருந்தான். பொய் சொன்னதற்காக அவனுக்கு மனத்தினுள் இலேசான உறுத்தல் ஏற்படத்தான் செய்தது. அதே சமயம் தன் அழகிய உலகத்தைக் காப்பாற்ற முடிந்தது குறித்து, பெருமையும் நிம்மதியும் ஏற்பட்டது. ரமணி இனி தன்னைச் சிறுபிள்ளைபோல நினைக்க முடியாது . . . திடீரென்று ரமணியின்மீது தான்பெற்ற வெற்றியை மென்மேலும் ஸ்திரப்படுத்தவேண்டுமென்று ஒரு வெறி அவனுக்கு ஏற்பட்டது.

"சாந்தாவுக்கு என் ஹேர் ஸ்டைல் ரொம்பப் பிடிச்சிருக்காம் . . ." என்று தொடங்கினான். டிஸ்கோதேயில் சாந்தாவுடன் உட்கார்ந்திருந்த செல்லப்பா, மெல்ல மெல்ல ரமணியின் முன்னால் உருப்பெறத் தொடங்கினான். இந்தக் கற்பனைச் செல்லப்பா ரமணியை ஆதிக்கமற்றவனாய், பலமற்றவனாய் உணரச் செய்தான். ஆனால் நிஜமான செல்லப்பாவை மிகவும் வசீகரித்தான். அவனுக்கு ஆசுவாசமும், ஆதரவும் அளித்தான். இனி அவனுடைய அழகிய உலகம் சிதையப் போவதில்லை. அவனுடைய 'இன்பம் துய்க்கும் இளவரசன்' பிம்பம் கலையப்போவதில்லை, ரமணியின் காரணமாகக்கூட!

# 16

**வி**சுவம் தாத்தாவின் மடியில் அமர்ந்து கச்சேரி கேட்டுக் கொண்டிருக்கிறான்; தாத்தா அவனுடைய சிறு கைகளைப் பற்றி, தாளத்துக்கேற்றவாறு ஒன்றோடொன்று தட்டிக்கொண்டிருக்கிறார்.

விசுவமும் தாத்தாவும் சந்தையிலிருந்து திரும்பிக்கொண்டிருக் கிறார்கள். நீளமான இரு புடலங்காய்களை விசுவம் "நான்தான் தூக்கிக்கொண்டு வருவேன்" என்று தூக்கமுடியாமல் தூக்கிக் கொண்டு வருகிறான்.

விசுவத்தின் கையைப் பிடித்துக்கொண்டு தாத்தா ஆற்றங்கரையில் இறங்குகிறார். அவருடைய வேஷ்டி 'பொம்'மென்று உப்பி நீரின்மேல் மிதக்கிறது. விசுவத்தின் கால்களில் 'சுருக் சுருக்'கென்று மீன்கள் கடிக்கின்றன; அவன் அலறிக்கொண்டே கரையை நோக்கி ஓடுகிறான்.

விசுவமும் அடுத்த வீட்டு மீனுவும் விசுவத்தின் பாட்டியிடமிருந்து தயிர் சாதத்தை உருண்டை உருண்டையாகக் கையில் வாங்கிச் சாப்பிடுகிறார்கள். கடைசி வாய்ச் சாதம். "அடிக் குழம்பு ஆனைக் குட்டி யாருக்கு வேணும்?" என்ற பாட்டி கேட்கிறாள். "எனக்குப் பாட்டி, எனக்குப் பாட்டி!" என்று இருவரும் சண்டை போடுகிறார்கள்.

விசுவத்துக்குக் காலில் சிரங்கு வந்திருக்கிறது. பாட்டி வெற்றிலை யில் எண்ணெய் தடவிச் சூடாக்கி சிரங்கில் ஒத்தடம் கொடுக்கிறாள்.

விசுவம் பூக்குடலையைத் தூக்கிக்கொண்டு தாத்தாவுடன் தோட்டத்தில் பூப்பறிக்கச் செல்கிறான். அதிக உயரத்திலில்லாத பூக்களைப் பார்க்கும்போது, "நான்தான் பறிப்பேன்" என்று சிணுங்கு கிறான். தரையில் சிந்தியிருக்கும் பவழமல்லிப் பூக்கள், அரளிப் பூக்கள் ஆகியவற்றையும் அவன்தான் பொறுக்கிச் சேர்க்கிறான்.

ராமநவமியன்று விசுவம் வேஷ்டி, விபூதியெல்லாம் அணிந்து

தாத்தாவுடன் கோவிலுக்குச் செல்கிறான். 'ராம ராம ராம ராம ராம' என்று ஜபிக்கிறான்; கோவிலில் எல்லாரும் உட்கார்ந்து சாப்பிடுகிறார்கள்.

தயிர்க்காரி பொன்னம்மா, "என் ராசாக் கண்ணு" என்று விசுவத்தின் கன்னத்தைத் தடவிக் கொஞ்சுகிறாள். அவளுடைய கைகள் சொரசொரவென்றிருக்கின்றன. வாய் புகையிலை போட்டுச் செவசெவவென்றிருக்கிறது. காதுகளில் பெரிய துவாரங்களில் பெரிய தொங்கட்டான்கள் காதை அறுத்துவிடும்போலத் தொங்கு கின்றன. விசுவத்துக்கு அவளைப் பார்க்கப் பயமாக இருக்கிறது.

விசுவமும் அடுத்த வீட்டு மீனுவும் தோட்டத்திலிருக்கும் வாழைக் குருத்து, மாந்தளிர் ஆகிய ஒவ்வொன்றையும் தடவியும், முகர்ந்தும் பார்த்து மகிழ்கிறார்கள். வண்டு பறப்பதை, மரவட்டை ஊர்வதை, வண்ணத்துப்பூச்சி இறகுகளைச் சேர்த்துக் கொண்டு உட்கார்வதை – ஒவ்வொன்றையும் பார்த்து வியக்கிறார்கள். வேப்பம் பழங்களையும், எருக்கம் மொட்டுகளையும் சேகரித்துக்கொண்டு வருகிறார்கள். வேப்பம் பழங்களைத் தின்கிறார்கள். எருக்கம் மொட்டுகளை 'பொட் பொட்'டென்று சத்தம் வரும்படி நெற்றியில் தட்டி உடைக்கிறார்கள்.

மழை பெய்த பிறகு செம்மண் சாலைகள் சுத்தமாக இருக்கின்றன. மாட்டு வண்டிச் சக்கரம் ஈர மண்ணில் பதிந்து உருளும்போது ஏற்படும் ஓசை கேட்கச் சுகமாயிருக்கிறது. வண்டி மாடுகளின் முதுகுகள் சுத்தமாயிருக்கின்றன. அவற்றின் விலா எலும்புகள், தார்க்குச்சி பதிந்த தடங்கள் எல்லாம் பளிச்சென்று தெரிகின்றன. "ஹாய் – கித் கித் கித் கித் கித் – டிரியாவ், டிரியாவ்!" என்று வண்டிக்காரன் மாடுகளை விரட்டுகிறான்.

மீனுவின் அம்மா 'வீட்டிலில்லாத' தினங்களில் பாட்டி அவளுக்கு தலைவாரிப் பின்னுகிறாள். பேன்கள் தரையில் உதிர்கையில் மீனு அவற்றை நசுக்கிக் கொல்கிறாள். விசுவத்துக்கு உடலெல்லாம் கூசுகிறது, மீனு மேல் கோபம் வருகிறது.

பாட்டியின் உடல் வாசல் நடையில் அசையாமல் கிடக்கிறது. வீட்டுப் பெண்மணிகள் உரத்த குரலில் ஒப்பாரி வைத்து அழுகிறார்கள். விசுவத்தின் அப்பா சத்தம் போடாமல் அழுகிறார். விசுவத்துக்கு ஒன்றும் புரியவில்லை. பாட்டி எதற்காக சுவாமியிடம் போனாள்? அதற்கு ஏன் அழ வேண்டும்?

விசுவத்தின் அப்பாவும், தாத்தாவும் அவனுக்குக் குடுமி வைத்திருப்பது பற்றிச் சர்ச்சை செய்கிறார்கள்.

விசுவம் டில்லிக்கு வருகிறான். ரயில் அவனுக்கு மிகவும் பிடித்திருக்கிறது.

"என்ன, எழுந்திருக்கலையா?"

விசுவம் கண்களைத் திறந்தான். பத்மினி நின்றிருந்தாள். அவளையே சில கணங்கள் பார்த்துக்கொண்டிருந்தான். படுத்தவாறே மெல்லப் புன்னகை செய்தான்.

"என்ன?" என்றாள் அவள்.

"ஒன்றுமில்லை."

அவள் புடவை மடிப்புகளைத் தடவி, இழுத்து, சரிசெய்து கொள்ளத் தொடங்கினாள்.

"குளித்தாயிற்றா?"

"உம்" என்று அவள் தலையில் சுற்றிக்கொண்டிருந்த துண்டை அவிழ்ந்து, தலைமயிரை நன்றாகத் துவட்டிக்கொள்ளத் தொடங்கினாள். அவன் அவளுடைய அந்தச் செய்கையில் வெளிப்பட்ட முரட்டுப் பலத்தை ரசித்தவாறு படுக்கையிலிருந்து எழுந்திருக்காமல், எழுந்திருக்க விரும்பாமல், தலையணையில் முழங்கைகளை ஊன்றிக்கொண்டு சாய்ந்தாற்போல் உட்கார்ந்து அவளைப் பார்த்தவாறிருந்தான். சோர்வே ஏற்படாமல் தொடர்ந்து எவ்வளவு நேரம், எவ்வளவு துரிதமாக அவளால் தலைமயிரைத் துவட்டியவாறு இருக்க முடிகிறது ... அபரிமிதமான சக்தி, எனர்ஜி. இரவு நேரங்களில் அவளைத் திருப்திப்படுத்துவதற்கு, சோர்வடையச் செய்வதற்கு, அதே அளவு சக்தியை அவனும் செலவழிக்கிறான்.

அவள் ஒருகணம் நிறுத்தினாள். "இன்றைக்கு என்ன, எழுந்திருக்கப் போவதில்லையா?" என்றாள்.

"இதோ."

மறுபடி அவள் துவட்டிக்கொள்ளத் தொடங்கினாள். இந்தக் குளிர் இரவுகளில் அவர்களிருவரும் தத்தம் சக்திகளை ஒருவருக்காக மற்றவர் செலவழிப்பதில் – ஒருவரையொருவர் சோர்வடையச் செய்வதில் – ஆசுவாசமும் இன்பமும் அடைகிறார்கள். டில்லிக் குளிர் இந்தப் புராதனமான விளையாட்டுக்கு ஏற்றதாயிருக்கிறது. பகலில் நிறையப் பசிக்கிறது. நிறைய சாப்பிடத் தோன்றுகிறது. சாப்பாடு சக்தியை உருவாக்குகிறது. கோடைகாலப் பகல்களைப் போல, குளிர்காலப் பகல்கள் சக்தியைச் சூறையாடுவதில்லை. போற்றிப் பாதுகாக்கின்றன. உடம்புக்கு உடம்பை உணர வைக்கின்றன. ஊதல் காற்று கம்பளி உடைகளை ஊடுருவிக் கொண்டு உடலைத் தழுவும்போது, அந்தத் தழுவல் நமைச்சலையும் வேட்கையையும் ஏற்படுத்துகிறது. ஏக்கத்தை எழுப்புகிறது.

உடம்பின் நமைச்சல்! உடம்பின் ஏக்கம்.

இரவெல்லாம் இந்த நமைச்சலும் ஏக்கமும் தீரத்தீரத் தழுவித் தழுவிப் புரண்டு முனகி, பெருமூச்சுவிட்டு, சொற்களின் ஆபாசமின்றிப் புலன்களால் மட்டுமே ஒருவரையொருவர் உணர்ந்து உணர்ந்து – மகிழ்ந்து மகிழ்ந்து –

ஹம்மா, ஹப்பாடி இதுதான் சத்தியம். இதுதான். இது மட்டும்தான்.

நேற்று, நாளை, நீ, நான் எல்லாவற்றையும் மறையச் செய்கிற வெறி, திளைப்பு, பரவசம். முட்டி முட்டியும் பால் குடிக்கும் கன்றுக்குட்டியின் திளைப்பு. மடியின் பளுவை இறக்குகிற தாய்ப்பசுவின் பரவசம்.

மீண்டும் . . . மீண்டும் . . .

ஹம்மா, ஹப்பாடி . . .

சக்தியெல்லாம் செலவழிவது வரையில்.

இப்படிச் செலவழியாத வரையில் இந்தச் சக்தி ஒரு பளு. ஒரு உறுத்தல். தனி மனிதனையும், அவன் மூலம் சமூகத்தையும் பாதிக்கக் கூடிய உறுத்தல். ஆனால் இந்தச் சக்தியெல்லாம் இப்படியே செலவழித்துவிட்டாலும் . . .

திடீரென்று முன் அறையிலிருந்து யாரோ வெளி மனிதர்களின் பேச்சுக் குரல்கள் கேட்டன.

"வாத்யார்ஸ் ஹாவ் கம்" என்றாள் பத்மினி.

இன்று தாத்தாவின் சிரார்த்த தினம். விசுவம் எழுந்தான். முன் அறைக்குச் சென்று பார்த்தான். அங்கிருந்த சோபா, மேஜை முதலியவை எடுக்கப்பட்டு அறை வெறிச்சென்றிருந்தது. சாஸ்திரிகள் மூவர் சிரார்த்தத்துக்கான ஆரம்ப ஏற்பாடுகளில் ஈடுபட்டிருந்தார்கள். ஒருவர் செங்கற்களை அடுக்கி வரட்டிகளை வைத்து ஹோமத்துக்காக ஏற்பாடுகள் செய்துகொண்டிருந்தார். ஒருவர் வாழையிலைகளை நறுக்கித் தொன்னைகள் செய்துகொண்டிருந்தார். அவர்களுடைய தடித்த குரல்கள் அந்தக் காலி அறையில் பெருத்த எதிரொலிகளை எழுப்பின.

அப்பா மேற்பார்வை பார்ப்பவர் போல அறை நடுவில், இடுப்பில் கைகளைப் பதித்தவாறு நின்றிருந்தார். விசுவத்தைப் பார்த்ததும், அவனை அந்த சாஸ்திரிகள் மூவருக்கும் அறிமுகப்படுத்தினார்.

"இவன்தான் மூத்த பிள்ளை. எங்கப்பாவின் பெயரை இவனுக்குத்தான் வைத்திருக்கிறது . . ."

"ஓ! அமெரிக்காவிலே இருந்தானே . . ."

"ஆமாம், ஆமாம்."

விசுவம் அசிரத்தையாக அவர்களை நோக்கிப் புன்னகை புரிந்து விட்டு பாத்ரூமுக்குச் சென்றான். அவனால் அப்பாவைப் புரிந்து கொள்ள முடியவில்லை. இது ஒரு பக்கம் அவனுக்கு உறுத்தலாக இருந்தது. ஒரு பக்கம் ஆறுதலாகவும் இருந்தது. அவர் குறைகளும், பலவீனங்களும் உள்ள ஒரு சாதாரண மனிதர் . . .

பல் தேய்த்துவிட்டு, காப்பி குடித்துவிட்டு, அவன் பின் வராந்தாவில் போய் உட்கார்ந்தான்.

நேற்று அம்மாவும் பத்மினியுமாகத்தான் காரில் கடைக்குச் சென்று இன்றைய சிரார்த்தத்துக்கான கறிகாய்களை வாங்கி வந்தார்கள்.

அம்மா கறிகாய்களுடன் கூடவே ஒரு விஸ்கி பாட்டில், சுருட்டுப் பாக்கெட், குரு ஷர்ட் (அப்பாவுக்காக), ஒரு பாப் மியூஸிக் இசைத் தட்டு (பத்ரிக்காக), ஷாம்பூ, ஸெண்ட், செருப்பு (தனக்காக), மாக்ஸி கவுன் (பத்மினிக்கு பிரெஸெண்ட்) ஆகிய வற்றையும் வாங்கி வந்தாள். விசுவத்துக்கு மிகவும் வேடிக்கையாக இருந்தது. ஒரே சமயத்தில் தன்னுடைய மாமனார், கணவன், மாட்டுப்பெண் ஆகிய எல்லோருக்கும் பாந்தமானவளாகத் தன்னை ஆக்கிக்கொள்ளும் அம்மாவின் முயற்சி . . .

பேசாமல், கறிகாய்களை ராம்சிங்கைவிட்டு வாங்கி வரச்சொல்லி யிருக்கலாம். அதுதான் தாத்தாவுக்கும் சாந்தியாயிருந்திருக்கும். தாத்தா தில்லியில் இருந்த நாட்களில் அந்த வீட்டில் மற்ற யாரிடமும் இருந்ததைவிட ராம்ஸிங்கிடம்தான் அவருக்கு நெருக்கமும், நேசமும் அதிகமாயிருந்தது. இவ்வளவுக்கும், தாத்தாவுக்கு இந்தி தெரியாது. ராம்ஸிங்குக்கு அரையும் குறையுமாகத்தான் தமிழ் தெரியும். (பல வருடங்களாக அவர்கள் வீட்டில் வேலை பார்த்ததில் அவன் தட்டுத் தடுமாறித் தமிழ் பேசக் கற்றுக்கொண்டிருந்தான்.) இருந்தாலும் அவர்களால் எப்படியோ ஒருவரையொருவர் பூரண மாகப் புரிந்துகொள்ள முடிந்தது. ஒருவர் அண்மையில் மற்றவர் ஆசுவாசமும், மன நிறைவும் அடைய முடிந்தது. ஒத்த மனப்போக்கும் எண்ணங்களும் உள்ளவர்களிடையே ஏற்படும் ஆசுவாசம்.

இதோ, இங்கே தோட்டத்தில்தான், அந்த முருங்கை மரத்தடியில் ஒரு கயிற்றுக்கட்டிலைப் போட்டுக்கொண்டு உட்கார்ந்திருப்பார். தாத்தா. ராம்ஸிங் அவரருகில் புல்தரையில் அமர்ந்து துளசி ராமாயணத்தை வடக்கத்தியர்களுக்கே உரிய ஒரு ராகத்துடன், குரலின் ஏற்ற இறக்கங்களுடன், படித்துக்காட்டிக் கொண்டிருப்பான். பாதி தன்னுடைய தப்புத் தமிழிலும், பாதி சைகைகளிலுமாகத்தான் படித்துக் காட்டியதற்கு அர்த்தமும் சொல்லுவான். சில சமயங்களில் செல்லப்பா அவர்களிருவருக்கிடையில் மொழி பெயர்ப்பாளனாக உதவுவதுண்டு. ஆனால் ஏற்கெனவே தாம் சூட்சுமமாக உணர்ந்து கொண்டவற்றை அவர்கள் அவன் மூலம் ஊர்ஜிதப்படுத்திக் கொண்டிருக்கலாமே தவிர, அவன் காரணமாக அவர்களிடையே ஏற்கெனவே இல்லாத புதிய தொடர்பு எதுவும் ஏற்பட்டு விடவில்லை.

விசுவத்துக்கு நினைக்க நினைக்க ஆச்சரியம்தான் உண்டாயிற்று. அவர்களிருவரையும் இணைத்த பொதுவான சரடு ராமாயணம் மட்டுந்தானா? இல்லை. கடவுள் பக்தி; இயற்கையின்பால் அன்பும் மதிப்பும்; சிகரெட், சினிமாப் பாட்டு, மேற்கத்திய பாணி உடை, பேச்சு ஆகியவைபால் வெறுப்பு; என்று இப்படிப் பல சரடுகள் . . .

தாத்தா இருந்தபோது எல்லாப் பண்டிகை தினங்களும் தவறாமல் அவர்கள் வீட்டில் கொண்டாடப்பட்டு வந்தன – சிவராத்திரி யிலிருந்து கிருஷ்ண ஜயந்தி வரையில், கந்தசஷ்டியிலிருந்து ராமநவமி வரையில். ஆனால் இப்போதெல்லாம் யாரும் சிரத்தை எடுத்துக் கொள்வதில்லை.

அப்பாவுக்கு நேரமில்லை. அம்மாவுக்கும் நேரமில்லை. இதிலெல்லாம் அவர்களுக்கு நம்பிக்கையுமில்லை. விசுவத்துக்கும் இவ்விஷயத்தில் அவர்களுடன் உடன்பாடுதான்.

ஆனால், சில சமயங்களில் யோசித்துப் பார்க்கும்போது, அழகிய ஏதோ ஒன்றை, சிலவற்றை, இழந்துவிட்டாற் போன்ற ஒரு 'ஸென்டிமென்டல்' உணர்வு ஏற்படுகிறது.

பண்டிகைகளின்போது தாத்தாதான் பூஜை செய்வார். அப்போது ராம்ஸிங்கும் கையைக் கட்டிக்கொண்டு ஒரு ஓரமாக வந்து உட்காருவான். கடைசியில் கற்பூரம் காட்டும்போது அவனும் பயபக்தியுடன் ஒற்றிக் கொள்வான், மலர்களை எடுத்து சுவாமிமேல் போடுவான்.

மலர்களிலும், பறவைகளிலும், பருவமாற்றங்களிலும் தாத்தாவைப் போலவே ராம்ஸிங்குக்கும் நுட்பமான ஈடுபாடு உண்டு. அவன் இமயமலைப் பிரதேசத்திலிருந்த கட்வால் பிரதேசத்தைச் சேர்ந்தவன். சமையலறையில் வேலை செய்யும்போது அந்தப் பிரதேசத்தின் நாட்டுப் பாடல் மெட்டுகளை முனகிக்கொண்டிருப்பான். வீட்டில் யாருமில்லாவிட்டால் உரத்த குரலில் பாடவும் செய்வான். அந்தப் பாட்டில் ஒரு விடுதலை ஏக்கம் தொனிப்பது போலிருக்கும். அந்த நகர்ப்புறத்துச் சூழ்நிலை, மனிதர்கள், நாகரிகப் பூச்சுகள் யாவற்றிலிருந்தும் விடுபட்டு மீண்டும் தன்னையும் தன் முன்னோர் களையும் உருவாக்கிய கட்வால் மலைப்பிரதேசத்தை அடைய வேண்டுமென்ற ஆன்மாவின் துடிப்பாக அந்தப் பாட்டு தோன்றும்.

அவனுடைய தாத்தா தில்லியில் இருந்த நாட்களில் எப்போதும் ஏதாவதொரு ராகத்தை முனகிக்கொண்டோ, சில சமயங்களில் உரத்த குரலில் பாடும்போதோகூட, விசுவத்துக்கு இதே உணர்வுதான் ஏற்படும்.

ஆம். ராம்ஸிங் இன்றைய சிரார்த்தத்துக்கு கறிகாய் வாங்கி வந்திருக்க வேண்டும்; அதுவே தாத்தாவின் ஆத்மாவுக்குச் சாந்தியை அளித்திருக்கும். சமையலும்கூட அவனே செய்திருக்கலாம்.

இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாக அவர்கள் வீட்டில் அவன்தான் தினமும் சமையல் செய்து வருகிறான். ஆனால் தாத்தாவின் சிரார்த்த தினத்தன்று – என்றைக்கு அவன் விசேஷமாக சமையல் செய்ய விரும்புவானோ அன்றைக்கு – அந்த உரிமை அவனுக்கு மறுக்கப்படுகிறது. போன வருடம் தாத்தாவின் முதல் சிரார்த்த தினத்தன்று, "படா ஸாப் கா சிரார்த்" என்று அவன் ஆசையாக சமையல் முதலியவற்றில் ஒத்தாசை செய்வதற்காக வந்தானாம். ஆனால் சாஸ்திரிகள் எல்லாரும் ஆட்சேபம் தெரிவித்ததின் பேரில், மிகச் சிரமப்பட்டு அவனுக்கு நிதானமாக விஷயத்தைப் புரிய வைத்து அவனைத் திருப்பி அனுப்பினாளாம் அம்மா.

பாவம், அன்று அவன் மனம் மிகவும் புண்பட்டிருக்கும்.

வெவ்வேறு வீடுகளில் சமையல் செய்து பிழைக்கும் ஒரு பிராம்மணச் சமையல்காரர் அந்த சிரார்த்த தினத்தன்று அவர்கள் வீட்டில் வந்து சமைப்பதும், மக்களின் மூட நம்பிக்கையையும் உணர்ச்சி வசப்பட்ட குலப்பெருமையையும் சார்ந்து பிழைக்கும் வைதிகப் பிராம்மணர்கள் சில மந்திரங்களையும், சடங்குகளையும் ஒப்பேற்றிவிட்டு, அந்தச் சமையலைச் சாப்பிட்டுவிட்டுச் செல்வதும் – இதுவா தாத்தாவுக்குத் திருப்தியளிக்கப் போகிறது? அவரைக் கடைத்தேற்றப் போகிறது? இல்லை . . .

ராம்ஸிங் தன் பொருட்டுப் பிரியமாக உணவு தயாரிப்பதையும் படைப்பதையுமே தாத்தா விரும்பியிருப்பார்.

குறைந்தபட்சம், விசுவத்துக்கு இப்படித்தான் தோன்றுகிறது.

ஆத்மாவினால் வழிபட வேண்டியவரை, பின்பற்றப்பட வேண்டியவரை, வெறும் சடங்குகளினால் தொழுவது அவரை அவமதிப்பதாகும். ஆனால் அவனுடைய அப்பா ஆத்மாவினால், ஆசரணங்களினால், தன் தந்தையைப் பின்பற்றாமலிருப்பதற்கு ஒரு பிராயச்சித்தம்போல, இந்தச் சடங்கினால் அவரைத் தொழுகிறார். இதைத் தமக்கு ஒரு கழுவாயாகப் பயன்படுத்திக் கொள்கிறார். இதன் அடிப்படை ஒரு குற்ற உணர்ச்சி.

"நான் என் தந்தையைவிட, முன்னோர்களைவிட, எந்த விதத்திலும் உயர்ந்தவனல்ல. அவர்களின் ஒரு சிறு பகுதி, என்று பணிவாக உணருவதற்காக இதைச் செய்கிறேன்" என்று நேற்று அவன் தந்தை அவனிடம் இதைப் பற்றிப் பேசும்போது கூறினார்; "என் அப்பா தான் இருந்தவரையில் தன் அப்பாவுக்குச் செய்து கொண்டிருந்தார். இப்போது நான் என் அப்பாவுக்குச் செய்கிறேன் . . . உணர்ச்சிபூர்வமாக இதை நீ அணுக வேண்டும். புரிந்துகொள்ள முயலவேண்டும் . . ."

வெறும் வார்த்தைகள் . . .

அப்படியானால், நாளை விசுவமும் தன் அப்பாவுக்குச் சிரார்த்தம் செய்ய வேண்டுமா? விசுவம் தி ஸைன்டிஸ்ட், விசுவம் தி இன்டெலெக்சுவல்.

கடைசியில் எல்லாம் இப்படித்தான் வந்து முடிகிறது. அர்த்தமும் நோக்கமும் மறைந்து வெறும் கூடு மட்டும் மிஞ்சுகிறது. அதுவே உண்மையென்று மயங்குகிறோம்.

விஞ்ஞான ஆராய்ச்சியில் ஈடுபடுபவர்களுக்கு இந்தியாவில் போதிய அளவு சுதந்திரம் அளிக்கப்படவில்லையென்று விசுவம் அமெரிக்காவுக்குச் சென்றான். இன்று அமெரிக்கச் சர்வகலாசாலை ஒன்றின் அங்கீகாரத்துக்காக தீஸிஸ் எழுதிக் கொண்டிருக்கிறான். அதன் காரணமாய் ஒரு டாக்டர் பட்டம்; அதன் மூலம் ஒரு உயர்ந்த பதவி – இதுவா அவன் லட்சியம்?

இல்லை. அவன் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும்.

தான் வேண்டுவது என்ன என்பதுபற்றி ஒவ்வொரு கணமும் தெளிவுடன் இருக்க வேண்டும். தன்னுடைய அப்பாவைப் போலப் போராட்டமேயின்றி உலகப் போக்குடன், அதிகச் செலாவணி பிம்பங்களுடன் அடித்துச் செல்லப்பட அவன் விரும்பவில்லை. தான் வாழும் சமூகத்தின் மதிப்பீடுகளில் அக்கறையுள்ளவனாக, அவர்களுடைய விதிகளின் பிரகாரம் நாகரிகமானவனென்றோ, வெற்றி பெற்றவனென்றோ, ஒரு நல்ல மனிதனென்றோ மதிப் பெண்கள் பெறுவதற்கு அவன் முயலப் போவதில்லை. அவர்களுடைய பந்தயங்களில் கலந்துகொள்ளப் போவதில்லை. தன்னை அவர்களுக்கு நிரூபித்துக்கொள்ளப் போவதில்லை.

தன்னைத் தன் பார்வையில் நிரூபித்துக்கொள்வதுதான் அவனுக்கு முக்கியம். தன்னைப் பற்றித் தன் திருப்திக்காகத் தெரிந்துகொள்வது தான் முக்கியம். ஆழத்தில் வெகு ஆழத்தில், அவன் யார்? அவன் யாசிப்பது எது?

இதை அவன் கண்டுபிடிக்க வேண்டும். தேடியவாறிருக்க வேண்டும். மற்றவர்கள் அவனைப்பற்றி உருவாக்கும் பிம்பங்களுக்குப் பலியாகாமல் அவன் தன்னைக் காத்துக்கொள்ள வேண்டும்.

இது சாத்தியந்தானா?

கிராமத்தில், தாத்தாவின் வீட்டில் வளர்ந்த விசுவம்; அடுத்த வீட்டு மீனுவுடன் விளையாடிய விசுவம்; பிறகு அமெரிக்காவில் பத்மினியைச் சந்தித்த விசுவம். இன்று அப்பாவின் வீட்டில் அவருடைய ஈஸிசேரில் அமர்ந்து அவருடைய வாழ்க்கை மதிப்பீடுகளைப்பற்றி ஏளனமாக நினைக்கும் விசுவம் . . .

அவன் ஈஸிசேரிலிருந்து எழுந்து தோட்டத்தில் உலவத் தொடங்கினான். எவ்வளவு அழகிய எண்ணங்கள்!

ஒருவேளை அவனுள்ளும் குற்ற உணர்ச்சிகள் இருக்கின்றன போலும். அவற்றுக்குப் பிராயசித்தமாகத்தான் தன்னை அடிக்கடி கூண்டில் நிறுத்திக் குறுக்கு விசாரணை செய்து கொள்ளுகிறான். தன் உயரிய நோக்கங்களை மீண்டும் மீண்டும் நினைவுபடுத்திக் கொண்டு, தன்னைச் சுற்றியுள்ளவர்களைத் தராசில் நிறுத்துத் தீர்ப்புகள் வழங்கி, அதன் மூலம் பெரும் சாதனை புரிந்துவிட்டதாக உணருகிறான்.

ஆனால் இது வெறும் தர்க்க விளையாட்டு, எண்ண மாளிகை, செயலுக்கு மாற்று.

இந்தியாவுக்கு வந்ததிலிருந்து அவன் இதுவரை தீஸிஸ் எழுதத் தொடங்கவுமில்லை, வேறெதுவும் உபயோகமாகச் செய்யவும் இல்லை. இதுதான் குற்ற உணர்ச்சியின் காரணம். இதற்குச் சரியான பரிகாரம் அவன் உடனடியாக, உபயோகமாக எதையாவது செய்யத் தொடங்குவதுதான்.

இன்று அவன் தீஸிஸில் சில பக்கங்களாவது எழுதிவிட வேண்டும்.

பம்பாயிலும் டில்லியிலும் பல்வேறு மனிதர்களை இது சம்பந்தமாகப் பேட்டி கண்டு, நகரத்தின் பல்வேறு பிரதேசங் களில் நிலவிய சூழ்நிலைகளைப் பற்றிக் குறிப்புகள் எடுத்து வைத்திருந்தான். அவற்றுக்குச் சரியான வடிவம் கொடுத்து வெவ்வேறு கருத்துக்களை ஒன்றோடொன்று இணைத்து விரிவாகச் சிந்தித்துக்கொண்டு போக வேண்டும், முடிவுகளை உருவாக்க முயல வேண்டும். சென்னைக்கும் கல்கத்தாவுக்கும் வேறு சில நகரங்களுக்கும்கூட அவன் இது சம்பந்தமாகப் போக வேண்டியிருக்கலாம். ஆனால் முதலில் ஒரு பொதுவான திட்டத்தை அவன் உருவாக்கிக்கொள்ள விரும்பினான். பிறகு எல்லாம் சுலபமாயிருக்கும். என்னென்ன தகவல்களைச் சேகரிக்க வேண்டும்? என்னென்ன புள்ளி விவரங்கள், கணக்குகள் தேவைப்படும்? யார் யாரிடம் என்னென்ன கேட்க வேண்டும்?

இதையெல்லாம் அவன் முதலிலேயே முடிவு செய்துகொள்வது நல்லது. விரிவான அட்டவணைகள், பட்டியல்களெல்லாம் தயாரித்துக் கொள்ள வேண்டும் . . .

அவன் மீண்டும் வராந்தாவுக்கு வந்தபோது, வீட்டுக்குள்ளிருந்து மந்திர கோஷம் கேட்கத் தொடங்கியது. ஹோமப்புகை . . . சிரார்த்தங் களினால் காற்றின் அசுத்தம் – பொல்யுஷன் – கணிசமாக அதிகரிக்கக் கூடுமென்று அவன் வேடிக்கையாக நினைத்துக்கொண்டான்.

அம்மா உள்ளேயிருந்து அவன் அங்கே நிற்பதைப் பார்த்து அவனருகில் வந்தாள். அவள் மடிசார்ப் புடவை கட்டிக் கொண்டிருந்தாள்.

"உன்னை இப்படியே ஒரு போட்டோ எடுக்கணும்" என்றான் விசுவம், அவள் அவனருகில் வந்ததும்.

அவள் புன்னகையுடன் அவனுடைய பாராட்டைச் சுவீகரித்தவாறு புடவையை இங்குமங்குமாக இழுத்துவிட்டுக் கொண்டாள். "கட்டிக்கிறதுக்குக் கூட மறந்து போயிடுத்து . . . அது சரி, நீ பிரேக்பாஸ்ட் ஏதாவது சாப்பிடறயா? சாப்பிடறதுக்கு நாழியாகுமே . . .!"

"என்ன இருக்கு?" என்று ஹோட்டலில் கேட்பது போல அவன் கேட்டான்.

"ஆம்லெட் வேணுமானால் சாப்பிடறயா? நான் தனியா ஸ்டவ் மூட்டி பண்ணித்தரேன் . . ."

விசுவம் இதை எதிர்பாராதவனாய் அம்மாவை வியப்புடன் பார்த்தான். அவள் இதன் மூலம் தன்னை விசால மனப் போக்குள்ளவள், நாகரிகமானவள் என்று நிரூபிக்க விரும்புகிறாளா? சிரார்த்தம் உன்னைக் கட்டுப்படுத்த வேண்டியதில்லையென்று தெரிவிக்கிறாளா? அல்லது அவளுக்கும் அந்தச் சடங்கில் உடன் பாடில்லையா?

"எனக்கு இப்ப ஒண்ணும் சாப்பிடணும்போல இல்லை . . .

இரண்டாவது டோஸ் காபி மட்டும் கொடுத்தால் போதும்" என்றான் அவன்.

அம்மா உள்ளே சென்றாள். அவன் மறுபடி ஈஸிசேரில் உட்கார்ந்தான்.

அம்மா நாடகமேடைக்கு வெளியேயும் ஒரு நடிகைதான். வெவ்வேறு தருணங்களில் வெவ்வேறு வேஷங்கள் அணிவதில் இன்பம் கொள்கிறவள். அப்பாவும் அப்படித்தான். இருவரும் நல்ல, பொருத்தமான ஜோடி. அவர் நடிகர், அவள் நடிகை. இன்று இருவரும் தினசரி அணிவதிலிருந்து மாறுபட்ட உடைகளையணிந்து, மாறுபட்ட 'ரோல்'களை நடித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர் பட்டு வேஷ்டியைத் தார்பாய்ச்சிக் கட்டிக்கொண்டு, பூணுல் தெரியும்படியாகத் திறந்த மார்புடன் நின்றுகொண்டிருக்கிறார். அவள் மடிசார்ப்புடவை கட்டிக்கொண்டிருக்கிறாள்....

நடிப்பில் தேர்ந்த அவர்களுக்கு அவனைப் போல நடிக்கத் தெரியாத அல்லது இயலாத ஒரு பிள்ளை பிறந்தது ஆச்சரியம் தான். அவன் எப்போதும் ஒரே மாதிரியாக இருக்க விரும்புகிறான். இருக்க முயலுகிறான். இதில் பெருமை வேறு கொள்கிறான்.

அம்மா காப்பி கொண்டு வந்து கொடுத்தாள். அதைக் குடித்து விட்டு அவன் வீட்டினுள் சென்றான். பத்ரி இருந்தானானால் அவனுடன் பாப் மியூஸிக்கைப் பற்றியும் போதை மாத்திரைகளைப் பற்றியும் பேசி அதைச் சாக்கிட்டுத் தானும் ஒரு புதிய வேஷமணிந்து இளைப்பாறலாமென்று நினைத்து பத்ரியின் அறைக்குச் சென்றான். ஆனால் பத்ரியைக் காணோம். உடனே செல்லப்பாவின் அறைக்குச் சென்றான்.

அவனையும் காணோம்.

விசுவம் செல்லப்பாவின் படுக்கையில் படுத்துக்கொண்டான். எதிரே சுவரில், தாத்தாவின் புகைப்படம். மறுபடி அவரைப் பற்றிய நினைவுகள்.

சென்ற பல நாட்களாகவே அவரைப் பற்றிய நினைவுதான். அவருடன் கழித்த தருணங்களின் நினைவு. தலையில் அடி பட்டிருந்ததால் படுக்கையிலேயே கிடக்க நேர்ந்தது. நினைவுகள் கட்டுப்பாடின்றி, தடங்கல்கள் இன்றி மதகு திறந்தவுடன் பாயும் நீர் வெள்ளம் போலக் குபுகுபுவென்று பாய்ந்தவண்ணமிருந்தன.

தலையில் அடிபட்ட மறுதினம் அவனுக்கு கடும் ஜுரம். தூக்கத்தில் ஏதேதோ உளறினானாம். 'மீனு மீனு' என்று முணுமுணுத்தானாம்.

பத்மினிதான் பிற்பாடு அவனுடைய உளறல்களை அவனிடம் தெரிவித்தாள். பிறகு அவன் மீனுவைப் பற்றியெல்லாம் அவளுக்கு விரிவாகக் கூறினான்.

ஒரு வேளை, அன்றிரவு பார்ட்டி நடந்த வீட்டுக்கு வெளியே,

தோட்டத்தில், பவழமல்லி மலர்களைப் பார்த்தவுடன் சிறு வயதில் கிராமத்தில் மீனுவும் அவனுமாகப் பவழமல்லி மலர்களைப் பொறுக்கிய நினைவு அவனையுமறியாமல் அவனுடைய ஸப்-கான்ஷஸ்ஸில் கிளறப்பட்டிருக்கலாம்.

ஒருவேளை அவனுக்கு மிக ஆதாரமான, அடிப்படையான, நினைவுகளும் உணர்வுகளும் அவனுடைய இளம் பருவத்தை, கிராமத்தை சார்ந்தவைதான் போலும். எப்படியோ தொடங்கி எப்படியோ பரிணமித்திருக்கும் ஒரு வேஷத்தையணிந்து இன்று அவனைச் சுற்றியுள்ள உலகத்தில், வாழ்க்கையில் பங்கு கொண்டிருக்கும் அவன், அவனை மீறிய ஒரு நிகழ்ச்சி காரணமாக, திடீரென்று தனியனானான்; ஒதுக்கப்பட்டான். அசக்தனாகப் படுக்கையில் தள்ளப்பட்டான். உடனே படிப்படியாக அவன் மனதின் போர்வைகள் கழன்றுவிழத் தொடங்கின. சிறு பையன்கள் நடந்து செல்லும் போது கீழே கிடக்கும் பற்பல பொருள்களை எடுத்து நிக்கர் பாக்கெட்டில் திணித்தவாறே செல்வதைப்போல, இடைக்காலத்தில் அவனுடைய மனக்கிடங்கில் அவன் பாகுபாடின்றிச் சேகரித்திருந்த நினைவுகள், பாவனைகள், பற்றுகள், பிடிப்புகள், பயங்கள் ஆகியவற்றில் பெரும்பாலானவை இந்தச் சில நாட்களில் திடீரென்று பயனற்றவையாகத் தோன்றி எடுத்தெறியப்பட்டுவிட்டன. இவற்றையெல்லாம் நான் எப்போது, எதற்காகச் சுமக்கத் தொடங்கினேனென்று அவன் வியக்கத் தொடங்கினேன். அவன் மனதின் எடை பலமடங்குகள் குறைந்து அவன் மிக இலேசானவனாக ஆகிவிட்டது போலிருந்தது.

அவன் குழந்தையைப் போலப் பரிசுத்தமாக உணர்ந்தான்.

பத்மினியும் அவனைக் குழந்தையைப் போலப் பாவித்து நடத்தத் தொடங்கினாள். சொந்த இயக்கமும் சிந்தனையும் அற்று அவள் சொற்படி கேட்கும் குழந்தை. அவள் ஷேவ் பண்ணிக் கொள்ளச் சொல்லும்போது ஷேவ் பண்ணிக்கொள்ள வேண்டும். குளிக்கச் சொல்லும்போது குளிக்க வேண்டும். சாப்பிடச் சொல்லும்போது சாப்பிட வேண்டும். தூங்கச் சொல்லும்போது தூங்க வேண்டும். உசுப்பி விடும்போது உசுப்பப்படவேண்டும், அவளைக் காதலிக்க வேண்டும்...

அவளைப் பொறுத்தவரையில், மிக சௌகரியமானதொரு ஏற்பாடு. அவள் தன் அடிமனதில் போற்றிவந்த ஒரு ரகசிய ஆண்பிம்பத்தை அவன் அந்த நாட்களில் பூர்த்தி செய்திருக்க வேண்டும். அவள் தன் வீட்டில் ஒரே பெண், செல்லப்பெண். வீட்டு நிர்வாகத்தை அவள்தான் பார்த்துக்கொண்டாள். ஒவ்வொன்றுக்கும் எல்லாரும் அவளைத்தான் கேட்பார்கள். அவளுடைய முக்கியத்துவத்தை அதிகரிப்பார்கள். என் பேனா எங்கே, என் சட்டை எங்கே, புதிய ரீடர்ஸ் டைஜஸ்ட் எங்கே, நம்ம வீட்டிலே பை ஒன்றும் கிடையாதா?

அவள் ஒரு மானேஜர். யாரையாவது எதையாவது மானேஜ்

பண்ணிக்கொண்டிருப்பதில்தான் அவளுக்கு மகிழ்ச்சி.

அவன் அவள் சொல்படியெல்லாம் நடந்து கொண்டதற்கு ஒரு சலுகையாக, அவன் தன்னைப்பற்றி மணிக்கணக்காகப் பேசுவதை அவள் பொறுமையாக, மறுவார்த்தை பேசாமல் கேட்பாள். அவன் அந்த நாட்களில் தன்னைப்பற்றி அவளிடம் நிறையப் பேசினான். அவள் மூலம் தான் யாரென்று கண்டுபிடிக்கும் பரபரப்புடனும் ஆர்வத்துடனும் பேசினான்.

முதலில் தினசரியும், பிறகு ஒரு நாள் விட்டு ஒரு நாளும், அவன் தலையில் பாண்டேஜ் மாற்றுவதற்காக டிஸ்பென்ஸரிக்குச் செல்ல வேண்டியிருந்தது. அவள் அவனை அங்கு டிரைவ் பண்ணிச் செல்வாள். பிறகு டிஸ்பென்ஸரியிலிருந்து வேறு எங்காவது செல்வார்கள். பிர்லா மந்திர், செங்கோட்டை, கனாட் பிளேஸ், இந்தியா கேட்...

சில சமயங்களில் ஏதாவது சினிமாவுக்கோ, டிராமாவுக்கோ, வேறு கலை நிகழ்ச்சிகளுக்கோ செல்வார்கள். அல்லது ரெஸ்டாரண்டுக்கு.

அவன் பேசிக்கொண்டேயிருப்பான். காரில் செல்லும்போது பேசுவான். டிஸ்பென்ஸரியில் காத்திருக்க நேர்ந்தால் அங்கே பேசுவான். பிறகு இன்னொரு இடத்துக்குப் போனால் அங்கும் பேசியவாறு இருப்பான். அந்தந்தக் கணத்தில் சுற்றுப்புறங்கள், சூழ்நிலைகளின் பாதிப்பினால் அவனுள் உருவாகும் எண்ணங்கள், நினைவுகள், கற்பனைகள் ஆகியவற்றை வார்த்தைப்படுத்தியவாறிருப்பான்.

அவன் தன்னைக் கண்டுபிடிக்க முயன்றுகொண்டிருந்தான்.

ஒருநாள் இந்தியா கேட் புல்வெளியில் உட்கார்ந்திருந்தபோது திடீரென்று அவன் பாடினான். ஒரு பழைய தமிழ்த் திரைப்படப் பாட்டு. கிராமத்திலிருந்தபோது பீடிக் கம்பெனி வான் ஒன்று வந்து நாற்சந்தியில் நிற்கும். இசைத்தட்டுகளைப் போட்டுக் கூட்டம் சேர்ப்பார்கள். அப்போது கேட்ட பாட்டு.

இந்தப் பாட்டு இவ்வளவு நாட்களாக அவனுள் எங்கே ஒளிந்திருந்தது? அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

எட்டு ஒன்பது வயது வரையில் கிராமத்தில் தாத்தா வீட்டில் வளர்ந்ததையும், பிறகு பாட்டி செத்துப்போனதைத் தொடர்ந்து தான் டில்லிக்கு வந்ததையும் பற்றி அவன் அவளுக்குக் கூறினான். டில்லிக்கு வருவதற்கு முன்பு அவன் குடுமி வைத்திருந்தான். டில்லிக்கு வந்த பிறகுதான் கிராப் வைத்துக்கொண்டான்.

சிறு வயதில் குடுமி வைத்துக்கொண்டிருந்தபோது அவனை எடுத்த ஒரு போட்டோவைப் பார்த்துப் பத்மினி விழுந்து விழுந்து சிரித்தாள்.

அந்தப் போட்டோவில் விசுவத்தின் அருகில் மீனுவும் இருந்தாள். "அழகாயிருக்காளே!" என்றாள் பத்மினி.

இன்னொரு போட்டோ டில்லியில் அவனுடைய பள்ளி நண்பர்களுடன் எடுத்துக்கொண்டது. டில்லியில் பள்ளிக்கூடத்தில் சேர்ந்த புதிதில் அங்கிருந்த மாணவர்களுக்கு அவன் ஒரு பரிகாசப் பொருளாக விளங்கியதை அவன் அவளுக்குச் சொன்னான். அவர்களைப் போலச் சரளமாக ஆங்கிலத்திலும் இந்தியிலும் அவனால் பேச முடியவில்லை. அவர்கள் வாசித்திருந்த அளவு காமிக்ஸ் புத்தகங்கள் அவன் படித்திருக்கவில்லை. ஆங்கிலப் படங்கள் பார்த்திருக்கவில்லை. லோன் ரேஞ்சர், டொனால்ட் டக், ஜெர்ரி லூயிஸ் போன்ற பெயர்களை அவன் கேள்வியும் பட்டிருக்கவில்லை.

அவனுக்கு ராமாயணமும் மகாபாரதமும் தான் தெரிந்தது. தாத்தா தொடர்ந்து பல இரவுகள் அவனுக்கு அவற்றை விஸ்தாரமாகக் கூறியிருந்தார். அதைத் தவிர பாட்டியும் சில கதைகள் கூறியிருந்தாள்.

அந்தக் கதைகளை அவனுடைய டில்லி நண்பர்கள் ரசிக்கவில்லை. அவனால் அவர்களுடன் சகஜபாவத்தையும் அன்னியோந்நியத்தையும் உருவாக்கிக்கொள்ள முடியவில்லை. அவர் களுடன் விளையாட்டுகளில் கலந்துகொள்ள முடியவில்லை.

அவன் வீட்டில், ராம்ஸிங்குடன்தான் விளையாட வேண்டியிருந்தது.

ராம்ஸிங் அவனைத் தோள்மீது தூக்கி வைத்திருப்பது போன்ற ஒரு போட்டோ இருந்தது . . .

அவன் தன்னை இதுவரை எடுத்திருந்த எல்லா போட்டோக்களையும் அவளுக்குக் காட்டினான். அவை எடுக்கப்பட்ட காலத்தையும் சூழ்நிலையையும் அவளுக்கு விளக்கினான்.

அவன் தன்னைப் பற்றிய எந்தச் சிறு தகவலையும் அவளுக்குச் சொல்லாமல் விடவில்லை. இந்தத் தகவல்கள் அவனைப் பாதித்த விதத்திலிருந்து, தன்மேல் நிகழ்ந்திருந்த பாதிப்புகளை அவன் கணிக்க முயன்றான்.

டில்லியில் வந்து தாத்தா தங்கியிருந்த நாட்களில், அவனிடம் இருந்ததைவிட செல்லப்பாவிடமும் ராம்ஸிங்கிடமும் அவருக்கு ஒட்டுதல் அதிகமாயிருந்ததைப் பற்றி நேற்று அவன் அவளிடம் கூறிக்கொண்டிருந்தான்.

செல்லப்பாவுக்கு தாத்தாவும் அவருடைய கதைகளும் புதுமையாயிருந்தன.

விசுவத்துக்கோ டில்லியும், அவனுடைய நண்பர்களும்தான் புதுமையாயிருந்தார்கள் அவன் அடுத்தவீட்டுப் பையனுடன் வால்ட் டிஸ்னி படம் பார்க்கச் செல்வான்.

தாத்தாவுக்கு வால்ட் டிஸ்னியைத் தெரியாது. சினிமா என்றால் தெரியும். அது மோசமானதென்ற ஒரு அபிப்பிராயம். . . . .

விசுவம் அவர் மதிப்பில் விழுந்துவிட்டான். அவர்களிடையே தூரம் உண்டாகிவிட்டது.

“குளிக்கப் போகலையா?” என்று கேட்டுக்கொண்டு பத்மினி வந்தாள்.

“உம்” என்று அவன் எழுந்திருக்காமல் படுத்திருந்தான். அவனுடைய தலைக்காயம் சரியாகிவிட்டது. நாளை பாண்டேஜை அவிழ்த்து விடுவார்கள். அவன் இனி அவள் பராமரிப்புக்குட்பட்ட குழந்தையாகக் கட்டிலில் கிடக்க வேண்டியதில்லை. அவள் குளிக்கச் சொன்னவுடன் குளிக்க வேண்டியதில்லை.

அவன் எழுந்திருக்காமல் கட்டிலில் படுத்துக் கொண்டேயிருந்தான்; தாத்தாவின் புகைப்படத்தைப் பார்த்துக் கொண்டேயிருந்தான். மந்திர கோஷமும், வீடெங்கிலும் படர்ந்திருந்த ஹோமப் புகையும் அவனை எங்கோ பின்னோக்கி அழைத்துச் செல்வது போலிருந்தது...

# 17

மிஸஸ் பசுபதி திடுக்கிட்டவளாய்க் கண்விழித்தாள். வாசல் மணி அடிக்கும் ஓசை கேட்டு; டெலிபோன் மணி அடிக்கும் ஓசை கேட்டு. எவ்வளவு நேரமாக இரண்டும் ஒலித்துக் கொண்டிருக்கின்றனவோ!

வீட்டில் வேறு யாரும் இருப்பதாகத் தெரியவில்லை.

விலகியிருந்த திரைச் சீலைகளுக்கும் கண்ணாடிக் கதவுகளுக்கு மிடையே இருந்த இடைவெளிகள் வழியே புகுந்து வந்த காலை வெய்யிலின் கிரணங்கள், வீட்டின் கிழக்குப் பக்கமாக இருந்த அந்தப் படுக்கையறையின் சுவர்களில் வழக்கமான ஒளிப் பட்டைகளைப் பாளம் பாளமாகப் படியவிட்டிருந்தன. வெளிச்சத்தின் பரிமாணத்திலிருந்தும், வெளியுலக ஓசைகளிலிருந்தும் காலை நேரம் ஏற்கெனவே விடைபெறும் தருவாயிலிருந்தது போலத்தான் தோன்றியது...

அவள் கால்களை நன்றாக நீட்டி ஒரு முறை நெட்டுயிர்த்தாள். கால்களின் அந்த இயக்கத்தினால் ரஜாய் மெத்தை கீழ்ப்புறமாக இழுபட்டு, கசங்கிக் குலைந்திருந்த அவளுடைய உடைகளைப் பார்வையில் தென்பட வைத்தது; இரவில் உடைகளை மாற்றாமல், கைக் கடிகாரத்தைக்கூடக் கழற்றாமல் படுக்கையில் விழுந்து விட்டதை அவள் திடீரென உணர்ந்துகொள்ளச் செய்தது. அவள் கைக் கடிகாரத்தைக் கவனித்தாள்; மணி பதினொன்று – அடேயப்பா!

அவள் படுக்கையில் எழுந்து உட்கார்ந்தாள். தலை கனத்தது. பார்வை நுட்பமின்றி ஒரு கணம் மங்கித் தள்ளாடிய பின் சரியாயிற்று; டியூப்லைட்டின் ஸ்விச்சைப் போட்டவுடன் முதல் சில கணங்களில் இருப்பதைப் போல, தொண்டையில் கபம் அடைத்துக்

கொண்டிருப்பது போன்ற ஒரு சங்கடமான உணர்வு, ஒரு உறுத்தல். மீண்டும் வாசல் மணி அடிக்கும் ஓசை.

அவள் தொண்டையை நன்றாகச் செருமிக் கனைத்துக் கொண்டாள். கதவைத் திறப்பதற்காக இல்லாவிட்டாலும், எச்சிலைத் துப்புவதற்காக எழுந்துதான் ஆகவேண்டும். தரையில் காலை வைத்தவுடன் மறுபடி கண்ணுக்கு முன் இருள் படர்ந்தது. நிதானித்துக் கொள்ளச் சில விநாடிகள் பிடித்தன. அப்பப்பா என்ன தலைவலி!

நேற்று பார்ட்டியில் வழக்கத்தை விட அதிகமாகக் குடித்து விட்டாள்.

பாத்ரூமுக்குச் சென்று வாஷ்பேஸினில் எச்சிலைத் துப்பினாள். குளிர்ந்த நீரை முகத்தின் மேல் விசிறி, புடவைத் தலைப்பால் துடைத்துக்கொண்டு, வாசல் பக்கம் விரைந்தாள். இப்போது டெலிபோன் மணிச்சத்தம் நின்றிருந்தது...

வாசலில் பத்ரியின் சிநேகிதர்கள் நின்றிருந்தார்கள்.

"பத்ரி இருக்கானா, மாமி?"

மிஸஸ் பசுபதி ஒரு கணம் தயங்கினாள். அவளுக்கும்தான் தெரியாது. யார் வீட்டிலிருக்கிறார்கள், இல்லை என்பதையெல்லாம் இனிமேல்தான் அவள் பார்த்தாக வேண்டும்.

"இங்கேதான் இருந்தான்; பார்க்கிறேன். உள்ளே வாங்கோ" என்றாள். அவளுக்கு இப்போது தெளிவு ஏற்படத் தொடங்கியிருந்தது.

பத்ரியின் அறையில் அவனைக் காணோம். ஆனால் அறைக்குப் பக்கத்திலிருந்த இன்னொரு பாத்ரூமுக்குள்ளிருந்து அவனுடைய பாட்டுச் சத்தம் கேட்டது. குளிக்கிறான் போலும். அவள் கதவைத் தட்டினாள்.

"யாரு?"

"உன் ஃபிரண்ட்ஸ் வந்திருக்காடா..."

"இதோ வரேன்."

மிஸஸ் பசுபதி அவனுடைய அறையில் அங்குமிங்குமாக நோட்டம் விட்டாள்; சட்டைகள், பாண்ட்டுகள், பெல்ட்டுகள், செருப்புகள், ஷூக்கள், கிரிக்கெட் சாமக்கிரியைகள், தொப்பி, கருப்புக் கண்ணாடி, கைக்குட்டைகள், இசைத்தட்டுகள், சிகரெட் பாக்கெட், கவர்ச்சிகரமான அட்டைகளுள்ள இளைஞர் ஏடுகள், சினிமா ஏடுகள், பிரித்த நிலையில் வைக்கப்பட்டிருந்த சில பாடப் புத்தகங்கள், சில காலிப்கோப்பைகள், டம்ளர்கள்...

எந்தப் பொருளுக்கும் ஒரு குறிப்பான இடமின்றி, வரையறுக்கப் பட்ட எல்லைக்கோடுகளின்றி, எல்லாம் தாறுமாறாக ஒன்றின் மேலொன்றாக அந்த அறையில் இறைந்து கிடந்தன. "டெர்ட்டி ஃபெல்லோ!" என்று அவள் நினைத்தாள். எல்லாம் அவனுடைய அப்பா கொடுக்கிற செல்லம். சுவர்களில் பத்திரிகைகளிலிருந்து

வெட்டியெடுக்கப்பட்ட சில நடிகையரின் புகைப்படங்கள்; அவனுடைய கேர்ல்ஃபிரண்ட் ஒருத்தியால் வரையப்பட்ட அவனுடைய சித்திரம்...

"டு பத்ரி, வித் லவ்" என்று அந்தச் சித்திரத்தின் கீழ் கொட்டை கொட்டையாக எழுதப்பட்டிருந்தது.

அவனுக்குத் தான் தேவையில்லை. அவன் எதற்கும் தன்னுடைய தயவை எதிர்பார்த்திருக்கவில்லை. அவனுடைய அப்பாவிடமிருந்து அவனுக்குப் பணம் தேவைப்படுகிறது. எனவே, அவருடன் அவன் கூடியவரை சுமுகமான உறவுகளைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஆனால் அவளிடம் அப்படி, அவனை வசியப் படுத்தும், ஆதிக்கத்துக்குட்படுத்தும், சாதனம் எதுவுமில்லை. பாதிநாள் அவன் வெளியில்தான் சாப்பிடுகிறான்; உறவுக்கு உதவக் கூடிய அந்த வாசல் இப்படியாக அடைபட்டிருந்தது. வேறென்ன வாசல்கள், சாதனங்கள்? அன்பும் அரவணைப்புமா? அனுதாபமும் திண்மையான வழிகாட்டலுமா? ஹூம்! இதெல்லாம் கூட அவனுக்கு வெளியிலேயே கிடைத்துவிடுவது போலத்தான் தோன்றியது. அல்லது இவை அவனுக்குத் தேவைப்படவில்லை என்பதாகவும் இருக்கலாம்.

அவள் ஒரு பெருமூச்சு விட்டாள். அந்த அறையின் ஒழுங்கீனம் வீட்டு எஜமானியான அவளுடைய அதிகாரத்துக்கெதிரான ஒரு திமிறல் போலத் தோன்றியது. அவளை நுட்பமாக அவமதிப்பது போலிருந்தது. இப்போது சில நாட்களாக, அந்த வீட்டில் அவளுடைய தேவையின்மையைப் பற்றிய பயம் அடிக்கடி அவளை உலுக்கத் தொடங்கியிருக்கிறது. எனவே, தன் தேவையை ஸ்தாபித்துக்கொள்ள விரும்புபவள் போல, அவள் அடிக்கடி ராம்ஸிங்குங்குப் பதிலாகத் தானே சமைக்கிறாள். பரிமாறுகிறாள். முன்னெப்போதையும் விட அதிகமாக வீட்டில் நடக்கும் பார்ட்டிகளில் குடிக்கிறாள். கணவனுடைய நண்பர்களுடன் அளவளாவுகிறாள். காரோட்டக் கற்றுக்கொள்வதில் ஆர்வம் காட்டுகிறாள்.

ஆம்; சென்ற இரண்டு மூன்று தினங்களாக அவள் பத்மினியிட மிருந்து காரோட்டக் கற்றுக்கொள்ளத் தொடங்கியிருந்தாள்.

பாத்ரூமுக்குள்ளிருந்து பத்ரியின் பாட்டுச் சத்தம் உரக்கக் கேட்டது. ஆங்கிலப் பாட்டு, பாப் மியூஸிக். அவளே அவனுக்கு இந்த இசைத்தட்டுகளை வாங்கிப் பரிசளிக்கிறாள். ஆனாலும் அவன் இந்தப் பாட்டுக்களைப் பாடுவது அவளுக்கு ஏனோ மகிழ்ச்சி யளிப்பதில்லை. அவனுக்கும் அவளுக்குமிடையே நெருக்கம் உண்டாகு மென்ற நம்பிக்கையில் அந்தப் பரிசுகளை அளிக்கிறாள். ஆனால் அத்தகைய விளைவு ஏற்படுவதில்லை. அவனுடைய உலகத்தினுள் அவள் அனுமதிக்கப்படுவதில்லை. அதனால்தான் அந்தப் பாட்டுகளை அவன் பாடுவது, அவளுக்கு வெறுப்பை உண்டாக்குகிறது போலும்...

அவள் அவனுடைய அறையிலிருந்து வெளிப்பட்டு, ஹாலுக்கு வந்தாள். பத்ரியின் சிநேகிதர்களுடன் பேச முற்பட்டாள். முதலில்

கணேசன்தான் கண்ணில் பட்டான்.

"என்ன கணேசா!"

கணேசன் புன்னகை செய்தான்.

"வீட்டிலே அப்பா அம்மாவெல்லாம் சௌக்கியமா?"

"உம்."

பிறகு ரவியிடம் ஜெர்மனிக்குப் போயிருந்த அவனுடைய அப்பா திரும்பி வந்தாயிற்றா என்று விசாரித்தாள். மோகனிடம், சமீபத்தில் குட்டிகள் போட்டிருந்த அவர்கள் வீட்டு அல்சேஷன் ரீடா சௌக்கியம்தானா என்று கேட்டாள்.

வேறு இரண்டு பையன்கள் வந்திருந்தார்கள். அவர்களை அவள் அதற்கு முன்பு பார்த்ததில்லை. அவர்கள் அவளைப் பார்க்கக் கூச்சப்பட்டுக்கொண்டு எங்கெங்கோ பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

"என்ன, இப்படி படையாகத் திரண்டு வந்திருக்கிறீர்கள்!" என்று அவள் இலேசான மட்டத்தில் பேச முயன்றாள். "ஏதாவது பிக்சர் ப்ரோக்ராமா?"

"ஐயையோ, அதெல்லாம் இல்லை மாமி. பரீட்சை வரதில்லையா, எல்லாருமா இங்கே தினம் வந்து படிக்கப் போறோம்," என்றான் ரவி.

"இப்படி அஞ்சாறு பேராகச் சேர்ந்தால் படிக்கத் தோணுமா, பேசத் தோணுமா?"

"நாங்க பேசிண்டே படிப்போம்."

"பேசிண்டே படிப்பேள். ஸ்மோக் பண்ணிண்டே பேசுவேள்; ரிக்கார்டு கேட்டுண்டே ஸ்மோக் பண்ணுவேள் – அப்படித்தானே?"

"கொஞ்சம் கொஞ்சம் ரிலாக்ஸேஷன் இல்லாமே முடியுமா மாமி?"

"தாராளமா – நான் அப்ஜெக்ட் பண்ணலையே – ஆனா நானெல்லாம் படிக்கிறபோது எனக்குத் தனியா உக்காந்து படிச்சாத் தான் மூளையிலே ஏறும்பா... நீங்கள்ளாம் வேறே டைப் போலிருக்கு..."

"நாங்களும் காலம்பறவும், இராத்திரியும் வீட்டிலே தனியாப் படிக்கிறவாதான், மாமி – அதுக்கு மேலே இப்படிப் பகல் நேரத்திலே கொஞ்சம் டிஸ்கஸ்ஸும் பண்ணிண்டால் நன்னாயிருக்குமேன்னு தான்..."

"ஜமாயுங்கோ, ஜமாயுங்கோ. எல்லாரும் ஃபஸ்ட் கிளாஸிலேதான் பாஸ் பண்ணப் போறேள்."

"தாங்க் யூ, மாமி."

"ஆமாம், நீங்கள்ளாம் சாப்பிட்டுட்டு வந்திருக்கேளா?"

"சாப்பிட்டுட்டுத்தான் வத்திருக்கோம்."

"காப்பி டீ ஏதாவது சாப்பிடறேளா?"

"வேண்டாம் மாமி."

"போர்ன்விடா குடியுங்களேன்."

"இல்லை மாமி; ப்ளீஸ்!"

"நான் குடிக்கப் போறேன். அதனாலேதான் கேட்டேன். வோன்ட் யூ கிவ் மீ கம்பெனி?"

வேறு வழியின்றி ரவி ஒத்துக்கொண்டான். மற்றவர்களும் ஒத்துக் கொண்டார்கள். "இதோ வரேன்" என்று மிஸஸ் பசுபதி போர்ன்விடா கலந்துகொண்டுவரச் சென்றாள்.

காஸைப் பற்றவைத்து தண்ணீரைச் சுட வைத்தாள். இந்தப் பையன்களுக்கும் அவர்களுடைய தாயார்களுக்குமிடையில் எந்த விதமான உறவு நிலவுமென்று அவள் கற்பனை செய்து பார்க்க முயன்றாள். அந்த வெவ்வேறு மாமிகளின் முகங்கள் அவள் கண்முன் தெரிந்தன. எல்லா வீடுகளிலுமே இப்படித்தானா? இந்த வயதுப் பையன்கள் தம் சொந்தத் தாயாரை வெறுக்கத்தான் செய்வார்களா? இல்லையென்றால், அவள் எங்கே, எப்படி, தவறிழைத்திருந்தாள்?

திடீரென்று அவளுக்குப் பத்மினியின் நினைவு வந்தது. பத்மினியின் குழந்தைகள் யாரும் அவளை வெறுக்க மாட்டார்களென்று அவளுக்குத் தோன்றியது. பத்மினியைப் போன்ற ஒருத்தியால் காலேஜ் மட்டம் வரையிலும்கூடக் குழந்தைகளின் படிப்பில் ஒத்தாசை செய்யமுடியும். அவர்களுடைய மட்டத்தில் பேசமுடியும். சுய சம்பாத்தியம் வேறு உள்ளதால், கணவனுக்குச் சமமான மதிப்பைக் குழந்தைகளிடமிருந்து பெற முடியும் –

அப்படியா? இப்படி நினைப்பது சரிதானா? இந்தக் காலத்தில் குழந்தைகள் பாடங்களை எங்கே படிக்கிறார்கள்? ஒழுங்கு முறைகளை எங்கே மதிக்கிறார்கள்? அம்மா படித்தவளாகவோ, படிக்காத வளாகவோ, சம்பாதிக்காதவளாகவோ – எப்படியிருந்தாலும் ஏதாவது வித்தியாசம் வரப்போகிறதா? படிப்புக்கு (அதன் உண்மையான பொருளில்) மதிப்பில்லாத ஒரு சூழ்நிலையில் –சாதாரணப் பொது அறிவுகூட இல்லாதவர்கள் பெரும் பதவிகளில் அமர்ந்திருக்கும் ஓர் அமைப்பில் – இக்குழந்தைகள் வளருகின்றன. வீட்டில் பணம் மறுக்கப்பட்டால் கொள்ளையடிக்கப் போகவும் தயங்காத மனநிலை அவர்களிடம் வளர்ந்து வருகிறது.

ஆம்; நேற்று பார்ட்டியில் டைம்ஸ் நரசிம்மன் இதைப் பற்றி அவளிடம் கூறிக்கொண்டிருந்தார். நேர்மையான சீரான பாதைகளிலும் நடவடிக்கைகளிலும் அவர்களுக்கு நம்பிக்கை குறைந்துவிட்டது – ஏன், அடியோடு அகன்றுவிட்டது என்றார் நரசிம்மன். சமூகத்தில் கண்கூடாக மதிப்பும் கௌரவமும் வெற்றியும் பெற்றுக்கொண்டிருக்கும் நியதிகள், வாழ்க்கை சித்தாந்தங்கள் ஆகியவற்றிலிருந்து மாறுபட்ட நியதிகளையும் சித்தாந்தங்களையும் நாம் நம்முடைய குழந்தைகள்மேல் மட்டும் திணிக்க முடியுமா என்ன? அதை அவர்கள் ஏற்பார்களா

என்ன? – என்று அவர் சூடாகக் கேட்டுவிட்டு 'கடக் கடக்' என்று விஸ்கியை வாயில் விட்டுக்கொண்டார். சுற்றியிருந்தவர்கள் அவர் கருத்தை உரக்க ஆமோதித்தார்கள். மாதக்கணக்காக தினசரி வகுப்புகளில் அமர்தல், லெக்சர்களைப் பொறுமையாகக் கவனித்தல், புத்தகங்களைப் படித்தல், கடினமாக உழைத்துப் பரீட்சை எழுதுதல் – எல்லா வற்றிலும் நம்பிக்கை இழந்திருக்கிறார்கள் மாணவர்கள். கல்வித் துறையின் எதிர்காலம், இளைஞர் சமுதாயத்தின் எதிர்காலம், எல்லாமே இருளடைந்து காணப்படுகின்றன. இந்த நிலைமையின் சோகத்தினால் பாதிக்கப்பட்டவர்களாய், அவர்கள் அப்போது இன்னும் சில பெக்குகள் விஸ்கியருந்தினார்கள்.

எனவே, நாளைக்கு பத்மினியின் குழந்தை அவளிடம் பிரியமுடன் இருக்குமென்பதும் நிச்சயமில்லை – மிஸஸ் பசுபதிக்கு இந்த எண்ணம் ஒரு விசித்திரமான திருப்தியையளித்தது. வெந்நீர் தயாராகிவிட்டது. பாலில் வெந்நீர் சேர்த்துக்கொண்டு போர்ன்விடாவை விட்டுக் கலக்கிக் கோப்பைகளில் ஊற்றத் தொடங்கினாள். மாணவர் சமுதாயத்துக்கு, அவளால் இயன்றது, போர்ன்விடா கலந்து கொடுக்கமுடியும்.

போர்ன்விடா கோப்பைகளை டிரேயில் வைத்துக்கொண்டு அவள் ஹாலுக்கு வந்தபோது பத்ரியும் குளித்துவிட்டு வந்திருந்தான். "உனக்கும் வேணுமா?" என்று அவள் அவனிடம் கேட்டாள். "இல்லாட்டா, சாப்பிடப் போறயா?"

"நான் அப்பாகூடவே சாப்பிட்டுட்டேன்."

"குளிக்காமலேயேவா?"

"நீயும் சாப்பிடறயான்னு மன்னி கேட்டாள், சரின்னு நானும் உக்காந்துட்டேன். எனக்கும் பசியாய்த்தானிருந்தது."

ஒரு வேளை, அம்மா பரிமாறிச் சாப்பிடுவதிலிருந்து தப்புவதற்காகவே, பத்மினி கூப்பிட்டவுடன் அவன் சென்றிருக்கலாம். அதுவும் சாத்தியந்தான்.

"மன்னி எங்கே, அப்பாவை டிரைவ் பண்ணிண்டு போயிருக்காளா?"

"ஆமாம்."

"விசுவம் . . .?"

"அவனும் அவர்களோடு போயிருக்கான். அவா ரெண்டு பேரையும் ஆஃபீஸிலே டிராப் பண்ணிட்டு வந்துடறேன்னு சொன்னா மன்னி."

"செல்லப்பா எங்கே?"

"தோட்டத்திலே எங்கேயாவது இருப்பான்."

பத்ரி சொன்னது போலவே, செல்லப்பா பின்தோட்டத்தில், இளம் வெய்யிலில், ஒரு கயிற்றுக் கட்டிலைப் போட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்தான். அவனும் பரீட்சைக்குத்தான் படிக்கிறான்.

மிஸஸ் பசுபதி பின்வராந்தாவில் நின்றவாறு அவனைச் சில கணங்கள் பார்த்துக்கொண்டிருந்தாள். அவனருகில் போகலாமா

வென்று நினைத்தாள். பிறகு அந்த எண்ணத்தை மாற்றிக்கொண்டு தன் அறைக்குத் திரும்பினாள். பாவம், இந்தத் தடவையாவது அவனுக்குப் பாஸாக வேண்டும்...

அந்த வீட்டில் உருப்படியாகப் படித்தவன் விசுவம் ஒருவன்தான். அவனேதான் படித்துக்கொண்டான், யார் உதவியுமில்லாமல். ஆனால் துரதிர்ஷ்டவசமாக அவன் யாருடனும் ஒத்துப்போகத் தெரியாத ஒரு டைப். ஒரு லௌகிக சூன்யம். மூடி ஃபெல்லோ. உக்கிரமான – சில சமயங்களில் சிரிப்பை வரவழைக்கும் – கொள்கை வீரன். படிப்பை முடித்ததுமே விவசாய ஆராய்ச்சிக் கழகத்தில் எவ்வளவு நல்ல வேலை அவனுக்குக் கிடைத்தது! ஆனால் அதைத் தொலைத்துக் கொண்டான். அங்கு அவனுக்குப் போதிய அளவு சுதந்திரம் அளிக்கப்படவில்லையென்று அந்த வேலையை ராஜிநாமா செய்தான்.

பிறகுதான் அமெரிக்காவுக்குச் சென்றான். இந்தத் தீஸிஸையாவது ஒழுங்காக எழுதி முடிக்கப் போகிறானோ, இல்லையோ? பத்மினி தான் அவனைச் சரியாக்க வேண்டும். ஆமாம்; இந்தப் பெண் கெட்டிக்காரி.

அவளுக்குத் தன் மாட்டுப் பெண்ணை நினைத்து ஒரு பக்கம் பெருமையாக இருந்தது; ஒரு பக்கம் பொறாமையாக இருந்தது. திருப்தியும் நிறைவும் ஏற்பட்டது. திடீர் திடீரென்று எரிச்சலும் ஏற்பட்டது. மிஸஸ் பசுபதியால் தன்னையே புரிந்துகொள்ள முடியவில்லை.

உதாரணமாக நேற்று பத்மினி மாமியாருக்குத் தலைவாரிக் கொண்டிருந்தபோது... என்னதான் இந்துக் குடும்பங்களில் பிள்ளைக் குழந்தைகள்தான் உசத்தியென்று மூடத்தனமாகக் கருதப்பட்டு வந்தாலும், ஒரு தாய்க்குப் பெண் குழந்தைகளிடம் சில சமயங்களில் கிடைக்கும் தோழமை உணர்வும் ஆசுவாசமும் பிள்ளைக் குழந்தை களிடம் ஏற்படவே முடியாது. பத்மினி வந்ததிலிருந்து, அவளுக்குப் பெண்ணில்லாத குறை தீர்ந்தது போலிருந்தது. அவளுடைய பல விஷயங்களைப் பறிமாறிக்கொள்ள முடிகிறது. அந்தரங்கங்களைப் பகிர்ந்துகொள்ள முடிகிறது. பெண்கள் மட்டுமே பகிர்ந்து கொள்ளக் கூடிய அந்தரங்கங்கள்.

ஆமாம்; நேற்று பத்மினி தலைவாரிக்கொண்டிருந்தாள்; ஏதோ அந்நியோன்னியமாக இருவரும் பேசிக்கொண்டிருந்தார்கள்... திடீ ரென்று பத்மினி மாமியார் தலையிலிருந்து நரைமயிரொன்றை உருவி எடுத்துக் காண்பித்தாள். "நரைமயிர் வரத் தொடங்கிடுத்துப் போலிருக்கே உங்களுக்கு!" என்றாள்.

"ஆமாண்டியம்மா; வயசாயிடுத்தோ இல்லையோ!" என்றாள் மிஸஸ் பசுபதி.

இதைத் தொடர்ந்து அவர்களிடையே சங்கடமான மௌனம் நிலவியது. அந்த மௌனம் அதற்கு முந்தின அந்நியோன்னியத்தை யெல்லாம் பொய்ப்பிப்பது போலிருந்தது. அவர்களுடைய உறவில்

பிடிபடாத, புரிபடாத ஒரு பிசிறு, ஒரு அபஸ்வரம் – என்ன காரணம்? போட்டி உணர்ச்சியா?

'சே, சே!' மிஸஸ் பசுபதி மீண்டும் அமைதியாகச் சிந்தித்தாள். 'நான் அவ்வளவு பக்குவமில்லாதவளாகப் போய்விட்டேனா என்ன?'

என்னவோ! ஆனால் பத்மினியால் கண்டுபிடிக்கப்பட்ட அந்த நரை மயிர் அவளுடைய மனத்தில் நேற்றெல்லாம் உறுத்திக் கொண்டிருந்தது. பகலெல்லாம், மாலையெல்லாம், அவள் அடிக்கொரு தடவை நிலைக் கண்ணாடியில் தன் முகத்தைப் பரிசோதித்துக் கொண்டாள், தான் கிழவியாகிவிட்டோமாவென்று தெரிந்துகொள்வ தற்காக. அப்படிப் பார்க்கப் பார்க்க வயது கூடுவது போலிருந்தது. பயமும் பாதுகாப்பற்ற உணர்வும் ஏற்பட்டது.

'இல்லை, எனக்கொன்றும் அப்படி வயதாகிவிடவில்லை' என்று நிரூபித்துக்கொள்ள விரும்பியவள்போல, அவள் இரவுப் பார்ட்டிக் காக மிகவும் பிரயாசையெடுத்துக்கொண்டு மிகவும் பிரத்யேகமாகத் தன்னை அலங்கரித்துக்கொண்டாள். பார்ட்டியில் அப்போதுதான் பருவமடைந்த மங்கையைப் போல, அவள் ஆண் பார்வைகளை ஆவேசத்துடன் யாசித்தாள். முன்னெப்போதையும் விடக் கலகலப்பாக எல்லாருடனும் பேசிப் பழகினாள்; சிரித்தாள்; அதிக அளவில் மதுவருந்தினாள்.

ஆம்; ஒரு சவால் போலத்தான் இருந்தது, அதெல்லாம்.

யாருக்கெதிராகச் சவால்? பத்மினிக்கெதிராகவா? அவளைவிடப் பிரபலமானவளாக, யாசிக்கப்படுபவளாக, தன்னைப் பார்ட்டியில் நிரூபித்துக்கொள்ளவா? அப்படியென்றால், அதில் அவள் அமோக வெற்றியடைந்தாள். நேற்றையப் பார்ட்டியின் இதயத் துடிப்பாகவே அவள் விளங்கினாள்.

தன் மாட்டுப் பெண்ணுடன் போட்டியிடும் நோக்கத்துடன் தான் நேற்று தன்னை முன்நிறுத்திக்கொள்ளவில்லையென்று அவள் தனக்கு ஆறுதலளித்துக்கொள்ள முயன்றாள். வீட்டு எஜமானி என்ற முறையில், விருந்தினர்களை நன்றாக உபசரிக்க வேண்டிய கடமை அவளுக்கு இல்லையா என்ன?

ஆனால் இந்தக் கூற்றை அவளுடைய அந்தரங்கம் ஏனோ ஏற்றுக்கொள்ளத் தயங்குகிறது . . .

ஒரு வாரத்துக்கு முன்பு பத்ரியின் சிநேகிதர்கள் சிலர் வந்திருந்த போது பத்மினி அவர்களுக்குச் சிற்றுண்டியும் தேநீரும் தயாரித்துக் கொடுத்தாள். பிறகு அவர்களுடன் சினிமாவைப் பற்றியும், கிரிக்கெட்டைப் பற்றியும், உடை, சிகை பாஷன்களைப் பற்றியும் சர்ச்சை செய்தாள். அதற்குப் போட்டியாகத்தான் இன்று நான் இவர்களுக்கெல்லாம் போர்ன்விடா கலந்து கொடுத்தேனா? இவர்களுடன் பேச்சுக்கொடுக்க முயன்றேனா?

பத்மினிக்குக் காரோட்டத் தெரிகிறது. இது அவளுக்கு ஒரு

அழகிய நவநாகரிக பிம்பத்தை அளிக்கிறது. எனவேதான் நானும் காரோட்டக் கற்றுக் கொள்கிறேனா?

'ஈசுவரா, ஈசுவரா!' மிஸஸ் பசுபதிக்குப் பைத்தியம் பிடிக்கும் போலிருந்தது. உடுத்திக் கொண்டிருந்த புதுப்புடவை திடீரென்று பெரும் சுமையாகத் தோன்றியது. அதைக் கழற்றி எறிவதன் மூலம் இந்த இறுக்கமான நினைவுகளிலிருந்து விடுதலை பெறலாமென்று நினைத்தவள்போல, அவள் அந்தப் புடவையை அவிழ்த்துவிட்டு ஒரு பழம்புடவையை எடுத்துச் சுற்றிக்கொண்டாள். 'அப்பாடா!' இப்போதுதான் அவள் சற்றே இலேசாக உணர்ந்தாள். தூய்மையானவளாக உணர்ந்தாள். தன் அழகையும் வயதையும் பற்றிய பிரக்ஞையிலிருந்து விடுதலை பெற்றாள்.

அவளும் பத்மினியும் பகிர்ந்துகொண்ட பல அன்னியோன்னியமான தருணங்களை அவள் நினைவு கூர்ந்தாள். இத்தகைய தருணங்களில் ஒருமுறை, "உங்க மூணு பிள்ளைகளிலே உங்களுக்கு யாரை ரொம்பப் பிடிக்கும்?" என்று பத்மினி கேட்டாள். தான் அவளுக்குச் சொன்ன பதில் மிஸஸ் பசுபதிக்கு நன்றாக நினைவிருக்கிறது.

"எனக்கு மூணு பேரையுமே பிடிக்கும். ஆனா, இரண்டு கை தட்டினாத்தானே சத்தம் கேட்கும்? அவாளுக்கும் என்னைப் பிடிக்கவேண்டாமா? நான் ரொம்ப நெருக்கமா உணருவது என்னவோ செல்லப்பாகூடத்தான்."

அதற்குக் காரணத்தையும் அவள் சொன்னாள்: விசுவம் பிறந்ததிலிருந்து தாத்தா வீட்டில் வளர்ந்தான். அவளுக்கு அவன் மீது எத்தகைய பிடிப்பையும் ஏற்படுத்திக்கொள்ள முடியவில்லை. அவன் தாத்தா, பாட்டியின் செல்லப்பேரனாக, குலக் கொழுந்தாக ஆகிவிட்டான். இரண்டாவது பிள்ளையைத்தான் அவள் முழுதும் தன்னுடையவனென்று நினைக்க முடிந்தது. ஆசைதீர அன்பைப் பொழிந்து அவனைத் திக்குமுக்காடச் செய்ய முடிந்தது. அவனுடைய நடையுடை பாவனைகளின் வளர்ச்சி, அவனுடைய அழுகையும் சிரிப்பும், உறக்கமும் விழிப்பும், பள்ளிக்கூடத்தில் சேர்தலும், பாடங்களின் தேர்வும் – ஒவ்வொன்றிலும் முழுமையாகப் பங்குபெற முடிந்தது.

பத்ரி பிறந்தபோது, குழந்தை வளர்ப்பு என்ற செயல் துரதிர்ஷ்டவசமாக அவளுக்குப் புதுமையில்லாத சலிப்பூட்டும் விஷயமாகப் போயிருந்தது. மேலும் அந்தக் கட்டத்தில்தான் அவள் வீட்டு எல்லைகளுக்கு வெளியே மலரத் தொடங்கியிருந்தாள். நாடகங்களில் நடித்தல், கணவனின் நண்பர்களை – முக்கியமாக மேலதிகாரிகளை – உபசரித்தல், அவர்களுடைய குடும்பங்களுடன் பரிச்சயம் ஏற்படுத்திக் கொள்ளுதல், அவளுடைய அந்தஸ்துக்கும் ஹோதாவுக்கும் ஏற்ற முறையில் பல அமைப்புகளிலும் குழுக்களிலும் அங்கத்தினராதல்... பத்ரியை அவள் வளர்க்கவில்லை; பெரும்பாலும் அவனாகவேதான் வளர்ந்தான். எனவே, சிறு வயதிலேயே தாயின்றி இருப்பதற்கு

அவன் கற்றுக்கொண்டுவிட்டான். அவன் உலகத்தில் தாயின் பிம்பத்துக்கு இடமில்லாமலே போய்விட்டது. பின்பு அவள் அவனை நெருங்கியபோது – தன்னை அவனுக்குத் தேவைப் படுபவளாக உணர்த்த முயன்றபோது அவளால் வெற்றிபெற முடியவில்லை. அதற்கான காலம் கடந்துவிட்டிருந்தது. அந்தக் கதவு வெகுநாள் திறக்கப்படாததால்போலும் – நிரந்தரமாக, அழுத்தமாக அடைபட்டுக் கிடக்கிறது.

அன்று பத்மினியிடம் அவனுடைய அலட்சியப் போக்கைப் பற்றிச் சொல்லும்போது அவளுக்கு அழுகையே வந்துவிட்டது. இப்போது அதைப்பற்றி நினைக்கும்போது மறுபடி அழுகை வருவது போலிருந்தது ...

அப்புறம் இரண்டொரு நாள், தன் கணவனின் பழைய மேலதிகாரி களைப் பற்றி அவள் பத்மினிக்குச் சொன்னாள். வெள்ளைக்காரர் காலத்திலிருந்து, எவ்வளவு வகை வகையான மேலதிகாரிகளை அவள் பார்த்திருக்கிறாள்! முறுக்கிலும் திரட்டுப் பாலிலும் இஷ்டமுள்ள அந்த வெள்ளைக்காரத் துரை; சாப்பிடும் போதுகூட சுருட்டை வாயிலிருந்து எடுக்காத ஒரு பஞ்சாபித் துரை; எப்போது வந்தாலும் அளவுமீறிக் குடித்து அவர்கள் வீட்டிலேயே உறங்கிவிடும் ஒரு பாலக்காட்டுக்காரர்; சதா தன்னுடைய உருதுக் கவிதைகளைப் படித்துக்காட்டத் தொடங்கும் ஒரு காஷ்மீரத்து மனிதர்; பஜனையில் விருப்பமுள்ள ஒரு யு. பி. பிராம்மணர் ... இப்படி எத்தனையெத்தனை மனிதர்கள்! அவர்களைப் பற்றி பத்மினிக்கு எவ்வளவு சொன்னாலும் போதாது. இன்னொரு நாள் விவரமாக அவளுக்கு எல்லாவற்றையும் சொல்ல வேண்டும் ...

ஆமாம்; அவர்களுக்குள் எந்தப் போட்டியுமில்லை. அவள் என்னுடைய ஆசை மாட்டுப்பெண் ...

வாசலில் கார்க் கதவு சாத்தப்படும் சத்தம் கேட்டது. மிஸஸ் பசுபதி சென்று பார்த்தாள்; பத்மினிதான் வந்திருந்தாள்.

திடீரென்று தன் தூய்மையான பாவனை சிதறுவதை அவள் உணர்ந்தாள். தன் மனத்தின் அடித்தளத்தில் அழுத்தி வைக்க முயன்ற ஏதேதோ கௌரவமற்ற உணர்வுகள் பீறிட்டு வெளிக் கிளம்புவதை உணர்ந்தாள். இதுதான் உண்மை. 'கடவுளே ...! இதுதான் நான். இதோ அந்தப் பெண் வருகிறது ...'

மிஸஸ் பசுபதி செயற்கையாகப் புன்னகை செய்யத் தயாரானாள்.

# 18

மேலப்பாவூர் கணேசன் யக்ஞேசுவரன் ஐயர் (சுருக்கமாக, எம். ஜி. ஒய். ஐயர்) ஆர்ய ஸமாஜ் ரோட் பஸ் ஸ்டாண்டை அடைந்தபோது உத்யோக்பவனுக்குச் செல்லும் பத்துமணி எக்ஸ்பிரஸ் பஸ் அப்போதுதான் ஒரு புகைமண்டலத்தை எழுப்பியவாறு கிளம்பிச் சென்றுகொண்டிருந்தது. இன்னும் ஒரு நிமிடம் முன்பு வந்திருந்தால் கூட அதைப் பிடித்திருக்கலாம். அவர் பார்த்துக்கொண்டிருந்தபோதே, பஸ் ஸ்டாண்டுக்குத் தள்ளி சற்று தள்ளி பஸ் எதற்காகவோ நின்றது; இன்னும் சிலர் ஓடிப்போய் அதில் தொத்திக்கொண்டார்கள். அவரும் ஓடியிருக்கலாம்தான். ஆனால், துவாதசி பாரணையென்று வீட்டில் சம்பிரமமாகச் சாப்பிட்டு வந்திருந்த அவர் அப்போது ஓடுகிற நிலையில் இல்லை. அவர் அணிந்திருந்த பழைய செருப்பு அந்த ஓட்டத்தில் அறுந்து விடுமோவென்று வேறு பயமாயிருந்தது.

அப்படி ஓடுவது கௌரவக் குறைச்சலாகவும் தோன்றியது.

மேலப்பாவூர் அக்கிரகாரத்தின் மேன்மையுள்ள ஒரு பிரதிநிதியான அவரை அந்த ஓட்டம் திடீரென்று மத்திய சர்க்காரின் கீழுள்ள ஒரு சாதாரண ஊழியனாக உணரச் செய்யும். வீட்டின் இதமான, பாதுகாப்பான சூழ்நிலையிலிருந்து அப்போதுதான் விடுபட்டு வந்திருந்த அவருக்குத் தன் பகல் நேர வாழ்க்கையின் உண்மைகளுக்குத் தன்னைத் தயார்படுத்திக் கொள்வதற்கு இன்னும் சிறிது அவகாசம் தேவைப்பட்டது.

தொலைகிறது, அடுத்த பஸ்ஸில் போய்க்கொண்டால் போகிறது. குறித்த நேரத்தில ஆபீசுக்குப் போய்த்தான் என்ன வாழ்ந்தது?

அவர் பஸ் ஸ்டாண்டின் கொட்டகைக்குள் போய் நின்றார். கையிலிருந்த தோல் பையையும் பைல்களையும் அங்கிருந்த கைப்பிடிச் சுவர்மேல் வைத்தார். அந்தத் தோல் பையில் அவருடைய டிபன்பாக்ஸ்

(இன்று எலுமிச்சம்பழச் சாதம்), நியூஸ் பேப்பர், வெற்றிலை பாக்கு புகையிலை, பதிலெழுத வேண்டிய சில கடிதங்கள், சில ஜாதகங்கள், பேனா, பென்ஸில், கார்டு, கவர் ஆகியவை இருந்தன. பைல்களை வீட்டில் பார்க்கலாமென்று நேற்று ஆபீசிலிருந்து கொண்டு வந்தார். ஆனால் நேரமே கிடைக்க வில்லை. நேற்று இரவெல்லாம் சாஸ்திரிகளுடன் ஏதேதோ பேச்சில் கழிந்துவிட்டது. காலையில் எழுந்தாலோ, க்ஷவரம், குளியல், பூஜை என்று இதற்கெல்லாம்தான் நேரம் சரியாயிருக்கிறது.

மேலப்பாவூரைச் சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் என்னும் புகழ்பெற்ற பிரவசனகர்த்தா சென்ற இரு வாரங்களாக ஐயரின் வீட்டில் வந்து தங்கியிருந்தார். இன்னும் கிட்டத்தட்ட ஒரு மாதம்வரை இருப்பார். தில்லியில் தென்னிந்தியர்கள் அதிகமாக இருந்த மூன்று நான்கு பகுதிகளில், வெவ்வேறு சமாஜங்கள் சார்பில், சாஸ்திரிகளின் கதாகாலட்சேப நிகழ்ச்சிகள் தொடர்ச்சியாக ஏற்பாடு செய்யப் பட்டிருந்தன. எத்தனையோ பெரும் பிரமுகர்கள் –அந்தஸ்திலும் செல்வாக்கிலும் யக்ஞேஸ்வரனைவிடப் பலமடங்கு உயர்ந்தவர்கள் – சாஸ்திரிகளைத் தம் வீட்டில் வந்து இருக்குமாறு கூறினார்கள். ஆனால் அவர் தம்முடைய நெடுநாள் குடும்ப சிநேகிதரான யக்ஞேசுவரய்யர் வீட்டைத் தவிர, வேறெங்கும் தங்கமாட்டேனென்று பிடிவாதமாகக் கூறிவிட்டார். ஐயருக்கு இதில் அலாதித் திருப்தி. கர்வமும்கூட. இப்போதாவது இந்த ஊர்க்காரர்கள் அவர் எப்படிப்பட்டவரென்று தெரிந்து கொள்ளட்டும்!

"நமஸ்தேஜி!"

ஐயர் திரும்பிப் பார்த்தார். அவருடைய ஆபீசில் ஸ்டெனோ கிராபராக வேலை பார்த்த மல்ஹோத்ரா நின்று கொண்டிருந்தார். அவரும் கரோல்பாக்கில் இருப்பவர்தான்.

"நமஸ்தே!" என்றார் ஐயர். "லேட்டா இன்றைக்கு?"

"ஆமாம்" என்று மல்ஹோத்ரா கையிலிருந்த அட்டைப் பெட்டி களைக் காண்பித்தார். "என் பாஸ் வீட்டில் இன்று மாலை ஏதோ பார்ட்டி ... அதற்கு அஜ்மல்கான் ரோடிலிருந்து நல்ல ஸ்வீட்டாக வாங்கி வரச்சொன்னார். இன்றைக்கென்று அவன் கடையையே பத்து மணிக்குத்தான் திறந்தான்; ஒரே கூட்டம் வேறே."

"அந்த ஸர்தார்ஜி கடைதானே?"

"ஆமாம்."

மல்ஹோத்ராவுக்கும் ஐயரின் வயதுதான் இருக்கும். ஆனால் ஐயரைப் போலன்றி, அவர் உடையணிந்திருந்த மாதிரியில் சிரத்தையும், கவனமும் நவீன பாணிகளைப் பற்றிய பிரக்ஞையும் தெரிந்தன. அவருடைய டிப்டாப்பான தோற்றம் ஐயருக்கு ஒரு தாழ்வு மனப் பான்மையை அளித்தது. தம்முடைய இஸ்திரி செய்யப்படாத கசங்கிய தொளதொளவென்ற கால்சராய், அதே லட்சணத்தில்

ஒரு கோட், இந்த இரண்டுக்குமிடையில் ஓரளவு ஒளிக்கப்பட்டிருந்த சட்டையின் அழுக்கான பகுதிகள், காலிலிருந்த பழைய செருப்பு ஆகியவை அவரைச் சங்கடத்துடன் உணரச் செய்தது.

ஷூவைப் போட்டுக்கொண்டு வந்திருக்கலாமோ என்னவோ. ஆனால் ஷூவும் மோசமாகத்தான் இருந்தது. அதற்கு ஸாக்ஸுகளை வேறு தேடவேண்டும். அவை பெரும்பாலும் குதிகால் பகுதியில் கிழிந்திருந்தன. அல்லது இறுக்கத்தை இழந்து தொளதொளவென்று ஆகியிருந்தன. வயதான பிறகு உடலில் சில உறுப்புகள் ஆகிவிடுவதைப் போல.

ஷூ வாங்கி ஐந்து ஆறு வருடங்களாகின்றன. செருப்பு வாங்கியோ மூன்று வருடங்கள்தான் ஆகின்றன. எனவே, செருப்பு ஷூவைவிட இளமையானது. அதே சமயத்தில் செருப்புகள் ஷூக்களைவிடச் சீக்கிரம் குலைந்துவிடுகின்றன என்பதும் உண்மை. மேலும் ஒரு தென்னிந்தியர் என்ற முறையில் அவர் ஷூவை விட செருப்பைத்தான் அதிகம் உபயோகிக்க வேண்டியிருக்கிறது. அவருடைய வெளியுலக பிம்பம் ஷூவைச் சார்ந்து அல்ல, செருப்பைச் சார்ந்துதான் அமைந்திருக்கிறது. ஷூவை அணிந்தால் அவருக்குத் தன்னைப் பற்றி ஒரு நிச்சயமில்லாமல் போகிறது; தன்னம்பிக்கையுடனும் பாதுகாப்புடனும் உணர முடியாமல் போகிறது. செருப்பை அணிந்திருக்கும்போது அவர் இந்த டில்லி, அவருடைய ஆபீஸ், மல்ஹோத்ராவைப் போன்றவர்கள் ஆகிய எல்லாவற்றிடமிருந்தும் அப்பாற்பட்டவராகப் பாசாங்கு செய்து கொண்டு, இவற்றை, இவர்களை, துச்சமாகப் பார்க்க முடிகிறது. ஆனால் ஷூவை – அதுவும் அவருடைய பழைய ஷூவை – அணிந்தால் அவரும் இவற்றில் ஒரு பகுதியாகி விடுகிறார்; ஒரு முக்கியமில்லாத பகுதி. மத்திய சர்க்கார் யந்திரத்தின் ஒரு சிறிய ஆணி, ஒரு சிறிய பல் சக்கரம்.

செருப்புத்தான் அவரை மேலப்பாவூர் கணேசன் யக்ஞேசுவரன் ஐயராக, முக்கியத்துவம் உள்ளவராக உணரச் செய்கிறது. நவம்பர் கடைசி வரையில் அவர் இந்தச் செருப்பைப் போட்டுக்கொண்டே தான் ஒப்பேற்றியிருந்தார். டிஸம்பரில் அது முடியவில்லை. யாரால் தான் முடியும்? குளிர் தாங்காமல் அவர் ஷூவைப் போட்டுக் கொண்டார். பலமுறை ரிப்பேர் செய்யப்பட்டுவிட்ட அதன் அடிப்பாகம், பல்வேறு சக்கிலியர்களின் கைத்திறன் காரணமாய் இன்னமும் வாளிப்பாக இருந்தபோதிலும், கூன் விழுந்த முதுகைப் போலச் சற்றே வளைந்திருந்தது. ஷூவின் மேல்பாகமோ பலமுறை பிரசவித்த ஒரு பெண்மணியின் இடையைப் போல கொளகொள வென்று தன் ஆரம்பகால வளைவுகளின் நேர்த்தியை முழுவதும் இழந்துவிட்டிருந்தது.

டிஸம்பர், ஜனவரி இரண்டு மாதங்களும் அவர் சிவனேயென்று அந்தப் பழைய ஷூவின் உபாதையைப் பொறுத்துக்கொண்டார்.

கிழிந்த தொளதொளப்பான ஸாக்ஸுகளையும் அவற்றின் துர் நாற்றத்தையும் பொறுத்துக்கொண்டார். அந்த இரண்டு மாதங்களும் அவர் கடையனிலும் கடையனாக உணர்ந்தார். புழுவைப் போல உணர்ந்தார். பழைய ஷூவுடன் பழைய கம்பளி உடைகளும் சேர்ந்து இந்த உணர்வுக்குக் காரணமாயிருந்திருக்கலாம். ஒவ்வொரு குளிர்காலத் தொடக்கத்திலும், 'இரண்டு மாதங்களுக்காகப் புதிது தைப்பானேன்? புதிய ஷூ வாங்குவானேன்?' என்று நினைத்து அவர் பழைய கம்பளி உடைகளையே அணிகிறார். பழைய ஷூவையே அணிகிறார். சுய வெறுப்புக்கும், எரிச்சலுக்கும் ஆளாகிறார். வருடா வருடம் அந்தக் கம்பளி உடைகளும் அந்த ஷூவும் பழசாகிக் கொண்டே போகின்றன. அவருடைய எரிச்சலும் அதிகமாகிக் கொண்டே வருகிறது. "என்னல்லாம் வேஷம்போட வேண்டியிருக்கு இந்தச் சனியன் பிடிச்ச ஊரிலே!" என்று அவர் அடிக்கடி அங்கலாய்த்துக் கொள்வார். இந்த அங்கலாய்ப்பை எதிரொலிக்கும் சாராரை அவருக்குப் பிடிக்கும். இந்தச் சாரார், இடுப்பில் ஒரு வேஷ்டியுடன் பிறந்த ஊரில் வளைய வருவதிலுள்ள சுயேச்சைத் தன்மையைப் பற்றியும், அவர்கள் ஊர் அரிசி, காய்கறிகள் ஆகியவற்றின் ருசியைப் பற்றியும் எக்கணமும் எண்ணி எண்ணி ஏங்குகிறவர்கள்.

சாஸ்திரிகள் வந்ததிலிருந்து அவருடைய இந்த ஏக்கங்கள் அதிகமாகிவிட்டன. அதனால்தான் போலும், பிப்ரவரி பதினைந்தாம் தேதிவாக்கிலேயே – இன்னமும் குளிர் முழுதும் விலகாமலிருந்த சமயத்திலேயே – அவர் ஷூக்களைக் களைந்து செருப்புகளை அணிய ஆரம்பித்துவிட்டார். சாஸ்திரிகள் வந்த புதிதில் ஒரு நாலைந்து நாட்களுக்கு ஐயர் ஆபீசுக்கு லீவு போட்டுவிட்டு, அக்கடாவென்று வீட்டிலேயே இருந்தார். அந்த நாலைந்து நாட்களும் அவர் டில்லியில் கரோல்பாகில் இருப்பதாக அல்ல, மேலப்பாவூர் அக்கிரகாரத்தில் இருப்பது போலத்தான் உணர்ந்தார். காலையில் சாஸ்திரிகளும் அவருமாகக் குளித்துவிட்டு ஜபதபங்களை நிதானமாக முடித்துக் கொள்வார்கள். பிறகு சாப்பாடு. பகலெல்லாம் பேச்சு. சாஸ்திரிகள் ஐயரை இந்திய சர்க்காரின் பொறுப்பும் செல்வாக்கும் மிக்க ஒரு பிரதிநிதியாகப் பாவித்து, "அதென்ன அப்படிப் பண்ணியிருக்கான்? இதென்ன இப்படிப் பண்ணியிருக்கான்?" என்று சர்க்காரின் புதிய கொள்கைகளைப் பற்றிக் கேள்விகள் தொடுப்பார். ஐயர், சாஸ்திரிகள் தமக்கு அளிக்கும் ஹோதாவைச் சுமுகமாக ஏற்று அதில் திளைத்தவராய், அந்தக் கொள்கைகளைத் தோரணையாக விளக்கிவைப்பார்.

57259

வேறு சமயங்களில், சாஸ்திரிகள் தம்முடைய கதாகாலட்சேப வாழ்க்கையின் அனுபவங்களைப் பற்றி – வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு ரகமான மனிதர்களிடையே நிகழ்ந்த சுவையான நிகழ்ச்சி களைப் பற்றி விவரிப்பார்; ஐயரும் மற்றவர்களும் சிரத்தையாக அவற்றைக் கேட்பார்கள். மாலையில் கதாகாலட்சேபம் நடைபெறும் இடத்துக்கு சாஸ்திரிகளும் ஐயரும் அவர்களுடைய மனைவியரும்

புறப்பட்டுச் செல்வார்கள். அங்கே நிகழ்ச்சி தொடங்கு முன் பிரமுகர், பிரமுகரல்லாதார் முதலிய பலர் சாஸ்திரிகளை வந்து வணங்குவார்கள். அவருடன் பரிச்சயம் ஏற்படுத்திக்கொள்ளும் ஆவலை முகத்தில் காட்டியவாறு நிற்பார்கள். சிலரை ஐயர் சாஸ்திரிகளுக்கு அறிமுகப் படுத்தி வைப்பார். சிலரை சாஸ்திரிகள் ஐயருக்கு அறிமுகப்படுத்தி வைப்பார். தில்லியின் பல முக்கியமான புள்ளிகளுடனெல்லாம் இந்த நாட்களில் ஐயருக்கு அறிமுகம் ஏற்பட்டது. இந்த அறிமுகங் களால் எத்தனையோ அனுகூலங்கள் ஏற்படலாம்.

ஆம். அப்படி நம்புவதற்கு ஆதாரமில்லாமல் போகவில்லை. அவருடைய ஜாதகத்திலேயே அடங்கியிருந்தது அந்த ஆதாரம். அதையும் சாஸ்திரிகள்தான் பார்த்துச் சொல்லியிருந்தார். சாஸ்திரிகள் ஜோதிட சாஸ்திரத்திலும் நிபுணர். இன்னும் இரண்டு வருடங் களுக்குள் ஐயருக்கு உத்தியோக வாழ்வில் ஒரு பெரிய முன்னேற்றம் ஏற்படப் போகிறதென்று அவர் அடித்துச் சொல்லியிருந்தார்.

எனவே, ஐந்து நாள் விடுமுறையின் முடிவில் ஐயர் ஒரு பெரும் பிரபுவைப்போலத்தான் உணர்ந்தார். மீண்டும் ஆபீசுக்குச் சென்று தன் நாற்காலியில் உட்காருவதற்கே அவருக்கு வெறுப்பாக இருந்தது. அவர் காலையில் சாப்பிட்டுவிட்டு, உடைகளை அணியத் தொடங்கிய போது, சாஸ்திரிகள் அவரையே விநோதமாகப் பார்த்தார். (இன்று காலையிலும் அவர் அப்படித்தான் பார்த்தார்.) ஐயருக்கு அந்தப் பார்வை கூச்சமாகவும், சங்கடமாகவும் இருந்தது. தன் உண்மையான ஹோதா – அல்லது ஹோதாவின்மை –சாஸ்திரிகளுக்குத் தெரிந்து விட்டிருக்குமோ? சாஸ்திரிகள் தன்னிடம் பிரமோஷன் கிடைக்கப் போவதாகச் சொன்னவுடன், "சாஸ்திரிகளே! எனக்கொண்ணும் அந்தவிதமான ஆசையே கிடையாது; ஏதோ வேலைன்னு ஒண்ணு இருக்கு, சம்பளம்னு ஒண்ணு வரது, வயத்தைக் கழுவிக்கிறத்துக்கு. அதற்கு மேலே நான் இதுக்கு ஒரு மதிப்புத் தரது இல்லை" என்று சொன்னோமே, அந்த விரக்தியும், விவேகமும் நெஞ்சத்திலிருந்து வந்ததில்லை என்று தெரிந்திருக்குமோ?

"என்னல்லாம் வேஷம் போட வேண்டியிருக்கு பாருங்கோ" என்றார் ஐயர், கோட்டை அணிந்தவாறு, சாஸ்திரிகள் அனுதாபப் புன்னகை புரிந்தார். ஐயர் தன்னுடைய விரக்தியையும் விவேகத்தை யும் தனக்குத்தானே நிரூபித்துக்கொள்ள விரும்பியவர்போல, ஷூவை அணியாமல் செருப்பை அணிந்தார்.

அதன் பிறகு தினமும் செருப்புத்தான் அணிகிறார்.

அவர் மறுபடி மல்ஹோத்ராவைப் பார்த்தார். எரிச்சலும் கூடவே ஒரு அனுதாபமும் அவருக்கு ஏற்பட்டது – ஞானிகளுக்கு அஞ்ஞானி களைப் பார்த்து ஏற்படுவதைப் போல. ஆனால் எரிச்சல் உண்மையா, அனுதாபம் உண்மையா என்றுதான் அவருக்குக் குழப்பமாயிருந்தது. மல்ஹோத்ரா ஸ்டெனோகிராபராயிருந்தது வேறு, இந்தக் குழப்பத்தை அதிகமாக்கியது.

ஸ்டெனோகிராபர்களை அவரால் என்றைக்குமே சகித்துக்கொள்ள முடிவதில்லை. ஸெக்ரெடேரியட்டிலுள்ள வர்க்க பேதங்களை அறிந்தவர்களே இந்த வெறுப்பின் அடிப்படையைப் புரிந்துகொள்ள முடியும். சுருங்கச் சொன்னால் ஐயர், கிளார்க் –அஸிஸ்டென்ட் – செக்ஷன் ஆபீசர் – அன்டர்ஸெக்ரடரி – டிபுடி ஸெக்ரடரி என்கிற ஏணிப் படிகளை உடைய ஒரு பிரிவைச் சேர்ந்தவர். மல்ஹோத்ராவோ ஸ்டெனோ டைப்பிஸ்ட் – ஸ்டெனோ கிராபர் – பெர்ஸனல் அஸிஸ்டன்ட் – பிரைவேட் ஸெக்ரடரி என்கிற ஏணிப்படிகளை உடைய இன்னொரு பிரிவைச் சேர்ந்தவர். இரண்டு பிரிவுகளும் சேர்ந்துதான் ஸெக்ரேடேரியட்டை இயக்குகின்றன. ஆனால் இரண்டு பிரிவுக்காரர்களும் ஒருவரையொருவர் எப்போதுமே வெறுத்துத்தான் வந்திருக்கிறார்கள். ஒரு போட்டி யுணர்ச்சி, ஒரு வர்க்கத் துவேஷம்.

பஸ் வந்ததும் முண்டியடித்துக்கொண்டு முன்னால் ஏறியவர்களில் மல்ஹோத்ராவும் ஒருவராகயிருந்தார். அது அந்த வர்க்கத்தினரின் இயல்பை எடுத்துக்காட்டும் ஒரு குறியீடான செயலாக ஐயருக்குத் தோன்றியது. அவர் எல்லாரும் ஏறுவது வரையில் காத்திருந்த பிறகு அலட்டிக்கொள்ளாமல் பஸ்ஸில் ஏறினார். ஒருவேளை மல்ஹோத்ராவுடன் ஒரே ஸீட்டில் உட்காரும் சாத்தியக் கூறுகளை மட்டுப்படுத்துவதற்காக அவர் அப்படிச் செய்திருக்கலாம். அவர் பஸ்ஸில் ஏறியபோது மல்ஹோத்ராவின் அருகில் ஏற்கெனவே இன்னொருவர் உட்கார்ந்திருந்தார். ஐயர் இன்னொரு காலியிடத்தில் போய் உட்கார்ந்தார்.

அவர் ஆபீஸ் பஸ் ஸ்டாண்டில் இறங்கி ஆபீஸ் கட்டிடத்தை நோக்கி நடக்கும்போது பசுபதியின் கார் அவரைத் தாண்டிச் சென்றது. டிரைவர் ஸீட்டில் பசுபதியின் மாட்டுப்பெண்ணும், பின் ஸீட்டில் பசுபதியும் அவருடைய மூத்த பிள்ளையும் உட்கார்ந்திருப்பதை அவர் பார்த்தார். ஆனால் அவர்களைப் பார்த்ததாக அவர் காட்டிக்கொள்ளவில்லை. பசுபதிக்கு வணக்கம் தெரிவிக்க முடியவில்லை.

செக்ஷனை அடைந்து தன் ஸீட்டில் போய் உட்கார்ந்தார். அவர் உள்ளே நுழைந்ததுமே அங்கே அதுவரை கேட்டுக்கொண்டிருந்த பேச்சுச் சத்தங்கள் அடங்கி ஓர் இறுக்கமான மௌனம் ஏற்பட்டது. அந்த மௌனத்தில் பக்தியல்ல, பழிப்புத்தான் தொனிப்பதாகத் தோன்றியது. அவர் செக்ஷனைச் சுற்றி ஒருகணம் பார்வையைச் சுழலவிட்டார். மேஜை மேல் கிடந்தவற்றைப் பார்த்தார். "அட்டென்டன்ஸ் ரிஜிஸ்தர் எங்கே?" என்றார். ரிஜிஸ்தர் அவர் மேஜைக்கு வந்தது. அவர் அதைச் சரி பார்த்துவிட்டுக் கையெழுத்திட்டார். "ராம்சந்தர் இன்னும் வரவில்லையா?" என்றார்.

"இல்லை ஸார் ..."

"தினம் லேட்டாக வருகிறானே இவன்!"

"..."

அவர் வீட்டிலிருந்து கொண்டுவந்த ஃபைல்களை ஒரு பக்கமாக வைத்தார். வெற்றிலைப் பெட்டியை எடுத்து வைத்துக்கொண்டு வெற்றிலை போட்டுக்கொண்டார். தொண்டையைச் சில தடவைகள் கனைத்துக்கொண்டார். மேஜை மேலிருந்த காகிதங்களை – லெட்டர்களையும் ஃபைல்களையும் – அஸிஸ்டென்டுகளுக்கும் கிளார்க்குகளுக்கும் 'மார்க்' செய்து டிரேயில் குவித்தார். ராம்சந்தர் இன்னமும் வரவில்லை. 'முதல் கிரேடு பிரமோஷன்' பற்றிய முக்கியமான ஃபைலை இன்றைக்குக் காலையில் முதல் வேலையாகக் கொண்டு வரும்படி நேற்று டிபுடி ஸெக்ரடரி கூறியிருந்ததார். அந்த ஃபைல் ராம்சந்தரிடம்தான் இருந்தது. அதில் ஒரு நோட் தயாரிக்கும்படி நேற்று ஐயர் அவனிடம் கூறியிருந்தார்.

அவர் வெற்றிலைச் சக்கையைத் துப்புவதற்காக செக்ஷனைவிட்டு வெளியே வந்தார். பாத்ரூமுக்குச் சென்று வாயைக் கொப்புளித்துவிட்டு முகத்தையும் நன்றாகக் கழுவிக்கொண்டு திரும்பி வந்தார். போகும்போது மேஜை மேல் கழற்றி வைத்துவிட்டுச் சென்றிருந்த மூக்குக் கண்ணாடியை எடுத்து அணிந்துகொண்டார். இப்போது ராம்சந்தர் தன் ஸீட்டில் உட்கார்ந்திருந்தான்.

"மிஸ்டர் ராம்சந்தர்" என்று அவர் கூப்பிட்டார்.

ராம்சந்தர் அவர் முன்னால் வந்து நின்றான்.

"வழக்கம் போல லேட்டாக வந்திருக்கிறீர்கள்!"

"ஸார் இந்த பஸ்..." என்று ராம்சந்தர் ஏதோ சொல்லத் தொடங்கினான்.

"பஸ் ஸெர்வீஸ் சரியாகத்தான் இல்லை; அதற்குத் தகுந்தாற் போல நாம் சீக்கிரம் கிளம்ப வேண்டும்."

"சார் ஆக்சுவலி, இன்றைக்கு நான் எட்டரைக்குக் கிளம்பினேன்" என்று ராம்சந்தர் ஏதோ சொல்லத் தொடங்கி, பிறகு மனத்தை மாற்றிக் கொண்டவனாய்ப் பேசாமலிருந்தான். என்ன பிரயோசனம் என்று அவன் நினைத்திருக்க வேண்டும். அவன் பாலம் விமான நிலையம் ஸைடிலிருந்து வருகிறான். இங்கிருந்து பத்து மைல் தூரத்துக்கும் அப்பால் உள்ள இடம். பஸ் செர்வீஸ் மோசமாக உள்ள இடம். ஒரு பஸ்ஸைத் தவறவிட்டால் அடுத்த பஸ் முக்கால் மணி நேரத்துக்குப் பிறகுதான் வரும். இந்த முக்கால் மணி நேர சர்வீஸ்கூட இரண்டு வருட காலத்துக்கும் மேலாகப் போக்குவரத்து அதிகாரிகளுடன் மல்லுக்கு நின்ற பிறகுதான் கிடைத்திருக்கிறது. முதலில் மகஜர்கள் சமர்ப்பித்தார்கள்; பயனில்லை. பிறகு அந்த வழியாகப் போகும் பஸ்களை மறியல் செய்தார்கள். அதற்கும் பயனில்லை. பிறகு ஓரிரு பஸ்களை எரித்தார்கள். அப்போதுதான் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் செயலில் ஈடுபட்டார்கள்.

ராம்சந்தர் வேறு யாரோ நிறுத்தி வைக்கப்பட வேண்டிய ஒரு விசாரணைக்கூண்டில் தான் நிறுத்தப்பட்டிருப்பதுபோல உணர்ந்தான்.

கோபம் பொங்கியது. துக்கம் பொங்கியது. அவன் ஐயரையே பார்த்துக்கொண்டு நின்றான். அவருடைய விபூதி பூசிய நெற்றி, பழைய மாடல் மூக்குக் கண்ணாடி, பழைய உடைகள். அவனுக்கு அவரை உதைக்க வேண்டும் போலிருந்தது, அந்த மதராஸிக் கிழவனை. கொஞ்சமாவது இவனுக்கு அனுதாபமிருக்கிறதா? இவன் மட்டும் என்ன வாழ்கிறான்? கரோல் பாகில் இருந்தும்கூட நேரத்தில் எங்கே வருகிறான்? நாலே மைல் தொலைவு. ஐந்து நிமிடத்துக்கொரு முறை பஸ்கள். அவனுடைய அவஸ்தை இவருக்கு எப்படிப் புரியும்?

"அந்த ஃபைல் ரெடியாயிருக்கிறதா?"

"யெஸ் சார்."

'கொண்டுவா' என்று ஐயர் சைகை செய்தார். ராம்சந்தர் திரும்பி, தன் ஸீட்டை நோக்கி நடந்தான். ஐயர் அவன் முதுகுப் புறத்தைக் கவனித்தார். மடிப்புக் கலையாத ஸூட்; புத்தம் புதிய பாணி. அவருக்கு எரிச்சல் வந்தது. ஆபீசுக்கு வருகிற மாதிரியா இவனெல்லாம் வருகிறான்?

ராம்சந்தர் ஃபைல்களைக் கொண்டு வந்து கொடுத்தான். அந்த ஃபைல் அண்டர் செக்ரடரி போஸ்டுகளுக்கு செக்‌ஷன் ஆஃபீசர்களுக்கு சமமான விகிதத்தில் ஸ்டெனோகிராபர்களையும் தகுதியுள்ளவர்களாகச் செய்யும் ஒரு புதிய திட்டம் பற்றியது. ஐயருக்கு அந்தத் திட்டத்தில் கிஞ்சித்தும் உடன்பாடு இல்லை. ஆனால் என்ன செய்வது? அவர்களுடைய பிரிவின் வழக்கமான டிபுடி ஸெக்ரடரி – ஐயரைப் போன்ற ஸ்டெனோகிராஃபரல்லாத வர்க்கத்தினரிடம் அனுதாபமுள்ளவர் – லீவில் போயிருக்கிற சமயம் பார்த்து இந்த விஷயம் பரிசீலனைக்கு வந்திருக்கிறது. லீவில் போகிறவர் இடத்தில் தற்காலிகமாக பசுபதியை – அதே மினிஸ்ட்ரியின் இன்னொரு பிரிவில் இருந்தவர் – போட்டிருக்கிறார்கள். பசுபதியின் அனுதாபம் யார் பக்கமென்பது வெளிப்படை. அவரே ஒரு ஸ்டெனோகிராஃபராக இருந்து முன்னுக்கு வந்தவர்தானே?

லீவில் போயிருந்த டிபுடி ஸெக்ரடரி திரும்பி வருமுன்பு இந்தத் திட்டத்தை அமுலாக்கிவிட வேண்டுமென்று அவர் தீவிரமாக இருந்ததில் ஆச்சரியமில்லை. அதைச் சாதித்துக்கொள்ளும் திறனும் அவருக்கு உண்டு. மந்திரி வரையில் அவருக்கு 'அப்ரோச்' இருந்தது.

ஐயர், ராம்சந்தர் தயாரித்த நோட்டை ஒருமுறை படித்துவிட்டு அதில் சில திருத்தங்களும் செய்தார். பிறகு டிபுடி ஸெக்ரடரியின் பி.ஏ.வுக்கு போன் செய்தார்.

"கிருஷ்ணன்."

"சொல்லுங்கோ அண்ணா!" என்றான் கிருஷ்ணன், அவர் குரலை அடையாளம் கண்டுகொண்டு.

"பிஸியா?"

"சேச்சே. சும்மாதான் உட்கார்ந்திருக்கேன்."

"அட, அதுதான் தெரிஞ்ச விஷயமா இருக்கே ... உன் பாஸைக் கேட்கிறேன்."

"அதென்ன, என் பாஸ்? உங்க பாஸும் கூடத்தானே?"

"..."

கிருஷ்ணன் அவர் மௌனத்தைப் புரிந்து கொண்டவன்போலக் கடகடவென்று சிரித்தான். பிறகு, "அவருடைய ஸன் இருக்கார், உள்ளே" என்றான்.

"இன்னும் போகலையா?"

"வேணுமானால் போகச் சொல்லுகிறேன்."

"அங்கே ஒண்ணும் சொல்ல வேண்டாம். அவர் ஃப்ரீயாறபோது எனக்கு மட்டும் ஒரு ரிங் கொடுத்தாயானால் போதும்."

"உத்தரவு."

"நேத்திக்கு உபன்னியாஸத்துக்கு வரலை போலிருக்கே?"

"நானா? யார் சொன்னது! கொஞ்சம் லேட்டா வந்தேன்; பின்னாலே உக்காந்திருந்தேன். நேத்திக்கு ஃபாமிலியோட வந்ததினாலே சீக்கிரமாகவும் கிளம்பிப் போயிட்டேன்."

"ஓகோ; அதுதான் பாக்கலை."

"ஆமாம்; நான் மட்டுமானால் சைக்கிளிலே வந்துடுவேன்; எவ்வளவு நேரமானாலும் கடைசி வரையிலே இருப்பேன். இவாளையெல்லாம் கூட்டிண்டு வரபோது பஸ் பிடிக்கிறதுக்காகச் சீக்கிரமா கிளம்ப வேண்டியிருக்கு."

"இந்த பஸ்ஸை நம்பியிருந்தாலே எப்பவும் பரபரப்பாத்தான் இருக்க வேண்டியிருக்கு. என்ன பஸ் ஸெர்வீஸோ, என்ன இழவோ!"

அவர் பஸ் ஸெர்வீஸ் எனும்போது ராம்சந்தர் சட்டென்று தலை நிமிர்ந்து பார்த்தான். ஆனால் அவர் அதைக் கவனிக்கவில்லை. "பாஸ் ஒரு நாள்கூட வரலை போலிருக்கே, உபன்னியாசத்துக்கு" என்றார் தொடர்ந்து.

"கார் இருக்கிறதுனாலே வரலாமேங்கிறேளாக்கும்! அவாளுக்கெல்லாம் தீர்த்தம் மோட்சமெல்லாம் வீட்டிலேயே கிடைச்சுடறதே ஓய்!"

ஐயருக்கு விருப்பமான பதிலைச் சொல்ல வேண்டுமென்பது கிருஷ்ணனின் நோக்கமாய் இருந்ததென்றால், அதில் அவன் வெற்றியடைந்துவிட்டான். ஐயரின் முகத்தில் பரவசம் பொங்கி வழிந்தது. "வாஸ்தவந்தான் – சரி; அப்புறம் பேசலாம்" என்று போனை வைத்தார்.

பன்னிரெண்டு மணி சுமாருக்குத்தான் டி. எஸ். ஃப்ரீயாக இருப்பதாக கிருஷ்ணன் போன் செய்தான். ஐயர் தாம் இருந்த நாலாவது மாடியிலிருந்து படிகளில் இறங்கி, டி. எஸ். இருந்த இரண்டாவது

மாடிக்குச் சென்றார். ஆனால் அவர் டி. எஸ். ஸின் அறைக் கதவைத் திறப்பதற்காகக் கையை நீட்டும் சமயத்தில் டி. எஸ். ஸே கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தார். இருவரும் மோதிக் கொள்ளாத குறைதான்.

"என்ன?" என்றார் பசுபதி புன்னகையுடன். ஓ, ஐயர் அந்தப் புன்னகையை எப்படி வெறுத்தார்!

"இந்த ஃபைலில் நீங்கள் சொன்னபடி ஒரு நோட் தயாரித்துக் கொண்டு வந்தேன்" என்றார் ஐயர்.

"ரெடியாகி விட்டதா? குட். என்னை டிபுடி மினிஸ்டர் கூப்பிட்டனுப்பியிருக்கிறார். அவரைப் பார்க்கப் போயிண்டிருக்கேன். ஒரு அஞ்சு நிமிஷம் உட்கார்ந்திருக்கேளா?"

"இந்த நோட்டைப் படிச்சாலே உங்களுக்குக் கிளியராத்தான் இருக்கும்னு நினைக்கிறேன். வச்சுட்டுப் போறேன், அப்புறம் ஏதாவது வேண்டியிருந்தால், யூ கேன் கால் மீ."

"உம்ம்... சரி; ஓ.கே. உங்களை மறுபடி அலைய வைக்க வேண்டாமேன்னு பார்த்தேன்."

"அதனாலென்ன, பரவாயில்லை. அலையறத்துக்குத்தானே நாங்க இருக்கோம்!"

பசுபதி மேலே பேசாமல் சட்டென்று திரும்பி நடந்து சென்றார். ஐயர் வராந்தாவில் அவர் நடந்து செல்வதைப் பார்த்தவாறு ஒரு கணம் நின்றார். டி.எஸ்.ஸின் அறைக்குள் நுழைந்து மேஜை மேல் ஃபைலை வைத்துவிட்டு அங்கும் ஒரு கணம் காலி நாற்காலியைப் பார்த்தவாறு நின்றார். பிறகு வெளியே வந்து அருகிலிருந்த பி. ஏ.யின் அறைக்குச் சென்றார்.

"என்ன! காரியம் முடிஞ்சுதா?" என்று கிருஷ்ணன் வரவேற்றான்.

"ஃபைலை அவரிடம் ஒப்படைச்சாச்சு. இனி அவருடைய தலைவலி."

"என்ன ஃபைல்?"

"ரொம்பத் தெரியாத மாதிரிதான் பாசாங்கு."

"ஓ! அன்டர் செக்ரடரி செலக்ஷன் ஃபைலா?"

"ஆமாம் – கங்க்ராஜுலேஷன்ஸ்!"

"அக்ரீ பண்ணிண்டிருக்கேளா?"

"நான் யாருப்பா, அக்ரி பண்றதுக்கும் டிஸக்ரி பண்றதுக்கும்; ஒரு சாதாரணப் பூச்சி. நீங்கள்ளாம்தான் ராஜாக்கள். ஆபீசர்களுக்கு எந்த விதமாக நோட்டை டிக்டேட் பண்ணணும்னு சொல்லிக் கொடுத்து அதை ஓவர் டைம்லே டைப் அடிப்பேள். அப்புறம் ஒரு நாள் நீங்களே டிக்டேட் பண்ணுகிற நிலைமைக்கும் உசந்திடுவேள். அப்போது நீங்கள் ஆபீசர்களுக்கு உப்பும் புளியும் அரிசியும் வாங்கிக்

கொடுத்தற்குப் பிரதியாக உங்களுக்கும் வீட்டு வேலைக்கு ஒரு ஆள் கிடைச்சிடுவான். நாங்கள்ளாம் அசடுகள். செக்ஷனிலே உக்காந்து ஏதோ ரூலையும் இன்னொண்ணையும் படிச்சு மூளையைக் குழப்பிக்கிற பைத்தியங்கள்!"

"ரொம்பக் கோவமா இருக்காப்லே இருக்கு!"

"கோவம் ஒண்ணுமில்லை. நடக்கிறதைச் சொல்றேன்."

"உமக்குப் பிரஜுடிஸ்."

"ஆமாம், இப்படிக் கோஷம் போட்டுப் போட்டுத்தான் எல்லாம் சாதிச்சிண்டிருக்கேள். பிரஜுடிஸ்ங்கறது. அநீதிங்கறது. ஐயோ எங்களுக்கு எதிர்காலமேயில்லையின்று லபோ லபோன்னு அடிச்சுண்டு எம்.பி. க்களைவிட்டு லெட்டர் எழுத வைக்கிறது ..."

"உம்மை யாராவது இப்படியெல்லாம் செய்ய வேண்டாங் கிறாளா?"

"மனுஷாளுக்கு மனுஷாள் வித்தியாமிருக்கோல்லியோ!"

"உண்மை."

"நாங்களும் ஆபீசர்களுடைய இன்ஷுரன்ஸ் பாலிஸி கட்டறதிலேயும், ரேஷன் வாங்கிறதிலேயும், குழந்தைகளைப் பள்ளிக் கூடத்திலே கொண்டுவிடறதிலேயும் இன்னொண்ணுலேயும் உங்களோட போட்டிக்கு வந்தோம்னா அப்புறம் ஃபைல் வேலை என்ன ஆறது?"

"த்சு, த்சு, வாஸ்தவம்!"

"எப்படியோ போகட்டும்; எனக்கென்ன? இன்னும் ஒரு ஏழு வருஷ சௌர்வீஸ் பாக்கி. நீங்க சொல்றபடியெல்லாம் நோட்டெழுதி அதைக் கழிக்கிறேன்."

கிருஷ்ணன் சிறிதும் பதட்டமில்லாமல் ஒரு புன்னகையை முகத்தில் தரித்து உட்கார்ந்தான். ஐயரும் அவனும் இந்தச் சண்டையைப் பலமுறை போட்டிருக்க வேண்டும். இதே வார்த்தைகளைகூடப் பயன்படுத்தியிருக்கலாம். இப்போது அந்தச் சண்டையில் காரமே இலலாமல் போய்விட்டது. ஐயர் புறப்படுவதற்காக எழுந்தார்.

"செக்ஷன் ஆபீசர்களிடையேயும், பாஸுக்கு வீட்டு வேலை செய்வதில் எமன்களான எவ்வளவோ பேரை எனக்குத் தெரியும்" என்றான் கிருஷ்ணன்.

ஐயர் தொப்பென்று மறுபடி நாற்காலியில் உட்கார்ந்தார். "எனக்கும்தான் ஸ்டெனோகிராபர்களிலே சரக்குள்ள ஆசாமிகள் சிலரைத் தெரியும். விதிவிலக்குகள் விதியை நிரூபிக்கின்றன."

"இந்த மாதிரிப் பழமொழிகள் எதையும் நிரூபிப்பதில்லை."

"நாளைக்கே வேணுமானால் ஆர்ட்னன்ஸ் இஷ்யூ பண்ணி செக்ரடேரியட்டிலே இருக்கிற எல்லா போஸ்ட்டுகளையும் ஸ்டெனோகிராபர்களாலே நிரப்பிடுங்கோளேன். அப்புறம் என்ன நிரூபணமாகிறதென்று தெரியும்."

"எதுவும் நிரூபணமாகாது ஓய். அதுதான் துரதிர்ஷடம். மனுஷாளுக்குப் பதிலாக் கழுதைகளையோ குரங்குகளையோ போட்டால்கூட செக்ரடேரியட் அது பாட்டுக்கு ஓடிண்டுதான் இருக்கும்."

"போறது. இவ்வளவாவது நீங்க மனுஷா இல்லைன்னு ஒப்புக் கொள்கிறீர். சந்தோஷம்."

"நீங்க சந்தோஷமா இருந்தாச் சரி." ஐயரும் கிருஷ்ணனும் இன்னும் சிறிது நேரம் இந்த ரீதியில் வாக்குவாதம் செய்து கொண்டிருந்தார்கள். பிறகு ஐயர் எழுந்து தன் செக்‌ஷனுக்கு வந்தார். அங்கே அவருக்காக செக்‌ஷன் ஆபீசர்கள் அசோசியேஷன் செக்ரடரியான மாதுர் காத்திருந்தார். ஐயர் தன் நாற்காலியில் உட்கார்ந்ததுமே, "என்ன ஆச்சு? டி. எஸ். கையெழுத்துப் போட்டு விட்டாரா?" என்றார் மாதுர். நேற்று டி. எஸ். ஃபைலைக் கொண்டுவரச் சொன்னதைப் பற்றி ஐயர் அவரிடம் கூறியிருந்தார்.

"ஃபைல் டி. எஸ்ஸிடம் போயிருக்கிறது. இனிமேல்தான் அவர் அதைப் படிக்க வேண்டும்" என்று ஐயர் நடந்ததைக் கூறினார்.

ஐயரும் மாதுரும் அந்தத் திட்டத்தின் மூலம் அவர்கள் தரப்பினருக்கு இழைக்கப்படவிருக்கும் அநீதியைப் பற்றி மெல்லிய குரலில் பேசிக்கொண்டார்கள் ஸ்டெனோகிராபர்களுக்கென பிரத்தியேகமாக ஏற்கனவே இருக்கும் மேல்கிரேடு போஸ்டுகள் போதாதென்று, ஸ்டெனோகிராபரல்லாதவரால் நிரப்பப்படும் போஸ்டுகளிலும் அவர்கள் விகிதாசாரம் கோருகிறார்கள். சம உரிமை கோருகிறார்கள். ஒரு பக்கம் பிரத்தியேகமான வாய்ப்புகள் வேறு, இன்னொரு பக்கம் மற்றவர்களின் வாய்ப்புகளில் பங்கு வேறு. அழகுதான்! வெள்ளைக்காரன் காலத்திலிருந்து இது நடந்து வருகிறது. இன்னும் எத்தனை நாளைக்கு நடக்கப் போகிறது?

"என்ன பண்ணுவது? அவர்களுடைய 'லாபி' ரொம்ப ஸ்ட்ராங் காக இருக்கிறது. மற்றவர்களைவிட அவர்களுக்கு ஆபீஸருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பிருக்கிறது. கஷ்டமில்லாமல் நல்ல பெயர் வாங்கவும், தங்களுக்கெனச் சலுகைகளைப் பெறவும் முடிகிறது."

"வாஸ்தவம்."

ஐயர் சுவர்க் கடிகாரத்தைப் பார்த்தார். லஞ்ச் டைம் ஆகிவிட்டது. "டிபன் சாப்பிடுகிறீர்களா?" என்று அவர் டிபன்பாக்சை வெளியில் எடுத்தார்.

"யூ காரி ஆன். நான் வருகிறேன்" என்று மாதுர் எழுந்தார்.

"கொஞ்சம் டேஸ்ட் பண்ணிப் பாருங்களேன்."

மாதுர் உட்கார்ந்து ஐயர் டிபன் பாக்ஸ் மூடியில் போட்டுக் கொடுத்த எலுமிச்சம்பழச் சாதத்தைச் சாப்பிட்டார். வெகு ருசியாயிருக்கிறதென்று பாராட்டினார். அதை எப்படிப் பண்ணுகிறார்களென்று விசாரித்தார்.

இருவரும் பாத்ரூமுக்குச் சென்று கையலம்பிக்கொண்டார்கள். பிறகு ஐயர் மாதுரைக் காப்பி சாப்பிடுவதற்காக ஆபீசுக்குச் சற்றுத் தூரத்திலிருந்த ஒரு தென்னிந்தியர் கான்டீனுக்கு அழைத்துச் சென்றார். ஐயர் தினசரி அங்கே செல்கிற வழக்கமில்லை. அன்று அங்கு போகவேண்டுமென்று அவருக்குத் தோன்றியது. கடவுள் செயலென்றுதான் சொல்ல வேண்டும்.

ஐயரும் மாதுரும் காப்பி சாப்பிடத் தொடங்கும்போது திடீரென்று வெள்ளைக் கதர்ச் சட்டையும், கதர் வேட்டியும் அணிந்த ஒருவர் அவர்களருகில் வந்து வணக்கம் தெரிவித்து நின்றார். "நீங்கதானே எம். ஜி. ஓய். ஐயர்ங்கறது."

"ஆமாம்" என்றார் ஐயர்.

வந்தவர் தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டார். ஐயர் உடனே தடுமாறிப்போய் பயபக்தியுடன் அவரை வணங்கி, "காப்பி சாப்பிடறீங்களா?" என்று அவருக்கு ஒரு மரியாதைபோல அவருடைய மொழிக் கொச்சையிலேயே பேசினார். அவர் ஒரு பிரபல அரசியல் கட்சியைச் சேர்ந்த எம். பி. கடந்த தேர்தலில் இந்தக் கட்சி சற்றே செல்வாக்கை இழந்திருந்தது. ஆனால் கட்சிக்கு அப்பாற்பட்டும் இவர் ஒரு முக்கியமான புள்ளி. இத்தகைய ஒரு பெரிய மனிதருடன் தான் ஒருநாள் பேசிக்கொண்டு நிற்போமென்று ஐயர் கனவிலும் எதிர்பார்த்திருக்கவில்லை. அவர் கை கால்களெல்லாம் பதட்டத்தில் நடுங்கின.

"நீங்க சாப்பிடுங்க ... நான் இப்பத்தான் சாப்பிட்டேன்" என்று எம்பி. அவர்களைத் தொடர்ந்து காப்பியைச் சங்கோசமின்றி அருந்தத் தூண்டினார். "ஒண்ணுமில்லே, இந்த சாஸ்திரிகள் ஒருத்தரு இப்ப உங்க வீட்டிலே வந்து தங்கியிருக்காரில்லே, அவரை நான் தனியாக் கொஞ்ச நேரம் சந்திக்க நீங்க ஏற்பாடு செய்யணும்."

"அதுக்கென்ன, செய்யலாமே."

"அவரு ஜோசியமெல்லாம் பார்ப்பாருன்னு கேள்விப்பட்டேன்."

"ஆமாம்."

"அவருகிட்டே சில விஷயங்கள் கேட்டுத் தெரிஞ்சுக்கணும்."

"பேஷா ... எப்ப வருவீங்கன்னு சொன்னா நான் முன்கூட்டியே சொல்லி வைக்கிறேன்."

"இன்றைக்கு மாலை சௌகரியப்படுங்களா?"

"இன்றைக்கேவா?"

"நாளைக் காலையிலே நான் மெட்ராசுக்குப் போறேன்."

"ஓ!"

"அதனாலேதான், அவசரமா ... தொந்தரவு கொடுக்கறதுக்கு மன்னிச்சுடுங்க."

"சே சே, இட்ஸ் எ ப்ளெஷர், நீங்க அப்ப ஒண்ணு செய்யுங்க... அஞ்சி மணிக்கு எங்க ஆபீசு முடியுது. அப்ப அங்கே வந்தீங்கன்னா சேர்ந்து போயிடலாம்."

ஐயர் அவரிடம் தன் அறை எண்ணையும், தொலைபேசி எண்ணையும் கொடுத்தார். "அப்ப மாலை வரேனுங்க... வணக்கம்" என்று அவர் விடைபெற்றார்.

ஆபீசுக்குத் திரும்பும் வழியெல்லாம் ஐயரின் மனது ஒரு உற்சாகமான எதிர்பார்ப்பில் துள்ளிக்கொண்டிருந்தது; ஏதோ ஒரு பெரிய அதிர்ஷ்டம் அவரைத்தேடி வரப்போவது போன்ற உணர்வு... மாதுர் பேசியதொன்றும் அவர் மனதில் பதியவில்லை.

ஆபீசுக்குள் நுழைந்ததும் மாதுர் ஐயரிடம் விடைபெற்றுத் தன் செக்ஷனுக்குச் சென்றார். ஐயர் தன் செக்ஷனுக்குச் செல்வதற்கு முன்பாக டி.எஸ்.ஸின் அறைப்பக்கம் சென்று ஒருமுறை பார்த்தார், அந்த ஃபைலை டி.எஸ். பார்த்திருந்தாரா என்று தெரிந்துகொள்வதற்காக. இல்லை; அது இன்னமும் அப்படியே அவர் வைத்துவிட்டுப் போன நிலையிலேயே இருந்தது. பசுபதி இப்போது வீட்டுக்குச் சாப்பிடப் போயிருப்பார். இனி பகல் இரண்டரை மணிக்குமுன் வரமாட்டார்.

"இவர்களுக்கெல்லாம் எதற்காகச் சர்க்காரில் தண்டச் சம்பளம் கொடுக்கிறார்களோ!" என்று வியந்தவாறு அவர் தன் செக்ஷனை அடைந்தார். அன்று பிற்பகல் முழுதும் அவர் மனம் வேலையில் செல்லவில்லை. அந்த எம்.பி.யைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தார். சாஸ்திரிகளிடம் எதைப் பற்றி அவர் கேட்க விரும்புகிறார்? தன் அரசியல் எதிர்காலத்தைப் பற்றியா? எப்படியிருக்கப்போகிறது அந்த எதிர்காலம்? நாளை அவர்கள் கட்சி பதவிக்கு வந்தால், ஐயருக்கு அதனால் ஏதாவது அனுகூலம் ஏற்படுமா? அந்த எம்.பிக்குத் தன்னைப் பற்றி யார் சொல்லியிருப்பார்கள்? அவருக்கு ஏற்கெனவே தன்னைப்பற்றி எல்லாம் தெரிந்திருக்கும் போலிருக்கிறதே!

ஐயருக்கு ஸீட்டில் இருப்புக்கொள்ளவில்லை. அடிக்கடி கடிகாரத்தைப் பார்த்தவாறிருந்தார். அன்றைக்கென்று அந்தக் கடிகாரம் மிக மெதுவாகப் போவதாகத் தோன்றியது.

சரியாக ஐந்து மணிக்கு எம். பி. வந்துவிட்டார். கீழே ரிஸப்ஷனிலிருந்து டெலிபோன் செய்தார். "இதோ வருகிறேன்" என்று ஐயர் எழுந்தார். டி. எஸ். ஸிடமிருந்து அதுவரையில் போன் எதுவும் வரவில்லை. அவர் ராம்சந்தரைக் கூப்பிட்டார். தான் கிளம்புவதாகவும், டி. எஸ். ஸிடமிருந்து ஒரு வேளை அந்த ஃபைல் சம்பந்தமாக போன் வந்தால் அவரைப் போய்ச் சந்திக்கும் படியும் அவனிடம் கூறிவிட்டு, செக்ஷனை விட்டு வெளியே வந்தார். சாதாரணமாகத் தன் அஸிஸ்டண்டுகள் நேரடியாக டி.எஸ்.ஸிடம் செல்வதை அவர் விரும்புபவரல்ல. ஆனால் இன்று இதைப்

பற்றியெல்லாம் யோசிக்கும் மனநிலையில் அவர் இல்லை. கீழே அந்த எம்.பி. யின் உருவில் அதிர்ஷ்டம் அவருக்காகக் காத்திருக்கிறது.

லிஃப்ட் உடனடியாகக் கிடைத்துவிட்டது. கிரௌண்ட் ஃப்ளோரில் லிஃப்டிலிருந்து அவர் வெளிப்பட்டபோது எதிரே அந்த எம். பி.யின் பளிச்சென்ற வெள்ளை உடையும் நயமான முறுவலும் அவரை வரவேற்றன.

# 19

பசுபதி தன் அறைக்குத் திரும்பியபோது மாலை மணி ஆறடித்து விட்டிருந்தது. திட்டக் கமிஷனில் நடந்த ஒரு மீட்டிங்குக்கு, தன்னுடைய இலாகாவின் சார்பில் அவர் சென்றிருந்தார். அந்த மீட்டிங் முடிவதற்கு இவ்வளவு நேரமாகிவிட்டது.

அவர் தன் இடத்தில் அமர்ந்து, டெலிபோன் ரிஸீவரை எடுத்துக் காதருகில் வைத்துக்கொண்டு, பஸ்ஸரை அழுத்தினார். "யெஸ் ஸார்" என்று பி. ஏ.யின் குரல் ஒலித்தது.

"யாராவது கூப்பிட்டார்களா என்னை?" என்றார் பசுபதி.

"எஸ். ஏ. உங்களைப் பார்க்க விரும்பினார், ஸார்."

"எத்தனை மணிக்கு?"

"மூன்று மணி சுமாருக்கு போன் செய்தார் ... நீங்கள் கிளம்பிப் போன உடனேயே."

"உம் ... சரி" என்று பசுபதி ஒருகணம் யோசித்துவிட்டு, "ப்ளீஸ் கம் ஃபார் எ மினிட்" என்று ரிஸீவரை வைத்தார். பாண்ட் பாக்கெட்டில் கைவிட்டு எதையோ தேடத்தொடங்கியவர், திடீரென்று நினைவு வந்தவராய் அந்த முயற்சியைக் கைவிட்டார். மீட்டிங்கில் தேநீர் அருந்தி முடித்த பிறகு இதேபோலச் சுருட்டுக்காகப் பாக்கெட்டில் துழாவி, வீட்டிலிருந்து கிளம்பும்போது சுருட்டுப் பாக்கெட்டை எடுத்துவர மறந்திருந்ததை உணர்ந்திருந்தார். இப்போது மறுபடி துழாவி மறுபடி உணருகிறார். பழக்க தோஷம் ...

அன்று அவருடைய அம்மாவின் சிரார்த்த தினம். சடங்கு, சாப்பாடெல்லாம் முடிந்து வருவதற்கு நேரமாகிவிட்டது அதுவும் இந்த மீட்டிங் காரணமாகத்தான் வந்தார்; இல்லாவிட்டால் விடுமுறை எடுத்துக்கொண்டிருப்பார். வயதாகிக்கொண்டிருக்கிறது. முன்போலச்

சுறுசுறுப்பாக வெவ்வேறு வேடங்களை அணிந்து வெவ்வேறு மட்டங்களில், சூழ்நிலைகளில், பழக முடிவதில்லை. அதுவும் ஒரே நாளில், காலையில் புராணப் படத்தின் ஷூட்டிங்கிலும் மாலையின் சமூகப் படத்தின் ஷூட்டிங்கிலும் கலந்துகொள்ளும் ஒரு நடிகனைப் போல அவர் உணர்ந்தார். ஆம்; திரையுலகத்துக்கு வெளியிலும்கூட, சிறிய அளவிலோ பெரிய அளவிலோ ஒவ்வொருவருக்கும் நடிப்புத் திறமை தேவைப்படுகிறது. இந்தத் திறமையைப் பொறுத்துத்தான் 'மார்க்கெட்' அமைகிறது. புராணப்பட ஸெட்டுக்கு வந்த நடிகனுக்கு, 'மூட்' வரவழைத்துக் கொள்வதற்காக சிகரெட் பிடிப்பது தேவையிருப்பது போல, அவருக்கும் வெகு நேரமாக சுருட்டு ஒன்று தேவையாயிருந்தது; அதில்லாமல் நடிப்பு சரியாக வரவில்லை போலிருந்தது.

பத்துநாள் முன்பு வரையில் கோட்டுப் போட்டுக் கொண்டிருந்தார். அது இது போன்ற விஷயங்களில் சௌகரியமாக இருந்தது. சுருட்டு, பணம், கார்ச் சாவி, பேனா முதலிய பல வஸ்துக்கள் நிரந்தரமாகக் கோட்டின் பாக்கெட்டுகளில் இருக்கும். தினம் சரியான கோட்டை எடுத்து அணிவதுடன் வேலை முடிந்தது. ஆனால் இப்போது வெய்யில் காலம் தொடங்கிவிட்டது. கோட்டுகளைக் களைய வேண்டியதாகிவிட்டது. தினசரி வெவ்வேறு சட்டை, கால் சட்டை அணிவதால், பாக்கெட்டுகளில் இருப்பவற்றைத் தினசரி மாலையில் எடுத்து வைக்க வேண்டியிருக்கிறது; பிறகு மறுபடி மறுநாள் காலையில் ஒவ்வொன்றையும் ஞாபகமாக எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. அவருக்கு ஒரு பெரும் இழப்புணர்ச்சி ஏற்பட்டது, நம்பகமான ஒரு பணியாள், அல்லது சிரத்தை மிகுந்த ஒரு மனைவி கைவிட்டுப் போனதைப்போல. திடீரென அவர் பாதுகாப்பில்லாதவராக உணர்ந்தார், கவசங்களின்றி யுத்த களத்தில் இறங்கியதுபோல. வெய்யில் காலம் வந்தாலே அவர் எப்போதும் இப்படி நிர்வாணமாக உணருகிறார், கூசுகிறார். கோட்டையும் டையையும் அணியக்கூடிய கடைசிநாள் வரையில் அவர் அவற்றை அணியாமல் விடுவதில்லை.

ஆனால் இனி அணிய முடியாது. இனி அடுத்த வருடம்தான். இந்தப் பருத்தி, டெரிலீன் உடைகள் அவருடைய நடிப்புக்குப் போதிய அளவு தன்னம்பிக்கையளிப்பதில்லை. பிறருடைய ஊடுருவும் பார்வையிலிருந்து இந்த ஓட்டைகளை மறைக்க உதவுவதில்லை... ஓ, ஒரு சுருட்டு மட்டும் இப்போது கிடைத்தால்!

பி. ஏ. அறைக்குள் வந்ததும், அவனிடம் ஒரு சிகரெட் கேட்கலாமாவென்று அவர் நினைத்தார். மீட்டிங்கில்கூட, அருகில் உட்கார்ந்திருந்தவரிடமிருந்துதான் அவர் ஒரு சிகரெட் வாங்கிக் குடிக்க நேர்ந்தது; சிரார்த்த சாப்பாட்டுக்குப் பிறகு தூக்கம் தூக்கமாக வந்து கொண்டிருந்தது. அதிலிருந்து தப்புவதற்காக. மீட்டிங்கில் அவரால் சுறுசுறுப்பாகக் கலந்துகொள்ளமுடியவில்லை.

இப்போது தூக்கம் போய்விட்டது. பி.ஏ. யின் நெற்றியிலிருந்த

விபூதியையும், சந்தனப் பொட்டையும் பார்த்த பிறகு, சுருட்டுக் குடிக்கும் ஆசையும் போய்விட்டது. அவர் அவனிடம் சிகரெட் கேட்கும் எண்ணத்தைக் கைவிட்டார். ஹூ...ம்! வேறு வினையே வேண்டாம். அந்தப் பண்பாட்டுத் தூண் அதிர்ச்சியடைந்து அவருடைய இந்த முறைகேடான கேள்வியைப் பற்றித் தான் பழகும் வட்டங்களில் முறையிடக்கூடும். கோவிலுக்குப் போவதானாலும், தமிழ் சினிமாவின் காலை ஆட்டத்துக்குப் போவதானாலும், ஆபீசுக்குப் போவதானலும், இதே விபூதி – சந்தன வேடத்துடன் வரும் அவனைப் போன்றவர்கள் தனக்கு ஏன் எரிச்சல் மூட்டவேண்டுமென்று அவருக்கு விளங்கவில்லை. இது ஒரு வேட்தாரிக்கு இன்னொரு வேடதாரிமீது ஏற்படும் எரிச்சலோ?

இதற்குமுன் அவரிடம் பி. ஏ. யாக இருந்தவனும் தென்னிந்தியன் தான். ஆனால் அவன் இந்த டைப் இல்லை. நாகரிகமாக உடுத்துக் கொண்டு, கலகலப்பாக எல்லோருடனும் பேசிப் பழகுகிற டைப்; கிட்டத்தட்ட அவரைப் போலவே. அவனை அவருக்குப் பிடித்திருந்தது. அவனிடம் அவர் சிகரெட் வாங்கிக் குடித்திருக்கிறார். அவருக்காக அவன் ஆர்மியில் வேலையாயிருந்த தன் அண்ணா மூலமாக மலிவான விலையில் ரம் வாங்கிக் கொடுத்து வந்தான். ஆபீஸிலேயே கூட ஒரு பாட்டில் பதுக்கி வைத்திருந்தான். சில சமயங்களில் ஆபீசில் லேட்டாக உட்கார்ந்து வேலை செய்ய நேரும்போது – இன்றுபோல – அவர்கள் அதை அருந்தி இளைப்பாறுவார்கள். அவனுடைய வீட்டுக்கும் ஒருமுறை சென்றிருக்கிறார். அவனுடைய மனைவி கண்ணுக்குக் குளிர்ச்சியாக இருந்தாள். மொத்தத்தில் நைஸ் ஃபெல்லோ. அவருக்கு அவனை விட்டுப் பிரிவதில் இஷ்டமேயில்லை. ஆனால் என்ன செய்வது? மந்திரி தன் வீட்டில் ஒரு நல்ல பி. ஏ. யாக வேண்டுமென்கிறாவென்று மந்திரியின் எஸ். ஏ. – ஸ்பெஷல் அஸிஸ்டென்ட் – அவரிடம் கேட்டபோது, அவருடன் இருந்த நட்பு கருதியும் வேறு பலன்கள் கருதியும் தன் பி. ஏ. யைத் தியாகம் செய்ய ண்டியதாகிவிட்டது. மந்திரி வீட்டிலேயே தன்னுடைய ஒரு ஆள் இருந்தால் அது நல்லதுதானே என்று அவர் சமாதானம் செய்துகொண்டார். அவனுக்கும் நல்லது, எனக்கும் நல்லது.

ஆனால் இப்போதைக்கு இது எனக்கு ஒரு நஷ்டம்தான்; அவர் தன் புதிய பி. ஏ. கிருஷ்ணனை மறுபடி எரிச்சலுடன் பார்த்தார். சே! இவர்கள் தானும் அனுபவிக்க மாட்டான், பிறத்தியானையும் அனுபவிக்க விடமாட்டான். சுத்த இன்ஹிபிஷன், அதை மறைக்க ஒரு ஆசாரப் போர்வை. இருட்டில் தமிழ் சினிமா நடிகையின் நிழலைப் பார்த்துப் பசியாறுகிற வக்கிரங்கள். எது எதற்கோ ஏங்கி ஏங்கிக் கிடக்கிற பிணங்கள். அதை மறைக்க ஆசைகளே இற்றுப்போனது போல ஒரு வேஷம்... வெற்றிலையுடன் சேர்த்து ஆசைகளையும் சுருட்டிச் சுருட்டி அடக்கிக்கொண்டு துப்பாமல், விழுங்காமல் குதப்பிக் குதப்பிச் சக்கையாக்கிக்கொண்டு – சே! அவருக்குத் தன்

எரிச்சல் முழுமையாக விளங்கவில்லை. ஆனால் அந்த எரிச்சல் இன்பமாக இருந்தது; அவருக்கும் ஏதோ விருப்பு – வெறுப்புகள், அபிப்பிராயங்கள் இருப்பதை அது உணர்த்தியது. ஃபைல்களில் மேலதிகாரிகளின் விருப்பு – வெறுப்புக்கிணங்க வெவ்வேறு சார்புகளை ஆதரித்து வெவ்வேறு விதமாக எழுதி சுய உந்துதல்களை அநேகமாக இழந்துவிட்டிருந்த அந்தப் பழம்பெரும் ஸெக்ரடேரியட் ஆளுக்குக்கூட!

"சரி; இதை எழுதிக்கொள்ளுங்கள்" என்று அவர் தான் மீட்டிங்குக்கு எடுத்துச் சென்ற ஃபைலில் சிறிதாக ஒரு நோட் டிக்டேட் செய்தார்:

"ஜே. எஸ். விரும்பியபடி, திட்டக் கமிஷனில் இன்று நடந்த மீட்டிங்குக்கு நான் சென்றிருந்தேன். செயற்கை உர வகைகள், மற்றும் பூச்சி கொல்லி மருந்துகள் ஆகியவற்றின் உற்பத்தி பற்றியும் பிரயோகம் பற்றியும் சில முடிவுகள் எடுக்கப்பட்டன. செயற்கை உர வகைகள், பூச்சிகொல்லி மருந்துகள் இவற்றின் பாதக விளைவு களை ஆராயும் நிபுணர்கள் கமிட்டி ஒன்று அமைக்க வேண்டும் என்றும், அதுவரை இவற்றின் பிரயோகம் மிதமான அளவைகளில் எச்சரிக்கையுடன் செய்யப்பட வேண்டுமென்றும் முடிவெடுக்கப் பட்டது. உள்நாட்டில் செயற்கை உர உற்பத்தியைப் பெருக்குவதற் கான திட்டங்களையும் தற்போதைக்கு ஒத்திப்போட வேண்டும் என்றும், ஆனால் இவற்றின் இறக்குமதி தற்போதைய விகிதத்தில் – உடனடித் தேவைகளைச் சரிக்கட்டும் நிமித்தம் – தொடரலாமென்றும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. புதிதாக உரத் தொழிற்சாலைகளை நிறுவுவதற்குப் பதில், ஏற்கெனவே உள்ள தொழிற்சாலைகளை விஸ்தரித்து அவற்றின் உற்பத்திச் சக்தியைப் பெருக்குவது லாபகரமாக இருக்குமெனில் இந்த வழியையே கடைப்பிடிக்க வேண்டுமென்றும் பிரஸ்தாபிக்கப்பட்டது. மீட்டிங்கில் நடந்தவற்றின் குறிப்புகள் இன்னும் ஒரு வாரத்தில் நமக்கு அனுப்பி வைக்கப்படும். ஜே.எஸ். தயவு செய்து பார்க்கவும்."

டிக்டேஷனை முடித்துவிட்டு, ஃபைலைக் கட்டி அவர் கிருஷ்ணனிடம் கொடுத்தார். "நாளைக் காலையில் கொடுத்தால் போதும். இப்போது அவசரமில்லை."

கிருஷ்ணன் ஃபைலை வாங்கிக் கொண்டான். "வேறு ஏதாவது?"

"இல்லை; நீங்கள் போகலாம் . . . தாங்க்யூ ஸோ மச்."

கிருஷ்ணன் போனான். அவனுடைய போலிப் பணிவும், அதன் பின்னிருந்த எக்காளமும்! அவருக்கு மறுபடி சுருட்டுக் குடிக்க வேண்டும் போலிருந்தது. இவனுக்கும் எம். ஜி. ஓய். ஐயருக்கும் அதிக வித்தியாசமில்லை. அது இன்னொரு கிராக்கு.

அவர் ரகசிய ஃபைல்கள் வைத்திருந்த எஃகு அலமாரியைத் திறந்து, அதிலிருந்து ஒரு ஃபைலை வெளியே எடுத்தார். அந்த ஃபைல் சம்பந்தமாகத்தான் எஸ். ஏ. அவரைக் கூப்பிட்டனுப்பியிருக்க வேண்டும். அதில் ஒரு குறிப்புத் தயாரிக்க வேண்டுமென்று எஸ். ஏ. அவரிடம் சொல்லியிருந்தார். நேற்று இரவு இதற்காகப் பிரத்தியேக

மாக வெளியில் எதற்கும் போகாமல் வீட்டிலேயே உட்கார்ந்து அவர் அந்தக் குறிப்பைத் தயாரித்து முடித்திருந்தார். அது, பொதுத் துறையில் புதிய உரத் தொழிற்சாலை ஒன்று நிறுவுவதற்கான இடத்தேர்வு பற்றியது.

அவர் அந்த ஃபைலை எடுத்துக்கொண்டு கிளம்புகிற தருணத்தில் திடீரென்று அறைக்கதவு திறந்தது. கிருஷ்ணன்தான் வருகிறானோ வென்று அவர் அவசரமாக அந்த ஃபைலை வேறு காகிதங்களுக் கிடையில் மறைத்து வைத்தார். இல்லை; வந்தது ராம் சந்தர் ... அவருடைய செக்ஷனில் வேலையாயிருந்த அஸிஸ்டென்ட்.

"யெஸ், ராம்சந்தர்?" என்று கதவருகில் தயங்கி நின்ற ராம்சந்தரை உள்ளே வருமாறு அவர் சைகை செய்தார்.

"ஸார், பார்லிமெண்ட் குவெஸ்டின் ஃபைல்கள் இரண்டு கொண்டு வந்தேன்" என்று அவன் இரண்டு ஃபைல்களை அவர் மேஜை மீது வைத்தான்.

"லோக் ஸபாவா?"

"யெஸ் ஸார்."

இரண்டு கேள்விகளும் அடுத்த வாரத்தில் ஒரு தேதிக்குக் கெடு செய்யப்பட்டிருந்தன. அவர் அந்த ஃபைல்களைப் பிரித்துப் படிக்கத் தொடங்கினார். "ஸிட்டெளன்."

ராம்சந்தர் உட்கார்ந்தான். பசுபதி முதல் ஃபைலைப் படித்து முடித்துவிட்டு, ஏதோ யோசனையில் ஆழ்ந்தவராய் அவனை நிமிர்ந்து பார்த்தார். பிறகு கேட்டார்: "சிகரெட் இருக்கிறதா?"

அவன் இதை எதிர்பார்க்கவில்லையென்று தெரிந்தது. "யெஸ் ஸார்" என்று அவசரமாகக் கால்சராய்ப் பைக்குள்ளிருந்த சிகரெட் பாக்கெட்டையும் தீப்பெட்டியையும் எடுத்து அவரிடம் நீட்டினான். அவர் ஒரு சிகரெட்டைப் பற்றவைத்துக்கொண்டார். அவசரமாகச் சில தடவைகள் உறிஞ்சிப் புகையை ஊதினார். அப்பாடா! இப்போது தான் அவருக்கு உயிர் வந்தது. அவர் இன்னொரு ஃபைலை எடுத்து அதையும் படித்தார். அவர் முகபாவம் நுட்பமாக மாறுதலடைந்தது. இரண்டு ஃபைல்களையும் கட்டி ஒரு ஓரமாக வைத்தார். "சரி இவற்றை நான் பார்க்கிறேன்" என்று ராம்சந்தரைப் பார்த்துத் தலையை அசைத்தார், அவன் போகலாமென்பதற்கு அடையாளமாக. "சிகரெட்டுக்கு நன்றி" என்று ஒரு புன்னகையும் செய்தார்.

ராம்சந்தர் எழுந்திருக்கவில்லை. அவன் வேறு ஏதோ சொல்ல விரும்பினான் போலிருந்தது.

"என்ன, ராம்சந்தர்? வேறெதாவது சொல்வதற்கு இருக்கிறதா?"

"ஸார்..." யாரோ தான் பேசுவதை எந்த நிமிடமும் தடை செய்யக்கூடும் என்பது போல அவன் படபடப்புடன் பேசினான்:

"எனக்கு இந்த செக்ஷனிலிருந்து மாற்றல் வேண்டும் ஸார்."

"ஏன், என்ன ஆயிற்று?"

"நான் – எனக்கு – ஒரு பரீட்சைக்காகப் படிக்க வேண்டியிருக்கிறது ஸார். வேலை குறைவாக உள்ள செக்ஷனுக்குப் போனால் சௌகரியமாயிருக்கும். இங்கே ரொம்ப வேலை அதிகமாயிருக்கிறது. தினம் ஏழு ஏழரை ஆகிவிடுகிறது. உங்களுக்குத்தான் தெரியுமே, ஸார்?"

"உம்" என்று பசுபதி சிகரெட்டை உறிஞ்சியவாறு அவனை ஊடுருவுவது போலப் பார்த்தார். மர்மக் கதையின் முதல் அத்தியாயத்தைப் படித்த பிறகு ஏற்படுவது போன்ற ஒரு ஆர்வமும், பரபரப்பும், எதிர்பார்ப்பும் அவருக்கு அவன் பேச்சின் மூலம் ஏற்பட்டது. "அதற்கு, சில நாட்கள் லீவு எடுத்துக்கொண்டால் போதாதா?"

"இல்லை ஸார்... இங்கே எனக்கு ரொம்பக் கஷ்டமாக இருக்கிறது."

"வேலைப் பளு காரணமாகத்தானா, இல்லை...?"

ராம்சந்தர் பேசாமலிருந்தான்.

"கம் ஆன், எதுவாக இருந்தாலும் என்னிடம் நீ பயமில்லாமல் சொல்லலாம்."

"சொன்னேனே, ஸார்."

"இல்லை; மாற்றம் கேட்பதற்கான நிஜமான காரணத்தை நீ சொல்லவில்லை."

ராம்சந்தர் மறுபடி மௌனம் சாதித்தான்.

"எனக்குக் கீழே வேலை பார்க்க உனக்கு விருப்பமில்லையா?"

"அப்படியொன்றும் இல்லை, ஸார்."

"இங்கே சில பேருக்கு மதராஸி என்றால் பிடிக்காது. அதனால் கேட்டேன்."

"சேச்சே, எனக்கு உங்களைப் பார்த்தால் இதெல்லாம் நினைவு வருவதே கிடையாது ஸார். நான் உங்களிடம் மிகவும் மதிப்பு வைத்திருக்கிறேன்."

"உம்" என்று பசுபதி சிகரெட்டைக் கடைசியாக ஒரு உறிஞ்சு உறிஞ்சிவிட்டு, சிகரெட் துண்டைச் சாம்பல் கிண்ணத்தின் ஓரத்தில் அழுத்தி அணைத்து, கிண்ணத்தினுள் தள்ளினார். "வாட் எபௌட் யுவர் செக்ஷன் ஆபீசர்? அவரைப் பார்த்தால் மதராஸி என்று நினைவு வருகிறதா?"

ராம்சந்தர் தலையைக் குனிந்து கொண்டு உட்கார்ந்திருந்தான்.

"ஸோ... அதுதான் உன் பிரச்னையா?" என்றார் பசுபதி.

"ஸார், இதை நீங்கள் சரியாகப் புரிந்துகொண்டீர்களா என்று தெரியவில்லை..."

"புரிந்துகொண்டேனென்று நினைக்கிறேன்."

"எனக்கும் அவருக்கும் ஏனோ சரியாக ஒத்துப் போவதில்லை... அது என் தவறாகக்கூட இருக்கலாம். நான் அவரைக் குற்றம் சொல்லவில்லை."

"ஐ நோ... எல்லாருடனும் எல்லாரும் ஒத்துப்போக முடிவதில்லை... நாம் ஒவ்வொருவருமே சிலபேருடன்தான் ஒத்துப்போக முடிகிறது..."

"யெஸ் ஸார்."

"ஆனால் சிலபேர் இருக்கிறார்கள், அவர்களுடன் யாராலுமே ஒத்துப்போக முடியாது. ஐயர் அந்தப் பிரிவைச் சேர்ந்தவர்."

பசுபதி புன்னகை செய்தார். ராம்சந்தர் தயக்கத்துடன் அந்தப் புன்னகையை எதிரொலித்தான். இவர் அவனைப் புரிந்து கொள்கிறார்...

"இந்தப் பதில்களை நீயேதான் தயார் செய்தாயா?" என்று பார்லிமென்ட் குவெஸ்டின் ஃபைல்களைச் சுட்டிக்காட்டி அவர் கேட்டார்.

"நான் முதலில் தயார் செய்தேன்; பிறகு அவர் அதில் திருத்தங்கள் செய்தார்."

அவை என்ன திருத்தங்களென்று அவர் கேட்டுத் தெரிந்து கொண்டார்.

"அந்த முதல் கிரேடு பிரமோஷன் ஃபைலில் நோட் தயாரித்தது நீதானே?"

"யெஸ் ஸார்."

"அதில் ஐயர் ஒன்றும் திருத்தவில்லையா?"

"இல்லை ஸார்."

"உம்... அது ரொம்ப நன்றாகத் தயாரிக்கப்பட்டிருந்தது."

ராம்சந்தர் நன்றிப் புன்னகை செய்தான். அவர் அவனுடைய மாற்றல் பற்றித் தான் கவனிப்பதாகக் கூறி, அவன் போகலாமென்பதற்கு அடையாளமாக எழுந்து நின்றார். ராமசந்தரும் எழுந்தான். "நமக்குப் பிடிக்காதவர்கள் ஒவ்வொருவரிடமிருந்தும் விலகி விலகிச் சென்றுகொண்டிருப்பதும் வாழ்க்கையில் சாத்தியமில்லை. ஓரளவுக்கு அட்ஜஸ்ட் செய்துகொண்டு போக வேண்டியிருக்கிறது" என்று அவர் அவனுக்கு உபதேசித்தார். அவன் அவருக்கு வணக்கம் தெரிவித்துவிட்டுச் சென்றான். மணி ஆறே முக்கால். இனி பஸ் கிடைத்து அவன் வீடு செல்வதற்குள் மணி எட்டரை, ஒன்பது ஆகிவிடும்.

உபதேசிப்பது எவ்வளவு சுலபமாயிருக்கிறது என்று நினைத்தவாறு, அவர் அந்த ரகசிய ஃபைலைக் கையில் எடுத்துக்கொண்டு மந்திரியின்

ஸ்பெஷல் அஸிஸ்டன்ட் அறையை நோக்கிக் கிளம்பினார். சிலரை அவருக்குப் பிடிக்கிறது. சிலரைப் பிடிப்பதில்லை. சிலருக்கு அவரைப் பிடிக்கிறது. சிலருக்குப் பிடிப்பதில்லை. கிருஷ்ணனையும் ஐயரையும் அவருக்குப் பிடிக்கவில்லை. தன் பழைய பி. ஏயைப் பிடித்திருந்தது. ராம்சந்தரைப் பிடிக்கிறது. எஸ்.ஏயை பிடிக்கிறது. எஸ்.ஏக்கு அவரைப் பிடித்திருந்தது.

எஸ்.ஏ.க்கு அவருடைய மனைவியையும் பிடித்திருந்தது.

எஸ்.ஏ.யின் அறையில் கன்னங்கறுப்பாக வாட்ட சாட்டமாக நாலைந்துபேர் உட்கார்ந்து உரத்த குரலில் சம்பாஷித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய முக அமைப்பிலிருந்தும் பேசிக்கொண்ட மொழியிலிருந்தும் மந்திரியின் மாநிலத்தைச் சேர்ந்தவர் களாயிருக்கவேண்டுமென்று தெரிந்தது. பசுபதி அறைக்குள் நுழைந்ததும் அவர்களுடைய பேச்சு சட்டென்று நின்றது. "ஆயியே ஸாப்" என்று எஸ். ஏ. முகமலர்ச்சியுடன் பசுபதியை வரவேற்றார். "என்ன கொண்டு வந்தீர்கள்?"

"வழக்கம்போல் ஃபைல்தான்" என்று பசுபதி தான் கொண்டு வந்த ஃபைலை நீட்டினார். எஸ். ஏ. அந்த ஃபைலை அடையாளம் கண்டுகொண்டு, ஆனால் அதில் சிரத்தையேயில்லாதவர்போல அதை ஒரு ஓரமாகத் தூக்கிப் போட்டார். "இந்த அழகான மாலை நேரத்தில் போயும் போயும் இதைக் கொண்டு வரவா சிரமம் எடுத்துக்கொண்டீர்கள்?"

"வேறென்ன கொண்டு வருவது?" என்றார் பசுபதி.

"என்ன கொண்டுவருவது என்று கேட்கிறார்" என்று எஸ்.ஏ. அறையிலிருந்த மற்றவர்களைப் பார்த்துக் கண் சிமிட்டினார். அவர்கள் அர்த்தம் பொதிந்த சிரிப்புச் சிரித்தார்கள். எஸ்.ஏ. அவர்களுக்காக நடிக்கிறார் என்று பசுபதி புரிந்துகொண்டார்.

"அப்போது, நைட்டில் கெஸ்ட் ஹவுஸுக்கு வருவீர்களா!" என்று அவர்களில் ஒருவர் எஸ்.ஏ யைக் கேட்டார். "இன்று மன்னித்துக் கொள்ளுங்கள்; இன்று எனக்கு இன்னொரு ப்ரோகிராம் இருக்கிறது" என்றார் எஸ்.ஏ.

"இன்னொரு ப்ரோகிராமா? பலே!" என்று எஸ்.ஏ. யின் அருகில் உட்கார்ந்திருந்த இன்னொருவர் அவருடைய விலாவில் குத்தினார்.

"இவர் பெரிய ஆளுப்பா."

"பிருந்தாவனத்தின் கிஷன் கோபால்."

மறுபடி எல்லோரும் சிரித்தார்கள். எஸ்.ஏ யின் பெயர் ராதாகிஷன். அவர் அவர்களுடைய தமாஷை மிகவும் ரசிப்பவர் போல அவர்களுடன் சேர்ந்து சிரித்தார். ஆனால் அவர் உண்மையில் பொறுமையிழந்துகொண்டிருந்தாரென்பதைப் பசுபதி நுட்பமாக உணர்ந்தார். அப்போது போன் மணி ஒலித்தது. எஸ்.ஏ. போனை எடுத்துக் கேட்டுவிட்டு, "சரி" என்று ரிஸீவரை வைத்தார். அவர்

முகத்தில் ஒரு தெளிவு ஏற்பட்டது. "உங்கள் கார் வந்துவிட்டது" என்றார். அவர்கள் எழுந்து எஸ்.ஏ. யிடம் ஒவ்வொருவராக விடை பெற்றுக்கொண்டார்கள். பசுபதியிடமும் மரியாதைக்குச் சொல்லிக் கொண்டார்கள். பசுபதி எழுந்து நின்றார். எஸ்.ஏ. அறைவாசல் வரையில் அவர்களைக் கொண்டு விட்டுவிட்டு, திரும்பி வந்தார். இருவரும் உட்கார்ந்தார்கள்.

"இதே ரீதியில் போனால் எனக்குப் பைத்தியம் பிடித்துவிடும்" என்றார் எஸ்.ஏ. "அப்பா! சென்ற பத்து நாளாக இவர்கள் தொந்தரவுதான். என்றைக்கு அசெம்பிளி கூடப்போகிறதோ, இவர்கள் ஒழியப் போகிறார்களோ!"

"இவர்கள் நேற்றைக்கு வந்தவர்கள் இல்லை போலிருக்கிறதே!"

"ஆமாம்; தினம் ஒரு குரூப் வருகிறது. இவரைப் (மந்திரி) பார்ப்பதற்கு எங்கள் மாநிலத்தின் எம்.எல்.ஏ.க்கள் எல்லாரும் இப்போது இங்கேதான் இருக்கிறார்கள். கெஸ்ட ஹவுஸில் ஒரே இட நெருக்கடி."

"பரவாயில்லையே; இந்த கெஸ்ட் ஹவுஸ்கூட இல்லாமலிருந்தால் கஷ்டமாச்சே."

"அதைச் சொல்லுங்கள்" என்று எஸ். ஏ. பசுபதியின் கரத்தைப் பற்றிக் குலுக்கினார். "ஒவ்வொரு மாநிலத்துக்கும் இங்கே டில்லியில் ஒரு தனி கெஸ்ட் ஹவுஸ் கட்டிய பிறகு என் போன்றவர்களுக்கு எவ்வளவு சௌகரியமாயிருக்கிறது தெரியுமா? முந்தியெல்லாம் இவர்கள் கூடவே நானும் அலைந்துகொண்டிருக்க வேண்டும். சில பேர் மந்திரி வீட்டிலேயோ அல்லது என் வீட்டிலேயோ தங்குகிறேனென்றால் அதையும் பொறுத்துக்கொள்ள வேண்டும்." எஸ். ஏ. உடம்பை ஒரு முறை சிலிர்த்துக்கொண்டார். "இந்த மாதிரி ஆசாமிகளுடன் பழகியிருந்தால்தான் உங்களுக்கு அதிலுள்ள சிரமம் தெரியும்."

பசுபதி எஸ்.ஏ. யை அனுதாபத்துடன் பார்த்தார். "யூ நீட் எ ட்ரிங்க்."

"நோ, நோ. நேற்றைக்கு கெஸ்ட் ஹவுஸில் உட்கார்ந்து குடித்துக் கொண்டிருந்தேன். அது ஒரு வாரத்துக்குக் காணும். பெண்களின் மேலுள்ள ஆசை போகணுமென்றால் லௌஸியாக ஒருத்தியைக் கட்டிக்கணும். குடியிலுள்ள ஆசை போகணுமென்றால் இவர்களைப் போன்றவர்களுடன் ஒருநாள் உட்கார்ந்து குடிக்கணும்."

பசுபதி உரக்கச் சிரித்தார். பிறகு சட்டென்று எஸ்.ஏ. யின் சொற்களில் ஒரு சோகம் ஒளிந்திருந்ததோ என்று சந்தேகப்பட்டவரைப் போலச் சிரிப்பை நிறுத்தினார். பத்து வருடங்களுக்கு முன்பு இதே மந்திரி தன்னுடைய மாநிலத்தில் முதலமைச்சராக இருந்தபோது இதே எஸ்.ஏ. அவரிடம் காரியதரிசியாக இருந்தார். அப்போது அவருக்கு – எஸ்.ஏ.க்கு – அழகிய மனைவி இருந்தாள். திடீரென்று ஒரு நாள் அந்த மனைவி மந்திரியின் வைப்பாகி அவருடன் வசிக்கத்

தொடங்கினாள். அந்த கட்டம் வருவதற்குள் எஸ். ஏ. யும் மந்திரியும் ஒருவருக்கொருவர் இன்றியமையாதவர்களாகப் போயிருந்தார்கள். இன்றும் எஸ். ஏ. யின் மனைவி மந்திரியுடன்தான் இருக்கிறாள்; அல்லது மந்திரி அவளுடன். ஆனால் எஸ்.ஏ. அதற்காக மந்திரியிடமிருந்து பிரிந்து போகவில்லை. மாறாக அவருடைய அரசியல் சாணக்கியங்களிலும் சுயநலமான அதிகார துஷ்பிரயோகத்திலும் துணையாயிருப்பதன் மூலம் அவர் ஒரு குரூரமான மகிழ்ச்சி பெறுவது போலிருந்தது. மந்திரி எவ்வளவுக்கெவ்வளவு மோசமானவராகிறாரோ அவ்வளவுக்கவ்வளவு தன்னுடைய மனைவி ருசி கெட்டவளாக, தனக்கு அருகதையற்றவளாக ஆகிறாள் . . . ஆனால் இந்த எண்ணம் அவரை முழுமையாகச் சாந்தப்படுத்த முடியவில்லை. அவர் தன் மனைவியின் நிலைக்கு ஆளாகியுள்ள வேறு பல பெண்மணிகளுடன் அன்பில்லாத பௌதிக உறவுகளில் ஈடுபட்டு, தன்னை அலைக்கழிக்கும் உணர்வுகளிலிருந்து விடுதலை பெற முயலுகிறார். தன் மனைவியை அவரால் மறக்க முடியவில்லை. ஒருநாள் பசுபதியும், அவரும் மதுவின் போதையிலாழ்ந்திருந்த போது அவர் இதையெல்லாம் பசுபதியிடம் கொட்டிவிட்டிருந்தார் . . .

"ஸோ – உங்கள் மாநிலத்தில் இன்று என்ன புதிய செய்தி" என்றார் பசுபதி.

"கே. பி.யின் மந்திரிசபை கவிழப்போகிறது . . . என். எம். முதலமைச்சராகப் போகிறார்."

"உங்கள் எஜமானுக்கு அவர் நன்றி செலுத்த வேண்டும் – இல்லை?"

"உங்கள் எஜமானரும்தானே, அவர்."

"என் எஜமான் நீங்கள்தான்."

"நீங்களும் எம். எல். ஏ. மாதிரிப் பேசுகிறீர்களே!" என்றார் எஸ். ஏ. "இப்போது வந்திருந்தவர்களில் மூன்று பேர் புதிய மந்திரி சபையில் இடம்பெறப் போகிறார்கள். மந்திரியைப் பார்த்துக் கும்பிடு போட்டது போதாதென்று எனக்கும் வேறு கும்பிடு போட வந்தார்கள். மைகாட்! நாளை இவர்கள் மத்திய அரசிலும் மந்திரியானாலும் ஆவார்கள். கடவுள் நம் தேசத்தைக் காப்பாற்றுவாராக."

"அது சரி உங்கள் – ஐ மீன் – நம்முடைய எஜமான் ஃபைல்கள் ஏதாவது கிளியர் செய்தாரா, இல்லையா? பல முக்கியமான ஃபைல்கள் அவரிடம் முடங்கிக் கிடக்கின்றன."

"புதிய முக்கிய மந்திரியின் நியமனம் உறுதிப்படும் வரை இதற்கெல்லாம் அவருக்கு நேரமிருக்காது. இன்றிரவு மறுபடி ஸ்டேட்டுக்குப் போகிறார்."

"பத்து நாளாக எந்த ஃபைலும் பார்க்கவில்லையாமே?"

"என்ன செய்வது, பாவம்! அவர் கவலை அவருக்கு. கே. பி. வெறும் உப்புக்குச் சப்பாணி என்று முதலில் நினைத்திருந்தார். ஆனால், அவர் ஒரு சக்தி வாய்ந்த புள்ளியாக உருவாகி வருவது

இவருக்குப் பிடிக்கவில்லை. மாநிலத்தில் தன்னுடைய முக்கியத்துவம் போய்விடுமென்று பயப்படுகிறார். எனவே, அவருடைய மந்திரி சபையைக் கலைக்கப் பார்க்கிறார்."

"என். எம். இவருடைய ஆளா?"

"அவன் ஒரு அசடு, எடுப்பார் கைப்பிள்ளை. அவனைப் பெயருக்குத் தலைவராக வைத்துக்கொண்டு இவர்கள் ஆட்டம் போடலாமென்று நினைக்கிறார்கள்."

"ஐ ஸீ!"

எஸ். ஏ. குரலைத் தாழ்த்திக் கொண்டு, அதே மாநிலத்தைச் சேர்ந்த இன்னொரு காபினெட் மந்திரியின் பெயரைக் குறிப்பிட்டு, "அவரும் இதில் சிரத்தை எடுத்துக்கொண்டிருக்கிறார்" என்றார்.

"அவர் கே. பி. கட்சியா? என். எம். கட்சியா?"

"அவருக்கு வேறு யாராவது ஆள் இருப்பான். அது முக்கியமில்லை. ஆனால்..." எஸ். ஏ. குரலை மேலும் தாழ்த்திக் கொண்டு சொன்னார். "பிரதமர் அவர் பேச்சைத்தான் ஆதரிப்பார்."

"அப்படியா?"

"ஆமாம். அவரைப் போன வருஷம் காபினெட்டில் கொண்டு வந்ததே நம்முடைய எஜமானின் பலத்தைக் குறைக்கத்தான் என்று சொல்கிறார்கள். அந்த மாநிலத்திலுள்ள பெரும்பாலான எம். எல்.ஏ.க்கள் இன்று யார் பக்கமிருக்கிறார்கள் என்பது ஒரு பெரிய புதிர்."

"ஓகோ! அதனால்தான் நம்மவர் செயற்கை உரத் தொழிற்சாலை மூலமாக மாநிலத்தில் தன்னுடைய ப்ரஸ்டிஜை உயர்த்திக் கொள்ளப் பார்க்கிறாராக்கும்."

"பார்த்தீர்களா, மறந்தேவிட்டேன்... எங்கே அந்த ஃபைல்? குறிப்புத் தயாரித்துக்கொண்டு வந்தீர்களா? அவர்கள் முன்னிலையில் நான் அதை டிஸ்கஸ் செய்ய விரும்பவில்லை."

"அதை நான் புரிந்துகொண்டேன்."

எஸ். ஏ. அந்த ஃபைலை எடுத்து, பசுபதி தயாரித்திருந்த குறிப்பைப் படிக்கத் தொடங்கினார். பசுபதி அவர் படிப்பதை ஆவலுடன் பார்க்கத் தொடங்கினார். பொதுத் துறையில் செயற்கை உரத் தொழிற்சாலை ஒன்று நிர்மாணிப்பதற்கு ஏற்ற இடத்தைச் சிபாரிசு செய்வதற்காக நியமிக்கப்பட்ட கமிட்டி, இரண்டு வாரங்களுக்கு முன்புதான் தன் ரிப்போர்ட்டைச் சமர்ப்பித்திருந்தது. தெற்கு மாநிலம் ஒன்றையே இதற்கு எல்லா வகைகளிலும் ஏற்ற இடமாகக் கமிட்டி சிபாரிசு செய்திருந்தது. மந்திரிக்கு இந்தச் சிபாரிசு உகந்ததாக இல்லை. அதில் அவர் ஏதாவது ஓட்டை கண்டுப்பிடிக்கும்படி எஸ்.ஏ.யிடம் ஃபைலைக் கொடுத்திருந்தார். எஸ்.ஏ. பசுபதியிடம் – அவர் அந்த ஃபைலுடன் சம்பந்தப்பட்ட அதிகாரியாக

இல்லாவிட்டாலும் தனக்கு நம்பகமானவரென்ற முறையில் – ஃபைலைக் கொடுத்துக் குறிப்புத் தயாரிக்கச் சொல்லி யிருந்தார். மந்திரியின் மாநிலத்தில் உரத் தொழிற்சாலை அமைப் பதற்குச் சாதகமாக அந்தக் குறிப்பு அமைய வேணடும். பசுபதி தயாரித்த குறிப்பின் சாராம்சம் பின்வருமாறு இருந்தது:

'கமிட்டி தன் ரிப்போர்ட்டில் பெரும்பாலும் மூலப்பொருள்கள் அபரிமிதமாகக் கிடைக்கும் பிரதேசங்கள், தண்ணீர் வசதி, மின்சார வசதி, அந்தந்தப் பிரதேசங்களின் சூழ்நிலைகளுக்கும் மூலப் பொருள்களின் தன்மைகளுக்கும் ஏற்றவாறு கடைப்பிடிக்க வேண்டியிருக்கும். மாறுபட்ட உற்பத்தி உத்திகள், போக்குவரத்துத் திட்டம் இதனால் பிரதேசத்துக்குப் பிரதேசம் மாறுபடும் உற்பத்திச் செலவு, இவற்றையே அடிப்படையாகக்கொண்டு தன் ரிப்போர்ட்டைத் தயாரித்திருக்கிறது. ஒவ்வொரு பிரதேசத்திலும் தொழிற்சாலையின் கழிவுப் பொருள்களால் சுற்றுப்புறங்களில் ஏற்படக்கூடிய பாதிப்பு களைக் கமிட்டி கணக்கில் எடுத்துக்கொள்ளவேயில்லை. காற்றிலும் நீரிலும் இது போன்ற கழிவுப் பொருள்கள் ஏற்படுத்தி வரும் பாதக விளைவுகள் பற்றி இன்று ஒரு பெரும் கூச்சல் எழுந்துள்ளது. எனவே இது போன்ற திட்டங்கள் இந்த அம்சத்தையும் கருத்தில் கொண்டு அமைக்கப்படுவது அவசியமாகிறது. கமிட்டி சிபாரிசு செய்துள்ள பிரதேசத்தில், அதே நதியின் கரையில், ஏற்கெனவே இரண்டு தொழிற்சாலைகள் இருக்கின்றன. இந்தத் தொழிற்சாலை யையும் அங்கு அமைத்தால், நதியின் ஜலத்தில் கழிவுப் பொருள்களின் சதவீதம் மேலும் அதிகரிக்கலாம். கமிட்டி இரண்டாவதாக, மூன்றாவதாக, நான்காவதாக சிபாரிசு செய்துள்ள இடங்களும், இந்த நோக்கில் பார்க்கும்போது லாயக்கற்றவையாகின்றன. இவற்றுள் சில இடங்கள் ஜன நெருக்கம் மிகுந்த இடங்களும்கூட . . .

. . . மாநிலம், கமிட்டியின் சிபாரிசில் கடைசி இடம் பெறுகிறது. ஆனால் மேற்சொன்ன நோக்கில் பார்க்கும்போது, இதுதான் மிக ஏற்ற இடமாகத் தோன்றுகிறது. இங்குள்ள தொழிற்சாலைகள் மிகக் குறைவு. மூலப் பொருள்களைச் சற்றுத் தொலைவிலிருந்து கொண்டுவர வேண்டியிருக்குமென்பது உண்மைதான். ஆனால் சாலைகளின் எண்ணிக்கை மிகக் குறைவாக உள்ள இந்தப் பிரதேசத்தில் இந்தத் துறையில் அபிவிருத்தி ஏற்படுவதற்கு இது ஒரு வாய்ப்பாக அமையும். தண்ணீர் வசதி இங்கு போதாதுதான்; ஆனால் அண்டை மாநில மொன்றில் இதேவிதமான பிரச்னையை தனியார்துறை ஸ்தாபன மொன்று சமாளித்துள்ளவிதம் இங்கு குறிப்பிடத்தக்கது. அவர்கள் சாக்கடை நீரிலிருந்து சுத்தமான நீர் உருவாக்கும் வழியொன்றைக் கண்டுபிடித்து, தங்கள் தேவையைச் சரிக்கட்டியதுடன், நகரசபை யினரின் நன்றியையும் சம்பாதித்துக்கொண்டிருக்கிறார்கள். மின்சார வசதியைப் பொறுத்தவரையில் . . .

எஸ்ஏ. குறிப்பைப் படித்து முடித்தார். இறுதியில் பல விதங்களிலும்

பின்தங்கியிருந்த அந்த மாநிலத்துக்கு இத்தகைய தொழிற்சாலைதான் முன்னேற்றத்துக்கு வழி வகுக்கும் ஒரு சக்தியாக அமையக்கூடுமென்ற அபிப்பிராயத்துடன் குறிப்பு முடிந்திருக்கிறது. எஸ்.ஏ.யின் முகத்தில் பரவசம் பரவியது. அவர் பசுபதியைக் கட்டித் தழுவிக்கொள்ளாத குறைதான். "சபாஷ்! இதுதான் நான் வேண்டியது" என்றார். "இப்போது உங்களுக்கு நான் டிரிங்க் கொடுக்க வேண்டும்."

"ஆட்சேபணையில்லை" என்றார் பசுபதி. உள்ளூர, அந்தப் பாராட்டு அவருக்குள் ஒரு குற்ற உணர்ச்சியை எழுப்பியது. 'நோட் எழுதுவதுதானே என் வேலை' என்று அவர் தனக்குள் நினைத்துக் கொண்டார். 'இந்த மாநிலத்தில் ஒரு தொழிற்சாலை அமைக்க வேண்டாமென்றால் அதற்குச் சாதகமாகவும் ஒரு நோட் தயாரித்திருப்பேன். எனக்கு சுயபுத்தி இல்லாமல்போய் வெகு நாளாகிறது.'

எஸ்.ஏ. யின் வீடு அருகிலேயே இருந்தது. கார் மூலம் ஐந்தே நிமிடம். வேலைக்காரனிடம் 'சிப்ஸ்' கொண்டுவரச் சொல்லிவிட்டு, எஸ். ஏ. அலமாரியைத் திறந்து, விஸ்கி பாட்டிலையும் இரண்டு கண்ணாடித் தம்ளர்களையும் எடுத்தார். விஸ்கியை தம்ளர்களில் ஊற்றினார். தண்ணீர் கலந்தார்.

"உரத் தொழிற்சாலைக்கு!" என்று டோஸ்ட் சொல்லிவிட்டு, அவர்கள் விஸ்கியை அருந்தத் தொடங்கினார்கள்.

பசுபதி தான் தயாரித்த குறிப்பில் உண்மையில் தனக்கு உடன்பாடு இல்லையென்று தெரிவிக்க விரும்பியவரைப்போல, திட்டக் கமிஷனில் நடந்த மீட்டிங்கில் கூறப்பட்ட கருத்துக்களை எஸ்.ஏ. க்கு எடுத்துச் சொன்னார். எஸ்.ஏ. அவற்றால் அதிகம் பாதிக்கப்படவில்லை. "அவர்கள் கடமையை அவர்கள் செய்கிறார்கள். நம் கடமையை நாம் செய்கிறோம். உரத்தைப் போட்டால்தானே உற்பத்தி பெருகும்? உற்பத்தி பெருகினால்தானே உணவுப் பற்றாக்குறை தீரும்? நாளைக்கு ஏதோ பாதக விளைவு உண்டாகப்போகிறதென்ற பயத்தில் உரங்களின் பிரயோகத்தை கன்ட்ரோல் செய்வதாவது! அபத்தம். ஏற்கெனவே உணவுப் பற்றாக்குறை குறித்து பார்லிமெண்டில் நம் மினிஸ்ட்ரியை குடைந்தெடுக்கிறார்கள். நான் நினைக்கிறேன், திட்டக்கமிஷனில் ஏதோ ஸி.ஐ.ஏ. ஆசாமிகள் இருக்கிறார்கள். நாம் உணவு உற்பத்தியைப் பெருக்காமல், உர உற்பத்தியைப் பெருக்காமல், என்னென்றும் வெளிநாடுகளை எதிர்பார்த்துக்கொண்டு இருப்பதில் அவர்களுக்கு ஏதோ வெஸ்டட் இன்டரெஸ்ட் இருக்கிறது."

பசுபதிக்கு இந்த விளக்கம் திருப்தியளிப்பதாக இல்லை. ஆனால், அவர் அதைப்பற்றிச் சர்ச்சை செய்யும் மனநிலையிலும் இல்லை. திட்டக் கமிஷனில் நடந்ததை இவனிடம் சொன்னதுடன் தன் கடமை முடிந்ததென்று அவர் தனக்குத்தானே போலியாகச் சமாதானம் செய்து கொண்டார்.

"பை தி வே, அந்த கிரேடு பிரமோஷன் ஃபைலில் மந்திரி

கையெழுத்திட்டு விட்டார்" என்றார் எஸ். ஏ.

"இஸ் இட்!"

இருவரும் அதற்கு இன்னொரு டோஸ்ட் சொல்லி இன்னொரு பெக் அருந்தினார்கள். பசுபதிக்கு அந்தக் கணத்தில் ஐயரின் நினைவு வந்தது. பெரும் போட்டியில் வெற்றி பெற்றவுடன் ஏற்படுவது போன்ற உணர்வு அவருக்கு ஏற்பட்டது.

"ஆனால் – தனிப்பட்ட முறையில் சொல்கிறேன் – எனக்கு இந்தத் திட்டத்தில் உடன்பாடு இல்லை. யு.பி.எஸ்.ஸி.யிலிருந்து அஸிஸ்டென்டாகவும் செக்ஷன் ஆபீசராகவும் வருகிறவர்களுக்கு ஸ்டெனோகிராஃபர்கள் என்றும் ஈடாக முடியாது."

"இது சர்ச்சை செய்யப்பட வேண்டிய விஷயம்."

"உங்களை ஏதோ குறை கூறுகிறேனென்று நினைக்காதீர்கள். ஸ்டெனோகிராஃபர்களுக்கு, தங்கள் வேலையின் தன்மை காரணமாகவே, சுய மதிப்பீடுகளோ அபிப்பிராயங்களோ இல்லாமல் போகிறது. ஆனால், ஸ்டெனோகிராஃபரல்லாதவர் பெரும்பாலும் நியமனங்கள், வழிமுறைகள் ஆகியவற்றை உறுதியாகக் கடைப் பிடிக்கிறார்கள்."

"ஸ்டெனோகிராஃபர்கள் திறந்த மனமுள்ள சிறு குழந்தை போன்றவர்கள், மற்ற சாராரோ குறுகிய சட்டங்களுக்குள் அடைபட்டுக் கிடப்பவர்கள், குறிப்பிட்ட அபிப்பிராயங்களில் ஸ்திரப்பட்டுப் போனவர்கள்."

"எக்ஸ்க்யூஸ் மீ, இதெல்லாம் வெறும் சாமர்த்தியமான வாதம். உங்களுடைய ஜே.எஸ். ஸை. எடுத்துக் கொள்ளுங்கள். அவருக்கு ஒரு கொள்கைத் துணிச்சல் இருக்கிறது. தனக்குச் சரியென தோன்றாததில் அவர் கையெழுத்துப் போடுவது கிடையாது. மந்திரிக்கு ஓரிரு முறைகள் முகத்திலடித்தது போல அவர் பதில் சொல்லியிருக் கிறார். என் காரியங்களுக்கு உங்களைப் போல அவர் உதவி செய்வது கிடையாது. என்னுடன் அமர்ந்து அவர் விஸ்கியருந்த மாட்டார். ஆனால், நான் அவரை மிகவும் மதிக்கிறேன். அவர் நிச்சயம் உருப்படப் போவதில்லை. ஆனால் அவரைப் போல இன்னும் சில பேராவது இருந்தால் நம் தேசம் உருப்பட்டுவிடும்."

பசுபதிக்கு முகத்திலடிபட்டது போலிருந்தது. அயோக்கியப் படவா! சிரித்துக்கொண்டே என்னை அவமானப்படுத்துகிறான்; ஆனால் விஸ்கியுடன் சேர்ந்து அந்த அவமானத்தை விழுங்கிக் கொள்வதைத் தவிர அவருக்கு வேறு வழியிருக்கவில்லை. "யார் கண்டது? ஹோம் மினிஸ்ட்ரியில் இந்தத் திட்டம் அங்கீகரிக்கப்படாமல் போகலாம்" என்றார்.

எஸ்.ஏ. உதட்டைப் பிதுக்கினான். "மற்ற மினிஸ்ட்ரிகளின் சிபாரிசுகளைக் கேட்டதெல்லாம் வெறும் கண் துடைப்புத்தான். உங்கள் நோட் அங்கு செல்லு முன்பே அவர்கள் முடிவெடுத்தாகி

விட்டது. அங்கே எனக்கு அண்ணாச்சி ஒருத்தன் இருக்கிறான்." எஸ். ஏ. திடீரென்று பெரிதாகச் சிரிக்கத் தொடங்கினார். "ஸ்டெனோ கிராஃபர்களும் அந்தரங்கக் காரியதரிசிகளும் இந்தத் தேசத்தை ஆள்கிறார்கள் – வேடிக்கையாக இல்லை? நான் அங்கீகரிக்கும் ஃபைல்களிலெல்லாம் அவர் கண்ணை மூடிக் கொண்டு கையெழுத்துப் போடுகிறார். எல்லா ஃபைல்களையும் படிக்கத் தொடங்கினால் அவருக்கு அரசியல் விளையாட்டு விளையாட நேரமிருக்காது. அரசியல் மேடையில் நிலைத்திருக்க முடியாது." அவன் மறுபடி சிரிக்கத் தொடங்கினான். தொடர்ந்து சிரித்துக்கொண்டேயிருந்தான். கண்களில் நீர் தளும்பியது. போதை அதிகமாகிவிட்டது போலும்.

எட்டு மணிக்கு அவர்கள் குடிப்பதை நிறுத்திவிட்டுக் கிளம்பினார்கள். எஸ். ஏ. அந்த ஃபைலையும் எடுத்துக் கொண்டார். அன்றிரவு மந்திரி தன் மாநிலத்துக்குப் புறப்படுவதற்கு முன்பு அவரிடம் அந்தக் குறிப்பைக் காட்ட அவர் விரும்பினார். கார் சற்று தூரம் சென்ற பிறகு எஸ். ஏ. திடீரென்று கேட்டார்: "ஆமாம்; உங்களுக்கு இந்த ஐடியா எப்படி உதயமாயிற்று?"

"எந்த ஐடியா?"

"அதுதான், கழிவு பொருள்களின் பாதிப்புப் பற்றி."

பசுபதிக்கு மறுபடி குற்ற உணர்ச்சி ஏற்பட்டது. தன் மகன் இந்தத் துறையில் ஆராய்ச்சி செய்கிறான். அவன் மூலமாகத்தான் இந்தக் கருத்துக்களுடன் பரிச்சயம் ஏற்பட்டதென்று சொல்லலாமா? சே, என்ன கேவலம்! அவன் இலட்சியப் பிடிப்புடன் பின்பற்றும் ஒரு கருத்தை, அவர் ஃபைலில் ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தினார். அவருக்குத் தன் முகத்தை இனி விசுவத்துக்குக் காட்ட முடியாதென்று தோன்றியது.

"ஸ்டெனோகிராஃபராயிருந்தாலும் ஏதோ நானும் கொஞ்சம் படிக்கிற வழக்கம் வைத்திருக்கிறேன்" என்றார்.

எஸ். ஏ. அவர் தோள்மேல் கை போட்டு அணைத்துக் கொண்டார். "என்ன இது! நான் சொன்னதையெல்லாம் ஸீரியஸ்ஸாக எடுத்துக்கொண்டுவிட்டீர்களா?"

"இல்லை; நானும் தமாஷாகத்தான் சொன்னேன். நீங்கள் மட்டும்தான் தமாஷ் செய்யலாமா?"

மந்திரியின் வீடு வந்துவிட்டது.

எஸ். ஏ. இறங்கினார். "ஓகே . . . குட் நைட் . . ."

"குட் நைட்."

"எங்கே, வீட்டுக்குத்தானா?"

"ஆமாம்" என்றார் பசுபதி, எஸ். ஏ. யின் முகத்தைக் கூர்ந்து பார்த்தவாறு. "நீங்கள் வரவேயில்லையே அங்கே, கொஞ்ச நாளாய்?"

"வரணும் . . . ஐ ஆம் ஸோ பிஸி, யூ நோ . . ."

"என் வைஃப்கூடக் கேட்டாள், எங்கே உங்களைக் காணோமேயென்று?"

எஸ். ஏ. யின் முகத்தில் நுட்பமான ஒரு மாறுதல் ஏற்பட்டது. பசுபதிக்கு அவரைப் பழிவாங்கிவிட்ட திருப்தி ஏற்பட்டது. அவருடைய பலவீனமான இடம் தாக்கப்பட்டுவிட்டது! ஆனால் எஸ். ஏ. சமாளித்துக்கொண்டுவிட்டார். "அப்படியா? நான் ரொம்பக் கேட்டதாகச் சொல்லுங்கள் ... வருகிறேன், ஒரு நாளைக்கு ... ஓ.கே!"

அவர் திரும்பி, கேட்டுக்குள் நுழைந்து நடக்கத் தொடங்கினார்.

"வீட்டுக்குத்தானே ஸாப்?" என்று டிரைவர் பசுபதியைக் கேட்டான்.

"இல்லை; பிரெஸ் கிளப்புக்குப் போ!" என்றார் அவர், தன் முந்தைய முடிவை மாற்றிக் கொண்டவராய். திடீரென்று ஆபீசில் தன் மேஜை மேலிருந்த இரண்டு பார்லிமேண்ட் குவெஸ்ட்டின் ஃபைல்கள் அவருக்கு நினைவு வந்தன. இரண்டு கேஸ்களிலும், செக்ஷன் தயாரித்திருந்த பதில்களைச் சற்றே மாற்ற வேண்டியிருக்கும். முதல் கேள்வி, உணவுப் பற்றாக்குறை சம்பந்தமான சில புள்ளி விவரங்கள் கோருவது. இரண்டாம் கேள்வி, அவர்களுடைய மினிஸ்ட்ரியில் குறிப்பிட்ட சில பதவிகளில் வெகுநாளாக இருந்து வருபவர்களைப் பற்றிய விவரங்களையும், இவர்கள் வேறு பதவிகளுக்கு மாற்றப்படாததன் காரணங்களையும் கோருவது. இரண்டு கேள்விகளுக்குமே, செக்ஷன் கொடுத்திருந்த பதில் அதிகப்படியாகத் தோன்றியது. சில தகவல்களைத் தராமலிருக்க வாய்ப்பிருந்தது ...

இரண்டாவது கேள்விதான் அவரை மிகவும் உறுத்திக் கொண்டிருந்தது. அந்தக் கேள்விக்கான பதிலில் அவர் பெயரும் தரப்பட்டிருந்தது. அவர் வழக்கமாக வகித்து வந்த பதவி செல்வாக்கு நிரம்பியதுதான்; அவர் அந்தப் பதவியினால் பல்வேறு அனுகூலங் களை அடைந்திருக்கிறார். அவராலும் பலருக்கு அனுகூலம் இருந்திருக்கிறது. அவரால் பயனடைந்தவர்கள் அவர் அந்தப் பதவியிலிருந்து மாறாமல் பார்த்துக்கொண்டார்கள். ஆனால் இப்போது சில நாட்களாக இந்தப் புதிய ஸ்தானத்தில், விடுமுறையில் சென்றிருக்கும் ஒருவருடைய இடத்தில்தான் அவர் வேலை செய்கிறார். எனவே பதிலில் அவர் பெயரைப் பிரஸ்தாபிக்காமலிருக்க வாய்ப்பிருந்தது ... இந்த ஐடியாவெல்லாம் யார் எம்.பி.க்களுக்குச் சொல்லித் தருகிறார்கள்? ஒரு வேளை ஐயராக இருக்குமோ?

பிரஸ் கிளப்புக்குள் அவர் நுழைந்தபோது அங்கே ஏற்கெனவே எல்லாரும் 'ஹை'யாக இருந்தார்கள். அன்று அங்கே விருந்தினர்கள் தினம். மெம்பரல்லாதவரும் வரலாம். ஒரே கூட்டமாக இருந்தது.

ஓரமாக ஒரு மேஜையில் டைம்ஸ் நரசிம்மன் உட்கார்ந்திருந்தார். அவரருகில் விசுவம் உட்கார்ந்திருந்தான்.

விசுவத்தை அங்கே பார்த்ததும் அவருக்கு அதிர்ச்சி ஏற்பட்டது. கூடவே ஒரு ஆறுதலும் ஏற்பட்டது. அவர் அவர்கள் மேஜையில்

போய் உட்கார்ந்தார். "ஹலோ, சிவப்பு நாடா!" என்று நரசிம்மன் அவரை வரவேற்றார். "இன்றைய ஸ்கோர் என்ன? எத்தனை தாமதங்கள்? எத்தனை தவறான தகவல்கள்?"

"உங்கள் பேப்பரில் வருவதைவிடக் குறைவுதான்" என்றார் பசுபதி. விசுவத்தின் முன்னிலையில் அவர் தன்னிடம் அந்தத் தொனியில் பேசியது அவருக்குச் சற்றே சங்கடமாக இருந்தது. "நீ என்ன, இவருடன் வந்தியா?" என்றார் அவர் விசுவத்திடம்.

"யெஸ்" என்றார் நரசிம்மன். "கழிவுப் பொருள்கள் முதலியவற்றால் மேலும் மேலும் அசுத்தமடைந்து வரும் சூழ்நிலை காரணமாக மனிதர்கள், தாவரங்கள் ஆகியவை மேல் ஏற்படும் பாதிப்புகளைப் பற்றி நாங்கள் போன மாதம் சில கட்டுரைகள் வெளியிட்டிருந்தோம். அந்தக் கட்டிங்ஸ் வேண்டுமென்று வந்தான் – நீரும் நானும் பண்ணின அசுத்தத்தை இவர்கள் சுத்தம் பண்ண விரும்புகிறார்கள்." இதற்குள் அடுத்த ரவுண்ட் விஸ்கி வந்துவிட்டது – பசுபதிக்கும் சேர்த்து.

"சுத்தமான நாளைய உலகுக்கு" என்று அவர்கள் தம்ளர்களைக் காலி செய்தார்கள்.

விசுவம் தன்னுடன் உட்கார்ந்து மதுவருந்தியது பசுபதிக்கு சற்றே ஆறுதலாயிருந்தது. அது அவருடைய குற்ற உணர்வை மட்டுபடுத்தியது போலிருந்தது. பொதுவாக அவனுடன் இருக்கும் போது அவர் எப்போதுமே சங்கடமாகத்தான் உணர்ந்தார். அவனுடைய இலட்சிய வேகமும் கொள்கைப் பிடிப்பும் அவருள் உறுத்தலை எழுப்பின. ஆனால் நல்லவேளை, இப்போது அவன் குடிக்கிறான். அவர்களுக்குள் பொதுவாக ஒன்று . . .

"பத்மினிக்கு டில்லி ஆபீசுக்கு மாற்றல் கிடைச்சுடுத்தாம். அடுத்த வாரம் வருகிறாளாம்" என்றான் விசுவம். "இன்னிக்கு லெட்டர் வந்தது."

"அவ பம்பாய்க்கு எப்போ போனாள்?" என்றார் நரசிம்மன்.

"பத்து நாளாகிறது . . . அவள் விமானக் கம்பெனியில் இருக்கிறாள், தெரியுமோல்லியோ?"

"ஓ, ஆமாம், மறந்தே விட்டது. ஸோ, அவளுக்கு டில்லிக்கு மாற்றல் கிடைத்துவிட்டதாக்கும்; பெண்கள் என்ன வேண்டு மானாலும் சாதித்துக்கொள்கிறார்கள், இல்லை?" என்று நரசிம்மன் சிரித்தார்.

பசுபதியின் கண் முன்பு பத்மினியின் மாற்றலை முடிவு செய்ய வேண்டிய அதிகாரியின் முன் அவள் கொஞ்சிப் பேசிச் சிரித்தவாறு நிற்பது போல ஒரு காட்சி தோன்றியது. 'சே, என் மனம் மிகவும் கெட்டுவிட்டது' என்று நினைத்தவாறு அவர் பாண்ட் பாக்கெட்டில் கைவிட்டார். ஆனால் சுருட்டுத்தான் இல்லையே?

"சுருட்டு இருக்காய்யா?" என்று நரசிம்மனைக் கேட்டார்.

"இதோ" என்று நரசிம்மன் ஒரு சுருட்டை எடுத்துக் கொடுத்து, அதைப் பற்ற வைத்துக்கொள்ளவும் உதவினார்.

விசுவம் கைக்கடிகாரத்தைக் கவனித்தான்.

"லேட்டாயிடுத்தா உனக்கு?" என்றார் பசுபதி.

"ஒரு லேட்டும் இல்லை" என்று நரசிம்மன் இன்னொரு ரவுண்ட் டிரிங்க் ஆர்டர் செய்தார். சாப்பிடுவதற்கும் சில அயிட்டங்கள் ஆர்டர் செய்தார்.

பசுபதி சுருட்டைப் புகைத்தவாறு கால்களை நன்றாக நீட்டிக் கொண்டு நாற்காலியில் சாய்ந்து உட்கார்ந்தார்.

"ஏன்யா, உம்ம மந்திரியைத் தூக்கப் போறா போலிருக்கே!" என்றார் நரசிம்மன்.

"என்னது!"

"தெரியாதா? உம்ம இலாகா விஷயம் கூடத் தெரியாதா? ஹூம்! கவர்மென்ட் ஆஃப் இந்தியாவையே தாங்கற மாதிரிப் பாசாங்குக்குக் குறைவில்லை."

"சும்மா பேத்தாதேயும்."

"ஆமாம்; நாளைக்குப் பேப்பரிலே பாரும். யாரு பேத்தறான்னு அப்புறம் சொல்லும். காபினெட் ரிஷஃபிள் ஓய்!"

பசுபதியின் விரலிடுக்கில் சுருட்டு புகைந்தவாறு இருந்தது. அதை வாயில் வைத்துக்கொள்ளக்கூட அவருக்கு மறந்துவிட்டது.

# 20

**வ**சந்தம். பகல் வேளையில் டபிள் டெக்கர் பஸ்ஸின் மாடியில் அமர்ந்து பயணம் செய்யும்போது சாலையின் இருபுறங்களிலுள்ள மரங்கள் தீப்பற்றியெரியத் தொடங்கியிருப்பது போன்ற தோற்றம். சிவப்புத்தீ, மஞ்சள்தீ, ஊதாத்தீ, காமத்தீயோ? காமவேட்கையை மலர்கள் மூலம் பிரகடனப்படுத்தியவாறு, சாலையின் மீது தம் கிளைகளைப் படரவிட்டவாறு, ஸ்பரிசத்துக்கும் தழுவலுக்கும் இவை ஏங்கி நிற்கின்றனவோ? டபிள் டெக்கர் பஸ் மரங்களின் வேட்கையைத் தீர்ப்பது போல, கிளைகள் மீது முரட்டுத்தனமாக மோதி உரசியவாறு செல்கிறது. புதிய வானம், புதிய வெய்யில், பளிச்சென்ற வெய்யில். மரங்களைப் போல மனிதர்களையும் புதிய – மெல்லிய – உடைகள் அணிய வைத்து ஒருவரையொருவர் புதுமையாக உணர வைக்கும் வெய்யில். மரங்கள் களைந்து எறிந்த கம்பளி உடைகளைப் போல சாலையின் மேல், நடைபாதையின் மேல், புல்வெளிகளின் மேல், பழுப்புத் திட்டுகளாய் உதிர்ந்து கிடக்கும் – காற்றில் தத்தித் தத்திச் செல்லும் – உதிர்ந்த இலைகள், உலர்ந்த இலைகள். இந்த இலைகளின் பழுப்பு, மலர்களின் ஊதா, மஞ்சள், சிவப்பு, தார் ரோடின் கறுப்பு. வானத்தின் நீலம், வண்டிகள், மனித உடைகள், கட்டிடங்கள் ஆகியவற்றின் எண்ணற்ற நிறக்கலவைகள் – எல்லாவற்றையும் பளீர் பளீரென்று உணர்த்தும் வெய்யில். உசுப்பும் வெய்யில். இனிய உணர்வுகளையும் தாகங்களையும் கிளர்ந்தெழச் செய்யும் நிறங்களின் கோலாகலம்.

அழகிய ஒரு கணம், சில கணங்கள்.

விசுவத்துக்கு இந்தக் கணங்களை நீடிக்கச் செய்தவாறு, டபிள் டெக்கர் பஸ்ஸின் மாடியில் இப்படியே அமர்ந்தவாறு, என்றென்றும் பயணம் செய்து கொண்டிருக்கலாம்போலத் தோன்றியது. இதோ,

இன்னொரு சாலை, இன்னொரு ரக மரங்கள். சாலையின் மீது கவிந்திருந்த மரக் கிளைகளின் நுனிகள் சடசடவென்ற சத்தத்துடன் பஸ்ஸின் மாடிப்புறத்து ஜன்னல்களை முத்தமிட்டன. ஜன்னலோரமாக உட்கார்ந்திருந்த பத்மினி கிளைகளின் உராய்விலிருந்து தப்புவதற்காக விசுவத்தை நோக்கிச் சாய்ந்தாள். பெரும் ஆபத்திலிருந்து ஹீரோயினைக் காப்பாற்றும் சினிமா ஹீரோவின் தீவிரமான பாவனையை அபிநயித்தவாறு விசுவம் பரபரப்புடன் அவள் தோளைச் சுற்றிக் கையைப் போட்டு இறுக அணைத்துக் கொண்டான். "பயப்படாதே!"

அவள் முகத்தில் அவன் நடிப்புக்குப் பரிசாக ஒரு புன்னகை மலர்ந்தது. "என் ஹீரோ!"

ஆமாம், ஹீரோ. மேலதிகாரியுடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டதால் வேலையைத் துணிச்சலாக ராஜினாமாச் செய்தவன். விஸ்கான்ஸின் யுனிவர்ஸிடியில் அவள் வாழ்க்கையில் அதுவரை அவள் சந்தித்திருந்த எவரையும்விட அதிகமாக அவள் மேல் பாதிப்பு ஏற்படுத்தியவன். அவளுடைய சிநேகிதிகளின் அங்கீகாரத்தையும் பெற்றோரின் அதிருப்தியையும் பெற்றவன். வருடப் பிறப்பு இரவன்று ரவுடிகளை எதிர்த்து நின்று தலையில் அடிபட்டுக் கொண்டவன். அவளுடைய ஜிகினாவாக, ஆண் துணையாக, பம்பாய் முழுதும் அலைந்தவன், இப்போது தில்லியில் அலைந்து கொண்டிருப்பவன்.

பத்மினியின் ஹீரோ.

மிருகக்காட்சி சாலையருகில், பஸ்ஸிலிருந்து இறங்கி அவர்கள் நடக்கத் தொடங்கினார்கள். அவர்கள் அடிக்கடி வரும் இடங்களில் ஒன்று அது. மிருகக்காட்சி சாலை. விசுவம் தோளில் பத்மினியின் காமிராவைத் தொங்கவிட்டுக்கொண்டு சற்று முன்னால் நடந்தான்; பொறுப்புகளைத் தற்காலிகமாகக் கழட்டியெறிந்த ஒரு உல்லாசப் பயணியைப்போல அவன் உணர்ந்தான். மிருகக்காட்சி சாலைக்குள் மிருகங்களை, பறவைகளை, பத்மினியை, வெவ்வேறு இடங்களில், கோணங்களில், காமிராவுக்குள் சிறைப்படுத்தினான். பல லட்சம் பிரதிகள் விற்கும் பத்திரிகையொன்றின் புகைப்பட நிருபராக ஆப்பிரிக்கக் காடுகளில் அரிய காட்சிகளைப் பதிவு செய்தவாறு அலைவது போன்ற ஒரு பிரமை. சுற்றிச் சுற்றி நடந்து, தான் என்ற பிரக்ஞையற்ற மிருகங்களைப் பார்த்து ரசித்து தாமும் அந்தப் பிரக்ஞையைச் சில மணி நேரங்கள் கழற்றி வைத்து அந்தச் சூழ்நிலையில் லயித்து ஒன்றிப்போக அவர்கள் முயன்றார்கள். மரங்கள், செடிகள், மலர்கள், குன்றுகள், புல்வெளிகள் நிறைந்த அந்த மிருகக்காட்சிசாலை யந்திர நாகரிகச் சூழ்நிலையிலிருந்து சற்றே விலகி இளைப்பாற ஓர் இடம்; இயற்கையின் அகங்காரமற்ற கம்பீரம்; மிருகங்கள், பறவைகளின் வரவழைத்துக்கொள்ளப்படாத இயல்பான பாவனைகள், சப்தங்கள், சிருஷ்டியின் தொடக்க காலத்துக்குச் சென்றுவிட்டது போன்ற பிரமை. கஃபேயில் உட்கார்ந்திருந்தபோது அவன் சமோஸாவில் சர்க்கரை தூவிக்

கொண்டு தின்றான். "பைத்தியம்!" என்று அவள் சிரித்தாள். கஃபேயிலிருந்து கிளம்பி அவர்கள் மீண்டும் நடக்கத் தொடங்குகையில் திடீரென அவன் உதட்டோரங்களில் சர்க்கரைத் துணுக்குகளைக் கண்டுபிடித்து, "குழந்தை!" என்று கைக்குட்டையால் துடைத்து விட்டாள்.

"ஹீரோ; உல்லாசப் பயணி; பைத்தியம்; குழந்தை."

சற்று நடந்த பிறகு அங்கிருந்த ஏரிக்கரையில், புல்வெளியில் மறுபடி அமர்ந்தார்கள். காலணியைக் கழட்டி வைத்துவிட்டு, அவன் படுத்துக்கொண்டான். "சோம்பேறி" என்றாள் அவள்.

"வேறு யார் நான்?"

"உம்?"

"பைத்தியம், குழந்தை, சோம்பேறி – அப்புறம்?"

"ரொம்ப ஸென்ஸிடிவ்."

"உம்."

"கனவுலகில் வாழ்பவர்."

"உம்."

"உலக சகோதரத்துவத்தைப் பற்றிச் சொல்லுகிறவர். ஆனால், நாலு பேருடன் கலகலப்பாகப் பழகத் தெரியாதவர்."

"சபாஷ்."

"ஒப்புக் கொள்கிறீர்களா?"

"நீதான் ஏற்கெனவே முடிவுக்கு வந்துவிட்டாயே. இனி நான் ஒப்புக்கொண்டாலென்ன, ஒப்புக்கொள்ளாவிட்டாலென்ன?"

"தேர் யூ ஆர் – ஸென்ஸிடிவ்."

"நிறைய வார்த்தைகள் தெரிகிறது உனக்கு."

அவள் பேசவில்லை. ஆனால் முகத்தில் ஒரு திருப்தி தெரிந்தது. அவனை உசுப்பிவிட்ட திருப்தி. அவன் இப்போது போட்டோகிராபர் இல்லை. பைத்தியம் இல்லை. குழந்தை இல்லை.

"நம்முடைய பிரச்னையே இதுதான்" என்று அவன் மறுபடி பேசினான்.

"எது?"

"வார்த்தைகள்."

"உண்மைதான். நான் வார்த்தைகளைப் பிரயோகித்தால் உனக்கு அது பிரச்னையாக இருக்கிறது – விசுவம்! நீ ஒரு ஊமைப் பெண்ணைத் தேடிக்கொண்டிருக்க வேண்டும்."

"உம் . . . உனக்கு அப்படித் தோன்றுகிறதா?"

"ஆண் பேசுவதையெல்லாம் பெண் பிரமிப்புடன் ரசித்துக் கேட்க வேண்டும்; வழிபடும் பார்வையை அவன் மேல் வீசவேண்டும். அவனுடைய கோமாளித்தனங்களைப் பார்த்துச் சிரிப்பை அள்ளி வீசவேண்டும் – இந்தப் பழமையான பெண் பிம்பம்தான் உன் மனதாழத்தில் பதிந்திருக்கிறது."

"ஒரு சந்தேகம் – ஊமைப் பெண்கள் சிரிப்பார்களா?"

". . ."

"தெரியாதா? பரவாயில்லை; அது நம் பிரச்னையுமில்லைதான்."

"வார்த்தைகள்."

"ஆமாம், வார்த்தைகள் – பல வருடங்கள் புழக்கத்திலிருந்து வரும் தூசும், அழுக்கும் படிந்த வார்த்தைகள் – இந்த வார்த்தைகள், இவற்றைச் சார்ந்து ஸ்திரப்பட்டுவிட்டிருக்கும் உருவங்கள், பிம்பங்கள் ஆகியவை மூலம் நாம் ஒருவரையொருவர் அணுகாமலிருந்தால் நல்லது."

"உன் இயல்புகள் என்னைப் பலவிதங்களில் பாதிக்கின்றன. இந்தப் பாதிப்புகள் தவிர்க்க முடியாமல் வார்த்தைகளாக உருப்பெறுகின்றன."

"இந்த வார்த்தைப்படுத்துதல் என் இயல்புகளையும் சரி, அவை உன்மேல் நிகழ்த்தும் பாதிப்புகளையும் சரி, கொச்சைப்படுத்துவ தாகும். அரூபமானவற்றுக்கு ரூபம் கொடுக்க ஏன் இவ்வளவு அவசரப்படுகிறாய்? நாமிருவரும் ஒருவர்மேல் ஒருவர் நிகழ்த்தும் பாதிப்புகள் பிரத்தியேகமானவை. இந்த பாதிப்புகளினால் எழும் உணர்வுகளின் உலகம் பிரத்தியேகமானது. திறந்த மனத்துடன் இறுதிவரையில் ஒருவரையொருவர் கண்டுபிடித்துக்கொண்டேயிருப் போம், சௌகரியமான பிம்பங்களை ஒருவர்மேல் ஒருவர் திணித்து உண்மையை உணரும் பொறுப்பிலிருந்து நழுவாமலிருப்போம். நீ என்மேல் ஒரு லேபிளை ஒட்டும்போது உன்மேலும் ஒரு லேபிள் ஒட்டப்பட்டுவிடுகிறது."

"எனக்குச் சொன்னது உனக்கும் பொருந்துமல்லவா?"

"நான் இதுவரை உன்னைப்பற்றி உன்னிடமோ பிறரிடமோ எந்தவிதமான தீர்ப்பும் வழங்கியதில்லை."

அவள் கை அவன் தோள்மீது படிந்தது. "ஏன் இவ்வளவு ஸீரியஸ்ஸாகிவிட்டாய், திடீரென்று?"

"ஸீரியஸ்ஸாக இல்லாத கணங்களில் நான் உனக்குக் கோமாளியாகத் தோன்றுவேன். அதுவும் உனக்குப் பிடிப்பதில்லை." அவள் கையை எடுத்துக்கொண்டாள். நேற்றையச் சம்பவம் அவளுக்கு நினைவு வந்திருக்க வேண்டும்.

அவன் எழுந்து உட்கார்ந்தான். அவள் ஹாண்ட்பாக்கிலிருந்து சிகரெட் பாக்கெட்டை எடுத்து ஒரு சிகரெட்டை வாயில் வைத்துப்

பற்றவைத்துக் கொண்டாள். முகத்தில் ஒரு தீவிர பாவனை . . . அவனுக்குத் திடீரென்று சிரிக்க வேண்டும் போலிருந்தது, சிரமப்பட்டுத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான்.

நேற்றைக்கும், அவன் தன்னைக் கட்டுப்படுத்திக்கொண்டிருக்க லாமோ? பத்மினியின் தோழி தான் வரைந்த 'ஆப்ஸ்ட்ராக்ட்' ஓவியமொன்றின் நுணுக்கங்களை அவனுக்கு விவரிக்கத் தொடங்கிய போது, அவள் பேசியதில் பெரும்பகுதி அவன் மனத்தில் பதியவில்லை. அவளுடைய முகபாவம், கைளின் அபிநயம், பார்வையை அவன் மேல் நாட்டிய விதம், தலைமயிரை வகிடெடுத்திருந்த விதம், பேசும்போது தெரிந்த பற்களின் வரிசை, தாடையின் அசைவு, கழுத்தின் நடுவிலிருந்த மச்சம் என்று கவனம் அலைந்தது. பெரிய வார்த்தைகளை உபயோகித்து நுட்பமான கருத்துக்களை விளக்குவது அவளுக்கு இயல்பற்ற ஓர் செயலாகத் தோன்றிச் சிரிப்பை வரவழைத்தது; எப்படி இப்போது பத்மினி தீவிர பாவத்துடன் சிகரெட் புகையை ஊதுவது சிரிப்பை வரவழைக்கிறதோ, அதேபோல.

நேற்று அவன் சிரித்திருக்கக் கூடாது. அதுவும் அந்தப் பெண் அவனுக்காகவே அவ்வளவு சிரத்தையும் சிரமமும் எடுத்துக் கொண்ட பிறகு. அவள் – சுதா பணிக்கர் – பத்மினியின் கல்லூரித் தோழியாக இருந்தவள். தில்லியில் தொடங்கியிருந்த அவளுடைய ஓவியக் கண்காட்சியின் நிமித்தம் பம்பாயிலிருந்து வந்திருந்தாள். அவளிடமிருந்து பத்மினிக்கும் பிரத்தியேகமாக ஒரு கடிதம் வந்திருந்தது, கண்காட்சிக்கு அவசியம் வரும்படி. (அவளுடைய கையெழுத்து விசுவத்துக்குப் பிடித்திருந்தது.) பத்மினி விசுவத்தையும் கூட்டிக்கொண்டு நேற்று மாலை அங்கே சென்றிருந்தாள் . . .

நவீன பாணி ஓவியங்கள். அவனால் அந்த ஓவியங்களுடன் தொடர்புகொள்ள முடியவில்லை. காரணம் அவனுடைய இயலாமையாக இருக்கலாம். ஓவியங்களை வரைந்தவளின் இயலாமையாகவும் இருக்கலாம். வேடிக்கையாக ஏதாவது சொல்ல வேண்டும் போலிருந்தது. அதை பத்மினி ரசிப்பாளோவென்றும் தயக்கமாக இருந்தது . . .

அவர்கள் அங்கே சென்றபோது சுதா வேறு யாரோ சிலருடன் பேசிக்கொண்டிருந்தாள். பத்மினி காலரியில் நுழைவதைப் பார்த்தவுடன் அந்தக் கூட்டத்திலிருந்து பிரிந்து வந்து பத்மினியை வரவேற்று ("நேற்றைக்கே வருவாயென்று நினைத்தேன்"), விசுவத்தையும் வரவேற்று ("நைஸ் ஆஃப் யூ ஹாவ் கம்") தன்னுடன் பேசிக் கொண்டிருந்தவர்கள் பக்கம் ஜாடை காண்பித்து அவர்களை அனுப்பிவிட்டு வருவதாகவும், அதுவரை அவளை மன்னிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டாள்! விசுவமும் பத்மினியும்தான் அவளுக்கு அதிகம் பிரியமானவர்கள். ஆனால் என்ன செய்வது, துரதிர்ஷ்டவசமாக நான் வேறு சிலரிடம் அகப்பட்டுக் காண்டிருக் கிறேன் என்று உணர்த்த முயலும் பாவனை ("க்ரிட்டிக்ஸ் யூ

நோ?" என்று தோள் குலுக்கல்)...ஒரு வேளை அவளுடைய பாவனையிலிருந்த ஒரு சாதுரியம், போலி எளிமையும் அந்த முதல் கணத்திலேயே அவனுள் எதிர்ப்பலைகளை எழுப்பியிருக்க லாம் – குழந்தைகளை விட்டுவிட்டு வெளியே செல்ல முயலும்போது பெரியவர்கள் அணிவது போன்ற பாவனை; அவளுடைய கையெழுத்து அவனுள் உருவாக்கியிருந்த ஒரு தோற்றத்துடன் ஒட்டாத பாவனை...

அவள் அந்த விமரிசகர்களை அனுப்பிவிட்டு வருவதற்கு அரைமணி நேரத்துக்கு மேலாயிற்று. அவனுக்கு எரிச்சல் மூட்டிய அரைமணி நேரம். பத்மினியின் நிமித்தம், அந்த ஓவியங்களில் தன்னை ஈடுபடுத்திக்கொள்ளும் நிர்ப்பந்தம், இந்த ஈடுபாட்டில் வெற்றி பெறமுடியாததால் ஏற்பட்ட சோர்வு, இந்தச் சோர்வைப் பத்மினியிடமிருந்து மறைத்துக்கொண்டுதான் அந்தக் காலரியில் கழிக்கும் கணங்களை மிக ரசிப்பதாக பாசாங்கு செய்ய வேண்டிய நிலைமை. பிற்பாடு சுதா அவனிடம் அந்த ஓவியங்களை விளக்க முற்பட்டபோது அவளுக்காகக் காத்திருக்கையில் அவன் தன் மனத்தில் சேமித்திருந்த எரிச்சல் வெடித்துக் கிளம்பியிருக்க வேண்டும். அவளைத் தட்டிக் கழிப்பதற்கான காரணங்களை அவளுடைய தோற்றத்திலும், அசைவுகளிலும் குரலின் தொனியிலும், தோரணைகளிலும் தேடியவாறு அவளுடைய வார்த்தைகளின் பெரும் பகுதியை அவன் தவறவிட்டிருக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட கணத்தில் அவள் அவனுள் எழுப்பிய எண்ணங்களிலும் உருவகங்களிலும் ஆழ்ந்து அதற்கடுத்த சில கணங்களில் எதிரே நின்றிருந்தவளைக் கிரகிக்க மறந்து அந்த முந்தைய கணத்தின் எண்ணங்கள், உருவகங்களின் தொடர்ச்சியில் சிக்கிக்கொண்டு அவற்றின் ஒரு பரிணாம கட்டத்தில் அவன் தன்னையறியாமல் சிரித்திருக்க வேண்டும்.

அவன் சிரித்தவுடன் அவள் சட்டென்று பேச்சை நிறுத்தினாள், முகத்தில் திகைப்புடன், கேள்வியுடன்.

"ஐ ஆம் ஸாரி" என்றான் அவன்; தன் செய்கையை அவள் ஒரு அவமதிப்பாக எடுத்துக்கொள்ளக் கூடாதென்பதற்காக ஒரு கோமளித்தனமான (தன் இயல்பே அதுதான் என்பதுபோல) வேஷத்தை அவன் அவசரமாக அணிய வேண்டி வந்தது. "ஒரு கணத்துக்கு நான் கான்வஸ் போலவும், நீங்கள் சொற்களால் என் மீது வரையத் தொடங்கியிருப்பது போலவும் ஒரு உருவகம் என் மனத்தில் தோன்றியது; இந்தக் கான்வஸ்ஸின் விசேஷம் என்னவென்றால், நீங்கள் ஒரு இடத்தில் வரையத் தொடங்கி அடுத்த கட்டத்துக்குச் செல்வதற்குள் முதலில் வரைந்தது அழிந்து போகிறது" என்று விளக்கினான்.

அவள் சிரித்துவிட்டாள். "ஓ.கே. ஐ வில் ஸ்டாப்."

அதன் பிறகு அந்த மாலை நேரம் முழுவதும் கோமாளி வேடத்தில் அவன் ஸ்திரப்பட்டுவிட நேர்ந்தது. சுதாவின் சிரிப்பு அவனைக் கோமாளியாக்கியதா? அல்லது தன்னுடைய பொய்யான தோற்றத்தை

அவளுக்குக் காட்டுவதன் மூலம் அவன் அவளுக்குப் பழிப்புக் காட்ட நினைத்தானா? ஆழமும் நுட்பமும் மிக்கவனெனப் பெருமை கொண்டிருந்த அந்த நவீன ஓவியரை ஏமாற்றுவதில் ஒரு குழந்தைத்தனமான திருப்தி . . .

புதிய யுகத்தின் பெண்களைப் பற்றிச் சர்ச்சிக்கப்படும் அளவு, புதிய யுகத்து ஆண்களைப் பற்றிப் பேசப்படுவதில்லை, என்றான் அவன். ஆணின் புதிய பிம்பம் என்ன? பெண் கால்சராயணிந்து ஆண்களுக்கே உரித்தானதென்று கருதப்பட்டு வந்த பல துறைகளில் பிரவேசம்செய்துவிட்ட பிறகு, ஆண் சிதறத் தொடங்கியிருக்கும் தன் ஈகோவைக் காப்பாற்றிக்கொள்வது எப்படி? கால்சராயைத் திரஸ்கரிப்பதன் மூலமாகவா? நீளமாகத் தாடி வளர்ப்பதன் மூலமாகவா? பெண்களுக்குச் சொந்தமானதெனக் கருதப்பட்ட துறைகளில் புகுந்து அங்கு அவர்களைத் தோற்கடிப்பதன் மூலமாகவா? அம்மாவைவிட நன்றாக அப்பா சமைத்து, "அப்பா சமையல்தான் எனக்கு பிடிச்சிருக்கும்மா!" என்று குழந்தைகள் சொல்லும்படி செய்ய வேண்டும், வீட்டைப் புதிது புதிதாக அலங்கரிக்க வேண்டும், வண்ண வண்ணமாக உடுக்க வேண்டும், ஒப்பனை செய்துகொள்ள வேண்டும் . . .

அவன் இந்த ரீதியில் பேசிக்கொண்டு போனான். அவன் பேச்சு உண்மையிலேயே வேடிக்கையாக இருந்ததோ இல்லையோ? ஆனால் சுதா சிரித்தாள்; பத்மினி சிரித்தாள். தொடர்ந்து சிரித்துக் கொண்டேயிருந்தார்கள்.

காலரியிலிருந்து கிளம்பிய பிறகு, ஏனோ அந்தச் சிரிப்பு திடீரென்று அவிந்துவிட்டது. பேச்சும் ஒடுங்கிவிட்டது. மௌனமாகச் சாலையில் நடந்தார்கள். மௌனமாக டாக்ஸியில் பயணம் செய்தார்கள். வீட்டையடைந்து மௌனமாக உடைமாற்றிக் கொண்டார்கள், சாப்பிட்டார்கள்.

படுக்கையறையில் அவள் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டு பத்திரிகையொன்றைப் புரட்டத் தொடங்கினாள். அவன் தன் தீஸிஸ் சம்பந்தமான ஒரு புத்தகத்தைப் பிரித்து வைத்துக் கொண்டு எழுதுவதற்கான மன நிலையை உருவாக்கிக்கொள்ள முயன்றான். ஒரு அமெரிக்க ஆசிரியர் எழுதிய பருமனான புத்தகம். அந்த ஆசிரியரும் சிகரெட் குடிக்கும் மனைவியைப் பெற்றவராக இருக்கலாம், அல்லது அவரே சிகரெட் குடிப்பவராக இருக்கலாம் என்று அவன் நினைத்தான். நிகோடின் புகையினால் சூழப்பட்டவாறு, அசுத்தம் நிரம்பிவரும் காற்று மண்டலத்தைப் பற்றி உணர்ச்சியுடன் எழுதியிருப்பார் . . . பத்மினியின் சிகரெட் புகையையும் பொல்யூஷனின் குறியீடாக மதித்து, அவன் தன்னுடைய தீஸிஸ் எழுதுவதற்குத் தேவையான கோபத்தை அளித்துக் கொள்ளலாம். அல்லது, ஒரு ஆரோக்கியமான இந்தியப் பெண் பிம்பம் அசுத்தமடைந்து வருவதன் குறியீடாகவும் அந்தச் சிகரெட் பிடித்தலைக்

கருதலாமோ?

"என்ன யோசிக்கிறீர்கள்?" என்று பத்மினி கேட்டாள்.

"என் தீஸிஸ் பற்றி."

"ஒரு செளகரியமான சாக்கு."

"நீ என்ன நினைக்கிறாய்? நான் எதைப் பற்றி யோசிக்கிறேன்?"

அவள் உதட்டைப் பிதுக்கினாள். "எதைப் பற்றியோ?"

"உன்னைப் பற்றியா?"

"ஊஹூம்."

"ஒரு சினிமா நட்சத்திரம் அல்லது அரசியல் தலைவர் பற்றியா?"

"அவர்கள் உங்களை ஆழமாகப் பாதிப்பவர்கள் அல்ல."

"அப்பா, அம்மா, தம்பிகள்?"

"இருக்கலாம், இல்லாமலும் இருக்கலாம்."

"உன் பாட்டி பற்றியா?"

"நீங்கள் அவளைப் பார்த்ததில்லை."

அவன் ஒரு கணம் பேசாமலிருந்தான். அவள் மீண்டும் பத்திரிகையின் பக்கங்களைப் புரட்டத் தொடங்கினாள்.

"உன் சிநேகிதி சுதா பற்றியா?"

"..."

"ஐ ஸீ" என்றான் அவன். "ஸோ – அவளைப் பற்றித்தான் நான் யோசிக்கிறேனா?"

"எனக்குத் தெரியாது."

"நல்ல பெண் – நன்றாகச் சிரிக்கிறாள் இல்லை? எனக்கு இப்போது என் நகைச்சுவையில் அபார நம்பிக்கை வந்திருக்கிறது..."

"அவளை அவ்வளவு முட்டாளாக நினைக்க வேண்டாம்."

"உம்?"

அவள் சிறிதாகிவிட்டிருந்த சிகரெட் துணுக்கை சாம்பல் கிண்ணத்தில் நசுக்கி அணைத்தாள். "வேஷம் போடுவதற்கு உங்களுக்கு மட்டும்தான் தெரியுமென்று ஏன் நினைக்கிறீர்கள்?"

அவன் மெளனமானான். திடீரென்று அந்த மாலை நேரம் ஒரு புதிய கோணத்தில் தோற்றமளித்தது. சுதாவை அவன் முட்டாளாக்கினானா, சுதா அவனை முட்டாளாக்கினாளா?

பத்மினி தொடர்ந்து பேசினாள். அவன் ஒரு கோமாளி போல நடந்துகொண்டிருக்க வேண்டாமென்றாள். அவனுக்கும் கோபம் வந்தது. இனி இது போன்ற இடங்களுக்குத் தன்னை அழைத்துச் செல்ல வேண்டாம் என்றான். யாருடைய தவறு என்பதைப் பற்றி

வழக்கம்போல அவர்களுக்குள் முடிவில்லாத விவாதம் நடந்தது. அவள் படுத்துக்கொண்டாள். அவனும், வேலை செய்வதற்கு வேண்டிய மன அமைதியின்றி, படுத்துக்கொள்ள நேர்ந்தது.

படுத்தவுடன், தவிர்க்க முடியாமல், சுதாவின் நினைவு வந்தது. காலரியில் கழிந்த கணங்களை அணுவணுவாக அவன் மனம் பரிசீலனை செய்தது. அவர்கள் சென்றவுடன் அவள் வரவேற்றது. பிறகு காக்க வைத்தது. (ஒரு வேளை அவள் அவனால் கவரப் பட்டிருக்கலாமோ? அதன் காரணமாகச் சந்திப்பை ஒத்திப்போட முயன்றிருக்கலாம், அவளுக்கு அவள் மேலேயே ஏற்பட்ட பயம் காரணமாக ... எனக்கும் என் மேலேயே பயம் இருந்ததா? அதனால் தான் என்னை இயல்பாக வெளிப்படுத்திக் கொள்ளாமலிருந்தேனா? வேஷம் போட்டது யார்? நானா அவளா, இருவருமேயா?)

இன்று ஞாயிற்றுக் கிழமை. அவன் மிருகக் காட்சி சாலைக்குப் போக வேண்டுமென்றவுடன் பத்மினி, வியக்கத்தக்க விதத்தில் உடனே ஒத்துக்கொண்டாள். நேற்று சுதா சிரிக்காமலிருந்தால் இன்று இவள் ஒத்துக்கொண்டிருப்பாளோ, என்னவோ?

இன்று காலை அவனுடைய தீஸிஸ் பற்றிக்கூட, வெகு நாட்களுக்குப் பிறகு பத்மினி அக்கறையுடன் விசாரித்தாள்; நேற்று, கோமாளியல்லாத ஒரு கணத்தில், சுதாவுக்கு தன் தீஸிஸ் பற்றி அவன் கூறிக் கொண்டிருந்தான். அதன் எதிரொலியாக இருக்கலாமோ இந்த விசாரணை?

இப்போது மிருகக்காட்சி சாலையில், புல்வெளியில், அவர்கள் அமர்ந்திருந்தார்கள். அவளுடைய சிகரெட் முடிந்துவிட்டது. துணுக்கைத் தரையில் தேய்த்து அணைத்தாள். "என்ன முடிவு செய்தாய்?" என்றான் அவன்.

"என்ன?"

"நீ சிகரெட் துணுக்கைத் தேய்த்தது ஏதோ நிச்சயமான முடிவுக்கு வந்தது போலிருந்தது."

"என்னுடைய ஒவ்வொரு சிறு அசைவைப் பற்றியும் உங்களுக்குத் தெரியுமென்று நினைக்கிறீர்கள், இல்லையா?"

"நீ என்னைப்பற்றி அப்படி நினைப்பது போலவா?"

"..."

"உண்மையில், நமக்கே கூட நம்மைப் பற்றி முழுதும் தெரியாது பத்மினி. நம்மால் முயற்சிதான் செய்ய முடியும். அந்த முயற்சி நாணயமானதாக இருக்கவேண்டுமென்றுதான் நான் சொல்லு கிறேன்."

"உண்மை."

"நான் உனக்கு ஸீரியஸ்ஸானவனாகவோ அல்லது கோமாளி யாகவோ தோன்றும்போது அது என் மொத்த உருவமல்ல, உன்னைச்

சார்ந்து ஏற்படுகிற என்னுடைய ஒரு வெளிப்பாடு என்பதை நீ புரிந்துகொள்ள வேண்டும்."

"இந்த விவாதம் நேற்றே முடிந்துவிட்டதென்று நான் நினைத்தேன்."

"சற்று நேரம் முன்பு, நீ மறுபடி தொடங்கினாய்."

"ஸாரி, ஸாரி, ஸாரி. தோப்புகரணம் வேண்டுமானால் போடட்டுமா?"

"இந்த விவாதம் நமக்கு நன்மை பயக்குமென்று நினைக்கிறேன். இதை இறுதிவரையில் கொண்டுசெல்வது நல்லது."

அவள் தோள்களைக் குலுக்கிக்கொண்டாள். "தங்கள் இஷ்டம் போல."

"வெளிப்பாடுகளைப் பற்றிச் சொல்லிக்கொண்டிருந்தேன் –ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் உன்னுடைய இயல்பு, தோற்றம், நுண்ணிய எதிர்பார்ப்பு அலைகள் - இவற்றைப் பொறுத்துத்தான் என் வெளிப்பாடு அமைகிறது, கிட்டத்தட்ட அவற்றின் பிரதி பலிப்பாகவே."

"அதாவது என்னுடைய இயல்பு, தோற்றம், எதிர்பார்ப்பு என நீங்கள் நினைப்பவற்றின் பிரதிபலிப்பாக."

"உம்; அப்படித்தான்."

"உங்கள் நினைப்பு தவறாக இருந்தால்?"

"இருக்கலாம், நிச்சயமாக. என் வெளிப்பாடுகளின் அடிப்படைகளை நீ சோதித்தவாறே இருக்க வேண்டும், அவை என்னுடைய ஆழங் களிலிருந்து பீறிட்டு வருபவையா அல்லது அசட்டையாக அணியப் பட்டவையா என்று. நீ என் ஆழங்களைத் தொடுவதில் எந்த அளவு வெற்றிபெறுகிறாய் என்பதைப் பொறுத்து இருக்கிறது, இது; நான் யாரென்று கண்டுபிடிப்பதில் உனக்கிருக்கும் அக்கறையைப் பொறுத்திருக்கிறது."

"அக்கறை இரண்டு பட்சத்திலும் இருக்க வேண்டுமல்லவா!"

"சந்தேகமில்லாமல்."

"உங்களுக்கிருக்கிறதா?"

"ஆமாம் அல்லது இல்லை என்று நான் சொல்வதால் ஏதாவது வித்தியாசம் வரப் போகிறதா? அதையும் நீயாகவேதான் உணர வேண்டும், கண்டுபிடிக்க வேண்டும். மீண்டும், மற்றக் கண்டுபிடிப்பு களைப்போல, இந்தக் கண்டுபிடிப்பும் சரியாகவுமிருக்கலாம், தவறாகவுமிருக்கலாம்."

"ஒரு பிரம்மாண்டமான பொறுப்பு."

"ஆம்; அவசர முடிவுகளில் சிக்கிக்கொள்ளாமலிருந்தால்தான் இந்தப் பொறுப்பை நிறைவேற்ற முடியும். நீ ஒரு ஸீரியஸ்ஸான வேஷத்தில் என்னை ஸ்திரப்படுத்திவிட்டால், நான் இந்த ஸ்திரப் படுத்தலை எதிர்த்து திமிறக்கூடும். என் வேறு அம்சங்களை வெளிப்

படுத்த வடிகால்களைத் தேடி அலையக்கூடும். என்னுள் இருக்கும் கோமாளியை வெளிப்படுத்தும் ஒருத்தியுடன் நான் சிறைபடக்கூடும், மென்மையானதொரு வேடத்தில் நீ என்னை ஸ்திரப்படுத்தினால், என்னை முரடனாக்கும் ஒருத்தி என்னைக் கவர்ந்து செல்லலாம்."

"யார் இந்த ஒருத்தி, அல்லது ஒருத்திகள்?"

"யாராக வேண்டுமானாலும் இருக்கலாம் – சுதாவாகக்கூட இருக்கலாம்."

"சம்பாஷணை அபாயகரமான திசைகளில் பிரவேசித்துக் கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது."

"நீயும் ஏதாவது பெயர்களைப் பிரஸ்தாபிக்கலாம், எனக்கு ஆட்சேபணையில்லை. அந்த மருந்துக் கம்பெனிப் பிரதிநிதி; அல்லது ஆஃபீசில் உன் பக்கத்து நாற்காலியில் உட்காரும் இளைஞன் . . . சாட்டர்ஜி, இல்லையா, அவன் பெயர்?"

"என்னைப் பற்றிய உங்கள் அபிப்பிராயத்தை வெளிப்படுத்தியதற்கு நன்றி."

"இல்லை பத்மினி – ப்ளீஸ், அப்படி எடுத்துக்கொள்ளாதே. ஒரு உதாரணத்துக்குச் சொன்னேன்."

"ஆம்! உங்கள் மனப்போக்குக்கு உதாரணங்கள்."

"உன் நவீன பாணி உடைகளும், சிகரெட் பிடித்தலும், ஆங்கிலப் பேச்சும், என் மனத்தில் எழுப்பாத அளவு அழகிய சலனங்களை வேறு இளைஞர்கள் மனத்தில் எழுப்பக் கூடும். நான் உன்னை அப்யசிக்கவிடாத அம்சங்களை, பிம்பங்களை, அவர்கள் மூலம் வளர்த்துக்கொள்ளும் விடுதலை வேட்கையும் திமிறலையும் நீ பெற்று, அவர்கள் மூலம் உன்னைப் புதுமையாகக் கண்டுபிடித்துக் கொள்ள விரும்பலாம்."

"நான் சிகரெட் பிடிப்பதும், ஆங்கிலம் பேசுவதும் உங்களுக்குப் பிடிக்கவில்லையென்று இதற்குப் பொருளா?"

"அப்படியில்லை; ஆனால் அவற்றை உனக்கு இன்றியமையாத ஒரு பரிமாணமாக, அம்சமாக, நான் கருதவில்லை. அவற்றுக்காக நான் உன்னைத் தேர்ந்தெடுக்கவில்லை என்று நம்ப ஆசைப்படுகிறேன்."

"சில சமயங்களில் நீ என் பாட்டியுடன் மகிழ்ச்சியாயிருந்திருப்பாயென்று எனக்கும் தோன்றுவதுண்டு."

"நன்றி – நான் என்னையும் சரி, உன்னையும் சரி, ஏமாற்றிக் கொள்ள விரும்பவில்லை."

"நான் ஏமாற்றுகிறேனா, அப்படி?"

"நம்மையுமறியாமல் இந்த ஏமாற்றுதல் ஒவ்வொரு கணமும் நிகழ்ந்துகொண்டிருக்கலாம், என்பதே பிரச்னை. திடீரென்று ஒரு நாள் இதை உணர்கிறோம், ஏமாற்றுகளின் அடிப்படையில் நம்

உறவை உருவாக்கினோம் என்பதை."

"உணர்ந்தால்?"

"அந்தக் கணத்திலிருந்து ஒருவரையொருவர் ஏமாற்றுவதைத் தொடராமலிருப்பதே நாம் ஒருவருக்கொருவர் செய்யும் நியாயம்."

"நீ என்னதான் சொல்ல விரும்புகிறாய்?"

"நாம் மனமொப்பிச் சேர்ந்து வாழத் தொடங்கினோம். இதை ஒரு தடைப்படுத்தும் விலங்காக நீயோ நானோ உணர வேண்டாம்."

"விஸ்கான்ஸின் யுனிவர்ஸிடி!"

"ஆமாம்... ஒவ்வொருவரிடத்தும் ஏதோ சில அம்சங்கள் நம்மைப் பரஸ்பரம் ஈர்த்தன. மூக்கின் வடிவம், சிரிப்பின் தோரணை, சில சைகைகள், ஒரு பார்வை, தமிழ்ப் படங்களின் மேல் வெறுப்பு, இப்படி ஏதோ சில அம்சங்கள். இவை நம்மைப் பூரணமாக வெளிப் படுத்திய அம்சங்கள்தாமா? ஒருவேளை அந்தச் சமயத்தில் நாம் ஒருவருக்காக மற்றவர் ஒரு வேஷத்தை அணிந்திருந்தோ மானால்? பௌதிகத் தேவையின் பரபரப்பு, இப்படி வேஷமணிய வைக்கிறது; மயக்கத்தை உருவாக்குகிறது. மயக்கம் தீர்ந்த பிறகு, நாம் ஒருவரில் மற்றவர் ரசித்த அம்சங்கள் உண்மையில் அவரவரின் அடிப்படையான, ஆழமான அம்சங்களல்லவென்று நாம் உணரலாம்."

"இதற்கு நாம் என்ன செய்ய முடியும்!"

"அது எனக்குத் தெரியாது... ஆனால் குறைந்த பட்சம் இந்தப் பிரச்னையை நாம் உணர வேண்டும். நம் அம்சங்கள் எல்லா வற்றையுமே ஒரே ஆண் அல்லது ஒரே பெண் விகசிக்கச் செய்வது சாத்தியமில்லை என்பதும் உண்மை; பெரும்பாலான அம்சங்களை நிறைவு பெறச் செய்யும் ஒருவரிடம் சமரசம் செய்து கொள்ள வேண்டியிருக்கிறது."

"நாம் முக்கியமானதாகக் கருதும் அம்சங்கள், வயதாக வயதாக மாறுதலடையக் கூடுமல்லவா?"

"அதுவும் இன்னொரு பிரச்னை."

அவர்கள் எழுந்து நடக்கத் தொடங்கினார்கள்.

"எதற்காக என்னை அந்த ஓவியக் கண்காட்சிக்கு அழைத்துச் சென்றாய்?" என்று அவன் கேட்டான்.

"எதற்காக என்றால்?"

"பல காரணங்கள் இருக்கக்கூடும். தியேட்டர்களுக்கும் ஆர்ட் காலரிகளுக்கும் சென்றவாறிருக்கும் என் அம்மாவுக்குப் போட்டியாக; உன் வீட்டிலிருப்பவர்களைக் கலாருசியற்றவர் களென்று நான் கருதுவதால், உன்னை அவர்களிடமிருந்து வேறு பட்டவளாகக் காட்டிக் கொள்வதற்காக! உன் கல்லூரி சிநேகித மண்டலத்தின் மட்டத்தை எனக்கு உணர்த்துவதற்காக..."

"நீ இன்று மிக அதிகம் பேசுகிறாய்!"

“நம் நோக்கங்களைப் பற்றி நாம் தெளிவுடன் இருந்தால் நல்லது.” அவள் அவன் தோளைச் சுற்றிக் கை போட்டுக்கொண்டாள். “நாம் வேறெதைப் பற்றியாவது பேசுவோம் என்ன?”

“எதைப் பற்றி?”

“உனக்குப் பிடித்த எதைப் பற்றியாவது.”

“எகாலஜி?”

“ஷ்யூர்.”

“ரெனி டு போ என்ற ஃபிரெஞ்சு அறிஞர் சொல்லியிருக்கிறார், மிருகக்காட்சி சாலையில் மிருகங்களைக் குடிவைக்கும்போது நாம் எடுத்துக்கொள்ளும் சிரத்தைகூட மனிதர்களை நகரங்களில் குடிவைக்கும்போது எடுத்துக் கொள்வதில்லையென்று. வெவ்வேறு மிருகங்களின் இயல்பான வசிக்குமிடத்துக்கேற்றவாறு இங்கு தனித்தனிப் பாணிகளில் ஒவ்வொரு மிருகத்துக்கும் இடம் அமைத்திருக்கிறார்கள். ஆனால் நம் நகரங்களில் வெவ்வேறு பூர்வீகங்கள், மதக் கலாச்சாரச் சூழ்நிலைகள் ஆகியவற்றைச் சேர்ந்த மனிதர்கள் ஒரேவிதமான வீடுகளில் வளர்கிறார்கள், ஒரே விதமான பள்ளிகளில் ஒரே விதமான கல்வியைக் கற்கிறார்கள், ஒரேவிதமான வேலைகளில் திணிக்கப்படுகிறார்கள், ஒரே விதமான பிம்பங்களை அணிகிறார்கள், யாசிக்கிறார்கள்.”

“ப்யூடிஃபுல்!”

“இதனால் வெவ்வேறு மனிதர்களிடமுள்ள வெவ்வேறு அம்சங்கள் பூர்ணமாக விகசிப்பதற்கு ஏற்ற சூழ்நிலை இல்லை. நம்முடைய சில அம்சங்கள் நிரந்தரமாக ஒடுக்கப்பட்டுவிடலாம். காடுகள் அழிந்து வருகின்றன. நகரங்களில் மரங்கள் குறைந்து வருகின்றன. தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுப் பொருள்களினால் காற்றிலும், நீரிலும் அசுத்தம் அதிகரித்து வருகிறது. நம் இயல்புகளும் கூட மாறிவருகின்றன. மதிப்பீடுகள் மாறி வருகின்றன. இயற்கை புனிதமானதில்லை. மனிதன் புனிதமானவனில்லை. எதை வேண்டுமானாலும் எதற்கு வேண்டுமானாலும் செலவழிக்கிறோம். மனிதனால் மாற்றப்பட்டு வரும் சூழ்நிலை இறுதியில் அவனை எப்படிப் பாதிக்கப்போகிறது? நிலத்துக்குள் உள்ள தாதுப் பொருள்கள், எண்ணெய் ஆகியவற்றைத் துரிதமாகத் தோண்டியெடுத்துச் செலவழித்து வருவதால் அறுபது எழுபது வருடங்களுக்குப் பிறகு இந்தச் சேமிப்புகள் வறண்டுபோய் விடுமென்கிறார்கள். மனிதனுடைய இயல்புகள் கூட வறண்டு வருவதாக நான் உணர்கிறேன். நம்முடைய பல அழகிய அம்சங்கள் அழிந்து வருகின்றன. சரியாகப் பயன்படுத்தப் படாமல், அப்யசிக்கப் படாமல். சில சமயங்களில் இவ்வளவையும் இடித்தெறிந்துவிட்டு மறுபடி தொடங்கவேண்டும் போலிருக்கிறது.”

அவள் கைதட்டினாள். “புரட்சி!”

“ஆம். அது சாத்தியந்தான். ஒடுக்கப்பட்ட ஸெக்ஸ் போல,

ஒடுக்கப்பட்ட இயற்கைத் தாகம் – யந்திர சமுதாய அமைப்பில் ஒடுக்கப்பட்டுள்ள வேறு பல அடிப்படைத் தாகங்கள் – திடீரென்று பீறிட்டு வெடிக்கலாமென நிபுணர்கள் கூறுகிறார்கள்."

"உன் ஒடுக்கப்பட்டுள்ள தாகமென்ன விசுவம்?"

"நாணத்துடன் சிரிக்கும் ஒரு பழைய பெண் பிம்பம்."

"போங்கோன்னா!" என்று அவள் அபிநயித்தாள். அவன் அதை ரசித்துச் சிரித்தான்.

# 21

**பொ**த்தென்று ஏதோ ஒன்று மார்பின்மேல் வந்து விழுந்தது. மரத்தடியில், கட்டிலில் படுத்தவாறு தூக்கத்தில் ஆழ்ந்திருந்த செல்லப்பா திடுக்கிட்டுக் கண் விழித்தான்.

ஒரு அணிற்பிள்ளை.

மரத்தின் மேலிருந்து சரசரவென்று இன்னொரு அணில் கீழிறங்கி வந்தது. முதல் அணிலைத் துரத்திக்கொண்டு புல் தரையின்மீது ஓடிச் சென்றது. மரத்தின் மேல் இதேபோல அவை ஒன்றையொன்று துரத்தி ஓடி விளையாடிக்கொண்டிருந்தபோது ஒன்று தவறிப் போய் அவன்மேல் விழுந்திருக்க வேண்டும். ஊகம்தான். அது விழுந்ததை உணர்ந்து அவன் கண் விழிப்பதற்குள்தான் அது புல் தரையில் குதித்து ஓடத் தொடங்கிவிட்டதே!

எவ்வளவு சுருக்கு, எவ்வளவு வேகம்! சிந்தனையின் பளுவற்ற வேகம், தயக்கமோ சந்தேகமோ அற்ற துரிதமான இயக்கம். அவ்வப்போது ஏற்படும் நிர்ப்பந்தங்களையும், தேவைகளையும் அனுசரித்து அது நிற்கிறது. உட்காருகிறது, அல்லது ஓடுகிறது. பசித்தால் சாப்பிடுகிறது. சாப்பிட்டுவிட்டு ஆண் அணில் பெண் அணிலையோ, பெண் அணில் ஆண் அணிலையோ துரத்துகிறது; எதுவென்று நிச்சயமாகத் தெரியவில்லை. அவன்மேல் வந்து விழுந்தது ஆணா, பெண்ணா?

தெரியவில்லை.

ஆனால் அவற்றுக்குத் தெரியும். அது மட்டும்தான் தெரியும். ஒருவேளை வேறு சிலதும் தெரிந்திருக்கலாம். எதைத் தின்ன வேண்டும், எதைத் தின்னக்கூடாது. எங்கே போக வேண்டும், எங்கே போகக் கூடாது. எப்போது தூங்க வேண்டும், யாருடன் தூங்க வேண்டும். நண்பன் யார், எதிரி யார். இப்படி ரொம்ப அடிப்படையான,

ரொம்ப முக்கியமான விஷயங்கள் மட்டுமே தெரியும்; இந்த அடிப்படையான விஷயங்களில் தனக்கும் தன்னைப் போன்ற பல மனிதர்களுக்கும் பெரும்பாலான தருணங்களில் தெளிவில்லாமல் இருப்பதை நினைக்கும்போது, அணிலைவிட அதிகமான அளவு அறிவு பெற்றிருப்பதாகத்தான் பெருமைப்பட முடியாதென்றே செல்லப்பாவுக்குத் தோன்றியது.

ஏராளமான அறிவு மூட்டையை ஒரு தோளிலும், இன்னொரு தோளில் சட்ட திட்டங்களையும், சடங்குகளையும் சுமந்துகொண்டு எதிலும் நிச்சயமோ, ஆறுதலோ இல்லாமல் சங்கடப்படும் மனிதனை விட, மூன்று நான்கு விஷயங்களை மட்டும் தெரிந்துகொண்டு அவற்றில் தெளிவுடனும், நிச்சயத்துடனும் இருக்கும் அணில்கள் எவ்வளவோ மேலானவை. எவ்வளவு குழப்பமில்லாத, சுலபமான வாழ்க்கை அவற்றினுடையது! மாக்னா கார்டா எந்த வருடம் கையெழுத்தானதென்று அவை தெரிந்து கொள்ள வேண்டியதில்லை. கால் டஜன் சார்லஸ்கள், அரை டஜன் ஹென்ரிகள் ஆகியோரின் ஆட்சிக் காலங்களின் சிறப்புகளையும், சீர்கேடுகளையும் பற்றி மண்டையை உடைத்துக்கொள்ள வேண்டியதில்லை. ஸிந்து நதி நாகரிகத்தின் வேர்களைப் பற்றியும், ஆரியர்களின் பூர்வோத் திரத்தைப் பற்றியும், விஜய நகர, ராஜபுதன, முகலாய சாம்ராஜ்யங் களின் எழுச்சியையும் வீழ்ச்சியையும் பற்றி ஆராய்ச்சிகள் நடத்த வேண்டியதில்லை. நூற்றியொன்று அரசர்களின் பெயர்களையும் யுத்தங்கள் நடந்த தேதியையும் நினைவு வைத்துக்கொள்ள வேண்டிய தில்லை. ஓ, அணில்களே! நீங்கள் எவ்வளவு அதிர்ஷ்டசாலிகள், எவ்வளவு உயர்ந்தவர்கள்! நான் அதிர்ஷ்டமற்றவன். பாவம் செய்தவன். அதனால்தான் மனிதனாகப் பிறந்து பரீட்சைக்குப் படித்துக் கொண்டிருக்கிறேன். எந்தக் கேள்விகள் வருமென்று ஊகிக்க முயன்று, அந்தக் கேள்விகளுக்கு என்னைத் தயார் செய்துகொள்கிறேன். ஒரு வாழ்க்கை முறைக்கு என்னைத் தயார் செய்துகொள்கிறேன். இதுபோன்ற பரீட்சைகளை, அவற்றில் ஒருவன் பெறும் மதிப்பெண்களை அடிப்படையாகக் கொண்ட வாழ்க்கை முறை, பரீட்சை ஹாலில் உட்கார்ந்து பத்துக் கேள்விகளில் ஏதாவது ஐந்துக்கு (அல்லது ஆறுக்கு) சரியான விடைகளை எழுத வேண்டும். அதிகபட்சமான மதிப்பெண்கள் பெற வேண்டும். என் பேனா மக்கர் செய்யாமல், மசி கொட்டாமல் சரியாக எழுத வேண்டும், வேகமாக எழுத வேண்டும். எனக்கு எல்லாத் தேதிகளும், பெயர்களும் நினைவிருக்க வேண்டும். எனக்கு அன்று தலையோ வயிறோ முதுகோ வலிக்காமலிருக்க வேண்டும். நான் உட்கார்ந்திருக்கும் மேஜையும் நாற்காலியும் லொடலொடவென்று ஆடாமலிருக்க வேண்டும். எங்கேயாவது ஆணி நீட்டிக் கொண்டிராமல் இருக்க வேண்டும். பதட்டத்தில் கை நடுங்காமலிருக்க வேண்டும். வியர்க்காமலிருக்க வேண்டும். பஸ்ஸில் கம்பியைப் பிடித்து

தொங்கிக்கொண்டுவர நேர்ந்து அப்போது எங்கேயாவது சுளுக்கிக் கொள்ளாமலிருக்க வேண்டும். அப்புறம் என்னால் எழுத முடியாது. இன்னும் இரண்டு கேள்விகள் மிச்சமிருக்கும்போதே விடைத்தாளைப் பிடுங்கிக்கொண்டு போய்விடுவார்கள். மூன்றே மணி நேரம்தான். அணிலே, எனக்குக் கிடைக்கப்போவது மூன்றே மணி நேரந்தான்.

அப்புறம் எனக்கு அங்கே பரீட்சை ஹாலில் உட்கார்ந்திருக்கும் போது பெண்களின் நினைவு வராமலிருக்க வேண்டும். மலர்களின் நினைவு வராமலிருக்க வேண்டும். வானத்தின், பறவைகளின் நினைவு வராமலிருக்க வேண்டும். உன் நினைவு வராமலிருக்க வேண்டும். ஆம், அணிலே. நீ எங்கேயாவது பரீட்சை ஹால் பக்கம் வந்து விடாதே. இது என்னுடைய அன்பான, பணிவான, வேண்டுகோள். உன்னைப் பார்த்தால் அப்புறம் எனக்குப் பரீட்சை யெழுதத் தோன்றாது. போட்டியிடத் தோன்றாது. நான் மிக அசட்டுத்தனமாக உணரத் தொடங்குவேன். எனக்கு என் மேலேயே சிரிப்பு வரத்தொடங்கும். அங்கே என்னைச் சுற்றிலும் உட்கார்ந்து பரீட்சை எழுதிக்கொண்டிருக்கும் மற்ற மாணவர்கள் மீது சிரிப்பு வரத் தொடங்கும். நாங்கள் உட்காந்திருக்கும் வரிசைகளுக்கிடையில் அங்குமிங்குமாக உலவிக்கொண்டிருக்கும் கண்காணிப்பாளர்கள் மீது சிரிப்பு வரத் தொடங்கும். அப்புறம் என்ன ஆகுமோ, எனக்கே தெரியாது. நான் அங்கேயே உரக்கச் சிரிக்கத் தொடங்கலாம். மற்ற மாணவர்கள் முதுகில் தட்டி அவர்களை எழுப்பி, அவர்களுடைய விடைத்தாள்களை பிடுங்கியெறிந்து, அவர்களுடன் கைகோர்த்துக்கொண்டு கண்காணிப்பாளர்களைச் சுற்றிச் சுற்றி நடனமாட நான் முயற்சிக்கலாம். அல்லது குபீரென்று என் இருக்கையைவிட்டு எழுந்து, பரீட்சை ஹாலைவிட்டு வெளியே வந்து, நான் திறந்தவெளியை நோக்கி ஓடத் தொடங்கலாம். பரீட்சை ஹால்கள், வகுப்புகள், மற்றும் மனிதனால் நிர்மாணிக்கப்பட்ட வேறு எந்தவிதமான கட்டிடமுமே இல்லாத திறந்தவெளியை நோக்கி. அங்கு நீங்கள் மட்டுந்தான் இருப்பீர்கள். மரங்கள் இருக்கும். புல்வெளி இருக்கும். ஆகாயம் இருக்கும். நான் அங்கே சென்று என் கால்களை நீட்டிப் படுத்துக்கொள்வேன். பிறகு யார் என்ன சொன்னாலும் எழுந்து வரமாட்டேன். உங்களுடனேயே இருப்பேன். குழப்பமில்லாமல் இருப்பேன். பரீட்சை, வேலை, சம்பளம், எஜமானன், ஊழியன் என்ற குழப்பங்கள். அப்பா, அம்மா, அண்ணா, தம்பி, மன்னி, மனைவி என்ற குழப்பங்கள்.

அவன் கட்டிலில் எழுந்து உட்கார்ந்தான். கீழே புல்தரையில் அவனுடைய புத்தகங்கள் கிடந்தன. உலர்ந்த இலைகள் கிடந்தன. பழைய இலைகள் உதிர்ந்து புதிய இலைகள் துளிர்க்கின்றன. ஒரு நாள் முடிந்து இன்னொரு நாள் பிறக்கிறது. இன்னும் இரண்டு வாரங்கள்தான் இருந்தன, பரீட்சை தொடங்குவதற்கு. படிக்க வேண்டியது நிறையப் பாக்கியிருந்தது. அவன் படித்து முடித்தாலும்

முடிக்காவிட்டாலும் அந்த இரண்டு வாரங்களும் கழிந்துவிடும், பரீட்சை தொடங்கிவிடும். கேள்வித்தாள்களைப் பொறுத்து, பரீட்சை ஹாலில் அவன் எழுதுவதைப் பொறுத்து, அவன் பாஸாவான், அல்லது பெயிலாவான்.

பாஸ் அல்லது பெயில்.

இரண்டுக்கும் என்ன வித்தியாசம்? பாஸான பிறகு அவன் பல் தேய்ப்பான், லட்ரின் போவான், குளிப்பான், சாப்பிடுவான், உடைகளுடுப்பான், வெளியே செல்வான். அல்லது வீட்டில் தூங்குவான். பெயிலானாலும் அதையேதான் செய்வான். பாஸானால் வேலை கிடைக்கும். பெயிலானால் கிடைக்காது.

கிடைக்கவே கிடைக்காதா?

ஒருவேளை கிடைக்கலாம். ஆனால் நல்ல வேலையாகக் கிடைக்குமோ என்னவோ? சாந்தாவைப் போன்ற பெண்களுக்கு அவனை வசீகரமானவனாகத் தோன்றச் செய்யும் வேலை.

அல்லது பத்மினியைப் போன்ற பெண்களுக்கு.

இல்லையில்லை, அவளுக்கு வேலையில் இல்லாதவர்களையும் பிடிக்கிறது. அவளுக்கு விசுவத்தைப் பிடிக்கிறது. ஆனால் விசுவம் எல்லாப் பரீட்சைகளையும் ஒழுங்காகப் பாஸ் செய்தவன் என்பதும் உண்மை.

செல்லப்பா பள்ளிக்கூடத்தில் இருந்தவரையில் எல்லா வகுப்பு களிலும் சிரமமில்லாமல் பாஸ் செய்துவிட முடிந்தது. அவனுடைய அப்பா பள்ளிக்கூடத்தின் நிர்வாகக் கமிட்டி அங்கத்தினராக (சில வருடங்களில் செயலாளராக) இருந்தார். பள்ளி இறுதிப் பரீட்சையிலிருந்து அவன் பெயிலாவது ஆரம்பித்தது. அதில் இரண்டு தடவைகள் பெயில். பிறகு கல்லூரியில், இதுவரை நான்கு தடவைகள்.

ஒரு வேளை அவனுடைய அப்பா விரும்பினால் எங்கேயாவது யாரையாவது பிடித்து அவனை பி. ஏ. யில் பாஸ் செய்ய வைத்துவிடலாம். ஒரு நல்ல டிவிஷன் கூட வாங்கிக் கொடுத்து விடலாம். அவரால் ஆகாதது எதுவுமேயில்லையென்றுதான் தோன்றியது. ஆனால் அவர் இதுவரையில் இந்த விஷயத்தில் சிரத்தை எடுத்துக்கொள்ளவில்லை. ஏன், அவனுக்கே இதில் சிரத்தையில்லையென்றுதான் தோன்றியது. பி. ஏ. பாஸ் செய்து விட்டால் ஒரு அத்தியாயம் முடிந்தது போலாகும். அவன் அந்த அத்தியாயத்தை முடிக்க விரும்பவில்லை போலிருந்தது. ஒரு பக்கத்தில் பரீட்சைகளுக்குப் படிப்பது அவனுக்குச் சலிப்பு தந்தபோதிலும், இன்னொரு பக்கத்தில் பரீட்சைகளுக்குப் படித்துக் கொண்டிருப்பதைத் தான் அவன் விரும்பினானென்று தோன்றியது. பரீட்சையை அவன் பாஸ் பண்ணாத வரையில் அவன் அதைப் பாஸ் பண்ண வேண்டுமென்று மட்டும்தான் எல்லாரும் எதிர் பார்ப்பார்கள்.

இப்படியே கட்டிலில் உட்கார்ந்து, கொஞ்சம் புத்தகங்களையும், கொஞ்சம் அணில்களையும், கொஞ்சம் வானத்தையும் பார்த்தவாறு அவன் பொழுது போக்கிக்கொண்டிருக்கலாம். திடீரென்று நினைத்துக்கொண்டு ஒரு சினிமா பார்த்து விட்டு வரலாம், கார் கிடைத்தால் அதில் ஒரு ரவுண்டு சுற்றிவிட்டு வரலாம், காஃபி ஹவுஸ் வடை, கனாட் பிளேஸின் நடுப்பகல் தோற்றம், இந்தியா கேட் மரங்கள், ராஷ்டிரபதி பவனத்தின் பின்னால் தெரியும் சூரியாஸ்தமனக் காட்சி, என்று அந்தந்த நேரத்தில் எதையெதை ருசிப்பதற்குத் தினவு ஏற்படு கிறதோ, அவற்றை ருசித்துவிட்டு வரலாம். ஆனால் பி. ஏ. பாஸ் செய்துவிட்டால் உலகம் அவனிடம் எதையெதையோ எதிர்பார்க்கத் தொடங்கும். அவன் ஏதாவது ஒரு வேலை தேடிக்கொள்ள வேண்டும். பத்திலிருந்து ஐந்து வரையில் ஒரு அலுவலகத்தில் உட்கார்ந்துவிட்டு வரவேண்டும். நாளாவட்டத்தில் எவளாவது ஒரு பெண்ணை – ஒரே ஒரு பெண்ணை – கல்யாணம் செய்துகொள்ள வேண்டி வந்தாலும் வரலாம். அவளையே வாழ்நாள் முழுதும் காதலிக்க வேண்டும். அல்லது காதலிப்பதாகப் பெயர் பண்ண வேண்டும். பகல்கள் ஒரு ஸ்தாபனத்துக்குச் சொந்தம். மற்றப் பொழுதுகள் மனைவிக்குச் சொந்தம். சே!

வேண்டாம். பி. ஏ. பாஸ் பண்ணவே வேண்டாம். உள்ளபடியே அவன் எவ்வளவோ சந்தோஷமாக இருக்கிறான், இதைக் கெடுத்துக் கொள்ள வேண்டாம்.

அல்லது ஒன்று செய்யலாம். பி.ஏ.க்குப் பிறகு எம்.ஏ.யில் சேர்ந்து அதில் ஒரு நாலைந்து வருடங்கள் செலவிடலாம். ஆனால் பி. ஏ. யில் பெயிலாவது போல எம். ஏ.யில் பெயிலாவது வேலை தேடிக் கொள்ளாமலிருக்க ஒரு சால்ஜாப்பாக முடியாது. அவனுடைய படிப்புக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்குமாறு பிறர் யோசனை சொல்லக் கூடிய ஒரு சூழ்நிலை உருவாகவே அது காரணமாகும். 'எதற்கு எம்.ஏ.? நான் உனக்கு நல்ல வேலை வாங்கித் தருகிறேன்' என்று அவனுடைய அப்பா சொல்லக்கூடும்...

வேண்டாம். இப்போதுள்ளபடியே இருக்கட்டும்.

இப்போதுள்ளபடியே. இந்தக் கட்டில், இந்தப் புல்வெளி, இந்த வெய்யில், இதே மரத்தின் நிழல், காற்றில் மெல்ல அசையும் இலைகள், மலர்கள், பட்சிகளின் சப்தங்கள், வானில் மிதந்து செல்லும் மேகங்கள். எனக்கு வேறெதுவும் வேண்டாம்.

நிஜமாகவே வேண்டாமா?

சரி; வேண்டும். பசித்தால் சாப்பிட வேண்டும். அவ்வளவுதானே? இப்போது அது ஒரு பிரச்னையில்லை. பிற்பாடு அது ஒரு பிரச்னையானால் அப்போது பார்த்துக்கொள்ளலாம்.

சமூகத்தில் மதிப்பு!

ஹூம்! மண்ணாங்கட்டி. இவர்கள் என்னை மதிப்பதையோ மதிக்காததையோ பற்றி நான் எதற்காகக் கவலைப்பட வேண்டும்? இவர்கள் எனக்கு முக்கியமானவர்களில்லை. இவர்களுடைய அமைப்புகள், மதிப்பீடுகள், எதுவுமே எனக்கு முக்கியமானவை யில்லை. ஸ்டுபிட், ஸ்டுபிட், ஸ்டுபிட். எல்லாரும் ஸ்டுபிட். உலகமே ஸ்டுபிட். நான் எவ்வளவு விசேஷமானவனென்று இவர்களுக்குத் தெரிவதில்லை. என்னுடைய அழகுகளையும் சிறப்புகளையும் இவர்கள் உணரவில்லை. இவர்களுடைய பரீட்சைகளில் தேறித்தான் நான் என்னை இவர்களுக்கு உணர்த்திக் கொள்ள வேண்டுமா? அப்படி உணர்த்தப்படுவது உண்மையான நானாக இருக்காது. அதனால் எனக்கு லாபமில்லை. இவர்களுக்கும் லாபமில்லை. இதெல்லாம் இவர்களுக்கு ஏன் தெரியவில்லை? ஏன் நான் இல்லாத ஒன்றாக என்னை மாற்றிக்கொள்ள நிர்ப்பந்திக்க வேண்டும், இவர்கள்? இப்படி ஒவ்வொருவரும் தான் இல்லாத ஒன்றாக மாறி தன்னையும் மற்றவர்களையும் ஏமாற்றியவாறு இருப்பதுதான் வாழ்க்கையா? இதுதான் வெற்றியின் அளவுகோலா? என்ன முட்டாள்தனம்!

புத்தருக்கு போதி மரத்தடியில் ஏற்பட்டது போல, செல்லப்பாவுக்கு அந்த முருங்கை மரத்தடியில் ஞானோதயம் ஏற்பட்டது போலிருந்தது. அவனுக்கு மிகவும் பெருமையாக இருந்தது. உலகத்திலுள்ள மற்றவர்களைப் போலத் தான் முட்டாளாக இல்லை யென்று ஆறுதலாக இருந்தது. அவன் கட்டிலிலிருந்து கீழே இறங்கி நின்றான். தன் புத்தகங்களை ஓர் அலட்சியப் பார்வை பார்த்தான். புதிய அறிவொளி பெற்றுக் சுடர்விடும் தன் பார்வையைச் (அப்படித்தான் அவனுக்குத் தோன்றியது) சுற்றுமுற்றும் சுழல விட்டான். அப்போது புத்தருக்கு ஏற்பட்டதுபோல, அவனுக்கும் ஒரு சோதனை ஏற்பட்டது. பக்கத்து வீட்டுத் தோட்டத்தில் அந்த வீட்டுப் பெண் கையில் புத்தகத்துடன் இங்குமங்குமாக நடந்துகொண்டிருந்தாள்.

அவள் அழகாக இருந்தாள்.

அவளுடைய உடல் அழகாக இருந்தது. அந்த அழகை மறைக்காத விதத்தில் அவள் உடையணிந்திருந்தாள்.

செல்லப்பா இப்போது ஒரு சாதாரண மனிதனானான். அந்தப் பெண்ணைக் கண்கொட்டாமல் பார்க்கத் தொடங்கினான். அவளுடன் அவன் பேசியதில்லை. ஆனால், அவள் அவனுக்குப் பரிச்சயமானவள் போலவே தோன்றினாள். அவன் அவளை பஸ் ஸ்டாண்டில் பார்க்கிறான். பஸ்ஸில் பார்க்கிறான். சாலையில் நடக்கும்போது, பல சமயங்களில் அவள் எதிரே வருகிறாள். அவளும் அவனைக் கவனிக்காமலில்லை. தான் அவளுக்குப் பக்கத்து வீட்டில் இருப்பது அவளுக்குத் தெரியாமலில்லை. ஆனாலும், அவள் அவனுடன் பேச முடியாமலிருக்கிறது. எப்போதாவது அவன் பஸ் ஸ்டாண்டை அடையும்போது, அவள் மட்டும் அங்கே தனியாக இருந்தால், "எட்டாம் நம்பர் போயாகிவிட்டதா?" என்று அவளிடம்

பேச்சுக்கொடுக்கலாம். ஆனால், இப்படி அவள் தனியாக இருக்கும் சந்தர்ப்பம் இதுவரை நேரவில்லை. எப்போதாவது மாலையில் அவர்கள் ஒரே பஸ்ஸில் பயணம் செய்து, சேர்ந்தாற்போல அவர்கள் பேட்டை பஸ் ஸ்டாண்டிலிருந்து வீடு வரை அவன் அவளுடன் பேசியவாறு நடந்து வர முயற்சிக்கலாம். ஆனால், என்ன பேசுவது? அத்தகைய சந்தர்ப்பங்களில் அவன் இதயம் படபடவென்று அடிக்கத் தொடங்கி, அவன் மெதுவாக நடந்து, அவளை முன்னே செல்ல விட்டுவிடுகிறான். பஸ்ஸிலிருந்து இறங்குவது வரையில் அவன் போட்டுக்கொண்டு வந்த திட்டங்களெல்லாம் பஸ்ஸிலிருந்து இறங்கிய பிறகு அசாத்தியமானதாகத் தோன்றுகின்றன.

ஒரு வேளை அவன் அமெரிக்காவுக்கோ, லண்டனுக்கோ செல்ல நேர்ந்து அங்கே அவளைச் சந்திக்க நேர்ந்தால், அப்போது தயக்க மில்லாமல் உடனே அவளுடன் பேசத் தொடங்கலாம் : "ஹலோ ! நீங்கள் தில்லியிலிருந்து வருகிறீர்கள், இல்லையா ?"

கனவுகள். கற்பனைகள். அவளைச் சார்ந்து அவன் மனதில் விரியும் காட்சிகள். நாள் முழுவதும் இப்படிப் பல்வேறு காட்சிகள் அவன் மனதில் விரிந்தவாறு இருக்கின்றன. பிறரைச் சம்பந்தப்படுத்தி அவன் உருவாக்கும் காட்சிகள். அல்லது தன்னை மட்டும் சம்பந்தப் படுத்தி அவன் உருவாக்கும் காட்சிகள். அன்று காலை எழுந்ததும் அவன் ஒரு மார்னிங் ஷோவுக்குப் போகலாமென்று நினைத்தான். காப்பியைக் குடித்துவிட்டுத் தினசரியில் சினிமா விளம்பரங்களை நோட்டம் விடும்போது அவனுக்கு அந்த நினைவு தோன்றியது. உடனே தான் அவசர அவசரமாகக் குளிக்கும் காட்சியும், டிரஸ் செய்து கொள்ளும் காட்சியும் அவன் கற்பனையில் எழுந்தன. வீட்டை விட்டு வெளியே இறங்கி (சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்தவாறு?) பஸ் ஸ்டாண்டை நோக்கி நடக்கும் காட்சி; பஸ்ஸையோ அல்லது ஆட்டோவையோ பிடித்து, வழியில் தென்படும் பெண்கள் மேலெல்லாம் பார்வையை ஆசை தீர மேயவிட்டவாறே சினிமா தியேட்டரை அடையும் காட்சி; கௌண்டரில் டிக்கட் வாங்கும் காட்சி; லௌஞ்சில் மறுபடி ஒரு சிகரெட்டைப் பற்றவைத்து அங்குள்ள புகைப்படங்களை ஸ்டைலாகப் பார்க்கும் காட்சி; ஐஸ்கிரீம் பார்லர் அருகே நிற்கும் குமரிகளைப் பார்க்காதது போலப் பார்க்கும் காட்சி; சினிமாக் கொட்டகைக்குள் உயர்தர ஸெண்ட்டின் மணமும், பாப்கார்ன் பொட்டலங்களின் மொடமொடப்பு ஓசையும், கலீர் சிரிப்புகளும் நிறைந்த அப்பர் கிளாஸில் அமர்ந்து சினிமா பார்க்கும் காட்சி; திரையில் பெண் நிழல்களைப் பார்த்துக் கிளர்ச்சியுறும் காட்சி; இண்டர்வெல்லின் போதும், சினிமா முடிந்த பிறகும் கும்பலாக வெளிப்படும் மக்களிடையே தன்னைத் தனியனாக உணர்ந்து, அந்தக் கும்பலில் எங்கேயாவது, ஏதாவது ஒரு அழகிய முகத்துடனோ, விழிகளுடனோ சம்பந்தம் ஏற்படுத்திக்கொள்ள முயன்று, விழிகளால் துழாவும் காட்சி; அவனுக்குப் பரிச்சயமான அந்தப் பாத்ரூமில் நூற்றியொன்றாவது தடவையாகச் சிறுநீர்

கழித்துவிட்டு, அந்த வாஷ்பேஸினில் கை கழுவிக்கொண்டு, அந்தக் கண்ணாடியில் தெரியும் தன் முகத்தைக் தன்னம்பிக்கையின்றித் தயக்கத்துடன் பார்த்துவிட்டு, தாழ்வு மனப்பான்மையுடன் பாத்ரூமிலிருந்து வெளியே வரும் காட்சி . . .

கடைசியில் இவை எதுவும் அன்று காலை உண்மையாகவில்லை, அவன் மார்னிங் ஷோவுக்குப் போகவில்லை. அந்தக் காட்சிகள் வெறும் காட்சிகளாக – கற்பனைகளாக – நின்று விட்டன. ஆனால் நிஜமாக நடந்தேறிய ஒரு நிகழ்ச்சி போலவே அவை அவன் மனசில் இடம்பெற்றுவிட்டன. இரண்டு மாதங்களுக்குப் பிறகு, ஒரு வருடத்துக்குப் பிறகு, இந்தக் காட்சிகளை அவனுடைய மனக்கிடங்கின் ஆழத்திலிருந்து அவன் தோண்டியெடுத்துப் பார்க்க நேர்ந்தால், அப்போது அவை நிஜமா கற்பனையா என்ற குழப்பத்தில் அவன் ஆழலாம். பல நிஜங்களிலிருந்துதான் இந்தக் கற்பனைகள் உதித்தன. அவை கிட்டத்தட்ட நிஜம் மாதிரிதான்; நிஜத்தின் குழந்தைகள். குழந்தைகள் வளர்ந்து பெரியவர்களாக மாறுவது போல இந்தக் கற்பனைக் காட்சிகள் அவன் மனதில் மெல்ல நிஜங்களாக மாறி அங்குள்ள மற்ற நிஜங்களுடன் – அப்படி அவன் நம்புகிறவற்றுடன் – அடையாளந் தெரியாமல் கலந்து போய் விடலாம். இரண்டு மாதங்களுக்குப் பிறகு, ஒரு வருடத்திற்குப் பிறகு, இன்றைய தினம்தான் மார்னிங் ஷோவுக்குப் போய்விட்டு வந்ததாகவே அவனுக்குத் தோன்றலாம்.

ஆம். இப்போது, இந்தக் கணத்தில் அவன் நிஜமென்று நினைப்பவை கூட உண்மையில் நிஜமாக இல்லாமலிருக்கலாம். நிஜமென்று உண்மையிலேயே தனியாக ஒன்று இருக்கிறதா? எல்லாமே அவரவர் உணர்வுலகில், மன உலகில் நிகழும் பாதிப்பு களைப் பொறுத்ததுதானே? எல்லாம் நிஜம்; அல்லது எல்லாம் கற்பனை. இரண்டுக்கும் பிரமாதமான வித்தியாசமெதுவுமில்லை. அப்படிப் பார்த்தால், அவன் ஏற்கெனவே பல முறை பி. ஏ. பாஸ் செய்தாகி விட்டது. ஏதேதோ வேலைகள் பார்த்தாகிவிட்டது. எவள் எவளுடனோ கூடிக் குலவியாகிவிட்டது. அவளுடைய – அவர்களுடைய – குழந்தை களுக்குப் தகப்பன் ஆயாகிவிட்டது. எங்கெங்கோ வெளிதேசங்களுக்குப் போய்ச் சுற்றிவிட்டு வந்தாயிற்று. அமெரிக்கா, பிரான்ஸ், இத்தாலி, ஜெர்மனி, ருஷ்யா, ஸ்பெயின் . . . வெளிநாட்டுப் படங்களை ஏராளமாகப் பார்த்துப் பார்த்து, இந்த நாடுகளுக்கு அவன் நிஜமாகவே சென்று வந்திருப்பது போன்ற ஒரு பிரமை அவனுக்கு அவ்வப்போது ஏற்படுகிறது. பல்வேறு நாடுகளின் தெருக்களில் அவன் பயணம் செய்திருப்பது போல, அங்குள்ள விசேஷமும் முக்கியத்துவமும் வாய்ந்த காட்சிகளைக் கண்டுகளித்திருப்பது போல, விதவிதமான மக்களுடன் பழகியிருப்பதுபோல, விதவிதமான அனுபவங்களில் ஊறித் திளைத்திருப்பதுபோல.

இப்போது சில நாட்களாக இந்தப் பிரமைகள் அதிகரித்திருக்

கின்றன. நிஜத்தின் சாயலுள்ள – ஆனால் நிஜமற்ற – நினைவுகளில் அவன் அடிக்கடி மூழ்கிப் போகிறான், பரீட்சைக்குப் படிக்கும் நிர்ப்பந்தத்தினால் அவன் பல மணி நேரம தனித்துவிடப்படுவது தான் காரணம். வெளியே சுற்றிக்கொண்டு புதிய புதிய காட்சிகளில் தன்னை ஆழ்த்திக்கொள்ள முடிந்தால் நினைவுகள் இப்படித் தொந்தரவு செய்யாது. திடீர் திடீரென்று என்னவெல்லாம் பழைய காட்சிகள் அவன் மனதாழத்திலிருந்து மேலே கிளம்புகின்றன! இவை இதுவரையில் தன் மனத்திலிருந்ததுகூட அவனுக்குத் தெரியாது. அவன் பார்த்திருந்த பல படங்களின் காட்சிகள் சம்பந்தா சம்பந்தமில்லாமல் கோணல் மாணலாக நினைவு வருகின்றன. பாலைவனம், கடற்கரைகள், சோலைகள், பனிமலைகள், அடர்ந்த காடுகள், சமவெளிகள். சூறாவளியில் தத்தளிக்கும் ஒரு கப்பல். குண்டுபட்டு எரிந்தவாறே விழும் விமானம். மூர்க்கமான வேகத்துடன் ஓடிவரும் ஒரு காண்டாமிருகம். பியூகிள் ஒலி. குதிரைகளின் மேல் ஆரோகணித்து எதிரெதிர்த் திசைகளிலிருந்து வெகுவேகமாக ஒருவரையொருவர் நெருங்கிப் போரிடத்தொடங்கும் படைகள். ஓடிவரும்போதே பீரங்கிக் குண்டுபட்டுச் சாயும் குதிரைகள், வீரர்கள். வரிசையாக சகதியிலும் மேடுபள்ளங்களிலும் ஊர்ந்துசெல்லும் டாங்குகள். குண்டுமாரி பொழிந்தவாறே பறந்து செல்லும் விமானங்கள். வலது புறமும் இடதுபுறமும் கைகளை வீசிச் சுழட்டி ஒரே சமயத்தில் ஐந்தாறு பேரை வீழ்த்திவிட்டு ஓட்டல் அறையிலிருந்து ஜன்னல் வழியே குதித்து ஓடும் ஒரு ஸீக்ரெட் ஏஜண்ட். கிரீச், கிரீச் என்று வளைந்து வளைந்து திரும்பிப் படுவேகமாக ஒன்றையொன்று துரத்திச் செல்லும் கார்கள். எல்லா உடைகளையும் களைந்துவிட்டுக் கட்டிலில் போர்வைக்குள் ஒருவரையொருவர் கட்டித் தழுவிக் காதல் புரியும் ஹீரோவும் ஹீரோயினும். நீச்சல் உடையணிந்த அழகிகள். நாஜிகளின் கைதி முகாமிலிருந்து தப்பியோடும் அமெரிக்க, பிரிட்டிஷ், பிரெஞ்சு வீரர்கள். அப்படி ஓடும்போது சுடப்பட்டு விழும் ஒருவன். போரில் இறந்த காதலனுக்காகக் கண்ணீர்விடும் காதலி. குளிக்கும் தொட்டிக்குள், சோப்பு நுரைக்கு மேலாக மார்பகங்களின் தொடக்கம் இலேசாக ஆவலைத் தூண்டும் வண்ணம் தெரியும்படி, அமர்ந்திருக்கும் ஒரு அழகி. வால்ட்ஸ் இசைக்கேற்ப மெல்ல நடனமாடும் பதினெட்டாம் நூற்றாண்டு நாயகியும் நாயகனும், பாப் இசைக்கேற்ப துரிதகதியில் நடனமாடும் இருபதாம் நூற்றாண்டு நாயகனும் நாயகியும். கஃபேயில் உட்கார்ந்திருக்கும் நாயகனும் நாயகியும். படகில் செல்லும், நீச்சலடிக்கும், பனியில் சறுக்கி விளையாடும், திடீர் திடீரென்று ஒருவரையொருவர் பிடித்துக் கொண்டு முத்தமிடும், நாயகனும் நாயகியும். டிஷ்யூ, டிஷ்யூ என்று ஸ்டைலாக சுடும் 'வெஸ்டர்ன்' கதாநாயகர்கள். ஸ்டேஜ் கோச், சிவப்பிந்தியர்கள். புழுதியைக் கிளப்பிக்கொண்டு ஓடும் குதிரைகள். விர் விர்ரெனப் பாயும் அம்புகள். வெடிகுண்டு வைத்துத் தகர்க்கப்படும் பாலங்கள். தண்டவாளங்கள். அலங்கோலமாகச் சரிந்துவிழும் ஒரு ரயில்

வண்டி. அழும் குழந்தை ஒன்று. ரத்தம், ஆம்புலன்ஸ், ஸைரன் ஒலி, ஏர் ரெயிட் ஷெல்டர்களை நோக்கி ஓடும் மனிதர்கள். மதுக்கோப்பையை உயர்த்தி டோஸ்ட் சொல்லும் ஒரு கர்னல். யூனிஃபாரம். விசாலமான டைனிங் ஹால். நீண்ட வராந்தாக்கள். எண்ணற்ற படிக்கட்டுகள். அல்சேஷன் நாய். பியானோ வாசிக்கும் ஒருவன். நடனமாடும் மிலிடரி ஆபீசர்களும் அவர்களுடைய மனைவியரும். அவசரமாக ஓடி வந்து சல்யூட் அடித்து நிற்கும் ஒருவன். மலைச்சரிவிலிருந்து கீழே, கீழே விழுந்து நொறுங்கும் ஒரு ஜீப். அடர்த்தியான பனியில் திறந்த வெளியில் நெருப்பு மூட்டி இறைச்சி சுடும், குளிர்காயும் மனிதர்கள். விரக்தியுடன் சிரிக்கும் ஒரு தாடிக்காரன்.

இப்படி எத்தனையெத்தனை காட்சிகள்! பல மாலை நேரங்களில். பகல் நேரங்களில், காலை நேரங்களில், சினிமா தியேட்டரின் இருட்டுக்குள் அமர்ந்து அவன் பார்த்த காட்சிகள். காலை ஆட்டம் முடிந்து வெளியேவரும்போது பளிச்சென்று வெய்யில் கண்ணைக் கூசும். பரபரப்புடன் வாகனங்களும் மக்களும் விரைந்து கொண்டிருப்பார்கள். மாட்டினி ஆட்டம் முடிந்து வெளியே வரும்போது வெய்யில் மறைந்து, தெரு விளக்குகளும் கடை விளக்கு களும் ஏற்றப்பட்டு, ஜே ஜே என்று இருக்கும். மக்கள் பரபரப்பின்றி நிதானமாக நகர்ந்துகொண்டிருப்பார்கள். மாலை ஆட்டம் முடிந்து வெளியே வரும்போது சாலையில் வண்டிப் போக்குவரத்து குறைந்திருக்கும். ஸிக்னல் விளக்குகள் அணைந்திருக்கும். கடைகள் மூடியிருக்கும். மக்கள் நடமாட்டம் அடங்கத் தொடங்கியிருக்கும். ஆனால் இந்த வெளியுலகச் சூழ்நிலையில் உடனடியாகத் தன்னை ஆழ்த்திக்கொள்ள அவனால் முடியாது. அநேகமாக அந்த நாளின் எஞ்சிய பகுதியில் அவன் பார்த்த சினிமாவின் சூழ்நிலையிலேதான் அவன் – மனத்தளவில் – வாழ்ந்துகொண்டிருப்பான். எனவே அவனைச் சுற்றியுள்ள நிஜங்களைத் தவறவிடுவான். இது ஒருபுறம்; இன்னொரு புறம், நாளை வரப்போகும் நிஜங்களைப் பற்றி இன்று அவன் உருவாக்கும் கற்பனைகள். இந்தக் கற்பனைகளில் அவன் ஏற்கனவே பி.ஏ. பாஸ் செய்து ஏதேதோ உயர்ந்த பதவிகளை வகித்தாயிற்று. சாந்தாவுக்கும் அவனுக்கும் திருமணமாகிக் குழந்தைகள் பிறந்தாயிற்று, இன்னும் வேறு எத்தனையோ பெண்களுடன் எத்தனையோ வித அனுபவங்கள் பெற்றாகிவிட்டது. ஆனால் நிஜத்தில் –

Oh God! அவன் வாழ்வில் நிஜத்துக்கே இடமில்லையா? ஹெல்ப்! என்னைச் சீக்கிரம் காப்பாற்றுங்கள். என் கற்பனைகளிலிருந்து, என்னிடமிருந்தே ... அதோ, பக்கத்து வீட்டுப் பெண்ணின் சேலைத் தலைப்பு காற்றில் விலகுகிறது. சரிகிறது. வெள்ளை வெளேரென்று மேனியை எடுத்துக்காட்டும் கறுப்பு ரவிக்கை. செழிப்பானமேனி. உன்மத்தம் பிடிக்கச் செய்யும் திடமான மேடுகள், குழைவான வளைவுகள். ஒரு பெண், இவள் ஒரு பெண். இது நிஜம், சந்தேக

மில்லாமல் புலனாகிற நிஜம். அவனுக்கு மிகவும் தேவையாயிருக்கிற நிஜம். குப்பென்று அவன் உடலெங்கும் உணர்ச்சி பரவுகிறது, ஸவிட்ச் போட்டவுடன் மின்சாரம் பாய்வதுபோல. அவள்மேல் போய் விழுந்து அவளை இறுக, மிக இறுக, அணைத்துக் கசக்க வேண்டும் போலிருக்கிறது. அவன் அவளைப் பார்ப்பதை அவள் உணராமலில்லை. அவனுடைய ஆசைகளை அவள் உணராமலில்லை. I know you, you bitch. அவள் வயிற்றுப்பக்கம் ரவிக்கையை இழுத்துவிட்டுக்கொள்கிறாள், சதையை இறுகக் கவ்வியிருக்கும் அதன் விளிம்பை ஒட்டி விரலால் நெருடிக்கொள்கிறாள். அவனுக்கு வெறி அதிகமாகிறது. Bitch. Bitch. எனக்காகத்தான் இப்படியெல்லாம் செய்கிறாள். அவன் தொடர்ந்து நிற்க முடியாமல் அவசரமாகக் கட்டிலில் உட்காருகிறான். கண்ணெல்லாம் எரிகிறது. திடீரென்று அவள் தன் வீட்டினுள் சென்றுவிடுகிறாள். சினிமாவில் நடனமாடிக் கொண்டிருக்கும் ஹீரோயினை க்ளோஸ் – அப்பில் சில நொடிகள் காட்டிவிட்டுத் திடீரென்று வேறு பக்கம் காமிரா திருப்பப்படும் போது ஏற்படும் எரிச்சலும் ஏமாற்றமும் அவனுக்கு ஏற்படுகிறது. மீண்டும் அவள் வெளியே வருவாளென்று காத்திருக்கிறான். அவள் வரவேயில்லை. ஆனால் அவள் வீட்டுக்குள்ளிருந்து ரேடியோ பெரிதாக ஒலிக்கத் தொடங்குகிறது. விரகதாபத்தைக் கொச்சையாக வெளிப்படுத்தும் ஒரு சினிமாப் பாட்டு. அவனைக் கிண்டல் செய்கிறாளா? அல்லது அவளுக்கும் கிளர்ச்சி தேவையாயிருந்து, அதை இப்படிப் பூர்த்தி செய்துகொள்ள முயலுகிறாளா? அவனுக்குச் சைகை தெரிவிக்கிறாளா? அவன் ஓடிப்போய் அவள் வீட்டினுள் நுழைந்து அவளைக் கட்டியணைத்துக்கொண்டாலென்ன? ஆனால் அங்கே அவளுடைய அம்மாவோ, அண்ணாவோ வேறு யாராவதோ இருப்பார்கள். நாய் இருக்கும். வேலைக்காரன் இருப்பான். வாழ்க்கையில் ஒவ்வொன்றும் இப்படி வேறு ஏதாவதொன்றுடன் சேர்த்துக் கட்டப்பட்டிருக்கிறது; அதுதான் கஷ்டம். ஒரு பெண்ணை அணைத்துக்கொள்வதற்கு முன்னால் யார் யாரையோ, எதை எதையோ சரிக்கட்டவேண்டும். கல்யாணம் செய்துகொள்ள வேண்டும். வேலை தேடிக்கொள்ள வேண்டும். பரீட்சைகள் பாஸ் செய்ய வேண்டும். ஹவ் ஸ்டுபிட்!

அவன் வீட்டினுள் எழுந்து சென்றான். ஹாலில் அம்மாவும் அந்த நாடகாசிரியரும் எதிரெதிர் சோபாக்களில் அமர்ந்து அம்மா நடிக்கவிருந்த நாடகத்தின் ஸ்கிரிப்டை வைத்துக் கொண்டு ஏதோ விவாதித்துக் கொண்டிருந்தார்கள். அம்மா சோபா நுனியில் அவரை நோக்கிக் குனிந்தவாறு உட்கார்ந்திருந்தாள். அவளுடைய சேலைத் தலைப்பு மடியில் நழுவிக்கிடந்தது. செல்லப்பா அறைக்குள் வருவதைப் பார்த்து அவள் சட்டென்று தலைப்பைச் சரியாகப் போட்டுக் கொண்டாள். நாடகாசிரியர் பெயர் பஞ்சு. நிதி இலாகாவில் செக்ஷன் ஆபீசராக இருந்தார். கூடவே நாடகங்களும் எழுதி வந்தார். அநேகமாக தில்லியிலிருந்த எல்லா நாடக சபைகளுடனும்

அவர் சம்பந்தப்பட்டிருந்தார். தில்லியிலிருந்து வேறு ஊர்களுக்கு பிரமோஷனில் செல்லும் வாய்ப்புகள் சில அவருக்கு ஏற்பட்டன. ஆனால் அந்தப் பிரமோஷன்கள்கூட வேண்டாமென்று அவர் தில்லியிலேயே இருந்தார். தில்லி நாடக உலகம் அவரின்றி இயங்கலாம்; ஆனால் அவரால் அது இல்லாமல் இயங்க முடியாது போலும். அவருடைய மனைவி ஒரு நிரந்தர நோயாளி. அவருடைய திருமண வாழ்க்கை குதூகலமானதாக இல்லை. அந்தக் குறையை ஈடு செய்வதற்காக, வேறு பெண்களுடன் பரிச்சயம் ஏற்படுத்திக்கொள்ள ஒரு வாய்ப்பாக, அவருக்கு நாடக உலகம் உதவுகிறது போலும். செல்லப்பாவுக்கு ஏனோ அவரைப் பார்க்கவே அருவருப்பாக இருந்தது; எச்சில் இலை பொறுக்கும் ஒரு பிச்சைக்காரன் ஏற்படுத்தும் அருவருப்பு. அல்லது இது ஒரு பிச்சைக்காரனுக்கு இன்னொரு பிச்சைக்காரன்மேல் ஏற்படும் வெறுப்பா?

"ஹலோ!" என்றார் அவர் செல்லப்பாவைப் பார்த்து. அவன் இலேசாகத் தலையை ஆட்டி வைத்தான். அவனால் நிர்த்தாட்சண்ய மாக யாரையும் புறக்கணிக்க முடிவதில்லை. பத்ரியால்தான் அது முடிகிறது.

"கொஞ்சம் சாவி கொடு" என்றான் அவன் அம்மாவிடம்.

"வெளியிலே போறயா?"

"ஆமாம்."

உண்மையில், அறைக்குள் நுழையும்போது அவன் வெளியே செல்ல நினைத்திருக்கவில்லை. ஆனால் அம்மாவும் பஞ்சுவும் உட்கார்ந்திருப்பதைப் பார்த்து அவனுக்கு வெளியே செல்ல வேண்டுமென்று தோன்றிவிட்டது. ஏனென்று அவனுக்கே தெரியவில்லை. அதன் மூலம் தன் எதிர்ப்பைக் காட்ட நினைக்கிறானா?

அவன் டிரஸ் செய்துகொண்டு, பத்து ரூபாய் பணமும் எடுத்துக் கொண்டான். அப்பாவுடைய சுருட்டுகளில் இரண்டை எடுத்துப் பாக்கெட்டில் போட்டுக்கொண்டான். பீரோவை மூடிச் சாவியை மறுபடி அம்மாவிடம் கொண்டுபோய்க் கொடுத்தான்.

"சீக்கிரம் வந்துடுவாயோயில்லையோ?" என்றாள், அம்மா.

"உம்."

"எனக்கு ரிஹர்ஸல் இருக்கு இன்னிக்கு . . . வர நேரமாகும். நீங்களெல்லாம் சாப்பிட்டுடுங்கோ."

"சரி." அவனுக்கு எரிச்சல்தான் வந்தது. அளவு கடந்த அக்கறை காட்டுவதன் மூலம், அவள் அவனுடைய சந்தேகத்தைத்தான் கிளப்புகிறாள்.

அவன் வாசல்வரை சென்றுவிட்டு, பிறகு சட்டென்று நினைத்துக் கொண்டவனாய் தோட்டத்திலிருந்து தன் புத்தகங்களை எடுத்து

வந்து, தன் அறையில் கொண்டு வைத்தான். ஷூவைத் துடைத்துக் கொள்வதற்காக வைத்திருந்த அழுக்குத் துணியைத் தேடினான். கிடைக்கவில்லை. அவனுக்குத் தன் தம்பிமீது எரிச்சல் வந்தது. அவன்தான் அதை உபயோகித்தால் எடுத்த இடத்திலேயே வைக்காமல் இப்படி எங்கேயாவது எறிந்துவிட்டுப் போய்விடுவான்.

கடைசியில் ஷூவைத் துடைத்துக் கொள்ளாமலேயே அவன் வெளியே வந்தான். பக்கத்து வீட்டு ரேடியோ இன்னும் பாடிக் கொண்டிருந்தது. ஆனால் அந்தப்பெண் கண்ணில் தென்படவில்லை.

வேறு பெண்கள் தென்பட்டார்கள். கனாட்பிளேஸை அடைவதற்குள் ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து பெண்கள். முதலில் அவன் ஒரு ரூபாய் டிக்கெட் வாங்கிக்கொண்டு வெவ்வேறு பஸ்களில் நாள் முழுவதும் சுற்றித் தன் வெறியை, எரிச்சலைத் தணித்துக் கொள்ளலாமென்று நினைத்தான்.

அதன்படி பஸ் ஸ்டாண்டில் இருந்த டைம் கீப்பரிடம் ஒரு ரூபாய் டிக்கெட் வாங்கிக் கொண்டு அங்கே நின்ற முதல் பஸ்ஸில் ஏறிக்கொண்டான். அந்த பஸ்ஸில் சில புடவைகள் தென்பட்டன. இல்லாவிட்டால் ஏறியிருக்க மாட்டான். பஸ்ஸின் பின் பகுதியில் காலியாயிருந்த ஒரு ஸீட்டில் உட்கார்ந்தான். அங்கிருந்த முன் ஸீட்டு ஒன்றின் வெளி ஓரத்தில் உட்கார்ந்திருந்த ஒருத்தியின் விலாவையும், முதுகையும் நன்றாகப் பார்க்க முடிந்தது. துணிகள் மறைக்காத வெற்றுச் சதை; பஸ்ஸின் குலுக்கலுடன் சேர்ந்து குலுங்கிய சதை. அவனுடைய எரிச்சல்கள் மறைந்தன. சிந்தனைகள் மறைந்தன. அவன் அதே திசையில் பார்த்துக்கொண்டு அந்த நிமிடத்தில், தன் இன்பக் கிளர்ச்சியில், தன்னை மறக்க முயன்றான். இன்னொரு ஸ்டாப்பில் பஸ் நின்றது. திபுதிபுவென்று கூட்டம் ஏறியது. காலி ஸீட்டுகள் நிரம்பி புதியவர்கள் நிற்கத் தொடங்கி விட்டார்கள். இப்போது, முன் ஸீட்டிலிருந்தவளை அவன் பார்க்க முடியாமல் நிற்பவர்கள் மறைத்தார்கள். ஒரு கணம் அவனுக்கு எரிச்சல் ஏற்பட்டது. மறுகணமே இந்த எரிச்சல் மறைந்தது. புதிதாக ஏறிய ஒரு பெண் அவனருகில் வந்து நின்றாள். கையை உயரத் தூக்கிக் கம்பியைப் பிடித்துக்கொண்டிருந்ததால் அவளுடைய ரவிக்கை மேலே இழுபட்டு, அவளுடைய மூடப்படாத இடைப் பிரதேசத்தின் விஸ்தீர்ணத்தை அதிகரித்திருந்தது. இந்தப் பிரதேசம் அவனுக்கு மிக அருகில் – அவன் கை நீட்டினால் தொடக்கூடிய தூரத்தில் – இருந்தது. இடையில் முன்பு புடவை கட்டி வந்த இடத்தில் ஏற்பட்டிருந்த வரிச்சுவடுகளைப் பார்க்க முடிந்தது. இப்போது அந்த இடத்துக்குக் கீழே அவள் கட்டத் தொடங்கியிருக்க வேண்டும். அவனுடைய கண்கள் தவிர்க்க முடியாமல், அவள் மேல் மேய்ந்தவாறிருந்தன. அவனுக்கு வேறு எல்லாமே மறந்துவிட்டது. இதுதான், இதுதான், இதுதான். இதுதான் அவனுக்கு வேண்டும். கிளர்ச்சி, கிளர்ச்சி, கிளர்ச்சி. இவள் இப்படியே

நிற்கட்டும். இந்த பஸ் நிற்காமல் போய்க்கொண்டேயிருக்கட்டும்.

ஆனால் பஸ்ஸின் கடைசி ஸ்டாப் வந்து அவனுடைய கிளர்ச்சிக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தது. எல்லோரும் இறங்கினார்கள். அவனும் இறங்கி இன்னொரு பஸ் மாற்றிக் கொண்டான். இந்த பஸ்ஸில் முதலில் ஒரு கிழவி அவனருகில் வந்து உட்கார்ந்தாள், பிறகு ஒரு அழுக்கு உடையணிந்த கிராமவாசி. நின்றிருந்தவர்கள் எல்லோரும் ஆண்களாகவே இருந்தார்கள். உட்கார்ந்திருந்த ஓரிரு பெண்களையும் அவனால் பார்க்க முடியவில்லை. சரி, இந்த பஸ்ஸிலிருந்து இறங்க வேண்டியதுதான் போலிருக்கிறது என்று அவன் நினைத்தபோது திடீரென்று அந்தக் கிராமவாசி ஒரு ஸ்டாப்பில் இறங்கினான். அதே ஸ்டாப்பில் ஒரு பருமனான நடுத்தர வயதுப் பெண்மணி கையில் நிறையச் சாமான்களுடன் ஏறி, அவனருகில் வந்து பொத்தென்று உட்கார்ந்தாள். அவனுக்கு ஒரு இன்ப அதிர்ச்சி ஏற்பட்டது. பஸ்ஸின் குலுக்கலுக்கு ஏற்றவாறு அவளுடைய செழிப்பான தேகம் அவன்மேல் உராய்ந்தவாறு இருந்தது. பிறகு அவள் இறங்கிச் செல்வது வரையில் அவனும் இறங்குவதைப் பற்றி யோசிக்கவில்லை.

பிறகு தொடர்ந்து சில பஸ்களில் எந்தக் காட்சியும் இல்லை; எந்த ஸ்பரிசமும் இல்லை. அனுபவத்தின் தொடர்ச்சி அறுந்து போயிற்று. ஒரு பக்கம் நினைவாகவும், ஒரு பக்கம் எதிர்பார்ப்பாகவும் அது உறுத்தத் தொடங்கியது. கூடவே ஒரு குற்ற உணர்ச்சியும், ஏற்பட்டது. அனுபவங்களினிடையில் இடைவெளி ஏற்பட்டாலே இப்படித்தான். கடைசியாக ஒரு பஸ்ஸில் ஒரு கிழவர் அவனருகில் உட்கார்ந்திருந்தார். அவரிடம் ஒரு தோல் பை இருந்தது. எங்கேயோ வேலை செய்கிறார் போலும். நடுவில் ஒரு ஸ்டாப்பில் கையில் குழந்தையுடன் ஒரு பெண்மணி ஏறினாள். வழக்கம் போல அவன் அவளைப் பார்வையால் மேய்ந்தான். அப்போது அந்தக் கிழவர் திடீரென்று எதிர்பாராத விதமாக எழுந்து, அந்தப் பெண்ணை உட்காரச் செய்தார். செல்லப்பாவுக்குத் தன் மேலேயே வெட்கம் ஏற்பட்டது. அவள் அவன் மேல் உராய்ந்தவாறுதான் உட்கார்ந் திருந்தாள். அவள் அழகாய்த்தானிருந்தாள். ஆனால் அவனுக்கு இப்போது பூரிப்பு உண்டாகவில்லை. அவன் அந்தக் கிழவரைப் பார்த்தபடி இருந்தான். அவர் அந்தப் பருமனான தோல் பையைக் கஷ்டப்பட்டுத் தூக்கிக்கொண்டு, காலியாயிருந்த ஒரே கையால் பஸ்ஸின் கம்பியைப் பிடித்துக்கொண்டு பாலன்ஸ் செய்ய முடியாமல் தடுமாறிக்கொண்டிருந்தார். அவர் நல்லவர். நான் ஒரு கயவன். நானல்லவா இந்தப் பெண்ணுக்கு இடம் தந்திருக்க வேண்டும்! அவன் அவசரமாக எழுந்து அந்தக் கிழவரைத் தன் இடத்தில் உட்கார்த்தி வைத்தான். அவனுக்குத் தன் தாத்தாவின் ஞாபகம் வந்தது. தன் பேரன் இன்று நேரத்தைச் செலவிடும் முறையை அவர் பார்க்க நேர்ந்திருந்தால்! அவனுக்குத் தன் மேலேயே வெறுப்பும்

சலிப்பும் ஏற்பட்டது. பஸ் கனாட்பிளேஸ் அருகே ஒரு நாற்சந்தி முனையில் ஸிக்னலுக்காக நின்றது. அவன் கீழே இறங்கி ஓர் அமைதியுடனும் ஆசுவாசத்துடனும் ரமணியின் அலவலகத்தை நோக்கி நடக்கத் தொடங்கினான். அவனுடைய வெறி இப்போது தணிந்துவிட்டாற் போலிருந்தது.

# 22

ரமணியின் அலுவலகத்தைச் செல்லப்பா அடைந்தபோது ரமணி தன் ஸீட்டில் உட்கார்ந்திருக்கவில்லை. அருகிலிருந்தவர்களிடம் விசாரித்தான். "வெளியில் எங்கேயோ போயிருக்கிறான்; வந்து விடுவான்" என்று அவர்கள் அவனை உட்காரச் சொன்னார்கள். ரமணியின் மேஜையருகே அவன் உட்கார்ந்தான். சுற்றிலும் இருந்தவர்களை அவர்கள் ஏதேதோ வேலைகளில் அல்லது பேச்சுக்களில் ஈடுபட்டிருந்ததை, சினிமா பார்ப்பது போன்ற ஆர்வத்துடன் பார்த்துக்கொண்டிருந்தான். கற்பனையல்லாத அந்த நிஜமான காட்சி அந்தச் சமயத்தில் ஒரு ஆறுதலாக இருந்தது. ஏக்கமாகவும் பொறாமையாகவும்கூட இருந்தது. தான் மட்டும் ஏதும் செய்யாமலிருப்பது சங்கடத்தை அளித்தது, அவனும் எதையாவது செய்ய வேண்டும். மிக மிகச் சலிப்பூட்டும் காரியமாக அது இருந்தால்கூடப் பரவாயில்லை. அவனுக்கென்று ஒரு காரியம். அவனைச் சுற்றியுள்ள உலகத்தின், நிஜத்தின், பங்குதாரனாக அவனை ஆக்கக்கூடிய காரியம். இப்படியே அவன் தன்னை ஏமாற்றிக் கொண்டிருக்க முடியாது. இப்படியே அலைந்து கொண்டிருக்க முடியாது. எங்கேயாவது அவன் நின்றாகவேண்டும். எதன் மீதாவது சாய்ந்தாக வேண்டும். அந்தச் சாய்தலின் விளைவுகளைச் சந்திக்கத் துணிய வேண்டும். திடமாக, நிச்சயமான பரிமாணங்கள் உள்ளதாக, மாறுதல் அடையாததாக, ஒரு சொந்த உலகம் வேண்டும். அவனுடைய இப்போதைய உலகம் திடீரென்று ஆட்டம் காணத் தொடங்கி யிருக்கிறது. சாசுவதமாகத் தோன்றியது, இப்போது அடிக்கடி சாசுவாத மில்லாததாகத் தன்னை வெளிப் படுத்தத் தொடங்கியிருக்கிறது. ஆற்று மணலால் கட்டிய வீடொன்று மணலின் ஈரம் உலர்ந்தவுடன் உதிருவதைப் போலவே இதுவும் உதிரத் தொடங்கியிருக்கிறது.

வெய்யில் வந்தவுடன் கரையும் பனியைப்போலக் கரையத் தொடங்கியிருக்கிறது. கண் கூசுகிறது; இந்தக் கூச்சம் தன்னைத் தாக்காமல் முன்பு அவன் பதுங்கி வந்த ஒளிவிடங்கள் திடீரென்று அவனால் பயன்படுத்த முடியாதவையாக மாறிவருவது போலிருக்கிறது. அல்லது அவன்தான் அந்த ஒளிவிடங்களில் புக முடியாமல் பெரியவனாகி விட்டது போலிருக்கிறது.

வீட்டிலிருந்து கிளம்பியிருக்கவே வேண்டாமென்று இப்போது தோன்றியது. அடுத்த வீட்டுப் பெண்ணைப் பார்த்திருக்க வேண்டாம். பஸ்களில் பயணம் செய்திருக்க வேண்டாம். பேசாமல் பரீட்சைக்குப் படித்துக்கொண்டு அந்தக் கட்டிலிலேயே உட்கார்ந்திருக்கலாம். அப்போது அவன் சிறு பையனாகவே உணர்ந்திருக்கலாம். அவனுடைய தாத்தா உயிருடன் இருந்தபோது அவன் உணர்ந்ததைப்போல. தாத்தா இருந்தவரையில் பரீட்சை நாட்களில் அவன் ஒழுங்காகப் படிக்க வேண்டுமென்று எவ்வளவு சிரத்தை எடுத்துக்கொள்வார்! காலையில் எழுப்பிவிடுவார். அவன் படிக்கிறானா என்று பரிசோதித்துக்கொண்டேயிருப்பார். அந்தச் சிரத்தை ஒரு பக்கம் எரிச்சலாக இருந்தாலும் ஒரு பக்கம் பாதுகாப்பாகவும் இருந்தது. அவனுடைய உலகத்துக்கு அவர் ஒரு திண்மையையும் நிச்சயத்தையும் அளித்தார். பரீட்சைகள் நடக்காத சமயங்களில்கூட அவன் சாய்ந்து ஆறுதல் பெறக்கூடிய நிச்சயம். காலை நேரங்களில் அவர் வீட்டுத் தோட்டத்திலேயோ, வெளியிலேயோ உலாவச் செல்லும்போது அவனையும் கூட அழைத்துச் செல்வார். மரங்கள், மலர்கள், பறவைகள் ஆகியவற்றைச் சுட்டிக்காட்டி, அவற்றின் பெயர்களையும் இயல்புகளையும் விளக்குவார். இரவில் கதைகள் சொல்லுவார். புராணக் கதைகள்; நாடோடிக் கதைகள். ஒரு பாத்திரத்தைப்பற்றிச் சொல்லும்போது அவரும் அந்தப் பாத்திரமாகவே மாறி வெவ்வேறு பாவனைகளை அபிநயித்துக் காட்டுவார். வெவ்வேறு கள்ளக் குரல்களில் பேசுவார். அவரே ராவணன், அவரே ராமன். அவரே இரண்யன், அவரே பிரகலாதன். அவரே சிங்கம், அவரே முயல். அவருடைய கர்ஜனை, சிரிப்பு, அழுகை, தோரணையான கோபமும் பரிகாசமும், பயப்படுவது போன்ற பாசாங்கு, எல்லாம் அவனுக்குத் தெளிவாக நினைவிருக்கின்றன....

அவருக்கு ஏதோ சிலவற்றில் நிச்சயமான நம்பிக்கையும் பற்றுதலும் இருந்தது. அவர் அந்த நிச்சயத்தில் சாய்ந்து தெம்பும் ஆறுதலும் பெற முடிந்தது. அவர் அவன் லயித்து ஈடுபட முடிந்த ஒரு நிஜமாக இருந்தார். அவர் மூலமாகப் புற உலகில் அவன் தன்னைச் சம்பந்தப்படுத்திக்கொள்ள முடிந்தது.

இன்று அந்தச் சம்பந்தம் திடீரென்று அறுந்து விட்டது போலிருக்கிறது. இப்போது அவனைச் சுற்றியுள்ள யார்மீதும் அவனால் தொடர்ச்சியாகச் சாய்ந்துகொள்ள முடியவில்லை. அவர்களும், அவர்களுடைய உலகமும் அவனுள் மிரட்சியையும் தயக்கத்தையும்

ஏற்படுத்துகின்றன. அவர்களிடம் அவன் ஒரு நிச்சயத்தை – அவன் பற்றிக்கொள்ளக்கூடிய ஒரு சரடை – காண முடியவில்லை. அவனுடைய உலகம் அவனை மட்டும் கொண்டதாகச் சுருங்கி விட்டது. பிறர் அனுமதிக்கப்படாத ஒரு சொந்த உலகம்; புற உலகத்திலிருந்து முரண்படுகிற உலகம். தன்னுடைய சொந்த உலகச் சூழ்நிலையிலிருந்து இளைப்பாறுவதற்காக மட்டும் அவன் அவ்வப்போது புற உலகைப் பயன்படுத்துகிறான். புற உலகில் சில 'இளைப்பாறும் கேந்திரங்களை' உருவாக்கிக்கொண்டிருக்கிறான்; ரமணியைப் போல, அம்மாவைப் போல. இவர்களிடம் அவன் ஓரளவு ஆறுதல் பெற முடிகிறது. தான் இல்லாத ஒன்றாகத் தன்னை மாற்றிக்கொள்ளச் சிரமப்படாமல் இயல்பாக இருக்க முடிகிறது. ஆனால் ஓரளவுதான். இவர்களிடமும் அவனுக்குப் பல சமயங்களில் அதிருப்தியும் எரிச்சலும்தான் ஏற்படுகிறது.

அம்மாவும் பஞ்சுவுமாகச் சேர்ந்து உரக்கச் சிரித்துக் கொண்டிருப்பது போன்ற ஒரு தோற்றம் அவன் மனதில் தோன்றியது. இது நிஜமில்லை. ஆனால் நிஜத்துக்குப் பிறந்த குழந்தை. இப்படி அம்மாவை அவர்கள் வீட்டில் நடக்கும் பார்ட்டிகளில் பார்த்திருந்த நினைவின் அடிப்படையில் எழுந்த தோற்றம்.

தொடர்ந்து இன்னொரு தோற்றம் – அம்மாவும் பஞ்சுவும் தம்ளர்களில் மதுவை விட்டுக்கொண்டு, 'சீர்ஸ்!' என்று சொல்லி அருந்துவதுபோல. விசுவமும் பத்மினியும் சினிமாக் கதாநாயகனை யும் கதாநாயகியையும் போலப் படுக்கையில், பிறந்த மேனியுடன், காதல் புரியும் தோற்றம். பத்ரி டிஸ்கோத்தேயில் ஒரு மங்கையை அணைத்தவாறே உட்கார்ந்திருக்கும் தோற்றம். அப்பா ஒரு கையில் சுருட்டையும் இன்னொரு கையில் டெலிபோன் ரிஸீவரையும் பற்றியவாறு தம் பீடத்தின் ஹோதாவில் திளைத்தவாறு ஆபீஸில் அமர்ந்திருக்கும் தோற்றம். திடீரென்று அவர் சிரிக்கிறார். விஸ்கி வாசனையடிக்கிறது. சிறு வயதில் சில சமயங்களில் அவனை அவர் முத்தமிடும்போது அடிக்குமே, அதுபோல. ஆபீசிலும் விஸ்கி குடிப்பாரா, அப்பா? பாடுவாரா?

தாத்தா விஸ்கி குடிக்காமல் பாடுவார். அப்பா விஸ்கி குடித்து விட்டுப் பாடுவார். வெய்யில் கால இரவுகளில் தோட்டத்தில் நண்பர்களுடன் அமர்ந்திருக்கும்போது சில ரவுண்டுகள் மதுவருந்திய பிறகு எல்லாருமாக நள்ளிரவுக்கு மேல் – ராக ஆலாபனைகளில் இறங்குவார்கள்.

அப்பாவுக்குத் தன் ஆபீசும் நண்பர்களும் இருக்கிறார்கள். அம்மாவுக்குச் சக நடிக நடிகையரும் நாடகாசிரியர்களும் இருக்கிறார்கள். பத்ரிக்கு கேர்ல் ஃபிரண்டுகள் இருக்கிறார்கள். விசுவத்துக்குப் பத்மினி இருக்கிறாள். அவனுக்குத்தான் எதுவுமில்லை...

விசுவம் பத்மினியின் முகம், மார்பு, முதுகு, வயிறு எல்லா இடங்களிலும் முத்தமிடுகிறான். பத்ரியும் அந்தப் பெண்ணும் தம்

நாற்காலிகளிலிருந்து எழுந்து, துரிதமாகி வரும் பாப் இசைக்கேற்ப வேகமாக, வெகு வேகமாக, நடனமாடத் தொடங்குகிறார்கள். பஞ்சு ஏதோ ஒரு பாயிண்டை வற்புறுத்தும் சாக்கில் அம்மாவின் தொடையில் தட்டுகிறார். தோற்றங்கள், தோற்றங்கள் ...

நிஜத்தின் குழந்தைகள்...

"ஹலோ டார்லிங்!" என்று ரமணியின் குரல் ஒலித்தது. செல்லப்பா நிமிர்ந்து பார்த்துப் புன்னகை செய்தான்.

தற்போதைக்கு எனக்கு இவன் ஒருவன்தான் இருக்கிறான்.

"ரொம்ப நேரமாகக் காத்திண்டிருக்கியா?" என்றான் ரமணி.

"ஆமாம். எங்கே சுத்திண்டிருந்தே?"

"சும்மா இப்படி ஒரு ரவுண்டு."

"யார்கூட?"

"தனியாகத்தான்."

"நிஜமாகவா?"

ரமணி தன் ஸீட்டில் உட்கார்ந்தான். அவன் இன்று தன்னுடைய வழக்கமான சுறுசுறுப்பில்லாமல் சற்றே மந்தமாகக் காணப்பட்டான்.

"ஏன் என்னவோ போல இருக்கே? உடம்பு சரியில்லையா?" என்று செல்லப்பா கேட்டான்.

"ஆமாம். அதுக்குத்தான் எங்காத்திலே மருந்துக்கு ஏற்பாடு பண்ணியிருக்கா."

"என்ன மருந்து?"

"சொல்றேன்" என்று ரமணி, ஒரு நிமிஷம் பேசாமலிருந்தான். "நானே உங்காத்துக்கு வரணும்னு நினைச்சேன்" என்று சொல்லி விட்டு, மறுபடி பேசாமலிருந்தான். செல்லப்பாவுக்கு ஒன்றும் புரியவில்லை.

அப்போது, சிலர் தம்முடைய செக்கைப் பெற்றுக்கொண்டு போவதற்காக ரமணியிடம் வந்தார்கள். "ஸோ – ஆல் ரெடி ஃபார் தி கிரேட் ஈவன்ட்?" என்று ஒருவர் ரமணியிடம் கேட்டார். "அவன் எப்பவுமே ரெடிதான்" என்று இன்னொருவர் சொன்னார். இருவரும் சிரித்தார்கள்.

"எங்களுக்கு 'ட்ரீட்'டெல்லாம் எப்போ, முதலிலேயா, அப்புறமாவா?" என்று முதல்வர் மறுபடி கேட்டார்.

"என்னுடைய 'ட்ரீட்' ஆனப்புறம்தானே உங்களுக்குக் கொடுக்க முடியும்?" என்றான் ரமணி. அவர் ஓங்கி அவன் முதுகில் அறைந்து கடகடவென்று சிரித்தார். அந்தச் சிரிப்பை எல்லாரும் எதிரொலித்தார்கள். செல்லப்பாவுக்கு இப்போது ஏதோ சந்தேகம் ஏற்பட்டது.

அந்தச் சந்தேகம் உண்மையாயிருக்கக்கூடாதென்ற பயமும் ஏற்பட்டது.

சிரிப்புகள் அடங்கி, வந்தவர்கள் சென்ற பிறகு, ரமணி செல்லப்பாவைப் பார்த்துக் கண் சிமிட்டினான். "காப்பி சாப்பிடப் போகலாமா?" என்றான்.

"உம்."

காஃபி ஹவுஸுக்குப் போகும் வழியில் எதிர்ப்பட்ட அழகிகளை ரமணி ஒரு புதுமையான ஏக்கத்துடன் பார்த்ததாகவும், புதுமையான பரவசத்துடன் அவர்களைச் சிலாகித்துப் பேசியதாகவும், செல்லப்பாவுக்குத் தோன்றியது. அழகே இல்லாத ஒரு பிரதேசத்துக்கு அவன் போய்க்கொண்டிருப்பது போலவும், நிறைய அழகை மனதில் சேமித்து வைத்துக்கொள்ள முயலுவதையும் போல. சிகரெட்டைக் கீழே போடுமுன் கடைசி முறையாக நீளமாக ஒரு உறிஞ்சு உறிஞ்சுவதைப் போல. காஃபி ஹவுஸிசில் காலியாக இருந்த ஒரு மேஜையில் போய் இருவரும் உட்கார்ந்தார்கள். பக்கத்து மேஜையில் ஒரு அழகிய வெளிநாட்டு யுவதி – ஹிப்பி – உட்கார்ந்திருந்தாள். அவளும், அவளுடைய தோழனுமாக சிகரெட் போல ஏதோ ஒன்றை ஒருவர் மாற்றி ஒருவர் உறிஞ்சிக்கொண்டிருந்தார்கள். அது சிகரெட்டாக இருக்காது. மரியுவானா; இல்லாவிட்டால் சரஸ். செல்லப்பாவுக்குத் தன் பாக்கெட்டில் இருந்த சுருட்டுகளின் நினைவு வந்தது. அவற்றை ரமணியுடன் இப்போது குடிக்கலாமா, வேண்டாமா என்று அவன் யோசித்தான்.

"லைஃப் எஞ்சாய் பண்றாங்கப்பா இவங்க" என்றான் ரமணி.

"நீ பண்ணலையா?" என்றான் செல்லப்பா.

ரமணி உதட்டைப் பிதுக்கினான். வெயிட்டர் வந்தான். ஹாம்பர்கரும் காப்பியும் ஆர்டர் செய்தார்கள். வெயிட்டர் சென்றான். செல்லப்பா ரமணியைப் பார்த்தான். ரமணி செல்லப்பாவைப் பார்த்தான்.

"உம், – அப்புறம்?"

இப்போது செல்லப்பா உதட்டைப் பிதுக்கினான். ரமணி மேஜை மேல் கைகளால் தாளம் போட்டான். பிறகு அதை நிறுத்திவிட்டுச் சுற்று முற்றும் பார்த்தான். "ஒரே வெய்யில் இன்னிக்கு" என்று கைக்குட்டையை எடுத்து முகத்தைத் துடைத்துக்கொண்டான். "இந்த வெய்யிலிலே கிளம்பி வந்திருக்கியே – தைரியசாலிதான் ரொம்ப" என்றான்.

"எனக்கு வீட்டிலே போர் அடிச்சுது" என்றான் செல்லப்பா.

"இப்போ?"

"இப்பவும் அடிக்கிறது."

ரமணி சிரித்தான். சிரித்தவாறே அந்த ஹிப்பி யுவதியை ஒரு பார்வை பார்த்தான். மேஜைக் கண்ணாடியை நோக்கிக் குனிந்து.

அதில் தெரிந்த தன் முகத்தை ஒருமுறை பார்த்தான். நிமிர்ந்து செல்லப்பாவைப் பார்த்தான். "பை தி வே, எனக்குக் கல்யாணம் நிச்சயமாயிருக்கு" என்றான். செல்லப்பாவின் உடலெங்கும் ஒரு சிலிர்ப்புப் பரவியது. ஓ காட்!

"குட், குட். நான் சித்த முந்தியே ஊகிச்சேன்" என்றான் அவன் அவசரமாக, மௌனம் தன் ஏமாற்றத்தைக் காட்டிக்கொடுத்து விடுமென்று பயந்தவன்போல.

"எப்படி?"

"ஆஃபீஸிலே அவர்கள் பேசினதிலேருந்து."

"ஓ!"

"லவ் மாரியேஜ்ஜா?"

"ஆமாம். என்னுடைய ஜாதகம் அவளுடைய ஜாதகத்தைக் காதலிச்சுது."

செல்லப்பா முதன் முறையாக வாய்விட்டுச் சிரித்தான். 'இதுதான் நம் வாழ்க்கை' என்பதுபோல ரமணி தோள்களைக் குலுக்கிக் கொண்டான்.

"எப்போ கல்யாணம்?"

"அடுத்த மாசம்."

"எங்கே, இங்கேதானா, இல்லாட்டா...."

"ஸம் பிளடி வில்லேஜ் நியர் திருச்சி."

"மை காட்!"

இருவரும் சற்று நேரம் பேசவில்லை. ரமணி ஏதோ குற்றம் செய்துவிட்டவனைப் போன்ற தவிப்புடன் செல்லப்பாவைப் பார்த்தான். செல்லப்பா அந்தப் பார்வையை நேருக்குநேர் சந்திப்பதைத் தவிர்க்க முயன்றான்.

"நான் அவசரப்பட்டுட்டேன்னு நினைக்கிறியா?" என்றான். ரமணி. செல்லப்பாவுக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. தான் அவனிடம் திண்மையையும் ஆதரவையும் யாசித்து வந்தது போக, இன்று திடீரென்று அவன் தன்னிடம் இவற்றை யாசிக்கிறான். தான் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளத் தயாராயில்லை. எப்போது, எந்தப் பொறுப்பைத்தான் அவன் ஏற்றுக்கொண்டிருக்கிறான்?

"நான் எப்படிச் சொல்ல முடியும்?" என்றான். அவன். "உனக்குப் பிடிச்சதை நீ செய்யணும்."

"யூ ஆர் ரைட்" என்று அவன் ஏதோ பெரிய உண்மையைச் சொன்னதுபோல ரமணி தலையை மேலும் கீழுமாக ஆட்டி ஆமோதித்தான். செல்லப்பாவுக்கு மறுபடி சங்கடமாக இருந்தது – வலுக்கட்டாயமாகத் தான் ஒரு பீடத்தில் அமர்த்தி வைக்கப்படுவது போல. இவன் எதற்காக என்னுடைய அபிப்பிராயத்தைக் கேட்க வேண்டும்?

ஆனால் ரமணி செல்லப்பாவின் சங்கடத்தைக் கவனித்ததாகவே தெரியவில்லை. யாரிடமாவது தன் மனதின் பளுவை இறக்க அவன் துடித்துக்கொண்டிருந்த சமயத்தில் செல்லப்பா வந்துசேர்ந்துவிட்டது போலிருந்தது, தன்னுடைய பர்ஸை வெளி யிலெடுத்து அதனுள்ளிருந்து ஒரு புகைப்படத்தை எடுத்து அவன் செல்லப்பாவிடம் நீட்டினான். "இதுதான் அவ போட்டோ," என்றான். ஒரு சாதரணமான முகம். பயம், கவலை, ஆர்வம், நம்பிக்கை, எல்லாம் பளிச்சிடும் முகம். அந்த 'பிளடி வில்லேஜில்' உள்ள ஒரே ஸ்டுடியோவில் எடுத்ததாக இருக்கும். இந்த போட்டோவுக்காக அவள் மூன்று நாட்கள் முன்பாகவே தன்னைத் தயார் செய்துகொள்ளத் தொடங்கியிருப்பாள், கவலைப்படத் தொடங்கியிருப்பாள். முகத்தை நூறு தடவை சோப்பு போட்டுக் கழுவியிருப்பாள், பவுடரை அப்பிக்கொள்வதும் துடைத்து விட்டுக்கொள்வதுமாயிருந்திருப்பாள். முகத்தில் வெவ்வேறு பாவனைகளை உருவாக்கிக்கொண்டு கண்ணாடியினெதிரே நின்று ப்ராக்டிஸ் செய்துகொண்டிருப்பாள். க்ளிக்! இவள் சரஸ் குடிக்கும் ஹிப்பி யுவதி இல்லை. க்ளிக்! இவள் கனாட்பிளேஸ் வராந்தாக்களில் எதிர்ப்படும் நவநாகரிக மங்கையரில் ஒருத்தியில்லை. க்ளிக்! க்ளிக்! க்ளிக்! இவள் ஆட்ரி ஹெப்பர்ன் இல்லை, அலி மக்ரா இல்லை, ஜெனிஃபர் ஓனில் இல்லை. இவள் தன் அம்மாவைவிடச் சற்றே நாகரிகமாகப் புடவை உடுத்திக்கொண்டு, தமிழ் சினிமா நடிகைகளைப் பார்த்து அவர்களைப் போலப் பிடிக்க – ப்ரா தெரிய – ரவிக்கையணிந்துகொண்டு, கூடவே சாம்பாரும் ரஸமும் மைசூர்ப் பாகும் தோசையும் பண்ணத் தெரிந்துகொண்டு, ரமணியைப் போன்ற எவனாவது ஒருவனை இவற்றின் மூலமாக மட்டும் ஆயுள் முழுவதும் திருப்திப்படுத்திவிடலாமென்ற மயக்கத்தில் ஆழ்ந்திருப்பவர்களில் ஒருத்தி.

செல்லப்பா புகைப்படத்தைத் திருப்பிக்கொடுத்தான். "என்ன, உனக்குப் பிடிச்சிருக்கா?" என்றான் ரமணி.

"நானா கல்யாணம் பண்ணிக்கப் போறேன்?"

"நீ பண்ணிக்கிறதா இருந்தால்தான் அபிப்பிராயம் சொல்லலாமா?"

"இது உன் பர்ஸனல் விஷயம்."

"அதனாலேதான் உன்னைக் கேக்கிறேன், நீ என் ஃபிரண்டாக இருக்கிறதனாலே. சித்தே முந்தி ஆஃபீஸிலே பார்த்தோமே, அவாகிட்டே கேப்பேன்னு நினைக்கிறியா?"

செல்லப்பாவுக்குச் சுருக்கென்றது. இவ்வளவு நாள் பழகியும் தான் ரமணியைப் புரிந்துகொள்ளவில்லையென்று தோன்றியது. நான் அவனை ஒரு கிளர்ச்சியூட்டும் விளையாட்டுக் கருவியாகப் பயன்படுத்துகிறேன். ஆனால் அவன் எனக்கு ஓர் உயர்ந்த ஸ்தானத்தை அளித்திருக்கிறானா?

"நல்ல அமைதியான டைப்பாகத்தான் தோணறது. சண்டை

யெல்லாம் போட மாட்டான்னு நினைக்கிறேன். உனக்கு அந்த மாதிரிதானே வேணும்னு சொன்னே!" என்று எதையோ வாயில் வந்ததைச் சொல்லி வைத்தான்.

"ஆமாண்டா." ரமணியின் முகம் மலர்ந்தது. "எனக்கும் அப்படித் தான் தோணித்து. ரொம்ப க்வயட் டைப் அவள், கிட்டத்தட்ட உன்னை மாதிரித்தான்."

செல்லப்பா திடுக்கிட்டான். இதை அவன் எதிர்பார்க்கவில்லை. ரமணியின் மீது திடீரென்று எரிச்சலும், கோபமும் பொங்கியது. இவ்வளவு கோபம் தனக்குள் இத்தனை நேரமாக எங்கே ஒளிந்திருந்தது? ரமணியைக் கண்மூடித்தனமாக அடித்து நொறுக்கிவிட்டு அங்கிருந்து எழுந்து ஓடவேண்டும் போலக் கோபம்.

ஹாம்பர்கர் வந்தது. இருவரும் எதுவும் பேசாமல் அதைச் சாப்பிட்டார்கள். காப்பி வந்தது. எத்தனை ஸ்பூன் சர்க்கரை வேண்டுமென்று ரமணி கேட்டான்.

"நான் போட்டுக்கறேன்" என்றான் செல்லப்பா.

ரமணி செல்லப்பாவின் முகத்தை ஆராய்ந்தான். "கோவமா?" என்றான். செல்லப்பா பதில் பேசவில்லை.

"கோச்சுக்காதேடா ப்ளீஸ்!" என்று ரமணி அவன் கையைப் பற்றி அழுத்தினான். "நான் உன்னைக் கோட்டா பண்றதா நினைச்சுட்டே போலிருக்கு. ஒரு ஃபாக்ட்டைத்தான் சொன்னேன். உன்னுடைய க்வயட் நேச்சர் எனக்குப் பிடிச்சிருக்கு. அது தப்பா?"

செல்லப்பா இப்போது தன் கோபத்துக்காக வெட்கினான். அது ஏதோ ரகசியத்தை அம்பலப்படுத்திவிட்டது போலிருந்தது. "எனக்குக் கோவமா இல்லே, அலுப்பாத்தான் இருக்கு" என்று சமாளித்தான்.

"என் பேச்சைக் கேட்டா?"

"ஆமாம்."

"சரி. நான் எதுவும் பேசலை."

ஆனால் காஃபி ஹவுஸுக்கு வெளியே வந்து சாலையில் நடக்கத் தொடங்கிவிட்டது. தொடங்கியவுடன் மறுபடி ரமணியின் பேச்சுத் தொடங்கிவிட்டது. கல்யாணமான கையுடன் அவன் தன் மனைவியைக் கூட்டிக் கொண்டு தென்னிந்தியா முழுவதும் ஒரு சுற்றுலாப் போகப் போவதாகச் சொன்னான். தில்லிக்கு வந்தவுடன் தனிக்குடித்தனம் போட்டுவிடுவானாம். தன் பெற்றோருடன் ஒரு நிமிடம்கூடத் தங்கியிருக்கப் போவதில்லையாம். அவன் தன் மனைவியைச் சகலவிதங்களிலும் நவநாகரிகமானவளாக மாற்றப் போகிறான். அம்மா, தங்கை ஆகியோரின் இன்ஃப்ளுயன்ஸ் இல்லாமலிருந்தால் தான் சாத்தியமாகும். ஒரு நாயை ட்ரெயின் செய்வதுபோல அவன் அவளை ட்ரெயின் செய்வான். கேர்ள்ஸ் ஆர் ஸ்டுபிட். நாம்தான் அவர்களுக்குப் பிடிவாதமாகப் போதிக்க வேண்டும்...

ரமணி பேசிக்கொண்டேயிருந்தான். ஜன்பத்தின் ஒரு முனையிலிருந்து இன்னொரு முனைவரை அவர்கள் நடந்து, மறுபடி அந்த முனையிலிருந்து கிளம்பிய இடத்தை நோக்கி நடந்தார்கள். பல தடவைகள் அந்தப் பாதையில் ரமணியுடன் இதே போலப் பெண்களை நோட்டமிட்டவாறே நடந்த தருணங்கள் செல்லப்பாவுக்கு நினைவு வந்தன. அவனுக்கு ஒரு ஏக்கம் உண்டாயிற்று. சிறுவர்கள் அப்பாவின் கையைப் பிடித்துக்கொள்வதைப் போல, அவன் ரமணியின் கையைப் பிடித்துகொண்டான். ரமணி அவன் தோளைச் சுற்றிக் கையைப் போட்டு அணைத்துக்கொண்டான். எவ்வளவு இதமாக, இன்பமாக, பாதுகாப்பாக இருந்தது! ரமணி! நீ ஏன் கல்யாணம் செய்துகொள்ள விரும்புகிறாய், இதையெல்லாம் கலைக்க விரும்புகிறாய்?

இந்தியன் ஆயில் கட்டிடத்தின் எதிரே அவர்கள் சற்று நின்றார்கள். அந்த இடத்தில் பெண்களுடைய அலங்காரப் பொருள்கள் விற்கும் கடைகள் நிறைய இருந்தன. எனவே பெண்களின் கூட்டம் நிறைய இருந்தது. இரும்புக் கிராதிகளில் சாய்ந்தவாறே நின்றுகொண்டு, பெரும்பாலான நாட்களைப் போல அன்றும் அவர்கள் பெண்களை 'வேடிக்கை' பார்க்கத் தொடங்கினார்கள்...

"அது சரி; உன் கல்யாணம் எப்போது?" என்று ரமணி கேட்டான்.

செல்லப்பா அந்த அடுத்த வீட்டுப் பெண்ணை நினைத்துக் கொண்டான். பஸ்ஸில் ஏற்பட்ட அனுபவங்களை நினைத்துக் கொண்டான். "தெரியாது" என்றான்.

"சாந்தா எப்படியிருக்கா?"

"இருக்கா."

"உனக்கென்னப்பா, பெரிய ஆள்."

"உம்?"

"என்னுடைய கவலையெல்லாம் உனக்கு இல்லை. பெரிய இடத்திலேருந்து, நாகரிகமானவளா ஒருத்தியை உங்க வீட்டிலே ஏற்பாடு பண்ணிடுவா – உங்கம்மா மாதிரியே ஒருத்தி."

"அப்படியா?"

"ஆமாம்; இல்லையா?"

"தெரியாது."

"அஃப்கோர்ஸ், அதிலேயும் பிரச்சனைகள் இல்லாமல் இல்லை."

"என்ன பிரச்சனைகள்.?"

"உனக்குத் தெரியாமலா இருக்கும்?"

"எனக்குத் தெரியாது."

"சின்னப் பாப்பா."

"நீ பெரிய தாத்தாவா?"

"ஆமாம்."

"சரி, விஷயத்தைச் சொல்லு."

"சிலதையெல்லாம் கண்டுக்காதது மாதிரி இருக்கணும்னு சொல்ல வந்தேன்."

"எதையெல்லாம்?"

"அதாவது உதாரணமா....வேண்டாம், நீ கோச்சுக்கப் போறயோன்னு பயமா இருக்கு."

"சும்மா சொல்லு."

"இப்ப உங்க அம்மா இருக்கா. டிராமாவிலேல்லாம் நடிக்கிறா, ஸோஷலாப் பழகறா... என் வைஃப் அந்த மாதிரி இருந்தா எனக்குப் பிடிக்குமான்னு யோசிச்சுப் பார்க்கிறேன்."

"நாகரிகமானவளா இருக்கணும்னு இப்ப சித்த முந்தி சொன்னே?"

"ஆமாம்; ஆனா..."

"எங்கம்மா அல்ட்ரா மாடர்னா இருக்காள்னு தோணறதா?"

"நாட் எக்ஸாக்ட்லி; ஆக்சுவலி ஐ லைக் ஹெர்."

"உம்?"

"அதுதான் பிரச்சினை."

"வாட் டூ யூ மீன்?"

"என் வைஃபையும் இப்படி சிலர் லைக் பண்றா வச்சுக்கோ, அதை அவள் டிஸ்கரேஜ் பண்ணாமலிருக்கா வச்சுக்கோ..."

பளாரென்று விழுந்தது அறை. வாக்கியம் முடிவதற்கு முன்பாகவே பேச்சைத் துண்டித்தவாறு விழுந்தது. ரமணி கன்னத்தைத் தடவியவாறு செல்லப்பாவை ஆச்சரியத்துடன் பார்த்தான். செல்லப்பாவுக்கும் ஆச்சரியமாகத்தான் இருந்தது. மறுபடியும் அவன் கோபம் வெளிவந்துவிட்டது. அது அறையாகவும் உருப்பெற்றுவிட்டது. எதற்காக இந்தக் கோபம்? யார் மேல்?

இருவரும் மௌனமாக நடக்கத் தொடங்கினார்கள். ஜன்பத் முனையை அடைந்ததும், மௌனமாக ஒருவர் பார்வையை ஒருவர் தவிர்த்தபடி சற்று நேரம் நின்றார்கள். "ஐ ஆம் ஸாரி...எனக்கு இன்னிக்கு மனசு சரியில்லை" என்றான் செல்லப்பா.

"பரவாயில்லை... நானும் அப்படிப் பேசியிருக்கப்படாது" என்றான் ரமணி.

மறுபடி சில நிமிடங்கள் மௌனமாக ஊர்ந்தன. "சரி எனக்கு லேட்டாச்சு, வரட்டுமா?"

"ஓ.கே. விஷ் யூ ஆல் தி பெஸ்ட்!"

"தாங்க்ஸ்."

ரமணி நடக்கத் தொடங்கினான். செல்லப்பா நடந்து செல்லும் அவனையே பார்த்தவாறு நின்றான். தூரத்தில், வெகு தூரத்தில் அவன் சென்று மறையும் வரையில் பார்த்துக்கொண்டே நின்றான். தன் வாழ்க்கையில் ஏதேதோ திடீரென்று முடிவடைந்துவிட்டதாகத் தோன்றியது. தனக்கென்று யாரும், எதுவும் இல்லை. விக்கி விக்கி அழவேண்டும் போலிருந்தது. அவன் ஒரு சினிமாத் தியேட்டரை நோக்கி நடந்தான். அங்கிருந்த புகைப்படங்களைப் பார்க்கத் தொடங்கினான். கவர்ச்சியான நடனக்காட்சிகள் நிறைந்த இந்திப் படம் . . .

"டிக்கெட் வேண்டுமா?"

அவன் திரும்பினான். பருமனாக ஒருவர் அவனருகில் நின்றிருந்தார். "என்னிடம் ஒரு ஸ்பேர் இருக்கிறது" என்றார்.

அவன் சற்று யோசித்துவிட்டு "ஆல் ரைட். ஐ வில் ஹாவ் இட்" என்று காற்சட்டைப் பைக்குள் கையை விட்டுப் பணம் எடுக்கப் போனான். அவர் சட்டென்று அவன் கையைப் பிடித்துத் தடுத்தார். "அவசரமில்லை" என்றார். "யூ ஆர் அலோன்?"

"யெஸ்."

"நானும்தான். கம் ஆன். லெட்ஸ் ஹாவ் காஃபி ஆர் ஸம்திங். படம் ஆரம்பிக்க இன்னும் நேரமிருக்கிறது."

தியேட்டருக்குள்ளேயே இருந்த ஸ்நாக்-பாருக்குள் இருவரும் நுழைந்தார்கள். காலியாக இருந்த ஒரு மேஜையருகில் போய் செல்லப்பா உட்கார்ந்தான். அவர் அவனெதிரில் உட்காராமல் அவன் அருகிலேயே நெருங்கிக்கொண்டு அமர்ந்தார். "தனியாக இருப்பதென்பது மிக மோசமான விஷயம் – இல்லையா?" என்றார்.

அவன் புன்னகை செய்ய முயன்றான். உள்ளே வெளிச்சம் மிக மங்கலாக இருந்தது. முகங்கள்கூடச் சரியாகத் தெரியவில்லை. அங்கே புன்னகை செய்வதுகூட வீண்தான். பாப் மியூஸிக் 'ஜிங்க் ஜிங்க்' என்று ஒலித்துக்கொண்டிருந்தது. அவர் அவன் பெயரைக் கேட்டார். அவன் சொன்னான்.

"ஸ்டூடண்ட்?"

"ஆமாம்."

என்ன சப்ஜெக்ட் என்று கேட்டார். எந்தக் கல்லூரியென்று கேட்டார். எங்கே வசிக்கிறானென்று கேட்டார். அவனுக்கு என்ன பிடிக்கும், பிடிக்காது? அவனுடைய பிறந்த தேதி என்ன? – ஒன்று விடாமல் எல்லாம் கேட்டார். பிறகு தன்னைப் பற்றியும் சொல்லிக் கொண்டார். ஏதோ ஒரு மினிஸ்ட்ரியின் பெயரைக் குறிப்பிட்டு, அங்கேதான் வேலை செய்வதாகச் சொன்னார். அவருக்கு மதராஸி களை ரொம்பப் பிடிக்கும். மதராஸிகள் ரொம்ப நல்லவர்கள். மதராஸிச் சாப்பாடு, தின்பண்ட வகைகள் அவருக்குப் பிடிக்கும்.

சாம்பார் என்றால் அவருக்கு உயிர். இப்போது என்ன, மஸால் தோசா சாப்பிடலாமா?

"நான் தோசை மட்டும்தான் சாப்பிடுவேன் என்றில்லை" என்றான் செல்லப்பா.

"ஓ, யெஸ், யெஸ், ஷ்யூர்." என்று அவர் அவன் தொடையில் தட்டினார். "எது வேண்டுமானாலும் – வாட்டெவர் யூ லைக்."

அவர் தன் கையால் அவன் தொடை மேல் மெல்லத் தடவத் தொடங்கினார். அப்போது அவன் பாக்கெட்டில் இருந்த சுருட்டுகளில் ஒன்று அவர் கையில் இடறியது. "பேனாவா" என்றார் அவர்.

"சுருட்டு."

"ஓ! வெரிகுட். யூ ஸ்மோக் சுருட்!"

"ஸம் டைம்ஸ்."

"வெரிகுட், வெரிகுட். ஆனால், வீட்டில் குடிப்பதுதான் பிரச்னையாயிருக்கும், இல்லையா?"

செல்லப்பா பேசாமலிருந்தான். "ஹ ஹ ஹ. ஐ நோ, ஐ நோ!" என்று அவர் சிரித்தார். "என்னுடைய வீட்டுக்கு வந்து நீ குடிக்கலாம். பெரிய வீடு. அங்கே நீ என்ன வேண்டுமானாலும் செய்யலாம்."

அவனுடைய தொடையின் மீது தடவிக் கொண்டிருந்த அவர் கை மேலே, மேலே சென்றவாறு இருந்தது. "இது என்ன?" என்றார் அவர் சிறிது நேரங்கழித்து. "இன்னொரு சுருட்டா?"

அவனுக்கு அவரிடமிருந்து விடுபட்டு ஓட வேண்டும் போலிருந்தது. அதே சமயத்தில் எங்கே போவதென்றும் குழப்பமாக இருந்தது. வீட்டுக்கா? அங்கே போய் என்ன செய்வது? ரமணியிடமா? அவன் இனி தன்னை மதிப்பானா, என்ன? அவன் அந்தப் பருமனான மனிதரின் அருகில் உட்கார்ந்துகொண்டேயிருந்தான். அவர் அவன் கால்களுக்கிடையில் கையால் வருடியவாறு இருந்தார்.

# 23

இன்று மறுபடி வகுப்புக்கு லேட்டாகிவிட்டது. யுனிவர்ஸிடி பஸ் ஸ்டாண்டில் பஸ்ஸைவிட்டு இறங்கும்போதே மணி பத்தரை யாகிவிட்டது. இப்போது வகுப்புக்குள் நுழைந்தால் அந்த இளம் லெக்சரரின் பரிகாசத்துக்கு ஆளாக நேரிடும். ('நைஸ் ஆஃப் யூ டு ஹாவ் கம். எங்களை நினைவுகொண்டதற்கு நன்றி')

பிளடி, பிளடி, பாஸ்டர்ட். ரொம்பத்தான் அலட்டிக் கொள்கிறான். ஓவர் ஸ்மார்ட்.

கணேசன் பஸ்ஸிலிருந்து இறங்கியதும் இறங்காததுமாக சிகரெட்டை வாயில் வைத்துப் பற்றவைத்துக்கொண்டான். எரிச்சலைப் புகையாக வெளியேற்றினான். அந்த சிகரெட் நேற்று மாலையிலிருந்து கால்சராய்ப் பைக்குள் கிடந்தது. அந்தச் சிகரெட்டுக்காக வேண்டியே இன்று – ஐந்தாவது நாளாக – இந்தக் கால்சராயை மீண்டும் அணியும்படி ஆகிவிட்டது. தம்பி, தங்கை, அப்பா, அம்மா இவ்வளவுபேர் பார்வைக்கும் தப்பி அந்தச் சிகரெட்டை கால்சராய்ப் பைக்குள்ளிருந்து வெளியிலெடுத்து வேறிடத்துக்கு மாற்ற அவனால் முடியவில்லை. அதை வீட்டிலேயே விட்டு வேறு கால்சராயணிந்து வரவும் முடியவில்லை.

சீ, என்ன வாழ்க்கை! வீட்டில் ஒரு சிகரெட் குடிக்க முடியாமல், காண்பிக்கக்கூட முடியாமல்! அனாவசிய ஒளிவு மறைவு; அனாவசியக் குற்ற உணர்வுகள், உளைச்சல்கள், இறுக்கம், எரிச்சல். இயல்பாக, விரும்பியவண்ணம் இருக்கமுடியாத சூழ்நிலை. அம்மாவின் கட்டுப்பாட்டுச் சிறை. தம்பி தங்கைகளின் போட்டி பொறாமைகள், பூசல்கள். எரிச்சல், எரிச்சல், ஓயாத எரிச்சல். இந்த எரிச்சலே அவனை மெல்ல மெல்ல அரித்துச் சாப்பிட்டுவிடப் போகிறது.

சிகரெட் புகை அவனுள்ளிருக்கும் எரிச்சலையெல்லாம் ஓரளவு

வெளியேற்றிச் சுத்தப்படுத்துவதுபோலத் தோன்றுகிறது. புது மனிதனாக உணரச் செய்கிறது. இந்த யுகத்தைச் சேர்ந்தவனாகவும், அவர்கள் வீட்டில் நிலவிய பழைய யுகத்தைச் சேராதவனாகவும். ஒரு பெரும் பாய்ச்சல், ஒரு யுகத்திலிருந்து இன்னொரு யுகத்துக்கு.

ஆம். அவர்கள் வீட்டுக்கும் சர்வகலாசாலைக்குமிடையே ஒரு சில மைல்கள் அல்ல, பல ஆயிரம் வருடங்கள் இருந்தன. அதனால் தான் போலும், தினசரி அவனுக்கு லேட்டாகிவிடுகிறது.

ஆனால் இன்று லேட்டானதும் நல்லதாகத்தான் போயிற்று. இல்லாவிட்டால் வகுப்புக்குச் செல்ல வேண்டியிருந்திருக்கும். அந்த லெக்சரரின் முகத்தையே பார்த்துக்கொண்டு, அவன் பேசுவதையெல்லாம் ஆர்வத்துடன் கேட்பதுபோலப் பாசாங்கு செய்யவேண்டியிருக்கும். அவனுடைய ஹாஸ்யங்களுக்குச் சிரிக்க வேண்டியிருந்திருக்கும். வரவர இவையெல்லாம் அவனுக்கு மிகவும் சிரமமான காரியங்களாகிக்கொண்டிருந்தன. வகுப்பில் லெச்சரரின் முகத்தைப் பார்த்துக்கொண்டிருக்கும்போது அவனைப் பற்றிய ஏதேதோ எண்ணங்கள், விமரிசனங்கள் அவன் மனதில் குமிழி யிட்டவாறு இருந்தன – அன்றன்று எதையோ படித்துவிட்டு வந்து தளுக்காக அவர்களிடம் எதையோ பேசி ஏமாற்றி அதற்காக அவன் மாதம் ஆயிரம் ரூபாய் பெறுவது பற்றி, இந்தச் சம்பளத்தின் அடிப்படையில் அவன் பெற்றுள்ள அழகிய, படித்த மனைவி பற்றி, வெளிநாட்டிலிருந்து நேற்றுத்தான் திரும்பியவன் போன்ற அவனுடைய உடைகளையும் பாவனைகளையும் உச்சரிப்பையும் பற்றி, சம்பந்தமில்லாமல் நகைச்சுவைகளை உதிர்த்தவாறு பெண்கள் பக்கம் அவன் பார்வை அலைவது பற்றி.

இடியட்! பம்பாய்ப் படங்களின் கதாநாயகனாக இருக்க வேண்டியவனெல்லாம் லெக்சரராக வந்து கழுத்தையறுக்கிறான்.

கஃபே வருவதற்கும், சிகரெட் தீர்வதற்கும் சரியாக இருந்தது. கணேசன் கஃபே வாசலிலிருந்த சிகரெட் கடையில் இன்னும் இரண்டு சிகரெட்டுகள் வாங்கிக்கொண்டான். ஒன்றைப் பற்ற வைத்தான். 'ஹாய்!' என்று அவன் தோளில் ஒரு கை விழுந்தது. அவன் திரும்பினான்.

ஜி.பி. நின்றிருந்தான். ஜார்ஜ் பெப்பர்டின் சாயலில் இருந்த அவனுக்கு அந்த நடிகருடைய இனிஷியல்களே பெயராக அமைந்துவிட்டிருந்தன.

"ஹாய்!" என்றான் கணேசன்.

"நோ கிளாஸ்?"

"நான் போகலை."

"பேபி, உனக்கு டேஸ்ட் இருக்கிறது."

"உன்னைவிட அல்ல."

ஜி.பி. யின் உதட்டில் ஒரு புன்னகை ரேகை நெளிந்து மறைந்தது. அவர்களைக் கடந்துசென்ற இரண்டு பெண்களைப் பார்த்தவாறு, பாக்கெட்டிலிருந்து சீப்பை உருவியெடுத்து தலைமயிரினூடே அங்குமிங்குமாக ஓடவிட்டான். அது தலையை வாரிக்கொள்ளும் நோக்கத்துடன் அல்ல. ஒரு பாவனைக்காகவே செய்யப்பட்டதாக இருக்கவேண்டும். நீண்டு வளர்ந்திருந்த அவனுடைய தலைமயிருக்கு அந்தச் சீப்பு எந்தவிதத்திலும் ஈடுகொடுக்கக்கூடியதாக இல்லை.

"கம் ஆன், அந்தப் பெண்களைப் பின்தொடருவோம்."

இருவரும் கஃபேக்குள் நுழைந்தார்கள். ஒரே கூட்டமாக இருந்தது. பலர் அவர்களைப் போலவே முதல் வகுப்பை 'கட்' செய்திருக்க வேண்டும். அவர்களுடைய லெக்சரரைப் போலவே சகித்துக்கொள்ள முடியாத லெக்சரர்கள் இன்னும் நிறைய இருக்க வேண்டும்.

அந்தப் பெண்களும் இடம் கிடைக்காமல் ஒரு ஓரமாக நின்றிருந்தார்கள். ஜி. பி. அவர்களருகில் அவசரமாகச் சென்று, தன் பையில் செருகியிருந்த பேனாவை உருவியெடுத்து அவர்கள் முன் நீட்டியவாறு சொன்னான்: "எக்ஸ்க்யூஸ் மி, இதை நீங்கள் நழுவ விட்டு விட்டீர்கள்."

அவர்கள் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டார்கள். "என்னுடையதில்லை" என்றாள் ஒருத்தி.

"என்னுடையதுமில்லை" என்றாள் இன்னொருத்தி.

"ஸ்ட்ரேஞ்ச். நீங்கள் போகும்போது விழுந்தது மாதிரித்தான் இருந்தது" என்று ஜி.பி. கணேசனைப் பார்த்தான்.

"எனக்கும் அப்படித்தான் இருந்தது" என்றான் கணேசன்.

"இல்லை; எங்களுடையதில்லை."

"யூ ஆர் ஷ்யூர்."

"யா."

"ஸ்ட்ரேஞ்ச்" என்று ஜி.பி. அந்தப் பேனாவை விரலிடுக்கில் சிகரெட்டைப் பிடித்துக்கொள்வதுபோல் பிடித்துக்கொண்டு, வாயில் ஓரிரு தடவைகள் வைத்து உறிஞ்சி, புகைவிடுவது போலப் பாவனை செய்தான். முகத்தில் ஒரு தீவிர பாவம்.

"வருத்தப்படாதே" என்று கணேசன் அவன் முதுகில் தட்டிக் கொடுத்தான். "உங்களுடையதில்லை என்று வருத்தப்படுகிறான்" என்று அந்தப் பெண்களிடம் விளக்கினான்.

"ஹ்ூம்" என்று ஜி. பி. பெருமூச்சுவிட்டான். "இந்தா, நீ கொஞ்சம் வாங்கிக்கொள்."

கணேசன் பேனாவை வாங்கிக்கொண்டான்.

"ரொம்பக் கனமாக இருக்கிறதில்லை?"

"ஆமாம்."

"யாருடையதோ தெரியவில்லை..." என்று முணுமுணுத்தவாறு ஜி.பி. மறுபடி அந்தப் பெண்களைப் பார்த்துக் கேட்டான்: "நிச்சயமாக உங்களுடையதில்லையா?"

"இல்லை" என்னும்போது, அவர்களுடைய முகத்தில் புன்னகையின் ஒரு இலேசான சாயல் தென்பட்டது போலிருந்தது.

"அஃப்கோர்ஸ், உங்களைப் பார்த்தால் அப்படித் தொலைக்கக் கூடியவர்கள் மாதிரியும் இல்லை" என்றான் ஜி. பி. அந்தப் புன்னகை யினால் துணிவு பெற்றவனாய்.

"ஆமாம். ரொம்ப ஜாக்கிரதையுள்ள டைப்ஸ்" என்றான் கணேசன்.

"உங்களுக்கு எல்லா டைப்ஸையும் தெரியுமா?" என்று பெண்களில் ஒருத்தி கேட்டாள்.

ஜி.பி. கடகடவென்று சிரித்தான். "அவன் வெறும் சின்னப் பையன்" என்றான்.

"இவன் என்னுடைய அப்பா" என்றான் கணேசன். "ஹாய், டாடி!"

ஜி. பி. அவனைக் குத்தப்போவது போலப் பாசாங்கு செய்தான். அந்தப் பெண்கள் சிரித்தார்கள். ஜி. பி. வெயிட்டரைக் கூப்பிட்டு, வெளியே நான்கு காப்பிகள் கொண்டு வரும்படி கூறினான். நால்வரும் வெளியே வந்து அங்கிருந்த கைப்பிடிச்சுவர்மேல் உட்கார்ந்தார்கள். ஜி. பி. அந்தப் பெண்களிடம் தொடர்ந்து ஏதோ பேசியவாறிருந்தான். கணேசன் அவ்வளவு அதிகம் பேசவில்லை. அப்புறம், பெண்களுக்காகக் காய்ந்து கிடப்பவன் என்று அந்தப் பெண்கள் நினைத்துவிடுவார்கள். அவன் ஜாக்கிரதையாகப் பேசினான், பழகினான். ஆனால், உள்ளூர மகிழ்ச்சி பொங்கியது. சற்றுமுன் வரையில் வெறுக்கத்தக்கதாகத் தோன்றிய வெளியுலகம், இப்போது ரம்மியமானதாகத் தோன்றியது. மேகப் படலம் ஒன்றினால் மறைக்கப்பட்டிருந்த சூரியன் திடீரென்று வெளிவந்து, மேலே கவிந்திருந்த மர இலைகள் வழியே ஸ்பாட் லைட்போல, அவர்களின்மேல் வந்து விழுந்தது.

வெய்யிலின் இன்னொரு கிரணம் மாணவர் யூனியன் ஆபீசில் பளபளப்பான எஃகு மேஜைக்கு இருபுறங்களிலும் அமர்ந்திருந்த இருவர் மீது விழுந்தது. ஒருவன் 'மாணவர் யூனியன்' தலைவன் கிஷோர். இன்னொருவர், பிரபல வலதுசாரிக் கட்சி ஒன்றின் எம்.பி. யான ஆர்ய பிரகாஷ்.

"அப்போது, கூட்டம் சேர்த்துக்கொண்டு வைஸ் சான்ஸலர் ஆஃபீசுக்கெதிரே போய் நின்று கோஷம் எழுப்ப வேண்டுமென் கிறீர்களா?" என்றான் ராம் கிஷோர்.

"ஆமாம்."

"பரீட்சையில்லாமலேயே எல்லாரையும் பாஸாக்க வேண்டு மென்று?"

"ஆமாம்."

ராம் கிஷோர் சற்று நேரம் பேசாமலிருந்தான். பிறகு, "எனக்கு இதொன்றுமே பிடிக்கவில்லை" என்றான்.

"ஐ நோ" என்றார் ஆர்ய பிரகாஷ். உன் உணர்ச்சிகள் எனக்குப் புரிகின்றன. ஆனால் நான் மிகவும் நிர்ப்பந்தத்திலிருக்கிறேன்."

ராம் கிஷோர் கட்சித் தலைவரின் பெயரைக் குறிப்பிட்டு அவருடைய நிர்ப்பந்தமா என்று கேட்டான்.

"பெயர்களை எதுவும் நாம் குறிப்பிட வேண்டாமென நினைக்கிறேன்" என்று ஆர்ய பிரகாஷ் சுற்றுமுற்றும் பார்த்தார்.

"இங்கே மறைவான ஒலிப்பதிவுச் சாதனங்கள் எதுவும் இல்லை; நீங்கள் பயப்பட வேண்டாம்" என்றான் ராம் கிஷோர்.

"நான் யாருக்கும் பயப்படவில்லை" என்று ஆர்ய பிரகாஷ் தம்முடைய நாற்காலியில் நன்றாகச் சாய்ந்து உட்கார்ந்தார். "இது கட்சிக் கட்டுப்பாட்டைப் பொறுத்த விஷயம்."

"கட்சியில் கட்டுப்பாடு இருக்கவேண்டும்; ஆனால் சர்வகலா சாலையில் அது இருக்கக்கூடாது; இல்லையா?"

"இன்று நீ அதிகம் பேசுகிறாய்."

"ஐ ஆம் ஸாரி. இனிப் பேசவில்லை. நீங்கள் என் நண்பரென்று நினைத்தேன். என் போன்றவர்களிடம் அனுதாபமுள்ளவரென்று நினைத்தேன்."

"இப்போதும் நான் உன் நண்பன்தான்."

"என் நிமித்தமாகவா, அல்லது என் பதவி நிமித்தமாகவா?"

"நானும் உன்னைப் பற்றி இதே சந்தேகம் தெரிவிக்கலாம் அல்லவா? மேலும், ஏற்கனவே என் பதவியின் மூலம் பலனும் அடைந்தாயிற்று."

"இத்தகைய ஏதோ ஒரு பலனை எதிர்ப்பார்த்துத்தான் உங்களிடம் வந்தேனென்று நினைக்கிறீர்களா?"

"எனக்குத் தெரியாது. நான் தெரிந்துகொள்ளவும் ஆசைப்பட வில்லை. நீ என்னைச் சுயநலத்துக்காகப் பயன்படுத்திக்கொண்டாயா, இல்லையா என்பது உன் ஒழுக்கப் பிரச்னை."

"அப்படியானால், இப்போது, என்னை, என் பதவியைப் பயன் படுத்துவது யாருடைய ஒழுக்கப் பிரச்னை?"

"என்னுடையது அல்ல, கட்சியுடையது."

"ஐ ஸீ. ஸோ, உங்கள் கையில் எப்போதும் எதனாலும் கறை படிவதில்லை—அல்லவா? மிக நல்ல ஏற்பாடு."

ஆர்ய பிரகாஷின் பொறுமை எல்லை மீறிக்கொண்டிருந்தது. "லுக்! இது காலேஜ் பேச்சுப் போட்டியல்ல" என்றார். "உன்னை வெள்ளைத் தேவதையாகவும் என்னைக் கறுப்புத் தேவதையாகவும் உருவகப்படுத்திக்கொண்டு சொற்போர் நிகழ்த்துவது குழந்தைத்

தனமாக இருக்கிறது. முழுப் பிரக்ஞையுடன்தான் தேர்தலில் போட்டியிட்டாய், எல்லாம் தெரிந்துகொண்டுதான் எங்கள் உதவியைப் பெற்றுக்கொண்டாய். இந்த உதவியில்லாமல் நீ ஜெயித்திருக்க முடியாதென்பது உனக்குத் தெரியும். இந்த உதவி பலனை எதிர்பாராததல்ல என்பதும் தெரியும். நாங்கள் நடத்துவது அரசியல் கட்சி; செஞ்சிலுவைச் சங்கம் அல்ல."

"எனக்கு அதைத் தெளிவுப்படுத்தியதற்கு நன்றி."

"உன்னிடம் எனக்கொரு சிரத்தை இருந்தது. இப்போதும் இருக்கிறது. தலைவர் முதலில் திலிப் கன்னாவைத்தான் ஸப்போர்ட் பண்ண வேண்டுமென்றார். அப்போதும் உன் பெயரைச் சிபாரிசு செய்தது நான்தான். உன்னிடம் நான் கொண்டுள்ள நம்பிக்கையைச் சிதைக்க மாட்டாய் என்று நம்புகிறேன்."

"இது போன்ற ஒரு போராட்டத்தை நடத்தத்தான் விரும்பினீர்களென்றால், அதற்கு கன்னாவையே ஆதரித்திருக்கலாமே! அவன் இதுபோன்ற காரியங்களை என்னைவிட நன்றாகவும் செய்வான் – அனாவசியக் கிலேசங்களன்றி."

"கன்னா ஒரு முரட்டு முட்டாள்."

"நம் தலைவருக்கும் அவனுக்கும் நிறைய ஒற்றுமை இருக்கிறது, இல்லை?"

ஆர்ய பிரகாஷ் பிடிவாதமாக மௌனம் சாதித்தார்.

"இன்று காலைத் தினசரியில் வந்திருந்த தலைவருடைய புகைப்படம் மிக நன்றாக இருந்தது – போட்டிங் கிளப்பில், சம்பளக் கமிஷனின் கொடும்பாவியைக் கொளுத்துவதுபோல ... இதெல்லாம் தான் நம் மக்களுக்குப் பிடிக்கிறது, இல்லை? ஜனரஞ்சகமான எதிர்ப்பு – தலைவர், மக்கள் இரு தரப்பினருக்கும் நன்றாகப் பொழுதுபோகிற விதமாக."

ஆர்ய பிரகாஷ் எழுந்தார். "நான் போகவேண்டும் – சொன்னதெல்லாம் நினைவிருக்கட்டும்."

"உட்காருங்கள், கூல் டிரிங்க்குக்குச் சொல்லியனுப்பியிருக்கிறேன். குடித்துவிட்டுப் போகலாம்."

ஆர்ய பிரகாஷ் மறுபடியும் உட்கார்ந்தார். அவருக்கு உண்மையில் அங்கிருந்து போக மனமில்லையா?

"ஸ்மோக்" என்று ராம் கிஷோர் இந்தியா கிங்ஸ் பாக்கெட்டை நீட்டினான். ஆர்ய பிரகாஷ் ஒரு சிகரெட்டை உருவியெடுத்து உதட்டில் பொருத்திக்கொண்டார். ராம் கிஷோர் அவருடைய சிகரெட்டைப் பற்றவைத்தான். இருவரும் சில நிமிடங்கள் மௌனமாக சிகரெட் புகைத்தவாறு அமர்ந்திருந்தார்கள். திடீரென்று மூன்று வருடங்கள் பின்னோக்கிச் சென்றுவிட்டதுபோலிருந்தது. அவருடைய பேச்சுக்களாலும், எழுத்துக்களாலும் கவரப்பட்டு, முதன் முதலாகத்

தான் ஒரு தேவதா விசுவாசத்துடன் அவரைத் தேடிச் சென்றது, ராம் கிஷோருக்கு நினைவு வந்தது. அப்போது அவர் உண்மையிலேயே ஒரு தேவதையாக, அரசியல் சேற்றிலே ஒரு செந்தாமரையாகத் தோன்றினார். அவனுடைய குருபக்தியை மனமுவந்து ஏற்றுக் கொண்டார். அவனுடைய இளமையினாலும் பரிசுத்தமான இலட்சியங்களினாலும் கவரப்பட்டுத்தான் அவர் அவனுடன் சிநேகத்தை வளர்த்துக்கொண்டாரா, அல்லது பின்னால் அவனை ஒரு பகடைக்காயாக உபயோகப்படுத்தலாம் என்றெண்ணியா? அவனும்தான் என்ன, அவருடைய கருத்துக்களால் கவரப்பட்டுத்தான் ஒவ்வொரு முறையும் அவரைப் பார்க்கச் சென்றானா? எப்போது, எந்தக் கட்டத்தில், அவர்கள் ஒருவரையொருவர் சுயநலத்துக்காகப் பயன்படுத்தத் தொடங்கினார்கள்? ஒருவேளை எல்லா மனித உறவுகளின் இறுதி நிலையும் இதுதானோ? இதை அவர்கள் தவிர்த்திருக்கவே முடியாதோ?

"உங்களால் இதுபோலவெல்லாம் செய்ய முடியுமா?" என்றான் ராம் கிஷோர்.

"எதுபோல?"

"கொடும்பாவிகள் கொளுத்துவது, ஆளும் கட்சியினரையும், அவர்களுடைய கொள்கைகளையும் ஜனரஞ்சகமாக விமரிசிப்பது, ஊர்வலங்கள் நடத்திச் செல்வது, நாட்டில் நிலவிவரும் ஏழ்மை குறித்து மனம் நெகிழ்ந்து எல்லாரும் பார்க்கும்படியாகக் கண்ணீர் பெருக்கி, நம் மக்கள் பலரிடம் இல்லாத ஒரு பொருளைப் பாக்கெட்டிலிருந்து எடுத்துக் கண்ணைத் துடைத்துக்கொள்வது."

"அது என்ன பொருள்?"

"கைக்குட்டை."

ஆர்ய பிரகாஷ் சிரிக்கவில்லை. "மற்றவர்களை விமரிசிப்பது சுலபம்" என்று சிகரெட் துணுக்கைச் சாம்பல் கிண்ணத்தில் தேய்த்து அணைத்தார்.

"நான் சொல்வதும் அதுதான்" என்றான் ராம் கிஷோர். கோகோ கோலா வந்துவிட்டது. இருவரும் அதை மெல்ல உறிஞ்சத் தொடங்கினார்கள்.

"நம் நாட்டில் எத்தனை பேர் கோகோ-கோலா குடிக்கிறார்கள்? அல்லது இந்தியா - கிங்ஸ் குடிக்கிறார்கள்?" என்றார் ஆர்ய பிரகாஷ்.

"அல்லது ஸ்காச் விஸ்கி" என்று ராம் கிஷோர் சேர்த்தான். அது ஆர்ய பிரகாஷின் மிகப் பிரியமான பானம். அவரைப் பார்க்கச் சென்றபோதெல்லாம் அவர் அவனுக்கு வழங்கிய பானம்.

"வேண்டுமா?" என்றார் ஆர்ய பிரகாஷ்.

"என்ன?"

"விஸ்கி."

"நோ, தாங்ஸ்."

"வேண்டுமென்றால் நாளைச் சாயங்காலம் வீட்டுக்கு வா. தலைவரையும் கூப்பிட்டிருக்கிறேன்."

"ஐ வில் ட்ரை."

கோகோ கோலா தீர்ந்துவிட்டது. ஆர்ய பிரகாஷ் எழுந்தார். ராம் கிஷோரும் கூடவே எழுந்து, அவருடன் வாசல் வரை வந்தான். வெளியே டாக்ஸி நின்றிருந்தது. தூங்கி வழிந்துகொண்டிருந்த டாக்ஸிக்காரன் இவர்களைப் பார்த்ததும் நிமிர்ந்து சரியாக உட்கார்ந்தான். "ஸோ – இன்றே செய்து விடு. அல்லது குறைந்தபட்சம் நாளை" என்றார் ஆர்ய பிரகாஷ்.

"உத்தரவு" என்றான் ராம் கிஷோர்.

ஆர்ய பிரகாஷ் டாக்ஸிக் கதவைத் திறந்துவிட்டார். பிறகு ஏதோ நினைவு வந்தவர்போல ராம் கிஷோர் பக்கம் திரும்பினார். "என்னை ஏன் அந்தக் கேள்வி கேட்டாய்?" என்றார்.

"எந்தக் கேள்வி?"

"தலைவர் செய்வது போன்ற சில காரியங்களை என்னால் செய்ய முடியுமாவென்று."

"நாளை நீங்கள் தலைவரானால் இதையெல்லாம் செய்யவேண்டி வருமேயென்று தோன்றியது. அதே சமயத்தில், இதுபோன்ற செயல்களில் ஈடுபட்டிருப்பவராக உங்களைக் கற்பனை செய்து பார்க்கவும் முடியவில்லை."

"எல்லாத் தலைவர்களின் செயல் முறையும் ஒரே விதமாகத்தான் இருக்க வேண்டுமென்பதில்லை."

"ஆனால் பெருவாரியான மக்களின் கவனத்தை எளிதில் கவர வேண்டிய நிர்ப்பந்தத்தில் சிக்கும்போது – சுருக்கு வழிகள் மூலமாக அவர்களைக் கவர முயலும் வேறு தலைவர்களுடன் போட்டியிட வேண்டி வரும்போது – நீங்களும் சுருக்கு வழிகளைப் பின்பற்றத் தானே போகிறீர்கள்?"

"மக்கள் எப்போதும் இப்படியே இருக்கப் போவதில்லை. அவர்களுடைய தரத்தை உயர்த்த முடியுமென்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. ஆனால் அவசரப்பட்டால் நாம் எதுவும் சாதிக்க முடியாது. கொஞ்சம் பொறுமையாக இருக்கவேண்டும். நடைமுறைகளுக்கு ஏற்பக் கொஞ்சம் வளைந்து கொடுத்துக்கொண்டு, இப்போது மக்களைக் கவருகிறவற்றுடன் சமரசம் செய்துகொண்டு, தக்க தருணத்துக்காகக் காத்திருக்க வேண்டும். ஒரேயடியாக நம்மைத் தனிமைப்படுத்திக்கொள்வதால் என்ன பயன்?" ராம் கிஷோர் அவர் சொன்னவற்றை அசைபோட்டவாறு சில கணங்கள் பேசாமலிருந்தான். மேலே அவன் ஏதாவது பேசுமுன் அவனிடமிருந்து நாசூக்காக விடைபெற விரும்பியவராய், ஆர்ய பிரகாஷ் அவன்

முதுகில் தட்டிக் கொடுத்தார். "நீ அறிவுள்ளவன். நிதானமாக யோசித்துப் பார். ஓ.கே." என்று டாக்ஸியில் ஏறி உட்கார்ந்தார். டாக்ஸி கிளம்புமுன் ஜன்னல் வழியாக அவனைப் பார்த்து, "நாளை வருவாயல்லவா?" என்றார்.

"ஓ. கே." என்றான் ராம் கிஷோர். டாக்ஸி கிளம்பிச் சென்றது. கடவுளே, எனக்கு என்ன ஆகிக்கொண்டிருக்கிறது? நான் எங்கே சென்றுகொண்டிருக்கிறேன்? நாளைய பொற்காலத்துக்காக இன்று அவன் ஒரு மட்டமான ஊர்வலத்தை நடத்திச் செல்ல வேண்டும். மட்டமான கோஷங்களை எழுப்ப வேண்டும். மாணவர்களுடைய உணர்ச்சியைத் தூண்டி, அவர்களைக் கொச்சையானதொரு கிளர்ச்சியில் ஈடுபடுத்த வேண்டும். அவன் – மாணவர் யூனியன் தலைவனான அவன் – இதையெல்லாம் செய்ய வேண்டும்.

ராம் கிஷோர் தன்னையே வெறுத்துக்கொண்டான். நாளை ஆர்ய பிரகாஷ் வீட்டிற்குப் போகவேண்டுமா என்ன, என்று தன்னையே கேட்டுக்கொண்டான். தலைவரை வேறு அழைத்திருப்பதாக அவர் ஏன் சொல்ல வேண்டும்? அவருக்காக மட்டும் அவன் இனி அங்கே வரமாட்டானென்று பயப்படுகிறாரா? அவனுக்கு ஒரு புதிய ஆகிருதி ஏற்பட்டுவிட்டதாக மிரள்கிறாரா? அதனால்தான் திடீரென்று படபடப்பாகப் பேசினாரா? அவனுடைய இடத்தை அவனுக்கு உணர்த்த முயன்றாரா?

மறுபடி யூனியன் அலுவலகத்துக்குள் அவன் நுழைந்தபோது, சுவரில் மாட்டியிருந்த மகாத்மா காந்தியின் படம் பளிச்சென்று பார்வையில் பட்டது. அந்த அறையில் அந்தப் படத்துடன் தனித்திருக்கப் பயந்தவன்போல, அவன் அவசரமாக வெளியே வந்து, கதவை மூடிப் பூட்டினான். கஃபேயை நோக்கி நடக்கத் தொடங்கினான்.

– பதவியை ராஜினாமாச் செய்துவிட்டாலென்ன?

அப்போது இதுபோலப் பளபளப்பான எஃகு மேஜை உள்ள ஒரு அலுவலகத்தில் உட்கார்ந்திருக்க முடியாது. கோகோ கோலா வாங்கி வரும்படி யாரையும் விரட்ட முடியாது. கட்சித் தலைவர் ஒருவருடன் அமர்ந்து விஸ்கியருந்தும் வாய்ப்பைப் பெற முடியாது, பாஹர் கஞ்சில் இருந்த அவனுடைய இரண்டு அறை கொண்ட வீட்டில், தாத்தா, அப்பா, அம்மா, தம்பி, தங்கைகள் ஆகியோருடைய உபத்திரவத்தைச் சகித்துக்கொண்டு, தேமேயென்று கயிற்றுக் கட்டிலில் அமர்ந்திருக்க வேண்டியதுதான் – ஆகிருதியில்லாமல், முக்கியத்துவமில்லாமல்!

எதிரே வந்துகொண்டிருந்த இரண்டு இளம் லெக்சரர்கள் அவனுக்கு வணக்கம் தெரிவித்தார்கள். அவன் மதிப்பாகப் பதில் வணக்கம் செய்தான். ஆங்காங்கே சில மாணவர்கள், மாணவிகள் "ஹலோ" சொன்னார்கள். மாணவர்களிடம் அவன் பதில் ஹலோவுடன் நிறுத்திக்கொண்டான். மாணவிகளிடம் இரண்டு மூன்று நிமிடங்கள்

பேசினான்.

இந்த கௌரவம், இந்த வாய்ப்புகள்....

இதையெல்லாம் தவறவிடுவதாவது!

ஆர்ய பிரகாஷ் சொல்வது சரிதான். கொஞ்சம் கொஞ்சம் சமரசங்கள் செய்துகொள்ளத்தான் வேண்டும். அதில் தப்பில்லை.

ராம் கிஷோரின் மனக்கிலேசம் தீர்ந்தது. சூரியன் மறுபடி ஒரு பெரும் மேகத்தின் பின்னால் மறைந்தது...

"சூரியன்கூடப் பயந்து ஒளிந்துவிட்டது, உன் வேகத்தைப் பார்த்து" என்றாள் தாரா.

பத்ரி மோட்டார் சைக்கிளின் வேகத்தைக் குறைத்து, பின்னால் உட்கார்ந்திருந்த அவளைத் திருப்பிப் பார்த்தான். "கொஞ்சம் உரக்கப் பேசித் தொலையேன். காதில் விழவில்லை" என்றான்.

"ஒன்றுமில்லை."

"அநேகமாகப் பெண்கள் பேசுவது எல்லாமே ஒன்றுமில்லாதது பற்றித்தான்."

"அனுபவமா?"

பத்ரி ஹாண்டில்பாரிலிருந்து கைகளை எடுத்து, விரித்துக் காட்டி, 'நிறைய' என்று சைகை செய்தான். எதிரே ஒரு பெரிய லாரி வந்துகொண்டிருந்தது. "ஜாக்கிரதை!" என்று அவள் கத்தினாள். கடைசி நிமிடத்தில் அவன் மோட்டார் சைக்கிளை ஒடித்துத் திருப்பினான். 'அப்பாடி' என்று அவள் பெருமூச்சுவிட்டாள். "இனிமேல் நான் உன்னுடன் மோட்டார் சைக்கிளில் வரமாட்டேன்."

"நஷ்டம் உனக்குத்தான்."

"ஐ நோ."

"செத்துப்போய்விடுவோமென்று பயமா?"

"நான் நடுரோட்டில் செத்துப்போக விரும்பவில்லை?"

"கெட்டியாகப் பிடித்துக்கொள், என்னை."

"பிடித்துக்கொண்டுதானிருக்கிறேன். உன் இதயத்துடிப்பைக் கூட என்னால் உணரமுடிகிறது."

"நிறைய இந்திப் படங்கள் பார்க்கிறாய், நீ."

"உன்போன்ற இந்திப்பட ஹீரோக்கள் கூடத்தானே நான் நிறைய பழகவேண்டியிருக்கிறது?"

"சிரிப்பே வரவில்லை!"

"ஐ நோ, உனக்கு ஹாஸ்ய உணர்ச்சி போதாதுதான்."

"உன்னைப் பார்த்தாலே நான் டல்லாகிவிடுகிறேன்."

"பார்க்காதே."

"நீதான் என் வீட்டுக்கு வந்தாய்."

"உன் அம்மாவைப் பார்க்க வந்தேன்."

"அப்நார்மல் ஆக இல்லை?"

"எது?"

"ஒரு பெண்ணை இன்னொரு பெண் பார்க்க வருவது."

"டோண்ட் பீ ஸ்டுபிட்."

கிரீச்சென்று சிவப்பு ஸிக்னலுக்காக அவன் பிரேக் போட்டான். அவள் மறுபடி அவன்மேல் சாய்ந்தாள்.

"அது என் முதுகு; மெத்தையில்லை."

"தெரியும்."

"தெரிந்தால் மெதுவாகச் சாய்கிறது."

"வேண்டுமென்று சாயவில்லை. அப்படிச் சாய ஆசையுமில்லை."

"ஸேம் கேஸ் ஹியர்" என்று அவன் அவளை நோக்கிக் கையை நீட்டினான். அவள் அவன் கையைப் பற்றிக்கொள்ளவில்லை.

"முதுகைப் பிடித்துக் கொள்ளலாமென்றால் கையைப் பிடித்துக் கொள்ளக் கூடாது?"

"எனக்கு எதையும் பிடித்துக்கொள்ள வேண்டாம். நான் இங்கேயே இறங்கிப் போய்விடுகிறேன்."

"போ."

அவள் நிஜமாகவே இறங்கிவிட்டாள். சிவப்பு மஞ்சளாகி, மஞ்சள் பச்சையாகிவிட்டது. "கம் ஆன்" என்றான் அவன் பரபரப்புடன்.

"ஊஹூம்."

"தாரா, டோன்ட் பீ ஸில்லி."

"ஐ ஆம் ஸில்லி, யூ நோ."

வண்டிகள் வேறு வழியின்றி அவர்களைச் சுற்றிக்கொண்டு சென்றன. எல்லாரும் அவர்களை விநோதமாகப் பார்த்துக்கொண்டு சென்றார்கள். சிலர் சிரித்தவாறு.

அவள் நடைபாதையை நோக்கி நடந்தாள். அவன் எரிச்சலுடன் வண்டியைத் தள்ளிக்கொண்டு அவள் பின்னால் சென்றான்.

"ஏன், என் பின்னாலேயே வருகிறாய்?"

"போதும். வழியாதே. ஏறிக்கொள்."

"நான் உன்னுடன் வரவில்லை."

"நான் நிஜமாக விட்டுவிட்டுப் போய்விடுவேன்."

"போ."

அவன் போகாமல் அவளையே பார்த்துக்கொண்டு நின்றான்.

"போயேன்."

சட்டென்று அவன் அவளுடைய புஜத்தைப் பற்றினான். "என்ன வேண்டுமென்கிறாய்?"

அவள் அவன் பார்வையைத் தவிர்த்தாள். "எதுவுமில்லை."

"மூஞ்சியைப் பார்த்துப் பேசேன்."

"நீ கையை எடுத்துவிட்டுப் பேசு."

"நீ முதலில் பார்."

"நாட் இன்டரெஸ்டட்."

அவன் பிடிவாதமாக அவள் முகத்தைப் பிடித்துத் திருப்பினான். "இப்போது சொல்லு."

அவள் அவனைப் பார்த்து முழுமையான புன்னகை ஒன்றை வீசினாள். சூரியன் திடீரென்று மறுபடி மேகப் படலத்துக்குப் பின்னாலிருந்து வெளிப்பட்டது.

"ஏன் சிரிக்கிறாய்?" என்றான் அவன்.

"உன் தலை" என்றாள் அவள்.

# 24

டிஸ்கோத்தேயின் இருள். பத்ரியின் அணைப்பு. பத்ரியின் முத்தங்கள். பரம்பரை பரம்பரையாகத் தொடர்ந்து வரும் மூட மரபுகள், கட்டுப்பாடுகள் யாவற்றையும் சின்னாபின்னமாக உடைத்தெறிவது போன்ற உரத்த 'ராக்' இசை. அவர்களுடைய செய்கைக்கு ஓர் அர்த்தமுள்ள பின்னணியாக அமைந்த இசை. இதுதான் உண்மை. இதுதான். இந்தக் கணம் மட்டும்தான். இன்னும் அணைத்துக்கொள் பத்ரி, என்னை இன்னும் நெருக்கமாக அணைத்துக்கொள். எனக்கு என் அம்மாவைப் பிடிக்கவில்லை. அவளுடைய போதனைகள் பிடிக்கவில்லை. என் வீட்டில் ஆசாரமான சூழ்நிலை – பூஜையும் புனஸ்காரங்களும் – பிடிக்கவில்லை. வீட்டில் இருக்கும்போதெல்லாம் ஒரு புத்தகத்தைப் படித்தவாறு உட்கார்ந்திருக்கும் அப்பாவின் தனிமை பிடிக்கவில்லை. பகுத்தறிவுக்கு ஒவ்வாத அம்மாவின் ஆசாரங்களுடன் ஒத்துப்போய்க் கொண்டு, அதே சமயத்தில் என் நவீன வேட்கைகளை ஒடுக்கவும் முயலாத அவருடைய நடுநிலைமை பிடிக்கவில்லை. கணவனின் வேலை வெளியே போய்ச் சம்பாதித்துக் கொண்டு வருவது; மனைவியின் வேலை வீட்டைத் துப்புரவாக வைத்துக்கொள்வது, சமைப்பது, பண்டிகைகளை நினைவு வைத்திருந்து கொண்டாடி, பூஜைகள் செய்து, மரபைக் காப்பாற்றுவது, வம்ச விருத்தி செய்யும் உன்னதப் பணியில் கணவனுடன் ஒத்துழைப்பது – விருப்பத்தினாலில்லை, கடமைக்காக – திருமணம் என்ற ஏற்பாட்டின் நோக்கம் இதுதான், இவ்வளவுதான், என்று அவர்களைப் பார்த்தால் தோன்றுகிறது. ஆனால் இதுதானா பத்ரி? இவ்வளவேதானா? இந்த அச்சிலேயா நான் தயாராக வேண்டும்? அப்போதுதான் சமூகத்தில் அங்கீகாரம் பெறுவேனா? உன் போன்றவர்கள் உள்ளத்தாழத்தில் அதைத்தான் விரும்புகிறீர்களா? என் அம்மா – ஓ, அவள் பலவிதங்களில் எப்படி வெறுக்கத்தக்கவள்? அவளுக்குப்

படிப்புக் குறைவு. எனவே நானும், அப்பாவும் ஏதேதோ பெரிய புத்தகங்களை வைத்துக் கொண்டு படிப்பது, அவள் பொறாமையைக் கிளப்புகிறது. தாழ்வுணர்ச்சி கொள்ள வைக்கிறது. மரபு என்றும், காப்பாற்றப்பட வேண்டியது என்றும், தான் கொச்சையாகப் புரிந்துகொண்டிருப்பவற்றை ஒரு முரட்டுத் தீவிரத்துடன் காப்பாற்றுவதன் மூலம்தான் அவள் தனக்கென்று ஒரு ஹோதாவை உருவாக்கிக்கொள்ள முடிகிறது, நான் உயர்ந்த வகுப்புகளுக்குப் போகப் போக அவளுடைய பூஜையும், ஆசாரமும் அதிகமாகி வந்திருக்கிறது. இவற்றின் மூலம் எங்களைவிடப் புனிதமானவளாக, உயர்ந்தவளாக, அவள் ஆகிவிடுவதாகவும், இது ஒரு வெற்றியென்றும் அவள் மயங்குகிறாள். ஆனால் இது ஒரு தோல்வியென்றும் அவளுக்குத் தெரியவில்லை. சுதந்திரமும், தனித்தன்மையும் பெறுவதற்குப் போராடுவதாக எண்ணிக்கொண்டு, மூட மரபிலே தான் மென்மேலும் அழுந்தி, தனித்தன்மையற்றவளாக, தன் தாயின், அவளுடைய தாயின், நகலாக மாறிப்போவதை அவள் உணரவில்லை. இது ஒரு விஷச் சுழல். இதில் நானும் மாட்டிக் கொள்ளாமல் என்னைக் காப்பாற்று, பத்ரி. என்னை அணைத்துக் கொள்...

"இப்போது என்ன எழுதிக்கொண்டிருக்கிறாய்?" என்று பத்ரி கேட்டான்.

"நான் விரும்பும் அம்மா என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதிக்கொண்டிருக்கிறேன். இன்றைய நவீனயுகத்தில் இந்தியத் தாய் என்பவள் எப்படிப்பட்டவளாக இருக்க வேண்டும், என்பது பற்றி. இப்போதுகூடக் கையில் இருக்கிறது."

"உம்" என்றான் அவன், எந்தவிதமான ஆர்வமுமின்றி. 'எங்கே, காட்டு பார்க்கலாம்' என்று அவன் கேட்டிருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்! ஆனால், அவன் கேட்கவில்லை. இதைப்பற்றி அவனிடம் அவள் ஏதேதோ கூற விரும்பினாள். சர்ச்சை செய்ய விரும்பினாள். ஆனால் அவனுடைய முகபாவம் அவளுக்கு ஊக்கமளிப்பதாகவே இல்லை. அவனுக்கு அவள் ஒரு பெண், வெறும் பெண் மட்டும். இது ஒருவிதத்தில் பரவசமளிப்பதாக இருக்கிறது. ஒரு விதத்தில் ஏமாற்றமளிப்பதாகவும் இருக்கிறது. அணைக்க ஒருவன், பேச ஒருவன் என்று தனித் தனியாகவா தேடிக்கொள்ள முடியும்?

"உன் அம்மாவைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய் பத்ரி?"

"எதுவுமில்லை."

"ஆக்சுவலி எனக்குப் பொறாமையாக இருக்கிறது உன் மேல்."

"ஏனோ?"

"இப்படி ஒரு அம்மாவைப் பெற்றிருப்பதற்காக."

"ஹவ் ஸ்டுபிட்!"

"அவள் என் அம்மாவாக இருந்திருக்கக்கூடாதா என்று நான் ஏங்குகிறேன்."

"நீ ஒரு முட்டாள். உனக்கு அவளைப் புரிந்துகொள்ள முடியவில்லை."

"நான் ஒருத்திதான் அவளை உண்மையாகப் புரிந்து கொண்டிருப்பவள்."

"அவள் ஒரு தீவிர சுயநலவாதி, தன்னைப் பற்றிய மிகையான எண்ணமுடையவள். தான் சொல்லுவது எதுவாயினும் பிறர் அதை மறுப்பில்லாமல் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று எதிர்பார்க்கிறவள்."

"பிறரை நாம் நம் உருவத்தில் காண்கிறோம்."

"ஐ ஸீ!"

"நல்ல இயல்புடைய ஒருவன் பிறரையும் அவ்வாறு காண்பான். அப்படியல்லாதவன் கோணலாகத்தான் ஒவ்வொருவரையும் காண்பான்."

"இந்தப் புத்தக அறிவையெல்லாம் காட்டி என்னைப் பயமுறுத்த வேண்டாம். எனக்கு உன்னைவிட அனுபவமுண்டு."

"சரி, தாத்தா."

அவன் முகம் இறுகியது. அவள் எதிர்பார்த்ததுபோலவே, அவளைச் சுற்றி அணைத்திருந்த தன் கரத்தை அவன் விலக்கிக் கொண்டான். அவளுக்குச் சிரிப்பு வந்தது. அவனைப் பதட்டமடையச் செய்து விட்டோமென்று திருப்தியாக இருந்தது. அனுபவமுள்ளவனாம். குழந்தை, சரியான குழந்தை.

"போகலாம்" என்று அவன் எழுந்தான்.

"கோவமா?"

அவன் பதில் பேசாமல் வெயிட்டரைச் சைகை காட்டி அழைத்தான். அவன் பௌருஷம் முழுதும் அந்தச் சைகையில் வெளிப்பட்டது. பௌருஷம் இல்லை, அகங்காரம். மூட ஆண்மை. வெயிட்டர் வருகிறான். பணிவாக வந்து நிற்கிறான். நானும் இப்படிப் பணிவாக இருக்க வேண்டும். இதைத்தான் என் அம்மா போதிக்கிறாள். இதைத்தான் பத்ரியைப் போன்றவர்கள் எதிர்பார்க்கிறார்கள். அவள் எழுந்தாள். வாசலை நோக்கி நடந்தாள். தர்வான் கதவைப் பணிவாகத் திறந்துவிட்டான். அவளுக்கு எரிச்சல் வந்தது. பொய்! பொய்! பொய்! இந்தத் தர்வானின் பணிவு, அந்த வெயிட்டரின் பணிவு, அம்மாவின் பணிவு, எல்லாம் பொய். ஏன் இந்தப் பாசாங்கு? ஏன் எல்லாரும் உண்மையாக இருக்கக் கூடாது, ஒருவரையொருவர் உண்மையாக வெளிப்படுத்திக்கொண்டு இதை ஏற்றுக்கொள்ளக் கூடாது? பளீரென்று வெளியில் அடித்துக்கொண்டிருந்த வெய்யில்

டிஸ்கோத்தேயின் இருளுக்குப் பிறகு, கண்ணைக் கூச வைத்தது. அவள் ஹாண்ட்பாகிலிருந்து கறுப்புக் கண்ணாடியை எடுத்துக் கண்ணில் அணிந்துகொண்டாள். ஹாண்ட்பாகின் தோல் நாடா தோளின் மேல் சரியாகவும், நடுவாகவும் பொருந்தியிருக்கிறதா என்று தொட்டுப் பார்த்துக்கொண்டாள்.

பத்மினி ஹாண்ட்பாகைத் தோளிலிருந்து அகற்றி ரெஸ்டாரான்ட் மேஜை மேல் வைத்தாள். கறுப்புக் கண்ணாடியைக் கழட்டி, அதையும் மேஜை மேல் வைத்தாள். விசுவம் அவளையே பார்த்தபடி அமர்ந்திருந்தான்.

"என்ன பார்க்கிறீர்கள்?"

"வேறு எதையாவது கழற்றி வைக்கப் போகிறாயா என்று பார்த்துக் கொண்டிருக்கிறேன்."

"சீ!" என்று மேஜை மேல் பதித்திருந்த அவன் கைமீது அவள் ஒரு அடி வைத்தாள். இது அவளுடைய ஒரு வழக்கமான ஒரு சைகை. ஆனால் இப்போது அது அவனுக்குப் பரவசமளிக்கவில்லை. யென்பதை அவள் உணர்ந்தாள். இது அவனுக்கு அலுத்துவிட்டது. பெரும்பாலான நாட்களில் அவளுடன் இதுபோல ரெஸ்டா ரென்ட்டுக்கு வருவதும், அவள் ஹாண்ட் பாகையும், கறுப்புக் கண்ணாடியையும் கழற்றி மேஜை மேல் வைப்பதும் அவனுக்கு அலுத்துவிட்டது. ஆனால் அவள் செய்யக் கூடியதென்ன? ஒவ்வொரு கணமும் ஒருத்தி தன்னைப் புதுப்பித்துக் கொண்டவாறிருக்க முடியும்? சலிப்புத் தராதவளாக இருக்கமுடியும்? அப்படி மாறுதலடைந்து கொண்டேயிருந்தால் அதுவும்தான் பிடிக்காது. உண்மையில் அவனுக்கு என்ன வேண்டுமென்பதே அவனுக்குத் தெரியவில்லை. தான் அவனுக்கு மிகவும் தேவைப்படுபவள் என்பதைக்கூட, விஸ்கான்ஸின் யுனிவர்ஸிடியில் அவள்தான் பிடிவாதமாக அவனுக்கு உணர்த்த வேண்டியிருந்தது.

வெயிட்டர் வந்தான்.

"என்ன சாப்பிடுகிறீர்கள்?" என்று அவள் கேட்டாள்.

"எது வேண்டுமானாலும்."

இருவருக்கும் சேர்ந்து அவளே ஆர்டர் செய்தாள். என்ன ஆகிவிட்டது உனக்கு, விசுவம்? உன் தீஸிஸ் விஷயம் நீங்கலாகவும் சில சாதாரண விஷயங்களில் நீ தீவிரப் பிடிப்புள்ளவனாக இருக்கக் கூடாதா? ஒரு குறிப்பிட்ட பிராண்ட் சிகரெட்டுக்காக பத்து மைல் தூரம் தேடிச் செல்பவனாக இருக்கக்கூடாதா? கத்தரிக்காயோ வாழைக்காயோ பிடிக்காதவனாக இருக்கக்கூடாதா? எனக்கு பம்பாயில் உங்கள் வீட்டில் பண்ணித் தந்தது போன்ற குலாப்ஜாமுன் தான் வேண்டுமென்று பிடிவாதம் பிடிக்கக்கூடாதா? என்னிடம் உரிமை எடுத்துக்கொண்டு அதட்டிக் கேட்கக்கூடாதா? இந்த

ரெஸ்டாரண்ட் வேண்டாம். வேறொரு இடத்துக்குப் போகலாம் என்று உறுதியாகச் சொல்லக்கூடாதா? உன் பிடிப்புகளற்ற தன்மை என்னை பயத்தில் ஆழ்த்துகிறது. நீ என் மீது கொண்டுள்ள அன்பாவது நிச்சயமானதுதானா, இல்லையா என்று நான் புரியாமல் தவிக்கிறேன். நீ திடீரென்று ஒரு நாள் என்னைவிட்டு ஓடிவிடுவாயோ என்று அஞ்சுகிறேன்.

அவன் சுற்றும் முற்றும் பார்த்தபடி, பேசாமல் உட்கார்ந்திருந்தான். அவள்தான் மறுபடி பேச வேண்டியிருந்தது: "ஏதாவது எழுத முடிந்ததா, இன்றைக்கு?"

"ஏதோ கொஞ்சம் எழுதினேன்." அவன் முகத்தில் அதிருப்தி தெரிந்தது. "நான் நினைத்ததுபோல் வரமாட்டேனென்கிறது."

"நீயாக எதையாவது நினைத்துக் கொள்கிறாய். இதுவரை எழுதியதை அன்று படித்துக் காண்பித்தாயே – எனக்கு ரொம்பப் பிடித்திருந்தது. குறிப்பாக இயற்கையையும் பெண்ணையும் ஒப்பிட்டு ... எனக்குச் சரியாக ஞாபகமில்லை. பட் தட் வாஸ் ரியலி நைஸ்."

"இயற்கை, பெண்ணைப்போல, மனிதனை இயங்க வைக்கும் சக்தி; மனித குலத்துக்குத் தொடர்ச்சியை அளிப்பது; அதை மிகையாக இலட்சியப்படுத்தி பூஜை செய்யாமல் அன்னியோன்னியமாகவும் ஆக்கபூர்வமாகவும் அதைப் பயன்படுத்த வேண்டும் – அதே சமயத்தில் அதைச் சூறையாடிவிடக்கூடாது, என்று எழுதியிருந்தேன்."

"பிரில்லியன்ட்."

"எனக்குத் தெரியாது" என்றான் விசுவம். "எதையெதையோ குழப்புகிறோமோ என்று சந்தேகமாயிருக்கிறது. இந்த உவமை எந்த எல்லை வரையில் தாக்குப் பிடிக்கக் கூடியது?"

"எனக்கென்னவோ சரியாகத்தானிருக்கிறது."

அவன் ஒரு கணம் மௌனமாக இருந்தான். 'எனிவே' என்று அந்த விஷயத்தைப் பற்றி வீண் பேச்சு வேண்டாமென்பதுபோல கைகளைக் காற்றிலே அலைத்துக் காட்டினான். வெயிட்டர் சிற்றுண்டித் தட்டுகளைக் கொண்டு வைத்தான். இருவரும் சாப்பிடத் தொடங்கினார்கள். அவள் அவன் சாப்பிடுவதை நாசூக்காகக் கண்காணித்தபடி இருந்தாள். அவன் தட்டிலிருந்த சட்னி தீர்ந்ததும் கிண்ணத்திலிருந்து இன்னும் கொஞ்சம் சட்டினியை அவன் தட்டில் ஊற்றினாள். அவன் நிமிர்ந்து அவளைப் பார்த்துப் புன்னகை செய்தான்.

"நீ சாப்பிடவில்லை?"

"சாப்பிட்டுக்கொண்டிருக்கிறேனே."

அவன் சட்டென்று காலியாயிருந்த அவளுடைய இடது கையைப் பற்றிக் கொண்டான். "நீ ரொம்ப மாறிவிட்டாய்" என்றான்.

"அப்படியா?" என்று அவள் தன்னைக் குனிந்து பார்த்துக் கொண்டாள்.

"அந்த மாறுதலைச் சொல்லவில்லை."

"பின்னே?"

"சுபாவத்தில்."

"ரியலி?"

"முன்னை விட என் மீது அக்கறை காட்டுகிறாய்."

அவள் தோள்களைக் குலுக்கிக்கொண்டாள். "நான் எப்போதும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறேன்."

"லீவு அப்ளை செய்தாகிவிட்டதா?"

"இல்லை."

"ஏன்?"

"இப்போதே என்ன அவசரம்?"

"கடைசி நிமிஷத்திலா அப்ளை செய்வார்கள்? அப்புறம் உங்கள் ஆஃபீஸில் அவர்கள் உன் வேலையைப் பார்த்துக்கொள்ள வேறு ஏற்பாடுகள் செய்ய வேண்டாமா?"

இப்போது அவள் சிரித்தாள்.

"ஏன் சிரிக்கிறாய்?"

"நீங்களும்தான் மாறிவிட்டீர்கள்."

"அப்படியா?"

"என் ஆஃபீஸ் வேலை பற்றி முன்பு இல்லாத அளவுக்குக் கவலைப்படுகிறீர்கள்."

அவனும் சிரித்தான். நேற்று அவன் ஒரு படம் பார்க்க விரும்புவதாகவும், அவள் சீக்கிரமாக ஆஃபீஸை விட்டு வர முடியுமா வென்றும் போன் செய்தான். அவள் தனக்கு வேலை அதிகமிருப்பதால் வரமுடியாதென்று கூறினாள். அது அவன் எரிச்சலைக் கிளப்பிவிட்டது. அவள் தான் ஒரு வேலையில் இருப்பதை மிகவும் பெரிதுபடுத்துவதாக அவன் நினைத்தான். இரவில் அது பற்றி அவர்கள் சண்டை யிட்டார்கள்.

"ஐ திங்க், நீங்களும் ஒரு வேலைக்குப் போவது நல்லதென்று நினைக்கிறேன்" என்றாள் அவள்.

"ஆமாம். அப்போது இப்படி சும்மா சினிமாவுக்கு வா, ரெஸ்டாரண்டுக்கு வா என்று உன்னைத் தொந்தரவு படுத்தா மலிருப்பேன் – அல்லவா?"

"எது சொன்னாலும் இப்படித் தவறாகத்தான் புரிந்துகொள்ள வேண்டுமா?"

"நான் தமாஷுக்காகச் சொன்னேன்."

"உங்கள் தீஸீஸை நான் மிகவும் மதிக்கிறேன். அது உங்களுக்கு மிகவும் அவசியமானது, மிகவும் முக்கியமானது என்பது எனக்குத் தெரியும். ஆனால் அதன் காரணமாகவே நீங்கள் பல மணி நேரங்கள் தனித்திருக்கவும் நேர்கிறது. ஏதேதோ மன உளைச்சல்களில் நீங்கள் சிக்கிக்கொள்ள நேர்கிறது. எனவே ஏதாவது ஒரு வேலை – பார்ட் டைம் வேலைகூட – இருந்தால், அது கொஞ்சம் தெம்பாக இருக்குமோ என்று நினைத்தேன்."

"பார்ட் டைம் வேலையா? யெஸ். குட் ஐடியா. நான் க்ஷவரம் பண்ணப் போகலாம். அது எனக்கு நன்றாகச் செய்யவும் வரும்" என்று அவன் சிரித்தான்.

அவள் பேசாமலிருந்தாள். அவனைப் புண்படுத்தி விட்டோமென்று உணர்ந்தாள். ஏதோ பழைய நினைவுகளை, துயர நினைவுகளை, அவள் கிளறிவிட்டிருக்கவேண்டும். அவனுடைய பழைய வேலை சம்பந்தமான நினைவுகள். மேலதிகாரியுடனும் சக ஊழியர்களுடனும் ஏற்பட்ட கருத்துவேறுபாடுகள், மோதல் சம்பந்தமான நினைவுகள்....

"ஐ ஆம் ஸாரி விசுவம்" என்று அவள் அவன் கையைப் பற்றிக்கொண்டாள். அவர்களிடையே சில கணங்கள் முன்பு மெல்ல உருவாகத் தொடங்கியிருந்த அன்னியோந்நியம் திடீரெனச் சிதைந்து விட்டது. குறைப் பிரசவம். கைக்கடிகாரத்தைக் கவனித்தாள். மணி இரண்டு. அவளுடைய இடைவேளை முடிந்துவிட்டது, பில்லைக் கொடுத்தாள். இருவரும் வெளியே வந்தார்கள். அவள் கறுப்புக் கண்ணாடியை அணிந்தவாறே கேட்டாள்: "எங்கே?"

"லைப்ரரிக்குப் போகிறேன். சில புத்தகங்களைப் பார்க்க வேண்டும்."

இருவரும் மௌனமாக நடந்தார்கள்.

அவளுடைய ஆஃபீசுக்குச் சற்றுத் தூரத்தில் இருக்கும்போது, பத்மினி திடீரென்று நினைத்துக்கொண்டவள்போல, "பை தி வே, ஸவுத் எக்ஸ்டன்ஷனில் அந்த ஃப்ளாட்டை இன்று பார்க்க வருவதாகச் சொல்லியிருக்கிறேன். என் சிநேகிதியிடம். நீங்களும் வருவீர்களல்லவா?"

"நான் எதற்கு; நீயே பார்த்துவிட்டு வந்துவிடேன். தனியே போய் இருக்க வேண்டுமென்பது உன் ஐடியாதானே?"

"உங்களுக்குத் தனியே இருக்க ஆசையில்லையா?"

"தனியாக இருப்பதென்ன? அங்கும் யாருடனோதானே இருக்கப் போகிறோம்? அங்கு உனக்கு பெட்டர் கம்பெனியாக இருக்குமென்று தோன்றுகிறது – எனக்கு ஆட்சேபணையில்லை, என்னால் யாருடன்

வேண்டுமானாலும் இருக்க முடியும்."

"என்னால் அப்படி இருக்க முடியாதென்று சொல்கிறீர்கள்?"

"நான் எதுவும் சொல்லவில்லை."

"எனக்கு உங்கள் அம்மாவிடம் எந்த விரோதமுமில்லை."

"அவள் பெயரை நான் சொன்னேனா, என்ன?"

"நீங்கள் அப்படி நினைக்கிறீர்கள்."

"பத்மினி, இது முட்டாள்தனமாக இல்லை, நாம் இந்த அற்ப விஷயத்தைப் பற்றிச் சர்ச்சை செய்வது? தனியே போகலாமென்றாய். சரியென்றேன். இப்போது ஏன், எதற்காக என்ற ஆராய்ச்சியெல்லாம் எதற்கு? குற்ற உணர்ச்சியா உனக்கு?"

"எனக்கு எதற்காகக் குற்ற உணர்ச்சி?"

"பின்னே விடு பேச்சை. என்னைச் சொல்லிவிட்டு, நீ மனத்தை உழப்பிக் கொள்ளாதே. வரட்டுமா?"

"உம்."

அவன் நடந்து செல்வதைப் பார்த்தவாறு நின்றாள் அவள். காரணமில்லாமல் திடீரென்று அழுகை வெடித்துக்கொண்டு வந்தது. ஏன் இப்படி இருக்கிறாய், விசுவம்? நானும் ஒன்று, உன் அம்மாவும் ஒன்றா? நான் வலிந்து எதையும் செய்யவில்லை. எதையும் பறை சாற்றிக்கொள்ளவில்லை. எவ்வளவோ இயல்பாகத்தான் இருக்கிறேன். ஆனால் இதுவே ஒரு புதுமையாக, போட்டியுணர்ச்சியைத் தூண்டுவதாக ஆகிவிடுகிறது. நான் காரோட்டினால் உன் அம்மாவும் காரோட்ட விரும்புகிறாள். நான் மாக்ஸி அணிந்தால் அவளும் அணிகிறாள். நான் ஸ்மோக் பண்ணினால் அவளும் பண்ணுகிறாள். நான் சுவையாக ஏதாவது பேசி நீங்களோ வேறு யாராவது சிரித்து விட்டால் அவளும் உடனே உங்களைச் சிரிக்கவைக்கப் பிரயத்தனம் செய்கிறாள். அவளுடைய ஏதோ ஒரு ஹோதாவை நான் அபகரிக்க முயலுவதாக எண்ணுகிறாள். அந்தக் குடும்பத்தில் அவளே மையப் புள்ளியாக இருக்கட்டும். கதாநாயகியாக இருக்கட்டும். நான் அவளுடைய ஸ்தானத்தைப் பறிக்க வந்த வில்லி இல்லை. எனக்குச் சிரிப்புத்தான் வருகிறது. எப்போதும் என்னை ஒடுக்கிக்கொண்டே இருக்க வேண்டியிருக்கிறது, ஜாக்கிரதையுணர்வுடன் இருக்க வேண்டியிருக்கிறது. வெகு சாதாரணமாக நான் இதுவரை அப்யசித்து வந்த சில பழக்கங்களைப் பற்றி ஒரு அனாவசியக் குற்ற உணர்ச்சியை எழுப்பி விட்டாள் அவள். இந்த ரீதியில் போனால் எனக்குப் பைத்தியம் பிடித்துவிடும். யாராவது ஒருவர் விலகிக்கொள்வது தான் நல்லது, அது நானாகவே இருந்துவிட்டுப் போகிறேன். தன் நிலையைப் பற்றி நிச்சயமல்லாமல் அவள் என் பின்னாலேயே ஓடி வருகிறாள். இதனால் நாளாவட்டத்தில் என் நிலையைப்

பற்றியும் எனக்கு நிச்சயமில்லாமல் போய்விடும். இது எனக்கும் சரி, அவளுக்கும் சரி, உனக்கும் சரி, உன் குழந்தைக்கும் சரி, நல்லதல்ல . . .

ஆம், குழந்தை. பத்மினி ஆறுதலடைந்தாள். தன்னை இந்த முடிவை நோக்கி உந்திய ஒரு உன்னதமான நோக்கத்தைக் கண்டு பிடித்துவிட்ட ஆறுதல் – குழந்தை, நம் குழந்தை!

துக்கம் அடங்கியவளாய், ஆசுவாசமடைந்தவளாய், அவள் அலுவலகத்தினுள் நுழைந்தாள்.

# 25

பருப்பு, வெல்லம், கடலைமா, தேங்காய், மாங்காய், வாழைக்காய், பாகற்காய், வெள்ளரிக்காய், சேனைக்கிழங்கு, இஞ்சி, மிளகாய், கொத்தமல்லி, மாம்பழம், வாழைப்பழம், ஏலக்காய், முந்திரிப்பருப்பு, திராட்சைப்பழம், வெற்றிலை, சீவல், குங்குமம், மஞ்சள், சின்ன அளவில் சீப்புகள். கண்ணாடிகள்.

கணேசன் கொஞ்சம், அவனுடைய தம்பி கொஞ்சம், அவனுடைய அம்மா கொஞ்சம் என்று வாங்கிய பொருள்களைச் சுமந்து கொண்டிருந்தார்கள். நாளைக்கு சுமங்கலிப் பிரார்த்தனை. அதற்கான பொருள்கள். இன்னும் வாழையிலையும் கறி வேப்பிலையும் பாக்கி. இவற்றையும் சற்று நடந்தால் கிருஷ்ணா மார்க்கெட்டில் வாங்கி விடலாம். கரோல்பாகில் இருப்பதில் ஒரு சௌகரியம். தென்னிந்தியர் களுக்கு வேண்டியதெல்லாம் இங்கே கிடைத்துவிடுகிறது. ஒரு சராசரித் தென்னிந்தியனாக இருந்து சராசரித் தென்னிந்தியனாக இறந்துபோக விரும்புபவர்கள் இங்கே சந்தோஷமாக இருக்கலாம். ஆனால் கணேசன் இப்படி இருக்க விரும்புபவன் இல்லை. அவனுக்குச் சந்தோஷமாக இல்லை.

கையிலிருந்த பையை ஒரு கையிலிருந்து இன்னொரு கைக்கு அவன் மாற்றிக்கொண்டான். அந்தப் பையில்தான் தேங்காய்கள் இருந்தன. கனத்தது. அந்தக் கனத்தைக்கூடச் சகித்துக்கொண்டு விடலாம் போலிருந்தது. ஆனால் இந்தத் தென்னிந்திய வெற்றிலை பாக்குக் கடைக்கெதிரில் ஐந்து நிமிடங்களுக்கு மேலாக நின்றிருந்ததைத் தான் அவனால் சகித்துக்கொள்ள முடியவில்லை. அந்தக் கடையில் முன்னணியில் தமிழ் வார, மாதப் பத்திரிகைகள் தொங்கவிடப் பட்டிருந்தன. கடையினுள் அந்தப் பத்திரிகைகளுடன் 'மாச்' ஆகிற (என்று கணேசன் நினைத்தான்) அப்பளம், ஊறுகாய், ஊதுவத்தி,

வற்றல், சீயக்காய்ப்பொடி முதலிய பொருள்கள் இருந்தன. கடைக்காரனுக்கு அருகிலிருந்த டிரான்ஸிஸ்டர் ரேடியோவில் ஒரு தமிழ் சினிமாப் பாட்டு ஒலித்துக்கொண்டிருந்தது. இலங்கை வானொலி வர்த்தக ஒலிபரப்பின் மாலைத் தமிழ் நிகழ்ச்சி. கணேசனுக்குக் குமட்டல் ஏற்படுத்திய அதே பாட்டு பக்கத்திலிருந்த தென்னிந்திய ஹோட்டலில் டிபன் சாப்பிட்டுவிட்டு வெளியே வந்துகொண்டிருந்த சில லுங்கி இளைஞர்களை மெய்மறக்கச் செய்தது. அவர்கள் அந்தப் பாட்டைத் தாங்களும் முணுமுணுத்த வாறு, கடைக்காரனிடம் வந்து சிகரெட் கேட்டார்கள். கணேசனின் அம்மா கடைக்காரன் எடுத்துப் பரப்பியிருந்த சிலவகைக் குங்குமச் சிமிழ்களிலிருந்து ஏற்றதாக ஒன்று பொறுக்குவதற்கு இன்னமும் முயற்சி செய்து கொண்டிருந்தாள். ஓ, காட்! தனக்கு எந்த நிமிடமும் பைத்தியம் பிடிக்கலாமென்று கணேசன் நினைத்தான். பையை எறிந்துவிட்டு அங்கிருந்து ஓட வேண்டும்போல இருந்தது. அந்த ஓட்டல், அந்தக் கடை இரண்டிலிருந்தும் அடித்த 'தமிழ்' மணம் அவனுக்கு அருவருப்பூட்டியது. கனாட்பிளேஸை நாலு ரவுண்டு சுற்ற வேண்டும். ஒரு ஆங்கிலப் படம் பார்க்க வேண்டும். எஸ்பிரஸோ காஃபி குடிக்க வேண்டும். நிறைய சிகரெட் குடிக்க வேண்டும். அப்போது தான் இவ்வளவு நேரம் இங்கே நின்றிருந்த 'தீட்டு' விலகும்.

குங்குமச் சிமிழ் தேர்வு ஒரு வழியாக முடிந்து அவர்கள் கிருஷ்ணா மார்க்கெட்டை நோக்கி நடக்கத் தொடங்கினார்கள். ஆனால் அங்கு போய்ச் சேருமுன் மறுபடி பாதி வழியில் அம்மா நின்றாள் – எதிரில் வந்துகொண்டிருந்த ஒருவரைப் பார்த்து. அவரும் நின்றார்.

"என்ன ஓய், இந்த ஊர்தானா?" என்றாள் கணேசனின் அம்மா.

அவர் அவள் முகத்தைப் பார்க்கத் தெம்பில்லாமல் கணேசனின் முகத்தைப் பார்த்து மன்னிப்புக் கோரும் பாவனையில் புன்னகை செய்தார். "ரொம்ப நாளாச்சு பார்த்து" என்றார்.

"நீர் பிஸி ஆள். உம்மையெல்லாம் பார்க்க முடியுமா?"

"வரணும், வரணும்னு நினைச்சுக்கறதுதான் உங்காத்துக்கு. என்னவோ சந்தர்ப்பம் வரமாட்டேங்கிறது."

"சந்தர்ப்பம் என்ன தானாகவா வரும்? மனசிருந்தால்தானே?"

"வரேன் மாமி. அவசியம் ஒருநாள் வரேன்."

"என்னத்தை வரது? வேணுங்கிறபோது வரது கிடையாது."

"என்ன மாமி இது! என்னிக்காவது நீங்க கூப்பிட்டு நான் வராமலிருந்திருக்கேனா, சொல்லுங்கோ?"

"உம்மை இப்பல்லாம் கூப்பிடவே முடியலையே ஓய்! டெலி போனை எடுத்து நரசிம்மையர் இருக்காரான்னா இல்லை, இல்லைன்னுதான் எப்பவும் பதில் வரது. நீர் இருந்துண்டே அப்படிச் சொல்ல வைக்கிறீரோ என்ன இழவோ, யார் கண்டது. எங்காத்துப் பிள்ளை (கணேசனைச் சுட்டிக் காட்டி) ஒரு வாரமா உங்க நம்பரை

டிரை பண்ணறான். பாதி நேரம் என்கேஜ்டா வேறே இருக்காம்... உம்! பெரிய மனுஷனாயிட்டீர் நீரெல்லாம்!"

நரசிம்மையர் மறுபடி கணேசனைப் பார்த்தார். கணேசன் வெறுப்புடன் அவர் பார்வையைத் தவிர்த்தான். அவனுக்குத் தன் அம்மாவின் மேல் எரிச்சலாக வந்தது. ஒரு வாரமாக அந்தச் சமையற்காரருக்கு டெலிபோன் பண்ணிக்கொண்டிருப்பதைத் தவிர வேறு எதுவுமே அவன் செய்யாமலிருப்பது போன்ற தோற்றத்தை எழுப்பி அவள் அவனை இப்படி நடுத்தெருவில் அவமானப்படுத்தியிருக்க வேண்டாம். ஏற்கெனவே காய்கறிப் பையைத் தூக்க வைத்தும், தென்னிந்தியக் கடைகள் முன்பு நிறுத்தி வைத்தும், அவள் அவனை வேண்டிய அளவு அவமானப்படுத்தியாயிற்று.

"நாளைக்கு சுமங்கலிப் பிரார்த்தனை வீட்டிலே" என்று அம்மாவே தொடர்ந்து பேசினாள். "அதுக்காகத்தான் உம்மைக் கூப்பிடலாம்னு நினைச்சேன். முடியலை. எல்லாம் உங்களுக்குக் காரியம் ஆகணும்கிற போது வந்து எங்காத்திலே வட்டமிட்டுண்டேயிருந்தேள். இப்போ வேறே பெரிய மனுஷாளெல்லாம் கிடைச்சுட்டா உமக்கு. அன்னிக்கு இருந்த இருப்பை நாம் மறந்துடக்கூடாது நரசிம்மையரே. அன்னிக்கு எங்காத்து மாமா ஏதோ நம்மூர்க்காரராச்சேன்னு நாலு இடங்களிலே உம்மைப் பத்தி சிபாரிசு பண்ணிப் பண்ணி உங்களை முன்னுக்குக் கொண்டு வந்தார். இப்ப எங்காத்துப் பக்கம் வரதுக்குக்கூட உமக்குச் சந்தர்ப்பம் கிடைக்கலை என்கிறீர். ஹூம்! ரொம்ப சந்தோஷம் – எங்கேயாவது எல்லாரும் சௌக்கியமா இருந்தாச் சரி."

அம்மா மூச்சுவிடாமல் பேசிக்கொண்டு போனாள். நரசிம்மையர் நடுநடுவே ஏதோ சொல்லமுயன்று, ஆனால் 'சந்தர்ப்பம்' கிடைக்காதவராக வாயைத் திறந்து திறந்து மூடிக்கொண்டிருந்தார். அம்மா பேசி முடித்த பிறகு ஒரு நிமிடம் மௌனம் நிலவியது.

"நான் இப்ப எதுவுமே சொல்லப்போறதில்லை" என்றார். நரசிம்மையர். "நான் என்ன சொன்னாலும் உங்களுக்குக் குத்தமாத்தான் படும். ஆனா ஒண்ணே ஒண்ணு. நீங்க நினைக்கிறமாதிரி நான் நன்றி மறக்கறவனெல்லாம் இல்லை. எனக்கு உங்களிடத்திலே என்னிக்கும் விசுவாசம் உண்டு."

"இந்தப் பேச்சுக்கெல்லாம் குறைச்சலில்லை."

"பார்த்தேளா! நான் பேசலை, நான் எதுவுமே பேசலை."

"பேசாதேங்கோ. டைம் வேஸ்ட்னா ஆறது உங்களுக்கு. பிஸி ஆள் ... எங்கேயோ போயிண்டிருந்தவரை நிறுத்தி வைச்சுட்டேன் இவ்வளவு நாழி. மன்னிச்சுக்குங்கோ."

"ஐயோ மாமி, நீங்க இப்படியே பேசிண்டு போறேள் கோபமா. நீங்கதான் என்னை மன்னிக்கணும். என் மேலே கோவப்படாம இருக்கணும்."

"நான் யாரு ஓய், உம் மேலே கோபப்படறதுக்கு? நான் பெரிய

பங்களாவிலே இருந்துண்டு உங்களை அவுட்ஹவுஸிலே குடி வைச்சிருக்கேனா? எங்காத்திலே டெலிபோன் பண்ணிக்கவும் அந்த டெலிபோன் நம்பரை எல்லார்கிட்டேயும் கொடுக்கவும் வசதி பண்ணிக் கொடுத்திருக்கேனா? எனக்கு என்ன உரிமையிருக்கு உங்களைக் கோச்சுக்கறதுக்கு?"

"இல்லை மாமி. நீங்க நிச்சயமாகக் கோச்சுக்கணும். உங்களுக்கு எல்லா உரிமையும் இருக்கு" என்றார் நரசிம்மையர். அவருக்கு மூளை குழம்பத் தொடங்கியிருந்தது.

"யாரு யாரைக் கோவிச்சுக்கறது! அவா அவா காரியத்திலே அவ்வா அவா ஒழுங்கா இருக்கணும்."

'வாஸ்தவம்' என்பது போல நரசிம்மையர் தலையை அசைத்தார். "நாளைக்கு அப்ப... யாரு வரா நம்மாத்துக்கு? வேறு யாராவது ஏற்பாடு பண்ணினேளா?" என்றார் தயங்கித் தயங்கி.

"பின்னே பண்ணாமலிருப்பேனா? கோபாலனை வரச் சொல்லிருக்கேன் ... நன்னா எல்லாம் செய்யறான் அந்தப் பையன்."

உண்மை என்பதுபோல நரசிம்மையர் மறுபடி தலையை அசைத்தார்.

"ஆனாக் கொஞ்சம் கணிசம் போறாது. நிறைய மிஞ்சிப்போய்க் கொட்டவேண்டி வரது இவாளெல்லாம் சமைச்சால். நீர் கணக்காப் பண்ணுவீர்" என்றாள் குறிப்பாக.

"மாமி, எனக்கு முந்தியே தெரிஞ்சிருந்தா நிச்சயமா நான் வந்திருப்பேன். ஆனா விஷயங்களைத் தெரிஞ்சுக்கக்கூட நேரமில்லாம நான் பறந்துண்டிருக்கேன். நான் படற கஷ்டம் அந்த ஆண்டவனுக்குத் தான் தெரியும். பிறந்தநாள் பார்ட்டி யானாலும் சரி, கல்யாணச் சாப்பாடானாலும் சரி, நான் வந்தால்தான் ஆச்சுன்னு வந்து பிடிவாதம் பிடிக்கிறா. ரெண்டு கையும், ரெண்டு காலும் போறலை எனக்கு. வேற யாரையாவது ஏற்பாடு பண்ணிக்குங்களேன்னாலும் தப்பா எடுத்துண்டுடறா. நானும் கூடியவரைக்கும் யார் கூப்பிட்டாலும் பளிச்சுனு மாட்டேன்னு சொல்லக்கூடாதுன்னுதான் பார்க்கிறேன். இருந்தாலும் சில சமயங்களில் தவிர்க்க முடியாமல் போறது. நேத்திக்கு ராத்திரி பதினொண்ணரை மணிக்கு மாமி! ஆடிட்டர் ரங்கநாதன் வீட்டிலேந்து திடீர்னு டெலிபோன் வந்தது. பொண்ணுக்கு சீமந்தம், வந்துடுன்னார். என்னிக்குன்னேன். நாளைக்கு, அப்படிங்கறார். என்னத்தைச் சொல்றதுன்னே எனக்குப் புரியலை. நாளைக்கு மந்திரி வீட்டிலே ஏதோ டின்னர்னு என்னை வரச்சொல்லி நானும் ஒத்துண்டாச்சு. இவர் என்னடான்னா இப்படித் திடீர்னு கூப்பிடறார். பொண்ணு அமெரிக்காவிலேந்தோ எங்கேந்தோ கரெக்டா டெலிவரி டயத்துக்கு வந்திருக்கா போலிருக்கு. டெலிவரி ஆறதுக்குள்ளே சாஸ்திரத்துக்கு ஏதோ பண்ணணும்னு அவர் பார்க்கிறார்.... அப்புறம் இன்னிக்குக் கார்த்தாலே எழுந்திருந்து அலையா அலைஞ்சு நானே

இன்னொருத்தனை அவருக்கு ஏற்பாடு பண்ணி வைச்சேன். இப்படியாக, நான் ஒத்துக்காத இடங்களுக்குக் கூட நான் அலைய வேண்டியிருக்கு."

கணேசனின் அம்மா உணவு மந்திரியின் பெயரைக் குறிப்பிட்டு அவர் வீட்டு டின்னரா என்று கேட்டாள்.

"ஆமாம். மாமாவுக்குத் தெரிஞ்சுருக்குமே!"

"தெரியும். சொன்னார். ஆனா நீங்கதான் சமையல்னு சொல்லலை."

"அவருக்குத் தெரிஞ்சிருக்காது ... மிஸஸ் பசுபதிதான் என்னை ஏற்பாடு பண்ணினா."

"ஓ!"

"அதனாலே, நீங்க என் கஷ்டத்தைப் புரிஞ்சுக்கணும். தயவுசெய்து என்மேலே கோவப்படக் கூடாது."

கணேசனின் அம்மாவின் பேச்சுத் தோரணையே திடீரென்று மாறிப்போயிற்று. "உங்களுக்கு என் சுபாவம் தெரியாதா, நரசிம்மையரே?" என்றாள். "நான் யார் மேலயாவது, எதுக்காவது கோபப்பட்டதுண்டா? ஏதோ சமயத்திலே கொஞ்சம் படபடன்னு பேசுவேன், அவ்வளவுதான். அதுவும் நீங்க நம்ம ஊர்க்காரங்கற ஒரு அபிமானம் ... கோவம்னு உங்களுக்குப்படும்னு நான் நினைக்கலை."

"சே, சே, நானும் அப்படி எடுத்துக்கலை."

"நாளைக்கு என்ன, பெரிய டின்னரா?"

"ஒரு நூறு பேருக்குன்னு சொல்லியிருக்கா."

"ஜமாயும். அடுத்ததா பிரதம மந்திரி வீட்டுக்குப் போனாலும் போவீர்."

நரசிம்மையர் அடக்கமாக ஒரு புன்னகை புரிந்தார். "அப்ப வரட்டுமா?"

"உம். வாங்கோ, ஒரு நாள் வீட்டுப் பக்கம்."

"அவசியம் வரேன்" என்ற நரசிம்மையர், "வரேன்!" என்று கணேசனிடமும் சொல்லிவிட்டு நடக்கத் தொடங்கினார். கணேசன் அவரைக் கவனித்ததாகவே காட்டிக்கொள்ளவில்லை. "நானும் இதையெல்லாம் எடுத்துண்டு வீட்டுக்குப் போறேன் ... இலை கிலையெல்லாம் நீங்க வாங்கிண்டு வாங்கோ" என்று அம்மாவிடம் சொல்லிவிட்டு, அவளுடைய பதிலுக்குக் காத்திராமல் அவனும் நடக்கத் தொடங்கினான். கணேசனின் அம்மாவுக்கு, இப்போது பேசுவதற்குக் கணேசனின் தம்பிதான் மீதியிருந்தான். "பெரிய ஸெக்ரடரியாயிருந்தா என்ன, சமையக்காரனாயிருந்தா என்ன, இந்தச் சிறுக்கி எல்லாரையும் மயக்கிப்பிடுவாளே" என்றாள்.

"யாரும்மா!"

"பாக்கியம் மாமியைச் சொல்றேன்."

"சிறுக்கின்னா என்ன?"

"உன் தலை" என்றாள் அவள் எரிச்சலுடன். சற்று நேரத்துக்குப் பிறகு கிருஷ்ணா மார்க்கெட்டிலிருந்த வாழையிலைக்காரன் அந்த எரிச்சலையெல்லாம் அனுபவித்தான். அதே சமயத்தில, கணேசனும் எரிச்சலுடன் தன் வீட்டுக் கதவை நாலாவது தடவையாகத் தட்டிக் கொண்டிருந்தான். கதவைத் திறக்க அவன் தங்கை வேண்டுமென்றே தாமதிப்பதாக அவனுக்குத் தோன்றியது. ஏன், அந்தக் கதவைத் தாழ்ப்பாள் போட்டிருந்ததே அவனை அவமதிக்கும் நோக்கத்துடன் தான் என்று தோன்றியது. அவனுடைய ஆசைகளுக்கு எதிராக நின்ற தடங்கல்களெல்லாம் அந்தக் கதவாக உருவானது போலிருந்தது. அவன் கதவை இடித்துத் தள்ளி விடுபவன்போலப் படபடவென்று முரட்டுத்தனமாக ஓங்கி ஓங்கித் தட்டினான்.

மந்திரியின் வீட்டு கேட் சாத்தியிருந்தது. மிஸஸ் பசுபதி ஹார்னை ஒலித்தாள். உள்ளேயிருந்து ஒருவன் ஓடி வந்து கேட்டைத் திறந்து ஸலாம் வைத்தான். காரை உள்ளே ஓட்டிச் சென்று செம்மண் பாதை வீட்டினருகே வளையத் தொடங்கும் இடத்தில் போய் நிறுத்தியபோது இன்னொருவன் கார்க் கதவைத் திறப்பதற்காக ஓடிவந்தான். அதற்குள் மிஸஸ் பசுபதியே கதவைத் திறந்து வெளியே இறங்கினாள். போர்ட்டிகோவில் மந்திரியின் கார் நின்றிருந்தது. அவர் எங்கேயோ வெளியே செல்ல ஆயத்தமாக இருக்க வேண்டும்...

அவள் கார்க் கதவைச் சாத்தினவுடன், அந்த ஓசை கேட்டுக் கீழ் அறை ஒன்றின் ஜன்னல் திரையை விலக்கி யாரோ வெளியே பார்ப்பதைக் கண்டாள். சில நிமிடங்களில் ஒரு இளைஞன் வெளியே வந்தான். அவன் மிஸஸ் பசுபதிக்கு ஏற்கனவே தெரிந்தவன்தான். பலராமன், மிஸ்டர் பசுபதியால் பழைய மந்திரி இருந்தபோதே அவர் வீட்டில் அமர்த்தப்பட்டிருந்தவன். இப்போது புதிய மந்திரியிடமும் அவனே தொடர்ந்து இருந்தான்.

"இருக்காரா?" என்றாள் மிஸஸ் பசுபதி.

"உம்... குளிச்சிண்டிருக்கார். உக்காருங்கோ."

பலராமன் மிஸஸ் பசுபதியை வீட்டினுள் அழைத்துச் சென்றான். வரவேற்பறையைத் தாண்டி, உட்புறத்தில் இருந்த படிப்பறையில் உட்கார வைத்தான். சாதாரண விஸிட்டர்களுக்கு இந்த அறை வரையில் வருவதற்கு அனுமதி கிடையாது.

"ஏதாவது சாப்பிடறேளா?" என்றான் பலராமன், அவள் உட்கார்ந்ததும்.

"நோ, தாங்க்ஸ்."

"கோல்ட் டிரிங்க் ஏதாவது சாப்பிடுங்களேன்."

"சரி, ஒரு தம்ளர் ஜலம் மட்டும்."

பலராமன் சுவரிலிருந்த ஒரு பித்தானை அழுத்தினான். சற்றுத் தூரத்தில் எங்கேயோ மணியடிக்கும் சத்தம் கேட்டது. ஒரு பியரர் வந்து பணிவாக நின்றான்.

"தோடா பானி லாவ்."

"அச்சா ஸாப்."

மிஸஸ் பசுபதி அறையைச் சுற்றி நோட்டம் விட்டாள். சுவரில் ஓரிரு நேர்த்தியான நவீன பாணி ஓவியங்கள் தொங்கின. மேஜை மேல் அமெரிக்க வார சஞ்சிகை ஒன்றும், சில தமிழ்த் தினசரிகளும், நவீன இந்தி இலக்கிய ஆசிரியர் ஒருவரின் சிறுகதைத் தொகுதியும் இருந்தன. அவள் அந்தத் தொகுதியைக் கையிலெடுத்துப் புரட்டத் தொடங்கினாள். தண்ணீர் வந்துவிட்டது. பலராமன் போகக் கிளம்பினான். "ஸோ—எப்படியிருக்கிறது. வேலையெல்லாம்?" என்றாள் மிஸஸ் பசுபதி அவசரமாக, புத்தகத்தை மூடி வைத்துவிட்டு. அந்த அறையில் அப்போது தனித்துவிடப்பட அவள் விரும்பவில்லை. நெஞ்சு படபடவென்றது ...

"ஏதோ போயிண்டிருக்கு" என்றான் பலராமன்.

அவள் தண்ணீரை அருந்தினாள். "வீட்டிலே எல்லோரும் சௌக்கியமா?"

"உம்."

"ஒரு நாள் வைஃபைக் கூட்டிண்டு வாயேன் நம்மாத்துக்கு?"

"வரேன் மாமி. எனக்கு டைம் கிடைச்சால்தானே? தினம் இராத்திரி பத்தரை, பதினொண்ணு ஆயிடறது. காலம்பற எட்டு, ஒன்பது மணிக்கெல்லாம் வந்துட வேண்டியிருக்கு. லீவு நாளிலேயும் கூட டியூட்டி போட்டுடறா."

"ஆனா இதெல்லாம் நல்லதுதான் உனக்கு ... நிறையக் கத்துக்கலாம். நிறையப் பேரைத் தெரிஞ்சுக்கலாம். முன்னுக்கு வர நிறைய வாய்ப்பு இருக்கு."

பக்கத்தில் எங்கேயோ டெலிபோன் மணி அடிக்கும் சத்தம் கேட்டது. "கொஞ்சம் இருங்கோ. நான் பேசிட்டு வந்துடறேன்" என்று பலராமன் உள்ளே சென்றான். மிஸஸ் பசுபதி தனியே விடப்பட்டாள். அவளுடைய நெஞ்சின் படபடப்பு அதிகமாயிற்று. சுவரில் தொங்கிய ஓவியங்களைச் சற்று நேரம் மாறிமாறிப் பார்த்தாள். மேஜை மேலிருந்த தினசரி ஒன்றை எடுத்து அதில் கருத்தைச் செலுத்த முயன்று, தோற்று, அதை மறுபடி மேஜைமேல் வைத்தாள். தம்ளரில் மிச்சமிருந்த ஜலத்தை அருந்தினாள். தொண்டையைச் செருமிக்கொண்டாள். தன்னை மேலும் கீழும் ஒருமுறை பார்த்துக் கொண்டாள். அறை வாயிலில் செருப்புச் சத்தம்கேட்டது. மந்திரி வந்துவிட்டார்.

மிஸஸ் பசுபதி கைகூப்பியவாறு எழுந்து நின்றாள்.

"உட்காருங்க" என்று அவர் சுவரிலிருந்த பித்தானை அழுத்தி விட்டு, எதிரிலிருந்த சோபாவில் போய் உட்கார்ந்தார். "உங்களைக் காக்க வைச்சுட்டேன். மன்னிச்சுருங்க."

"பரவாயில்லை."

"என்ன சாப்பிடறீங்க?"

"இப்ப எனக்கு எதுவும் வேண்டாங்க."

"அப்படிச் சொல்லிட்டா எப்படி?"

பியரர் வந்து நின்றான்."

"பீர் – இரண்டு கிளாஸ்."

பியரர் சென்றான்.

"சாப்பிடுவீங்க இல்லே?"

"எப்பவாவது."

"ஐ ஸீ, ரெகுலராகச் சாப்பிடறது என்னவோ?"

அவள் புன்னகை செய்தாள். மனம் மிக இலேசாக இருந்தது. பத்து வருடங்கள் இளையவளாகிவிட்டதுபோலிருந்தது. "உங்களுக்கு இந்தி தெரியும்னு எனக்குத் தெரியாது" என்றாள், மேசைமேலிருந்த புத்தகத்தைப் பார்த்தவாறு.

"என்னைப்பற்றி உங்களுக்கு எதுவுமே தெரியாது."

மிஸஸ் பசுபதிக்கு மேசை மேலிருந்து பார்வையை அகற்றி அவர் பார்வையைச் சந்திக்கத் துணிவு வரவில்லை. ஆக்கிரமிப்பு, ஆக்கிரமிப்பு, ஆக்கிரமிப்பு. அவருடைய தோரணையா? ஆகிருதியா? பேச்சா? எதுவோ ஒன்று அவளை . . .

"நான்கூட நாடகங்களிலேயெல்லாம் நடிச்சிருக்கிறேன். அந்தக் காலத்திலே . . . எழுதியும் இருக்கேன். ஒரு விதத்திலே, எங்க கட்சிக்கு இது புதுமையில்லைதான் . . . ஆனா, ஒரு லெவல்லேயே அவங்க தங்கிப் போயிடறாங்க, வளர்ச்சியடைய மறுக்கிறாங்க . . . வேணும்னே."

மிஸஸ் பசுபதி அவரை நிமிர்ந்து பார்த்தாள்.

"ஆமாம், தெரியாம இல்லே. வேணும்னே வளராம இருக்கிறதே ஒரு அரசியல் தேவையாப் போயிடிச்சு. ஓரளவு மனவளர்ச்சி அடைஞ்சவங்க அந்தப் பார்ட்டியிலே இருக்க முடியாது . . . அதே சமயத்திலே, அந்தப் பார்ட்டியிலேருந்து வெளிவந்தவங்க எல்லாமே மன வளர்ச்சி அடைஞ்சவங்க இல்லேன்னு வச்சுக்குங்க, இன்க்ளூடிங் மீ!" என்று அவர் கண் சிமிட்டினார்.

மறுபடி அவள் புன்னகை செய்தாள். ஓ, அவளுக்கு அவரை– அவனை – எவ்வளவு பிடித்திருந்தது!

பீர் வந்துவிட்டது – தயாராகத் தம்ளர்களில் ஊற்றப்பட்டு.

பியரரைப் பார்த்ததும் நினைவு வந்தது போல, "பை தி வே, நீங்க ஏற்பாடு பண்ணியிருக்கிற குக் பிரமாதம்" என்றார் அவர்.

"டின்னர் சாப்பிடறதுக்கு முந்தியே தெரிஞ்சு போச்சா?"

"சித்த நேரம் முந்தி தோட்டத்துப் பக்கம் அரேஞ்ச்மெண்ட்ஸை யெல்லாம் பார்க்கலாம்னு போனேன். ஸ்வீட் ரெடியாயிருந்தது. டேஸ்ட் பண்ணிப் பார்த்தேன், லவ்லி!"

"நான்கூட இந்த அரேஞ்ச்மெண்ட்ஸையெல்லாம் செக் பண்ணலாம்னுதான் வந்தேன்."

"போகலாம், போகலாம். முதல்லே டிரிங்க்ஸை ஃபினிஷ் பண்ணலாம் – எடுத்துக்குங்க."

ஆளுக்கு ஒரு தம்ளர் எடுத்துக்கொண்டார்கள்.

"சீர்ஸ்!"

பரிச்சயமான பானம்தான். ஆனாலும் இன்று புதுமையாயிருந்தது, பரவசமாயிருந்தது. பீருக்காகவா இந்தப் பரவசம்? இல்லை. மிஸஸ் பசுபதி நிமிர்ந்து பார்த்தாள்.

"நல்லாருக்குதுங்களா?"

"லவ்லி." அவள் நெஞ்சு மறுபடி படபடத்தது.

# 26

'முதலில், நம்மை நாமே தெளிவாகப் புரிந்துகொள்வது அவசியம். அதற்கு வேண்டிய அவகாசத்தைக்கூட நாம் பெறாமலிருப்பதே நம் துரதிஷ்டம். இதுதான் வெற்றி, இதுதான் முன்னேற்றம், என்று ஏதோ சிலவற்றை நாம் நிச்சயமாக நம்பிக்கொண்டு, அவற்றையே அடிப்படையாகக் கொண்டு நம் வாழ்க்கையை அமைத்துக்கொண்டு விட்டோம். இந்த நம்பிக்கைகள் தவறாக இருக்கலாம்; இவற்றைச் சார்ந்து உருவான அமைப்புகள் யாவும் தவறாக இருக்கலாம். எது நமக்கு உண்மையிலேயே முக்கியமானது? எது நமக்கு உண்மையிலே இன்பம் தருவது? சாதிக்கக்கூடியதாக இருப்பதாலேயே எல்லாவற்றையும் சாதிக்க வேண்டியதில்லை. வெல்லக்கூடிய யாவற்றையும் வெல்ல வேண்டியதில்லை. செலவழிக்கக்கூடிய எல்லாவற்றையும் செலவழிக்க வேண்டியதில்லை. மனிதன் மென்மேலும் தன் ஆற்றல்களை உணர்ந்து வருகிறான். ஆனால் அவற்றை எப்படி, எந்த அளவுக்குப் பயன்படுத்தலாம் என்பதை மட்டும் உணரவில்லை. எல்லாவற்றையுமே பயன்படுத்த முயலவேண்டியதில்லை என்பதையும் உணரவில்லை . . .'

விசுவம் எழுதியதை ஒருமுறை படித்துப் பார்த்தான். அதிருப்தியுடன் முகத்தைச் சுளித்தவாறே காகிதத்தைக் கசக்கினான்; எறியப் போனான். பிறகு ஏதோ நினைத்தவனாய் மறுபடி அந்தக் காகிதத்தைப் பிரித்து, கசங்கல்கள் மீது கையால் தடவியவாறு இருந்தான். இந்த ரீதியில் தான் என்றும் எதையும் எழுதி முடிக்கப் போவதில்லையென்று அவனுக்குத் தோன்றியது – தீஸிஸையும் சரி, புத்தகத்தையும் சரி. ஆமாம், தீஸிஸுடன்கூடவே ஒரு புத்தகம் எழுதவும் அவன் திட்டமிட்டிருந்தான்.

பசித்தது.

சமையலறையில் ஒரு டப்பாவில ரவை இருந்ததைக் கண்டுபிடித்தான். காய்கறிக் கூடையில் தக்காளியும் உருளைக்கிழங்கும் இருந்தன. எல்லாவற்றையும் சேர்த்து உப்புமா தயாரிக்க முற்பட்டான். ரவையை வறுக்கும்போது ஏற்பட்ட மணம் அவனுக்கு ஒரு இன்பத்தை அளித்தது. காய்கறிகளை நறுக்கும்போது அவற்றின் ஸ்பரிசத்தில் ஒரு திருப்தி ஏற்பட்டது.

அந்தச் செயல், அதை அவன் மேற்கொள்ள வைத்த தேவை, இரண்டுமே குழப்பமில்லாதவை, எளிதில் புரிந்துகொள்ளக் கூடியவை. ப்த்மினியுடன் படுத்துக்கொள்வதைப் போல.

அவனுடைய தீஸிஸ் பற்றி, அதன் உந்துதல்களைப் பற்றி, இந்த அளவு குழப்பமில்லாமல் இருக்க முடியவில்லை. உலகம் முழுதும் கழிவுப் பொருள்களினால் சூழ்நிலை பாதிக்கப்படுதல், ஆற்றல் வளங்கள் குறைந்து வருதல், மனிதனின் தீர்க்க தரிசனமற்ற போக்குகளால் இயற்கையில் நிகழும் இயல்பான – ஒன்றுக்கொன்று தொடர்புள்ள – நிகழ்ச்சிகள் பங்கப்படுதலும் அதன் அபாயகரமான விளைவுகளும் – இவையெல்லாம் அவனை எந்த அளவுக்கு நிஜமாகவே கவலைப்பட வைப்பவை?

தன்னுடைய அடிப்படைத் தேவைகளை ஒட்டி, அவற்றைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக மட்டுமே வாழ்கிறவனாகப் பிறரால் அடையாளம் கண்டுகொள்ளப்படுவதில் வெட்கமடைந்து, அந்தத் தேவைகளை விடவும் மென்மையான தேவைகள் – தாகங்கள் – கவலைகள் – தனக்கு இருப்பதாகத் தனக்கும் மற்றவர்களுக்கும் நிரூபிக்க அவன் விரும்புகிறானா, என்ன?

விஸ்கான்ஸின் யுனிவர்ஸிடியில் பத்மினியைச் சந்தித்தபோதே இந்தப் பாசாங்கில் – பிரமையில் – பாதி சிதைந்துவிட்டது; இன்னொரு பாதிக்காக அவன் அப்போதிலிருந்து போராடிய வண்ணம் இருக்கிறான் . . .

உப்புமா கிண்டி முடிந்ததும் அதை ஒரு பிளேட்டில் போட்டுக் கொண்டு, ஃபிரிஜ்ஜிலிருந்து கொஞ்சம் தயிர், கொஞ்சம் சாம்பார் (காலையில் செய்த மிச்சம்) இரண்டும் எடுத்துப் பிளேட்டில் உப்புமாவுக்குத் தொட்டுக்கொள்ள விட்டுக்கொண்டு, அவன் நிதானமாக ருசித்துச் சாப்பிடத் தொடங்கினாள். பத்மினி சொன்னது உண்மைதான்; சாம்பார் நன்றாகவே இருந்தது. அவன்தான் தயாரித்தான், காலையில். அவன் எழுதுகிற பக்கங்களைப் போலன்றி, இதைப் பற்றிச் சுலபமாக ஒரு முடிவுக்கு வந்துவிட முடிகிறது. நன்றாக வந்திருக்கிறதா வரவில்லையா என்று தீர்மானிக்க முடிகிறது. இந்த நிச்சயம் ஒரு இன்பத்தையளிக்கிறது.

பத்மினியின் மூலம் அவனும், அவன் மூலம் பத்மினியும்கூட இத்தகைய ஓர் இன்பத்தைச் சில வேளைகளில்தான் பெற முடிகிறது . . .

உப்புமாவைத் தின்று முடித்துவிட்டு, விரல்களை ஒவ்வொன்றாக வாயில் விட்டுச் சப்பினான் – இந்த நிலையில் பத்மினி அவனைப் பார்க்கவேண்டும்! ... ஒரு புன்னகையுடன், அவன் கையலம்பிக் கொள்ளச் சென்றான்.

இன்றும் நேற்றைப்போல, அதற்கு முந்தைய தினங்களைப் போல, நல்ல வெய்யில். அவனுடைய அப்பாவின் வீட்டில் நாள் முழுவதும் தண்ணீர் வருகிறது. இங்கே ஸவுத் எக்ஸ்டன்ஷனில், அப்படி வருவதில்லை. தண்ணீர் பிடித்து வைத்துக்கொள்ள ஒரு பெரிய பாத்திரம் அவர்கள் வாங்கியாக வேண்டும்.

முகத்தின் மேல் சில தடவைகள் குளிந்த நீரை விசிறியடித்துக் கொண்டு, அவன் மறுபடி எழுதும் மேஜையருகில் வந்து உட்கார்ந்தான். திடீரென்று, வீட்டில் தேவைப்படும் பொருள்களுக் கெல்லாம் ஒரு பட்டியல் தயாரிக்க வேண்டுமென்று தோன்றியது. அவன் எழுதத் தொடங்கினான்: ஒரு அண்டா; ஒரு மேசை விளக்கு; திரைச்சீலைகள்; மேசை விரிப்புகள்; ஒரு சாய்வு நாற்காலி; இரண்டு சிறிய ஸ்டூல்கள்; அரை டஜன் கண்ணாடித் தம்ளர்கள்; அரை டஜன் ஸ்பூன்கள்; அரை டஜன் பீங்கான் அல்லது கண்ணாடித் தட்டுகள் ...

ஒரு பக்கம் நிரம்பிவிட்டது.

அவன் சமையலறைக்குச் சென்று அங்கு என்னவெல்லாம் பொருள்கள் தேவைப்படுகின்றனவென்று பார்த்து அதற்கும் ஒரு பட்டியல் தயாரித்தான்.

இன்னொரு பக்கம் நிரம்பிவிட்டது.

புதிதாக எதையோ படைத்துவிட்டது போன்ற பெருமையுடன், அவன் அந்தப் பட்டியல்களை மீண்டும் மீண்டும் படித்தவண்ண மிருந்தான். அவற்றில் திருத்தங்களும் சேர்க்கைகளும் செய்தவண்ண மிருந்தான்.

குழாயில் ஜலம் வருகிற ஓசை கேட்கும்வரை, அவன் அந்தப் பட்டியல்களில்தான் ஈடுபட்டிருந்தான்.

இன்று நாலு மணிக்கே ஜலம் வந்துவிட்டது.

குளித்தான். கொஞ்சம் சுறுசுறுப்பு ஏற்பட்டது. மறுபடி எழுதும் மேஜையருகில் உட்காரத் தோன்றவில்லை. டிரஸ் செய்துகொண்டு, வெளியே கிளம்பினான். உண்ணியை இன்று பார்க்க வருவதாகச் சொல்லியிருந்தான்.

உண்ணி விவசாய ஆராய்ச்சிக்கழகத்தில் அவன் வேலை பார்த்த நாட்களில் நண்பனானவன். விசுவம் ராஜினாமாச் செய்துவிட்டான். உண்ணி இன்னமும் அங்கே இருக்கிறான்.

உண்ணி, விசுவத்தை மறுபடி அங்கே வந்து சேர்ந்துவிடுமாறு கூறுகிறான். செயற்கை உர வகைகள், பூச்சிக்கொல்லி மருந்துகள்

ஆகியவற்றினால் பயிர்களின் மீதும் விளைச்சல் நிலங்களின் மீதும் ஏற்படும் நீண்டகாலப் பாதிப்புகளை ஆராய ஒரு பிராஜக்ட் துவங்க இருக்கிறதாம். சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் விசுவத்தைப் பற்றி அவன் ஏற்கெனவே கூறியாயிற்றாம். விசுவம் ஒரு அப்ளிகேஷன் மட்டும் எழுதிப்போட்டால் போதும்...

செயற்கை உரவகைகள்! பூச்சிக் கொல்லி மருந்துகள்! – பஸ்ஸில் சென்றுகொண்டிருந்த விசுவம் தனக்குத்தானே சிரித்துக்கொண்டான். நான் இன்னமும் இவற்றைப் பற்றிக் கவலைப்படுகிறேனா என்ன? எனக்கு மூட் இருக்கிற இரவுகளில் பத்மினிக்கும் இருக்க வேண்டுமே யென்று கவலைப்படுகிறேன். வீட்டிற்கு வேண்டிய சாமான்கள் தீர்ந்துவிட்டால் வாங்கவேண்டுமேயென்று கவலைப்படுகிறேன். ஃபெல்லோஷிப் பணம் வரத் தாமதமானால் கவலைப்படுகிறேன். பத்மினி அந்த மருந்துக் கம்பெனி இளைஞனுடன் – அல்லது அவளுடைய அலுவலகத்தில் வேலை செய்யும் சாட்டர்ஜியுடன் – மிக அன்னியோன்னியமாகப் பேசிச் சிரித்துக்கொண்டிருக்கத் தொடங்கினால் கவலைப்படுகிறேன்.

அவள் அப்படி அன்னியோன்னியமாக இல்லாவிட்டாலும் கவலைப்படுகிறேன்.

செயற்கை உர வகைகள்? பூச்சிக்கொல்லி மருந்துகள்? கழிவுப் பொருள்களினால் காற்றிலும் நீரிலும் நிலத்திலும் ஏற்பட்டு வரும் பாதக விளைவுகள்?

இல்லை; இவை என் கவலைகளே இல்லை.

முந்தாநாள் கூட அவர்கள் வீட்டில் ஒரு பார்ட்டி நடந்தது. புது வீட்டுக்கு வந்ததற்காக 'ஹவுஸ் வார்மிங்' பார்ட்டி. அப்பாவும் அம்மாவும் வந்திருந்தார்கள். கடைசி வரையில் இருந்து டின்னரும் சாப்பிட்டுவிட்டுப் போகலாமென்று அவன் அவர்களைக் கேட்டுக் கொண்டான். பத்மினியும் கேட்டுக்கொண்டாள். ஆனால் செல்லப்பாவுக்கு உடம்பு சரியில்லையென்றும், அவன் தனியா யிருக்கிறானென்றும் சொல்லி அம்மா மறுத்துவிட்டாள். அவர்கள் பத்து மணிக்குக் கிளம்பிவிட்டார்கள்.

செல்லப்பா மீது அவளுக்கு உண்மையிலேயே அவ்வளவு பாசமா என்ன? அல்லது...

அல்லது, பத்மினி ஒரு முக்கியப் பாத்திரமாக இருக்க, தான் ஒரு உப பாத்திரமாக மட்டும் இருந்த அந்தப் பார்ட்டியில் இறுதிவரையில் இருக்க அவள் விரும்பவில்லையோ?

எப்படியோ, அவர்கள் பத்து மணிக்குச் சென்றுவிட்டார்கள். பத்மினியின் நண்பர்கள் மட்டும் மிச்சமிருந்தார்கள் – அந்த சாட்டர்ஜியும், அந்த மருந்துக் கம்பெனி இளைஞனும் உட்பட.

பத்மினி தான் மட்டும் அவர்களுடன் சம்பாஷணையில் ஈடுபட்டு அவனைத் தனிமைப்படுத்திவிடாமல் அவனையும் அந்தச்

சம்பாஷணைகளில் ஈடுபடுத்த முயன்றாள். அந்த முயற்சி வெளிப்படையாகத் தெரிந்தது. திடீர் திடீரென்று அவர்களிடையே மௌனங்களை உருவாக்கியது.

அவள் தான் மட்டுமே அவர்களுடன் சம்பாஷித்துக் கொண்டிருக்கலாமென்று தோன்றியது.

"இவர்கூட சொல்லுவார்."

"இவருக்குக்கூட அந்த நடிகரைப் பிடிக்காது."

"விசுவம், நினைவிருக்கிறதா, நாம் அவர்கள் வீட்டுக்குப் போனபோதுகூட அந்த மாமி இப்படியே சொன்னாள், இல்லை!"

"இவரும் பம்பாயைப் பார்த்தபோது இதையேதான் சொன்னார்."

"இவரும்கூடச் சமையலில் எக்ஸ்பெர்ட்டாகிக்கொண்டு வருகிறார்."

"அந்த நியூயார்க் இன்ஸிடென்ட்டைப் பத்தி இவர்களுக்குச் சொல்லேன், விசுவம்?"

இவர், இவர், இவர். விசுவம், விசுவம், விசுவம். ஓ, காட்!

அவளுக்கு அவன்மேல் ஈடுபாடில்லையென்பதல்ல; ஆனால்...

அதை இப்படி அவள் கொச்சையாகப் பிறருக்கு நிரூபிக்க முற்பட்டிருக்க வேண்டாம் – அவளுக்கே அதில் ஏதோ சந்தேகம் தோன்றிவிட்டதுபோல.

ஒருவேளை அவள் இப்போது அவனுடைய குழந்தையைச் சுமந்துகொண்டிருப்பதால், இத்தகைய நிரூபணத்தில் ஈடுபடுவது அவசியமென்று நினைக்கிறாள் போலும்.

ஆனால் அவனை அவளிடம் முதலில் ஈர்த்தது இந்த விதரணையல்ல; இந்த இங்கிதமும் குழைவும் அல்ல.

அவனைத் தூக்கியெறிந்து பேசவும் தயங்காத துடுக்குத்தனம். அவன்மேல் அவள் கொண்டிருந்த நேசத்தை ஒளித்துக்கொண்டு அவனைக் குழப்பத்திலாழ்த்தும் குறும்புத்தனம்.

அதெல்லாம் அவனுக்குப் பிடிக்காது என்று அவள் இப்போது நினைக்கிறாளா? அடக்கத்தையும் பணிவையுமே அவளிடம் அவன் எதிர்பார்ப்பதாக அவளுக்கு ஒரு உணர்வு ஏற்பட்டுவிட்டதா?

அந்த உணர்வு ஆதாரமில்லாததாக இருக்கலாமோ?

கணவனைச் சார்ந்தே இயங்கும், அவனின்றி தனித்த இயக்கமே இல்லாத மனைவி...

அவளுடைய இந்த வேஷம் அவனுடைய பல வேஷங்களைத் திடீரென அவனை உணரச் செய்கிறது.

அவன் சமைப்பதில் ஆர்வமெடுத்துக்கொள்வது ஒரு வேஷம். அவனுக்கேற்ற இன்டலெக்சுவல் கம்பானியனாக அவளைக் கருதி ஏற்றுக் கொண்டது ஒரு வேஷம். அவளைத் தனியாளாகக் காட்டும் சில தனித்த இயல்புகளுக்காக அவளை நேசிப்பது ஒரு வேஷம்.

அவனையுமறியாமல் அவன் அணியும், அவனையே ஏமாற்றும் வேஷங்கள். உண்மையில கடைசியில்...

ஆம்! உடம்பு, உடம்பு, உடம்பு. அதுதான் உண்மை. அதன் பசி ஏற்படுத்தும் குற்ற உணர்ச்சியை மறைத்துக்கொள்ள மனம் உருவாக்கும் இதமான பிம்பங்கள் –

ஒத்துழைப்புக்குரிய துணைவி; பரிவுக்குரிய தோழி; போற்றிப் பாதுகாக்க வேண்டிய ஒரு தாயாகப் போகிறவள்....

எத்தனை பொய்கள்!

"டிக்கெட்."

அவன் கண்டக்டரிடம் டிக்கெட் வாங்கிக்கொண்டான்.

...நல்லவேளை; அன்று பார்ட்டிக்கு உண்ணியும் வந்திருந்தான். அவனுடன் சில நிமிடங்கள் இயல்பாக இருக்க முடிந்தது. அவனும் இருந்திராவிட்டால் பைத்தியம் பிடித்திருக்கும்....

முன்பு இதே உண்ணியுடன் ஒரே அலுவலகத்தில் வேலை செய்து கொண்டிருந்தபோது, தினசரி அவனைப் பார்த்துக் கொண்டும் பேசிக்கொண்டும் அவனுடன் டிபன் சாப்பிட்டுக்கொண்டும் இருந்த போது, அவனுக்கு நானும் எனக்கு அவனும் சலித்து ஒருவரை யொருவர் வெறுக்கிற கட்டத்தை ஒருநாள் அடைந்தோம்.

ஆனால் இப்போது அவன் அண்மை எனக்கு இதமாக இருக்கிறது. இப்போது நாங்கள் ஒரே அமைப்பில் நிர்ப்பந்தமாகக் கட்டுண்டவர் களல்ல, அது காரணமாக வேஷமணிகிறவர்களல்ல, இந்த வேஷத்தை என்னிடம் அவனும் அவனிடம் நானும் எளிதில் உணர்ந்து, அதனால் சலிப்பும் ஆத்திரமும் அடைகிறவர்களல்ல.

பத்மினியின் மூலம் நான் என்னையே உணர்ந்து சலிப்பும் ஆத்திரமும் அடைவதைப்போல.

என் துவேஷங்களை; என் பொறாமைகளை; என் பசிகளை...

ஓ, இந்தப் பஸ் எவ்வளவு மெதுவாகப் போகிறது!

விசுவம் தன்னிடமிருந்து, தன் சிந்தனைகளிலிருந்து தப்பித்துக் கொள்ள விரும்புவனைப்போல, சுற்றும் முற்றும் பார்க்கத் தொடங்கினான். கண்டக்டர் ஒவ்வொருவரிடமும் சில்லறை வாங்கிக் கொள்வதும் டிக்கெட் கிழித்துக் கொடுப்பதுமாக இருந்தான். விசுவத்துக்கு அவன்மேல் ஒரு அனுதாபம் ஏற்பட்டது. அருகில் உட்கார்ந்திருந்த கிழவர்மீது அனுதாபம் ஏற்பட்டது. பஸ் ஜன்னல் வழியே பார்க்கும்போது கண்ணில் தட்டுப்பட்ட சில பிச்சைக் காரர்கள், பாரவண்டி இழுப்பவர்கள், சவாரிக்காகக் காத்து நின்ற ஆட்டோ ரிக்‌ஷாக்காரர்கள், கரும்புச் சாறு விற்பவர்கள், சினிமாத் தியேட்டர் வாசல்களில் நின்ற கும்பல்கள், பஸ் சில ஸ்டாப்பிங்குகளில் நிற்காமலே சென்றபோது தவிப்புடனும் எரிச்சலுடனும் விரைந்து செல்லும் பஸ்ஸைப் பார்த்தவாறு நின்றவர்கள், பஸ் நிற்கும் பஸ்

ஸ்டப்பிங்குகளில் பரபரப்புடன் முண்டியடித்துக்கொண்டு ஏற முயன்றவர்கள்...

எல்லார் மீதும் அவனுக்கு அனுதாபமாக இருந்தது. உலகம் முழுவதும் அவனிடமிருந்து அனுதாபத்தை வேண்டி நிற்பதாகத் தோன்றியது. கர்ப்பமான நிலையிலிருந்த ஒரு ஸ்திரீயும் அவளுடைய கணவனும் அவனருகே வந்து நின்றார்கள். அவன் எழுந்து அந்த ஸ்திரீக்கு இடம் கொடுத்தான்.

எளிய கிராமவாசிகள். அவள் உடல் முழுவதும் கனமான ஆபரணங்களை அணிந்திருந்தாள். முகம் தெரியாமல் தலைப்பால் மூடிக்கொண்டிருந்தாள். அவளுடைய கணவன் மணி என்னவாயிற்று என்று விசுவத்திடம் விசாரித்துத் தெரிந்துகொண்டான்.

"இன்று ரொம்ப வெயில்" என்றான்.

"ஆமாம்" என்றான் விசுவம்.

"ஒன்றரை மணி நேரமாக நாங்கள் பஸ்ஸுக்காகக் காத்திருந்தோம் பாபுஜி."

விசுவம் ஒரு அனுதாபம் நிறைந்த புன்னகை செய்தான் – என்ன செய்வது நாம், என்பதைப் போல; அவனுடன் தானும் இந்தச் சிரமங்களையெல்லாம் பகிர்ந்துகொண்டிருப்பதைப் போல. ஆனால் இந்தத் தோழமை உணர்வில் – அது அளித்த பாதுகாப்பில் – அதிக நேரம் அவனால் திளைக்க முடியவில்லை. அது தன்னைத் தானே ஏமாற்றிக்கொள்ளும் முயற்சியாகப்பட்டது. 'இந்தக் கணத்தில் இவனும் நானும் ஒன்று என்று கொள்வதன் மூலம் நான் என் பொறுப்புகளைத் தட்டிக்கழிக்க முயல்கிறேன்' என்று அவன் நினைத்தான். இவனும் நானும் ஒன்று அல்ல. நான் இவனைவிட அதிக வாய்ப்புகளைப் பெற்றவன். அதிக வசதிகள் உள்ளவன். எனவே அதிகப் பொறுப்புகளும் உள்ளவன். நான் இந்தச் சிரமங்களை, இந்த நிலையை ஒப்புக்கொள்ள வேண்டியவன் அல்ல, இதற்குப் பரிகாரம் காணவேண்டியவன்...

மறுபடியும் ஜன்னல் வழியே தென்பட்ட வண்டி இழுப்பவர்கள், ஆட்டோ ரிக்ஷாக்காரர்கள், சினிமாத் தியேட்டர் கும்பல்கள்...

ஓ! நான் இவர்களைப் பற்றியெல்லாம் சிந்தித்தேயாக வேண்டும். நான்தான் சிந்திக்க வேண்டும் – இவர்களுக்காக இப்போதுள்ளதை விட ஒரு சிறந்த உலகத்தை உருவாக்குவது பற்றி.

...உலகெங்கிலும் குண்டர்கள் ஆட்சி புரிந்து கொண்டிருக்கிறார்கள். மக்களை இவர்களிடமிருந்து காப்பாற்ற வேண்டும். சில குழுக்கள், இவர்களுடைய சுயநலமான நோக்கங்கள், மனித சமூகத்தின் முன்னேற்றம், மேம்பாடு என்று எதையெதையோ இவர்கள் கொச்சை யாகப் புரிந்துகொண்டு அதன் அடிப்படையில் உருவாக்கியுள்ள கொள்கைகள், அமைப்புகள், இவற்றின் பொருட்டுத் தவறான முறையில் சூறையாடப்பட்டுவரும், சேதமடைந்து வரும், இயற்கை வளங்கள், மனித இயல்புகள்...

இதையெல்லாம் மிகத் தாமதமாகிவிடுமுன் தடுத்தேயாக வேண்டும். நான் இதன் பொருட்டு ஏதாவது செய்தேயாக வேண்டும். க்ரிஷிபவன்.

அவன் பஸ்ஸிலிருந்து இறங்கி, யோசனையில் மூழ்கியவனாய் சாலையைக் கடக்க முற்பட்டான்.

கிரீச்சென்று பிரேக்கின் முனகல். வேகமாக வந்த அந்தக் கார் அவன்மேல் உரசினாற் போல வந்து நின்றது. குப்பென்று உடலெங்கும் பரவிய சிலிர்ப்பு...

கார் ஓட்டி சற்றே நாகரிகமானவர். "சாலையைக் கடக்குமுன் தயவு செய்து ஒரு முறை இங்குமங்கும் பார்த்துக்கொள்ளுங்கள்" என்று கூறிவிட்டுக் காரை ஓட்டிச் சென்றார்.

அவனுக்குப் படபடப்பு அடங்குவதற்குச் சிறிது நேரமாயிற்று.

இந்தப் படபடப்பு... இதுதான் உண்மை. முன்பு பம்பாயில் பறவை மோதி விமானம் கீழே விழத் தொடங்கியபோது ஏற்பட்ட அதே படபடப்பு...

விஸ்கான்ஸின் யுனிவர்ஸிடியில் முதன் முதலாக பத்மினியைப் பார்த்தபோது ஏற்பட்ட சிலிர்ப்பு...

வருடப் பிறப்பு தினத்தன்று ரவுடிகளுக்கெதிராக வெளிப்பட்ட என் மிருக பலமும் வெறியும்...

இவையெல்லாம்தான் உண்மை. இவையெல்லாம்தான் நான்.

நானா மனித சமூகத்துக்காகக் கவலைப்படுகிறவன்? நானா அவர்களை உய்விக்கப் போகிறவன்?

ஏன் உன்னையே ஏமாற்றிக்கொள்கிறாய் விசுவம்?

உண்ணியின் அறைக்குள் நுழைந்தபோது அவன் கிளம்பத் தயாராகத் தன் மேஜையை ஒழுங்குபடுத்திக்கொண்டிருந்தான். "வா, வா... நீ வருவாயென்ற நம்பிக்கையையே நான் இழந்து விட்டிருந்தேன்" என்றான் அவன்.

விசுவம் அவனெதிரேயிருந்த நாற்காலியில் உட்கார்ந்தான்.

"மிகவும் களைத்திருக்கிறாய் போலிருக்கிறதே!" என்றான் உண்ணி.

"மரணத்துடன் கை குலுக்கிவிட்டு வருகிறேன்" என்றான் விசுவம்.

உண்ணியின் முகத்தில் ஆச்சரியம் படர்ந்திருந்தது. பழைய நாட்கள் அவனுக்கு நினைவு வந்தனவோ, என்னவோ? விசுவம் அவனுக்கு ஒரு கிறுக்காகத் தோற்றமளித்த அந்த நாட்கள்...

விசுவம் நடந்ததை விவரித்ததும் உண்ணி சற்றே ஆசுவாச மடைந்ததாகத் தோன்றியது. "நீ வரவர ரொம்பப் பொறுப்பில்லாமல் நடந்து கொள்கிறாய்" என்று விசுவத்தை அவன் உரிமையுடன் கடிந்து கொண்டான். "வெளியே நடக்கும்போதாவது நீ உன் தீஸிஸைப் பற்றி நினைத்துக்கொண்டிராமலிருந்தால் நல்லது."

விசுவம் சிரித்தான். "நீ என்னைப் பற்றி ரொம்ப நல்ல அபிப்பிராயம்

வைத்திருக்கிறாய் . . . நான் எப்போதும் தீஸிஸைப் பற்றியே நினைத்துக் கொண்டிருப்பதில்லை."

"வேறு எதைப் பற்றியோ ?"

"ஏதாவது அற்ப விவகாரங்கள். . . நம் எல்லாருக்குமே உள்ள விவகாரங்கள்."

"ஆமாம். ஆமாம் – இவற்றை யாராலும் தவிர்க்க முடியாது" என்றான் உண்ணி. தான் சொன்னதை அவன் எந்த அளவுக்குப் புரிந்துகொண்டிருப்பானோவென்று விசுவம் வியந்தான்.

சற்று நேரம் மௌனம் நிலவியது.

"நிறைய வேலை செய்கிறாய் போலிருக்கிறதே!" என்று விசுவம் மேஜைமேல் கிடந்த ஃபைல்களை நோட்டம்விட்டவாறு கூறினான்.

"நீயும் என்னைப் பற்றி ரொம்ப நல்ல அபிப்பிராயம் வைத்திருக் கிறாய்" என்றான் உண்ணி. இருவரும் சிரித்தார்கள். இறுக்கம் தளர்ந்தவர்களாய், மனம்விட்டுப் பேசத்தொடங்கினார்கள். உண்ணி தன் வேலையைப் பற்றி; விசுவம் தன் தனிக் குடித்தனத்தையும் தீஸிஸையும் பற்றி . . .

"நான் ஒருநாள் உன் சமையலைச் சாப்பிட வரப்போகிறேன்" என்றான் உண்ணி.

"வெல்கம்."

"சாப்பிட்டு விட்டு, ஈவிரக்கமில்லாமல் விமர்சனம் செய்யப் போகிறேன்."

"அதை என் மனைவி ஏற்கெனவே செய்துவருகிறாள்."

"ஓ!" என்று உண்ணி சிரித்தான். பிறகு, "குழந்தை எப்போது டியூ?" என்றான்.

"செப்டம்பரில்."

"டெலிவரிக்கு பம்பாய்க்குப் போகிறாளா ?"

"ஆமாம், பிளேன் பாஸ்தான் இருக்கிறதே!"

"யெஸ், யெஸ்."

"அடுத்த வாரம் போகிறாள்... அதற்காகத்தான் இன்று என் அம்மாவுடன் ஏதோ ஷாப்பிங் போயிருக்கிறாள்... நான் முதலில் இன்று அவளையும் அழைத்துக்கொண்டு உன் வீட்டுக்கு வரலா மென்றுதான் இருந்தேன்..."

"வெல்... இன்னொரு சமயம்."

மறுபடி மௌனம்.

"கிளம்பலாமா?" என்றான் உண்ணி. "வீட்டிற்குப் போய்ப் பேசலாம். இல்லாவிட்டால் என் வைஃப் நான் மறுபடி பார்ட்டி, கீர்ட்டி எங்காவது போய்விட்டேனோவென்று நினைத்துவிடப் போகிறாள்."

"மனைவிக்கு ரொம்பப் பயப்படுகிறாய் போலிருக்கிறதே!"

"ரொம்ப."

பேசியவாறு வெளியே வந்தார்கள். மாலை வெளிச்சம் திடீரென மிகவும் மங்கிப் போயிருந்தது. இறுக்கம் தளர்ந்து ஒரு குளுமை பரவியிருந்தது. வேகமாக அடித்த காற்றில் புழுதி படலம் படலமாக மேலெம்பி நாலா புறங்களிலும் பார்வையை மறைத்துக்கொண்டு கவியத் தொடங்கியது.

"ஆந்தி வருகிறது போலிருக்கிறது" என்றான் உண்ணி.

"ஆமாம்" என்றான் விசுவம். அவன் மனம் இப்போது இலேசாகவும் உற்சாகமாகவும் இருந்தது. பருவநிலை மாற்றந்தான் காரணமா என்று தெரியவில்லை.

உண்ணி தன் காரினுள் ஏறி மறுபக்கத்துக் கதவை விசுவத்துக்காகத் திறந்துவிட்டான். விசுவம் காரில் ஏறிக்கொண்டான். கார் கிளம்பி சாலைக்கு வருவதற்குள் வெளிச்சம் மேலும் மங்கிவிட்டிருந்தது. புழுதிப் படலம் கனத்துக்கொண்டே சென்றது. உண்ணி முன்புறத்து விளக்குகளை ஆன் செய்து காரை மெதுவாக ஓட்டிச் செல்லத் தொடங்கினான்.

விசுவம் வெளியே காற்றில் மரங்கள் அசைந்தாடுவதை, மனிதர்கள் பறக்கும் உடைகளைப் பிடித்தவாறு காற்றுக்கெதிராகத் தடுமாறி நடந்து செல்வதை, வண்டிகளின் முன்புறத்து விளக்குகள் புழுதிப் படலத்தினூடே பளிச்சிடுவதை ரசித்துப் பார்க்கத் தொடங்கினான். மறுபடி, அவன் தன்னிடமிருந்தே தப்ப முயலுவதைப் போலத் தோன்றியது...

"அப்புறம் என்ன முடிவு செய்தாய்?" என்றான் உண்ணி.

"எதைப்பற்றி?"

"அந்த வேலையைப் பற்றி."

"ஒரு முடிவும் எடுக்கவில்லை."

உண்ணி சற்று நேரம் பேசாமலிருந்தான். பிறகு "ஒரு அப்ளிகேஷன் போட்டு வைப்பதில் ஒன்றும் நஷ்டமில்லையே?" என்றான்.

"இல்லைதான்."

"எனிவே, இட்ஸ் அப் டு யூ... இது உனக்குப் பொருத்தமான வேலையாயிருக்குமென்று நினைத்தேன்... மேலும், இந்த டிபார்ட்மெண்டில் உனக்குப் பிடிக்காமலிருந்த சிலரும் இப்போது இங்கிருந்து மாற்றப்பட்டுவிட்டார்கள்."

"இப்போது இருக்கிறவர்களை எனக்குப் பிடிக்குமென்கிறாயா?"

"முன்பிருந்தவர்களைவிட நிச்சயமாக இவர்கள் மேலானவர்கள் தான்..."

"என்னுடைய ஐடியாவைத் தங்களுடைய பெயரில் பிரசுரித்துக்

கொள்ளமாட்டார்களே?"

"நோ... ஆல்ஸோ, தங்கள் அலைவரிசையிலேயே எல்லாரும் சிந்திக்க வேண்டுமென்றும், தாங்கள் சொல்வதற்கெல்லாம் ஆமாம் போடவேண்டுமென்றும் எதிர்பார்க்கிறவர்களும் இல்லை."

"என்னால் நம்ப முடியவில்லை."

"நான் பெரிதுபடுத்தவே இல்லை..."

"வெல்....பார்க்கலாம்."

விசுவத்துக்கு ஜெயின் நினைவு வந்தது. குப்தா நினைவு வந்தது. அவன் வேலையாயிருந்த காலத்தில் அவர்கள்தான் மேலதிகாரி களாக இருந்தார்கள். ஜெயின் அப்போதைய பிரதமரின் பிரைவேட் ஸெக்ரடரிக்கு மாப்பிள்ளையாயிருந்த காரணத்தால் இங்கு வேலை பெற்று, அந்த பலத்திலேயே மேலே உயர்ந்து வந்தவர். குப்தா சில மாதங்கள் முன்புவரை உணவு இலாகா மந்திரியாக இருந்து இப்போது அங்கிருந்து மாற்றப்பட்டு விட்டவரின் ஆதரவு பெற்றிருந்தவர். பழைய பிரதமரின் பெயருக்கும் சரி, பழைய உணவு மந்திரிக்கும் சரி, இப்போது மவுசு இல்லை. அதனால்தான் இந்த இருவரையும் இப்போது மாற்றல் செய்ய முடிந்திருக்கிறது...

ஜெயினுடனும் குப்தாவுடனும் தனக்கு ஏற்பட்ட அனுபவங்களை அவன் நினைத்துக்கொண்டான். அவர்கள் அவனுடைய கருத்துக் களை ஏளனம் செய்தது; தங்கள் பத்தாம் பசலித்தனமான வழி முறைகளே அமுலாக்கப்பட வேண்டுமென்று பிடிவாதமாக இருந்தது; இந்த முறைகள் தவறானதென நிரூபணமானவுடன் திடீரென்று ஜெயின் அவன் திட்டங்களைத் தன் திட்டமாகப் பிரசுரித்துப் பெயர் வாங்கியது....

'இப்போதுள்ளவர்களை எனக்குப் பிடிக்குமென்று இவன் சொல்லுகிறான், எனக்கு வரவர யாரையுமே பிடிக்கவில்லை. எல்லாருமே கோழைகளாக, போலிகளாகத் தோன்றுகிறார்கள் – தனித்தன்மையற்றவர்களாக, பெரும்பான்மையோர் அங்கீகரிக்கும் ஒரு வேஷத்தை எதிர்ப்பில்லாமல் அணிபவர்களாக... இதோ, இவனைக்கூட எனக்குப் பிடிக்கவில்லை என்றாலும்கூட இவனைப் பார்க்க வந்தேன், இவனுடன் காரில் பயணம் செய்கிறேன். இவனுக்காகத்தான் இவனைப் பார்க்க வந்தேனா? அல்லது...'

"அன்றிரவு எத்தனை மணிக்கு வீடுபோய்ச் சேர்ந்தாய்?" என்றான் விசுவம், திடீரென்று.

"இரண்டு மணிக்கு."

"வைஃப் கோபித்துக்கொண்டாளா?"

"பின்னே?" என்றான் உண்ணி. பிறகு பெருமையான புன்னகை யுடன் "இவள் கொஞ்சம் பழங்காலத்து டைப்தான்... ஆனால் அதிலும் சில செளகரியங்கள் இருக்கின்றன. என்னைக் கட்டுப்

படுத்தும் ஒரு கடிவாளமாக நான் அவளை நினைக்கிறேன். இரண்டு பேரும் ஒரே மாதிரியான மதிப்பீடுகள் உள்ளவர்களாயிருந்தால் எங்கே கோடு போடுவது, எங்கே போய் நிற்பது என்று நிச்சய மில்லாமல் போய்விடுமென்று எனக்குத் தோன்றியது – அதனால் உண்டாகும் விளைவுகள் இருவருக்குமே நன்மை தருவதாயிருக்காது."

விசுவம் பேசாமலிருந்தான். "நீ ஒப்புக்கொள்ளவில்லை போலிருக்கிறது?" என்றான் உண்ணி.

"எனக்குத் தெரியாது" என்று விசுவம் தோள்களைக் குலுக்கிக் கொண்டான்.

சுஜான் ஸிங் பார்க்கில் இருந்தது உண்ணியின் வீடு. கேட் சாத்தியிருந்தது. அவன் ஹார்னை அழுத்தியவுடன் உள்ளேயிருந்து அவனுடைய சிறு பெண் ஓடிவந்து கேட்டைத் திறந்தாள்.

அவர்கள் காரிலிருந்து இறங்கும்போது உண்ணியின் மனைவியும் வராந்தாவுக்கு வந்து விட்டாள். விசுவத்தின் உடலெங்கும் சிலிர்ப்புப் பரவியது... இந்தச் சிலிர்ப்பு ... இதற்கும், அந்தக் கார் அவனருகே உரசினாற் போல வந்து நின்றபோது ஏற்பட்ட படபடப்புக்கும் அதிக வித்தியாசமில்லையோ ...?

அவள் அவனை வரவேற்கும் முறையில் அவனைப் பார்த்து இலேசாகத் தலையை அசைத்துப் புன்னகை செய்தாள். இரண்டாம் முறையாக அந்தப் புன்னகையைப் பார்க்கிறான். ஆயினும்கூட, பல வருடங்களாகப் பரிச்சயமானது போல ...

அவனும் புன்னகை செய்தான். இதற்காகத்தான், இந்தக் கணத்துக்காகத்தான் அவன் உண்ணியைப் பார்க்க வந்தானென்று தோன்றியது ...

உண்ணியும் அவனும் டிராயிங் ரூமில் உட்கார, உண்ணியின் மனைவி சாப்பிட ஏதாவது கொண்டு வருவதற்காக உள்ளே மறைந்தாள். சற்று முன்புவரை ஓரளவாவது உண்ணியின் வார்த்தை களைக் கிரகித்துக்கொண்டிருந்த மனம், இப்போது முழுதும் அவற்றுக்கெதிராக அடைபட்டுப் போயிற்று. உள்ளே வளையல் குலுங்கும் ஓசை; பாத்திரங்களின் சப்தம்; பிளேட்டுகளின் சப்தம்; பெண்ணை எதற்கோ கோபித்துக்கொண்ட அவள் குரல் ...

அவள் டிராயிங் ரூமுக்கு வரப்போவதை ஆவலுடன் எதிர்பார்த்த வாறு, அவன் உண்ணியிடம் என்ன பேசுவதென்று யோசிக்கத் தொடங்கினான்.

# 27

**ஷா**ப்பிங் முடிந்து, அவர்கள் சாமான் பைகளுடன் காரில் வந்து ஏறிக்கொள்ளும் சமயத்தில்தான் திடீரென்று வீசத் தொடங்கியது புழுதிக் காற்று. உக்கிரமாக, வேட்கை தூண்டப்பட்ட ஆணின் பலத்தையும் வெறியையும் நினைவூட்டும் ஒரு ஹுங்கார ஓசையுடன் அடித்தது அந்தக் காற்று. பத்மினிக்கு உடலெங்கும் புல்லரிப்புப் பரவியது.

“பம்பாயில் நீ இப்படிப் பார்த்திருக்க மாட்டாய்” என்றாள் மிஸஸ் பசுபதி.

“உம்” என்று பத்மினி மரியாதைக்கு ஒரு புன்னகை செய்துவிட்டு எதிரேயிருந்த வட்டமான கனாட் பிளேஸ் பார்க்கைப் பார்த்தவாறு அமர்ந்திருந்தாள். புழுதி, புழுதி, எங்கும் புழுதி. சற்று முன் வரையில் பார்க்கின் மரங்களுக்கிடையில் சிலர் ஜோடியாக, சிலர் தனித் தனியாக அமர்ந்திருந்தார்கள். இப்போது யாருமில்லை. மரங்கள் மட்டும் காற்றின் தழுவலில் அகப்பட்டுத் திமிறியவாறு நிற்கின்றன.

அவள் களைத்திருந்தாள். சுமார் இரண்டு மணி நேரத்துக்கு மேலாக கனாட்பிளேஸ் வராந்தாக்களில் நடந்ததினால் மட்டுமல்ல, அத்தனை மணி நேரம் தன் மாமியாரின் பேச்சுக்களைக் கேட்டுக்கொண்டிருக்க நேர்ந்ததும் அவளுடைய களைப்புக்குக் காரணமாயிருக்க வேண்டும்.

அவர்களுடைய மனப்போக்குகளில் இருந்த பெரும் வித்தியாசத்தை இன்றைய தினம் மீண்டுமொருமுறை அவள் பூதாகாரமாக உணர்ந்தாள். அல்லது அது வித்தியாசமின்மையா? வயது வித்தியாசம் காரணமாக அவர்களிடையே இருக்க வேண்டுமென்று அவள் எதிர்பார்த்த ஏதோ ஒரு வித்தியாசம் இல்லாமலிருப்பதுதான் அவளை உறுத்துகிறதா?

அவள் என்னவோ பத்மினியைப் பாராட்டித்தான் பேசிக் கொண்டிருந்தாள். விசுவத்தை அவள் – பத்மினி – அடியோடு மாற்றி விட்டாளாம். இப்போது அவனுக்கு ஒரு பிடிப்பு ஏற்பட்டு வருகிறது. ஒரு ருசி ஏற்பட்டு வருகிறது. ஒரு காலத்தில், உப்பேயில்லாமல் சமைத்திருந்தால்கூட மறுவார்த்தை பேசாமல் அதை அப்படியே சாப்பிட்டு விடுவானாம்.

ஒரு அர்த்தம் பொதிந்த சிரிப்பு . . .

அவளுக்கு அந்தப் பேச்சு ஒன்றும் ரசிக்கவில்லை. சமையலில் உப்பில்லாததை அவன் சுட்டிக்காட்டாவிட்டால் என்ன? மேலதிகாரியுடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டதால் அவன் வேலையை ராஜினாமா செய்யவில்லையா? இன்னும் . . .

இவளுக்கு விசுவத்தைப் பற்றி என்ன தெரியும்?

அவனுக்குத் தனக்கு என்ன வேண்டுமென்று தெரியாதாம். யாராவது சொன்னால் கேட்கவும் மாட்டானாம். அசட்டுப் பிடிவாதம். ஆனால் இப்போது அவள் சொல்வதை அவன் கேட்கிறான். அவள் அவனை மாற்றிவிடுவாள். அவனை எப்படி நாசூக்காக அரவணைத்துச் செல்ல வேண்டுமென்று அவளுக்குத் தெரிந்திருக்கிறது.

(ரப்பிஷ், ரப்பிஷ். நான் எதற்கு விசுவத்தை மாற்ற வேண்டும்?)

அவன் சீக்கிரமே ஒரு நல்ல வேலையாகப் பார்த்துச் சேருவது தான் நல்லதாம். பத்மினிதான் சொல்ல வேண்டும். குழந்தை வேறு பிறக்கப் போகிறது. அவன் இப்படியே பொறுப்பில்லாமல் எவ்வளவு நாட்கள் இருப்பான்? பத்மினிதான் சொல்ல வேண்டும்.

(ஏன் இப்படிச் சொல்கிறாள்? பணத்துக்காக இவர்கள் கையை எதிர்பார்த்துக்கொண்டு, இவர்களுக்குச் சுமையாக இருக்கப் போகிறோமோ என்று பயப்படுகிறாளா? நான் என்ன சொல்லுவது? நான் என்ன மாற்றுவது? இவள் நினைப்பது போல, விசுவம் ஒரு சிறு குழந்தையல்ல.)

அவள் பேசப் பேச, பத்மினிக்கு எரிச்சல்தான் பெருகிக் கொண்டிருந்தது. அந்த எரிச்சல் சில சமயங்களில் நியாயமற்றதாகக் கூட இருந்ததை அவள் உணர்ந்தாள். அவள் விசுவத்தை எப்படி யெப்படியெல்லாமோ மாற்ற வேண்டுமென்று ஆசைப்படுவதில்லையா என்ன? அந்த ஆசைகளை அமுலாக்க முயலுவதில்லையா என்ன? அவன் ஒரு நல்ல வேலையில் சேர வேண்டும். சமூக அமைப்பில் ஏதோ சிலவற்றைச் சார்ந்து குறிப்பிட்ட சில பாவனைகளையும் உடையலங்காரங்களையும் மேற்கொண்டு அவற்றில் ஸ்திரமுள்ள வனாயிருக்க வேண்டுமென்று விரும்புவதில்லையா என்ன? அவனுடைய ஹேர் ஸ்டைல் முதலாகத் தன்னுடைய ஆதிக்கத்துக்குட் பட்டதாக நினைத்து அவனுக்குப் போதனை செய்ய முயலுவதில்லையா என்ன?

ஆனால் இதே கருத்துக்களை அவளுடைய மாமியார் கூறும் போது, அவளுடைய மனம் அவற்றை எதிர்க்கிறது; நேரெதிரான கருத்துக்களை உருவாக்குகிறது – அவையேதான் தன் நிஜமான கருத்துக்கள்போல. நிஜம் அந்தக் கருத்துக்களல்ல, எதிர்ப்புத்தான். நெஞ்சாழத்தில் அவர்கள் ஒருவர்பால் ஒருவர் கொண்டுள்ள வெறுப்பு ... ஏன் – அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது – போட்டி ... விசுவத்தின் மீது ஆதிக்கம் செலுத்துவதில்; உரிமை பாராட்டுவதில்; அவனுடைய நன்மதிப்பைப் பெறுவதில். அவனுடைய நன்மதிப்பு. அதாவது, அவன் – இப்போதுள்ள அவன் – என்ன நினைக்கிறா னென்ற கவலை. அதே சமயத்தில், அவன் மாற வேண்டுமென்றும் ஆசை, எல்லாரையும் போல ... அவனுடைய தனித்துவத்தின்பால் ஒரு ஈடுபாடு, ஒரு கவர்ச்சி. அதே சமயத்தில் ... என்ன வேடிக்கை!

"அந்தக் காலத்தில் நானும் அவரும் சாயங்கால வேளைகளிலே இந்தப் பார்க்கில் வந்து உட்கார்ந்திருப்போம், அடிக்கடி" என்றாள் மிஸஸ் பசுபதி.

மறுபடி பத்மினி மரியாதைக்காகப் புன்னகை செய்தாள். ஆமாம், அந்தக் காலத்தில், அவள் – மிஸஸ் பசுபதி – தில்லியில் விசுவத்தின் தந்தையுடன் இளம் மணப்பெண்ணாக வாழ்வைத் தொடங்கிய அந்தக் காலம் ... விசுவத்தின் அப்பாவும் கல்யாணமானபோதும் ஒன்றும் தெரியாதவராகத்தான் இருந்தாராம். (மறுபடி ஒரு அர்த்தம் பொதிந்த சிரிப்பு.) அவள்தான் அவரை நிஜமான ஆணாக்கினாள், உருவாக்கினாள். அவர்கள் குடும்பத்தில் எல்லாருமே அப்படித் தானாம். உக்கிரமான வேட்கையுள்ளவர்கள். ஆனால் அவர்களே இதை உணராதவர்கள், ஒப்புக்கொள்ளாதவர்கள்.

விசுவத்தின் தாத்தாகூட அப்படித்தானாம். சமஸ்கிருதப் புலவர். சாஸ்திரங்களைக் கரைத்துக் குடித்தவர். அறிவு மலை. ஆனால் அந்த இன்னொரு, அடிப்படையான விஷயத்தில் ...

ஒருநாள் திடீரென்று ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் மிஸஸ் பசுபதியிடம் அவளுடைய மாமியார் தான் பட்ட துன்பங்களைச் சொல்லி அழுதாளாம். அவளுடைய காலத்தில் பெண்கள் இதையெல்லாம் வாய்விட்டுச் சொல்லிக்கொள்ளவும் முடியாது. ஆணிடம் உரிமை எடுத்துக்கொள்ளவும் முடியாது. லஜ்ஜை! கட்டுப்பாடுகள், ஆசாரங்கள் ...

அவருக்குத் தினவு பொறுக்க முடியாமல் போகும்போது அவளுக்கு 'அது' கிடைக்கும். ஆனால் அவள் வேண்டும்போது அல்ல. அவள் விரும்புகிற அளவும் அல்ல. 'அவர்' பசி தீர வேண்டும்; அவ்வளவுதான். மறுபடி அவளுடைய நினைவு, அவளுடைய தேவை ஏற்படுகிறவரை. அவள் தவித்துத் தவித்து, ஆசைகள் பலமுறை தோன்றித் தோன்றி, ஒடுங்கி, ஒடுங்கி ... இல்லை, ஒடுக்கப்பட்டு ஒடுக்கப்பட்டு ... இன்னொரு பக்கம், அவர் அவளை நெருங்கித் தன் பசியைத் தீர்த்துக்கொண்டு, ஆனால், அவள் பசியைத் தீர்க்காமலேயே விலகிவிடும்போது,

எழுச்சியுற்ற வேட்கையை, அதைத் தணித்துக்கொள்ளச் சாதனம் அருகிலிருந்தும் இல்லாதவளாக அவள் தவித்த தவிப்பு. அவர் அவளை நெருங்காமலேயே இருந்திருக்கலாம் என்று தோன்றச் செய்யும் தவிப்பு.

இயல்பான ஒரு பசியை இயல்பானதாக ஒப்புக் கொள்ளாமல் ஒரு பலவீனமாக எண்ணி அதைப் பற்றிக் குற்ற உணர்வுகளால் பீடிக்கப்பட்ட விசுவத்தின் தாத்தாவைப் போன்றவர்கள், உடலுறவை ஏதோ சில சமயங்களில் இழைக்கப்படும் பாபமாகக் கருதி, அதைப் பற்றிப் பேச விரும்பாமல், நினைவுபடுத்தப்பட விரும்பாமல், அதே சமயத்தில் அதிலிருந்து விடுபடவும் விரும்பாமல் . . . ஓ! பெரும் ஞானஸ்தர்களாக, தசை ஆசைகளுக்கு மேற்பட்டவர்களாக அவர்கள் அணிந்த வேஷம் எத்தனை முட்டாள்தனமானது! எத்தனை பரிதாபகரமானது! அந்த வேஷம் காரணமாகப் பொங்கியெழும் ஆசைகளை அடக்கி அடக்கி அநேக இரவுகளில் நரக வேதனையை அனுபவித்த அன்றையப் பெண்கள் . . .

மிஸஸ் பசுபதி தானே நியமித்துக்கொண்ட பெண் குலத்தின் பிரதிநிதியாய், அன்றையப் பெண்களின் ஒடுக்கப்பட்ட வேட்கை களைப் பற்றி, அவர்களுக்கு மறுக்கப்பட்ட உடலுறவு வாழ்க்கைபற்றி, பேசித்தள்ளினாள். பத்மினிக்கு அருவருப்பும் சலிப்பும்தான் ஏற்பட்டது. ஒரு வேளை இன்னொரு நபருடன் இதே சம்பாஷணை களை அவள் ரசித்திருக்கவும் கூடும்தான்.

சிலருடன்தான் சேர்ந்து அமர்ந்து சாப்பிட முடிகிறது. சிலருடன் தான் இத்தகைய பேச்சுக்களைப் பரிமாறிக்கொள்ள முடிகிறது. 'அது' ஒடுக்கப்பட வேண்டாததாக இருக்கலாம். ஆனால் அது பெருமையாகப் பறைசாற்றிக் கொள்ள வேண்டியதும் அல்ல. மிஸஸ் பசுபதி தன் கணவனை ஆண் மகனாக்கியது, பத்மினி விசுவத்தை ஆக்கியிருப்பது, இனி ஆக்க வேண்டியது.

ஓ காட்!

மிஸஸ் பசுபதி ஆண்களல்லவென்று கண்டுபிடித்த இதர நபர்கள் . . .

ஒரு கட்டத்துக்குப் பிறகு பத்மினியின் மனம் அந்தப் பேச்சுக்களுக் கெதிராக அடைபட்டுப் போயிற்று. அந்தக் கட்டத்தை அவர்கள் காரில் மறுபடி வந்து ஏறிக்கொள்ளும் முன்பே அவள் எட்டியாயிற்று. புழுதிக் காற்று தொடங்கு முன்பே எட்டியாயிற்று. இப்போது அவள் அந்தக் காற்றைத்தான் பார்த்துக்கொண்டிருந்தாள். காற்றினால் வெளிப்புறச் சூழ்நிலையில் விளைந்திருந்த மாற்றங்களைப் பார்த்துக் கொண்டிருந்தாள். வெளிப்புறத்தில் மட்டுமா? மனம்கூடத்தான், சீதோஷ்ண நிலை மாற்றத்துக்கேற்ப மாறுகிறது. ஒரு அலாதியான குதூகலம், ஒரு நிறைவு . . .

புழுதிக் காற்று அடித்துக்கொண்டேயிருந்தது.

"மெட்ராஸில் நீங்கள் இப்படிப் பார்த்திருக்க மாட்டீர்கள்"

என்றார் பசுபதி.

"உம் – டில்லிக்காரங்களுக்கு இதிலெல்லாம் ஒரு பெருமை!" என்றார் மந்திரி. "அங்கேவிட நிறையப் புழுதி... அங்கேவிட நிறையக் களிமண்ணும் இருக்குமில்லை?" என்று கூறிவிட்டு உரக்கச் சிரித்தார். அவருக்கு மிகச் சுலபமாகச் சிரிப்பு வந்துகொண்டிருந்தது. அன்று பகலில் நிறையக் குடித்திருக்க வேண்டும்.

அமைச்சரவையிலிருந்த மந்திரியின் அறையில் ஜன்னலருகே அவர்கள் நின்றிருந்தார்கள். சற்று நேரம் அந்தக் காற்றையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். இயற்கையின் இயல்பற்ற அந்த வேகம் – கொந்தளிப்பு – பார்ப்பவர் உள்ளங்களிலும் எதிரொலிகளை உருவாக்கக்கூடியதாக இருந்தது. நெஞ்சின் ஆழத்தில், வெகு ஆழத்தில், ஏதோ சலனங்கள்...

ஆனால் தம்முடைய ஆழங்கள் அவ்வாறு கிளறப்படுவதை விரும்பாததுபோல, மந்திரி மீண்டும் தன் நாற்காலிக்குத் திரும்பினார். பசுபதியும் அவரெதிரில் போய் உட்கார்ந்தார். "புழுதிக் காற்றைப் பார்த்துப் பயந்துபோய் நான் உங்களைக் கூப்பிட்டனுப்பலே" என்றார் மந்திரி.

"நானும் அப்படி நினைக்கவில்லை" என்று பசுபதி புன்னகை செய்தார். சரியாகப் புழுதிக் காற்று தொடங்கியவுடன் மந்திரியிட மிருந்து போன் வந்தது.

"கங்க்ராஜுலேஷன்ஸ்" என்றார் மந்திரி.

பசுபதிக்குப் புரிந்துவிட்டது. அவர் எதிர்பார்த்திருந்த ஒரு கணம். அவர் மகிழ்ச்சி கொள்ள வேண்டிய கணம். ஆனால் அவருக்கு எந்தவிதமான உணர்ச்சியும் ஏற்படவில்லை. உணர்ச்சி களைத் தன் உந்துதல்களுக்கேற்றாற்போலப் போலியாக வெளிப்படுத்திய வாறிருக்கும் ஒருவனுடைய கதி இப்படித்தானாகிவிடும் போலும். 'மேலே சொல்லுங்கள்' என்பது போல அவர் மந்திரியின் முகத்தைப் பார்த்தபடி பேசாமல் அமர்ந்திருந்தார்.

மந்திரி தன் முன்னால் மேஜைமேலிருந்த ஃபைலை பசுபதியை நோக்கித் தள்ளினார். "அந்த விஜிலன்ஸ் கேஸ் ஒரு வழியாகத் தள்ளுபடி ஆகிவிட்டது. இன்றைக்குத்தான் கிளியரன்ஸ் வந்தது. உடனேயே உங்கள் அப்பாயின்ட்மெண்டை அப்ரூவ் செய்து விட்டேன். இப்போது நீங்கள் ஒரு ஜாயிண்ட் செக்ரடரி."

"தாங்க் யூ."

மேஜைமேல் இன்னொரு ஃபைல் கிடந்தது. "இதையும் பாருங்கள்" என்று மந்திரி அந்தப் ஃபைலையும் பசுபதியை நோக்கித் தள்ளினார். பசுபதி ஃபைலைப் பிரித்துப் பார்த்தார். பிறகு எதுவும் பேசாமல் ஃபைலைக் கட்டி மறுபடி மேஜைமேல் வைத்தார். அது எம். ஜி. ஒய். ஐயரை எஸ்டாப்ளிஷ்மெண்ட் ஆபீசராக நியமனம் செய்யும் உத்தரவு அடங்கிய ஃபைல். அந்தப் போஸ்ட் புதிதாக உருவாக்கப் பட்டிருந்தது.

எம். ஜி. ஒய். ஐயருக்கு மேல் அவரைவிட ஸீனியரானவர்கள் இருந்தார்கள். ஆனால் இது செலக்ஷன் போஸ்டாக அறிவிக்கப்பட்டு, இன்டர்வியூ நடத்தப்பட்டு, இவர் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்.

"நோ கமென்ட்ஸ்?" என்றார் மந்திரி.

"ஐ ஆம் வெரி ஹாப்பி."

மந்திரி சிரித்தார். "எல்லாம் ஜோஸ்யத்தின் மகிமை. உங்களுக்குத் தெரியுமல்லவா, இதன் பின்னணி?"

பசுபதி அதைக் கேள்விப்பட்டிருந்தார். இருந்தாலும், "தெரியாது" என்றார்.

மந்திரி சொல்லத் தொடங்கினார்:

"நான் அந்தப் பிராந்தியக் கட்சியை விட்டு ரொம்ப நாளுக்கு முன்பே வெளியிலே வந்துட்டேங்கிறது உங்களுக்குத் தெரியும். அவங்க பதவியிலே வந்ததும் கன்னாபின்னான்னு அவங்க நடந்துகிட்ட முறையும், முட்டாக்... களையெல்லாம் மந்திரி களாக்கினதும் எனக்குத் தாங்கலே. எப்பவும் தமிழர் உரிமை, தமிழர் நலம் தமிழர் சிறப்புன்னு கொச்சையா கிளிப்பிள்ளை மாதிரி பேசிக்கிட்டு... சே! என் அவுட் லுக் எப்பவுமே தேசிய ரீதியானது... பி. எம். ஆல்ஸோ நோஸ் இட்... இந்த உபதேர்தலிலே நான் செயிச்சதுக்கு, கட்சி மட்டுமில்லே, பணம் மட்டுமில்லே, என் பப்ளிக் இமேஜும்தான் காரணம்... பீப்பிள் ஆர் ஃபெட் அப் வித் தோஸ் ஃபெல்லோஸ்.... ஆமா, நான் என்ன செல்ல ஆரம்பிச்சேன்?"

"மிஸ்டர் ஐயருக்குப் பிரமோஷன் ஆனது பற்றி..."

"ஆமா ஆமா. வந்து, நான் அந்தப் பார்ட்டியிலேயிருந்து வந்துட்ட போதிலும் அன்ஃபார்ச்சுனேட்லி கம்ப்ளீட்டா அவங்க சகவாசத்தைக் கட்ஆஃப் பண்ணிக்கவும் முடியலே. என் க்ளோஸ் ரிலேட்டிவ்ஸ் வேறே அதிலே நிறைய இருக்கிறாங்க. இந்த ... (அந்தக் கட்சியின் பிரபல தலைவர் ஒருவரின் பெயரைக் கூறி) இருக்காரே, என் ஸெகண்ட் ஒய்ஃபோட சொந்த மாமன்..."

"அப்படியா?"

"ஆமாம். கொஞ்ச நாளைக்கு முந்தி இன்னொரு அரசியல் கட்சியைச் சேர்ந்த பிரபல எம். பி. – அவர் பெயர் நான் சொல்லாமலேயே உங்களுக்குத் தெரிஞ்சுபோவும் – இங்கே வந்திருந்த போது, இந்த ஐயர் மூலமாக யாரோ ஜோஸ்யரைப் பார்த்து உப தேர்தல் விஷயமா கன்ஸல்ட் பண்ணினாராம். ஜோஸ்யர் புதுசா வந்திருக்கிற பார்ட்டிதான் ஜெயிக்கும்னு அவங்களோட அலையன்ஸுக்கு அட்வைஸ் பண்ணினாராம்... அந்த எம். பி. யும் எங்க மாமனுக்கு உறவானதினாலே, ஏதோ குடும்ப நிகழ்ச்சியிலே அவுங்க சந்திச்சிருக்காங்க. அப்போ அவர் நடந்ததைச் சொல்லி யிருக்காரு. எங்க வைஃப் மாமன் உடனே தானும் அந்த ஜோஸ்யரை கன்ஸல்ட் பண்ணினாராம். அவர் சொற்படி பார்ட்டிலே'ந்து விலகி

புதுப் பார்ட்டியிலே சேர்ந்துட்டாராம் . . . புதுப் பார்ட்டிக்கு எப்படி வெற்றிக்கு மேலே வெற்றி கிடைச்சுட்டிருக்குன்னு உங்களுக்குத்தான் தெரியுமே! வைஃப் மாமனுக்கு ரொம்பத் திருப்தி. பழைய பார்ட்டியிலே அவர் ரொம்ப சாதாரணமானவராயிருந்தாரு. ஆனா இங்கே அவருக்கு என்னா மதிப்புங்கறீங்க! மந்திரியா வரதுக்கு நல்ல சான்ஸ் இருக்கு . . . ஆமா, நான் வேறே என்னவோ இல்லே சொல்லத் தொடங்கினேன் . . ."

"ஐயர் பிரமோஷன் . . ."

"ஆமா, ஆமா, ஸாரி. பேச ஆரம்பிச்சா எங்கேயாவது போயிடுது . . . இந்த ஜோஸ்யரு இப்ப எங்க வைஃப் மாமனுக்கு ரொம்ப வேண்டியவராயிட்டாரு. அவரு ஐயரு விஷயமா இவர் கிட்டே ஏதோ சொல்லியிருக்காரு! இவரு உடனே என் வைஃப் மூலமா என் கழுத்தைப் பிடிச்சு அறுக்க ஆரம்பிச்சுட்டாரு . . . சே! வைஃப்னு ஒத்தியைக் கட்டிக்கிட்டா கூடவே அவளுடைய உறவுக் காரங்கங்கற ஒரு உபத்திரவமும் சேர்ந்துவரது பார்த்தீங்களா! அதுவும் (கண் சிமிட்டியவாறு) இது ஸெகண்ட் வைஃப் வேறே . . . சரி, தொலையுதுன்னு பிரைவேட் செக்ரடரியைக் கன்ஸல்ட் பண்ணி இந்த மாதிரி அரேஞ்ச் பண்ணிட்டேன் . . . பரவாயில்லைங் கிறேன் . . . மிஸ்டர் ஐயரும் டிஸர்விங் கேஸ்தானே!"

"ஆமாம், ஆமாம். குட் வொர்க்கர்."

"ஆல்ஸோ கிளெவர்."

பசுபதி புன்னகை செய்தார். 'நாம் எல்லோருமே அப்படித்தானே' என்று அவருக்குத் தோன்றாமல் போகவில்லை. மந்திரிக்கும் இது பட்டிருக்க வேண்டும். "ஆல் பிராமின்ஸ் ஆர் கிளெவர்" என்று பசுபதியின் கையில் தட்டிக் கொடுத்தார்.

"அப்படியானால் இந்தக் காலத்தில் எல்லாருமே பிராமின்ஸ்தான்."

"பிராமின்ஸ் ஆர் ஆல்ஸோ கவார்ட்ஸ்."

"நோ கமெண்ட்ஸ்."

"பிரிட்டிஷார் காலத்திலேருந்து உங்களைப் போன்றவங்க மத்திய அரசாங்கத்திலே முக்கியமான பதவிகளிலே இருக்கிறீங்க . . . இங்கே இருக்கிற தினசரிகளிலே கூட ஒரே ஸவுத் இண்டியன் பிராமின்ஸ் தான். ஆனாலும், ஸவுத்துக்குன்னு ஒரு பவர்ஃபுல் லாபியை உங்களாலேயே உருவாக்க முடியலியே? உங்களுடைய ஐடெண்டிடியை அஸெர்ட் பண்ண முடியலியே . . . ஆர் இஸ் இட் தாட் யூ டோன்ட்-ஹாவ் அன் ஐடென்டிடி.? லாக் ஆஃப் கன்விக்ஷன்ஸ் . . . ஆர் இஸ் இட் எஸ்கேப்பிஸம்? பூணூல் போட்டுண்டு, காலையிலும் மாலையிலும் சந்தியாவந்தனம் பண்ணிண்டு, பண்டிகைகளைக் கொண்டாடிண்டு, உங்க ஷோ கால்ட் சாஸ்திரங்களைக் காப்பாத்திண்டிருந்தா போறும் – இன்றைய அமைப்பிலே உங்களுக்கு எந்தப் பொறுப்பும் கிடையாது. எதனுடனும் நீங்க ஐடென்டிஃபை

பண்ணிக்க மாட்டேங்க. தமிழ், தமிழ்நாடு, இந்திய அமைப்பில் அதன் இடம், இவை உங்கள் பிரச்சனைகளல்ல. இந்திய தேசியம் ஸவுத் நீங்கலாக அல்ல, ஸவுத்தையும் அரவணைத்ததாக இருக்க வேண்டுமென்பதற்காக, நம் உரிமைகளுக்காக, நீங்கள் கவலைப்பட மாட்டீர்கள். பழைய சிந்தனைத் தடங்களின் பாதிப்பு... அரசன் அரசாளுவான். பிராமணன் ஒரு மூளை பாங்க்காக இருப்பான், என்ற மனோபாவம்... பட் திங்க்ஸ் ஹாவ் சேஞ்ச்ட்! இன்று ஆளுவது நாம், ஐ மீன் மக்கள்... ஒவ்வொருவருக்கும் பொறுப்பு இருக்கு. தேசத்துக்கு ஒரு நல்ல ஐடென்டிடியைக் கொடுக்கிறதிலேயும் சரி, அதே சமயத்திலே, நம்ம சொந்த ஐடென்டிடி கரைஞ்சு போகாமல் பார்த்துக்கிறதிலேயும் சரி... பிரிஞ்சு போறேன்னு சொல்றது ஒரு எல்லை. இவங்க போடற ரொட்டித் துண்டுகளைச் சாப்பிட்டுக் கிட்டு ஒத்துப்போய்க்கிட்டேயிருக்கிறது இன்னொரு எல்லை... வீ ஹாவ் டு அஸெர்ட்! மத்திய அரசாங்கத்திலே நம் தகுதிகேற்ற விகிதாசாரத்தை அதட்டி வாங்கணும் – நமக்காக இல்லை, தேசத்தின் நலனுக்காக."

"அப்ப, தமிழ்நாட்டிலே குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை வேணுமானால் கொஞ்சம் தளர்த்தலாம்."

"புரியலை."

"அப்பத்தானே அங்கே ஜனத்தொகை பெருகி, லோக்சபாவிலே நமக்கு இன்னும் ஸீட் கிடைக்கும்?"

மந்திரி சிரித்தார். பிறகு மணியைப் பார்த்துவிட்டு, "மை காட்!" என்று எழுந்தார். பசுபதியும் எழுந்தார்.

இருவரும் வராந்தாவில் நடக்கத் தொடங்கினார்கள்.

"அந்தச் செயற்கை உரத் தொழிற்சாலை ஃபைலிலே புதிய நோட் ஒன்று தயார் செய்துவிட்டேன் – ஸவுத்திலேதான் லொகேட் பண்ணணுமின்னு" என்றார் பசுபதி.

"குட், குட். நாளைக்கே அதை ஃபைனலைஸ் பண்ணிடலாம்... திருட்டுப் பசங்க! கமிட்டி ரிகமண்ட் பண்ணினப்புறம்..."

லிஃப்டை அடைந்தார்கள். அங்கிருந்த சேவகன் அவசரமாகப் பித்தானை அழுத்தினான். லிஃப்ட் வாசலுக்கு இருபுறங்களிலும் இருந்த பூந்தொட்டிகளின் மேல் மந்திரியின் பார்வை சென்றது. முகத்தில் ஒரு மலர்ச்சி ஏற்பட்டது. "லுக்ஸ் நைஸ் – இல்லை!" என்றார். "வெரி நைஸ்... ஆஃபீஸ் முழுவதிலும் இப்படி வைத்திருப்பார்களென்று நம்புகிறேன்."

"ஆமாம்... எல்லா வராந்தா ஓரங்களிலும், லிஃப்ட் வாசல் அருகிலும், அன்ட் ஆஃப் கோர்ஸ், கான்ஃபரன்ஸ் ஹாலுக்கு வெளியே..."

"ஐ நோ, ஐ நோ. அதை நானே பார்த்தேன். வெரி நைஸ்...

அன்றைக்கு ஹோம் மினிஸ்டர் வந்தாரே. அசந்து போயிட்டார். மிக அழகாக வைத்திருக்கப்பட்டுள்ள மினிஸ்டரி நம்முடையதுதான் என்று சொன்னார். பி.எம். காதுக்குக்கூட இது எட்டியிருக்கு போலிருக்கு... அன்னிக்கு எங்கேயோ பார்த்தபோது, ஒரு நா உங்க ஆபீசுக்கு வந்து பார்க்கணும், அப்படின்னாங்க... ரியலி, உங்க வைஃபுக்கு நான் ரொம்பக் கடமைப்பட்டிருக்கிறேன்... இந்தப் பூந்தொட்டிகளை வைக்கிறதிலே அவுங்க எடுத்துக் கொண்டே இன்டரெஸ்ட்..."

லிஃப்ட் வந்துவிட்டது. ஆனால் அதனால் பாதிக்கப்படாமல் மந்திரி தொடர்ந்து பேசிக்கொண்டு சென்றார்.

"என் வீட்டுத் தோட்டத்திலேயும் உங்க வைஃப் நிறைய இம்ப்ரூவ் மெண்ட்ஸ் ஸஜ்ஜெஸ்ட் பண்ணியிருக்காங்க... இட் லுக்ஸ் டெரிபிள் நௌ... அடுத்த டின்னர் அரேஞ் பண்றதுக்குள்ளேயும் தோட்டத்தைச் சரியாக்கிப்பிடணும்... பை தி வே, நாடகம் என்னிக்கு? தேதி முடிவாயிடுத்தா?"

"இன்னும் இரண்டு மூன்று நாட்களில் முடிவாகி விடும்... உடனேயே உங்களுக்குத் தெரியப்படுத்திவிடுகிறேன் – தலைமை தாங்கப் போகிறவர் என்கிற முறையிலே..."

"இல்லை" என்று மந்திரி நாடகபாணியில் பசுபதியின் கையைப் பற்றிக் கொண்டார். "ஒரு ரசிகன்ங்கற முறையிலே. ஓ. கே.!"

அவர் லிஃப்டில் போய் ஏறிக்கொண்டார். கதவு மூடியது. பசுபதி தன் அறையை நோக்கி நடந்தார்.

'ரசிகன்ங்கற முறையிலாம்! அயோக்கியன்!... என்ன சொல்ல விரும்புகிறான்?'

தன் அறையை அடைந்ததும், மீண்டும் அந்த நாற்காலியில் உட்காருவதும், அந்த ஃபைல்களைப் பார்ப்பதும் அவருக்குத் திடீரென்று சலிப்பு மிக்க விஷயங்களாகத் தோன்றின. ஒரு பிரமோஷன் கிடைத்திருக்கிறது... ஆனால் ஏனோ அவருக்குக் குதூகலமாக இல்லை.

அவர் ஜன்னலருகே போய் நின்றார். புழுதிக் காற்று இன்னமும் அடங்கவில்லை. வருடா வருடம் வெய்யில் வருகிறது. இந்தக் காற்று வருகிறது. ஆனாலும்கூட, ஒவ்வொரு வருடமும் அந்த வருடம்தான் முதன் முறையாக வருவது போல இந்தப் பருவ நிலை மாற்றங்கள் எவ்வளவு பசுமையாக, ஆர்வத்தைத் தூண்டுபவையாக... மனிதர்களால் இப்படி இருக்க முடிவதில்லை.

அவருக்குக் கிடைத்த முதல் பிரமோஷன் நினைவு வருகிறது. அப்போது எத்தனை சந்தோஷமாக இருந்தது! அப்போது ஒரு வெள்ளைக்காரத் துரையிடம் அவர் இருந்தார். துரையின் மனைவிக்கு இந்தியாவின் சீதோஷ்ண நிலை ஒத்துக்கொள்ளாததால் பெரும்பாலும் அவள் இங்கிலாந்திலேயே இருந்து வந்தாள். துரை தனிமைக்கு

மாற்றாக, கிளப் அலுத்துவிடும் சில மாலை வேளைகளில் பசுபதியின் வீட்டுக்கு வந்து உட்கார்ந்திருப்பார். செஸ்ஸோ, காரம்ஸோ, சீட்டோ ஆடுவார்கள். இந்த விளையாட்டுக் களை வேறு சக ஊழியர்கள் வீடுகளில்கூட அவர் ஆடியிருக்கலாம் தான். ஆனால் இங்கு அவருக்குக் கிடைத்த கம்பெனி . . .

பாக்கியத்தின் நாசூக்கான, இங்கிதமான பேச்சும் பாவனைகளும் . . .

அதன் பிறகு எத்தனையோ மேலதிகாரிகள், எத்தனையோ பிரமோஷன்கள். எல்லாருடனும் அவரால் நேசமாகவும், பிரியத்துக் குரியவராகவும் இருக்க முடிந்திருந்தது. அலுவலக உறவுகளுடன் நின்றுவிடாமல் ஒரு இனிய நண்பனாக விளங்க முடிந்திருக்கிறது.

அவள் – பாக்கியம் – இல்லாமல் இது சாத்தியமாயிருக்காது என்பது உண்மையாயிருக்கலாம். ஆனால் இது பற்றி அவருக்கு எந்தவிதமான கிலேசமும் ஏற்பட்டதில்லை. அவருக்கு அவள்மேல் நம்பிக்கை இருந்தது. பெரும்பாலான மனிதர்கள் தன் மனைவி அடக்கவொடுக்க மானவளாகவும் பிறர் மனைவியர் அப்படி அல்லாதவர்களாகவும் இருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள். பெரும்பாலானவர் களுடைய மனைவியர் சுவாரஸ்யமானவர்களாகவும் இல்லை. இத்தகைய சிலர் அவருடைய மனைவியின் மூலம் ஒரு இன்பமும் பரவசமும் கிடைத்ததாக மயங்கி, அதனால் அவருக்குச் சில அனுகூலங்கள் விளைந்திருக்கக்கூடும். இது வெவ்வேறு சூழல்களில் பிறந்து வளர்ந்தவர்கள் ஒரு அமைப்பில் பங்குதாரர்களாகிச் சமூக உறவாடல்களில் ஈடுபடும்போது தவிர்க்க முடியாமல் நடக்கிற நிகழ்ச்சி . . . இதில் குற்ற உணர்வோ பச்சாதாபமே கொள்வதற்கு என்ன இருக்கிறது?

"நான் மூர்க்கமாக எதையும் விலக்க முயன்றதில்லை. யாரையும் தவிர்க்க முயன்றதில்லை. போலியான கட்டுப்பாடுகளில் சிக்கி உழலும் ஒரு 'டிபிகல் பிராமினாக' இல்லாமலிருக்கவே நான் முயன்று வந்திருக்கிறேன். புதிய மனிதர்கள், புதிய சூழ்நிலைகள், இவற்றில் பரவசமடைந்து வந்திருக்கிறேன். என்னை நானே புதிதாகக் கண்டுபிடித்தவாறே இருந்திருக்கிறேன். ஒவ்வொரு கட்டமும், ஒவ்வொரு நிகழ்ச்சியும், புதிய வேஷமொன்றை அணியும் வாய்ப்பு . . .'

புதிய வேஷங்கள்; என் வெவ்வேறு அம்சங்களின் தேடல், பரீட்சை . . .

ஆனால் . . .

நான் யார், உண்மையில்?

அவருக்குத் திடீரென்று தன் முகம் மறந்து போயிற்று. இப்போ தெல்லாம் அடிக்கடி இப்படி ஆகிவிடுகிறது. யாருடனோ பேசிக் கொண்டிக்கும்போது திடீரென்று பாதியில் முகம் மறந்துவிடுகிறது. பிறகு கண்ணாடியில் போய்ப் பார்த்தால் அங்கு ஏதோ ஒரு அந்நிய முகம் அவரைப் பார்த்து விழிக்கிறது. இதுவா என் முகம்,

என்று பிரட்சியும் அதிர்ச்சியும் ஏற்படுகிறது...

அவருக்கு இப்போது கண்ணாடியில் போய் தன் முகத்தைப் பார்க்க வேண்டும் போலிருந்தது. அதே சமயத்தில் அப்படிப் பார்க்கப் பயமாகவும் இருந்தது.

எனக்கு என்ன ஆகிக்கொண்டிருக்கிறது? நான் எங்கே தவறிழைத்தேன்?

ஒரு வேளை அந்தந்தக் கணத்துப் பரவசத்தில் மயங்கிப் புதிது புதிதாக வேஷமணிந்தவாறே இருந்தது தவறா?

புதிய புதிய சூழல்களை – பாவனைகளை – வாழ்க்கை மதிப்புகளை – சுவீகரித்தவாறே இருந்தது தவறா?

நான் யார்? எனக்கு என்ன ஆகிக்கொண்டிருக்கிறது? இந்த மந்திரி ... நான் அவரை வெறுக்கிறேன். மனதார வெறுக்கிறேன்.

தேசீய அவுட்லுக்காம்!

அயோக்கியன். பக்கா ரோக் ...

அதனாலா அவரை வெறுக்கிறேன்? யார் அயோக்கியன்? யார் அயோக்கியன் இல்லை? ...

அவருக்குத் திடீரென்று தன் வெறுப்பு புரியத் தொடங்கியது. இந்த மந்திரி என்னைப் போல ஒரு நடிகர். புதிது புதிதாக வேஷமணிந்து அதிலேயே இன்பமடைகிறவர். அதனால்தான் அவரை நான் வெறுக்கிறேன்.

பொறாமை; போட்டியுணர்ச்சி.

பாக்கியம் ...

இவர், நான் இதுவரை வீட்டுக்கழைத்து வந்த மேலதிகாரிகளைப் போல இல்லை. இவர் என்னைவிடச் சிறந்த நடிகர்.

பாக்கியம் ...

பாக்கியம்! எனக்குப் பயமாயிருக்கிறது.

வெளியே புழுதிக் காற்று அடித்துக்கொண்டேயிருந்தது.

# 28

**வி**ர், விர்ரென்று காலை நேரத்தின் பரபரப்புடன் சாலையில் வண்டிகள் சீறி விரைந்துகொண்டிருந்தன. சாலையைக் கடக்க விரும்பிய செல்லப்பாவுக்கு, வழக்கமான ஒரு மருட்சியும் கிலியும் ஏற்பட்டது. அந்த வேகம், ஓசை, அதிர்வு' அந்த வண்டிகளில் ஓரிரண்டு திடீரென்று சாலையை விட்டு விலகி அவன் மீது பாயத் தொடங்குவது போன்ற தோற்றம்; ரத்த வெள்ளத்தில் அவன் அசைவற்றுக் கிடப்பது போன்ற தோற்றம் – உய்ங்க்! ஒரே கணம்தான். வாழ்வையும் சாவையும் பிரிக்கும் ஒரு கணம். அவன் அதே சாரியில் மேலே நடக்கத் தொடங்கினான். எதிரே வந்து கொண்டிருந்த பாதசாரிகள்கூட அவன் மேல் மோதி அவனைக் கீழே தள்ளி நசுக்கும் நோக்கம் கொண்டவர்களாகத் தோன்றினார்கள். அவன் அவர்களால் தாக்கப்படாமலிருக்க இங்குமங்குமாக நகர்ந்த வாறிருக்க வேண்டியிருந்தது. பெண்கள் அவனைக் கேலியாகவோ அலட்சியமாகவோ பார்த்துக்கொண்டு போனது போலிருந்தது; அதுவும் ஒருவகைத் தாக்குதல்தான். அவன் ஒரு வேட்டைப் பொருள்; ஏதேதோ சக்திகள் நாலா புறங்களிலிருந்தும் அவன் மேல் இறுக்கமாகக் கவியத் தொடங்கி யிருக்கின்றன, அவனை அழிக்கத் துடிக்கின்றன. திடீரென்று ஒரு கணம் அமைதி. சாலையில் வண்டிகள் இல்லாத ஒரு கணம். அவன் அவசரமாகச் சாலையைக் கடக்க முற்பட்டான். பாதிச் சாலை கடந்த பிறகு சற்றுத் தூரத்தில் ஒரு ஸ்கூட்டர் அவனையே குறிபார்த்துக்கொண்டு வருவதுபோலத் தோன்றியது. அவன் புறப்பட்ட இடத்துக்கே திரும்பிவிடலாமென்று நினைத்துத் திரும்பினான். ஆனால் இந்தப் பக்கம் ஒரு லாரி வந்துகொண்டிருந்தது. அவன் உறைந்துபோய் இருந்த இடத்திலேயே நின்றான். கையில் லைப்ரரி புத்தகங்கள் கனத்தன. அவன் சாலையில் இறந்து

கிடக்கும்போது இந்த லைப்ரரி புத்தகங்களும் அருகில் கிடக்கும். இன்று அந்தப் புத்தகங்கள் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டிய கடைசித் தேதி. அவனுக்கும்தான் இது கடைசித் தேதி. ஸ்கூட்டர் இதோ அருகில் வந்துவிட்டது. படபடவென்று இதயம் அடித்துக் கொள்கிறது. என்ன ஆச்சரியம்! ஸ்கூட்டர் அவன் மேல் ஏறாமலேயே அவனைத் தாண்டிச் செல்கிறது. ஆனால் ஸ்கூட்டரையடுத்து ஒரு பஸ் வருகிறது. கூடவே பின்புறத்தில், நெருங்கிவரும் அந்த லாரியையும் அதிர்வின் மூலம் உணர முடிகிறது. செல்லப்பா ஒரு திடீர் பரபரப்புடன் சாலையின் குறுக்கே ஓடினான். கிரீச்சென்று பஸ்ஸின் பிரேக்குகள் அலறும் சப்தம்; அவன் மறுசாரியை எட்டிவிட்டான். பஸ் டிரைவரும் பஸ்ஸிலிருந்த வேறு பயணிகளும் அவனை நோக்கிக் கிண்டலாவும் கோபமாகவும் ஏதேதோ கூவினார்கள். அவன் சாகாததற்காக அவர்கள் அவனைக் கோபித்துக் கொள்வதுபோலத் தோன்றியது. அல்லது தங்களைத் தாங்களே நொந்துகொள்கிறார்கள் போலும். குறி பிசகிவிட்டது. வேட்டைப் பொருள் தப்பிவிட்டது!

செல்லப்பா பஸ் ஸ்டாண்டுக்குப் போய் நின்றான். படபடப்பு அடங்கச் சற்று நேரமாயிற்று. முதல் ஓரிரண்டு பஸ்களை வேண்டு மென்றே அவன் தவறவிட்டான். வீட்டிலிருந்து கிளம்பி வந்தேயிருக்க வேண்டாமென்று இப்போது தோன்றியது. திரும்பிப் போய்விட்டா லென்ன? ஆனால், அதற்கு மறுபடியும் சாலையைக் கடக்க வேண்டியிருக்கும். அவன் ஏக்கத்துடன் தன் படுக்கையை நினைத்துக் கொண்டான்.

சென்ற ஒரு மாதகாலமாக அவன் பெரும்பாலும் படுத்துக் கொண்டவாறேதான் நாட்களைக் கழித்திருந்தான். ஃப்ளு ஜுரம் வந்து படுக்கையில் தள்ளியது. ஜுரமும் சோர்வும் பத்து நாட்கள் நீடித்தன. ஜுரம் சரியாயிற்று; ஆனால் அதன் பிறகும் படுக்கை யிலிருந்து எழுந்திருக்க மனம் வரவில்லை. என்றென்றும் படுத்துக் கொண்டேயிருக்கலாம் போலத் தோன்றியது. இன்றைக்குக் கூட வெளியே வந்திருக்க மாட்டான். ஆனால் இந்தப் புத்தகங்களைத் திருப்பிக் கொடுக்க வேண்டியிருந்தது. இல்லை, அது மட்டுமே உண்மையான காரணமில்லை. நண்பன் ஒருவன் வீட்டுக்கு வருவதாகக் கூறியிருந்தான். அவனைத் தவிர்ப்பதற்காக இந்தப் புத்தகங்களை ஒரு காரணமாகக் கொண்டு அவன் வெளியே கிளம்பி வந்திருந்தான் என்பதே உண்மை.

இப்போது அந்த நண்பன் மேல் எரிச்சல் பீறிட்டெழுந்தது. தன் மீதும்தான். வருகிறேன் என்று அவன் போனில் சொன்னபோது, தான் ஏன் தீர்மானமாக அவனைத் தடுக்க முயலவில்லை, சாமர்த்திய மான பொய் ஒன்றைக் கூறவில்லை? 'என்ன செய்கிறாய்?' என்று அவன் முதலில் கேட்டான். 'நான் உங்கள் வீட்டுக்கு வரலாமென்றிருக்

றேன்' என்றான் அவன். 'வாயேன்' என்றான் செல்லப்பா. "நீ வெளியில் எங்கும் போகவில்லையே?"

"இல்லை, இல்லை."

அப்படி அவனிடம் சொல்லிவிட்டு இப்போது பஸ் ஸ்டாண்டில் நின்றுகொண்டிருக்கிறான். இது எவ்வளவு முட்டாள்தனமானது, அனாவசியமானது! ஒரு பொய், ஒரே ஒரு சமயோசிதமான பொய்தான் தேவையாயிருந்தது, இதைத் தவிர்ப்பதற்கு. அந்தச் சமயோசிதம் அவனுக்கில்லை. ஒவ்வொருவரும் ஒவ்வொன்றும் தன்னைப் பயன் படுத்திக்கொள்ள அவன் எளிதில் அனுமதித்துவிடுகிறான். ஆம், அது ஒரு பயன்படுத்திக்கொள்ளல்தான். போனை வைத்தவுடனேயே அதை அவன் உணரத் தொடங்கியிருந்தான். அந்தப் பையன் சங்கர் செல்லப்பாவின் மூலமாகத் தனக்கென ஒரு புதிய பிம்பத்தை உருவாக்கிக்கொள்ள விரும்புகிறான். இவ்வளவு நாளாகத் திருச்சி யிலிருந்த அவன் சமீபத்தில்தான் டில்லி வந்திருக்கிறான். அவன் கண்களுக்கு டில்லி நகரம் ஒரு புதிய உலகமாகவும் செல்லப்பா அவ்வுலகின் பிரதிநிதியாகவும் தோன்றுகிறார்கள். இந்தப் பிரதிநிதியுடன் அவன் தன்னை ஆவேசமாகப் பிணைத்துக்கொள்ள விரும்புகிறான். அல்லது ஆதிக்கம் செலுத்த விரும்புகிறான். ஆமாம், ஆதிக்கம். டில்லியில் வேறு நண்பர்களை அவனால் பெற முடியாது என்பதில்லை; ஆனால் இந்த நண்பர்கள் எல்லாருமே அடங்கிய சுபாவமுள்ளவர்களாக, எளிதில் ஆதிக்கத்துக்குட்படுபவர்களாக இருப்பவர்களென்று சொல்வதற்கில்லை. செல்லப்பா இத்தகைய ஒருவனாயிருக்கிறான். டில்லி இளைஞன் ஒருவனை வெல்லும் ஆசையை, அவனைவிடத் தான் மேம்பட்டவனென்ற திருப்தியை, செல்லப்பாவின் மூலம் சங்கர் எளிதில் பெற முடிகிறது. தன்னுடைய தாழ்வு மனப்பான்மையை மறக்க முடிகிறது.

நான் அவனைவிட உயர்ந்தவனாக என்னை எண்ணிக் கொள்ளாத போதும்கூட அவன் அத்தகைய ஒரு ஸ்தானத்தில் என்னைக் கண்டு அந்த ஸ்தானத்தைப் பறிக்க முயலுதல்... என்ன வேடிக்கை! என்ன தலைவேதனையும்கூட! அவனுடன் கழிக்கும் கணங்கள் செல்லப்பாவுக்கு நரகமாகிவிட்டிருந்தன. மிகச் சாதாரண சர்ச்சை களைக்கூட அவர்களுடைய பரஸ்பர உயர்வு – தாழ்வை, ஹோதா அல்லது ஹோதாவின்மையை நிர்ணயிக்கும் பந்தயங்களாக, யுத்தங்களாக, சங்கர் காணத்தொடங்கியிருந்தான். எத்தகைய பலதரப்பட்ட, முக்கியத்துவமேயில்லாத, பிரச்சினைகள் பற்றி யெல்லாம் அவர்களிடையே உணர்ச்சிவசப்பட்ட வார்த்தைப் பரிமாற்றம் நிகழ்ந்திருக்கிறது! ஹாலிவுட் நடிகர்களில் யார் சிறந்தவர், சிறந்த சினிமாத் தியேட்டர்களைக் கொண்ட இந்திய நகரம் எது, கிஷோர் குமார் டி.எம்.சௌந்தரராஜனை விட நன்றாகப் பாடுகிறாரா இல்லையா, பஸ் கண்டக்டர்கள் அதிக அவமரியாதை காட்டுவது டில்லியிலா சென்னையிலா, ஆங்கிலம் போதனா மொழியாகத்

தொடர வேண்டுமா கூடாதா, இந்தியா கிரிக்கெட் ஆடுவதை நிறுத்த வேண்டுமா இல்லையா, நேற்றை விட இன்று அதிகமாக வியர்க்கிறதா இல்லையா, தோசைக்குத் தொட்டுக் கொள்ள தக்காளிச் சட்டினி தேங்காய்ச் சட்டினியைவிட ருசியானதா இல்லையா... பல சமயங்களில் இத்தகைய சர்ச்சைகள் அவர்கள் ஒருவரையொருவர் மூர்க்கமாக அடித்து நொறுக்குவதற்கும் கிழித்துக் குதறுவதற்குமான ஒரு விருப்பத்தின் மறைமுகமான வெளிப்பாடுகள் போலவே தோன்றி யிருக்கின்றன. அவனுடன் சுற்றிவிட்டு வீட்டுக்கு வந்த பல நாட்களில் அவன்பால் தனக்குள் குமுறிக் குமுறியெழுந்த துவேஷமும் கோபமும் செல்லப்பாவைத் திகைப்பில் ஆழ்த்தியிருக்கின்றன. எந்த அளவு அவனால் ஒருவனை வெறுக்க முடியுமென்பதை அவனுக்கு உணர்த்தி யிருக்கின்றன. அன்றைய இரவு முழுவதையும் வெறுப்பில் வெந்தவாறு அவன் கழிப்பான். காலையில் அந்த வெறுப்பு அர்த்தமற்றதாகத் தோன்றும். ஆனால் மறுபடி அவனைச் சந்திக்கும்போது அதே வெறுப்பு மீண்டும்...

தன்னுள் பல சமயங்களில் காரணமில்லாமல் வெறுப்புச் சுரந்தவாறிருப்பதாகவும், சங்கர் இந்த வெறுப்பைப் பிரயோகிக்கக் கூடிய ஒரு சாதனமாகத்தான் பயன்படுகிறானென்றும் கூடச் சில சமயங்களில் தோன்றியது. ஏனென்றால் சங்கரை மட்டுமல்ல, இன்னும் யார் யாரையோ அவன் வெறுத்தான். அந்தப் பருமனான மனிதரை வெறுத்தான். (ஒரு முறை சினிமா தியேட்டரில் அவனுடன் பலவந்த மாகப் பரிச்சயமேற்படுத்திக்கொண்டிருந்தவரான அவருடன் அவ்வப் போது தற்செயலான சந்திப்புகள் நிகழ்ந்தவாறிருந்தன. அவர் அவனுடைய நிறம், குணம் ஆகியவற்றைப் போலியாகப் புகழ்கிறார்; கால்களுக்கிடையில் கையால் தடவி, தன் வீட்டுக்கு வருமாறு அவனை அழைக்கிறார்.) சாந்தாவை வெறுத்தான். (அவளைச் சுயநலம் மிக்கவளாக அவன் உணரத் தொடங்கியிருந்தான். அவளுக்கு வேண்டியது ஒரு ஆண் அடிமை, அவளுடைய துதி பாடியவாறிருக்கும் பக்தன். அவனுடைய நேசத்தை அவள் புரிந்துகொள்ளவில்லை. அதற்கான பக்குவம் அவளுக்கில்லை.) தன் அம்மாவை வெறுத்தான். (அவள் அவனை வயது வந்தவனாகவே நடத்தவில்லை, மதிக்கவில்லை.) அப்பாவையும் விசுவத்தையும் வெறுத்தான். (அவர்கள் அவனை மிகவும் பெரியவனாக மதித்து, அவனிடம் உரிமைகள் எடுத்துக் கொள்ளத் தயங்குகிறார்கள். அதுவும் அவனுக்குப் பிடிக்கவில்லை.) பத்ரியை வெறுத்தான். (தன்னுடைய தயக்கங்களும் சந்தேகங்களும் அவனுக்கு இல்லாமலிருப்பதற்காக.)

திடீரென்று தன் தனிமையை அவன் பூதாகாரமாக உணர்ந்தான். ஆட்டோ ஒன்று பஸ் ஸ்டாண்டை நெருங்கிக்கொண்டிருந்தது. அதை நிறுத்தி ஏறிக்கொள்ளலாமாவென்று நினைத்தான். வேகமான பயணத்தினால் ஒருவேளை மனம் உற்சாகமடையக்கூடும். ஆனால் அதற்குள் பஸ் ஸ்டாண்டில் நின்றிருந்த ஒருவர் அவனிடம் மணி

என்னவென்று கேட்டார். அவன் கூறினான். வெகு நேரமாகத் தான் நாற்பத்தைந்துக்காகக் காத்திருப்பதாகக் கூறி, அவனும் அந்த நம்பருக்காகத்தான் காத்திருக்கிறானாவென்று அவர் கேட்டார். "எனக்கு இங்கே பக்கத்தில்தான் போக வேண்டும் – பிரிட்டிஷ் கவுன்ஸில்வரை" என்றான் செல்லப்பா. "எந்த பஸ்ஸில் வேண்டுமானால் போகலாம்."

"ஆமாம். ஆமாம்" என்று ஆமோதித்தார் அவர். "நடந்துகூடப் போய்விடலாம்."

"ஆமாம். வெய்யிலாக இல்லாவிட்டால் நான்கூட நடந்திருப்பேன்."

"அவ்வளவு அதிகமாக இருக்கிறதா என்ன வெய்யில்?"

"நடக்கும்படியாகக் குறைவாகவும் இல்லையே!"

"நான் நடந்துவிடுவேன்."

செல்லப்பா எரிச்சலடைந்தான். அதை மறைக்கும் ஒரு புன்னகையுடன் அவன் மௌனமானான். இவரிடம் வீணாகத் தான் போகுமிடம் முதற்கொண்டு கூறியிருக்க வேண்டாம். வேறு பலரிடம் வழக்கமாக நிகழ்ந்து வருவதுபோல, இவருடைய ஆதிக்க உணர்வும், அவனால் தூண்டப்பட்டுவிட்டது. பிறருடைய ஆதிக்க உணர்வுகளை எப்போதும் அவன் கிளர்ந்தெழச் செய்துவிடுகிறான்.

அந்த ஆட்டோ ரிக்ஷா பஸ் ஸ்டாண்ட் அருகில் வந்து நின்றிருந்தது. அதில் ஏறிச் சென்றுவிட்டாலென்ன, என்று அவன் மறுவினாடி நினைத்தான். ஆனால் இவர் தொடர்ந்து அவனிடம் ஏதேதோ பேசத் தொடங்கினார். பஸ் ஸர்வீஸ் மோசடைந்து வருவது பற்றி; அரசாங்கத்தின் தவறான கொள்கைகள் பற்றி, சிறிய கார்த் திட்டமாவது, மண்ணாங்கட்டியாவது! மேல்நாடுகளில் கூடக் கார்களைத் தடை செய்வது பற்றி யோசித்து வருகிறார்கள். நமக்கு வேண்டியது இன்னும் அதிகமான, வசதியான பஸ்கள்...

செல்லப்பா அவரிடமிருந்து கத்தரித்துக்கொண்டு போகும்வழி தெரியாமல், அவர் வார்த்தைகளை வேண்டாவெறுப்பாகக் கேட்டுக்கொண்டு நின்றான். ஆட்டோவில் போகிறேனென்று அவரிடம் சொல்ல இரண்டு மூன்று முறைகள் வாயைத் திறந்தான். ஆனால் சொல்லவில்லை. அவர் சொல்ல விடுவதாக இல்லை. சம்பாஷிப்பதற்கு அல்ல, கேட்பதற்கு மட்டுமே அவருக்கு ஒரு மனிதன் தேவைப்பட்டது போலிருந்தது. அந்தத் தேவையை அவர் அவன் மூலமாக ஆவேசத்துடன் பூர்த்தி செய்துகொண்டிருந்தார். மேலும் அவருடைய பேச்சுத் தொனி ஆட்டோவில் செல்வது பற்றி அவனைக் குற்ற உணர்ச்சி கொள்ளவைப்பதாக இருந்தது. அப்படி அவன் செல்வது அவருடைய கசப்புணர்ச்சியைத் தூண்டுவதாக இருக்குமென்று தோன்றியது. அவருடைய உணர்ச்சிகளைப் பற்றித்தான் எதற்காகக் கவலைப்பட வேண்டுமென்பது புரியாமலேயே அவன்

அந்தக் கவலைகளின் கைதியாகி ஆட்டோவை நோக்கிக் காலடியெடுத்து வைக்கத் தெம்பில்லாமல் நின்றுகொண்டேயிருந்தான். சற்று நேரத்தில் ஆட்டோ அங்கிருந்து கிளம்பிச் சென்றுவிட்டது. அவனுக்கு மறுபடி தன் மீதே அதிருப்தியும் சலிப்பும் ஏற்பட்டது.

அவர் பேசிக்கொண்டேயிருந்தார். அவனுடைய பார்வை அவர் முகத்தின் மேல் கொஞ்சம், பஸ் வரும் திசையில் கொஞ்சம், பஸ் ஸ்டாண்டில் இருந்த மற்றவர்கள் மீது கொஞ்சம் என்று அலைந்தது. இவ்வளவு பேர் இருக்கும்போது அவர் பேசுவதற்கு அவனைப் பொறுக்குவானேன்? அவனுடைய தோற்றதில் ஏதோ ஒரு பளிச்சென்று தாக்குதல்களை ஈர்ப்பதாக இருக்கிறது. அல்லது அவன் ஏதோ ஒரு விநோதமான சாபத்துக்கு ஆளாகியிருக்கிறான். ஆமாம், அதில் சந்தேகமில்லை. பஸ் வரவில்லை. வரவேயில்லை. இன்னும் சில விநாடிகளில் அவனுக்குப் பைத்தியம் பிடிக்கப் போகிறது. வெய்யிலையும் பொருட்படுத்தாமல் இங்கிருந்து நடந்துவிட்டாலென்ன? ஆமாம், வேறு வழியில்லை.

இந்த எண்ணத்தை அவன் செயலாக்கவே இருந்தான். அதற்குள் சாலை முனையில் பஸ் ஒன்று திரும்புவது தெரிந்தது. அவன் பரபரப்படைந்தான். "என்ன பஸ்ஸோ, பார்க்கலாம்" என்று தனக்குத் தானே சொல்லிக்கொள்பவன்போல, ஆனால் அவருக்கும் கேட்கும் படியாகச் சொல்லிக்கொண்டு, சாலையோரத்தை நோக்கி நடந்தான். பஸ் வந்து நின்றதும், பஸ் ஸ்டாண்டிலிருந்தும், அதைவிட முக்கியமாக, அவரிடமிருந்தும், விடுதலைபெறும் உத்வேகம் உந்தித் தள்ள, அவன் கூட்டத்தையும் பொருட்படுத்தாமல் முண்டியடித்துப் பஸ்ஸினுள் ஏறினான். அவன் ஏறியதுமே பஸ் கிளம்பிவிட்டது. அவரும் ஏறியிருக்கிறாரா என்று பார்த்தான். ஆனால் அவரைக் காணவில்லை. அது நாற்பத்தைந்து இல்லை போலும். அவனுக்கு ஆறுதலாயிருந்தது.

இந்த ஆறுதல் நீடிக்கவில்லை. பஸ்ஸினுள் அவனைவிடத் திடகாத்திரமான, பெரும் ஆகிருதியுள்ள, ஒருவன் அவன் மேல் இடித்துக்கொண்டு நின்றான். தன்னால் அவனுக்கு அசௌகரியம் ஏற்படக்கூடாதென்று செல்லப்பா கவலைப்பட்ட அளவுக்கு, அவன் செல்லப்பாவைப் பற்றிக் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. செல்லப்பாவை எப்போதும் அச்சுறுத்தி வந்த ஆதிக்க உணர்வுகளின் ஸ்தூல உருவமாக அவன் தோன்றினான். மேலே உயர்ந்து கம்பியைப் பிடித்துக்கொண்டிருக்கும் அவன் கையின் தோற்றமே எப்படி முரட்டுத்தனம் நிரம்பியதாக, பயத்தைத் தோற்றுவிப்பதாக இருந்தது! கண்டக்டரின் குரல்கூட, அந்த மனிதனிடம் பேசும்போது, ஒரு கணத்துக்குப் பணிவு நிரம்பியதாக மாறிப்போயிற்று. செல்லப்பாவுக்குக் கையில் இரு புத்தகங்களுடன் லைப்ரரிக்குச் சென்றுகொண்டிருக்கும் தன் மீது சிரிப்பும் இரக்கமும் ஒருங்கே தோன்றியது. அவன் போன்றவர்கள் வாழத் தகுதியானவர்களே அல்ல. உடல் வலிமையும்

முரட்டுத்தனமுமே இவ்வுலகில் மதிக்கப்படுபவை, வெல்பவை. இந்த மனிதனைப் போல அவன் இருந்திருந்தால் பஸ் ஸ்டாண்டில் அவனிடம் யாரும் மணி கேட்கத் துணிய மாட்டார்கள். நடந்துபோகுமாறு உபதேசிக்கத் துணிய மாட்டார்கள். முன்பின் அறியாதவர்கள் அவன் கால்களுக்கிடையில் தடவத் துணிய மாட்டார்கள். சாந்தா போன்ற பெண்கள் அடிமைபோல நடத்த மாட்டார்கள். சங்கர் போன்றவர்கள் அளவுக்கு மீறிய உரிமைகள் எடுத்துக்கொண்டு, பெண்களுடன் ஏற்பட்ட அனுபவங்கள் பற்றியெல்லாம்கூட விசாரிக்கத் துணிய மாட்டார்கள். ஆமாம். இப்போது சில நாட்களாகச் சங்கர் இதைப் பற்றி அடிக்கடி பேசத் தொடங்கியிருந்தான். இதுவும் ஒரு பலப் பரீட்சைதான். செல்லப்பாவை விடத் தன்னை அனுபவசாலியாக ஸ்தாபித்துக்கொள்ளும் முயற்சிதான். இந்த ஸ்தானத்தைப் பெறுவதற்காக அவன் பொய் சொல்லவும் தயங்கமாட்டான். எனவே இந்த வெற்றியை அவன் பெறாமலிருப்பதற்காகச் செல்லப்பாவும் பொய் சொல்லியாக வேண்டும். சே!

தனக்குள்ளேயே கனன்று கொண்டிருந்த வெறுப்பின் வேகத்தால் உந்தப்பட்டவன் போல பஸ்ஸிலிருந்து இறங்கியதுமே அவன் வேகமாக நடக்கத் தொடங்கினான். ஆனால் லைப்ரரியை அடைந்ததும் அவனுடைய வேகம் குறைந்தது. லைப்ரரி மாடியில் இருந்தது. கீழே ஓவியக் கண்காட்சிகள் நடத்தப்படும் ஒரு காலரி இருந்தது. அவன் அந்த காலரிக்குள் பிரவேசித்தான். ஓவியங்களை மெல்லப் பார்வையிட்டவாறே நடந்தான். ஒரு பெரிய கலா ரசிகன்போல, விமரிசகன்போல, அவன் உணர்ந்தான். அங்குமிங்குமாகச் சில பெண்கள் நின்றிருந்தார்கள். அவர்கள் எந்தெந்த ஓவியங்களைப் பார்த்தவாறு நின்றார்களோ, அவற்றைப் பார்ப்பதற்காக அவன் அவர்களருகே சில நிமிடங்கள் நிற்க நேர்ந்தபோது, உடலெங்கிலும் கிளுகிளுப்புப் பரவியது, உள்ளத்தில் பரவசம் ஏற்பட்டது. அவர்களும் அந்தத் தருணத்தில் அவ்வாறே பரவசமாக உணர்ந்ததாகத் தோன்றியது.

அந்தப் பெண்கள் ஒவ்வொருவராக காலரியை விட்டு வெளியேறினார்கள். கடைசிப் பெண்ணும் சென்ற பிறகு செல்லப்பாவும் வெளியே வந்தான். அங்கிருந்த பாத்ரூமுக்குள் சென்று நிலைக் கண்ணாடியில் முகத்தைப் பார்த்துக்கொண்டான். பிறகு வெளியே வந்து லைப்ரரிக்குச் செல்லும் படிக்கட்டுகளில் ஏறத் தொடங்கினான். நடுநடுவே சற்று நின்று தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டான். எல்லாப் படிகளிலும் ஏறிய பிறகு, லைப்ரரிக் கதவைத் திறப்பதற்கு முன்பாக மீண்டும் சில விநாடிகள் இதயப் படபடப்பு அடங்குவதற்காக நின்றான். அவன் செல்லும் வேறு சில இடங்களிலும்தான் இவ்வாறு படிக்கட்டுகள் இருக்கின்றன. ஆனால் அவற்றில் ஏறும்போது இதுபோல இதயப் படபடப்பு ஏற்படுவதில்லை.

சுவாசம் சற்று நிதானப்பட்ட பிறகு கதவைத் திறந்து கொண்டு லைப்ரரிக்குள் பிரவேசித்தான். ஆனால் கௌண்ட்டரில் நின்றிருந்தவர்களைப் பார்த்ததும் ஏமாற்றமுண்டாயிற்று. யாருடைய பார்வையைச் சந்திப்பதற்கேற்ற துணிவை இத்தனை நேரத் தாமதிப்பின் மூலம் உருவாக்கிக்கொள்ள முயன்றிருந்தானோ அவளை அங்கே காணோம். இன்னொருத்தி இருந்தாள். இவள் கிழவி.

ஆனால் லைப்ரரிக்குள் வேறு பெண்கள் இருந்தார்கள். சிலர் மேஜைகளருகே அமர்ந்து படித்தவாறு; சிலர் ஷெல்ஃபுகளுக்கருகே நின்றவாறு. செல்லப்பா ஷெல்ஃபுகளைச் சுற்றி வலம் வரத் தொடங்கினான். ஒருவிதத்தில் அது பெண்களைச் சுற்றி வரும் வலமாகவும் இருந்தது. வெவ்வேறு புத்தகங்களைக் கையிலெடுத்து அங்குமிங்குமாகப் பக்கங்களைப் புரட்டிப் பார்ப்பதன் மூலமாகவே – சில சமயங்களில் அவற்றின் தலைப்பை மட்டுமே படிப்பதன் மூலமாகக்கூட – அவன் அவற்றின் பயனை அடைந்துவிட்டாற் போன்ற பிரமை ஏற்பட்டது. அவற்றைச் சார்ந்த அறிவிலும் அனுபவத்திலும் பங்கு பெற்றுவிட்டது போலிருந்தது. வெவ்வேறு பெண்களின் அருகில் நிற்பதன் மூலமாகவே அவர்களுடன் ஏதேதோ பகிர்ந்துகொண்டதைப் போலிருந்தது. புரியவைத்தது போலவும், புரிந்துகொண்டது போலவும் இருந்தது.

உட்கார்ந்து எழுதிக்கொண்டிருந்த ஒரு பெண்ணின் எதிரிலிருந்த நாற்காலி காலியாயிற்று. அவன் உடனே அந்த நாற்காலியில் போய் உட்கார்ந்து, மேசைமேலிருந்த பத்திரிகையின் பக்கங்களைப் புரட்டத் தொடங்கினான். அவள் கிறங்கவைக்கும் அழகில்லை யென்றாலும் துருதுருப்பான தோற்றமுடையவளாயிருந்தாள். நல்ல சுபாவமுள்ளவள் போலவும் தோன்றினாள், அன்பும் கருணையும் உள்ளவளாக. அவளெதிரில் அமர்ந்திருந்த அந்தத் தருணத்தில் தன்னுள் தன்னம்பிக்கையும் உற்சாகமும் சுரக்கத் தொடங்குவதை அவன் உணர்ந்தான். அவளைப் போன்ற ஒருத்திக்கு முற்றிலும் ஏற்ற, அவளுடைய பிரமிப்பையும் பக்தியையும் தூண்டும் ஆண் துணையாக, அவன் மாறிப் போனான். அவன் ஒரு லெக்சரர். இல்லை, ஓய்வு நேரத்தில் கவிதை எழுதும் ஒரு பத்திரிகை நிருபர் – இல்லையில்லை, ஒரு நடிகன் அல்லது ஒரு பாடகன்...

இங்கு அமர்ந்திருக்கும்போது அவன் யார் யாராகவோ மாற முடிகிறது. அவனுடைய திறமைகளுக்கும் சாதனைகளுக்கும் எல்லையேயில்லை போலத் தோன்றுகிறது. அதனால்தான் இந்த லைப்ரரி அவனுக்குப் பிடிக்கிறது. யுனிவர்ஸிடி லைப்ரரியில் இவ்வாறு உற்சாகமாக உணர முடிவதில்லை. அங்கு அவனைப் பற்றிய தம்முடைய பல எளிமைப்படுத்தப்பட்ட உருவகங்களுக்குள் அவனைக் கட்டுப்படுத்த முயலுகிற பலர் வந்து அவன் கனவுகளைச் சிதைத்து விடுகிறார்கள். இங்கு யாரும் வரமாட்டார்கள்.

அவன் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து வாசலையும் கௌண்ட்டரையும் நன்கு பார்க்க முடிந்தது. இன்று ஏனோ அவள் வரவில்லை. ஒருவேளை பிற்பகல் ஷிஃப்டில் இருக்கிறாள் போலும். இனிமேல்தான் வருவாள். அல்லது உடல் நலமில்லாமல் இருக்கலாம். இப்போது எல்லோருக்கும் ஃப்ளூ வந்துகொண்டிருக்கிறது. அல்லது ஊருக்கு எங்கேயாவது போயிருக்கலாம். ஒரு வேளை வேறு வேலை கிடைத்திருக்குமோ? ஆனால் இது நல்ல வேலைதானே. இதைவிட்டுப் போவாளா, என்ன? அல்லது ஒருவேளை கல்யாணம் நிச்சயமாகி ...

திடீரென்று நெஞ்சில் திக்கென்றது. கௌண்ட்டரின் அருகில் வந்து நிற்பது யார்? சங்கரா? அவனைப் போலத்தான் இருக்கிறது. செல்லப்பாவின் உற்சாகமெல்லாம் மறைந்து போயிற்று. சங்கரின் கண்ணில்களில் தட்டுப்படாமலிருக்க ஏதாவது வழியிருக்கிறதா என்று மனம் கவலையுடன் ஆராயத் தொடங்கியது. இடியட்! இவனை யார் இங்கே வரச்சொன்னது? உடம்பெல்லாம் படபட வென்றது. வெறுப்பலைகள் மறுபடி அவனை ஆட்கொண்டன. அப்போது கௌண்ட்டரருகே இருந்தவன் தலையைத் திருப்பினான். இல்லை, சங்கர் இல்லை. அவனுடையதே போன்ற பின் தோற்றம் ஏமாற்றிவிட்டது. செல்லப்பாவுக்கு ஆசுவாசம் ஏற்பட்டது.

ஆனால் அதன் பிறகு அங்கே நிம்மதியுடன் உட்கார்ந்திருக்க முடியவில்லை. எந்த நிமிடமும் சங்கரோ அல்லது வேறு யாராவதோ லைப்ரரிக்குள் நுழையப் போகிறார்களென்று தோன்றியது. அந்தப் பருமனான மனிதர்! அவருடைய அலுவலகம் இங்கேதான் எங்கேயோ இருக்கிறது, அவர்கூட இங்கு வரலாம். சற்று நேரம் முன்பு வரை அவனுள் மண்டியிருந்த இனிய, பாதுகாப்பான உணர்வுகள் திடீரென்று சிதறிப்போயின. மறுபடி அவன் வேட்டைப் பொருளைப் போல உணர்ந்தான். நாலாபுறங்களிலிருந்தும் அவனை நசுக்கி அழிப்பதற்காக நெருங்கிக்கொண்டிருக்கும் மனிதர்களை மறுபடி கண்டான். எதிரே உட்கார்ந்திருந்தவளின் முகத்திலிருந்த அன்பும் கருணையும்கூட மறைந்து போயிற்று. அந்த முகத்திலும் ஏளனம் தெரிந்தது. குரூரம் தெரிந்தது.

வெளியே வெய்யில் மறைந்து மப்புப் போட்டிருந்தது ஜன்னல் வழியே கண்களுக்குத் தென்பட்டது. அவனை வெளியே கூப்பிடும் ஓர் அழைப்புப்போல அது தோன்றியது. அவன் எழுந்து, படிகளில் இறங்கி, கட்டிடத்தை விட்டு வெளியே வந்தான். பின்புறத்திலிருந்த புல்வெளியில் போய்ப் படுத்துக்கொண்டான். நான் மாயைகளின் பின்னால் அலைந்துகொண்டிருக்கிறேனா என்ன, என்று நினைத்தான். சங்கர் போன்றவர்கள் அலங்காரமற்ற வெறும் உண்மையை நாடு கிறார்கள். அதனால்தான் எனக்கு அவர்களைப் பிடிக்கவில்லையா? ஆனால் மாயையும் ஓர் உண்மைதான். அவன் கண்களை மூடிக் கொண்டான். லைப்ரரியில் எதிரே உட்கார்ந்திருந்தவளின் முகம்

தெரிந்தது. அவளை விரும்புவதற்கான காரணங்களையும் வெறுப்பதற் கான காரணங்களையும் மனம் ஆராயத் தொடங்கியது. அரூபமாக அவனுள் கொந்தளித்தவாறிருக்கும் சக்தியெல்லாம் ரூபமெடுத்தாக வேண்டும். உணர்ச்சியாக. அவ்வுணர்ச்சி அன்பாகவுமிருக்கலாம். வெறுப்பாகவுமிருக்கலாம். மனம் கற்பித்துக்கொள்ளும் ஒரு வடிகால். உண்மையில் அன்புக்கும் வெறுப்புக்கும் அதிக வித்தியாசம் இல்லை. . .

சற்று நேரம் படுத்திருந்த பிறகு அத்தகைய வித்தியாசமற்ற மனநிலையைத் தான் எட்டிவிட்டதாக அவனுக்குத் தோன்றியது. அரிதிலும் அரிதான கணம்! சற்று அசைந்தாலும் அந்த மனநிலை கெட்டு விடலாமென்பது போல் அவன் அசையாமல் கிடந்தான். அங்கேயே அப்படியே படுத்திருந்தால் போதுமென்று தோன்றியது. வேறெதுவுமே செய்யத் தகுதியானதில்லை. இனி எங்கும் போக வேண்டாம். யாரையும் பார்க்க வேண்டாம். எல்லா மனித இயக்கங்களும் அனாவசியமானவை. உலகமே அனாவசியமானது. திடீரென்று துரிதமாக வளர்ச்சியடைந்து பெரும் கிழவனாகித் தான் இறந்து போவது போலிருந்தது. திடீரென்று தனக்கு வயது குறைந்துகொண்டே போவது போலவும் இருந்தது. இருபது, பதினைந்து, பத்து, ஐந்து, இரண்டு, ஒன்று . . . கர்ப்பப்பையில் அவன் இருந்த காலம்கூட நினைவு வருவது போலிருந்தது. கர்ப்பப்பையிலும் அவன் படுத்துக்கொண்டுதான் இருந்திருப்பான். ஒருவனுடைய சுவாபாவி கமான நிலை படுத்துக்கொண்டிருப்பதுதான். வாழ்க்கையின் இறுதியிலும், ஆட்டமெல்லாம் ஓய்ந்த பிறகு, எல்லாரும் படுத்துக் கொள்ளத்தான் செய்கிறார்கள். அவன் கண்களைத் திறந்தான். மூடிக் கிடந்த வானம், அசைவேயில்லாத மரங்கள், காற்றேயில்லாத ஒரு ஜுலை பகல், காற்றில்லை, மழை யில்லை, வெய்யிலுமில்லை. புழுக்கமான ஒரு பகல், இயற்கையே ஸ்தம்பித்துவிட்டதுபோல. ஒரு முடிவுக்கு வர இயலாமல் குழம்பி யிருப்பதுபோல, அல்லது முடிவுகள் எடுத்து அலுத்துவிட்டதுபோல, எல்லா சாத்தியக்கூறுகளும் சலித்துவிட்டதுபோல . . அவன் மறுபடி கண்களை மூடிக்கொண்டான்.

தாரா கண்களைத் திறந்தாள். பத்ரியும் மற்றவர்களும் இன்னமும் வாக்குவாதம் செய்துகொண்டிருந்தார்கள். அவள் கணேசனின் சட்டையைப் பிடித்து இழுத்தாள். "போகலாம்."

"ஒரு நிமிஷம்" என்று கணேசன் அவளைப் பார்த்துச் சைகை காட்டினான். பிறகு பத்ரியிடம் "ராம் கிஷோர் வருவானென்று தோன்றவில்லை" என்றான்.

"நீதானே அவனையும் கூப்பிடவேண்டுமென்றாய்?"

"சொன்னேன் . . . ஆனால் அவன் வருவானென்று தோன்ற வில்லை."

"அப்படி வராமல் போய்விடுவானா? நான் பார்த்து விடுகிறேன், எப்படி அவன் வராமலிருக்கிறானென்று" என்று குல்வந்த் பட படப்பாகப் பேசினான். "அவன் கிளர்ச்சிக்கான அழைப்பு விடுத்த

போது நாமெல்லாரும் கலந்துகொள்ளவில்லையா? நம்முடைய உதவியில்லாமல் அவன் அவ்வளவு பெரிய ஊர்வலம் நடத்திச் சென்றிருக்க முடியுமா?"

"அப்போது நம் நோக்கங்கள் தற்செயலாக ஒன்றுபட்டிருந்தன" என்றான் கணேசன். "சர்வகலாசாலையின் தலைமையில் மாறுதல் ஏற்பட வேண்டுமென்று நாம் விரும்பியது போலவே ராம் கிஷோரின் கட்சியும் விரும்பியது. அப்போதைய துணைவேந்தர் செயற்பட முடியாத ஒரு இறுக்கமான சூழ்நிலையை உருவாக்குவதே அவர்களுடைய நோக்கமாயிருந்தது. அவர் ராஜினாமாச் செய்ததும் அந்த நோக்கம் நிறைவேறியது. ஆனால் ..."

கணேசன் நிறுத்திவிட்டுச் சுற்றுமுற்றும் பார்த்தான். அறை யிலிருந்த மாணவர்கள் யாவரும் ஆர்வத்துடன் தன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்ததைக் கண்டு அவனுக்கு உற்சாகம் ஏற்பட்டது. என்றும் போல அன்று காலையிலும், வீட்டை விட்டுக் கிளம்புவதற்கு முன், அம்மா, அப்பா, தங்கை, தம்பி ஆகியவர்கள் அவன் மனதில் மூட்டிவிட்டிருந்த எரிச்சலெல்லாம் திடீரெனத் தணிந்து போனதை அவன் உணர்ந்தான். தனக்கென ஒரு புதிய பிம்பத்தைக் கண்டுபிடித்துவிட்ட பரபரப்புடன் அவன் மேலே பேசினான்:

"ஆனால், புதிதாக வந்துள்ள துணைவேந்தர் ராம் கிஷோரின் கட்சிக்குச் சாதகமானவர்தான். எனவே அவர்களைப் பொறுத்த வரையில் சர்வகலாசாலையில் இனி தீர்க்கப்பட வேண்டிய பிரச்னைகள் எதுவுமில்லை. சீராக்கப்பட வேண்டிய கோளாறுகள் எதுவுமில்லை – விசித்திரம், ஆனால் உண்மை! பரீட்சை முறையில் மாறுதல், மாறிவரும் சூழ்நிலைகளுக்கேற்ப பாடத்திட்டமும் கல்வி முறையும் மாற்றியமைக்கப்படுதல், விளையாட்டு வசதிகள், லாபரெட்டரி வசதிகள், ஹாஸ்டல் வசதிகள், காண்டீன் வசதிகள், லைப்ரரி வசதிகள் ஆகியவை விரிவாக்கப்படுதல், ஆகியவை யெல்லாம். அவை ராம் கிஷோரின் பிரச்சனையாகவுமிருக்கலாம். ஆனால் அவை ராம் கிஷோரின் பிரச்சனைகள் அல்லவே அல்ல! அவனுடைய பிரச்சனைகள் தீர்ந்துவிட்டது, அவனுடைய லட்சியம் ஈடேறிவிட்டது. கட்சித் தலைவர்களைத் திருப்தி செய்ததின் மூலம் தன் சுபிட்சமான எதிர்காலத்துக்கு அவன் வழி செய்துகொண்டாகிவிட்டது. அந்தத் துறையில் முன்னேற டிகிரி போன்றவை அவசிய மில்லையென்பதும் உங்களுக்குத் தெரியும் ..."

சிரிப்பும், கூச்சல்களும், ஏதேதோ பொருள்களைத் தட்டியெழுப்பிய ஓசைகளும் அறையை நிறைத்தன. கணேசன் ஆரவாரம் அடங்குவது வரையில் காத்திருந்தான். பிறகு மறுபடி பேசினான்:

"எனவே நம்மைப் பற்றி இறுதியாக நாம்தான் கவலைப் படவேண்டும். நம்முடைய சண்டையை நாம்தான் போட வேண்டும். ராம் கிஷோர் ஒரு தலைவன்; ஆனால் அவன் நம் தலைவனல்ல.

அவன் பிதிபலிப்பது நம் கொள்கைகளையும் நம்பிக்கைகளையும் அல்ல, அவனுடைய போராட்டம் இவற்றின் நிமித்தமாக அல்ல. இதற்கு மேல் நான் சொல்ல வேண்டியது எதுவுமில்லை. ராம் கிஷோரை ஊர்வலத்தில் கலந்துகொள்ளுமாறு அழைக்க வேண்டுமா, இல்லையா என்ற முடிவை ...” கணேசன் ஒரு கணம் நிறுத்தி, பத்ரியை நோக்கித் திரும்பியவாறு கூறினான்: “நம் தலைவருக்கே விடுகிறேன். ஆனால் ஒன்று: ராம் கிஷோர் ஊர்வலத்தில் கலந்து கொள்ளாவிட்டால், இதெல்லாம் மாணவருடைய தலைமையைக் கைப்பற்ற இதரக் கட்சிகள் செய்யும் சூழ்ச்சி என்ற பிரசாரம் எழும்ப அது காரணமாகும்.”

மறுபடி கரகோஷம், கூச்சல்கள். திடீரென்று தாரா ஒரு வெறுமை யையும் பாதுகாப்பின்மையையும் உணர்ந்தாள். இந்த இயக்கம் ஏற்கெனவே பத்ரியை ஒரு ஜன்னியைப் போல ஆட்கொண்டு விட்டிருந்தது. அவன் அவளுக்கு நஷ்டமாகிவிட்டிருந்தான். இப்போது, கணேசனும் . . .

“என்ன, டயலாக்கெல்லாம் முடிந்ததா, இல்லை இன்னும் இருக்கிறதா?” என்றாள் அவள் கணேசனிடம்.

“எனக்குத் தலையை வலிக்கிறது, நான் போகிறேன். நீ ஒரு ஹீரோவாக இங்கேயே இரு.”

“இதோ வருகிறேன் – ப்ளீஸ்!” என்றான் அவன் மன்னிப்புக் கோரும் குரலில். அவள் அதற்குள் வாசலை நோக்கி நடக்கத் தொடங்கினாள். கணேசன் அவசரமாகப் பத்ரியிடம் சென்று அனுமதி பெற்றுக்கொண்டு, அவளுடன் சேர்ந்துகொண்டான். இருவரும் வெளியே வந்தார்கள்.

“என்ன சொல்கிறார்?” என்றாள் தாரா.

“யார்?”

“தலைவர்.”

கணேசன் சிரித்தான்.

“ஏன் சிரிக்கிறாய்?”

“ஒன்றுமில்லை.”

“என்ன ஒன்றுமில்லை? அந்த இடியட்டைத் தலைவர் என்று சொன்னால் சிரிப்பு வருகிறது. அப்படித்தானே?”

“. . .”

“போயும் போயும் அவனை ஏன் தலைவராக்க வேண்டு மென்றுதான் எனக்குப் புரியவில்லை.”

“யார் ஆக்கினார்கள்?”

“யார், நீதான். எனக்குத் தெரியாதென்று நினைக்க வேண்டாம்.

இதெல்லாம் உன் ஐடியாதானே?"

கணேசன் மழுப்பலாகச் சிரித்தான்.

"எல்லாரையும் கிளப்பிவிடுவதிலும் குறைச்சலில்லை; என்ன நடக்கிறது, எதற்காக நடக்கிறது என்பது ஒன்றுமே தெரியாத அப்பாவிபோல நடிப்பதிலும் குறைச்சலில்லை."

"ஐ திங்க், நம்மில் பலரைவிட பத்ரிக்குத் தலைவராகும் தகுதி நிறைய இருக்கிறது."

"தகுதி, மண்ணாங்கட்டி! ஆனால் ஆசை நிறைய இருக்கிறது. அதை நீ சாமர்த்தியமாகப் பயன்படுத்திக்கொள்கிறாய். அவனையும் ஒரு தலைவனாக்கி, ராம் கிஷோருக்கு எதிராகக் கிளப்பிவிட்டு – ஹவ் கிளெவர் யூ ஆர்!"

"அவனை அப்படிக் கிளப்பிவிடுவதில் எனக்கு என்ன லாப மிருக்கிறது?"

"யார் கண்டது? நீ வேறு ஏதாவது கட்சியின் ஆளாக இருந்து கொண்டு, அந்தக் கட்சியின் உத்தரவுகளை நிறைவேற்றுகிறாயோ, என்னவோ."

கணேசன் உரக்கச் சிரித்தான்.

"வில்லன் சிரிப்புச் சிரிக்க வேண்டாம். அந்தக் குல்வந்தும் அவனுடன் இருக்கும் தடியன்களும் – அணியை சேர்ந்தவர்கள் தானே?"

"ஆமாம்; ஆனால், ஃபார் யுவர் இன்ஃபர்மேஷன், அவர்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டாமென்று நான் பத்ரியிடம் பலமுறை கூறினேன். அவன்தான் கேட்கவில்லை."

"ஸோ, நீதான் அவனுடைய ஆலோசகரென்று ஒப்புக் கொள்கிறாயல்லவா?"

"..."

"ராம் கிஷோர் ரொம்ப நல்லவன்."

"எல்லாரும் நல்லவர்கள்தான்."

"அவன் மாணவர்களிடையே இத்தனை செல்வாக்குப் பெற்றிருப்பது உங்களுக்கெல்லாம் பிடிக்கவில்லை... அவனைப் பார்த்துப் பொறாமைப்படுகிறீர்கள்."

"பெண்கள்தான் பொறாமைப்படுவார்கள்."

"ஐ ஸீ!"

மெயின் ரோடு வந்துவிட்டது. "மணி எவ்வளவு?" என்றான் கணேசன்.

"மூணே கால்."

"மை காட்! மூன்றரைக்கல்லவா படம்?"

"நீதான் ஸ்பீச் கொடுத்துக்கொண்டிருந்தாய்."

"எனிவே மெயின் படம் நாலுக்குத்தான். அதற்குள் போய் விடலாம்."

"எனக்கு விளம்பரம் நியூஸ்ரீல் எல்லாம் ஒன்று விடாமல் பார்க்கணும் – அதோ ஒரு ஆட்டோ போகிறது . . ."

"இங்கிருந்து கூப்பிட்டால் கேட்குமோ என்னவோ" என்று கணேசன் தயங்கினான். அதற்குள் தாரா படபடவென்று கைதட்டி "ஆட்டோ!" என்று இரைந்து கூப்பிட்டாள். ஆட்டோ நின்றது. இருவரும் போய் ஏறிக்கொண்டார்கள்.

"பெரிய சொற்பொழிவாளர் . . . ஆனால் ஆட்டோவை நிறுத்துவதற்கு நான்தான் இரைய வேண்டியிருக்கிறது."

கணேசன் ஏதோ சொல்ல வாயெடுத்து பிறகு சட்டென்று மனத்தை மாற்றிக்கொண்டு பேசாமலிருந்தான். அவன் அப்படிப் பேசாமலிருப்பதையே அவள் விரும்புகிறாள். அவன் அதிகமாகப் பேசுவது அவளைப் பாதுகாப்பாக உணரச் செய்யவில்லை. ஆட்டோவைக் கூப்பிடுவதற்குக்கூட அவளுடைய உதவி தேவைப் படுபவனாக அவன் இருப்பதுதான் அவளுக்குத் தெம்பளிக்கிறது.

"சர்வகலாசாலையிலுள்ள பெண்களின் ஸப்போர்ட் ராம் கிஷோருக்குத்தான்" என்றாள் அவள்.

"ஆமாம். ஹாண்ட்ஸம் ஃபெல்லோ!"

அவள் செல்லமாக அவன் தொடைமேல் அடித்தாள்.

சினிமா தியேட்டரை அடைவதற்குள் அவ்வாறு நாலைந்து முறை அவள் அவனை அடித்துவிட்டாள். அவன் மிகவும் கவனமாக அவளைத் திருப்திப்படுத்தும் சொற்களையே கூறினான். அவளுக்கு இணக்கமான பிம்பத்தையே அணிந்திருந்தான். சினிமா தியேட்டரில் போய் இறங்கும்போது அவள் முழுக்க முழுக்க ஒரு லேடியாகவும் அவன் அவளுடைய சாதுவான நாய்க்குட்டியாகவும் மாறிப் போயிருந்தார்கள். ஆட்டோவுக்கு அவள்தான் பணம் கொடுத்தாள்.

தியேட்டரினுள் விளக்குகள் அணைக்கப்பட்டு விட்டிருந்தன. அந்த இருள் கணேசனுக்கு இதமாக இருந்தது. அவனுடைய இறுக்கம் சற்றே தளர்ந்தது. ஆட்டோவில் வரும் வழியெல்லாம் அவளுடைய 'லட்சிய ஆண் பிம்பத்தை' அணிந்திருந்த இறுக்கம். அவன் மனம் படத்திலும் லயிக்கவில்லை. அருகிலிருந்தவளிடமும் லயிக்கவில்லை. சற்று முன் அந்த அறையில் தான் பேசிக்கொண்டு நின்ற காட்சிதான் நினைவில் மீண்டும் மீண்டும் எழுந்தது. அவன் எவ்வளவு நன்றாகப் பேசினான்! எல்லாரும் எப்படிப் பிரமித்துப் போனார்கள்! ஆமாம், பலர் மீது ஆளுகை செலுத்தும் சக்தி அவனிடமிருந்தது . . . ஆனால்

அவன் ஆட்சி செலுத்தப் போவது கேவலம் மாணவர்களிடையேயல்ல. . .

இன்டர்வெல்.

இருவரும் ஹாலுக்கு வெளியில் வந்து ஆளுக்கொரு சாக்லேட் பார் வாங்கிக்கொண்டு அங்கு நின்ற கூட்டத்தைப் பார்த்தப்படி நின்றார்கள். சாக்லேட் பாருக்கும் அவள்தான் பணம் கொடுத்தாள்.

"அந்தக் கட்டுரையைப் படித்தாகிவிட்டதா?" என்று சாக்லேட் பாரை நக்கியவாறு அவள் கேட்டாள்.

"உம்."

"எப்படியிருக்கிறது?"

"ஐடியா நன்றாயிருக்கிறது; ஆனால். . ."

". . . எழுதியிருக்கிற விதம் மோசமாயிருக்கிறது. இல்லையா?" என்று அவள் சிரித்தாள்.

அவனும் சிரித்தான்.

"பை தி வே, உன் கட்டுரையை நரசிம்ம மாமாவிடம் கொடுத்தேன். . ."

"உம்."

"அவருக்குப் பிடித்திருக்கிறது ரொம்ப . . . கூடிய சீக்கிரம் பப்ளிஷ் பண்றேன்னு சொன்னார்."

"தாங்க்ஸ்" என்று வெளியிலும் 'யூ பிச்' என்று மனதுக்குள்ளும் கணேசன் கூறிக்கொண்டான். சற்றுத் தள்ளி நின்ற ஒரு பெண்ணை அவன் பார்வை நாடியது. தாராவும் திரும்பி அவன் பார்வையின் திசையைச் சோதித்தாள். "அவளுக்கு பெல் பாட்டம்ஸ் நன்றாகவே இல்லை, இல்லை?" என்றாள்.

"உம்."

"இந்த மாதிரியான டிரஸ் எல்லாருக்கும் பொருந்துகிறதில்லை."

அவன் தோள்களைக் குலுக்கிக்கொண்டான். இப்போது மற்றப் பெண்கள் மேல் பார்வையை ஓட்டுவதை அவன் கைவிட வேண்டி வந்தது. எரிச்சல் பொங்கியது. அதையடக்கிக்கொண்டு "உன்னுடைய பெர்ஸனாலிடி எல்லாருக்கும் இல்லையே!" என்றான்.

இன்னொரு அடி.

கணேசன் தன்னையே வெறுத்துக்கொண்டவாறு அவள் ஐஸ் கிரீம் தின்னும் அழகை ஆர்வத்துடன் ரசிப்பதுபோலப் பாசாங்கு செய்யத் தொடங்கினான். ஐஸ்கிரீமை நக்கி நக்கி விழுங்குவது போல அவனையும் விழுங்கக்கூடிய ஒரு பெண்பூதமாக அவள் தோன்றினாள்

"உன்னுடைய கட்டுரையை இன்னும் ஒரு வாரத்தில் திரும்பித் தருகிறேன்" என்றான் அவன்.

"நோ ஹர்ரி" என்றாள் அவள். பிறகு, "ஸாரி, உனக்கு ரொம்ப டிரபிள் கொடுக்கிறேன்" என்றாள்.

"இது நான் மிகவும் எஞ்ஜாய் பண்ணுகிற ஒரு டிரபிள்!" என்றான் அவன்.

அவள் வசீகரமான ஒரு புன்னகையை அவன் மேல் வீசினாள். திடீரென்று கணேசனுக்கு அப்பால் அவள் பார்வை சென்றது. "ஹாய்!" என்று அவனுக்குப் பின்னால் நின்றிருந்த ஒரு பெண்ணை நோக்கிச் சென்றாள். இருவரும் ஒருவரையொருவர் கட்டி அணைத்துக்கொண்டார்கள். கொஞ்சலான தொனியில் பேசவும், செயற்கையாகச் சிரிக்கவும் தொடங்கினார்கள். கணேசன் இப்போது நாகரிமடையாத ஒரு பட்டிக்காட்டானைப் போல உணர்ந்தான். தன் பழைய செருப்பு, காலர் நைந்துபோகத் தொங்கியிருந்த சட்டை, அதனடியில் இருந்த வெள்ளை நிறம் பழுப்பாகிப் போன பனியன், ஆகியவை திடீரென்று நினைவில் எழுந்து உறுத்தத் தொடங்கின.

ஓ, கணேசன் அவளையும் அவளைப் போன்றவர்களையும் – அவள் பெற்றிருக்கும் வாய்ப்புகளை – எப்படி வெறுத்தான்! இருந்தாலும் அவன் அவர்களைத் திருப்திப்படுத்த வேண்டியிருக்கிறது. அதன் மூலம்தான் தனக்கென வாய்ப்புகளை உருவாக்கிக் கொள்ள முடிகிறது. இவளுடைய கட்டுரைகளைப் பிரசுரத்துக்கேற்ற வாறு அவனைத் திருத்தித் தரச்சொல்லுகிறாள். அதற்குப் பிரதியாக அவளுடைய புன்னகை, அவளைத் தொட்டுப் பேசும் சலுகை, அவளுடன் சினிமா பார்க்கும் உரிமை ஆகியவற்றை அளிக்கிறாள். அவனைப் போன்ற ஒருவன், இதையெல்லாம் ஒரு பெரும் பாக்கியமாக நினைத்து மகிழ்வானென்று நினைக்கிறாள் . . . சே! அவள் அவனை ஒரு சுயவனாகவும் பிச்சைக்காரனாகவும் உணரச் செய்கிறாளே தவிர, ஆண் மகனாக அல்ல. முதன் முதலாக ஒரு நாள் காஃபி ஹவுசில் இருவரும் கருத்துப் பரிமாற்றம் செய்துகொண்டபோது எவ்வளவு குதூகலமாக இருந்தது! அன்று அவர்கள் தம்முடைய பெற்றோர்களைப் பற்றி, அவர்கள் எப்படி எதையுமே புரிந்து கொள்வதில்லை என்பதைப் பற்றி பேசிக் கொண்டார்கள். அது பற்றிய அவர்களுடைய எரிச்சல்களிலும் உளைச்சல்களிலும் எத்தகைய ஆச்சரியமான ஒற்றுமை நிலவியது! ஒருவரையொருவர் கட்டிக் கொண்டு அழலாம் போலிருந்தது, சிரிக்கலாம் போலிருந்தது. ஆனால் அந்த மட்டத்தில் அவர்களுடைய நேசத்தை அவள் நிலைக்கவிட வில்லை. தன் கட்டுரைகளை அவனைத் திருத்தித் தரச் சொன்னாள். அவளுடைய புன்னகை, பேச்சு, வாங்கிக் கொடுக்கும் ஐஸ் கிரீம், எல்லாமே அவள் தன் நோக்கங்களுக்கேற்றவாறு அவனைப் பயன்படுத்திக்கொள்வதற்கான வசிய முறைகள்தாமோ என்று தோன்றச்

செய்தாள். ஆம். அவர்களிடையே அரும்பத் தொடங்கியிருந்த அழகியதொரு நேசத்தை வெறும் வியாபார உடன்படிக்கையாக மாற்றிக் கொச்சைப்படுத்தியது அவள்தான். அவனும் அவளை வெறும் ஏணியாகக் கருதத் தொடங்குவதற்குக் காரணமாயிருந்தவள் அவள்தான். அவள்தான், அவள்தான், அவள்தான்.

அவன் சற்றுமுன் தான் பார்த்த அந்தப் பெண்ணின் திசையில் மறுபடி பார்வையை வீசினான். என்ன முகம், என்ன நிறம், என்ன அங்கங்கள் ... தந்தத்தால் செய்த சிற்பம்போல! வருங்காலத்தில் அவன் திரைப்படங்களுக்குப் போகப் போவது இவளைப் போன்ற பெண்களுடன்தான், ஆமாம், வருங்காலம் ...

அவன் பரவசத்துடன் கண்களை மூடிக்கொண்டான்.

ராம்கிஷோர் கண்களைத் திறந்தான். ஆமாம், இதெல்லாம் நிஜந்தான். கனவில்லை. அவனைச் சுற்றி அந்த மாணவர் குழு இன்னமும் நின்றிருக்கிறது. அவன் சம்மதத்துக்காகக் காத்திருக்கிறது...

"எனக்கு என்ன தோன்றுகிறதென்பதை உங்களுக்குச் சொல்லி விட்டேன்" என்றான். அவன். "இத்தகைய ஒரு கிளர்ச்சிக்கு இது ஏற்ற தருணமென்று தோன்றவில்லை. இரண்டு மாதங்களாக ஒத்திப் போடப்பட்டிருந்த பரீட்சைக்கு இப்போதுதான் மறுபடி தேதி குறித்திருக்கிறார்கள். இப்போது கிளர்ச்சி தொடங்கினால் மறுபடி பரீட்சைகள் ஒத்திப் போடப்பட நேரலாம். எனவே பரீட்சை முடிவுகளும் தள்ளிப் போகும். அதனால் பல மாணவர் களின் எதிர்காலம் பாதிக்கப்படலாம்."

"இரண்டு மாதங்களுக்கு முன்பு கிளர்ச்சி தொடங்கியபோது மாணவர் நலன் பற்றிய இந்த அக்கறை தங்களுக்கு ஏனோ ஏற்படவில்லை?" என்றான் குல்வந்த்.

"அந்தக் கிளர்ச்சியிலும் எனக்குச் சம்மதமிருக்கவில்லை. அது நிகழ்வதைத் தவிர்ப்பதற்காவும் நான் மிகவும் முயன்றேன். தயவுசெய்து என்னை நம்புங்கள்."

"அதாவது, உன் கட்சி தன் விருப்பங்களுக்கு ஏற்றவாறு உன்னை ஆட்டுவித்தது, நீ அதைத் தவிர்க்க இயலவில்லை, அல்லவா?"

ராம் கிஷோர் பேசவில்லை.

"இப்போது இந்தக் கிளர்ச்சியில் பங்குபெற நீ மறுத்தால், உன்னை இயங்கச் செய்வது மாணவர் நலன் பற்றிய அக்கறையல்ல, பிற சக்திகள்தான் என்பது ருசுப்பட்டதாகவே நாங்கள் எண்ண வேண்டி வரும்."

"நீங்கள் சொல்வது போன்ற ஒரு கிளர்ச்சியின் தேவையை நான் மறுக்கவில்லை. பரீட்சைகள் முடிந்த பிறகு அதை வைத்துக் கொள்ளலாமேயென்றுதான் சொல்கிறேன்."

"பரீட்சைகள் முடிந்த பிறகு எங்களுக்காக யார் கவலைப் படுவார்கள்? இன்னொரு ஸெஷன் தொடங்கும். புதிய மாணவர்கள் வருவார்கள். அதே பழைய பாடங்கள் பழைய பாணியில் போதிக்கப் படும். பழையபடி பரீட்சைகள் நடக்கும் – நோ! சீர்திருத்தங்கள் ஏற்பட்டாக வேண்டும். உடனே ஏற்பட்டாக வேண்டும்! அவ்வாறு நிகழ்ந்தாலொழிய மேலே சர்வகலாசாலை நடைபெற முடியாதென்ற ஒரு நிர்ப்பந்தமான சூழ்நிலையை நாங்கள் உருவாக்க விரும்புகிறோம்."

ராம் கிஷோரின் அருகில் அமர்ந்திருந்த அவனுடைய நண்பர் களில் ஒருவன் கைதட்டியவாறு கூறினான்: "தப்பில்லாமல் ஒப்பிக்கிறாய். என் பாராட்டுகள். இப்போது ஒப்பித்த வசனத்தை எழுதியவர் யாரோ?"

குல்வந்த் ஒரு மோசமான வசவை உதிர்த்தவாறு அவனை நோக்கிப் பாய்ந்து சென்றான். மற்றவர்கள் அவசரமாகக் குறுக்கிட்டு அவர்களை விலக்கிவிட்டார்கள்.

"ப்ளீஸ்" என்று ராம் கிஷோர் எழுந்து நின்று மேஜையைத் தட்டினான். "எது பேசுவதானாலும் நாம் அமைதியிழக்காமல் பேசலாமென்று நினைக்கிறேன்."

"உன் தோழர்களுக்கு முதலில் நாவையடக்கிப் பேசக் கற்றுக் கொடு" என்றான் குல்வந்த்.

"கற்றுக் கொடுத்துப் பேசவைக்கும் வழக்கம் எங்களிடையே அமுலிலில்லை" என்றான் குல்வந்தால் குறிப்பிடப்பட்டவன். மறுபடி அவர்களிடையே கைகலப்பு நிகழும் போலிருந்தது.

"ப்ளீஸ் ப்ளீஸ்!" என்று ராம் கிஷோர் எல்லாரையும் அமைதியா யிருக்கும்படி வேண்டினான். "ஐ ஆம் ஸாரி. ஆனால் நான் மேலே சொல்ல வேண்டியது எதுவுமில்லை... வரும் பரீட்சைகளில் அமைதியாகப் பங்குபெறுமாறு உங்கள் எல்லாரையும் மறுபடி கேட்டுக்கொள்கிறேன். பரீட்சைகள் நெருங்கும்போது நம்மில் சிலர் பதட்டம் கொள்வது இயற்கை."

மறுபடி மாணவர்களிடையே சலசலப்பு ஏற்பட்டது. "நாங்கள் பரீட்சைக்குப் பயந்து கிளர்ச்சி நடத்தவில்லை", "உனக்கு ஏன் பதட்டமில்லையென்றால் உனக்குக் கேள்வித்தாள்கள் முன்பே தெரிந்து விடுகின்றன" போன்ற பலதரப்பட்ட கூச்சல்கள் ராம் கிஷோரை மேலே பேசவிடாமல் செய்தன.

"கடைசியாக ஒன்று" என்று ராம்கிஷோர் குரலை உயர்த்திக் கூறினான். "இவையெல்லாம் யாருடைய திட்டங்களென்பதை நான் அறிவேன். இது பற்றிய முழுமையான ரிப்போர்ட் ஒன்று துணை வேந்தருக்குச் சமர்ப்பிக்கப்படும்."

மறுபடி பரபரப்பு, குல்வந்த்தின் ஆட்களில் ஒருவன் ராம் கிஷோரை

நோக்கிப் பாய்ந்து சென்று துரிதமாகச் சில தடவைகள் அவனைத் தாக்கினான். ராம்கிஷோர் 'ஆ' என்று அலறியவாறு குபுகுபுவென்று ரத்தம் பெருக்கியவாறு கீழே விழுந்தபோதுதான் அவன் கத்தியால் குத்தப்பட்டதை மற்றவர்கள் உணர்ந்தார்கள். வேறு சிலர் கத்திகளை உருவினார்கள். சிலர் அறையைவிட்டு ஓடத் தொடங்கினார்கள். ராம் கிஷோரின் நினைவு நழுவிக்கொண்டிருந்தது. சுவரிலிருந்த காந்தியின் முகத்தின் மேல் அவன் பார்வை ஒரு கணம் நிலைத்தது. சட்டென்று அதே நிலையில் பார்வை உறைந்து போயிற்று. கண்களை மூடிக்கொள்ளும் சக்தியை அவன் நிரந்தரமாக இழந்துவிட்டான்.

# 29

இயா,

மாணவர்கள் பஸ்களைக் கடத்திக்கொண்டு போவது, பஸ்களை எரிப்பது முதலிய செயல்களைக் கண்டித்து நேற்று உங்கள் தினசரியில் ஏ. எஸ். சாவ்லா என்பவர் கடிதம் எழுதியிருந்தார். "பஸ் ஸர்வீஸ் மோசமாகத்தான் இருக்கிறது; ஆனால் அதுபற்றி எதிர்ப்புத் தெரிவிக்கும் முறை இதுவல்ல" என்று அவர் குறிப்பிட்டிருந்தார். வேறு எது, மிஸ்டர் சாவ்லா? வேறு எது? போக்குவரத்து அதிகாரிகளுக்கு மகஜர் அனுப்புவதா? (இம் மகஜர்களை யாராவது படிக்கிறார்களா, என்ன?) உங்கள் தொகுதி கார்ப்பரேஷன் எம். எல். ஏ. யைச் சந்திப்பதா? (தேர்தல் அல்லாத சமயங்களில் இவர்களைச் சுலபமாகச் சந்தித்துவிட முடியுமா, என்ன?) அல்லது தினசரிக்குக் காரசாரமான கடிதங்கள் எழுதுவதா? (வாசகர்களுக்கு, செய்திகளுடன் தொட்டுக்கொள்ள ஊறுகாயாகப் பயன்படுவதைத் தவிர இவற்றால் விளைவதென்ன?)

ஆராய்ச்சி மணியோசை கேட்டவுடன் பதறியோடி வந்த மனுநீதிச் சோழர்களின் காலத்தில் மக்கள் அம் மணியை ஒலித்தால் போதுமானதாயிருந்தது. ஆனால் இன்று...

மாணவர்களின் அடாவடிச் செயல்களை நான் முழுவதும் ஆதரிப்பதாக நினைக்க வேண்டாம். நல்லறிவு படைத்த எவரையும் அருவருப்பும் ஆத்திரமும் கொள்ளச் செய்வதாகவே இவர்களுடைய செயல்கள் மென்மேலும் ஆகிவருகின்றன. நேற்று நான் காலை ஒன்பதரை மணி சுமாருக்கு கரோல்பாகிலிருந்து மோதிபாக் செல்லும் பஸ் ஒன்றில் ஏறும் தவறைச் செய்தேன். பஸ்ஸினுள் எட்டு பத்து மாணவர்கள் வழியெல்லாம் அட்டகாசமாக ஆடிப் பாடியவாறும், கோணங்கிகள் காட்டியவாறும் இருந்தார்கள். அவர்களுடைய கூச்சலில் காதே செவிடாகிவிடும் போலிருந்தது. சகபயணிகளை – முக்கியமாகப்

பெண்களை – பலவிதங்களில் அவர்கள் இம்சித்தார்கள். காலித்தனமாக நடந்துகொண்டார்கள். அவர்களுடைய இந்தச் செயலுக்குக் கண்டக்டரும் டிரைவரும் கூட உடந்தையாயிருந்ததுதான் வருந்தத்தக்க விஷயம். நானும் இன்னும் சிலரும், கண்டக்டரிடம் மாணவர்களின் ஆர்ப்பாட்டத்தை அடக்குமாறு கேட்டுக்கொண்டபோது, அது தன் பொறுப்புகளில் ஒன்றல்லவென்று அவன் தெரிவித்தான்.

பயணிகளுக்கு டிக்கெட் கொடுக்காமல் அவர்கள் இறங்கும் போது பணத்தை மட்டும் வாங்கிப் பையில் போட்டுக்கொண்டான். பெண்கள் இறங்கும்போது, வேண்டுமென்றே அவர்கள் முதுகில் தொட்டுக்கொண்டும் தடவிக்கொண்டும் மாணர்களின் காலித் தனத்தில் அவனும் பங்குகொண்டான். டிக்கெட்டைப் பிடிவாத மாகக் கேட்டுப்பெற முயன்ற பயணிகள் பரிகசிக்கப்பட்டார்கள்; பல விதங்களில் அவமதிக்கப்பட்டார்கள். எத்தகைய ஒரு கடை நிலையை எட்டிக்கொண்டிருக்கிறது நம் சமூகம் என்று எனக்கு வேதனையும் வெறுப்பும் ஏற்பட்டது. ஆம்! நம் சமூகம் பொதுவாக அடைந்துள்ள ஒரு சீரழிவுதான் இத்தகைய செயல்களில் பிரதிபலிக்கிற தென்பதில் சந்தேகமில்லை. நேர்மை, பரிவுணர்ச்சி, சகோதர பாவம், ஆகியவை மனிதர்களிடையே இற்றுப் போய்விட்டன. இரக்கமற்ற சுயநலமும், வஞ்சகமும், முரட்டுத்தனமுமே இன்றைய சமூகத்தில் ஊட்டம் பெறுகின்றன, வளருகின்றன. எனவே மாணவர்களின்...

திடீரென்று விளக்குகள் அணைந்தன. மின்சார வெட்டு; காலையிலிருந்து இது நாலாந்தடவை. நரசிம்மன் எழுந்து அறைக்குள் காற்றும் வெளிச்சமும் வரும் பொருட்டு அறைக் கதவைத் திறந்து வைத்து அது மூடிக்கொள்ளாமலிருக்க ஒரு நாற்காலியையும் முட்டுக் கொடுத்து வைத்தார். பிறகு ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக்கொண்டு அறை வாசலுக்கு வெளியே வராந்தாவில், ஒரு மோன நிலையில் நின்றார். ஓரிரு நிமிடங்களுக்குப் பிறகு வராந்தாவின் மறு கோடியில் எடிட்டரின் உருவம் திடீரென்று தோன்றியது. அவர் நரசிம்மனை நோக்கி வரத் தொடங்கினார். "ஐ ஸே, நரசிம்மன்" என்றார் அவர், அருகில் வந்ததும், 'ஐ திங்க், அந்த அரிசி கொள்முதல் பற்றிய தலையங்கத்தை 'வித் ஹோல்ட்' பண்ண வேண்டியிருக்கும்."

"என்ன ஆயிற்று?"

"மானேஜ்மென்ட்" என்று எடிட்டர் தோள்களைக் குலுக்கிக் கொண்டார். "தே வான்ட் அஸ் டு ஸாஃப்ட் பெடல் தி இஷ்யூ (அதிகமாக இது பற்றி ஓசையெழுப்ப வேண்டாமென்கிறார்கள்.)"

நரசிம்மன் சிகரெட்டைக் கீழே போட்டு, காலடியில் மிதித்துத் தேய்த்தார். அவருடைய இன்னொரு தலையங்கம் வீணாகப் போயிற்று.

"நான் ஸப்ட்டபிளாக அதை ரீ மாடல் செய்துவிடுகிறேன் ... பட் நாளைக்குத்தான் முடியும் ... இன் தி மீன் டைம், இன்றைக்காக இன்னொரு தலையங்கம் வேண்டும் ... ஹவ் எபௌட் ஆன்

ஸ்டூடன்ட்ஸ்?"

"ஸேஃப் ஸப்ஜெக்ட்" என்றார் நரசிம்மன்.

"வெல். அதுவும் ஒரு முக்கியமான பிரச்சனைதானே."

"அப்படியில்லா விட்டாலும் நாம் முக்கியமானதாகச் செய்து விட்டுப் போகிறோம்."

எடிட்டர் புன்னகை செய்தார். "ஓ. கே." என்று திரும்பிச் சென்றார்.

நரசிம்மன் தன் அறைக்குள் போய் உட்கார்ந்தார். இன்னும் மின்சாரம் வரவில்லை. அவருடைய அறையில் ஜன்னல்கூடக் கிடையாது. இருளும் புழுக்கமும். எரிச்சலை ஏற்படுத்தின. அந்த எரிச்சலை இப்போது மாணவர்கள்பால் திசை திருப்பவேண்டும்... மின்சார வெட்டைப் பற்றி ஒரு வாரத்துக்கு முன்பே அவர் தலையங்கத்தில் விளாசியாகிவிட்டது.

விளாசுவதுதான் அவர் தொழில். அந்தத் தினசரியில் காரசாரமாக எழுத வேண்டிய தலையங்கங்கள் பொதுவாக அவருக்குத்தான் தரப்படும். மாறாக எடிட்டர் சற்றே மிதமான தொனியில் அதாவது வழ்வழா கொழகொழாவென்று எழுதுவதில், நிபுணர். தலையங்கங் களின் தொனி எந்த விதமாக விரும்பப்படுகிறதோ அதற்கேற்றாற் போல அவற்றை எடிட்டரும் நரசிம்மனும் பகிர்ந்து கொள்வார்கள். அதற்காக நரசிம்மன் துணிச்சலானவரென்றும் எடிட்டர் கோழையென்றும் பொருளல்ல. சில வருடங்களுக்கு முன்பு வரை நரசிம்மனுக்கு இந்த மயக்கம் இருந்ததுண்டு. சமூக அநீதிகளுக் கெதிராக வாளை உருவிக்கொண்டு ஆவேசமாகப் பாய்ந்து செல்லும் வீரனாகத் தம்மை கற்பனை செய்துகொண்டு அவர் பெருமையில் திளைத்ததுண்டு... ஆனால் இப்போது அந்த மயக்கம் சிதைந்து விட்டது. தானும் சரி, எடிட்டர் போன்றவர்களும் சரி, ஒரே நாடகத்தில் வெவ்வேறு பாத்திரங்களேற்று நடிக்கும் நடிகர்களென்று தான் அவருக்குத் தோன்றியது. அவருடைய கோபமும் ஒரு விற்பனைப் பொருளாகிவிட்டது; வாசகர்களைக் கவருவதற்காக ஆடும் ஒரு போலியான 'சாமியாட்டம்' ஆகிவிட்டது. அவர் இன்னொரு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்தார்.

போலியாகக் கோபத்தை வரவழைத்து வரவழைத்து, அவருடைய கோபம் தன்னிச்சையான வெடிப்பை, வீர்யத்தை இழந்துவிட்டிருந்தது. கூடவே தானும் வீர்யமிழந்து வெறும் நபும்சகனாகி வருவதுபோல அவருக்குத் தோன்றியது. சில சமயங்களில் சிகரெட் கூட அவரை ஆண்மகனாக உணரச் செய்வதில்லை.

அவர் சிகரெட்டை மறுபடி காலடியில் போட்டு மிதித்து அணைத்தார். தன் முதலாளியின் உருவத்தைக் கற்பனை செய்து பார்த்தார். கோபம் வரவில்லை. தன் மனைவியின் அஞ்ஞானத்தை யும் மூடப்பழக்கங்களில் அவளுக்கிருந்த பிடிவாதங்களையும்

நினைத்தார். கோபம் வரவில்லை. காலையில் தன்னை எதிர்த்துப் பேசிய தன் மகனை நினைத்தார். கோபம் வரவில்லை. தன்னிடம் ஆயிரம் ரூபாய் கடன் வாங்கிக்கொண்டு ஒரு வருஷமாகத் திருப்பித் தராத ராமசாமியை நினைத்தார். ஊஹூம், கோபம் வரவில்லை.

இனி அவருக்குக் கோபமே வராதோ? இனி அவர் தலையங்கமே எழுத முடியாதோ? எழுதுவதால் பயனும்தான் என்ன? அந்தக் கடிதத்தில் எழுதியிருந்ததுபோல, இன்றையத் தேவை மணியோசை அல்ல, பீரங்கி . . .

அறை வாயிலில் கல்லூரி மாணவனைப் போலத் தோன்றிய ஒருவன் வந்து நின்றான்.

"யெஸ்? கம் இன்" என்றார் அவர்.

அவன் அறைக்குள் வந்தான். "என் பெயர் கணேசன்" என்றான்.

"யெஸ்."

"நேற்று ஸண்டே இஷ்யூவில் என் கட்டுரையைப் பிரசுரித்திருந்தீர்கள் . . . உங்களுக்கு நன்றி சொல்ல வந்தேன்..."

"ஓ, இஸ் இட்; யூ ஆர் தாட் கணேசன்? வெரிகுட், வெரிகுட், ப்ளீஸ் ஸிட்டௌன்."

கணேசன் உட்கார்ந்தான். திடீரென மறுபடி விளக்கெரியத் தொடங்கியது; விசிறி சுழலத் தொடங்கியது.

"வரும் சீஸனிலாவது அரிசி வாங்குதலும் சேமிப்பும் இன்னும் துரிதமாகவும் அதிக அளவிலும் நடைபெற வேண்டும்" என்றார் மந்திரி.

அறையில் கூடியிருந்த முதன் மந்திரிகளின் முகங்களில் மருட்சியும் அதிருப்தியும் தோன்றியது.

"விலையும், கமிஷன் நிர்ணயம் செய்துள்ள விகிதத்திலிருந்து மாறுபடக் கூடாதென்கிறீர்கள்!" என்றார் வடக்குமாநிலம் ஒன்றின் முதன் மந்திரி.

"அரிசி வாங்குதலைத் தீவிரப்படுத்தி கமிஷன் நிர்ணயித்துள்ள விலையைக் கறாராக அமுல்படுத்த முயன்றால் பெரிய நிலச்சுவான் தார்கள்..." என்று ஒரு முதன் மந்திரி இழுத்தார்.

"சந்தோஷப்பட மாட்டார்கள்" என்று மற்றவர் முடித்தார்.

"அதைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டாம்."

"உங்களுக்கு அப்படியிருக்கலாம்... எங்கள் கதியென்ன? எங்கள் மாநிலத்தில் நில உடமையாளர் முதலானோரை அன்ட்டகனைஸ் செய்து கொண்டு, பிறகு தேர்தலின்போது உங்கள் பிச்சையை எதிர்பார்த்திருக்க வேண்டுமோ?"

மற்ற முதன் மந்திரிகள் ரொம்பச் சரி, வாஸ்தவம், அதேதான் என்று பலவாறாக அவர் கருத்தை உரக்க ஆமோதித்தனர்.

"இப்படி நாம் ஒருவரையொருவர் குற்றஞ்சாட்டத் தொடங்காமலிருப்பது நல்லது" என்றார் மந்திரி. "கட்சியின் இமேஜை இம்ப்ரூவ் பண்ணுவதுதான் இப்போது நம்முடைய முதல் பொறுப்பு... எதிர்க்கட்சி மாநிலங்களிலும் இதுவரை நிலைமை மோசமாகத்தான் இருக்கிறது, நல்ல வேளையாக. ஆனால் அவர்கள் திடீரென்று நிலைமையைச் சீர்படுத்திவிட்டால் அப்புறம் நாம் அசடு வழிய வேண்டி வரும்."

அதேசமயம் மூன்று எதிர்க்கட்சி மாநிலங்களின் முதன் மந்திரிகளும் அறைக்குள் நுழைந்தனர். தாமதமாக வந்ததற்காக மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, தத்தம் இடங்களில் அமர்ந்தனர். அவர்களுடைய வரவால் அதுவரை அங்கு நிகழ்ந்த 'குடும்பச் சண்டை' நியாயமாக ஓய்ந்திருக்க வேண்டும். ஆனால் யாரும் எதிர்பாராத விதமாக அந்த தெற்கு மாநிலத்து முதன் மந்திரி தொடர்ந்து உரத்த குரலில் மந்திரியை நோக்கி முழக்கமிட்டார்:

"கட்சியின் இமேஜைப் பற்றி யார் பேசுகிறது? அதற்கு எங்களைத்தான் பலியாடுகளாக்க வேண்டுமா? ஏன், உங்களைப் போன்றவர்கள் கட்சியின் இமேஜை இம்ப்ரூவ் செய்வதுதானே! சென்டரில் இருப்பவர்கள் வழிகாட்டிகளாக விளங்குங்களேன்...!"

மறுபடி கூச்சல்கள்; குழப்பம்... திடீரென்று மீண்டும் விளக்குகள் அணைந்தன.

விசுவம் நாற்காலியிலிருந்து எழுந்து ஜன்னலருகே போய் நின்றுகொண்டு தொடர்ந்து வாசித்தான்:

"ஓவர் சென்ட்ரலைஸேஷன்... அதுதான் இன்றையப் பிரச்சனை. எல்லா அதிகாரங்களும் பொறுப்புகளும் ஒரு மத்திய அமைப்பில் குவித்து வைக்கப்பட்டிருப்பதற்குப் பதிலாக, இவ்வதிகாரங்களிலும், பொறுப்புகளிலும் பெரும் பங்கு மாநிலங்களிடையே – மாவட்டங்களிடையே – கிராமங்களிடையே பகிர்ந்துகொள்ளப்பட வேண்டும். மேலிருந்து கீழ்நோக்கிப் படரும் அமைப்பல்ல, கீழிருந்து மேல் நோக்கிப் படருவதுதான் ஆரோக்கியமானதாயிருக்க முடியும். தன் குடும்பம், தன் கிராமம், என்ற சிரத்தைதான் படிப்படியாகத் தன் தேசம், தன் கண்டம், தன் உலகம் என்ற சிரத்தை ஏற்பட வழிகோல முடியும். இன்றையச் சூழ்நிலை இத்தகைய சிரத்தை ஏற்படச் சாதகமானதாக இல்லை. தனி மனிதன் நிர்வாக அமைப்பில் தன்னையும் பங்குதாரனாக உணராமல் அதனின்றும் தனிமைப் படுத்தப்பட்டவனாக உணருவதால், தன் பிரச்சனைகளின் தீர்வுக்காகத் தானே நேரடியாகச் செயல்படும் தெம்போ, ஊக்கமோ

அவனுக்கில்லை... மறு பக்கத்தில் பெரும்பாலானவர்கள் பெரும் அமைப்புகளில் ஒரு ஆணியாகவோ பல்சக்கரமாகவோ இயங்கிக் கொண்டு, தன் செயல்களின் இறுதி விளைவுகளை நிர்ணயிக்கும் திறனற்றவராய் இருப்பதும், தம்மிடமிருந்து தாமே அந்நியப்பட்ட, ஆரோக்கியமான சுய உந்துதல்களால் மழுங்கி மரத்துப்போன ஒரு மக்கள் சமூகம் உருவாகவே வழிசெய்கிறது ..."

திடீரென்று அறைக்கதவு திறந்தது. விசுவம் கையில் புத்தகத்துடன் நிமிர்ந்தான். அவனுடைய மேலதிகாரி ஸின்ஹா; வலது கையை முன்னால் நீட்டியவாறே அவனை நோக்கி விரைவாக வந்து அவன் கையைப் பிடித்துப் பலமாகக் குலுக்கினார். மற்றொரு கையால் அவன் தோளில் தட்டி, ஒரு கணம் இறுக்கத் தன்னோடு சேர்த்துக் கொண்டார். "எக்ஸலண்ட் நோட். நேரடியாக உன்னைப் பாராட்ட விரும்பி இங்கு வந்தேன். யூ ஆர் எ ஜீனியஸ்."

விசுவம் சங்கடத்துடன் புன்னகை செய்தவாறு, "யார் வேண்டு மானாலும் அதைத் தயாரித்திருக்க முடியும் ..."

"நோ, நான் அப்படி நினைக்கவில்லை" என்றார் அவர் அழுத்தந் திருத்தமாக. "எல்லோரும் செய்திருக்கக் கூடியதல்ல, இது. உன்னைப் போல இன்னும் நாலு பேர் இந்த ஸ்தாபனத்தில் இருந்தால், நாம் அற்புதங்கள் சாதிக்கலாம் ... யெஸ், ஐ மீன் இட்." விசுவம் எதுவும் சொல்லத் தோன்றாமல் மௌனமாயிருந்தான்.

"இன் ஃபாக்ட், நாளைக்கு ஸெமினாருக்கு இங்கிருந்து செல்ல வேண்டியவன் நானல்ல, நீதானென்று எனக்குத் தோன்றுகிறது."

'போதும், நடிப்பு ரொம்ப அதிகமாகிவிட்டது' என்று விசுவம் சொல்லிக்கொண்டான்.

இன்னும் சற்றுநேரம் இதே ரீதியில் ஏதோ சொல்லிக்கொண்டிருந்து விட்டு, "ஓ.கே. தென்" என்று அவர் விடைபெற்றுச் சென்றார். 'மடையன்' என்று விசுவம் திட்டிக்கொண்டான், அவர் தலை மறைந்ததும். இவனுடைய சபாஷ் யாருக்கு வேண்டும்? ... வீரிய விதைகள் அதிக அளவில் அமுலாக்கப்படுவதால் எழும் பிரச்சினை களை ஆராய்ந்து அவன் அந்த நோட்டைத் தயாரித்திருந்தான். நாளை ஸெமினாரில் அக் கருத்துக்களைத் தன் கருத்துக்கள்போல, தனக்கே உரிய நாடகபாணியில் பேசி, அவர் எல்லோர் கவனத்தையும் கவரப் போகிறார். ஸெமினார்களில் கவர்ச்சிகரமாகப் பேசியே முன்னுக்கு வந்துவிட்டார் அவர். தலையை அங்குமிங்கும் திருப்பியவாறு, கையை உயர்த்தி தாழ்த்தி மேஜை மேல் தட்டி நாளை அவர் பேசப்போகும் காட்சியை இப்போதே அவனால் கற்பனை செய்ய முடிந்தது.

"வீர்ய விதைகளுக்கு அதிக அளவில் தண்ணீரும், செயற்கை உரமும், பூச்சிக் கொல்லிகளும் தேவைப்படுகின்றன. இம் மூன்றில் ஒன்று குறைந்தாலும் விளைச்சல் பழைய பாணி விதைகள் மூலம்

கிடைப்பதை விடவும் குறைந்துவிடுகிறது. தண்ணீர் வசதிகளை நாம் போதிய அளவு விஸ்தரிக்கவில்லை; இதேபோல செயற்கை உரத்தின் இறக்குமதியையும் உள்நாட்டுத் தயாரிப்பையும் நம் தேவைக்கேற்ப விஸ்தரிக்கவும் முடியவில்ல. பண வசதியில்லாததால்; பூச்சிக்கொல்லி மருத்துகளும் விலையுயர்ந்தவை. மேலும் இவற்றாலும் செயற்கை உரங்களாலும் வேறு சில பாதக விளைவுகள் ஏற்படு கின்றன – இதையெல்லாம் பார்க்கும்போது, ஜென்டில்மென்! வீர்ய விதைகளை அமுலாக்குதல் இன்னும் சற்று நிதானமாக நடை பெற்றிருக்கலாமா? . . ."

' மடையன், மடையன். என்னைப் புகழ்வதன் மூலம் தன் பேச்சுகளுக்கு ஸ்க்ரிப்ட் தயாரிக்கும் வேடத்தில் என்னை நிரந்தரப் படுத்திவிடலாமென்று இவன் குழந்தைத்தனமாக நம்புகிறான் போலும். அவனுக்குத் திடீரென்று தன் மச்சினன் நினைவு வந்தது. அவனும் என்னை ஒரு குழந்தையாகவே நினைக்கிறான். அவர்கள் எல்லாருமே! அவன் அதிக முதிர்ச்சியும் சாதுரியமும் இல்லாத வனாக இருப்பதுதான் பத்மினியின் குடும்பத்தினரைப் பாதுகாப்பாக உணரச் செய்வதுபோலத் தோன்றுகிறது. அவர்களைப் பொறுத்த வரையில், அவன் பத்மினியின் கவர்ச்சியில், இளமை வனப்பில், மயங்கிய அப்பாவி. இந்த அப்பாவித்தனம் கலைந்துவிடக் கூடாதென்று அவர்கள் விரும்புகிறார்கள். பத்மினியும் மனதாழத்தில், அவர்களிடையேயுள்ள பந்தத்துக்கு இந்த அளவு முக்கியத்துவம்தான் அளித்திருக்கிறாளோ, ஒரு வேளை? அப்படியென்றால் தாய்மை அவளைக் கவர்ச்சி குறைந்தவளாக, பாதுகாப்பற்றவளாக உணரச் செய்யலாம். அதே சமயத்தில் அவனைத் தந்தையாக்கியதால் அவனுடைய ஈகோ சாந்தியடைந்து, அவன் அவள்மீது நன்றி பாராட்டுவானென்று அவள் எதிர்பார்க்கலாம். சமூக ஒழுக்கத்தின் அடிப்படையில் அவனை நிரந்தரமாகச் சிறைப்படுத்திவிட்டதாகத் திருப்தியடையவும் கூடும். ஏன், அவனும்தான் குழந்தை பிறந்த பிறகு அவள்மீது அவனுடைய ஆதிக்கம் உறுதிப்பட்டுவிட்டதாகவும் சமூக நியாயங்களின்படி அவளுக்கு அவனுடைய ஆதரவு இன்றியமையாததாகிவிட்டதென்றும் சுயநலமான ஆசுவாசம் பெறக்கூடும். சே, காதல் கடைசியில் இவ்வளவுதானா? பயன் படுத்திக்கொள்ளல்தான் உண்மையா?

ஸின்ஹா என்னைப் பயன்படுத்திக்கொள்ள முயலுதல், என்னை எவ்வாறு பாதிக்கப்போகிறது? நானும் முகமற்ற ஒருவனாக, நேர்மை யான சுய உந்துதல்கள் மொண்ணையாகி, திமிறல்கள் அடங்கி, அமைப்பினுள் அலையோடு அலையாக மிதந்து செல்லும் முகமற்ற ஒருவனாக . . . என் அப்பாவைப்போல!

திடீரென்று மறுபடியும் விளக்குகள் எரியத் தொடங்கின.

"உம் மாமி . . . ஸ்டார்ட்!" என்றார் பஞ்சு. மிஸஸ் பசுபதி தன் வசனத்தை ஒத்திகை பார்க்கத் தொடங்கினாள். பஞ்சு கையில் ஸ்கிரிப்ட்டுடன், அவளுக்குத் தடங்கலோ தயக்கமோ ஏற்படுமிடங்களில் திருத்தினார். இறைஞ்சுவது போலவும், வெறுத்துப்போனது போலவும், அதிர்ச்சியடைந்தது போலவும், பரவசத்தில் மயங்கி விழுந்ததுபோலவும், நல்ல இசையை அனுபவிப்பது போலக் கண்களை மூடிக்கொண்டும், தலையை ஆட்டிக்கொண்டும், பலவிதமாக அபிநயித்தவாறே அவர் தம்முடைய 'திருத்தும்' வேலையைச் செய்து கொண்டிருந்தார். அசைப்பில் பார்க்கும்போது அதுவும் நாடகத்தின் 'நெருக்கமான' ஒரு காட்சி போலவே தோன்றியது . . . திடீரென்று இன்னொருவர் அறைக்குள் வந்தார். "என்ன இது, சாகிற காலத்திலே சங்கரா சங்கராங்கற மாதிரி . . . நீங்க போய் மேக்கப் பண்ணிக்குங்கோ மாமி, நேரமாச்சு."

"வசனம் அங்கங்கே கொஞ்சம் தடுமாறுகிறாப்பலே இருக்குன்னா . . . அதைக் கொஞ்சம் சரிபார்த்துவிடுவோம்னு தோணித்து . . . நடுவிலே இந்தப் பவர் பிரேக் டவுன் வேறே . . ." என்றார் பஞ்சு.

"எல்லாம் ஒரே பிரேக் டவுனாத்தான் இருக்கப்போறது. அதுதான் முழ நீளத்துக்கு வசனம் எழுதியிருக்கியே நீ, ஒவ்வொருத்தருக்கும் . . . ஏன்யா, இது ப்ளேயா, எலொக்யூஷன் கான்டெஸ்டா?"

"உனக்குப் ப்ளேயைப் பத்தி ஒண்ணும் தெரியாது. வாயை மூடிண்டிரு."

"ஒண்ணு சொல்லட்டுமா? உன்னுடைய பாத்திரங்கள் லோலோ லோங்கறபோது எனக்கும் எக்ஸாக்ட்லி இதையேதான் சொல்லத் தோணுது."

"எதையோ?"

"வாயை மூடிக்கோண்ணு."

மிஸஸ் பசுபதி கடகடவென்று சிரித்தாள். வந்தவரை இந்தச் சிரிப்பு தேன் குடித்த நரியாக்கியது. அவர் தொடர்ந்து பஞ்சுவை இறக்கிப் பேச, பஞ்சு பதிலுக்கு இரைய, வாக்குவாதம் முற்றிக் கைகலப்பும் ஏற்படும் போலிருந்தது. சில நிமிடங்கள் அக் காட்சியை ரசித்துவிட்டு, மிஸஸ் பசுபதி சிரித்துக்கொண்டே மேக்கப் அறையை நோக்கி விரைந்தாள். அவள் மனம் மிக இலேசாக இருந்தது. நிலைக்கண்ணாடியில் தெரிந்த அவளுடைய சிரிப்பில் மலர்ந்த முகம் . . . இன்று அது மிக அழகானதாகத் தோன்றியது. அப்படியே தன் பிம்பத்தைத் தழுவிக்கொள்ளலாம் போலிருந்தது. திடீரென்று நிலைக்கண்ணாடியில் இன்னொரு பிம்பம் தெரிவதுபோலவும் இருந்தது . . .

மந்திரி!

சென்ற சில நாட்களாகவே குளிக்கும்போதும், உடை மாற்றிக் கொள்ளும்போதும், நிலைக்கண்ணாடியில் உருவத்தைக் காணும்

போதும், இரவில் உறங்குமுன் கடைசியாகவும் அதிகாலையில் கண்விழித்தவுடன் முதலாவதாகவும், அவருடைய உருவம்தான் பளிச்சென்று நினைவு வருகிறது. இன்று இவ்வளவு பிரயாசையுடன் அவள் ஒத்திகை பார்த்துக்கொள்ளும்போதும் பிறருடன் சிரிக்கும் போதும்கூட உண்மையில் அவளை உந்துவது அவர் இன்று நாடகம் பார்க்கவருவாரென்ற பரபரப்புத்தான், பரவசம்தான் . . .

ஆமாம், மீண்டும் இளம் பெண்ணாகிவிட்டது போன்ற பரவசம். புது மணப்பெண் போன்ற பரவசம். அற்புதங்கள் நிறைந்த ஒரு புதிய உலகின் நுழைவாயிலில் இருப்பது போன்ற பரவசம். அவர் மார்பில், மடியில், காலடியில், சாப்பாடு தூக்கமின்றிக் கிடக்கலாம் போன்ற பரவசம். அவர் கட்டளையிட்டால் உயிரையே விட்டு விடலாம் போன்ற பரவசம். தனக்கே உரிய, சஞ்சலமோ தயக்கமோ அற்ற, மிடுக்கான பாணியில் அவர் கட்டளையிடுவதுதான் எவ்வளவு இன்பகரமானது, புல்லரிப்பேற்படுத்துவது! . . . அவள் கண்களை இறுக மூடிக்கொண்டாள். அறைக்குள் யார் யாரோ வரும் காலடி யோசையும் பேச்சுக் குரல்களும் கேட்டு, சக நடிகைகளென்று புரிந்துகொண்டு, மறுபடி எரிச்சலுடன் கண்ணைத் திறந்தாள். இந்த உலகில் அனாவசியமானவர்களாக எத்தனை பேர்கள் இருக்கிறார்களென்பது அவளுக்குத் திடீரென்று புலனாயிற்று. யார் யாரையெல்லாம் சகித்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. எதை எதையெல்லாம் பொறுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது! அதோ அந்த விளக்கு . . . அது எதற்காக?

திடீரென்று மறுபடி விளக்குகள் அணைந்தன.

செல்லப்பா தியேட்டருக்குள்ளிருந்து வெளிப்பட்டு, காப்பி கௌண்டருக்குச் சென்று காப்பி ஆர்டர் செய்தான். சரியான பாடாவதிப் படம். காப்பியைக் குடித்துவிட்டு அப்படியே போய்விட வேண்டியதுதான். நடிகையின் கவர்ச்சியான போஸ்களைப் புகைப் படங்களில் பார்த்து மயங்கி உள்ளே சென்றிருந்தான். ஆனால் படத்தின் பொதுவான முட்டாள்தனம் ஒரு டானிக் போல வேலை செய்து அவன் வெறியைத் தணித்துவிட்டது. எப்போதும் இப்படித் தானாகிறது. கவர்ச்சிகரமாகத் தோன்றுவது கடைசியில் விரும்பத் தக்கதாக இருப்பதில்லை. அவன் காப்பியை உறிஞ்சத் தொடங்கும் போது யாரோ “ஹாய்” என்று அவன் தோளில் தட்டினார்கள். அவன் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான்.

தாரா!

“ஹாய்” என்றான் அவனும். அவளால் அங்கு பார்க்கப்பட்டதால் அவனுக்கு முதலில் சங்கடமாக இருந்தது. மறுகணமே அவள்தானே என்ற ஆறுதலும் ஏற்பட்டது. அவ்வாறு இறுக்கமின்றி உணர்ந்தது அவனுக்கே ஆச்சரியமாயிருந்தது. “நீயும் இந்தப் படத்தில் வந்து

மாட்டிக்கொண்டாயா?" என்றான். இந்தச் சமயோசிதமும் ஆச்சரியமாகவே இருந்தது.

"ஆமாம், நானும்" என்றாள் அவள். இருவரும் ஒரே சமயத்தில் சிரித்தார்கள்.

"தனியாகவா வந்தே?" என்றாள் அவள்.

"ஆமாம்" என்று அவன் தோள்களைக் குலுக்கிக்கொண்டான். "ஒரே போராயிருந்தது . . ."

அவள் ஒரு அனுதாபப் பார்வையை அவன்மீது வீசினாள். அப் பார்வை அவனுக்கு ஒத்தடம் கொடுப்பதுபோல இதமாக இருந்தது. சட்டென்று அவளைக் கட்டிக்கொண்டு அழவேண்டும் போலிருந்தது. இதுவரை யாரிடமுமே உணராத அளவு அவளுடன் அவன் இயல்பாக உணர முடிந்தது. இதனால் திகைப்பாகவும் கூச்சமாகவும் இருந்தது. அவன் காப்பிக் கோப்பையைக் கௌண்ட்டரின் மீது வைத்தான்.

"ஆறிப்போகப் போறது" என்றாள் அவள்.

மறுபடி அவனுக்கு அவளைக் கட்டிக்கொள்ள வேண்டும் போலிருந்தது. என்ன அதிகாரம், அதே சமயத்தில் என்ன குழைவு . . . "நீ குடிச்சாச்சா?" என்றான்.

"உம்" என்றாள் அவள், அவன் பார்வையைத் தவிர்த்தவாறு. "விளக்கு அணையறதுக்கு முந்தியே நாங்க வெளியே வந்துட்டோம்."

அவன் சற்றுத் தூரத்தில் நின்றிருந்த அவளுடைய சிநேகிதிகளின் மீது பார்வையைச் செலுத்தினான். காப்பியை இரண்டு மூன்று பெரிய விழுங்கல்களில் குடித்துத் தீர்த்தான்.

"பரீட்சையெல்லாம் எப்படி எழுதியிருக்கே?" என்றாள் அவள்.

செல்லப்பா உதட்டைப்பிதுக்கி, அந்தரத்தில் ஒரு சுழி வரைந்து காட்டினான். பிறகு சற்றுத் தள்ளி நின்றிருந்த கேட் கீப்பரைச் சுட்டிக்காட்டி, "அந்த வேலைக்குத்தான் நான் போக வேண்டியிருக்கும்" என்றான்.

"மஜா இல்லை? எல்லா சினிமாவும் ஃப்ரீயாகப் பார்க்கலாம் . . . நான் வந்தால் என்னையும் ஃப்ரீயா விடுவாயா?"

"நீ சமத்தா இருந்தாத்தான்."

"சரி" என்று அவள் கைகளைக் கட்டிக்கொண்டு சமர்த்துப்போல நின்றுகொண்டாள். இருவரும் சிரித்தார்கள்.

"உங்க அம்மாவைப் பார்த்து ரொம்ப நாளாச்சு" என்றாள் அவள், சிரிப்பு ஓய்ந்ததும்.

"இன்னிக்கு அவளுடைய பிளே."

"நிஜமாகவா? எனக்குத் தெரியவே தெரியாதே. போகலாமா? எத்தனை மணிக்கு?"

"ஆறு மணிக்கு."

"மை காட்! அப்ப கிளம்ப வேண்டியதுதான்."

"ஆமாம். இந்தப் படத்துக்கு அந்த பிளே பெட்டராத்தான் இருக்கும் . . . ஸ்ஸ் . . . அப்பா! என்ன தலைவலி!"

அவள் அவனுக்கு வலிப்புக் காட்டிவிட்டு, "ரொம்ப அப்பாவிதான்! போஸ்டரைப் பார்த்து மயங்கி உள்ளே போயிருப்பே! தெரியாதா என்ன?" என்று சிரித்தாள். பிறகு, "என் ஃபிரண்ட்ஸ்கிட்ட சொல்லிட்டு வந்துடறேன்" என்று ஓடினாள்.

செல்லப்பா தலைமயிரை விரல்களால் கோதிச் சரி பார்த்துக் கொண்டான். அங்கிருந்த எடை யந்திரத்தின் கண்ணாடியில் தன் முகத்தை ஒரு முறை பார்த்துக்கொண்டான். அவனுக்கு முதன் முறையாகத் தன்னைப் பற்றி நம்பிக்கையும் ஆசுவாசமும் ஏற்பட்டது. அவனிடம் எந்தக் குறையுமில்லை. தவறான கண்ணாடிகளில் அவன் தன் பிம்பத்தைப் பார்த்து வந்தான், அவ்வளவுதான். இதுதான் அவனுடைய சரியான பிம்பம். இவளைச் சார்ந்து உண்டாகிற பிம்பம். இவள்தான் அவனுக்கேற்ற கண்ணாடி. அவனைச் சிறிதாக்கவோ பெரிதாக்கவோ செய்யாத கண்ணாடி. தாரா அவனை நோக்கி ஓடி வந்தாள்.

திடீரென்று மறுபடி விளக்குகள் எரியத் தொடங்கின.

"சரி, நான் வரேன்" என்று மூன்றாந் தடவையாக கிருஷ்ணன் கிளம்பினான். சற்று முன்பு மின்சாரம் அறுபட்டபோது அவன் டெலிபோன் செய்வதற்காக ஐயரின் அறைக்கு வந்திருந்தான். அவரிடம் டைரக்ட் டெலிபோன் இருந்தது.

"உட்காருடா போகலாம் – வந்ததுலேந்து பறந்துண்டேயிருக்கியே" என்றார் ஐயர். கிருஷ்ணன் மறுபடி உட்கார்ந்தான். அவருக்குப் பிரமோஷன் ஆனதிலிருந்து அவர் கடவுள் போலவும், அவன் வாகனம் போலவும் ஆகிவிட்டிருந்தார்கள். வாகனமின்றிக் கடவுள் முழுமை பெறுவதில்லை, கடவுளின்றி வாகனத்துக்கும் பெருமையில்லை.

"நிறைய வேலை இருக்கு எனக்கு" என்றான் கிருஷ்ணன்.

"எனக்கு அதுக்கு மேலே இருக்கு!" என்று ஐயர் தன் மேஜை மீதிருந்த 'பார்லிமெண்ட் குவெஸ்டின்' லேபிள் தாங்கிய பைல்களைச் சுட்டிக் காட்டினார்.

"மேன்மையுள்ள உணவு மந்திரி அன்புகூர்ந்து கூறுமாறு கேட்டுக் கொள்ளப்படுவதென்ன?" என்றான் கிருஷ்ணன்.

"டீஸல் பம்புகள் கான்டிராக்டில் எவ்வளவு பணம் சாப்பிட்டா ரென்று."

"நிஜமாகவா?"

"அப்படி ஒரேடியாகக் கேட்க முடியுமா? இன்ன தேதியன்று இன்ன ஸ்தாபனத்துக்கு ஒரு லட்சம் டீஸல் பம்புகள் ஸப்ளை செய்யுமாறு கான்ட்ராக்ட் வழங்கப்பட்டிருப்பது உண்மைதானா, அப்படியானால் இந்தப் பம்புகள் குடியானவர்களுக்குச் சுமாராக எந்த விலையில், எத்தனை நாட்களுக்குள் கிடைக்கச் செய்யப்படும். மின்சார பம்புகள் உள்ள இடங்களிலெல்லாம் அவற்றைப் படிப் படியாக அகற்றி டீஸல் பம்புகளை நிறுவுவதாக உத்தேசிக்கப் பட்டுள்ளதா, என்பதுதான் கேள்வி."

"சாப்பிட்டாரா, நிஜமாகவே?"

ஐயர் உதட்டைப் பிதுக்கிக் கையை விரித்தார்.

"ஸ்டார்டு குவெஸ்டின் போலிருக்கே!"

"விஷயமே அதுதானே – ரொம்பச் சாதாரணமாய்க் கேக்கிற மாதிரிக் கேட்டுப்புட்டு, ஸப்ளிமென்டரீஸ்லே மடக்கப் போறான்."

"ஆமாம், மின்வெட்டுக் காரணமாக மின்சார பம்புகள் வாங்கு வாரின்றிச் சீரழிகிறதாமே!"

"டீஸல் பம்புகளும் சீரழியாமல் இருக்கப் போகிறதா – டீஸல் விலை இப்படி ஏகமா ஏறிப்போயிருக்கிறபோது?"

"அடடே, ஆமாம் ... இந்த கான்டிராக்ட் எண்ணெய் விலைகள் ஏறுகிறதுக்கு முன்பு கையெழுத்தாயிற்றா, அப்புறமாகவா?"

"அப்புறமாகத்தான், அதுக்குத்தானே இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கான்!"

ஐயர் ஏதோ நினைத்தவர் போல, டிராயரைத் திறந்து ஒரு ஸ்டேட் எக்ஸ்பிரஸ் பாக்கெட்டை எடுத்து மேஜை மேல் வைத்தார்.

"இது எவ்வளவு நாளா?" என்றான் கிருஷ்ணன், ஆச்சரியத்துடன்.

"மினிஸ்டருடைய பிரைவேட் செக்ரட்டரி கொடுத்தான் ... வெடுக்குனு வேண்டாம்பானேன்னு வாங்கி வச்சுண்டேன்."

"அது சரி."

"பார்லிமென்ட் கேள்விகளுக்கு ரொம்ப சாமர்த்தியமாக நான் பதில்கள் தயாரிக்கிறேன்னு அவனுக்கு சந்தோஷம் ... இதோ, இந்தச் சட்டைத் துணியும் அவன் கொடுத்ததுதான்" என்று ஐயர் தாம் போட்டுக்கொண்டிருந்த டெரிலின் சட்டையைத் தொட்டுக் காட்டினார்.

"ஜமாயும் ஜமாயும்."

"ப்ளீஸ்" என்று ஐயர் சிகரெட் பாக்கெட்டை எடுத்து அவனிடம் நீட்டினார். புதிய வேடமொன்றை அணியும்போது உண்டாகிற சங்கடம் அச்செய்கையில் நன்கு புலப்பட்டது.

கிருஷ்ணன் வேண்டாம், வேண்டாம், என்று மிகவும் பிகு

செய்துகொண்டு, இங்குமங்கும் பார்த்தான். பிறகு ஒரு சிகரெட்டை எடுத்துக்கொண்டான். ஐயரும் ஒன்று எடுத்துக்கொண்டு, பளபளக்கும் சிகரெட் லைட்டர் ஒன்றையும் டிராயரிலிருந்து எடுத்தார்.

"இதுவும் அவன் கொடுத்தானா?"

"ஆமாம்" என்று ஐயர் லைட்டரின் விசையைத் தட்டினார் – கிளிக்!

மறுபடி விளக்குகள் அணைந்தன.

"இப்படித்தான் நமது உணவுக் கொள்கையும் இருக்கிறது. நம்பிக்கையொளி சிறிதும் புலப்படாமல் ஒரே இருட்டாக!" என்று சமயோசிதமாகக் கூறி எதிர்க்கட்சி அங்கத்தினர் டபக்கென்று பேச்சை முடித்துக்கொண்டு உட்கார்ந்தார். "ஹியர் ஹியர்" என்ற ஆமோதிப்புக் கூச்சல்கள் பாராளுமன்றத்தையே அதிரச் செய்தன.

ஓரிரு நிமிடங்களில் ஜெனரெட்டர்களின் உதவியால் மீண்டும் விளக்குகள் எரியத் தொடங்கிவிட்டன. இப்போது உணவு மந்திரியும் மீட்டிங் முடிந்து அவையில் வந்து அமர்ந்திருந்தார்.

மற்றொரு எதிர்க்கட்சி அங்கத்தினர் சில மாநிலங்களில் செயற்கை உர ஸ்டாக்குகள் ஒரு சிலரால் முடக்கப்பட்டுப் பிறகு அவை கள்ளச்சந்தையில் விற்கப்படுவதைக் கண்டித்து ஆவேசமாகப் பேசினார். ஆட்சியிலுள்ள ஒரு சிலரின் பக்கபலத்துடனேயே இச்செயல் நடைபெறுவதாகவும், இந்த உடந்தையாளர்களின் பெயர்களையும் தம்மால் தர முடியுமென்றும் முழங்கினார்.

மற்றொரு எதிர்க்கட்சி அங்கத்தினர் ஏற்கெனவேயுள்ள செயற்கை உரத் தொழிற்சாலைகளே பணவீக்கம், மூலப்பொருள்களின் கட்டுப்பாடு ஆகியவை காரணமாக முழு அளவு உற்பத்தி நிலையை எட்ட முடியாமலிருக்கும்போது, மேலும் பல புதிய தொழிற் சாலைகள் அமைக்கப்பட்டு வருவதைப் பற்றிக் காரசாரமாகப் பேசினார். நிலக்கரியை மூலப்பொருளாகக்கொண்டு தயாரிக்கப்படும் செயற்கை உரம் எண்ணெயை மூலப்பொருளாகக் கொண்டு தயாரிக்கப்படும் ரகத்தை விட மலிவாக இருந்தபோதிலும், புதிய தொழிற்சாலைகள் பிந்தைய முறையைச் சார்ந்தவையாக அமைக்கப்பட்டு வருவதைப் பற்றி அவர் வியப்புத் தெரிவித்தார். எண்ணெய் உற்பத்தி நாடுகளின் வலையில் மேலும் மேலும் நாம் சிக்கி அடிமைப்படவே இது அடிகோலுமென்று அவர் எச்சரித்தார்.

மற்றொரு எதிர்க்கட்சி அங்கத்தினர் வறட்சி மாநிலங்களில் சென்ற இரு மாதங்களில் நிகழ்ந்துள்ள பட்டினிச் சாவுகளைப்பற்றிய திடுக்கிடும் தகவல்களைத் தெரிவித்து, உணவு அமைச்சரவை இத்தகவல்களை இருட்டடிப்புச் செய்வதும், எங்கும் சுபிட்சம் நிலவுவது போலப் பாசாங்கு செய்வதும், வருந்தத்தக்கதென்றார். இந்தப்

பேச்சின் உச்சகட்டத்தில் அவை நேரம் முடித்து ஸ்பீக்கர் விவாதத்தை அடுத்த நாளைக்கு ஒத்திப் போட்டார்.

மந்திரி அவைக்குள்ளிருந்து வெளிப்பட்டதும் பிரைவேட் செக்ரட்டரி அவர் கையிலிருந்து தஸ்தாவேஜுகளை வாங்கிக் கொண்டான். "அடுத்ததாக?" என்றார் மந்திரி. பிறகு அவரே தொடர்ந்து, "ஓ, நாடகத்துக்குப் போக வேண்டும்" என்றார்.

"ஆமாம்."

"இங்கேயே தினம் நாடகமாகத்தானே இருக்கிறது, இல்லை?"

செக்ரட்டரி சாவி கொடுக்கப்பட்ட பொம்மைபோலச் சிரித்தான்.

"ஒருவர் ஊழலைப் பற்றிப் பல்லைக் கடிப்பதும், தவறான கொள்கைகளைப் பற்றி ஒருவர் அங்கலாய்ப்பதும், ஒருவர் பட்டினிச் சாவைப்பற்றி முதலைக்கண்ணீர் வடிப்பதும் – ஒரு கட்டத்தை யடைந்த பிறகு இதையெல்லாம் நாம்ப என்ஜாய் பண்ண முடிகிறது... இட்ஸ் வெரி அம்யூஸிங், ரியலீ."

இருவரும் வெளியே வந்து காரில் ஏறிக்கொண்டார்கள். கார் போர்ட்டிகோவிலிருந்து வெளிப்பட்டதும் சடசடவென்று வின்ட் ஸ்கிரீனின் மேல் நீர்த்துளிகள் விழுந்து மறைந்தன.

"அடடே, மழையா!" என்றார் மந்திரி உற்சாகத்துடன். பிறகு தன் உற்சாகம் நியாயமானதுதானோ எனச் சந்தேகப்படுபவர்போல, "இது பயிர்களுக்கு நல்லதோ என்னவோ" என்றார்.

"ஒரே அடைமழையாக இல்லாமலிருக்கும்வரை நல்லது" என்றான் பிரைவேட் செக்ரட்டரி.

"ஒருவேளை உணவு மந்திரிதான் அதையும் ஒழுங்குபடுத்த வேண்டுமென்று நாளைக்கு எதிர்க்கட்சியினர் சொல்வார்களோ!" என்று மந்திரி கண்ணைச் சிமிட்டினார்.

செக்ரட்டரி மறுபடி சாவி கொடுக்கப்பட்ட பொம்மைபோலச் சிரித்தான்.

'இவன் நான் என்ன சொன்னாலும் சிரிக்கத் தயாராயிருக்கிறான்' என்று நரசிம்மன் நினைத்தார்.

"உண்மையில், இன்றையக் கல்வி முறையில் போதிய சவால்கள் இல்லை, வாய்ப்புகள் இல்லை – வெவ்வேறு புலன்களைச் சார்ந்துள்ள பலவிதமான திறமைகள் ஒருங்கே தூண்டப்பட்டு விகசிப்பதற்கேற்ற வாய்ப்புகள். இத்தகைய விகசிப்பல்லவா முழு மனிதர்களை உருவாக்க முடியும்? மார்கரெட் மீட் கூறியுள்ளதுபோல, புத்தகம், நோட்டு, எழுத்துகள், வாக்கியங்கள், படங்கள் என்று ஒரு ஒற்றைப் பரிமாணக் கல்வி முறையைக் காலம் காலமாக நாம் பின்பற்றி வருகிறோம். இட் லீட்ஸ் டு எ லைனியர் டெவலப் மென்ட்... உன்னுடைய

எல்லாப் புலன்களும் இம் முறையினால் தூண்டப்படுவதில்லை ... புத்தகத்திலிருந்து பெறப்படும் வறட்டு அறிவு அனுபவத்தைச் சார்ந்த அறிவை விட அதிகம் மதிக்கப்படும் ஒரு சூழ்நிலையில், புத்தகம் நேரடியான அனுபவத்திலிருந்து ஒருவனைத் தனிமைப்படுத்தத் தொடங்குகிறது ... இதனால் ஸப்கான்ஷஸ்ஸில் நேரடி அனுபவத்துக் கான தீவிரதாகமும், புத்தகங்களுக்கெதிரான வெறுப்பும் விதைக்கப்படு கின்றன ... ஸோ, திடீரென்று ஒரு நாள் நீ சில ஜன்னல்களை உடைக்கிறாய்; பஸ் களை எரிக்கிறாய். ஏதோ ஒரு நேரடி அனுபவம் தேவையாயிருக் கிறது; எதுவாயிருந்தாலும் சரி ... என்ன, சரிதானா?"

"ரொம்ப கரெக்ட். அற்புதமான விளக்கம்" என்றான் கணேசன்.

'இவன் நான் என்ன சொன்னாலும் ஒத்துப் போகவும் பாராட்டவும் தயாராயிருக்கிறான்' என்று நரசிம்மன் நினைத்தார். "ஸோ" என்று எழுந்து நின்றார். அவர் மறைமுகமாக உந்தினா லொழிய அவன் கிளம்ப மாட்டான் போலிருந்தது.

"ஓ. கே. ஸார் – தாங்க்ஸ். எ லாட் – உங்கள் நேரத்தை மிகவும் எடுத்துக்கொண்டுவிட்டேன்" என்று கணேசன் எழுந்து நின்றான்.

"எங்கே வீட்டுக்கா?"

"யெஸ், ஸார்."

"மழையாயிருக்கிறதே – எப்படிப் போவாய்?"

"டாக்ஸியில்" என்றான் விசுவம்.

"நோ, நோ. என் காரில் போய்விடலாம்" என்றான் உண்ணி. "ஆனால் நான் என் வைஃப்பையும் பிக் அப் பண்ணிக்கொள்ள வேண்டும் – கொஞ்சம் லேட்டானால் பரவாயில்லையே!"

"உம் ... ஓ. கே!"

உண்ணியின் மனைவியின் முகம் நினைவில் எழுந்து பரவச மூட்டியது. கூடவே ஒரு குற்ற உணர்ச்சி ... அளவு மீறிய ஆர்வத்துடன் தான் 'ஓ. கே.' சொன்னதாகப்பட்டிருக்குமோ? தான் நேரடியாகவே போவதாகச் சொல்லியிருக்கலாமோ?

உண்ணி மேஜையை ஒழுங்குபடுத்திவிட்டு எழுந்தான்.

"கம் ஆன்."

தாரா செல்லப்பாவின் பின் சென்று, அவன் தேர்ந்தெடுத்த நாற்காலிகளில் அமர்ந்தாள்.

"மறைக்காமல் தெரிகிறதா?" என்றான் செல்லப்பா.

"உம்" என்று அவள் புன்னகை செய்தாள்.

"... அவருடைய பலவித ... பலவித ... பலவித ..." என்று மேடையில் நின்றிருந்த பசுபதி ஒருகணம் தடுமாறினார்.

"உங்கப்பா ஏன் தமிழ்லே பேசறார்?" என்றாள் தாரா.

"பாவம்" என்றான் செல்லப்பா.

"அலுவல்களிடையே ..." என்று பசுபதி தொடர்ந்தார். தேடிய வார்த்தை கிடைக்கப் பெற்றவராய், "இன்றைய நாடகத்துக்குத் தலைமை தாங்க ஒப்புக்கொண்ட நம் ... அமைச்சர் ..."

"பரவாயில்லையே, சமாளிக்கிறாரே!" என்றாள் தாரா.

"அவன் ஒரு பிறவி நடிகனாச்சே!" என்றார் ஐயர்.

"தெரியாவிட்டாலும் கூட தெரிந்தது மாதிரிக் காட்டி இம்ப்ரெஸ் பண்ணுகிறதிலே மன்னன். அதுதானே இந்தக் காலத்திலே வேண்டியிருக்கிறது!"

"வாஸ்தவம்" என்றான் கிருஷ்ணன்.

வெளியே மழை கணத்துக்குக் கணம் பலத்துக்கொண்டு சென்றதே யொழியக் குறையவில்லை. 'எப்போது மழைவிட்டு, எப்போது வீடு போய்ச் சேருகிறது! ஒரு கார் மட்டும் இருந்தால் ...' ஐயருக்கு மறுபடி எரிச்சல் ஏற்பட்டது. கார் வைத்திருப்பவர்கள் மீது; பசுபதியைப் போன்றவர்கள் மீது. திடீரென்று காற்றில் ஒரு ஜன்னல் படாரென்று திறந்துகொண்டு அறைக்குள் சாரல் அடித்தது.

உண்ணி ஜன்னலைச் சாத்திவிட்டு வந்தான். "காரை விற்றுவிட்டு சைக்கிளில் போனாலென்ன என்று பார்க்கிறேன்" என்றான், அறையில் தொடர்ந்து இங்குமங்குமாக உலவியவாறு. "நல்ல தேகப் பயிற்சியாகவுமிருக்கும்."

"அட் லீஸ்ட் தொந்தியாவது கரையும்" என்றாள் அவன் மனைவி உள்ளேயிருந்து வந்தவாறு.

விசுவம் சிரித்தான். அவர்களுடைய கண்கள் சந்தித்தன. உடலெங்கும் ஒரு சிலிர்ப்பு.

'இதுதான்' என்று நினைத்தான் செல்லப்பா. 'இவள்தான்.'

"அவர்தான் இப்போது நம் ஒரே நம்பிக்கை" என்றான் கணேசன். காந்தியின் வாழ்நாளில் அரசியலில் தீவிரமாயிருந்து, பின் பலநாள் ஒதுங்கியிருந்து, இப்போது மீண்டும் மக்களை வழிநடத்திச் செல்லத் தயாராயிருந்த சர்வோதயத் தலைவரைப் பற்றி அவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள்.

“பார்க்கலாம்” என்றார் நரசிம்மன். “இப்போது எதுவும் சொல்வதற்கில்லை.”

ஆனால் அவன் ஏதாவது சொல்லவேண்டுமென்று உண்ணியின் மனைவி எதிர்பார்க்கிறாள்; அதைச் சாக்கிட்டு அவன்மேல் பார்வையைத் திருப்ப விரும்புகிறாள். “முதலில் இந்தப் போலியான மதிப்பீடுகள் மாற வேண்டும்” என்றான் விசுவம். காரின் முன் ஸீட்டில் இருந்த அவள் அவனை நோக்கித் திரும்பினாள். மறுபடியும் புல்லரிப்பு. “காரில் செல்பவனைத்தான் இங்கு மதிப்பார்கள்.”

“அல்லது ஸெமினாரில் பேசுகிறவனை, பார்ட்டிகளில் ஜோக் அடிக்கிறவனை, எட்ஸெட்ரா” என்று உண்ணி காரை ஸ்டார்ட் செய்தான்.

படபடவென்ற கைதட்டல் ஒலி; மந்திரி பேசுவதற்கு எழுந்தார்.

“பேச்சில் எனக்குப் பத்து வருடங்களுக்கு முன்பே நம்பிக்கை போய்விட்டது. இப்போது எழுத்திலும் போய்விட்டது” என்றார் நரசிம்மன்.

கணேசன் சங்கடத்துடன் புன்னகை செய்தான். “இதோ, இங்கே நிறுத்துங்கள். இறங்கிக்கொள்கிறேன்” என்றான்.

கார் நின்றது. கணேசன் இறங்கி, நன்றி கூறி, கார்க் கதவைச் சாத்தப் போனான்.

“டோன்ட் பாதர்” என்று நரசிம்மன் தாமே கதவைச் சாத்திக் கொண்டார். “நிறைய எழுதிக்கொண்டிரு” என்றார்.

“எழுதிப் பயனில்லை” என்றான் விசுவம். “பேச்சுதான் இன்று வெற்றி பெறுகிறது.”

“வெற்றியென்று நீ எதைக் கருதுகிறாயென்பதைப் பொறுத்தது” என்றான் உண்ணி. “பிறர் கருதுவதைத்தானா?”

மறுபடி முன் ஸீட்டிலிருந்தவள் அவனை நோக்கித் திரும்பினாள். ‘இல்லை’ என்று விசுவம் நினைத்தான். எழுத்தோ பேச்சோ அல்ல. ஒரே ஒரு பார்வைகூட ஒருவனைச் செயல்பட வைக்கலாம். ஒரு அடையாளம் . . .

‘ஆமாம், அடையாளம். இவனுக்கு நான் அமைப்பின் அடையாளம்’ என்று நரசிம்மன் கணேசனைப் பற்றி எண்ணமிட்டவாறு காரை ஓட்டிச் சென்றார். ‘என் தோழமை இவனுக்கு ஒரு உந்துதல், ஒரு ஏணி, ஒரு . . .’

"ஒரு போர்" என்றான் செல்லப்பா. "இந்த மந்திரிகளே ஒரு போர்."

"ஷ்" என்றாள் தாரா.

எல்லோரும் சிரித்தார்கள். மிஸஸ் பசுபதியும் சிரித்தாள். அவள் முகத்தில் தென்பட்ட பரவசம்; பெருமிதம். பசுபதி அவசரமாகப் பார்வையை வேறு பக்கம் திருப்பினார். திடீரென்று யாரோ அவரருகே வந்து, குனிந்து, ஏதோ சொன்னார்கள். அவர் முகம் மாறியது. அவர் எழுந்தார்.

"என்ன எழுந்துவிட்டாய்?" என்றாள் தாரா.

"இந்த போர் முடிவது வரையில் வெளியில் இருக்கலாமென்று" என்றான் செல்லப்பா.

"நானும் வருகிறேன்" என்று அவள் எழுந்தாள். மறுபடி ஒரு சிரிப்பலை அவையினூடே ஓடியது.

"ஹிஹிஹி" என்றான் செல்லப்பா.

'மூடங்கள்' என்று நரசிம்மன் நினைத்தார். 'இவர்கள் இப்படியே எவ்வளவு நாட்களுக்குத் தாம் ஏமாற்றப்பட அனுமதிக்கப் போகிறார்கள்?'

'அனுமதியின்றி, எதுவும் நடைபெறுவதில்லை' என்று விசுவம் நினைத்தான். 'இவளும் நானும் . . . இது என்ன? ஒரு தப்புதல். ஏமாற்றிக்கொள்ளுதல் . . . அல்லது ஏமாற்றுதல், ஒளிவுமறைவுகளற்ற ஒரு உண்மைக்கான தேடலா இது? இந்தப் பார்வை . . .'

சட்டென்று வாசல்புற இருளில் செல்லப்பா தாராவை அணைத்துக் கொண்டான். நெருங்கும் காரின் வெளிச்சம் . . .

"ஸில்லி!" என்று அவள் திமிறினாள்.

"ஹலோ!" என்றான் விசுவம், காரிலிருந்து இறங்கியவாறு.

"ஹலோ!" என்றார் வாசலில் நின்றிருந்த நரசிம்மன்.

"யாருக்காவது காத்திருக்கிறீர்களா?"

"ஆமாம்; இந்த போர் முடிவதற்கு."

மூவரும் சிரித்தார்கள். மறுபடி அவள் சிரிப்பை அவன் பார்வை நாடியது. அந்த நாடலை அவளும் கவனிக்கத் தவறவில்லை.

மிஸஸ் பசுபதி சிரித்தாள். இம்முறையும் மந்திரி அவள் பக்கம்தான் நோக்கியிருந்தார், நகைச்சுவையாகப் பேசிய பின்பு.

# 30

இன்னமும் மழை பெய்துகொண்டே இருந்தது. எப்படிப் பெய்கிறது, எத்தனை நேரமாகப் பெய்கிறது! களைத்தே போகாதா? மனிதர் களுக்குக் களைத்துவிடுகிறது. இவருக்குக் களைத்துவிட்டது. இவர் ஒரு சிறு குழந்தைபோல அயர்ந்து தூங்குகிறார்.

உலகையே வெல்லக்கூடிய தீரமும் சாகஸமும் படைத்தவராகத் தோன்றினவர், இப்போது அவளருகே பலவீனர்களிலும் பலவீனராக, யாரும் எளிதில் வென்றுவிடக்கூடியவராகத் தோற்றமளித்தவாறு கிடக்கிறார். அவரை பலவீனராகக் காண்பதுதான் அவளுடைய லட்சியமாக இருந்ததா?

ஆனால் அவருடைய பலம்தான் அவளுக்குப் போதையேற் படுத்தியது, அவள் அவர்பால் கவரப்படக் காரணமாயிருந்தது – அவருடைய தோரணை; மிடுக்கு. இவற்றில் வெளிப்பட்ட அவருடைய . . . வீரியம்.

மிஸஸ் பசுபதியின் முகத்தில் ஒரு திருப்தியான புன்னகை தோன்றியது. படுக்கையை விட்டு எழுந்து, ஜன்னலருகே சென்று திரைச் சீலையை விலக்கிப் பார்த்தாள். மழையின் ஓசை; மழையின் வாசனை. மனதில் ரம்மியமான உணர்வுகள். குதித்து ஆடவேண்டும் போல . . . பாடவேண்டும் போல . . .

மீண்டும் சிறுபெண் ஆகிவிட்டது போன்ற பிரமை.

இதுதான் அவளுக்குத் தேவையாயிருந்தது. இதற்காகத்தான் அவள் ஏங்கி வந்தாள். தேடி வந்தாள்.

இந்த பலத்துக்காக. இந்த வீரியத்துக்காக.

அதுவே அவளுள் ஒளிந்திருந்த பலமற்ற உணர்வுகளை வெளிப் படுத்திக்கொள்ளும் ஆசுவாசத்தை அளிக்கிறது. தானே அத்தகைய

ஒரு கொம்பாக, கைத்தடியாக, பயன்படுத்தப்பட்டதால் அவளுக்கேற்பட்டிருந்த சலிப்பை அவளுக்கு உணர்த்தி, அச்சலிப்பையகற்றும் மருந்தாகக் குதூகலப்படுத்துகிறது . . .

ஆமாம், அவளுக்குத் தேவையானது பலவீனர்மூலம் ஏற்படும் பலமல்ல, பலமுள்ளவர் ஏற்படுத்தும் பலவீனம்தான் . . .

மந்திரி சட்டென்று படுக்கையில் எழுந்து உட்கார்ந்தார். "தூக்கம் வரலியா?" என்றார்.

அந்தக் குரல்! மறுபடி அவர் பலம் பொருந்தியவராகத் தோன்றினார். அவள் பலமற்றவளாக உணர்ந்தாள்.

"தாலாட்டுப் பாடவா?" என்றார் அவர். அவள் சிரித்தாள். அவர் பாடத் தொடங்கினார்.

"முன்பு உங்கள் பாட்டுக்கேற்ப நாங்கள் நடனமாடினோம்; உங்களுக்கெல்லாம் திருப்தியாயிருந்தது. இப்போது நாங்களே பாடத் தொடங்கிவிட்டோம். உங்களுக்குப் பிடிக்கவில்லை; உலக சகோதரத்துவத்தைப் பற்றிப் பேசுகிறீர்கள்" என்றார் மன்னர் ஃபெய்ஸல். "இத்தனை வருடங்களாக எங்கள் மத்தியக் கிழக்கு எண்ணெயை மிக மலிவான விலையில் எடுத்துச் சென்று அதன் மூலம் உங்கள் நாடுகளில் மென்மேலும் தொழில் முன்னேற்றம் ஏற்படுத்திக்கொண்டு. மறுபக்கத்தில் உங்கள் காப்பிடலிஸ்ட் தயாரிப்புகளை அதிக விலைகளில் எங்கள் தலையில் கட்டி முட்டாளாக்கிக் கொண்டிருந்தீர்களே, அப்போது இந்த சகோதரத்துவம் எங்கே போயிற்று?"

மொழிபெயர்ப்பாளர் மன்னரின் வார்த்தைகளை அமெரிக்க நிருபருக்கு ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துக் கூறினார்.

"ஆனால், யுவர் எக்ஸலன்ஸி! எண்ணெய் விலை அதிகரிப்பு மேல்நாடுகளின் பொருளாதாரத்தை மட்டுமல்ல, அதிக வளர்ச்சியுறாத கீழ் நாடுகளின் பொருளாதாரத்தையுமல்லவா பாதித்துள்ளது?"

"அதை நான் தவிர்ப்பதற்கில்லை" என்றார் மன்னர். டெலிவிஷன் காமிரா கிர்ரென்ற ஓசையுடன் இயங்கியது. அந்த ஓசையை உணர்ந்ததாலோ என்னவோ, திடீரென்று அவர் முகத்தில் வேதனையும் கருணையும் கலந்த ஒரு பாவம் தோன்றியது. உலகெங்கிலுமுள்ள செய்திப் பத்திரிகை வாசகர்கள், மற்றும் சினிமா, டெலிவிஷன் பார்வையாளர்களுக்காக உருவாக்கிக்கொண்ட பாவம் போல அது தோன்றியது. "என் முதல் பொறுப்பு என் மக்களின்பால்தான்" என்றார் அவர். "வளமானதொரு வாழ்க்கையிலிருந்து அவர்கள் இனியும் வஞ்சிக்கப்படுவதை என்னால் அனுமதிக்க முடியாது. முன்பு வெட்கி ஒளிந்த அந்நிய மூலதனம் இப்போது எப்படி சலாம் போட்டுக்கொண்டு வருகிறது! . . . வரட்டும், எங்கள் நாட்டிலும்

தொழில் முன்னேற்றம் ஏற்படட்டும். வாய்ப்புகள் பெருகட்டும். மக்களின் வாழ்க்கைத் தரம் உயரட்டும்."

நிருபரின் முகத்தில் இலேசான புன்னகை ரேகையொன்று மின்னல் போல நெளிந்து மறைந்தது. அரண்மனை வாசலில் பார்த்த பிரம்மாண்டமான காடிலாக் காரையும், அரண்மனையினுள் ஒவ்வொரு தரையிலும், சுவரிலும், பணியாள் உடையிலும் மிளிர்ந்த செல்வச் செழிப்பையும், கூடவே தலைநகருக்கு இருநூறு கிலோமீட்டர் பரப்பளவுக்குள் நுழையும் வரை அவர்கள் பார்த்த பரிதாபகரமான ஏழ்மையையும் அவர் நினைத்துப் பார்த்திருக்க வேண்டும்.

"யுவர் எக்ஸலன்ஸி! இதன் ராணுவ ரீதியான விளைவுகள் பற்றி என்ன கூறுகிறீர்கள்? அதிக எண்ணெய் வருவாயைத் தம் ராணுவத்தை நவீனப்படுத்தவும் விஸ்தரிக்கவும் பயன்படுத்தப் போவதாக உங்கள் சகோதர நாடுகள் இரண்டு ஏற்கெனவே அறிவித்துள்ளன. இது மத்தியக் கிழக்கில் நிலைமை இன்னும் மோசமாகிவிடக் காரணமாகலாமல்லவா?"

மன்னரின் முகத்தில் மறுபடி கருணை தோன்றியது. "நாங்கள் என்றும் அமைதியையே விரும்பி வந்திருக்கிறோம். எங்கள் உள்ளத்தில் அன்பும், ஒத்துப் போகும் ஆர்வமுமே நிலவி வந்துள்ளது. ஆனால் பிறர் இவற்றை எதிரொலிக்காமல் குரூரமாக நாங்கள் வஞ்சிக்கப் பட்டதால், பயன்படுத்தப்பட்டதால், நாங்களும் முஷ்டியை மடக்கிக் காட்ட வேண்டி வந்தது ... நடப்பதற்கெல்லாம் பொறுப்பாளி உண்மையில் நீங்கள்தான்."

"ஆமாம்" என்றார் நரசிம்மன், இன்னொரு வாய் விஸ்கியருந்தியவாறு. "சமூகம் முழுவதுமே இதற்குப் பொறுப்பாளி. வயதை ஒரு அளவு கோலாகக் கொண்டு கௌரவமும் அங்கீகாரம் அளிக்கப்படுகிற ஒரு மதிப்பீட்டு முறைக்கெதிரான திமிறலேயாகும், இளைஞர்களின் ரவுடித்தனம். நம் அமைப்புகள் பெரும்பாலும் வயதானவர்களைக் கொண்டவை; எனவே தம் பாதுகாப்புக்காக இளைஞர்களுக்கு அதிக வாய்ப்புகள் தருவதை இவை தவிர்க்கின்றன. முப்பது வயதுக்குக் கீழேதான் மனிதனின் மூளை, புதுமை வேகமும், துடிப்பும் மிகுந்து விளங்கும் பருவம். ஆனால் மிகவும் திட்டமிடப் பட்டு இந்தத் துடிப்பெல்லாம் ஒடுக்கப்படுகிறது. பெரியவர்களின் நியமங்கள், மதிப்பீடுகள் ஆகியவற்றுடன் ஒத்துப் போகுமாறு அவர்கள் நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். ஏற்கெனவேயுள்ள ஏற்பாட்டுடன் சமரசம் செய்துகொள்வோருக்கு வெற்றி என்ற நிலையில், அவர்களில் பலர் சமரசத்தையே தேர்ந்தெடுக்க வேண்டியிருக்கிறது ... விளைவாக, சமூகத்தில் நிரந்தரமான ஒரு தேக்கநிலை ... இது ஒரு விஷச்சுழல் ..."

"போர் அடிக்காதேய்யா!" என்றார் அருகிலிருந்தவர்.

"உடம்பு சரியாயில்லையா?" என்று இன்னொருவர் நரசிம்மன் அருகில் வந்து அவர் நெற்றியில் கை வைத்துப் பார்த்தார். "டோன்ட் பீ ஸ்டுபிட்!" என்று நரசிம்மன் அவர் கையை உதறித் தள்ளினார்.

"அப்படியென்றால், முப்பது வயதுக்குக் கீழ்ப்பட்டவர்கள் பெரும்பான்மையில் உள்ள புதிய சமுதாயத்தில் நம போன்ற வயதானவர்கள் கதி என்ன?" என்றவாறு மற்றொருவர் சுற்றுமுற்றும் பார்த்தார். அவர் பார்வை விசுவத்தின் மேல் நிலைத்தது. "கொன்று விடுவீர்களா?"

"என்னையா கேட்கிறீர்கள்?" என்றான் விசுவம்.

"ஆமாம்... இந்த குரூப்பில் முப்பது வயதுக்குட்பட்டவராக நீங்கள்தான் தோன்றுகிறீர்கள்."

"இல்லை" என்று விசுவம் சிரித்தான். "எனக்கும் முப்பது வயதுக்கு மேலாகிவிட்டது."

"குட்" என்று எல்லோரும் சிரித்தார்கள். விசுவத்தின் கண் முன்பு உண்ணியின் மனைவி சிரிக்கும் முகம் தோன்றியது. இன்னொரு வாய் விஸ்கியருந்தினான். அவனுக்கு அந்தக் கூட்டமும் பேச்சம் சலிக்கத் தொடங்கியிருந்தது. விஸ்கியும் கூட. உண்ணியின் மனைவி அவனைச் செல்லமாகக் கண்டிப்பதுபோலத் தோன்றியது. அவனுக்கு அந்தக் கண்டிப்புத்தான் தேவையாயிருந்தது போலும்; ஒரு கடிவாளம்.

இல்லை. இவனுக்குத் தேவையாயிருந்தது விடுதலை! இந்த விடுதலையின் ஒரு எளிய பௌதிக உருவம்; அடையாளம்.

விஸ்கான்ஸின் யுனிவர்ஸிடியில் அவன் பார்த்ததும் விடுதலையின் அடையாளம்தானே?

இது அந்த அடையாளத்திலிருந்து விடுபடுத்தும் அடையாளமா?

முந்தியது தவறான அடையாளமா, அப்படியானால்?

இதுவும் தவறாக இருக்கக்கூடுமா?

நரசிம்மன் அவன் தம்ளர் காலியாயிருந்ததைப் பார்த்து அதில் இன்னும் சிறிது விஸ்கி ஊற்றினார். "போதும் போதும்" என்றான் அவன்.

"அதுக்குள்ளேயா?"

அவன் பலவீனமாகப் புன்னகை செய்தான். நாடகம் முடிந்ததும் இவருடன் இங்கே – கிளப்புக்கு – வந்திருக்க வேண்டாம். உண்ணி கூப்பிட்டான், அவனுடன் போயிருக்கலாம்.

அதற்குப் பயமாக இருந்தது.

தன் மீதே பயம். அவளுடைய பார்வை தன்னைப் புதிதாக வார்ப்பதைக் கண்டு பயம்.

விஸ்கான்ஸின் யுனிவர்ஸிடியில் பத்மினியிடம் தான் பத்தாம்

பசலித்தனமானவனல்லவென்று நிரூபிக்கத் துடித்தான்.

இப்போது இவள் மூலம் அந்தத் துடிப்பை ஒரு மாயையாக உணரத் தயாராயிருக்கிறான்.

பத்மினியின் வீட்டில் அவளுடைய அண்ணாவின் பாப் இசைத் தட்டுகளையும், விஸ்கியையும், ஜோக்குகளையும் அவளுக்காக வேண்டி ரசிப்பதுபோலப் பாசாங்கு செய்தான். அவர்கள் எல்லாருடைய மேற்பூச்சு நாகரிகத்தையும், சராசரித்தனத்தையும் பொறுத்துக் கொண்டான்.

இப்போது இவளுடைய பார்வை அவனுள் பதுக்கி வைத்திருந்த அந்த வெறுப்புகளைப் பீறிட்டெழச் செய்கிறது. அவனால் விஸ்கியருந்த முடியவில்லை. நான் ஏதேதோ பொய்களில் சிக்கிக்கொண்டேன். என்னைக் காப்பாற்று. என்று அவளைக் கட்டிக்கொள்ள வேண்டும் போலிருக்கிறது.

விஸ்கான்ஸின் யுனிவர்ஸிடியில் அவளுடைய பரிகாசம் அவனை உருமாற்றியது. இப்போது இவளுடைய பார்வை அவனை மீண்டும் உருமாற்றுகிறது.

இதைத்தான் அவன் விரும்புகிறானா?

தன் கவர்ச்சிகரமான பிரதிபலிப்புகளை நாடி, நாடியதைக் கண்டதாக மயங்கி, தன்னிடமிருந்து தப்பியவாறிருத்தல் . . .

'இல்லை' என்று செல்லப்பா படுக்கையில் புரண்டவாறு நினைத்தான். 'இது தப்புதல் இல்லை; இதுதான் உண்மை.' அவனுடைய கரங்களுக் கிடையில் இதமாக அழுந்திக் கொடுத்த அவளுடைய உடல் . . . அந்த கணத்தில் அவனுக்கேற்பட்ட பூரிப்பு . . . மிகவும் பலம் பொருந்தியவன் போன்ற உணர்வு . . .

ஆமாம், இதுதான் உண்மை.

மீண்டும் மீண்டும் அந்த ஸ்பரிசம் நினைவு வந்து அவன் தேகம் முழுவதிலும் ஆவேசத்தைப் பாய்ச்சுகிறது; அவனுடைய சந்தேகங்களை முழுகடிக்கிறது. இல்லை அவளுடைய சிரிப்பு போலியானதில்லை. இல்லை. அவளுடைய பரிவும் இனிய வியத்தலும் அவனுக்காகச் சாதுரியமாக உருவாக்கிக்கொள்ளும் வேஷங்களில்லை. அவளுடைய அண்மையில் அவன் பெறும் ஆசுவாசம், உலகத்தையே வென்று விடலாம் போன்ற பலம் . . .

ஆமாம், இதுதான் உண்மை. அடுத்தமுறை அவளைப் பார்க்கும் போது இன்னும் பயமில்லாமல், இன்னும் . . .

'இன்னும் நிறையப் பேசுவேன்' என்று கணேசன் நினைத்தான்.

'அடுத்த முறை நரசிம்மனிடம் இன்னும் பல பிரச்னைகளைப் பற்றி அழுத்தமாகவும் ஆழமாகவும் பேசுவேன்: என் பரந்த அறிவையும், ஆர்வத்தையும் அவர் மேலும் உணரச் செய்வேன் அவருக்கு ஏற்கெனவே என்னைப் பற்றிய ஒரு நல்லபிப்பிராயம் உருவாகியிருப்ப தாகத்தான் தோன்றுகிறது. அவருடைய தினசரியில் சப் எடிட்டர் வாகன்ஸி ஏதாவது ஏற்படும் பட்சத்தில் அவருக்கு என் நினைவு ஏற்படாமல் போகாது. "ஒரு அப்ளிகேஷன் போட்டு வை; அப்புறம் நான் பார்த்துக் கொள்கிறேன்" என்று புன்னகையுடன் கூறுவார் ...

திடீரென்று வராந்தாவில் வெளிச்சம் பரவியது. லட்ரினில் ஓசை கேட்டது. அப்பாவாக இருக்கும்; ஆமாம், அப்பாதான். வழக்கமான நள்ளிரவு வருகை. ஒரு எரிச்சலுடன் அவன் கண்களை இறுக மூடிக்கொண்டான். வேண்டுமென்றேதான் அவர் இப்படி இரவில் எழுந்து பாத்ரூமுக்கு வருவதாகத் தோன்றியது. விளக்கைப் போடுவதாகத் தோன்றியது – அவன் வராந்தாவில் படுத்திருக்கிறான் என்பதற்காகவே. இரவிலும் தன் எஜமான ஸ்தானத்தை, அவன்மீது தனக்குள்ள அதிகாரத்தை, உணர்த்த விரும்புகிறார் போலும். அவனுக்கு அவரைக் கொலை செய்ய வேண்டும் போலிருந்தது. தன் வெறுப்பின் வேகம் அவனுக்கே ஆச்சரியமளித்தது. சில மணி நேரத்துக்கு முன்பு தன் அம்மாவின்பாலும் தங்கையின்பாலும் இதேபோல வெறுப்புணர்ச்சி அவனுள் குமுறியெழுந்திருந்தது. அவன் தினசரி தாமதமாக வருவதைச் சுட்டிக்காட்டி, அவன் அம்மா ஏதோ கூறினாள்.

அவர்களிடையே வாக்குவாதம் நடந்தது. இந்த வாக்குவாதத்தின் போதும், பிறகு அவன் உடைமாற்றிக் கொள்ளும்போதும், அவனுடைய தங்கை மிக அனாவசியமாக அங்குமிங்கும் வட்ட மிட்டவாறு இருந்தாள். அப்போது அவனுக்கு அவர்களிருவரையுமே கொலை செய்துவிடலாம் போலிருந்தது. என்ன செய்யச் சொல்கிறார்கள்? இவர்கள் செய்கிற தோசையையும். உப்புமாவையும் தின்றுகொண்டு ஸ்டுபிட் பேச்சுகளுக்கெல்லாம் தலையாட்டிக் கொண்டு, வீட்டிலேயே இருக்கச் சொல்கிறார்களா? அது இந்த ஓல்ட் மானால்தான் முடியும். நீங்கள் வீட்டிலேயே இருந்துகொண்டு, விளக்கேற்றிக்கொண்டு, பொட்டிட்டுக்கொண்டு, தோசை வார்த்துக்கொண்டு, துகையல் அரைத்துக்கொண்டு பண்பாட்டைக் காப்பாற்றுவது அவருடைய ரசனையைத் திருப்தி செய்யக் கூடும்; என்னுடையதை அல்ல ... நரசிம்மனுடைய ஆபீசில் ஸப் எடிட்டராகத் தான் உட்கார்ந்திருப்பது போன்ற ஒரு காட்சி அவன் நினைவில் எழுந்து, அவன் உள்ளத்தைப் பூரிப்பால் நிறைத்தது. அருகில் ஒரு நவநாகரிக மங்கையும் அமர்ந்திருக்கிறாள் – பஸ்ஸில் வரும்போது அவன் பார்த்த மங்கை ... அவனுக்கு ஒரு கர்வம் ஏற்பட்டது. யாரையோ பழிவாங்கிய உணர்வு ... தாராவை!

தாரா புரண்டு படுத்தாள். செல்லப்பாவின் ஆசையின் வேகம், பரபரப்பு, அவளுடைய அண்மையின் போதையில் சுற்றுப்புறத்தை மறந்து ஏதேதோ பிதற்றியவாறு அவன் அவள் சிரிப்பை யாசித்தவாறிருந்தது . . .

அவளுக்கு ஒரு திருப்தியும், குதூகலமும் ஏற்பட்டது. இவன்தான், ஆமாம், இவன்தான்.

இவன் அவளை ஒரு ராணியாகக் காண்கிறவன். பெண் அனுபவமில்லாதவன், மென்மையானவன், இரக்கமுள்ளவன்.

இவன், அவள் சுலபமாகவும் நிரந்தரமாகவும் ஆளுகைக்குட் படுத்தப்படக் கூடியவன்.

அவளுக்கு ஒரு கர்வம் ஏற்பட்டது. யார் யாரையோ பழி வாங்கிய உணர்வு . . . கணேசனை! பத்ரியை . . .!

"இந்தா!" என்று பசுபதி ஃப்ளாஸ்கின் மூடியில் காப்பியை ஊற்றி பத்ரியை நோக்கி நீட்டினார். அந்தச் செய்கை அவரை மிகவும் புதுமையாக உணரச் செய்தது. மகனே, நான் உன்னுடைய காப்பியை – அல்லது எதையுமே – பகிர்ந்துகொண்டு வெகு நாளாயிற்று . . .

ஆனால் அவன் அவர் குரல் காதிலேயே விழாதது போல் அசையாமல் உட்கார்ந்திருந்தான். கார் ரேடியோவில் இரவின் அந்த நேரத்திலும் ஏதோ மேனாட்டு இசை வந்து கொண்டிருந்தது. தொடையில் தாளம் போட்டவாறு அதைக் கேட்டுக்கொண்டிருந் தான். அவருக்கு எரிச்சல் ஏற்பட்டது. அந்த எரிச்சல் அவன்பால் தான் கொண்ட ஆதிக்க உணர்வினால் எழுந்ததென்பதை உணர்ந்து கூடவே ஒரு துக்கமும் ஏற்பட்டது. அவனை அப்படியே இறுக அணைத்துக்கொள்ள வேண்டும் போலிருந்தது; என் மகன், உயிர், என் விந்து. டேய், நான் உன் அப்பாடா!

"இதைக் குடிச்சுக்கோ!" என்று மறுபடி கூறிவிட்டு, தயங்கியவாறே அவன் தோளில் தொட்டார். அவன் உடல் அந்த ஸ்பரிசத்துக்கு நெகிழ்ந்து கொடுக்காமல் விறைப்பாக இருக்கவும், வைத்த கையை எடுத்தார்.

அவன் காப்பியை வாங்கிக் குடிக்கத் தொடங்கினான். அது பகலில் அவருக்காக வீட்டிலிருந்து அனுப்பப்பட்ட காப்பி. ஆபீஸில் அதைக் குடிக்க முடியாமல் போய்விட்டது. இப்போதுதான் திடீரென்று அது காரிலிருப்பது நினைவு வந்தது. போலீஸ் ஸ்டேஷனிலேயே நினைவு வந்திருந்தால் அந்த இன்ஸ்பெக்டருக்கும் கொடுத்திருக்கலாம்.

இந்த எண்ணம் தோன்றிய மறுகணமே அதற்காகத் தன்னைத்தானே வெறுத்துக்கொள்வதுபோல, அவர் தலையைப் பலமாகக் குலுக்கிக் கொண்டார். சே! யாரை எப்படித் திருப்தி செய்யலாம் என்றே என் மனம் ஏன் எப்போதும் அலைகிறது . . .! எப்போதும்

வேஷம்... இவனிடம் நான் இப்போது தோழமையை யாசிப்பதுகூட இவனுக்கு வேஷமாகப்படுகிறதோ, என்னவோ? என் ஸ்பரிசத்தை இவன் வெறுக்கிறான்... டேய், இது நடிப்பு இல்லைடா; நான் உன் அப்பாடா! எனக்கு நீ வேணும்டா!

வெளியே இன்னும் மழை பெய்துகொண்டிருக்கிறது. பலமாகப் பெய்துக் கொண்டிருக்கிறது. மழை கொஞ்சமாவது குறைந்த பிறகு தான் கீழேயிறங்கி டெலிபோனைத் தேடிச் செல்ல முடியும். காரேஜுக்குப் போன் செய்து கார் இருக்குமிடத்தைச் சொன்னால் ஆளனுப்புவான்... சே! இந்தக் கார் என்ன இப்படித் திடீரென்று!

ஆனால் ஒரு வகையில் இது எதிர்பாராததுமல்ல – ஒரு மாதத்துக்கு முன்பே காரை ஸெர்வீசுக்குக் கொடுத்திருக்க வேண்டியது. எங்கெங்கோ ஏதேதோ செப்பனிட வேண்டியிருந்தது. ஆனால் அவர் தள்ளிப் போட்டுக்கொண்டேயிருந்தார்; வேறு பல விஷயங்களைத் தள்ளிப் போட்டுக்கொண்டிருப்பதைப் போல. இப்போது, திடீரென்று...

அவன் காப்பியைக் குடித்து முடித்துவிட்டான். அவர் ஃப்ளாஸ்க் மூடியை அவன் கையிலிருந்து வாங்கி ஃப்ளாஸ்கை மூடினார். அவன் காற்சட்டைப் பைக்குள், அங்கிருந்து ஏதோ எடுக்கப் போகிறவன் போல, கையை விட்டு, பிறகு மனம் மாறியவன்போலக் கையை வெளியே எடுத்தான். சிகரெட் பிடிக்க விரும்புகிறானா, என்ன?

"நீ விரும்பினால் சிகரெட் பிடிக்கலாம்" என்றார் அவர்.

அவன் உடனே அலட்சியமாக –'என்னைப்பற்றி எல்லாம் தெரியுமென்று நினைக்காதே!' என்று சொல்வதைப் போல – அவர் பக்கம் ஒரு கணம் பார்த்துவிட்டு, மறுபடி பேசாமல் ரேடியோ பாட்டுக்குத் தாளம் போட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்தான்.

அவர் இம்முறையும் எரிச்சலை விழுங்கிக்கொண்டு வெளியே எட்டிப் பார்த்தார். மழை, மழை, மழை. திடீரென்று ஒரு எண்ணம்; அந்தச் சக்கிலியனும் அவனுடைய மனைவியும்! அவர்களுடைய பிணங்களைக் கொளுத்தியிருப்பார்களா? இப்படி மழை பெய்து கொண்டேயிருக்கிறதே! (இன்ஸ்பெக்டர்: "இருவரும் ஸ்தலத்திலேயே இறந்துவிட்டார்கள். குழந்தை பக்கத்தில் துணியில் கிடந்தது... நாங்கள் ஸ்தலத்தை அடைந்தபோது மக்கள் பஸ்ஸைச் சுற்றிப் பெருந்திரளாகக் கூடி உங்கள் மகனையும் இதர மாணவர்களையும் பஸ்ஸுக்குள்ளேயே சிறைப்படுத்தி வைத்திருந்தார்கள்... இன்னும் சற்றுத் தாமதமாக நாங்கள் போயிருந்தால் இவர்கள் மக்கள் கையில் சின்னாபின்னமாகப் போயிருக்கக்கூடும். இப்போது நீங்கள் சுலபமாக இவனை விடுவித்துக்கொண்டு போகிறீர்கள், உங்களுக்குச் செல்வாக்கு இருக்கிறது. இந்தச் செல்வாக்குக்கு நானும் பணிந்து போக வேண்டியவனாக இருக்கிறேன். ஆனால் உங்கள் மகனை நினைத்தால் எனக்குக் கவலையாயிருக்கிறது, மிஸ்டர் பசுபதி! மிகச் சுலபமாக எத்தகைய விளைவுமின்றி ஒரு உயிரைப் பறித்துவிடலாமென்ற

மனப்போக்கு அவனில் உருவாக இந்த விடுதலை காரணமாகக்கூடும்... ஏன், எதையுமே செய்யலாம். பிறகு தண்டனையின்றித் தப்பித்துக் கொள்ளலாம் என்று அவன் நினைக்கத் தொடங்கலாம்...")

"நீ என்ன, எதுவுமே பேசப் போவதில்லையா?" என்றார் அவர் பொறுமையிழந்து.

அவன் பேசவில்லை.

அவர் ரேடியோவை அணைத்தார். "இது ... இது ரொம்ப ஸீரியஸ்ஸான விஷயம்..." அவருக்கு உடலெல்லாம் படபடவென்றது. அவனை விடுவித்தது அவனுடைய செயலைத் தாம் அங்கீகரிப்பதாகப் பொருளல்லவென்று அவனுக்கு உணர்த்த விரும்பி, அதற்கான சொற்களைப் பரபரப்புடன் தேடினார். "ஒரு பாவமும் அறியாத இரண்டு மனிதர்கள் உங்களுடைய காலித்தனத் தால் இறந்து போனார்கள்... ஆமாம், காலித்தனம்!"

"இது ஒரு தேடல், தம்மைப் புதிதாக வார்த்துக் கொள்ளும் தவிப்பு" என்றார் நரசிம்மன். "பலதரப்பட்ட திறன்களும் தூண்டப்பட்டு முழுமை பெறக்கூடிய வாய்ப்பில்லாத ஒரு சூழ்நிலையில், ஒடுக்கப் பட்ட திறன்கள் இவ்வாறு வக்கிரமாக வெளிப்படுகின்றன... இன்று மாலை நடந்ததையே எடுத்துக்கொள்ளுங்களேன்!"

"என்ன நடந்தது?" என்றான் விசுவம்.

"சில மாணவர்கள் ஒரு பஸ்ஸை ஹைஜாக் செய்கிறேன் பேர்வழி யென்று, நடைபாதையிலிருந்த ஒரு சக்கிலியனின் குடும்பத்தின் மேல் பஸ்ஸை ஏற்றிவிட்டார்கள்."

"மை காட்!"

"சக்கிலியனும் அவன் மனைவியும் அங்கேயே க்ளோஸ். அவர் களுடைய குழந்தை மட்டும் சாகவில்லை."

"அதை இனி யார் பார்த்துக்கொள்வார்கள்?"

நரசிம்மன் உதட்டைப் பிதுக்கி, கையை விரித்தார். அவர் தம்முடைய கருத்தைத் தெளிவுபடுத்துவதில் தீவிரமாயிருந்தார். "நாம் உருவாக்கியுள்ள அமைப்புகளும் புறச்சூழல்களும், மேற் கொண்டுள்ள வாழ்க்கை முறையும், நம்முடைய எல்லாத் திறன் களையும், அம்சங்களையும் தூண்டக் கூடியனவாக இல்லை... பல திறன்கள் தம்மையும் அறியாமல் நமக்குள் புதைந்து கிடக்கின்றன. திடீரென்று, ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில்... ஃபட்! இவை பீறிட்டுக் கிளம்புகின்றன."

"பேஷ்! எல்லாத் திறன்களும் எப்போதும் தூண்டப்பட்டவாறே யிருக்க வேண்டுமென்றா சொல்கிறீர்கள்? நம் ஒவ்வொருவருக் குள்ளும் ஒரு கொலையாளி, ஒரு கற்பழிப்பவன், இருக்கக்கூடும்...

இது ஒடுக்கப்படாமலிருந்தால் ...”

“நான் சரியா, தப்பா பற்றியே சொல்லவில்லை. பிரச்னையை விளக்க முயல்கிறேன், அவ்வளவுதான். குறிப்பிட்ட சில திறன்கள், அம்சங்கள் ஆகியவற்றைச் சார்ந்த வாழ்க்கை சலித்துப் போகிறது. மனம் மாறுதலுக்குத் தவிக்கிறது ... இந்த மாறுதல் விரும்பத்தக்கதாக இல்லாமலிருக்கலாம் ... ஆனால் இந்தத் தவிப்பை ஒடுக்கிக் கொள்வதும்கூடக் கெடுதலாக முடியக்கூடும்தானே?”

“ஆமாம்” என்றான் விசுவம். அவன் கண் முன்பு உண்ணியின் மனைவியின் முகம் பெரிதாகத் தெரிந்தது. “ஒன்றில் சலித்து இன்னொன்றை நாடுகிறோம் ... நம்மிலும் சுற்றுப்புறங்களிலும் மாறுதலை யாசித்தவாறிருக்கிறோம் ... ஆனால் இந்த மாறுதல் ...” அவன் ஒரு கணம் யோசித்து, மறுபடி கூறினான்: “ நம் வேட்கைகள் ஒவ்வொன்றையும் ஒடுக்கிக் கொள்ளாமல் பின்பற்றியவாறிருப்ப தென்பது ...”

மிஸஸ் பசுபதிக்கு மறுபடி விழிப்பு வந்தது. மந்திரி குறட்டை விட்டுக்கொண்டிருந்தார். வெளியே சற்று மழை குறைந்திருக்கிறதோ?

அவள் எழுந்து, ஜன்னலருகே சென்று பார்த்தாள். ஆமாம், குறைந்திருக்கிறது. திரும்பி கட்டிலில் கிடந்தவரைப் பார்த்தாள். இவர் ...

வேட்டி அவிழ்ந்து கிடக்க, கால்களும் கைகளும் அலங்கோல மாகப் பரந்து கிடக்க, வாய் திறந்திருக்க, தாடையின் மேல் எச்சில் ஒழுக ...

திடீரென்று ஒரு வெறுமையுணர்வு, ஒரு தனிமை.

யார் இவர்?

இவரை விட்டுச் செல்ல வேண்டும். உடனே செல்ல வேண்டும். எனக்கு என்ன ஆகிவிட்டது? இவரும் எல்லா ஆண்களையும் போல ஒரு ஆண். எல்லா ஆண்களையும்போல ஆசையும், அகந்தையும், பயமும், சிறுமைகளும், இவற்றை மறைக்கும் முக மூடிகளும் உள்ளவர். என் உடலுடன் என் ஈகோவையும் வருடத் தெரிந்தவர். இவரைப் பலமுள்ளவராகவும், பலவீனராகவும் காண்கின்ற என் ஈகோவை.

எனக்குப் பைத்தியம்தான் பிடித்துவிட்டது.

நான் இவருடன் இங்கே வந்திருக்க வேண்டாம்.

“நான் மட்டும் வந்திருக்காவிட்டால்?” என்றார் பசுபதி. “என்ன ஆகியிருக்கும் தெரியுமா? உன்னை என்ன செய்திருப்பார்கள், தெரியுமா?”

திடீரென்று அவன் பேசினான்; "நான் உன்னை வரச் சொல்ல வில்லை."

"என்ன!" என்றார் அவர் அதிர்ச்சியுடன்.

"ஜெயிலுக்கு அனுப்பினால் போயிருப்பேன் ... எனக்கு அதில் பயமில்லை."

அவர் அவனையே உற்றுப் பார்த்துக்கொண்டிருக்க, அவன் தொடர்ந்து பேசினான்: "உன்னால் என்னவெல்லாம் செய்ய முடிவுமென்பதை நிரூபிக்க இது இன்னொரு சந்தர்ப்பம், அவ்வளவு தான். அந்த ஈகோவினால்தான் நீ வந்தாயே தவிர, எனக்காகவா வந்தாய்?"

பளாரென்று அவர் அவன் கன்னத்தில் ஓங்கி அறைந்தார்.

"நோ, நோ, நோ!" என்றார் நரசிம்மன். "நாம் மீண்டும் ஆதி மனிதன் போலிருக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை. அடிமன வேட்கை ஒவ்வொன்றும் பின்பற்றப்பட வேண்டியதில்லை, ஐ அக்ரீ, ஆனால் இந்த ஒடுக்கப்படுதலைப் பற்றிய பிரக்ஞை இருக்க வேண்டும் ... யூ நோ, நம் கிராமப்புறங்களில் கொண்டாடப்படும் பல பண்டிகைகள், மற்றும் திருவிழாக்கால விளையாட்டுகள் நம்முள் ஒளிந்துள்ள முரட்டுத்தனம், முழுதும் அறிவுபூர்வமாக வாழ்தலுக் கெதிரான திமிறல், ஆகியவற்றுக்கு வடிகால்களாக உதவுகின்றன. அதேபோல் நகர வாழ்க்கையில் ..." என்றவாறு அவர் விஸ்கி தம்ளரைக் கையிலெடுத்துக்கொண்டார்.

"விஸ்கி உதவுகிறதென்கிறீர்களா?"

எல்லாரும் சிரித்தார்கள். விசுவம் அந்தக் குழந்தையை நினைத்துக் கொண்டான்: தனியாக விடப்பட்ட குழந்தை! அவனுக்கு மிகவும் சோகமாக இருந்தது. ஒருவேளை சோகத்தில் தன் சஞ்சலங்களைக் கரைத்துக்கொள்ள விரும்பி, புனிதமானவனாக உணர விரும்பி, அந்தக் குழந்தையை ஒரு வியாஜ்யமாகக் கொள்கிறான் போலும். ஓ, இந்த மனம் எவ்வளவு தந்திரமிக்கது ...

திடீரென்று மனதில் இன்னொரு காட்சி: அவன் குழந்தை தனியாக அழுதுகொண்டிருக்கிறது ... அருகில் யாருமில்லை. பத்மினி கூட இல்லை.

பத்மினிக்கு என்ன ஆயிற்று?

மறுபடி அவனுடைய காலித் தம்ளரில் யாரோ விஸ்கி ஊற்றினார்கள். இது எப்போது முடியப் போகிறது? மணி எவ்வளவு ஆகிறது?

அவன் தள்ளாடியவாறு எழுந்தான். ஏதோ நடந்திருக்கிறது. நிச்சயம் பத்மினிக்கு ஏதோ ஆகியிருக்கிறது. அவன் உடனே வீடு

செல்ல வேண்டும். கடிதம் வந்திருக்கிறதா என்று பார்க்க வேண்டும்.

'ஆமாம்' என்று செல்லப்பா நினைத்தான். 'நாளைக்கு நிச்சயம் அவளைப் பார்க்க வேண்டும். தினம் தினம் பார்க்க வேண்டும். இவள் மூலமாகவே நான் திடமான பரிமாணங்களுள்ளவனாக முடியும். தற்காலிக ஆசிரயங்களை நாடியவாறிருப்பதையும் இவற்றில் என்னையுமறியாமல், ஆனால் தவிர்க்க முடியாமல் நான் கரைந்து வீணாவதையும் தவிர்க்க முடியும் . . . இவள் போடுவது வேஷமாகவே இருந்தாலும் பாதமில்லை. நான் எங்கேயாவது தொடங்கியாக வேண்டும். எவளையாவது பற்றிக்கொண்டாக வேண்டும். இவள் ஒரு இவள் . . . அதுவே முக்கியமானது. போதுமானது . . .'

'இவர் வெறும் இவர் . . . அல்லது இவன். சே, நான் ஒரு முட்டாள்' என நினைத்தவாறு மிஸஸ் பசுபதி படிகளில் அவசரமாக இறங்கினாள். தரையை அடைந்து வாசல் அறையைக் கடந்து செல்லும்போது திடீரென்று பின்னால் யாரோ வரும் ஓசை; திடுக்கிட்டுத் திரும்பினாள்.

இன்னொருவன் இவன். கையில் ஒரு 'ஹாண்ட் பாக்' "எக்ஸ்க்யூஸ்மி, மேடம் . . . இதை நேத்து மறந்து வச்சுப் போயிட்டீங்க . . ." என்றான்.

"நானா?"

"ஆமாம் . . . அவர் ரூமுக்குப் போறதுக்கு முந்தி இங்கே உக்காந் திருந்தப்போ . . ." அவன் திடீரென்று ஏதோ சந்தேகம் வந்தவன்போல ஒரு கணம் நிறுத்தினான். "முந்தின நைட் நீங்கதானே வந்தீங்க?"

"இல்லை."

"ஓ! ஐ ஆம் ஸாரி . . . எனக்கு முகம் நினைவிருக்கலை . . . ஒரு வேளை நீங்களா இருக்குமோன்னு . . . ஐ ஆம் ஸாரி."

அவன் அறைக்குள் மறைந்தான். அவளுள் சிறு பொறியாகத் தோன்றியிருந்த சந்தேகமும், திகிலுணர்வும் திடீரென்று பெரும் ஜ்வாலையாக எரியத் தொடங்கி அவளைத் திக்குமுக்காடச் செய்தன.

அப்படியானால், இவருக்கு இது மற்றோர் இரவுதானா?

எப்படியோ வெளியே வந்து, வாசலில் நின்றிருந்த காரில் ஏறி . . . அவர்கள் வந்த அதே கார்; அப்போது அவள்தான் டிரைவ் செய்து கொண்டு வந்தாள். அப்போது மனதில் உற்சாகம் நிறைந்திருந்தது.

இப்போது . . .

சாவி காரில் அப்படியே இருந்தது. காரை மெல்லக் கிளப்பிக் கேட்டருகே கொண்டு வந்து, கீழிறங்கி கேட்டைத் திறந்து, மறுபடி காரில் ஏறி உட்கார்ந்தாள்.

கார் சாலையில் வெளியுலகில், புகுந்தது. குப்பென்ற குளிர் காற்று . . . இல்லையில்லை, நான் விபரீதமாக எதுவும் கற்பனை செய்துகொள்ளக்கூடாது. மந்திரியென்றால் யார் யாரோ, எது எதற்காகவோ பார்க்க வருவார்கள்.

ஆனால் –

குடிபோதையில் அவர் தன்னை அணைத்தபோது வேறு ஏதோ பெயர் சொல்லிவிட்டுப் பிறகு சமாளித்துக்கொண்டது . . .

பாத்ரூமில் ஓரமாகக் கிடந்த காய்ந்த மலர்ச்சரம், உடைந்த வளையல் துண்டுகள் . . .

இவற்றுக்கு அவர் சொன்ன சமாதானங்கள் . . .

அப்போது எல்லாம் நிஜமாகத் தோன்றின.

இப்போது எல்லாம் பொய்யாகத் தோன்றுகின்றன.

அவர் மனைவி இங்கு இல்லாமலிருப்பதற்கு அவர் கூறும் காரணங்கள்கூடப் பொய்யாயிருக்கலாம். (டில்லி வெதர் பிடிக்க வில்லை. உடம்பு சரியில்லை. இன்னொருவனை விரும்புகிறாள். என்னைப் பிடிக்கவில்லை) அவள் நம்ப விரும்பிய, எனவே நம்பி வந்த, பொய்கள் . . .

ஆமாம், பொய்கள். அவள் அவருக்கு வெறும் இன்னொருத்தி; அவள் ஏமாற்றப்பட்டாள் . . .

அல்லது அவளேதான் தன்னை ஏமாற்றிக்கொண்டாளா? அப்படியானால், எப்போதிலிருந்து . . .? ஆம் எப்போதிலிருந்து?

அவள் ஆத்திரத்துடன் அக்ஸலரேட்டரை அழுத்தமாக மிதித்தாள்.

“இல்லை, இவர் ஏமாற்றவில்லை” என்றார் நரசிம்மன். மறுபடி அந்தத் தலைவரைப் பற்றித்தான் அவர் பேசிக்கொண்டிருந்தார். இருபது வருடங்களுக்கு மேலாக அஞ்ஞாத வாசம் புரிந்துவிட்டு இப்போது மாணவர்களைப் பக்கபலமாகக் கொண்டு அரசியலைச் சுத்தப்படுத்தும் இயக்கம் தொடங்கியிருந்த அந்த சர்வோதயத் தலைவரைப் பற்றித்தான் அவர் பேசிக்கொண்டிருந்தார்.

“எல்லாருமே ஏமாற்றுகிறவர்கள்தான், அயோக்கியர்கள்தான்” என்றார் மற்றவர்.

“இல்லை, இவர் அப்படி இல்லை.”

மற்றவர் கடகடவென்று சிரித்தார். “குழந்தை போலப் பேசுகிறாய். இவை மனம் உருவாக்குகிற பிம்பங்கள் தவிர வேறில்லை. அப்படியே அவர் யோக்கியமானவர், நல்ல நோக்கமுள்ளவரென்று வைத்துக் கொண்டாலும், மற்றவர்கள் – அவரை ஒரு முகமூடியாகப் பயன் படுத்துவதற்காக அவருடன் வந்து ஒட்டிக்கொள்பவர்கள் – இயக்கத்தை நிச்சயம் வழக்கமான அசுத்தமான மட்டத்துக்குக் கொண்டு செல்லப்

போகிறார்கள் ..."

"அவர் அதை அனுமதிக்க மாட்டார்."

"இது ஒரு இயற்கை நியதி, நரசிம்மன். தவிர்க்க முடியாதது ... தூய்மையானதே களங்கத்தை ஈர்க்கும், கறை படிந்தே தீரும் ... ஒரு கன்னிப்பெண் போல ..."

"உன் ஸ்டுபிட் உதாரணங்களை நிறுத்து."

"நீதான் ஸ்டுபிட்டாக இருக்கிறாய்."

"இவர்தான் நம்மைக் காப்பாற்றப் போகிறார்."

"உன் மனம் இன்னும் அற்புதங்கள் புரியும் கதாநாயகர்களை நம்புகிற மட்டத்துக்கு மேல் வளர்ச்சியடையவில்லை."

"ஷட் அப்!"

"அதுதான் உண்மை – நீ ஒரு எஸ்கேப்பிஸ்ட். காரசாரமான எடிட்டோரியல்களின் மூலம் மாஸ்டர்பேட் செய்துவிட்டு, இரவில் காமிக்ஸ் படித்து மகிழும் டைப் நீ ... இப்போது நீ காமிக்ஸ் படிக்கிற நேரமாகிவிட்டதென்று தோன்றுகிறது ..."

"பாஸ்டர்ட்" என்று நரசிம்மன் முஷ்டியை ஓங்கியவாறு அவர் முகத்தை இலக்காக வைத்துப் பாய்ந்தார். நச்!

அவரும் பதிலுக்கு நரசிம்மனைக் குத்தினார். இருவரும் ஆக்ரோஷத்துடன் மாறி மாறிக் குத்துகளைப் பொழிந்து கொண்டார்கள். விசுவமும் மற்றவர்களும் இருவரையும் விலக்க முயன்றபோது அவர்களுக்கும் அடி விழுந்தது.

விசுவத்தின் வயிற்றில் ஒரு அடி –'அம்மா!' அவனுக்குத் தலை சுற்றியது ...

கார் வேகமாக, மிக வேகமாகச் சென்றுகொண்டிருந்தது. எங்கேயிருக்கிறேன், எங்கே போகிறேன் – மிஸஸ் பசுபதிக்கு எதுவும் புரியவில்லை. மனதில் உக்கிரமாக அலைமோதும், கொந்தளிக்கும், ஏதேதோ எண்ணங்கள், ஏதேதோ முகங்கள். ஓ, எத்தனை முகங்கள், சாக்குத் திடீரெனக் கிழிந்து உள்ளிருந்தவை பொதபொதவென்று உதிருவது போல் ...

ஆமாம், ஏதோ கிழிந்துவிட்டது; எதுவோ அறுந்துவிட்டது. மனதின் அந்தரங்கமான எல்லைக்கோடுகள், வித்தியாச உணர்வுகள். நேற்றுக்கும் நாளைக்குமுள்ள வித்தியாசம். உண்மைக்கும் பொய்க்கும், நடப்பதற்கும் நடக்காததற்கும் உள்ள வித்தியாசம் ...

என் கணவரே, என்னை அணைத்துக்கொள்ளுங்கள். இறுக அணைத்துக்கொள்ளுங்கள்; என்னைக் காப்பாற்றுங்கள்.

திடீரென்று சாலை நடுவே கையில் விளக்குகளை ஆட்டியவாறு நிற்கும் சிலர். மழையில் சாலை நடுவே பள்ளம் ஏதாவது விழுந்து, எச்சரிக்கை செய்தவற்காக நிற்கிறார்களா?

இல்லை! இவர்கள் என்னை . . .

வருடப் பிறப்பு இரவன்று நடந்ததுபோல . . .

மந்திரி என்னை ஏமாற்றியது போல . . .

இல்லை! நான் ஏமாறமாட்டேன்! நான் காரை நிறுத்த மாட்டேன்!

விளக்குகளை ஏந்தி நின்றவர்கள் கூச்சலிட்டவாறு அவசரமாக ஒதுங்கிக்கொள்ள, கார் வேகமாகப் பாய்ந்து சென்று தார் டிரம்களின் மேல் மோதிச் சறுக்கித் தட்டாமாலை சுற்றியவாறு . . .

எதிரே பிரும்மாண்டமாக, அசுர வேகத்தில் வந்துகொண்டிருக்கும் ஒரு லாரி, அதை நோக்கி . . .

மிஸஸ் பசுபதியின் அலறல் பாதியிலேயே உறைந்து போயிற்று.

"இதோ, நான் இறங்க வேண்டிய இடம்" என்றான் விசுவம்.

நரசிம்மன் காரை நிறுத்தினார். அவன் கீழே இறங்கி நின்று, ஒரு கணம் தள்ளாடி, பின் சமாளித்துக்கொண்டான்.

"ஆர் யூ ஆல்ரைட்?"

"ஓ யெஸ், தாங்க் யூ. குட் நைட்."

நரசிம்மன் கடிகாரத்தைப் பார்த்துவிட்டு, "மார்னிங்" என்றார்.

அவன் சிரித்தவாறே கையை உயர்த்தி ஆட்டினான். கார் கிளம்பிச் சென்றது.

வீட்டினுள் நுழைவதற்கு ஒரு தயக்கம்; அவன் வராந்தாவில் உட்கார்ந்தான். இன்னமும் மழை இலேசாகத் தூறிக்கொண்டிருக்கிறது. தரையில் மழை விழும் ஓசை மிக சன்னமாக, ஆனால் தெளிவாகக் கேட்கிறது. அந்தச் சத்தம் மட்டும்தான் கேட்கிறது. ஒரு பிரலாபம் போல . . . இல்லையில்லை, உணர்ச்சியற்ற, இன்ப துன்பத்துக்கப்பாற்பட்ட ஒரு நிரந்தர சாட்சியைப் போல . . .

பத்மினிக்கு ஏதோ ஆகிவிட்டது. நிச்சயம் ஏதோ ஆகிவிட்டது. உள்ளே அவனுக்காகத் தந்தி காத்திருக்கிறது. பத்மினி, என்னை மன்னித்துவிடு. மனதில் அவன் அவளை ஆறுதலாக அணைத்திருப்பது போன்ற காட்சி . . .

அவன் தலையைக் குலுக்கிக்கொண்டான். சீ! என் ஈகோ! . . . என்னைச் சுயநலமில்லாதவனாகவும், அன்பு, கருணை, நேசம் ஆகியவற்றின் உருவமாகவும் கற்பித்துக்கொள்ளும் முயற்சி, ஆமாம், விசுவம். இதுவும் உன் மனத்தின் தந்திரம்தான். உன் வேட்கையிலிருந்து விடுபடுவதற்காக அணியும் மாறுபட்ட வேஷம். ("அமெரிக்கர்களாகிய நாம் விருப்பம் போலெல்லாம் நம் வளங்களைச் செலவழித்தலை நிறுத்தி சுயக்கட்டுப்பாட்டை மேற் கொள்ள வேண்டிய தருணம் வந்துவிட்டது" என்றார் ஜனாதிபதி. "பெட்ரோலுக்கு ரேஷன்

முறை அமுலாக்கும் அவசியம் சமீப காலத்தில் நேராதென்றே நினைக்கிறேன். அதே சமயத்தில் இப்போது உருவாகியுள்ள சூழ்நிலையை நம் தேவைகளை, நம் வாழ்க்கை முறையை, மறுபரிசீலனை செய்துகொள்ள ஒரு வாய்ப்பாக நாம் நினைப்போமாக. பயன்படுத்துவதற்கான பொருள்கள் இருப்பதாலேயே அவற்றைப் பயன்படுத்தியேயாக வேண்டுமென்ற மனப்போக்கு உருவாகவும் நேர்ந்துவிடுகிறது. எரிபொருள்கள், உணவுப் பொருள்கள், செயற்கை உரங்கள் ... வீட்டின் முன்புறத்துப் புல்வெளியில்கூட விலையுயர்ந்த செயற்கை உரங்களைப் பயன்படுத்தும்போது, உலகின் பல பகுதிகளில் அவசியமான உணவு உற்பத்திக்குத் தேவையான அளவு செயற்கை உரம் கூடக் கிடைப்பதில்லையென்பதை நாம் மனதில் கொள்வோம். பலர் உயிர்வாழ அவசியமான மிக அடிப்படைத் தேவைகள்கூடப் பூர்த்தியாகாமல் தவிக்கிறார்களென்பதை மறக்காமலிருப்போம்.")

அவன் வீட்டினுள் நுழைந்து விளக்கைப் போட்டான். ஹால் மேஜைமேல் தந்தி இருந்தது. பக்கத்தில், ஒரு காகிதத்தில், செல்லப்பா 'கங்கிராட்ஸ்' என்று எழுதி வைத்திருந்தான். அப்படியானால்?

அவன் தந்தியைப் படித்தான்: ஆண் குழந்தை; இருவரும் நலம்; கடிதம் தொடர்கிறது.

திடீரென்று மனம் இலேசாகியது. நான் ஒரு அப்பா! பத்மினி ஒரு அம்மா!

உலகுக்கு ஒரு புத்தம் புதிய அம்மா.

அவன் உற்சாகத்துடன் விசிலடித்தவாறே குளிக்கச் சென்றான்.

அவன் குளித்துவிட்டு வருவதற்கும், அப்பாவும் பத்ரியும் வருவதற்கும் சரியாக இருந்தது. அவர்கள் ஒருவருக்கொருவர் செய்திகளைப் பரிமாறிக்கொள்ளத் தொடங்கினார்கள்.

பிறகு இன்னொரு செய்தியும் டெலிபோன் மூலம் கிடைத்தது.

அம்மா கார் விபத்தில் இறந்துவிட்டதாக.

மின்னூலாக்கம்
முரளிதரன்

# ஒரு சம்பாஷணை

*(என்னுடைய ஒரு பகுதிக்கும் (1) இன்னொரு பகுதிக்கும் (2) இடையே, "காகித மலர்கள்" பற்றி – ஆதவன்)*

*1:* காகித மலர்களில் வரும் செல்லப்பா நீதான்.

*2:* கரெக்ட். எனது பாத்திரங்களிலேயே மிக அதிகமாக எனது சாயலைக் கொண்டு உருவானவன் செல்லப்பா. எனக்கும் பிரியமானவன்.

*1:* விசுவம்?

*2:* செல்லப்பாவைப் போலவே விசுவமும் எனது சில அம்சங்களைக் கொண்டு படைக்கப்பட்டவன்தான். நான் ஒரு 'இரண்டு கட்சி' ஆசாமி. எனக்கு உணர்ச்சிகளின் நுட்பமான, எளிதில் பிடிபடாத, நெளிவு சுளிவுகள் எப்படி இஷ்டமோ அப்படியே அறிவுபூர்வமான சர்ச்சையும் ஆய்வும் இஷ்டம். இது ஒரு முரண்பாடு என்றால் இதன் இரு எல்லைகளின் பிரதிபலிப் புகளே செல்லப்பாவும் விசுவமும். செல்லப்பா உணர்ச்சியே வடிவானவன். விசுவம் அறிவே வடிவானவன். இது ஒரு தோராய மான விளக்கம்தான், யாரும் முழுதும் உணர்ச்சிப் பிண்டமும் இல்லை, முழுதும் அறிவுச்சுடருமில்லை.

*1:* அப்படியானால் பத்ரி man of action?

*2:* ஆமாம், செயல் வீரன். அறிவும், உணர்ச்சியும், (உடனடி பாதிப்புகளை ஏற்படுத்துகிற) செயலும் ஓரிடத்தில் இணைந்திருப்ப தில்லையென்பதே வாழ்க்கையின் irony?

*1:* ஸோ, இந்த irony 'காகித மலர்களி'ன் ஆதாரச் சரடா?

*2:* இல்லை, முழுவதும் அப்படியில்லை. நாவலில் ஒரு நம்பிக்கைச் சரடு இழையோடுகிறது. அதே சமயத்தில் அது எளிமைபடுத்தப்பட்ட

வகையினதாக இல்லாமல் இன்றைய தலைமுறையினர் அரவணைத்துக்கொள்ளும் விதமாக அமைக்க முயன்றிருக்கிறேன் ... இந்தத் தன்மை – credibility – ரொம்ப முக்கியம். இன்றைய சூழ்நிலையில் தர்மம் அதர்மத்தை வென்றுவிடுவதாக நாவலில் எழுதுதல் ஒரு வெகுளித்தனம், அல்லது போலித்தனம்; சிலர் அந்தரங்க ஈடுபாடின்றி சிரார்த்தமும் சந்தியாவந்தனமும் செய்வது போல (இத்தகையவர்களை இந் நாவல் மெல்லிய புன்னகையுடன் சீண்டுகிறது) வாழ்க்கையின் தர்மத்தையும் நாவலின் தர்மத்தையும் சிலர் குழப்பிக் கொள்கிறார்கள். நாவலின் தர்மம் கலையுடன், இலக்கிய நேர்மையுடன், தொடர்புடையது. இந்நாவலின் moral centre எனப்படுகிற தார்மீக மையம் பாஸிடிவ்வாகவே இருப்பதை நுட்பமான வாசகன் புரிந்துகொள்வான்; ஆக்க பூர்வமான கவலையையும் (சமூக) சிரத்தையையும் பொறுப்புகளையும் கிளர்ந்தெழச் செய்யும் வண்ணம் அதன் ஒட்டு மொத்தமான கட்டமைப்பு அமைந்துள்ளதை உணர்வான். 'காகித மலர்கள்' சில புதிய பிரமேயங்களை ஒட்டி – சமூக உண்மைகளை ஒட்டி – படைக்கப்பட்டது. இவற்றுடன் பரிச்சயமில்லாதவர்கள் நாவலை ரசிக்க முடியாது.

*1: உதாரணமாக?*

2: உதாரணமாக இளைஞர் பிரச்னை. இளைஞரின் withdrawal, drifting இதெல்லாம் மிக சமீப காலமாகவே உலகெங்கும் அறிமுகமானவை. இளைஞர் தனித்த க்ரூப்பாக, தனித்த கவனிப்பு அல்லது சலுகைகளுக்கு உரியவர்களாக, முன்பு – குறிப்பாக நம் நாட்டில் – கருதப்பட்டது கிடையாது. நம் தந்தையர்களுக்கு இருந்ததைவிட ஒரு நீண்ட adolescence ஐ நானும் எனது தலைமுறையினரும் அனுபவித்தோம். இது ஒரு லக்ஸரி; இதுவே ஒரு சாபக்கேடும்கூட. என் தகப்பனாருக்கெல்லாம் adolescence என்ற சிராட்டலே இருந்ததில்லை. பதினாறு வயதுவரை அவர் தம் தந்தைக்கு அடங்கிய ஒரு கூட்டுக் குடும்பப் பிரஜை. அதன் பின் அவரும் ஒரு சம்பாதிக்கும் யந்திரம் – உத்தியோகம் புருஷ லக்ஷணம், இத்தியாதி. இன்று இருபது வயது இளைஞன் ஒருவன் முன்னுள்ள வாய்ப்புகள் – சும்மா இருக்கும் வாய்ப்புக்கூட – என் அப்பாவுக்குக் கிடையாது. அவருக்கு இசையில் ஆர்வமும் திறமையும் உண்டு; ஆனால் அவருடைய தந்தை அவரை ஒரு சங்கீத வித்வானாக்க முயலவில்லை. என் அப்பாவும் கூட இதைப்பற்றி இவ்வாறு நினைத்துப் பார்க்கத் துணிந்திருக்க மாட்டார். இதெல்லாம் 'உருப்படுவதற்குரிய' வழியாக அன்று நினைக்கப்படவில்லை ... இது ஒரு பக்கம்; இன்னொரு பக்கம், குடும்பத்திலும் சமூகத்திலும் 'இளைஞன்' என்ற ஒரு ஐடென்ட்டிடி, ஒரு பதவி. இது முன்பு கிடையாது. 'காகித மலர்களி'ல் வருகிற பசுபதி 'கேள்விகள் கேட்காத' சரி – தப்பு பற்றிய மிக அதிகமான உறுத்தல்கள் இல்லாத 'பீரோக்ராட்'டாக இருப்பதற்கு

அவருடைய வயதும் (அல்லது தலைமுறை) ஒரு காரணம். விசுவம், கணேசன், செல்லப்பா ஆகியோரின் exposure வேறு மாதிரியானதால் அவர்கள் ஒவ்வொரு கட்டத்திலும் கேள்விகள் கேட்கிறார்கள், யோசிக்கிறார்கள், தமக்குள்ளேயே மிரண்டு சுருங்குகிறார்கள். இவர்களுடைய மன ஓட்டங்களை ஐம்பது வயதுக்கு மேற்பட்ட பல வாசகர்களால் ரசிக்க முடியவில்லை. ஏனென்றால் இந்த அனுபவம் அவர்களுடைய பிரக்ஞையில் எந்தக் கட்டத்திலும் இடறியிருக்காத ஒன்று ... இது ஏதோ இறக்குமதிச் சரக்கு என்று அவர்கள் முடிவு கட்டிவிட்டார்கள்.

1: இந்தப் புரிந்துகொள்ளாமை நாவலிலேயே வருகிறதே! கணேசனும் அவனுடைய அப்பாவும் ...

2: ஆமாம். ஒரு பெரும் இடைவெளி. இதே போலத்தான் பசுபதிக்கும் அவருடைய பிள்ளைகளுக்கிடையிலும்.

1: 'காகித மலர்கள்' என்ற தலைப்பு எனக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை.

2: எனக்கும்தான். ஆனால் இனி எதுவும் செய்வதற்கில்லை. இந்தத் தலைப்பினால் நாவல் புதிய, நாகரிக சமுதாயத்தின் ஒரு விமரிசனமென்று பலர் நினைத்துவிட்டார்கள்.

1: நம் தாத்தா பாட்டிகள் மணம் வீசும் மலர்கள், இன்றையத் தலைமுறையோ வெறும் காகித மலர்கள் என்று ஆசிரியர் சொல்வதாக ...

57259

2: எக்ஸாக்ட்லி.

1: (சிரித்து) இது என் நோக்கமாயிருக்கவில்லை. 'வேரில்லாத' என்பதை வேண்டுமானால் குறிப்பிட விரும்பியிருக்கலாம். இன்னொன்று, இயற்கையின் சங்கிலி இயக்கங்கள் (nature's cycles) மனிதனின் 'யந்திர ரீதியான' முன்னேற்ற வெறியின் சில அம்சங்களால் சிதறத் தொடங்கியிருந்ததை ஒட்டி அறுபதுகளில் விஞ்ஞானிகள் எச்சரிக்கை விடுக்கத் தொடங்கிவிட்டார்கள். மனிதன் இயற்கையின் எதிரியாக இன்றி, அதன் கூட்டாளியாக விளங்குதலே அவனுக்கு நன்மை பயக்குமென்று கூறத் தொடங்கிவிட்டார்கள். இந்தப் புதிய விஞ்ஞான நோக்கின் ஒரு குறியீடாகவும் இந்தத் தலைப்பைத் தேர்ந்தெடுத்தேன். அதாவது இயற்கையுடன் தொடர்பு அறுந்துபோன, இதன் விளைவுகள் பற்றின பிரக்ஞையில்லாத, ஒரு தலைமுறையின் குறீயீடாக ...

031, 3N42, KP4

2: இயற்கை என்பதே சாந்தத்தின், ஸத்வ குணங்களின் குறியீடாக ...

1: ஆமாம். செல்லப்பா இவ்விதத்தில் ஒரு நவீன போதிஸத்துவன். தத்தம் 'தனித்துவங்களை' முடமாக்கிக்கொண்டு ஒரே திசையில் தத்தித் தத்திச் செல்லும் மனிதர்களிடையே ...

2: (தொண்டையைக் கனைத்துக்கொண்டு) கடைசியாக, எனக்கு அதிருப்தியளித்த ஒரு விஷயம் பற்றி. செல்லப்பாவின் அம்மாவின்

மரணம் . . . அது அவசியந்தானா ?

1 : அவள் தன் மருமகளை புதிய தலைமுறைப் பெண்மை பற்றிய ஒரு கொச்சையான 'பூர்ண விடுதலை' பிம்பத்தில் பொருத்தி, அந்த பிம்பத்துடன் போட்டி போட முயலுகிறாள். ஆனால், ஒரு முக்கியக் கட்டத்தில் தான் கடைசியில் தன் அம்மா, பாட்டி ஆகியவர்களைக் கட்டுப்படுத்திய ஒழுக்க நெறிகளுக்குக் கட்டுப்பட்டவள்தான் என்பதை உணருகிறாள். இது அவளைச் சிதற அடித்து விடுகிறது . . . moment of truth.

2 : நாமெல்லாருமே, ஒரு விதத்தில், சரியோ தவறோ, வெவ்வேறு உருவகங்களின் கைதிகள்தான்; இல்லையா ?

1 : வெவ்வேறு 'வேடங்களின்' கைதிகள். அரசியல் தலைவர்கள், mob psychology வேண்டுகிற கொச்சையான படிமங்களின் கைதிகள். அதிகாரிகள், 'நடக்கிறபடி நடக்கட்டும், நமக்கேன் வம்பு?' என்ற play safe மனப்பாங்கின் கைதிகள். அறிவு ஜீவிகள், அந்தந்த நேரத்தில் நாகரிகமான, அதிகச் செலாவணி உள்ளதாக உள்ள சில சார்புகளை அபிநயித்துக் கொண்டு, சில 'தியரிகளை' உச்சாடனம் செய்து கொண்டு, 'உஞ்ச விருத்தி' செய்கிற பிராமண பிம்பத்தின் கைதிகள். பெண்கள், ஆணின் 'அடிமை', 'மகிழ்வூட்டும் கருவி' – அல்லது இந்தப் பிம்பங்களுக்கெதிராகப் புரட்சி செய்கிறவள் – என்கிற பிம்பங்களின் கைதிகள். இளைஞர்கள், வயதையும், 'வேடங்கள்' அணியும் திறனையும் ஒட்டியே வாய்ப்புகள் வழங்குகிற ஒரு அமைப்பில் நிரந்தரமான ஒரு insecurityயின், ஒரு alienationனின், கைதிகள். இத்தகைய பல கைதிகளையே "காகித மலர்கள்" அறிமுகம் செய்கிறது.

R.K



வெவ்வேறு 'வேடங்களின்' கைதிகள்.
அரசியல் தலைவர்கள், mob psychology
வேண்டுகிற கொச்சையான படிமங்களின்
கைதிகள். அதிகாரிகள், 'நடக்கிறபடி
நடக்கட்டும், நமக்கேன் வம்பு?' என்ற play
safe ம...
அறிவு ...
நாகரிக...
உள்ள...
அபிநய... ...ளை'
உச்சா... ...ச
விருத்தி... ...தின்
கைதிக... ...மை',
'மகிழ்... ... இந்தப்
பிம்பங்களுக்கெதிராகப் புரட்சி செய்கிறவள்
- என்கிற பிம்பங்களின் கைதிகள்.
இளைஞர்கள், வயதையும், 'வேடங்கள்'
அணியும் திறனையும் ஒட்டியே வாய்ப்புகள்
வழங்குகிற ஒரு அமைப்பில் நிரந்தரமான
ஒரு insecurityஇன், ஒரு alienationஇன்
கைதிகள். இத்தகைய பல கைதிகளையே
"காகித மலர்கள்" அறிமுகம் செய்கிறது.

TVR
TVR57259
303290
TVR57259

உயிர்மை
பதிப்பகம்

Rs.190

ISBN 81-88641-28-6
9788188641284 00001